கிருஷ்ண எசுர்வேதம்

தைத்திரீய சங்கிதை

காமிய விகிருதி யாகப் பிரகரணங்கள்

சாயணபாடியக் கருத்துப் பதவுரைகளுடன் கூடியது

நான்காம் பகுதி

இது

உயர் திரு.

காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

மொழி பெயர்க்கப்பெற்று

திருவொற்றியூரான் அடிமை என்னும்

சென்னை

த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களால்

பதிப்பித்து

நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

விஷு ஆவணித்திங்கள்.

1941

காபிரைட்] [ரிஜிஸ்தர் செய்யப்பட்டது

திருவொற்றியூரான்

கிருஷ்ண எசுர்வேதம்

தைத்திரீய சங்கிதை

இரண்டாங் காண்டம் நான்காம் பகுதி

வே. மோ. பெ. கா. வெளியீடு, நெ. 5

PRINTED AT THE
EVEREADY PRESS,
34, HUNTERS ROAD,
CHOOLAI - VEPERY,
MADRAS.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

காமியவிகிருதி யாகம் என்னும், இரண்டாங் காண்டம்

முதற் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்.	அநுவாகம்.	
1		இரண்டாங் காண்ட முன்னுரை
2	1	ஐசுவரிய முதலானவற்றை விரும்பியவர்கட்கு அவ்வவ்வாட்டுக் கடாவை விதிக்கின்றது.
9	2	பெருவயிறு கொண்டவன் முதலானவர்கட்கு ஆட்டுக்கடாக்களை விதிக்கின்றது.
19	3	வெற்றி முதலானவற்றை விரும்பியவர்கட்கு ஆட்டை விதிக்கின்றது.
25	4	பிரமவொளி முதலானவற்றை விரும்பியவனுக்கு ஆடுக்கடா விதிக்கப்படுகின்றது.
34	5	பசுமுதலான காமமுடையார்களுக்குப் பசுக்களை விதிக்கின்ற பிராமணங்கள்.
42	6	கிராம முதலானவற்றை விரும்பியவர்க்குப் பசுக்கள்.
49	7	பிரமவொளி முதலானவைகளை விரும்பியவர்களுக்குப் பசுக்கள்
56	8	மீண்டும் பிரமவொளி முதலானவற்றை விரும்பியவர்கட்கு வேறு பசுக்கள் விதிக்கப்படுகின்றன.
64	9	அருந்தல் முதலானவைகளை விரும்பியவர்கட்குப் பசுக்களைக் கூறும் பிராமணங்கள்.
69	10	நைமித்திக பசுக்களைக் கூறும் பிராமணங்கள்.
72	11	காமியேஷ்டிகளின் யாஜ்யா புரோநுவாக்கிய மந்திரங்கள்.

இரண்டாம் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்.	அநுவாகம்.	
83	1	அக்கினியின் இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.
88	2	தரிசபூரணமாத யாக நிமித்த பிராயச்சித்த இஷ்டியைக் கூறும் பிராமணங்கள்.
94	3	விரும்பிய பொருளை யடைதற் பொருட்டு சில இஷ்டிக (சிறிய யாகங்)கள் விதிக்கப்படுகின்றன.
98	4	உணவுப் பொருள் முதலான வற்றை விரும்பியவர்கட்கு யாக விதிக்கப்படுகின்றது.
106	5	சோமயாகப் பாதகங்களை யொப்படல் முதலானவற்றிற்குச் செய்ய வேண்டிய இஷ்டிகளைக் கூறும் பிராமணங்கள்.
113	6	ஆதித்தனுக்கான ஹோமங்கள் முதலியவற்றின் விதிகள்.
118	7	இந்திர தேவதைக்குரிய போகங்கள் முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்.
123	8	கிராம முதலானவற்றை விரும்பியவர்கட்கு அதிருசு முதலிய இஷ்டிகளை விதிக்கும் பிராமணங்கள்.
129	9	மாரணச் செய்வினையாளர்கட்கு இஷ்டிகளின் விதி.
135	10	பிரமவொளி முதலானவற்றை விரும்பியவர்கட்கு இஷ்டி.
141	11	கிராம விருப்பம் முதலியவற்றை யுடையவர்கட்கு ஸூக்தி இஷ்டி முதலியவைகளின் விதி.
148	11	காமிய யாஜ்யா புரோநுவாக்கிய மந்திரங்கள்.

மூன்றும் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்.	அநுவாகம்.	
161	1	ஐசுவரிய முதலானவற்றை விரும்பியவர்கட்கு, ஆதித்தியனுடைய பொங்கல் முதலியவற்றை விதிப்பது.
167	2	மிருத்துவினால் பயமுதலியவைகளை யடைந்தவனுக்கு நூறு பொன் தகடுகள் வைத்துச் செய்யும் இஷ்டி முதலியவைகள் விதிக்கப்படுகின்றன.
177	3	வேள்வி கெடுதல் முதலானவைகளுக்கு இஷ்டிகளை விதிக்கும் பிராமணங்கள்.
182	4	சுவர்க்க இச்சை முதலியவற்றை யுடையவைகட்கு இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன.
186	5	காசநோய் கொண்டவனுக்கு இஷ்டி விதியைக் கூறுகின்றது.
189	6	அன்னம் அருந்தும் ஆற்றலையுடைய விரும்பியவனுக்கு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
192	7	இந்திரிய ஆற்றல், உடம்பின் ஆற்றல்களை விரும்பியவர்கட்கு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
196	8	கண்ணை விரும்பியவனுக்கு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
199	9	சாங்கிரகணி இஷ்டியை கூறும் பிராமணங்கள்
203	10	மேல்வரும் ஆயுஷ்காம இஷ்டிக்குரிய மந்திரங்கள்
207	11	ஆயுஷ்காம இஷ்டிக்குரிய மந்திரங்கள்
213	12	குதிரையின் தானத்தின் பொருட்டு, இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
217	13	பாவமுடையவனுக்கு இஷ்டியை விதிக்கும் மந்திரங்கள்
223	14	காமிய யாஜ்யா புரோநுவாக்கியங்களைக் கூறும் மந்திரங்கள்

நான்காம் பிரபாடக விடயச் சுருக்கம்

பக்கம்.	அநுவாகம்.	
133	1	பகைவரை யுடையவன் செய்யவேண்டிய இஷ்டி விதிக்கு பிராமணங்கள்
36	2	பகையுடையவனுக்கு விஜித், என்னும் இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
39	3	பகையுடையவனுக்கு 'சம்வர்க்கம்' என்னும் இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
2	4	'கார்முத' என்னும் காட்டுஞெந்துப் பொங்கலை விதிக்கும் பிராமணங்கள்
5	5	மேல்வரும் சித்ராயாகத்தின் உபஹோம மந்திரங்கள்
	6	'சித்ரா' என்னும் யாகத்தை விதிக்கும் பிராமணங்கள்
	7	காரீரி இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
	8	காரீரி இஷ்டி மந்திரங்கள்
	9	ஏழாவது அநுவாகத்திற்கு உரைகூறும் பிராமணங்கள்
	10	காரீர இஷ்டியின் இரண்டாம்பாக சம்மிதாதா மந்திரங்களுக்கு உரைகூறும் பிராமணங்கள்
	11	மேலை ஆவிஷ்டி (த்ரைதாதவீய இஷ்டி)யை விதிக்கும் பிராமணங்கள்
	12	முற்கூறிய யாகம் விளக்கப்படுகின்றது,
	13	ஐந்திர பிருகஸ்பத்தியப் பொங்கல்களை விதிக்கும் பிராமணங்கள்
	14	யாஜ்யா புரோநுவாக்கியங்களைக் கூறும் மந்திரங்கள்

ஐந்தாம் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்.	அநுவாகம்.	
298	1	பௌர்ணமியில் அக்கினி ஷோமீய அவி விதியின் உபோற்காதத்தைக் கூறும் பிராமணங்கள்
304	2	அக்கினி ஷோமீய புரோடாசத்தின் உபோற்காதம் விதிக்கு உபயோகமென்பதைக் காட்டுகின்ற பிராமணங்கள்.
311	3	அமாவாசையில் பால் தயிர் யாகங்களைவிதிக்கும் பிராமணம்
319	4	ஆக்கினி வைஷ்ணவ முதலிய யாகங்களைக்கூறும் பிராமணங்கள்.
325	5	அப்யுதய இஷ்டி முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்
336	6	தரிசபூரண மாதங்கட்கு சோமயாகத்துடன், முன்பின்னாகுந் தன்மையை விதிக்கும் பிராமணங்கள்
344	7	ஹோதா (இருக்கோதுவோன்) ஓதவேண்டியவகைப்பற்றி சாமிதேனி (சமித்துக்களை வைக்கும்) மந்திரங்கட்கு உரைகூறும் பிராமணங்கள்
352	8	எஞ்சிய சாமிதேனி மந்திரங்கட்கு உரைக்கூறும் பிராமணங்கள்
361	9	பிரவர மந்திரம் முதலியவைகட்கு உரைக்கூறுகின்ற பிராமணங்கள்
368	10	காமிய நைமித்திக சாமதேனி மந்திரங்களைக் கூறும் பிராமணங்கள்
375	11	சமித்து மந்திரங்களின் நியமங்களைக்கூறும் பிராமணங்கள்
389	12	காமிய இஷ்டிகளின் யாஜ்யானுவாக்கிய மந்திரங்கள்.

ஆறாம் பிரபாடக விடயச் சுருக்கம்

பக்கம். அநுவாகம்.

398	1	பிரயாஜயாக விதியைக்கூறும் பிராமணங்கள்
407	2	ஆச்சியபாகத்தை விதிக்கும் பிராமணங்கள்
417	3	முக்கியமாகிய அக்னியின் புரோடாசத்தைக் கூறும் பிராமணங்கள்
424	4	வேதிகை செய்யும் முறையை விதிக்கும் பிராமணங்கள்
430	5	வேதிகையின்மீது, தருப்பைகளைப் பரப்புவதைக் கூறும் பிராமணங்கள்
440	6	உபலாம்சுயாக, சுவிஷ்டகிருத் யாகங்களைக்கூறும் பிராமணங்கள்
448	7	இடா, என்னும் பசுவடிவை அழைக்கும் மந்திரத்தையும் அதன் உரையையும் எடுத்துக் கூறும் பிராமணங்கள்
457	8	இடாவை யருந்தல் பிராசித்ரத்தை யருந்தல்களைக் கூறும் பிராமணங்கள்
465	9	அநுயாஜை முதலானவற்றைக் கூறும் பிராமணங்கள்
476	10	முடிவில் பருதிகளை எரிப்பதற்கும் பத்தினி சம்யாசயாகத்திற்கும் உரிய பிராமணங்கள்
481	11	சர்வர்க்க இஷ்டியைக் கூறும் மந்திரங்கள்
489	12	பித்ரு எக்ஞ அங்கங்களின் ஹௌத்திர மந்திரங்கள்.

இரண்டாங்காண்ட விடயச்சுருக்கம்

முற்றிற்று.

கிருஷ்ண எசுர்வேதத் தைத்திரீய சங்கிதை
இரண்டாங் காண்டத்தின்
பிழை திருத்தங்கள்

மக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	23	எனமான	எசமான
10	14	द॑धाति	द॒॑धति
19	5	ए॒षु॑	ए॒षु
64	16	ष्णो	ष्णा
88	17	ल॑न्नि॒—अ॒	ल॒न्नि—अ॑
101	9	यदग्नयेशुचय	यदग्नयेपावकायवाचमेवास्मिन्तेनदधातियद-ग्नयेशुचय
110	18	व्राद्ध	व्राह्म
121	15	புரோடாசஞ்செ	புரோடாசங்களைச்செ
128	10	ஐசுகரியதை	ஐசுவரியத்தை
131	12	பாகமுஞ்	அவியுஞ் செ
135	21	द्वे॑ष॒	द्वे॑प॒
141	8	ह॒ध	ह॒व
142	1	ह्वा॒	ह्वा
,,	14	या—वा॒	वा—या॒
150	2	मारत॑	मात॑
167	1	அநு. 1.	அநு. 2.
174	13	பொங்கல் செய்து	சாமையரிசியால் பொங்கல் செய்து.
183	16	स्ये॒ष	स्ये॒षा
187	7	ईर्ष्यन्तीःपुनरया	ईर्ष्यन्तीः पुनरगच्छन्ता अन्वैत्ताःपुनरया

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
192	16	பிருஷ்டியம்	பிருஷ்டம்
194	7	பிருஷ்ட்டிய	பிருஷ்ட்ட
200	3	दे॒वा	दे॒वा
201	4	வடக்குத்தெற்கு	தெற்குவடக்கு
208	15	युं – र - ष्प	यु॑ - रे॑ – ह्वि॑
,,	16	ता - व	ता॑ - ब
217	14	षरुणाद्वि	वरुणा वर्मौ सामस्तंवा मेतेनावयजेयोवा मिन्द्रावरुणाद्वि
218	4	हैता	हदुरिष्ट्याएवैनंपातियोवामिन्द्रावरुणाद्विपात्सु- पशुषु सामस्तंवामेतेनावयज इत्या हैता
224	3	ग्रि॑ वर्श॑म	नि॑ - वर्श॒मे॑
,,	9	म॒द - ने॑	म॒द - ग्रे॑
225	24	சோமராசமே	சோமராசனே
229	21	முதலியால்	முதலியதால்
234	11	पिशाचा स्तेषां	पिशाचा स्तेन्यतस्तेषां
236	15	विमृ॑धे॒य	वि॑मृधे॒य
237	2	व॒ते - व्यो	व॒ते - व्यो॒
242	6	அக்கினியே	அக்னயே
,,	7	சம்வர்க்கம்	சம்வர்காய
268	13	दु॒र्भि॑स्स	दु॒र्भिर्स॑
274	1	மயையாய்	மழையாய்
289	15	मि॑द्धि॒	मिद्धि
312	7	द॒धि	द॒धि
,,	17	ती॒न्द्रो	तीती॒न्द्रो
334	20	செய்து	செய்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
336	19	विधानी	विर्वानी
353	17	िपतेप	िपपते
357	16	வ்ருணன்த்வா	விருஷணன்த்வா
366	18	தனதிருப்பை	தனதிருப்பை
369	8	त्रिंशतमनु	त्रिंशतमनु
371	27	பனேழாம்	பதினேழாம்
384	1	விறகுகளை,க்,கட்டிய	விறகுகளைக்கட்டிய
390	5	युज्य	यज्यु
393	26	பாதுசாப்பை	பாதுகாப்பை
398	22	क्षेप्रति	क्षेप्रति
409	3	तिचतुष्पद	तिचतुष्पदायाज्या चतुष्पद
432	1	रोत्रेपनो	रोवेपनो
448	9	मपी	मपी
476	20	च म - मृ	चम - मृ

பிழை திருத்தங்கள்
முடிந்தன.

ஓம்

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

இரண்டாங்காண்டம்

முன்னுரை.

வேதங்களிற் கூறப்பட்ட கருமம், பிரகிருதி விகிருதி என்று இருவகைப் படும். அவற்றுள், அங்கங்கள் முழுவதுங் கூறப் பெற்றுளது பிரகிருதியாம். சிலவிசேடத்தை மாத்திரம் எடுத்துக் கூறிவிட்டு எஞ்சியவைகளை, ‘பிரகிருதியைப்போற் செய்து கொள்க, என்பது முதலான வாக்கியங்களால் எடுத்துக் கொள்ளப்பெற்றது விகிருதியாம். இவ்வாற்றால், அக்கினி ஹோத்திரம், இஷ்டி, சோமம் என்னும் மூன்றும் பிரகிருதிகள். இவற்றுள், நாடோறும் காலை மாலை பால் நெய் முதலான பொருள்களால் ஆகுதி செய்யுங்கருமம் அக்கினி ஹோத்திர மெனப்படும். அதனுடைய விகிருதியாகங்கள், மாசாக்னி ஹோத்திரங்கள். புரோடாச முதலான பொருள்களால் ஒவ்வொரு பட்சத்திலுஞ் செய்கின்ற கிரியை இஷ்டியெனப்படும். இதுவே தரிச பூரண மாசயாக மென்பதாம். இதனுடைய விகிருதி யாகங்களோ, “ஐந்திராக்னம் ஏகாதச கபாலம் நிர்வபேத்” என்பது முதலான காமிய இஷ்டிகள்,

அங்ஙனமே, சோமக் கொடியின் இரசத்தால் ஒவ்வொரு வசந்தகாலத்திலுஞ் செய்யப்படும் கருமம் சோமமெனப்படும். இதுவே அக்கினிஷ்டோமமென்பதுமாம். இதற்கு நேரே விகிருதியாகிய யாகங்களோ, விச்வஜித் என்பது முதலான ஏகாஹ: என்பதாம்: பரம்பரையாய் விகிருதிகளோ, ஆயிரம் வருடங்கள் வரை செய்யப்படும் சத்ரயாகம் முடிவாகிய கருமங்களாம்.

இவ்வாறாக உள்ள கருமத் தொகுதிகளுள், பிரகிருதிகளான இஷ்டிகளும் சோமமும் முதற்காண்டத்தின் நான்கு பிரபாடகங்களாற் கூறப்பட்டன. மற்றும், விகிருதிகள் இவைகள்தானென்றுணர்த்துதற் பொருட்டு புனராதேயம், வாஜபேயம் முதலானவைகளுங் கூறப்பட்டன.

இவ்விரண்டாங் காண்டத்திலோ, விகிருதியாகங்களே கூறப்பட்டுகின்றன. இதில், சில விகிருதி யாகங்கள் கூறப்பட்டிருப்பினும் விகிருதிகள் மிகுதிகளாதலின் விகிருதிகளே என்றது குற்றமின்றியதாம்,

(ஐசுவரிய முதலானவைகளை

மற்றும், மேற்கூறியவாற்றால் இதிற் கூறவேண்டியவைகள் காமியேஷ்டிகளேயாம். அங்ஙனமாயினும், அவைகள் மிக விரிவாகக்கூறத் தக்கனவாமாதலின் அவைகளைப் பின்னர்க்கூற வேண்டுமென்னுங் கருத்தால் இடையில் சிறிதளவில் முடியும் காமிய பசுக்கள் (இச்சித்துச் செய்யும் ஆட்டுக் கடாக்கள்) கூறப்படுகின்றன. இவைகட்கு நியமம் இல்லை. என்னையெனின்? தரிசபூரணமாதத்தின் அங்க சமுதாயத்திற்குக் கருத்தன் (செயலாளன்) ஒருவனேயாதலின் நியமமுண்டு; இக் காமிய பசுக்கட்கு அவ்வாறின்மையின் நியமமில்லை என்க. இக்காண்டத்திலுள்ள அநுவாகங்களுடைய பாகுபாட்டு நியமமோ, வேதமோதும்வகைபற்றி வந்ததாம் என்க.

முதலநுவாக விடயச்சுருக்கம்

भूतिकामो ग्रामकामः प्रजार्थी दीर्घरोगवान् ॥

प्रजापश्वर्थिनौचैषां श्वेतायाः पशवश्श्रुताः ॥ १ ॥

ஐசுவரியம், கிராமம், பிரசை என்பவைகளை விரும்பியவனுக்கும், நீண்ட வியாதியையுடையவனுக்கும், பிரசை பசுக்களை விரும்பியவனுக்கும் வெள்ளை நிறமுடைய ஆட்டுக் கடாவைக்கொண்டு யாகஞ் செய்தல் வேண்டும் என்பது.

இரண்டாங்காண்டம் முதற் பிரபாடகம்

முதலநுவாகம்

ஆறுபஞ்சாதிக்குமேல் பதின்மூன்று பதங்களைக் கொண்டது. இதில், ஐசுவரிய முதலானவற்றை விரும்பியவர்கட்கு அவ்வவ் வாட்டுக்கடாவை விதிக்கின்றது.

वायव्यँ श्वेतमा लभेत भूतिकामो वायुर्वै क्षेपिष्ठा देवता
वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं भूतिं गमयति भव-
त्येवातिक्षिप्रा देवतेत्याहुस्सैनमीश्वरा प्रदह इत्येतमेव सन्तं
वायवे नियुत्वत आ लभेत नियुद्वा अस्य धृतिर्धृत एव भूतिमुपै
त्यप्रदाहाय भवत्येव ॥ १ ॥ वायवे नियुत्वत आ लभेत ग्रामकामो
वायुर्वा इमाः प्रजा नस्योता नेनीयते वायुमेव नियुत्वन्तँ स्वेन

भागधेयेनोप धावतिस एवास्मै प्रजा नस्योता नि यच्छति ग्राम्येव भवति नियुत्वते भवति ध्रुवा एवास्मा अनपगाः करोति वायवे नियुत्वत आ लभेत प्रजाकामः प्राणो वै वायुरपानो नियुत्प्राणा पानौ खलु वा एतस्य प्रजायाः ॥ २ ॥ अपक्रामतो योऽलं प्रजायै सन्प्रजां न विन्दते वायुमेव नियुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्राणापानाभ्यां प्रजां प्र जनयति विन्दते प्रजां वायवे नियुत्वत आ लभेत ज्योगामयावी प्राणो वै वायुरपानो नियुत्प्राणापानौ खलु वा एतस्मादप क्रामतो यस्य ज्योगामयति वायुमेव नियुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप ॥ ३ ॥ धावति स एवास्मिन्प्राणापानौ दधात्युत यदीतासुर्भवति जीवत्येव प्रजापतिर्वा इदमेक आसीत्सोऽकामयत प्रजाः पशून्त्सृजेयेति स आत्मनो वपामुदक्खिदत्तामग्नौ प्रागृह्णात्ततोऽजस्तूपरः समभवत्तꣳ स्वायै देवताया आऽलभत ततो वै स प्रजाः पशूनसृजत यः प्रजाकामः ॥ ४ ॥ पशुकामः स्यात्स एतं प्राजापत्यमजं तूपरमा लभेत प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्रजां पशून्प्र जनयति यच्छ्मश्रुणस्तत्पुरुषाणाꣳ रूपं यत्तूपरस्तदश्वानां यदन्यतोदन्तद्गवां यदव्या इव शफास्तदवीनां यदजस्तदजानामेतावन्तो वै ग्राम्याः पशवस्तान् ॥ ५ ॥ रूपेणैवाव रुन्धे सोमापौष्णं त्रैतमा लभेत पशुकामो द्वौ वा अजायै स्तनौ नानैव द्वावभि जायेते ऊर्जं पुष्टिं तृतीयस्सोमापूषणावेव

स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै पशून्प्र जनयतः सोमो वै रेतो
धाः पूषा पशूनां प्रजनयिता सोम एवास्मै रेतो दधाति पूषा पशून्प्र
जनयत्यौदुम्बरो यूपो भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्क्पशव ऊर्जैवास्मा ऊर्जं
पशूनव रुन्धे ॥ ६ ॥

ஈண்டு இவ்வநுவாகத்தின் முதலில் ஐசுவரியத்தை விரும்பியவன் செய்யும் வேள்விக்குரிய ஆட்டுக்கடா இன்னதென்று விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 1.

वायव्यꣳ श्वेतमालभेत भूतिकामो वायुर्वै क्षेपिष्ठा देवता वायुमेव स्वेन भाग
धेयेनोप धावति स एवैनं भूतिं गमयति भवत्येव ।

என்பது.

உரை.

ஐசுவரியத்தை விரும்பியவன், வாயு தேவதைக்குரிய வெண்மை நிறமுடைய வெள்ளாட்டுக் கடாவைக் கொன்று வேள்வி செய்தல் வேண்டும். வாயு விரைவில் செல்லும் தேவதை. வாயு தேவதைக்கு மிகப்பிரியமாகிய வெள்ளாட்டுக் கடாவின் அவிர்ப்பாகத்தால் வாயுவை வழிபடுகின்றான். அவ்வாயு தேவதை, இவனுக்கு ஐசுவரியத்தைக் கொடுக்கின்றது. ஐசுவரியமும் உண்டாகின்றது என்பது.

மேற்கூறியதற்குச் சிறப்புவிதி கூறப்படுகின்றது.

பிராமணம் 2.

अतिक्षिपा देवतेत्याहुस्सैनमीश्वरा प्रदह इत्येतमेव सन्तं वायवे नियुत्वत आ
लभेत नियुद्वा अस्य धृतिर्धृत एव भूतिमुपैत्यप्रदाहाय भवत्येव ।

என்பது.

உரை.

முற்கூறிய வாயு தேவதை மிக விரைவுடையதாமாதலின் தீயுடன் சேர்ந்த இவ்வேள்வித் தலைவனை எரித்து விடுவதில் ஆற்றலுடையதாம் என்று அறிவுசான்ற பெரியார்கள் கூறுகின்றனர். ஆதலின், நியுத் என்னும் குதிரை

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

பூட்டிய தேவதையுடைய வாயுவிற்கு ஆட்டுக்கடாவைக் கொன்று வேட்டல் வேண்டும். நியுத் என்னுங் குதிரை வாயுவின் வேகத்தை அடக்கிக் கொள்கின்றது. இதனால் எசமானன் கேடொன்றுமின்றி ஐசுவரியத்தை யடைகின்றான். மனக்கொதிப்பும் உண்டாகமாட்டாது என்பது.

அப்பசுவையே வேறுபயனின் பொருட்டு விதிக்கின்றது

பிராமணம் 3.

वायवे नियुत्वत आ लभेत ग्रामकामो वायुर्वा इमाः प्रजा नस्योता नेनीयते वायुमेव नियुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्रजा नस्योता नि यच्छति ग्राम्येव भवति ।

என்பது

உரை

கிராமத்தை விரும்பியவன் நியுத் என்னுங் குதிரை பூட்டிய தேரையுடைய வாயுவிற்கு ஆட்டுக்கடாவைக் கொல்லல் வேண்டும். கடாவின் அவிர்ப்பாகத்தால் களிப்புற்ற வாயு இந்தப் பிரசைகளை, மூக்கில் கயிற்றைப்போட்டு கிராமத் தலைவனிடத்தில் இழுத்துக்கொண்டு போகின்றது. இதனால் பிரசைகள் தனது வசப்படவே அவன் கிராமத்திற்குத் தலைவனாகி விடுகின்றான் என்பது.

தேவதையின் குணத்தைப் புகழ்தல்

பிராமணம் 4.

नियुत्वते भवति ध्रुवा एवास्मा अनपगाः करोति ।

என்பது

உரை

நியுத் என்னுங் குணத்துடன் கூடிய தேவதைக்கு, ஆட்டுக்கடாவை அவிக்கு உரித்தாக்கியதால், கிராமத்திலுள்ளார் அனைவரும் எசமானனிடத்தில் நிலைத்த பிரிய முடையாராகின்றனர். ஒரு போதும் பிரியமிலாதார் ஆகார் என்பது.

மீண்டும் மற்றொரு பயனையடைதற் பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம் 5.

वायवे नियुत्वत आ लभेत प्रजाकामः प्राणो वै वायुरपानो नियुत्प्राणापानौ खलु वा एतस्य प्रजाया अप क्रामतो योऽलं प्रजायै सन्प्रजां न विन्दते

(ஐசுவரிய முதலானவைகளை

वायुमेव नियुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्राणापानाभ्यां प्रजां प्र जनयति विन्दते प्रजाम् ।

என்பது

உரை.

நியுத் என்னுங் குணவிசேடத்தையுடைய வாயுவிற்கு ஆட்டுக்கடாவைக் கொல்லுதல் வேண்டும். பிராண அபானவடிவாகிய வாயு, தருணியைப் புணர்ந்தும் குழந்தை வடிவாய் ஆகிறதில்லை. அத்தகைய வாயுவை அதற்கு உரிய அவிர்ப்பாகத்தால் வழிபடில் பிராண அபானவடிவாய்ப் புத்திரப் பேற்றையுண்டாக்குகின்றது என்பது.

மீண்டும் மற்றோர் பயனின் பொருட்டு விதிக்கின்றது

பிராமணம் 6.

वायवे नियुत्वत आ लभेत ज्योगामयावी प्राणो वै वायुरपानो नियुत्प्राणापानौ खलु वा एतस्मादप क्रामतो यस्य ज्योगामयति वायुमेव नियुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्प्राणापानौ दधात्युत यदीतासुर्भवति जीवत्येव ।

என்பது.

உரை.

நெடுநாள் பிணியாற் பீடிக்கப்பட்டோன் பிராணுபான வடிவாகிய வாயு தேவதையின் பொருட்டு ஆட்டுக்கடாவைக் கொல்லல் வேண்டும். அத்தகைய வாயு தேவதையை அதற்குரிய கடாவின் மாமிச அவிர்ப்பாகத்தால் வழிபடுகின்றவன் பூமியில் விழுந்து சிறிதுநேரம் பிராணன் போய்விட்டவனுயினும் மீண்டும் உயிர் பெற்றுப் பிழைத்துக்கொள்கின்றுன் என்பது.

மற்றோர் கருமத்தை விதித்துப் பொருட்டுப் புகழப்படுகின்றது.

பிராமணம் 7.

प्रजापतिर्वा इदमेक आसीत्सोऽकामयत प्रजाः पशून्त्सृजेयेति स आत्मनो वपामुदक्खिदत्तामग्नौ प्रागृह्णात्ततोऽजस्तूपरस्समभवत्तꣳ स्वायै देवताया आऽलभत ततो वै स प्रजाः पशूनसृजत ।

என்பது

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

உரை

இவ்வுலகம், பிரமன் வடிவாக இருந்தது. அத்தகைய பிரசாபதியானவன் பிரசைகளையும் பசுக்களையும் உண்டாக்க விரும்பி தனது ஈரலின் சவ்வை எடுத்துத் தீயில் போட்டனன். தீயிற்கருகிய ஈரல்சவ்வு கொம்பின்றிய வெள்ளாடாயிற்று. பிறகு, தன்னை ஒரு தேவதையாகக் கொண்டு அவ் வாட்டைக் கொன்றனன். அவ் வாற்றலால் பிரசைகளையும் பசுக்களையும் உண்டாக்கினன். எல்லாம் வல்லவனுக்கு இது பொருந்துமென்க என்பது.

இப்போது அதை விதிக்கின்றது

பிராமணம் 8.

यः प्रजाकामः पशुकामस्यात्स एतं प्राजापत्यमजं तूपरमा लभेत प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्रजां पशून्प्र जनयति ।

என்பது

உரை

பிரசைகளையும் பசுக்களையும் விரும்பியவன், பிரசாபதி தேவதைக்குரிய மொட்டை வெள்ளாட்டுக் கடாவைக் கொல்லுதல் வேண்டும். தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்தவனுக்கு, பிரசாபதி, பிரசைகளையும் பசுக்களையும் உண்டாக்குகின்றான் என்பது.

ஆட்டுக் கடாவைப் புகழ்தல்

பிராமணம் 9.

यच्छ्मश्रुणस्तत्पुरुषाणाꣳ रूपं यत्तूपरस्तदश्वानां यदन्यतोदन्तद्गवां यदव्या इव शफास्तदवीनां यदजस्तदजानामेतावन्तो वै ग्राम्याः पशवस्तान्रूपेणैवाव रुन्धे ।

என்பது

உரை

வெள்ளாட்டுக்கடா, மீசையிருத்தலின் புருடனுக்கும், கொம்பில்லாததால் குதிரைக்கும், கீழ் ஈற்றில் பற்களிருத்தலின் பசுவிற்கும், இரண்டு குளம்பிருத்தலின் செம்மறி ஆட்டிற்கும், ஆட்டின் சாதியுடைமையால் வெள்ளாட்டிற்கும் ஒப்புடையதாம். கழுதை, ஒட்டை இரண்டையுஞ் சேர்த்து ஏழுவகைகள் எனினும் இவ்வைந்துமே சிறப்புடையுவைகள் எனக் கொள்ளப்படுகின்றன என்பது.

மற்றொரு பசுவை விதிக்கின்றது

பிராமணம் 10.

सोमापौष्णं त्रैतमा लभेत पशुकामो द्वौ वा अजायै स्तनौ नानेव द्वावभि जायेते ऊर्जं पुष्टिं तृतीयस्सोमापूषणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै पशून्प्र जनयतस्सोमो वै रेतोधाः पूषा पशूनां प्रजनयिता सोम एवास्मै रेतो दधाति पूषा पशून्प्र जनयति ।

என்பது

உரை

பசுக்களை விரும்பியவன் சோமனுக்கும் பூஷாவிற்கும், மூன்று குட்டிப் பிறப்பினுள் வளர்ந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கொல்லல் வேண்டும். தனித் தனி பால் குடிப்பதற்கு ஆட்டிற்கு இரண்டு முலைகள் உண்டு. மூன்றாவது குட்டி பிறக்கில் அது ஆட்டிற்குள்ள புஷ்டியைக் குறிப்பிக்கின்றது. தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப் பெற்ற சோமனும் பூஷனும் கருப்பாதானத் தைப் பாதுகாத்துப் பசுக்களையுண்டாக்குகின்றார்கள் என்பது.

விதியால் வந்த கருங்காலியை நீக்குவதற்கு விதிக்கின்றது

பிராமணம் 11.

औदुम्बरो यूपो भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्क्पशव ऊर्जैवास्मा ऊर्जं पशूनव रुन्धे ।

என்பது

உரை

அத்திமரத்தால் யூபஞ் (ஆட்டுக்கடாவைக் கட்டுங் கொம்பு) செய்யப்படு கின்றது. அத்திமரம் இரசவடிவாயிருக்கின்றது. ஆடும், பால் வாயிலாக இரச வடிவாயிருக்கின்றது. ஆகலின் வேள்விக்கிறைவனுக்கு இரசவடிவ பசுக்களை (ஆடுகளை) த்தேடி வைக்கின்றது என்பது.

சங்கற்பமுதல் பிராமண தர்ப்பணம் வரை யூகித்துக்கொண்டு மேற் கூறிய காமிய யாகங்களைச் செய்தல் வேண்டும் என்பதையுய்த்துணர்க.

முதல் அநுவாகம்

முற்றிற்று.

மகோதரம் முதலானவற்றிற்குப் பசுக்கள்)

இரண்டாம் அநுவாக விடயச்சுருக்கம்

जलोदरगृहीतोये ये वाञ्छन्ति पशुप्रथाम् ।
ब्रह्मवर्चसकामो यो योविद्वान्वक्तुमक्षमः ॥ १ ॥
दीर्घरोगी प्रजाकामस्सभारञ्जनवर्जितः ।
पौरोहित्ये स्पर्धमानश्चैतेषां पशवश्श्रुताः ॥ २ ॥

மகோதரங் கொண்டவனுக்கும், ஆடுகள் பெருகவேண்டியவனுக்கும், பிரமஒளியை விரும்பியவனுக்கும், சபையிற்பேசவிரும்பிய பண்டிதனுக்கும், நீண்ட பிணியாளனுக்கும், சபையை இரசிக்கும்படி பேசவிரும்பிய வனுக்கும், அரசப் புரோகிதத்தில் விருப்பிய முடையவனுக்கும் இன்ன இன்ன ஆட்டுக்கடாக்கள் என்று விதிக்கப்படுகின்றது என்பது.

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

எட்டுப் பஞ்சாதிகட்குமேல் நாற்பத்து மூன்று பதங்களைக் கொண்டது.

இதில் பெருவயிறு கொண்டவன் முதலானவர்கட்கு ஆட்டுக்கடாக்களை விதிக்கின்றது.

प्रजापतिः प्रजा असृजत ता अस्मात्सृष्टाः पराचीरायन्ता वरुणम
गच्छन्ता अन्वैत्ताः पुनरयाचत ता अस्मै न पुनरददात्सोऽब्रवीद्वरं
वृणीष्वाऽथ मे पुनर्देहीति तासां वरमाऽलभत स कृष्ण एकशिति
पादभवद्यो वरुणगृहीतस्स्यात्स एतं वारुणं कृष्णमेकशिति
पादमा लभेत वरुणम् ॥ १ ॥ एव स्वेन भागधेये
नोप धावति स एवैनं वरुणपाशान्मुञ्चति कृष्ण एकशिति
पाद्भवति वारुणो ह्येष देवतया समृद्ध्यै सुवर्भानुरासुरस्सूर्यं तम-
साऽविध्यत्तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्य यत्प्रथमं तमोऽपाघ्न-

न्त्सा कृष्णाऽविरभवद्यद्द्वितीयꣳ सा फल्गुनी यत्तृतीयꣳ सा बलक्षी
यदध्यस्थादपा कृन्तन्त्साऽविर्वशा ॥ २ ॥ समभवत्ते देवा अब्रुवन्दे
वपशुर्वा अयꣳ समभूत्कस्मा इममा लप्स्यामह इत्यथ वै तर्ह्यल्पा
पृथिव्यासी दजाता ओषधयस्तामविं वशामादित्येभ्यः कामायाऽऽल
भन्त ततो वा अप्रथत पृथिव्य जायन्तौषधयो यः कामयेत प्रथेय
पशुभिः प्र प्रजया जायेयेति स एतामविं वशामादित्येभ्यः कामाय
॥ ३ ॥ आ लभेताऽऽदित्यानेव कामꣳ स्वेन भागधेयेनोप धावति
त एवैनं प्रथयन्ति पशुभिः प्र प्रजया जनयन्त्यसावादित्यो न
व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एता मल्हा आऽल
भन्ताऽऽग्नेयीं कृष्णग्रीवीꣳ सꣳहितामैन्द्रीꣳ श्वेतां बार्हस्पत्यां
ताभिरेवाऽस्मिन्रुचमदधुर्यो ब्रह्मवर्चसकामस्स्यात्तस्मा एता मल्हा
आ लभेत ॥ ४ ॥ आग्नेयीं कृष्णग्रीवीꣳ सꣳहितामैन्द्रीꣳ
श्वेतां बार्हस्पत्यामेता एव देवतास्स्वेन भागधेयेनोप धावति ता
एवाऽस्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति वसन्ता प्रातराग्नेयीं
कृष्णग्रीवीमा लभेत ग्रीष्मे मध्यंदिने सꣳहितामैन्द्रीꣳ शरद्यपरा
ह्णे श्वेतां बार्हस्पत्यां त्रीणिवा आदित्यस्य तेजाꣳसि वसन्ता प्रात
ग्रीष्मे मध्यंदिने शरद्यपराह्णे यावन्त्येव तेजाꣳसितान्येव ॥ ५ ॥
अव रुन्धे संवत्सरं पर्यालभ्यन्ते संवत्सरो वै ब्रह्मवर्चसस्य प्रदाता
संवत्सर एवास्मै ब्रह्मवर्चसं प्र यच्छति ब्रह्मवर्चस्येव भवति गर्भिणं-

அவ்வன்னமான பசுக்கள்)

यो भवन्तीन्द्रियं वै गर्भं इन्द्रियमेवाऽस्मिन्दधाति सारस्वतीं मेषी-
मा लभेत य ईश्वरो वाचो वदितोस्सन्वाचं न वदेद्वाग्वै सरस्वती
सरस्वतीमेव स्वेन भागधेयेनोप धावति सैवाऽस्मिन् ॥६॥ वाचं दधा
ति प्रवदिता वाचो भवत्यपन्नदती भवति तस्मान्मनुष्यास्सर्वां वाचं
वदन्त्याग्नेयं कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रुं ज्योगामयाव्यग्नि
वा एतस्य शरीरं गच्छति सोमꣳ रसो यस्य ज्योगा
मयत्यग्नेरेवाऽस्य शरीरं निष्क्रीणाति सोमाद्रसमुत यदीतासुर्भवति
जीवत्येव सौम्यं बभ्रुमा लभेताऽऽग्नेयं कृष्णग्रीवं प्रजाकाम-
स्सोमः ॥ ७ ॥ वै रेतोधा अग्निः प्रजानां प्रजनयिता सोम
एवास्मै रेतो दधात्यग्निः प्रजां प्रजनयति विन्दते प्रजा
माग्नेयं कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रुं यो ब्राह्मणो विद्यामनूच्य
न विरोचेत यदाग्नेयो भवति तेजएवाऽस्मिन्तेन दधाति यत्सौम्यो
ब्रह्मवर्चसं तेन कृष्णग्रीव आग्नेयो भवति तम एवास्मादप हन्ति
श्वेतो भवति ॥ ८ ॥ रुचमेवास्मिन्दधाति बभ्रुस्सौम्यो भवति ब्रह्म
वर्चसमेवाऽस्मिन्त्विषिं दधात्याग्नेयं कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रु
माग्नेयं कृष्णग्रीवं पुरोधायाꣳ स्पर्धमान आग्नेयो वै ब्राह्मणस्सौम्यो
राजन्योऽभितस्सौम्यमाग्नेयौ भवतस्तेजसैव ब्रह्मणोभयतो राष्ट्रं
परि गृह्णात्येकधा समावृङ्क्ते पुर एनं दधते ॥ ९ ॥

முதல் அநுவாகத்தில் வெண்மைநிற ஆட்டுக்கடா முதலான கடாக்கள் கூறப்பட்டன. இதில், வருணன் பிடித்துக்கொண்ட அதாவது மகோதரங் கொண்டவன் முதலானவர்கட்குக் கடாக்கள் கூறப்படுகின்றன.

வருணதேவதை பிடித்துக்கொண்டவனுக்கு ஆட்டுக்கடாவை விதிக்கப்போவதைமுன்னிட்டு
முதலில் அது புகழப்படுகின்றது

பிராமணம் 1.

प्रजापतिः प्रजा असृजत ता अस्मात्सृष्टाः पराचीरायन्ता वरुणमगच्छन्ता अन्वैत्ताः पुनरयाचत ता अस्मै न पुनरददात्सोऽब्रवीद्वरं वृणीष्वाऽथ मे पुनर्देहीति तासां वरमाऽलभत स कृष्ण एकशितिपादभवत्।

என்பது

உரை.

பிரசாபதியால் படைக்கப்பட்ட பிரசைகள் வெளி நோக்குடையவைகளாய்ப் பிரசாபதி யிடத்திலிருந்து வருணனைப் போயடைந்தன. பிறகு, பிரசாபதி, பிரசைகளுடன் கூடவேபோய் எமது பிரசைகளை எமக்குக்கொடுத்து விடுவாயாக வென்று வருணனைக் கேட்டனன். வருணன் கொடுக்கவில்லை பிறகு பிரசாபதி, இப்பிரசைகளுக்குள் சிறந்ததை எடுத்துக்கொண்டு எஞ்சிய பிரசைகளையாவது எமக்குக் கொடுத்து விடுவாயாக வென்று கேட்டனன். அதற்கு, வருணன், சில பசுக்களை இவை என்னுடையவைகளென்று தொட்டுக் காட்டினன். தொட்டது ஒருகால் வெள்ளையும் மற்றைய உடம்பு கறுப்புமாகிவிட்டது என்பது.

அக்கடாவை விதிக்கின்றது

பிராமணம் 2.

यो वरुणगृहीतस्स्यात्स एतं वारुणं कृष्णमेकशितिपादमा लभेत वरुणमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं वरुणपाशान्मुञ्चति।

என்பது.

உரை

பெருவயிறு கொண்டவன், அதாவது மகோதர வியாதியையுடையவன், வருண தேவதைக்குரிய, ஒருகால் வெளுத்து உடல்முழுதுங் கறுத்துள்ள ஆட்டுக் கடாவைக் கொன்று வேட்கல் வேண்டும். தனக்குரிய அவிர்ப்பாகத்தால் வழிபடப்பெற்ற வருணதேவதை, இவனை, வருணபாசத்தினின்றும் விடுவிக்கின்றது என்பது.

அவ்வண்ணமான பசுக்கள்)

பசு விசேடத்தைப் புகழ்தல்

பிராமணம் 3.

कृष्ण एकशितिपाद्भवति वारुणो ह्येष देवतया समृद्ध्यै ।

என்பது

உரை.

ஒருகால் வெண்மையும், உடல் முழுதும் கருமையுமாகிய ஆட்டுக்கடா, வருணனைக் கவரப் பெற்றதாமாதலின் எசமானனுக்கு ஆரோக்கிய சம்பத்தையுண்டாக்குவதாம் என்பது.

———

மலட்டு ஆட்டை விதித்தற் பொருட்டு அவ்வாட்டைக்கூறும் கதை கூறப்படுகின்றது

பிராமணம் 4.

सुवर्भानुरासुरस्सूर्यं तमसाऽविध्यत्तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्य यत्प्रथमं तमोऽपाघ्नन्त्सा कृष्णाऽविरभवद्यद्द्वितीयं सा फल्गुनी यत्तृतीयं सा वलक्षी यदध्यस्थादपाकृन्तन्त्साऽविर्वशा समभवत्ते देवा अब्रुवन्देवपशुर्वा अयं समभूत्कस्मा इममा लप्स्यामह इत्यथ वै तर्ह्यल्पा पृथिव्यासीदजाता ओषधयस्तामविं वशामादित्येभ्यः कामायाऽलभन्त ततो वा अप्रथत पृथिव्यजायन्तौषधयः ।

என்பது.

உரை.

பூமியின் கருமை வடிவத்தைக் கொண்ட, 'சுவர்ப்பானு' என்னும், அசுரன் ஒருவன், இருட்டால் சூரியனை மறைத்து விட்டனன். அதனால் உலகம் இருண்டது. அதைக்கண்ட தேவர்கள் அவ்விருளை நீக்கவிரும்பி அதற்கு உபாயம் இன்னதென்றாராய்ந்து, பல்வகை இரத்தின மணிகளின் ஒளியால் நான்கு முறையாக அவ்விருளைப்போக்கினார்கள். முதல்முறை நீக்கிய இருள் கரியநிறமுடைய ஒருவகைச் செம்மறியாடாயிற்று. இரண்டாம் முறை நீக்கிய இருள் சிவந்த நிறமுடைய ஒருவகைச் செம்மறியாடாயிற்று. மூன்றாம்முறை நீக்கிய இருள் வெள்ளை நிறமுடைய ஒருவகைச் செம்மறியாடாயிற்று. நான்காம் முறை நீக்கிய இருள் மலட்டுச் செம்மறியாடாயிற்று. எலும்பின் ஒளியால் நான்காம்முறை இருளை நீக்கியதால் அது தெய்விக முடையது என்று விசாரித்துணர்ந்து அந்த மலட்டுச் செம்மறியாட்டை கொன்று ஆதித்தர்கட்கு அவிர்ப்பாகங் கொடுத்து, பூமிவிரியும்படியும் ஓஷதிகள் உற்பத்தியாகும்படியுஞ் செய்து கொண்டார்கள் என்பது.

(மகோதர முதலானவற்றிற்கு

அந்நோயைய ஆட்டை விதிக்கின்றது

பிராமணம் 5.

यः कामयेत प्रथेय पशुभिः प्र प्रजया जायेयेति स एतामविं वशामादित्येभ्यः कामायाऽऽलभेताऽऽदित्यानेव कामꣳ स्वेन भागधेयेनोप धावति त एवैनं प्रथयन्ति पशुभिः प्र प्रजया जनयन्ति ।

என்பது.

உரை

பசுக்களின் பெருக்கத்தை யடைவேன்; பேரன் பிள்ளைமார்களால் தழைப்பேன் என்னும் இச்சைகளையுடையவன் ஆதித்ய தேவதைகட்கு மலட்டுச் செம்மறியாட்டைக் கொன்றுவேட்கல் வேண்டும். தமது அவிர்ப்பாகங்களால் வழிபடப்பெற்ற ஆதித்தர்கள் இவனுடைய பசுக்கள் பெருகும்படியும் புத்திரன் முதலானோர்கள் உண்டாகுமாறுஞ் செய்கின்றார்கள் என்பது.

பிரமவொளியை விரும்பியவனுக்கு ஆடுகளை விதித்தற்பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 6.

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एतामल्हा आऽलभन्ताऽऽग्नेयीं कृष्णग्रीवीꣳ सꣳहितामैन्द्रीꣳ श्वेतां वार्हस्पत्यां ताभिरेवास्मिन्रुचमदधुः ।

என்பது.

உரை

இவ்வாதித்தன் ஒருகாலத்தில் நன்றாக விளங்காதிருந்தனன். அதற்கு, தேவர்கள் பிராயச்சித்தஞ் செய்யவிரும்பி, அக்கினி தேவதைக்கு, கழுத்தில் இரண்டு முலைகள் தொங்கும் வெண்மைநிற ஆடு ஒன்றையும், இந்திரதேவதைக்கு, கழுத்தில் மாத்திரங் கறுப்புடைய ஆட்டையும், பிருகற்பதி தேவதைக்கு வெள்ளைநிற ஆட்டையுங் கொன்று வேள்வி செய்தார்கள். இதனால் ஆதித்தனுக்கு ஒளியுண்டாயிற்று என்பதாம்.

அதை விதிக்கின்றது

பிராமணம் 7.

यो ब्रह्मवर्चसकामस्स्यात्तस्मा एता मल्हा आ लभेताऽऽग्नेयीं कृष्णग्रीवीꣳ सꣳहितामैन्द्रीꣳ श्वेतां वार्हस्पत्यामेता एव देवतास्स्वेन भागधेयेनोप धावति ता एवाऽस्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது.

அவ்வண்ணமான பசுக்கள்)

உரை.

மறைகளை யோதுஞ் சம்பத்து வடிவு பிரம வொளியை விரும்பியவன், மேற்கூறிய மூன்று ஆடுகளையும் மூன்று தேவதைகளின் பொருட்டுக் கொன்று யாகஞ் செய்யில், அத்தேவதைகள் இவனுக்குப் பிரம வொளியைக் கொடுக்கின்றார்கள் என்பதாம்.

மேற்கூறிய மூன்று ஆடுகளின் விசேடங்களையும் காலநியமங்களையுங் கூறுகின்றது

பிராமணம் 8.

वसन्ता प्रातराग्नेयीं कृष्णग्रीवीमा लभेत ग्रीष्मे मध्यंदिने सꣳहितामैन्द्रीꣳ शरद्यपराह्णे श्वेतां बार्हस्पत्यां त्रीणि वा आदित्यस्य तेजाꣳसि वसन्ता प्रात ग्रींष्मे मध्यंदिने शरद्यपराह्णे यावन्त्येव तेजाꣳसि तान्येवाऽव रुन्धे ।

என்பது

உரை

வசந்தரிதுவில் அதிகாலையிலும், க்ரீஷ்மரிதுவில் நடுப்பகலிலும், சரத ரிதுவில் பிற்பகலிலும் ஆடுகளைக் கொன்று ஹோமங்கள் செய்து பிரம தேசசை யடைவானாக. இம் மூன்று ரிதுக்களிலும் இம்மூன்று வேளைகளி லுள்ள சூரியனுடைய ஒளிகளே சிறந்தன என்பது.

விரதந்தொடங்கி வருடம்வரை பிரமசர்யம் முதலான நியமம் விதிக்கப் படுகின்றது.

பிராமணம் 9.

संवत्सरं पर्यालभ्यन्ते संवत्सरो वै ब्रह्मवर्चसस्य प्रदाता संवत्सर एवास्मै ब्रह्मवर्चसं प्र यच्छति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது.

உரை

ஒரு வருடத்தில் நிரந்தரமாக நியமத்தை எடுத்துக் கொண்டவனால் அவ்வக்காலத்தில் ஆட்டுயாகஞ் செய்யப்படுகின்றது. பூணூல் போட்டுக் கொண்ட மாணவனுக்கு, சந்தியாவந்தன முதலான ஆசார கற்பனம் ஒரு வருடத்தில் முடிகின்றது; ஆகலின், வருடம் பிரம வொளியைக் கொடுக்கின்றதாம் என்பது.

கூறிய ஆடுகட்குச் சில குணவிதி

பிராமணம் 10.

गर्भिणयो भवन्तीन्द्रियं वै गर्भ इन्द्रियमेवाऽस्मिन्दधति ।

என்பது

உரை.

கூறிய மூன்று ஆடுகளும் சினையாயிருக்கின், இவனுக்கு இந்திரியத்தை யுண்டாக்கின்றது. கர்ப்பம் இந்திரியமாம் ஆதலின் என்பது.

வித்வான்களுடைய சபையில் வெற்றியை விரும்பியவனுக்கு ஆடு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 11.

सारस्वतीं मेषीमा लभेत य ईश्वरो वाचो वदितोः सन्वाचं न वदेद्वाग्वै सरस्वती सरस्वतीमेव स्वेन भागधेयेनोप धावति सैवाऽस्मिन्वाचं दधाति प्रवदिता वाचो भवति ।

என்பது.

உரை.

பேசுந்திறமை யுடையவனாயிருந்தும் சபையில் பேச்செழாதவன் சரசுவதி தேவதைக்குரிய செம்மறியாட்டைக் கொன்று வேள்விசெய்யில், அதனாற் களிப்புற்ற சரசுவதி, இவனை, பெரும் பேச்சாளியாகச் செய்கின்றாள் என்பதாம்.

அப்பசுவில் ஓர் விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 12.

अपन्नदती भवति तस्मान्मनुष्यास्सर्वां वाचं वदन्ति ।

என்பது.

உரை.

அது, பல்விழாத ஆடாயிருத்தல் வேண்டும். அதனால், மனிதன் எல்லா வாக்கையும் பேசுகின்றான் என்பதாம்.

மிகுந்த வியாதியுடையவனுக்கு இரண்டு ஆடுகளின் விதி

பிராமணம் 13.

आग्नेयं कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रुं ज्योगामयावी यदग्निं वा एतस्य शरीरं गच्छति सोमं रसो यस्य ज्योगामयत्यग्नेरेवाऽस्य शरीरं निष्क्रीणाति सोमाद्रसमुत यदीतासुर्भवति जीवत्येव ।

என்பது.

உரை.

நீண்ட நாள் வியாதியாற் பீடிக்கப்பட்டவன், சோமனுக்குரிய புகைநிற ஆட்டையும், அக்கினிக்குரிய கறுப்புநிறக்கழுத்துடைய ஆட்டையுங் கொண்டு யாகஞ் செய்யில், உடம்பில் இரசுக்தையுண்டாக்கும் சோமனும், மாமிசத்தைக் காயச்செய்யும் அக்கினியும் வியாதியைப் போக்கி உடம்பைப் பாதுகாக்கின்றார்கள் என்பதாம்.

மக்களை விரும்பியவனுக்கு இரண்டு ஆடுகளைக் கொண்ட கருமம் விதிக்கப் படுகின்றது

பிராமணம் 14.

सौम्यं बभ्रुमा लभेताऽऽग्नेयं कृष्णग्रीवं प्रजाकामस्सोमो वै रेतोधा अग्निः प्रजानां प्रजनयिता सोम एवास्मै रेतो दधात्यग्निः प्रजां प्र जनयति विन्दते प्रजाम् ।

என்பது.

உரை.

மக்களை விரும்புவோன், சோமனுக்குரிய புகைநிற ஆட்டையும், அக்கினிக்குரிய கறுப்பு நிறக் கழுத்துடைய ஆட்டையுங் கொண்டு யாகஞ் செய்க. சோமன் கருப்பத்தை யுண்டாக்குகின்றான். அக்கினி பிறப்பிக்கின்றது. இதனால் மக்களைப் பெறுகின்றான் என்பதாம்.

கலையில் மேன்மை ஸாமர்த்தியத்தை விரும்பியவனுக்கு பசு விதிக்கப்படுகிறது

பிராமணம் 15.

आग्नेयं कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रुं यो ब्राह्मणो विद्यामनूच्य न विरोचेत यदाग्नेयो भवति तेज एवास्मिन्तेन दधाति यत्सौम्यो ब्रह्मवर्चसं तेन कृष्णग्रीव आग्नेयो भवति तम एवास्मादपहंति बभ्रुस्सौम्यो भवति ब्रह्मवर्चसमेवास्मिन्त्विषिं दधाति ।

என்பது.

உரை

சபையில் பேசும் பண்டிதனுடைய பேச்சில் சபையார் விருப்பிலாரெனின்? அக்கினிக்குரிய கருநிறக் கழுத்துடைய ஆட்டையும், சோமனுக்குப் புகைநிற ஆட்டையுங் கொன்று வேள்வி செய்க. செய்யில், புத்தி மறைப்பு நீங்கி பிரம வொளி நிகழாநிற்கும் இதனால் அவன் பேச்சு மிக இனியதாகும் என்பதாம்

புரோகிதத்தில் விருப்புடையவனுக்கு மூன்று ஆடுகளைக்கொண்ட

கருமம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 16.

आग्नेयं कृष्णग्रीवमालभेत सौम्यं बभ्रुमाग्नेयं कृष्णग्रीवं पुरोधायाꣳ स्पर्धमान
आग्नेयोवै ब्राह्मणस्सौम्यो राजन्योऽभितस्सौम्यमाग्नेयौ भवतस्तेजसैव
ब्रह्मणोभयतो राष्ट्रं परिगृह्णात्येकधा समावृङ्क्ते पुर एनं दधते।

என்பது

உரை

புரோகிதத்தில் விருப்புடையவன். அக்கினிக்குரிய கறுப்புக் கழுத்தையுடைய ஆட்டையும்; சோமனுக்குப் புகைநிற ஆட்டையும், அக்கினிக்கு கறுப்புக் கழுத்துடைய ஆட்டையுங் கொன்று வேள்வி செய்க. பிராமணன் அக்கினிப் பிறப்பையுடையவன். சோமம் அரசனாகின்றான். இவ்விருவகையாலும்இராச்சியம் நடக்கும் ஆகலின் அரசன் இவ்வேள்வி செய்தவனைப் புரோகிதனுக்கிக் கொள்கின்றான் என்பதாம்.

இரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

மூன்றாவது அநுவாக விடயச் சுருக்கம்

स्पर्धाकामो युद्धकामो ग्रामकामोऽन्नकामवान् ।
राज्यकामः प्रतिष्ठार्थी यःपापक्षयमिच्छति ॥ १ ॥
राज्यार्थीचपुमांसो ये तेषां पशवईरिताः ।

போட்டி போடுதலை விரும்பியவனுக்கும், போரை விரும்பியவனுக்கும், கிராமத்தை விரும்பியவனுக்கும், அன்னத்தை விரும்பியவனுக்கும், இராச்சியத்தை விரும்பியவனுக்கும், பெருமையை விரும்பியவனுக்கும், பாவத்தைப் போக்க விரும்பியவனுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன என்பது.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரிய சங்கிதை [

(போட்டி முதலான

உரை

யில் பேசும் பண்டிதனுடைய பேச்சில் சபையார் விருப்பிலா
குரிய கருநிறக் கழுத்துடைய ஆட்டையும், சோமனுக்குப்
ங் கொன்று வேள்வி செய்க. சொல்லில், புத்தி மறைப்பு
கமாகிறதும் இரண்டும் அவன் பேச்சு மிக இனியதாகும்

ாக்கத்தில் விருப்பமுடையவனுக்கு மூன்று ஆடுகளைக்கொண்ட
கருமம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 16.

कृष्णग्रीवमा लभेत सौम्यं बभ्रुमाग्नेयं कृष्णग्रीवं पुरोधायाः
ग्नेयोवै ब्राह्मणस्सौम्यो राजन्योऽभितस्सौम्यमाग्नेयौ भवत
तोभयतो राष्ट्रं परिगृह्णात्येकधा समावृङ्क्ते पुर एनं दधते।

என்பது

உரை

க்கில் விருப்புடையவன். அக்கினிக்குரிய கருப்புக்
ட்டையும்; சோமனுக்குப் புகைநிற ஆட்டையும், அக்கி
த்துடைய ஆட்டையுங் கொன்று வேள்வி செய்க. பிராம
ப்பையுடையவன். சோமம் அரசனாகின்றான். இவ்விரு
யம் நடக்கும் ஆகலின் அரசன் இவ்வேள்வி செய்தவ
க் கொள்கின்றான் என்பதாம்.

இரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

மூன்றாவது அநுவாக விடயச் சுருக்கம்

स्पर्धाकामो युद्धकामो ग्रामकामोऽन्नकामवान् ।
राज्यकामः प्रतिष्ठार्थी यःपापक्षयमिच्छति ॥ १ ॥
ज्यार्थीचपुमांसो ये तेषां पशवईरिताः ।

ுதலை விரும்பியவனுக்கும், போரை விரும்பியவனுக்கு
மியவனுக்கும், அன்னத்தை விரும்பியவனுக்கும், இராச்
னுக்கும், பெருமையை விரும்பியவனுக்கும், பாவத்தை
னுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன என்பது.

ல்)

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

பஞ்சாதிகட்குமேல் பதினைந்து பதங்களைக் கொண்டது.

முதலானவற்றை விரும்பியவர்கட்கு ஆட்டை விதிக்கின்றது

ासुरा एषु लोकेष्वस्पर्धन्त स एतं विष्णुर्वामनमपश्यत्तᳪ
देवताया आऽलभत ततो वै स इमाल्लोँकानभ्यजयद्वैष्णवं
मा लभेत स्पर्धमानो विष्णुरेव भूत्वेमाल्लोँकानभि जयति
आ लभेत विषमा इव हीमे लोकास्समृद्ध्या इन्द्राय
ते मनस्वते ललामं प्राशृङ्गमा लभेत सङ्ग्रामे ॥ १ ॥ संयत्त
ण वै मन्युना मनसा सङ्ग्रामं जयतीन्द्रमेव मन्युमन्तं मन
स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्निन्द्रियं मन्युं मनो
जयति तᳪ सङ्ग्राममिन्द्राय मरुत्वते पृश्निसक्थमा लभेत
ाम इन्द्रमेव मरुत्वन्तᳪ स्वेन भागधेयेनोप धावति स एवा
ातान्प्र यच्छति ग्राम्येव भवति यदृषभस्तेन ॥ २ ॥
यत्पृश्निस्तेन मारुतस्समृद्ध्यै पश्चात्पृश्निसक्थो भवति
न्ववसायि नीमेवास्मै विशं करोति सौम्यं बभ्रुमा लभेतान्न
सौम्यं वा अन्नᳪ सोममेव स्वेन भागधेयेनोप धावति स
ा अन्नं प्र यच्छत्यन्नाद एव भवति बभ्रुर्भवत्येतद्वा अन्नस्य
समृद्ध्यै सौम्यं बभ्रुमा लभेत यमलम् ॥ ३ ॥ राज्याय
राज्यं नोपनमेत्सौम्यं वै राज्यᳪ सोममेव स्वेन भागधेयेनोप

धावति स एवास्मै राज्यं प्र यच्छत्युपैनꣳ राज्यं नमति बभ्रुर्भवत्ये
तद्वै सोमस्य रूपꣳ समृद्ध्या इन्द्राय वृत्रतुरे ललामं प्राशृङ्गमा
लभेत गतश्रीः प्रतिष्ठाकामः पाप्मानमेव वृत्रं तीर्त्वा प्रतिष्ठां
गच्छतीन्द्रायाभिमातिघ्ने ललामं प्राशृङ्गमा ॥ ४ ॥ लभेत यः
पाप्मना गृहीतस्स्यात्पाप्मा वा अभिमातिरिन्द्रमेवाभिमातिहनꣳ
स्वेन भागधेयेनोप धावति स एवास्मात्पाप्मानमभिमातिं प्रणुदत
इन्द्राय वज्रिणे ललामं प्राशृङ्गमा लभेत यमलꣳ राज्याय सन्तꣳ
राज्यं नोपनमेदिन्द्रमेव वज्रिणꣳ स्वेन भागधेयेनोप धावति स
एवास्मै वज्रं प्र यच्छति स एनं वज्रो भूत्वा इन्ध उपैनꣳ राज्यं
नमति ललामः प्राशृङ्गो भवत्येतद्वै वज्रस्य रूपꣳ समृद्ध्यै ॥ ५ ॥

போட்டியில் வெற்றி முதலானவைகட்கு நிமித்தமான ஆடுகளை விதிக்க விரும்பி, முதலில் மூன்றுலகங்களையும் வெற்றி பெறுவதற்கு ஆடு விதித்தற் பொருட்டுஅதைப் புகழ்கின்றது.

குள்ளமாகிய கடாவைப் புகழ்தல்

பிராமணம் 1.

देवासुरा एषु लोकेष्वस्पर्धन्त स एतं विष्णुर्वामनमपश्यत्तꣳ स्वायै देवताया
आऽलभत ततो वै स इमाँल्लोकानभ्यजयत् ।

என்பது.

உரை.

தேவர்களும் அசுரர்களும் இவ்வுலக போகங்களில் விருப்புற்றுப் பொறாமை கொண்டனர். திருமால் குள்ளமூர்த்தி யென்றுணர்ந்து அத் தகைய தேவதைக்கு குள்ளமாகிய ஆட்டுக்கடாவைக் கொன்று வேட்டு இவ் வுலகை வென்று கொண்டனர் என்பது.

அதன் விதி

பிராமணம் 2.

वैष्णवं वामनमा लभेत स्पर्धमानो विष्णुरेव भूत्वेमाल्लोँकनभि जयति ।

என்பது

உரை

குடும்பம் நில முதலிய கலகமுடையவன் விஷ்ணுவிற்குரிய குள்ள ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. அவன், இதனால் விஷ்ணு போன்றவனாய் உலகை வெற்றி பெற்றுக்கொள்கின்றான் என்பது.

விதியின் பரம்பராந்தொடர்பால் வந்த சமஇடத்தை விலக்குதற் பொருட்டு விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 3.

विषम आ लभेत विषमा इवहीमे लोकास्समृद्धवै ।

என்பது

உரை

சமமிலாத இடத்திற் கொல்லப்படுகின்றது. பூமி முதலான வுலகங்கள் ஒன்றற் கொன்று பரந்தவைகளாதலாலும், போகங்கள் மிகுதிப்பாடாதலாலும் மாறுபாடுடைய தேசம் (இடம்)சம்பத்தியின் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது.

போரை விரும்பியவனுக்கு ஆடு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 4.

इन्द्राय मन्युमते मनस्वते ललामं प्राशृङ्गमा लभेत सङ्ग्रामे संयत्त इन्द्रियेण वै मन्युना मनसा सङ्ग्रामं जयतीन्द्रमेव मन्युमन्तं मनस्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्निन्द्रियं मन्युं मनोदधाति जयति तꣳ संग्रामम् ।

என்பது

உரை.

தைரியத்தையும் பகைவர்மீது கோபத்தையுமுடைய இந்திரனுக்கு, முகம் வரை வளைந்துள்ள கொம்பையுடைய இடபத்தை, (காளையை) அல்லது, வெள்ளை ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்க. செய்யில், உடல் வலியாலும் பகைவர்மீதுள்ள கோபத்தாலும், மன உறுதியாலும் போரில் வெற்றியுண்டாகின்றது. அவிர்ப்பாகத்தால் வழிபடப் பெற்ற அந்தகைய இந்திரன், இவனுக்கு, வலி, கோபம், உறுதி என்பவைகளைக் கொடுக்கின்றான்; அதனால் போர்செய்து வெல்கின்றான் என்பது.

போட்டி முதலானவைகட்குப்

கிராமத்தில் இச்சையுடையவனுக்கு ஆடு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 5.

इन्द्राय मरुत्वते पृश्निसक्थमा लभेत ग्रामकाम इन्द्रमेव मरुत्वन्तꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मै सजातान्प्र यच्छति ग्राम्येव भवति ।

என்பது

உரை.

கிராமத்தை விரும்பியவன் மருத்துக்களோடுகூடிய இந்திரனுக்கு வெண்மை நிறத் தொடைகளையுடைய ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. இத்தகைய அவிர்ப்பாகத்தால் வழிபடப்பெற்ற இந்திரன் உடன் பிறந்தார்களையும், கூடவிருக்கின்ற ஏவலாளர்களையுங் கொடுக்கின்றான், இதனால் அவன் கிராமத்தை யடைகின்றான் என்பது.

காளைப்பருவத்தையும், வெண்ணிறத்தொடைகளையும் புகழ்கின்றது

பிராமணம் 6

यदृषभस्तेनैन्द्रो यत्पृश्निस्तेन मारुतस्समृद्ध्यै ।

என்பது

உரை.

கருப்பத்தையுண்டாக்கும் வன்மையால் காளைப்பருவம் இந்திரசம்பந்தமாம், வெண்மைநிறம் மாருத சம்பந்தம், இவ்விரண்டும் சம்பத்தின் பொருட்டு வெண்ணிறத் தொடைகள் உரியதாகின்றன என்பது.

தொடையிலுள்ள முன்புறத்து வெண்மை நிறத்தை விலக்குதற்பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம். 7

पश्चात्पृश्निसक्थो भवति पश्चादन्ववसायिनीमेवास्मै विशं करोति ।

என்பது

உரை.

பின்கால்களின் தொடைகளில் வெண்மை நிறமுடையது உரியதாம், இதனால், கிராமத்தலைவனாகிய இவனைப் பின்பற்றியே கிராமத்திலுள்ளார்கள் காரியத்தைச் செய்கின்றனர். இவனை மாறுபாடாக எண்ணமாட்டார்கள் என்பது.

அன்னத்தை விரும்பியவனுக்கு ஆடு விதிக்கப்படுகின்றது.

பிராமணம். 8

सौम्यं बभ्रुमा लभेतान्नकामः सौम्यं वा अन्नꣳ सोममेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मा अन्नं प्र यच्छत्यन्नाद एव भवति ।

என்பது

உரை

அன்னங்களை விரும்பியவன் சோமனுக்குரிய மங்கிய செந்நிற ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. அன்னங்கள் சோமசம்பந்த முடையன. சோமன் தனது அவிர்ப்பாக வழிபாட்டால் அன்னங்களைக் கொடுக்கின்றான். இதனால் மந்தமின்றி பசுமிகுதியுடையவனாகின்றான் என்பது.

ஆட்டின் நிறத்தைப்புகழ்கின்றது.

பிராமணம். 9

बभ्रुर्भवत्येतद्वा अन्नस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது

உரை.

புகைநிறம் இதற்குரியது. இது, கடலை முதலான அன்னத்தின் நிறமாம். இது சம்பத்தின் பொருட்டு ஆகிறது என்பதாம்.

இராச்சியத்தை விரும்பியவனுக்கு ஆட்டுக்கடா விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 10.

सौम्यं बभ्रुमा लभेत यमलꣳ राज्याय सन्तꣳ राज्यं नोपनमेत्सौम्यं वै राज्यꣳ सोममेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै राज्यं प्र यच्छत्युपैनꣳ राज्यं नमति बभ्रुर्भवत्येतद्वै सोमस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது.

உரை.

ஒருவனுக்கு அரசனாக வேண்டிய தன்மையிருந்தும் இராச்சியம் கிடைக்காவிடின் அவன், சிவப்பும் வெண்மையுங்கலந்த கண் மங்கல் நிறமுடையதும், சோமனுக்குரியதுமாகிய ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. இராச்சியம் சோமசம்பந்தமானது. ஆதலின், தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப் பெற்ற சோமன் இராச்சியத்தைக் கொடுக்கின்றான். இராச்சியம் இவனுக்கு வணங்குகின்றது. சந்திரமண்டலம் பொன்னிறமாதலின் பிங்கலமாம் என்பது.

(போட்டி முதலானவைகட்குப் பகைவன் துன்புறுத்தியதால் சிதறுவிட்ட சம்பத்துக்களை நிறுவுதற் பொருட்டு கடா விதிக்கப்படுகின்றது

பிராமணம் 11.

इन्द्राय वृत्रतुरे ललामं प्राशृङ्गमा लभेत गतश्रीः प्रतिष्ठाकामः पाप्मानमेव वृत्रं तीर्त्वा प्रतिष्ठां गच्छति ।

என்பது.

உரை.

பகைவனாற் குறைந்த செல்வம் மீண்டும் நிறைய விரும்பியவன் பகைவனைக் கொன்ற இந்திரனுக்கு, கொம்பு முன் வளர்ந்துள்ளதும் அழகுடையதுமாகிய ஆட்டுக்கடாவைக் கொன்று வேட்பானாக. அதனால் அவன் பகை நீங்கி நிலைத்த நிதியுடையவனாகின்றான் என்பது.

பாவத்தைப் போக்க விரும்பியவனுக்கு ஆட்டுக்கடா விதிக்கப்படுகின்றது,

பிராமணம் 12.

इन्द्रायाऽभिमातिघ्ने ललामं प्राशृङ्गमा लभेत यः पाप्मनागृहीतस्यात्पाप्मा वा अभिमातिरिन्द्रमेवाभिमातिहनꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मात्पाप्मानमभिमातिं प्र णुदते ।

என்பது

உரை.

பாவமுடையவன், முன்வளர்ந்து நிற்கும் கொம்புடைய அழகிய ஆட்டுக்கடாவைக் கொன்று இந்திரனுக்கு வேள்வி செய்வானாக. பாவத்தை நீக்கும் இந்திரன், தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்தவனுடைய பாவத்தைப் போக்குகின்றான் என்பதாம்.

இராச்சியத்தை விரும்புகின்றவனுக்கு வேறொரு ஆட்டுக்கடா விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 13.

इन्द्राय वज्रिणे ललामं प्राशृङ्गमा लभेत यमलꣳ राज्याय सन्तꣳ राज्यं नोपनमेदिन्द्रमेव वज्रिणꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मै वज्रं प्र यच्छति स एनं वज्रो भूत्या इन्ध उपैनꣳ राज्यं नमति ललामः प्राशृङ्गो भवत्येतद्वै वज्रस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது

உரை.

இராச்சியத்தை ஆளுதற்குரிய தன்மை இருந்தும் இராச்சியத்தை யடையாதவன், வச்சிராயுதத்தையுடைய இந்திரனுக்கு, முன்வளர்ந்த கொம்புள்ள அழகிய ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப் பெற்ற இந்திரன் அவனுக்கு வச்சிரம் போன்ற ஒரு ஆயுதத்தைக் கொடுக்கின்றான். அவ்வாயுதம் பகைவனைக் கொல்ல எழும். அதனால் இராச்சியம் வணங்குகின்றது. ஆட்டுக்கடாவின் கூரிய கொம்பு வச்சிராயுதத்திற்கு ஒத்தது. இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

மூன்றாவது அநுவாகம்
முற்றிற்று.

நான்காம் அநுவாக விடயச்சுருக்கம்

ब्रह्मवर्चसकामो यश्चर्मदोषाद्धि मेतियः ।

भ्रातृव्यवान्पाप मीरुर्भ्रष्टराज्यश्चयोभवेत् ॥ १ ॥

अनुवाके चतुर्थेऽस्मिन्नेतेषां पशवः श्रुताः ॥

பிரம வொளியைவிரும்பியவனுக்கும், குஷ்டரோகிக்கும், பகையுடையவனுக்கும், பாவத்தை போக்க விரும்பியவனுக்கும், இராச்சியத்தினின்றும் விடுபட்டவனுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

இரண்டாவது காண்டம் முதற் பிரபாடகம்

நான்காம் அநுவாகம்

ஏழு பஞ்சாதிகட்கு மேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

பிரமவொளி முதலானவற்றை விரும்பியவனுக்கு ஆட்டுக்கடா விதிக்ககப்படுகின்றது

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छ न्तस्मा एतां दशर्षभामालभन्त तयैवाऽस्मिन्रुचमदधुर्यो ब्रह्म वर्चसकामस्स्यात्तस्मा एतां दशर्षभामालभेतामुमेवाऽऽदित्य-

स्वेनं भागधेयेनोपं धावति स एवाऽस्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्च
स्येव भवति वसन्ता प्रातस्त्रीन्ललामाना लभेत ग्रीष्मे मध्यं
दिने ॥ १ ॥ त्रीञ्छितिपृष्ठाञ्छरद्यपराह्णे त्रीञ्छितिवारान्त्रीणि
वा आदित्यस्य तेजाꣳसि वसन्ता प्रातर्ग्रीष्मे मध्यंदिने शरद्यपरा
ह्णे यावन्त्येव तेजाꣳसि तान्येवाव रुन्धे त्रयस्त्रय आ लभ्यन्ते-
ऽभिपूर्वमेवास्मिन्तेजो दधाति संवत्सरं पर्यालभ्यन्ते संवत्सरो वै
ब्रह्मवर्चसस्य प्रदाता संवत्सर एवास्मै ब्रह्मवर्चसं प्र यच्छति
ब्रह्मवर्चस्येव भवति संवत्सरस्य परस्तात्प्राजापत्यं कद्रुम् ॥ २ ॥
आ लभेत प्रजापतिस्सर्वा देवता देवतास्वेव प्रति तिष्ठति
यदि बिभीयाद्दुश्चर्मा भविष्यामीति सोमापौष्णꣳ श्याममा लभेत
सौम्यो वै देवतया पुरुषः पौष्णाः पशवस्स्वयैवास्मै देवतया
पशुभिस्त्वचं करोति न दुश्चर्मा भवति देवाश्च वै यमश्चाऽस्मिंल्लोके-
ऽस्पर्धन्त स यमो देवानामिन्द्रियं वीर्यमयुवत तद्यमस्य ॥ ३ ॥
यमत्वं ते देवा अमन्यन्त यमो वा इदमभूद्यद्वयꣳ स्म इति
ते प्रजापतिमुपाधावन्त्स एतौ प्रजापतिरात्मन उक्षवशौ निरमि-
मीत ते देवा वैष्णावरुणीं वशामाऽलभन्तैन्द्रमुक्षाणं तं वरुणे
नैव ग्राहयित्वा विष्णुना यज्ञेन प्राणुदन्तैन्द्रेणैवास्येन्द्रियमवृञ्जत
यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमानो वैष्णावरुणीम् ॥ ४ ॥ वशामा
लभेतैन्द्रमुक्षाणं वरुणेनैव भ्रातृव्यं ग्राहयित्वा विष्णुना यज्ञेन प्र

णुदत ऐन्द्रेणैवास्येन्द्रियं वृङ्क्ते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवतीन्द्रो वृत्रमहन्तं वृत्रो हतः षोडशभिर्भोगैरसिनात्तस्य वृत्रस्य शीर्षतो गाव उदायन्ता वैदेह्योऽभवन्तासामृषभो जघनेऽनूदैत्त मिन्द्रः ॥ ५ ॥ अचायत्सोऽमन्यत यो वा इममालभेत मुच्येतास्मात्पाप्मन इति स आग्नेयं कृष्णग्रीवमाऽलभतैन्द्रमृषभं तस्याग्निरेव स्वेन भागधेयेनोपसृतष्षोडशधा वृत्रस्य भोगानप्यदहदैन्द्रेणेन्द्रियमात्मन्नधत्त यः पाप्मना गृहीतस्स्यात्स आग्नेयं कृष्णग्रीवमा लभेतैन्द्रमृषभमग्निरेवास्य स्वेन भागधेयेनोपसृतः ॥ ६ ॥ पाप्मानमपि दहत्यैन्द्रेणेन्द्रियमात्मन्धत्ते मुच्यते पाप्मनो भवत्येव द्यावापृथिव्यां धेनुमा लभेत ज्योगपरुद्धोऽनयोर्हि वा एषोऽप्रतिष्ठितोऽथैष ज्योगपरुद्धो द्यावापृथिवी एव स्वेन भागधेयेनोप धावति ते एवैनं प्रतिष्ठां गमयतः प्रत्येवतिष्ठति पर्यारिणी भवति पर्यारीव ह्येतस्य राष्ट्रं यो ज्योगपरुद्धस्समृद्ध्यै वायव्यम् ॥ ७ ॥ वत्समा लभेत वायुर्वा अनयोर्वत्स इमे वा एतस्मै लोका अपशुष्का विडपशुष्काऽथैष ज्योगपरुद्धो वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मा इमाँल्लोकान्विशं प्र दापयति प्रास्मा इमे लोकाः स्नुवन्ति भुञ्जत्येनं विडुपतिष्ठते ॥ ८ ॥

ஆட்டுக்கடாவை விதிக்கவிரும்பி பிரமவொளியை விரும்பியவனுக்கு விதித்தற்போட்டுப்புகழ்கின்றது.

பிராமணம் 1.

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एतां दशर्षभामालभन्त तयैवाऽस्मिन्रुचमदधुः ।

என்பது.

உரை.

ஒருகால் ஆதித்தன் விளங்கிலன். தேவர்கள் அதற்குப், பிராயச்சித்தஞ் செய்யவிரும்பி பத்து ரிஷபங்களைக்கொன்று வேள்வி செய்தனர். அதனால், ஆதித்தனிடத்து ஒளிமிகுதியாய் உண்டாயிற்று என்பது.

அதை விதிக்கின்றது

பிராமணம் 2.

यो ब्रह्मवर्चसकामस्स्यात्तस्मा एतां दशर्षभामालभेतामुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது

உரை.

பிரமவொளியை விரும்பியவன், ஆதித்த தேவதைக்கு, பத்து ரிஷபங்களைக்கொன்று வேள்வி செய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப்பெற்ற ஆதித்தன் அவனுக்கு பிரமவொளியைக் கொடுக்கின்றான் என்பதாம்.

காலச்சிறப்புடன்கூடிய பசுக்களின் விசேடங்கூறப்படுகின்றது.

பிராமணம் 3.

वसन्ता प्रातस्त्रींल्ललामानालभेत ग्रीष्मे मध्यंदिने त्रीञ्छितिपृष्ठाञ्छरद्यपराह्णे त्रीञ्छितिवारान् ।

என்பது

உரை

வசந்தரிதுவில் காலையில் அழகிய மூன்று பசுக்களையும், கிரீஷ்மரிதுவில் (வேனிற் காலத்தில்) மத்தியானத்தில் பின்புறம் வெண்மையுடைய மூன்று பசுக்களையும், சரத்ரிதுவி (மழைகாலத்தி) ல் சாயங்காலத்தில் வெண்மையிர்களையுடைய பசுக்களையும் கொன்று வேள்விசெய்தல் வேண்டும்.

காலவிசேடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 4

त्रीणि वा आदित्यस्य तेजाꣳसि वसन्ता प्रातर्ग्रीष्मे मध्यंदिने शरद्यपराह्णेयावन्त्येव तेजाꣳसि तान्येवाव रुन्धे ।

என்பது

உரை

வசந்தகாலத்தில் காலையிலும், கிரீஷ்ம (வெயிற்) காலத்தில் மத்தியானத்திலும், சரத் (மழை) காலத்தில் சாயங்காலத்திலும் ஆதித்தனிடத்தில் உள்ள மூவகை ஒளிகளை ஆதித்தனிடத்திலிருந்து அடைகின்றான் என்பது.

விதித்ததையே மூன்றுவகை பற்றிப் புகழ்கின்றது

பிராமணம் 5.

त्रयस्त्रय आ लभ्यन्तेऽभिपूर्वमेवाऽस्मिन्तेजो दधाति ।

என்பது

உரை

ஆதித்தன் மூன்று காலங்களில் மூன்று தேசசுக்களை அடைவது போல், வேள்வித்தலைவனும், முன் முன் போலவே பின் பின்னும் தேசசை (ஒளியை) அடைகின்றான். அதாவது எப்போதும் அந்த ஒளி நீங்குகிறதில்லை என்பதாம்.

முன்போல் பிரமசரிய முதலிய காலநியமம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 6.

संवत्सरं पर्यालभ्यन्ते संवत्सरो वै ब्रह्मवर्चसस्य प्रदाता संवत्सर एवास्मै ब्रह्मवर्चसं प्र यच्छति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது

உரை

ஒரு வருடம்வரை காலநியமஞ் செய்துகொண்டு பசுக்களைக் கொல்கின்றான். வருடமே பிரமவொளியைக் கொடுப்பதாம். இவனுக்கு, வருடமே பிரம வொளியைக் கொடுக்கின்றது. இது, பிரமசாரியின் கருமம் ஒரு வருடத்தில் முடிவதாமாதலின் வருடத்தின் மேலேற்றிக் கூறப்பட்டதென்பதாம்.

(பிரமவோரி முதலானவைகளை பத்தாவது ரிஷபத்திற்கு, காலவிசேடம், நிறவிசேடங்களைக் கூறுகின்றது.

பிராம்மணம் 7.

संवत्सरस्य परस्तात्प्राजापत्यं कद्रुमा लभेत प्रजापतिस्सर्वा देवता देवताः स्वेव प्रति तिष्ठति ।

என்பது.

உரை

ஒரு வருடத்திற்குப் பிறகு, பிரசாபதி தேவதைக்குரியதும், பிங்கல நிறமுடையதுமாகிய பசுவைக் கொன்று வேள்வி செய்தல்வேண்டும். பிரசாபதி தேவதை எல்லாத் தேவதைகளுக்குள்ளுஞ் சிறந்தது என்பதாம்.

தோலைப்பற்றிய குற்றம் நீங்குவதற்குப் பசு விதிக்கப் படுகின்றது

பிராமணம் 8.

यदि बिभीयाद्दुश्चर्मा भविष्यामीति सोमापौष्णꣳ श्याममा लभेत सौम्यो वै देवतया पुरुषः पौष्णाः पशवस्स्वयैवास्मै देवतया पशुभिस्त्वचं करोति न दुश्चर्मा भवति ।

என்பது

உரை

தனது உடம்பின் தோல் கெட்டுவிடும் என்னும் பயமுடையவன், சோமன் பூஷா என்னுந் தேவதைகட்குரிய கறுப்பு ஆட்டுக்கடாவைக்கொன்று வேள்வி செய்வானாக. சோமதேவதை சம்பந்தமுடையவன் புருடன். பூஷா சம்பந்தம் பசு. அத்தேவதைகளின் பசுக்களால் நல்ல தோலுண்டாகின்றது. கெட்ட தோல் உண்டாகாது என்பதாம். ஈண்டுத் தினவுமிகுதியால் குஷ்டரோகம் வரும் என்பது பயம்.

பகையுடையவனுக்கு இரண்டு பசுக்களையுடைய கருமத்தை விதித்தற் பொருட்டு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 9.

देवाश्च वै यमश्चास्मिँल्लोकेऽस्पर्धन्त स यमो देवानामिन्द्रियं वीर्यमयुवत तद्य-
मस्य यमत्वं ते देवा अमन्यन्त यमो वा इदमभूद्यद्वयꣳ स्म इति ते प्रजा
पतिमुपाधावन्त्स एतौ प्रजापतिरात्मन उक्षवशौ निरमिमीतते देवा वैष्णा-
वरुणीं वशामाऽलभन्तैन्द्रमुक्षाणं तं वरुणेनैव ग्राहयित्वा विष्णुना यज्ञेन
प्राणुदन्तैन्द्रेणैवास्येन्द्रियमवृञ्जत ।

என்பது

விரும்பியவர்கட்குப் பசுக்கள்).

உரை.

தேவர்களும் எமனும் பொருமை யடைந்தனர். எமன் தேவர்களுடைய வீரியத்தை வேறுபடுத்தினன். அதுவே எமன் என்னுந் தன்மையை யடைந்தது. யாம் எமனுகிவிட்டனம் என்று தேவர்கள் எண்ணிக்கொண்டனர். அவர்கள் பிரசாபதியை வழிபட்டனர். பிரசாபதி, தன்னிடத்திலிருந்து ரிஷபத்தையும், மலட்டு ஆட்டையும் உண்டாக்கினன்.

தேவர்கள், விஷ்ணு, வருணன் என்பவர்களுக்கு மேற்கூறிய மலட்டு ஆட்டைக் கொன்று வேள்வி செய்கின்றனர். இந்திரனுக்கு ரிஷபத்தைக் கொன்று வேள்வி செய்கின்றனர். பிறகு, அந்த எமனை, வருணபாசத்தாற் கட்டி விஷ்ணுவாகிய யக்ஞத்தால் இந்திரனுடைய அநுக்கிரகம் பெற்று எமனுடைய வீரியத்தை நாசமாக்கிவிட்டனர் என்பதாம்.

மேற்கூறியதின் விதி

பிராமணம் 10.

यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमानो वैष्णावरुणीं वशामालभेतैन्द्रमुक्षाणं वरुणेनैव भ्रातृव्यं ग्राहयित्वा विष्णुना यज्ञेन प्रणुदत ऐन्द्रेणैवास्येन्द्रियं वृङ्क्ते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति ।

என்பது

உரை

பகையுடையவன், விஷ்ணு வருணர்களுக்குரிய மலட்டு ஆட்டையும், இந்திரனுக்குரிய ரிஷபத்தையுங் கொன்று வேள்விசெய்வானுக. இதனல், அப்பகைவன், வருணனுற் கட்டப்பட்டு, இந்திரனுடைய அருள்கொண்டு விஷ்ணுவா (வேள்வியா) ல் வீரியம் ஒழிந்தவனுகின்றுன் என்பதாம்.

பாவத்தைப் போக்க விரும்பியவனுக்கு இரண்டு பசுக்களையுடைய கருமம் விதிப்பதற்குப் புகழ்கின்றது.

பிராமணம் 11.

इन्द्रो वृत्रमहन्तं वृत्रो हतः षोडशभिर्भोगैरसिनात्तस्य वृत्रस्य शीर्षतो गाव उदायन्ता वैदेह्योऽभवन्तासामृषभो जघनेऽनूदैत्तमिन्द्रोऽचायत्सोऽमन्यत यो वा इममालभेत मुच्येतास्मात्पाप्मन इति स आग्नेयं कृष्णग्रीवमालभतैन्द्रमृषभं तस्याग्निरेव स्वेन भागधेयेनोपसृतः षोडशधा वृत्रस्य भोगानप्यदहदैन्द्रेणेन्द्रियमात्मन्नधत्त ।

என்பது

உரை

இந்திரன் விருத்திரனைக் கொன்றனன். விருத்திரன் பதினாறு வடிவங்கள் கொண்டு நின்றனன். பிறகு, பாம்புகளாகி இந்திரனைக் கட்டிவிட்டனன். விருத்திரனுடைய வாயிலிருந்து சில பசுக்கள் தோன்றின. அதனைப் பற்றிக்கொண்டு ஒரு ரிஷபஞ் சென்றது அதைக்கண்ட இந்திரன், தன்னை அந்த ரிஷபத்தால் பிடித்துக் கொண்டனன். அதாவது அவன், தேவதையைக் குறித்து ரிஷபத்தைக் கொன்று வேள்வி செய்கின்றானோ அவன் பாவத்தினின்று விடுபடுகின்றான் என்று உய்த்துணர்ந்த அவ்விந்திரன், கறுப்புக்கழுத்து ஆட்டை அக்கினிக்கும், ரிஷபத்தை இந்திரனுக்கும் கொன்று வேள்வி செய்தனன் என்பதாம். தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப்பெற்ற அக்கினி பதினாறு உருக்கொண்டு அவ்விருத்திரனைக் கொன்றது இந்திரபாகத்தால் இந்திரனும் வன்மையையடைந்து கொண்டனன் என்பது.

மேற்கூறியதின் விதி

பிராமணம் 12.

यः पाप्मना गृहीतस्स्यात्स आग्नेयं कृष्णग्रीवमालभेतैन्द्रमृषभमग्निरेवास्य स्वेन भागधेयेनोपसृतः पाप्मानमपि दहत्यैन्द्रेणेन्द्रियमात्मन्धत्ते मुच्यते पाप्मनो भवत्येव ।

என்பது

உரை.

பாவத்தாற் பிடிக்கப்பட்டவன், அக்கினிக்குக் கறுப்புக்கழுத்துடைய ஆட்டையும், இந்திரனுக்கு ரிஷபத்தையுங் கொன்று வேள்விசெய்வானாக. தனது பாகத்தால் வழிபடப்பெற்ற அக்கினி பாவத்தைப் போக்குகின்றது. இந்திரன், இந்திரியவன்மையையளிக்கின்றான் என்பதாம்.

நீண்டநாள் இராஜ்யம் போனவனுக்கு பசுவைவிதிக்கிறது

பிராமணம் 13.

द्यावापृथिव्यां धेनुमालभेत ज्योगपरुद्धोऽनयोर्हि वा एषोऽप्रतिष्ठितोऽथैष ज्योगपरुद्धो द्यावापृथिवी एव स्वेन भागधेयेनोप धावति ते एवैनं प्रतिष्ठां गमयतः प्रत्येव तिष्ठति ।

என்பது

உரை.

நீண்டநாள் பரிபாலன ஆற்றலின்றியதால் இரண்டுலக இராச்சியங்களை யுமிழந்துவிட்டவன், மண் விண் தேவதைகளுக்குப் பாற் பசுவைக்கொன்று வேள்விசெய்வானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடடைந்த பூமியும் வானும், அதாவது இவற்றின் அதிட்டான தேவதைகள் இவனை இரண்டுலகத்தும் பெருமையுடையவனாகச் செய்கின்றன என்பதாம்,

---

பால்பசுவிற்குச் சிலகுணத்தைவிதிக்கின்றது

பிராமணம் 14.

पर्यारिणी भवति पर्यारीव ह्येतस्य राष्ट्रं ज्योगपरुद्धस्य समृद्ध्यै ।

என்பது

உரை.

சினைப்பட்டும் கன்று போடுங்காலங்கடந்து கன்று ஈன்ற பசு, நீண்டநாள் இராச்சிய மிழந்தவனுடைய சம்பத்தின் பொருட்டாகின்றது என்பது.

பசுங்கன்றின் பிரயோக விதி

பிராமணம் 15.

वायव्यं वत्समा लभेत वायुर्वा अन्नयोर्वत्स इमे वा एतस्मै लोका अपशुष्का विडपशुष्काऽथैष ज्योगपरुद्धो वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एवा- स्मा इमाल्ँलोकान्विशं प्र दापयति प्रास्मा इमे लोकास्स्नुवन्ति भुङ्क्त्येनं विड्उप तिष्ठते ।

என்பது

உரை.

நீண்டநாள் இராச்சிய மிழந்தவன், வாயுதேவதைக்குப் பசுங்கன்றைக் கொன்று வேள்விசெய்வானாக. அதனால், இரண்டுலகத்தும் கன்று போன்றுள்ள வாயு தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்தவனை இராச்சியத்திலுள்ள பெருங்குடியாகும் ஏனைய பிரசைகளும் போற்றும்படி செய்கின்றது என்பதாம்.

நான்காவது அநுவாகம்

முற்றிற்று

ஐந்தாவது அநுவாக விடயச்சுருக்கம்

पशुकामः प्रजाकामो भूत्यर्थी छिन्नसोमकः ।

अभिचारीच ये तेषां पञ्चमे पशवःश्रुताः ॥ १ ॥

பசுக்களை விரும்பியவனுக்கும், புத்திரனை விரும்பியவனுக்கும், ஐசுவரியத்தை விரும்பியவனுக்கும், சோமரசங் குடியாமல் விடுபட்டவனுக்கும், பகைவரைக் கொல்ல விரும்பியவனுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

ஏழு பஞ்சாதிக்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

பசு முதலான காமமுடையார்களுக்குப் பசுக்களை விதிக்கின்ற பிராமணங்கள்.

इन्द्रो वलस्य बिलमपौर्णोत्स य उत्तमः पशुरासीत्तं पृष्ठं प्रति संगृह्योदक्खिदत्तꣳ सहस्रं पशवोऽनूदायन्त्स उन्नतोऽभवद्यः पशुकामस्स्यात्स एतमैन्द्रमुन्नतमा लभेतेन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पशून्प्रयच्छति पशुमानेव भवत्युन्नतः ॥ १ ॥

भवति साहस्री वा एषा लक्ष्मी यदुन्नतो लक्ष्मियैव पशूनव रुन्धे यदा सहस्रं पशून्प्राप्नुयादथ वैष्णवं वामनमा लभेतैतस्मिन्वै तत्सहस्रमध्यतिष्ठत्तस्मादेष वामनस्समीषितः पशुभ्य एव प्रजा तेभ्यः प्रतिष्ठां दधाति कोऽर्हति सहस्रं पशून्प्राप्तुमित्याहुरहो-रात्राण्येव सहस्रꣳ संपाद्याऽऽलभेत पशवः ॥ २ ॥ वा अहोरा त्राणि पशूनेव प्रजातान्प्रतिष्ठां गमयत्योषधीभ्यो वेहतमा लभेत प्रजाकाम ओषधयो वा एतं प्रजायै परि बाधन्ते योऽलं प्रजायै

सन्प्रजां न विन्दत ओषधयः खलु वा एतस्यै सूतुमपि घ्नन्ति या वेहद्भवत्योषधीरेव स्वेन भागधेयेनोप धावति ता एवास्मै स्वाद्योनेः प्रजां प्र जनयन्ति विन्दते ॥ ३ ॥ प्रजामापो वा ओषधयोऽसत्पुरुष आप एवास्मा असतस्सद्ददति तस्मा दाहुर्यश्चैवं वेद यश्च नाऽऽपस्त्वावासतस्सद्ददतीत्यैन्द्रीꣳ सूतवशामा लभेत भूतिकामो जातो वा एष योऽलं भूत्यै सन्भूतिं न प्राप्नोतीन्द्रं खलु वा एषा सूत्वा वशाऽभवत् ॥ ४ ॥ इन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं भूतिं गमयति भवत्येवयꣳ सूत्वा वशा स्यात्तमैन्द्रमेवाऽऽलभेतैतद्वावतदिन्द्रियꣳ साक्षादेवेन्द्रियमव रुन्ध ऐन्द्राग्नं पुनरुत्सृष्टमा लभेत य आ तृतीयात्पुरुषात्सोमं न पिबेद्विच्छिन्नो वा एतस्य सोमपीथो यो ब्राह्मणस्सन्ना ॥ ५ ॥ तृतीयात्पुरुषात्सोमं न पिबतीन्द्राग्नी एव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै सोमपीथं प्र यच्छत उपैनꣳ सोमपीथो नमति यदैन्द्रो भवतीन्द्रियं वै सोमपीथ इन्द्रियमेव सोमपीथमव रुन्धे यदाग्नेयो भवत्याग्नेयो वै ब्राह्मणस्स्वामेव देवतामनु सं तनोति पुनरुत्सृष्टो भवति पुनरुत्सृष्ट इव ह्येतस्य ॥ ६ ॥ सोमपीथस्समृद्ध्यै ब्राह्मणस्पत्यं तूपरमा लभेताभिचरन्ब्रह्मणस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति तस्मा एवैनमा वृश्चति ताजगार्तिमार्छति तूपरो भवति क्षुरपविर्वा एषा लक्ष्मी यत्तूपरस्समृद्ध्यै स्फ्यो यूपो भवति वज्रो वै स्फ्यो वज्रमेवास्मै प्रहरति शरमयं बर्हिश्शृणात्येवैनं वैभीदक इध्मो भिनत्त्येवैनम् ॥ ७ ॥

விதியின் பொருட்டுக் கூறுகின்றது

பிராமணம் 1.

इन्द्रो वलस्य विलमपौर्णोत्स य उत्तमः पशुरासीत्तं पृष्ठं प्रति संगृह्योदक्खिद-
त्तꣳ सहस्रं पशवोऽनुदायन्त्स उन्नतोऽभवत् ।

என்பது.

உரை.

வலன் என்னும் அசுரன், கள்வனாய் எண்ணிறந்த பசுக்களைக் கவர்ந்து கொண்டுபோய் பூமிக்குள் ஒருவளையில் வைத்துவிட்டனன். அதையறிந்து இந்திரன் அவ்வளையை மூடியிருந்த கல்லை எடுத்து விட்டு அப்பசுக்களுள் சிறந்ததாகிய ஒரு பசுவைப் பின்பக்கத்தைப்பற்றி வெளியிலெடுத்தனன். அப்பசுவைப் பின்பற்றி ஆயிரம் பசுக்கள் வெளியில் வந்தன. அப்பசு மந்தைக்குத் தலைமையாதலின் முன்னமே உயரமுடையதாமாயினும் இந்திரன் வெளியில் தூக்கிவிட்டதாலும் மீண்டும் அப்பசு மிக உயரமானது என்பது.

மேற்கூறியதின் விதி

பிராமணம் 2.

यः पशुकामस्स्यात्स एतमैन्द्रमुन्नतमालभेतेन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति
स एवास्मै पशून्प्र यच्छति पशुमानेव भवति ।

என்பது.

உரை.

பசுக்கள் அடைக்க விரும்பியவன், இத்தகைய உயரமாகிய பசுவைக் கொன்று இந்திரனுக்கு வேள்விசெய்வானாக. தனக்குரிய அவிர்ப்பாகத்தால் வழிபடப் பெற்ற இந்திரன் இவனுக்குப் பசுக்களை நிறைய அளிக்கின்றான் என்பது.

உயரத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 3.

उन्नतो भवति साहस्री वा एषा लक्ष्मी यदुन्नतो लक्ष्मियैव पशूनव रुन्धे ।

என்பது

உரை

உயரமாகியது ஆயிரம் இலக்குமி சம்பத்துடையது எனப்படுகின்றது. உயரமானது இலக்குமியால் பசுக்களைக் கொடுக்கின்றது என்பது.

முன் பாற்பசுவைக் கொல்வோன், பிறகு கன்றைக் கொல்வதுபோல், உயரமாகிய பசுவைக் கொல்கின்றவனுக்கு குட்டைப் பசுவைக் கொல்லும் விதி கூறப்படுகின்றது.

பிராமணம் 4.

यदा सहस्रं पशून्प्राप्नुयादथ वैष्णवं वामनमा लभेतैतस्मिन्वै तत्सहस्रमध्यति-
ष्ठत्तस्मादेष वामनस्समीषितः पशुभ्य एव प्रजातेभ्यः प्रतिष्ठां दधाति ।

என்பது

உரை.

உயரமான ஆயிரம் பசுக்களையடைவானேல், பிறகு விஷ்ணுவிற்குரிய குட்டைப் பசுவைக் கொன்று வேள்வி செய்யவேண்டும். அப்பசுவின் அவிர்ப்பாகத்தால் களிப்புற்ற வாமனனாகிய விஷ்ணு முதலில் உண்டாகிய ஆயிரம் பசுக்கட்கும், புல், தண்ணீர் முதலானவைகளை நிறையக் கொடுத்து அவைகட்குரிய இடத்தையும் அளிக்கின்றனர் என்பது.

குட்டைப் பசுவின் காலம், ஆயிரம் பசுக்களின் சமயத்திலும் வேறென விதிக்கின்றது.

பிராமணம் 5.

कोऽर्हति सहस्रं पशून्प्राप्तुमित्याहुरहोरात्राण्येव सहस्रꣳ संपाद्याऽऽलभेत
पशवो वा अहोरात्राणि पशूनेव प्रजातान्प्रतिष्ठां गमयति ।

என்பது

உரை.

ஆயிரம் பசுக்களை அடைவோர் யார்? எவருமிலர். ஆகையால் பசுரூபங்களான ஆயிரம் நாட்கள் கழிந்தபிறகு ஒரு குள்ளப்பசுவைக் கொன்று யாகஞ்செய்தல் வேண்டும் என்பதாம்.

(பிரஜை) புத்திரோற்பத்தியை விரும்பியவனுக்குப் பசுவை விதிக்கின்றது.

பிராமணம் 6.

ओषधीभ्यो वेहतमा लभेत प्रजाकाम ओषधयो वा एतं प्रजायै परि बाधन्ते
योऽलं प्रजायै सन्प्रजां न विन्दत ओषधयः खलु वा एतस्यै सूतुमपि
घ्नन्ति या वेहद्भवत्योषधीरेव स्वेन भागधेयेनोप धावति ता एवास्मै स्वाद्योनेः
प्रजां प्र जनयन्ति विन्दते प्रजामापो वा ओषधयोऽसत्पुरुष आप एवास्मा
असतस्सद्ददति तस्मादाहुर्यश्चैवं वेद यश्च नाऽऽपस्त्वावासतस्सद्ददतीति ।

என்பது.

உரை.

புத்திரோற்பத்தியை விரும்பியவன், சினையாயிருந்து கருப்பமழிந்த ஆட்டை, ஓஷதி தேவதைகளின் பொருட்டுக்கொன்று வேள்விசெய்வானாக. புத்திரனையுண்டாக்கும் ஆற்றலுடையோனாயிருந்தும் புத்திரப் பேறில்லாதவனை ஓஷதி தேவதைகள் பீடிக்கின்றன. இப்போது தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற ஓஷதி தேவதைகள் தமது வீரியத்தால் புத்திரனையுண்டாக்குகின்றன. மிக்க அறிவாளிகள், ஓஷதிகள், முன்னில்லாத புத்திரப் பேற்றைக் கொடுக்கின்றன என்கின்றார்கள். அறிவு குறைந்தால், தண்ணீர், முன்னில்லாத பயிர்களைக் கொடுக்கின்றது என்கின்றார்கள். இவ்விருவகையிலும் ஓஷதியைப் பற்றியது சிறந்ததே என்பதாம்.

ஐசுவரியத்தை விரும்பியவனுக்குப் பசுவிதிக்கப்படுகின்றது.

பிராமணம் 7.

ऐन्द्रीꣳ सूतवशामा लभेत भूतिकामोऽजातो वा एष योऽलं भूत्यै सन्भूतिं न प्राप्नोतीन्द्रं खलु वा एषा सूत्वा वशाऽभवदिन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं भूतिं गमयति भवत्येव ।

என்பது.

உரை.

ஐசுவரியத்தை விரும்பியவன், ஒரு முறை கன்று போட்டு பிறகு மலடாயிருக்கும் கோவை, இந்திரதேவதைக்குக் கொன்று வேள்விசெய்வானாக. ஐசுவரியத்தை யடையாதவன் பிறக்காதவனெனப் படுவான். இக் கோவும் கன்றையீன்றும் ஈனாததற் கொத்தது. இவ்வாறு தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற இந்திரன், இவனுக்கு ஐசுவரியத்தை யளிக்கின்றான் என்பதாம்.

இந்திரனுக்குப் பிரியமாகிய கன்று போட்டுப்பின் மலட்டுப் பசுவின் பிரயோகத்திற்குப் பிறகு கன்றின் பிரயோகம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 8.

यꣳ सूत्वा वशा स्यात्तमैन्द्रमेवाऽऽलभेतैतद्वाव तदिन्द्रियꣳ साक्षादेवेन्द्रियमव रुन्धे ।

என்பது

உரை

முதலில் ஒரு கன்று போட்டு பிறகு மலடாக விருக்கும் கோவின்கன்று இந்திரனுக்கொப்பானது. அதைக்கொன்று வேள்விசெய்வானாக. அக் கன்று இந்திர காரியமாதலின் அது இந்திரியத்தைக் கொடுக்கின்றது என் பதாம்.

சோமபானம் விடுபட்டவனுக்குப் பசுவிதிக்கப்படுகின்றது.

பிராமணம் 9.

ऐन्द्राग्नं पुनरुत्सृष्टमा लभेत य आ तृतीयात्पुरुषात्सोमं न पिबेद्विच्छिन्नो वा एतस्य सोमपीथो यो ब्राह्मणस्सन्ना तृतीयात्पुरुषात्सोमं न पिबतीन्द्राग्नी एव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै सोमपीथं प्र यच्छत उपैनं सोमपीथो नमति ।

என்பது

உரை.

கிழத்தன்மையடைந்த எருது உத்ஸ்ருஷ்ட மெனப்படுகிறது. அது, மீண்டும் எருமல் முதலிய செயல்களுக்கு முடியாதது பற்றி விட்டு விடப் படுகிறது என்பதாம்.

மூன்று தலைமுறை சோமரசத்தை யருந்தாமல் விடுபட்டுப்போனவன், அத்தகைய உத்ஸ்ருஷ்ட எருதைக் கொன்று இந்திரனுக்கும் அக்கினிக்கும் வேள்விசெய்வானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற இந்திரனும் அக்கினியும் இவனுக்குச் சோமரசத்தை யருந்தும் தன்மையைக் கொடுக்கின் றனர். அதனால் இவன் சோமரசத்தை அருந்தும் தன்மையை அடைகின்றான் என்பதாம்.

முறையாய் இந்திரனையும் அக்கினியையும் புகழ்கின்றது.

பிராமணம் 10.

यदैन्द्रो भवतीन्द्रियं वै सोमपीथ इन्द्रियमेव सोमपीथमव रुन्धे यदाग्नेयो भवत्याग्नेयो वै ब्राह्मणस्तामेव देवतामनु सं तनोति ।

என்பது.

உரை

சோமபானம் இந்திரியத்தை உண்டாக்குகின்றது ஆதலின் இந்திரியமாம். பிராமணன் அக்கினி சம்பந்தமுடையவன் ஆதலின் அக்கினி, தேவதாத் தன்மையை உண்டாக்குகின்றது என்பதாம்.

பசுவிசேடத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 11.

உரை.

पुनरुत्सृष्टो भवति पुनरुत्सृष्ट इवह्येतस्य सोमपीथस्समृद्ध्यै ।

என்பது.

உரை

பாட்டனால் சோமபானம் விடப்பட்டது. மீண்டும் பிதாவால் விடப்பட்டது. மீண்டும் தானும் விட்டுவிட்டனன். ஆதலின் உத்சிருஷ்ட (விடுபட்ட) எருதுக்கு ஒப்பாகின்றது இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

பகைவனைக் கொல்வதற்குப்பசுவிதி.

பிராமணம் 12.

ब्राह्मणस्पत्यं तूपरमा लभेताभिचरन्ब्रह्मणस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति तस्मा एवैनमा वृश्चति ताजगार्तिमार्छति ।

என்பது

உரை.

பகைவனைக் கொல்ல விரும்பியவன், கொம்பில்லாத பொட்டைக் கடாவை, பிரமன் பொருட்டுக் கொன்று வேள்விசெய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற பிரமன், வேள்வித்தலைவன் பொருட்டுப் பகைவனைக் கொல்கின்றான் என்பதாம்.

பசுவிசேடனத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 13.

तूपरो भवति क्षुरपविर्वा एषा लक्ष्मी यत्तूपरस्समृद्ध्यै ।

என்பது.

உரை

தூபர என்னும் (கொம்பிலாத) பசு கூரிய வக்கிராயுதத்தை யுடையது போலாகின்றது. அது பகைவனைக் கொல்ல உரியதாகின்றது. கொம்பில்லாதிருந்தும் போரில் செம்மறி ஆட்டுக்கடாவைப்போல் வச்சிராயுதம் போலிருக்கின்றது என்பதாம்.

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

விதிவழியால் வந்த எட்டுபட்டையுள்ள யூபத்தை நீக்குதற் பொருட்டு ஸ்ப்யம் என்னும் மாக்கத்தி வடிவமென விதிக்கின்றது.

பிராமணம் 14.

स्फ्यो यूपो भवति वज्रो वै स्फ्यो वज्रमेवास्मै प्र हरति ।

என்பது,

உரை

ஸ்ப்யம் என்னும் மாக்கத்திபோன்ற யூபம் இதற்குரியது. மாக்கத்தி வச்சிரமாம். வச்சிராயுதம் இவனுடைய பகைவரைக் கொல்கின்றது என்பது.

தர்ப்பையை நீக்குதற்கு விதிக்கின்றது,

பிராமணம் 15.

शरमयं बर्हिः शृणात्येवैनम् ।

என்பது

உரை

தருப்பைப் புல்லுக்குப் பதிலாக இங்கு நாணல் புல் விநியோகிக்கப்படுகின்றது. 'சர:' என்னும் நாணப்புல் துன்புறுத்துகின்றது. நாணப்புல்லின் பிறப்பு வச்சிராயுதத்திலிருந்து வந்ததாம். ஆதலின், சரமயமாகிய தருப்பையால் பகைவரைக் கொல்கின்றான் என்பது.

புரசமர விறகை நீக்குதற்கு விதிக்கின்றது

பிராமணம் 16.

वैभीदक इध्मो भिनत्त्येवैनम् ।

என்பது

உரை.

தானிம்ரத்தின் விறகுகள் இதற்கு உரியன. அவை, கொல்வதில் ஆற்றலுடையவைகள் என்பதாம்.

ஐந்தாவது அநுவாகம்

முற்றிற்று

ஆறுவது அநுவாக விடயச் சுருக்கம்

पृष्ठकामोऽन्नकामो द्वाविन्द्रियार्थी सानिंतथा ॥
अन्नग्रामञ्च वाञ्छन्तोऽज्ञातरोगश्चयेस्थिताः ॥
षष्ठेऽनुवाकेपशवः क्रमेणैषामुदीरिताः ॥ १ ॥

சங்கை செய்வதில் விருப்புடையவனுக்கும், அன்னத்தை விரும்பியவனுக்கும், இந்திரியத்தை விரும்பியவனுக்கும், பிறர் கொடையை விரும்பியவனுக்கும், அன்னத்தையும் கிராமத்தையும் விரும்பியவனுக்கும், தெரியாத ரோகமுடையவனுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

இரண்டாங்காண்டம் முதற் பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிக்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

बार्हस्पत्यꣳ शितिपृष्ठमा लभेत ग्रामकामो यः कामयेत पृष्ठꣳ समानानाꣳ स्यामिति बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं पृष्ठꣳ समानानां करोति ग्राम्येव भवति शितिपृष्ठो भवति बार्हस्पत्यो ह्येष देवतया समृद्ध्यै पौष्णꣳ श्याममा लभेतान्नकामोऽन्नं वै पूषा पूषणमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै ॥ १ ॥ अन्नं प्र यच्छत्यन्नाद एव भवति श्यामो भवत्येतद्वा अन्नस्य रूपꣳ समृद्ध्यै मारुतं पृश्निमा लभेतान्नकामोऽन्नं वै मरुतो मरुत एव स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति पृश्निर्भवत्येतद्वा अन्नस्य रूपꣳ समृद्ध्या ऐन्द्रमरुणमा लभेतेन्द्रियकाम इन्द्रमेव ॥ २ ॥ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्निन्द्रियं दधातीन्द्रियाव्येव भवत्यरुणो भ्रूमान्भवत्येतद्वा

इन्द्रस्य रूपꣳ समृद्ध्यै सावित्रमुपध्वस्तमा लभेत सनिकाम-
स्सविता वै प्रसवानामीशे सवितारमेव स्वेन भागधेयेनोप धावति
स एवास्मै सनिं प्र सुवति दानकामा अस्मै प्रजा भवन्त्युपध्वस्तो
भवति सावित्रो ह्येषः ॥ ३ ॥ देवतया समृद्ध्यै वैश्वदेवं बहुरूपमा
लभेतान्नकामो वैश्वदेवं वा अन्नं विश्वानेव देवान्त्स्वेन भागधेये-
नोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति बहु-
रूपो भवति बहुरूपꣳ ह्यन्नꣳ समृद्ध्यै वैश्वदेवं बहुरूपमा लभेत
ग्रामकामो वैश्वदेवा वै सजाता विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप
धावति त एवास्मै ॥ ४ ॥ सजातान्प्र यच्छन्ति ग्राम्येव भवति
बहुरूपो भवति बहुदेवत्यो१ ह्येष समृद्ध्यै प्राजापत्यं तूपरमा
लभेत यस्यानाज्ञातमिव ज्योगामयेत्प्राजापत्यो वै पुरुषः प्रजापतिः
खलु वै तस्य वेद यस्यानाज्ञातमिव ज्योगामयति प्रजापतिमेव
स्वेन भागधेयेनोप धावति स एवैनं तस्मात्स्रामान्मुञ्चति तूपरो
भवति प्राजापत्यो ह्येष देवतया समृद्ध्यै ५ ॥

இவ்வநுவாகத்தில் கிராம முதலானவற்றை விரும்பியவர்கட்குப் பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

அவற்றுள் முதலாவது பசுவை விதிக்கின்றது

பிராமணம் 1.

बार्हस्पत्यꣳ शितिपृष्ठमा लभेत ग्रामकामो यः कामयेत पृष्ठꣳ समानानाꣳ स्यामिति बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं पृष्ठꣳ समानानां करोति ग्राम्येव भवति ।

என்பது.

(கிராம முதலானவைகளை

உரை

கிராமத்தை விரும்பியவன், அதாவது, பின்புறம் உயர்ந்திருப்பதுபோல் எல்லாக் கிராமத் தலைவர்க்குள்ளும் யான் உயர்ந்தோனாவேன் என்று விரும்பியவன், பின்புறத்தில் வெண்மை நிறமுடைய ஆட்டுக்கடாவைக் கொன்று பிருகஸ்பதிக்கு வேள்வி செய்வானாக. அதனால் வழிபாடு பெற்ற பிருகஸ்பதி, இவனை, எல்லாக் கிராமத்தலைவர்களுக்குள்ளும் சிறந்தவனாகச் செய்கின்றார் என்பதாம்.

பசுவின் விசேடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 2.

शितिपृष्ठो भवति बार्हस्पत्यो ह्येष देवतया समृद्ध्यै ।

என்பது

உரை

பின்புறத்தில் வெண்மை நிறமுடையது பிருகஸ்பதி தேவதைக்குரியது. ஏனெனின்? இராசசூயத்தில் "பிருகஸ்பதியின் பொங்கல், பின்புறத்தில வெண்மை நிறமுடைய பசு தட்சிணை" எனக் கூறியிருத்தலினென்க. இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

அன்னத்தை விரும்பியவனுக்குப் பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 3.

पौष्णꣳ श्याममा लभेतान्नकामोऽन्नं वै पूषा पूषणमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मा अन्नं प्र यच्छत्यन्नाद एव भवति ।

என்பது

உரை

உணவுப் பொருளை விரும்பியவன், பூஷா தேவதையின் பொருட்டு கறுப்பு ஆட்டுக்கடாவைக் கொன்று வேள்விசெய்வானாக. அதனால் வழிபாடு பெற்ற பூஷாதேவதை இவனுக்கு உணவையளிக்கின்றது. இவனும் உணவை நன்கு அருந்துவோனாகின்றான் என்பதாம்.

பசுவின் விசேடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 4.

श्यामो भवत्येतद्वा अन्नस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

உரை.

இப்பசு கறுப்பாகிறது. இது கருநெல் முதலிய உணவுப் பொருளின் உருவமாம். இது சம்பத்தின் பொருட்டு ஆகிறது என்பது.

அன்னத்தை விரும்பியவனுக்கு வேறொரு பசுவை விதிக்கின்றது

பிராமணம் 5.

मारुतं पृश्निमा लभेतान्नकामोऽन्नं वै मरुतो मरुत एव स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति ।

என்பது

உரை.

அன்னத்தை விரும்பியவன், மாருததேவதைக்குரிய வெண்மையாகிய பசுவைக்கொன்று வேள்விசெய்வானாகை. தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப் பெற்ற வாயுதேவனத அன்னத்தையளிக்கின்றது. இவன் நன்கு அன்னத்தை அருந்து கின்றவனுகின்றான் என்பது.

பசுவின் விசேடணத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 6

पृश्निर्भवत्येतद्वा अन्नस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது

உரை.

வெண்மை நிறமுடைய பசு சம்பாநெல்லின் நிறமுடையதாகிறது. ஆதலின் இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

இந்திரிய காமனுக்குப் பசுவை விதிக்கின்றது

பிராமணம் 7

ऐन्द्रमरुणमा लभेतेन्द्रियकाम इन्द्रमेवस्वेन भागधेयेनोप धावति स एवास्मि- न्निन्द्रियं दधातीन्द्रियाव्येव भवति ।

என்பது.

உரை.

இந்திரியத்தை விரும்பியவன், சிவப்பு நிறமுடைய பசுவை, இந்திரன் பொருட்டுக் கொன்று வேள்வி செய்வானாகை. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற இந்திரன் இவனுக்கு இந்திரியத்தை யளிக்கின்றான் என்பதாம்.

சிவப்புநிறமுடைய பசுவிந்து மற்றொரு குணம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 8.

अरुणो भ्रमान्भवत्येतद्वा इन्द्रस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது

உரை

சிவப்புப்பசு பெரியநெற்றியுடையதாகிறது. இந்திரன் ஆயிரங் கண்ணனாதலின் மிகுந்த நெற்றியையுடைமை இந்திர வடிவாம். இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

பிறர் கொடுக்க வேண்டுமென்று விரும்பியவனுக்குப் பசுவை விதிக்கின்றது

பிராமணம் 9

सावित्रमुपध्वस्तमा लभेत सनिकामस्सविता वै प्रसवानामीशे सवितारमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै सनिं प्र सुवति दानकामा अस्मै प्रजा भवन्ति ।

என்பது.

உரை.

பிறர் கொடையை விரும்பியவன், சவிதாதேவதைக்கு, கலப்பு நிறமுடைய பசுவைக் கொன்று வேள்விசெய்வானாகை. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற சவிதா தேவதை, எசமானன் பொருட்டுத் தானஞ்செய்யும்படி பிறருக்கு விருப்பை யுண்டாக்குகின்றது. இவனுக்கு அத்தகைய குழந்தையும் பிறக்கின்றது என்பதாம்.

கலப்பு நிறத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 10.

उपध्वस्तो भवति सावित्रोह्येष देवतया समृद्ध्यै ।

என்பது

உரை.

கலப்பு நிறமுடையது இதற்கு உரியது ஆகின்றது. ஏனெனின் இராசசூயத்தில் கலப்பு நிறமுடையது தட்சிணை என்று கூறியிருத்தலின் என்க. சவிதா தேவதைக்குரிய இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

அன்னத்தை விரும்பியவனுக்கு வேறொரு பசுவை விதிக்கின்றது

பிராமணம் 11.

वैश्वदेवं बहुरूपमा लभेतान्नकामो वैश्वदेवं वा अन्नं विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति ।

என்பது.

உரை.

அன்னத்தை விரும்பியவன், பல்வகைநிறமுடைய பசுவை, வைசுதேவர்களின் பொருட்டுக் கொன்று வேள்விசெய்வானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப்பெற்ற வைசுவ தேவர்கள், இவனுக்கு அன்னத்தைக் கொடுக்கின்றார்கள். இவன் நன்கு அன்னமருந்துகின்றவனுமாகின்றான் என்பதாம்.

பசுவின் விசேடணத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 12.

बहुरूपो भवति बहुरूपꣳ ह्यन्नꣳ समृद्ध्यै ।

என்பது

உரை.

உண்ணல், பூசுதல், பொருந்தல் முதலிய வேறுபாட்டால் உணவுப் பொருள்கள் பல்வகையாம். இத்தகைய பலவடிவம் அன்னசம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

கிராமத்தை விரும்பியவனுக்கும் வேறொரு பசு விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 13.

वैश्वदेवंबहुरूपमा लभेत ग्रामकामो वैश्वदेवा वै सजाता विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मै सजातान्प्र यच्छन्ति ग्राम्येव भवति ।

என்பது

உரை.

கிராமத்தை விரும்பியவன், வைசுவ தேவதைக்குரிய பல்வேறுவகை நிறங்களுடைய பசுவைக்கொன்று வேள்விசெய்வானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற வைசுவதேவர்கள் இவனுக்கு உடன் பிறந்தார்களையுங் கொடுக்கின்றார்கள். இவன் கிராமத்திற்குத் தலைவனாகின்றான் என்பதாம்.

பசு விசேடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 14.

बहुरूपो भवति बहुदेवत्यो३ ह्येष समृद्ध्यै ।

என்பது.

உரை.

விசுவதேவர்கள் பல்வேறு வகையினர்களானதால், பல்வேறுவகை நிறங்களை உடையதா இருத்தல் வேண்டும் என்பது.

இன்னதென்றுணரமுடியாத நெடுநாள் வியாதியுடையவனுக்கு பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 15.

प्राजापत्यं तूपरमा लभेत यस्यानाज्ञातमिव ज्योगामयेत्प्राजापत्यो वै पुरुषः प्रजापतिः खलु वै तस्य वेद यस्यानाज्ञातमिव ज्योगामयति प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं तस्मात्स्रामान्मुञ्चति ।

என்பது.

உரை

பிணி இன்னதென்று காணப்படாமல் மெலிவுற்றவன், பிரசாபதி தேவதைக்குரிய, கொம்பில்லாத பசுவைக்கொன்று வேள்வி செய்வானாக. அவ்வியாதி இன்னதென்று பிரசாபதி யுணர்கின்றான். இவ்வாறு தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற பிரசாபதி, இவனுடைய பிணியை நீக்கிவிடுகின்றான் என்பதாம்.

பசு பிரசாபதியின் சரலிலிருந்து உண்டானதால் பசுவின் விசேடணத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 16.

तूपरो भवति प्राजापत्यो ह्येष देवतया समृद्ध्यै ।

என்பது

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

உரை

கொம்பில்லாத பசு பிரசாபதியின் சம்பந்தமுடையது. இது, தனது தேவதையினுற் சம்பத்தைக் கொடுப்பதாகின்றது என்பதாம்.

ஆறுவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாவது அநுவாக விடயச்சுருக்கம்

ब्रह्म तेजः प्रजां वृष्टि मन्नंग्रामं तथापुनः ।

ब्रह्मतेजोऽभिचारंचवाञ्छतां पशवश्श्रुताः ॥ १ ॥

பிரமவொளியையும், புத்திரனையும், மழையையும் அன்னத்தையும், கிராமத்தையும், மற்றும் பிரமவொளிக்கு வேறுபசுவையும், பகைவரைக் கொல்லுவதையும் விரும்பியவர்கட்குப் பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

இரண்டாவது காண்டம் முதற் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

ஏழு பஞ்சாதிக்குமேல் பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

वषट्कारो वै गायत्रियै शिरोऽच्छिनत्तस्यैरसः पराऽपतत्तं
बृहस्पतिरुपागृह्णात्सा शितिपृष्ठा वशाऽभवद्यो द्वितीयः परापतत्तं
मित्रावरुणावुपागृह्णीताꣳ सा द्विरूपा वशाऽभवद्यस्तृतीयः परापतत्तं
विश्वे देवा उपागृह्णन्त्सा बहुरूपा वशाऽभवद्यश्चतुर्थः परापतत्स
पृथिवीं प्राविशत्तं बृहस्पतिरभि ॥ १ ॥ अगृह्णादस्त्वेवायं भोगा-
येति स उक्षवशस्समभवद्यल्लोहितं परापतत्तद्रुद्र उपागृह्णात्सा
रौद्री रोहिणी वशाऽभवद्बार्हस्पत्याꣳ शितिपृष्ठामा लभेत ब्रह्म-

वर्चसकामो बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मि-
न्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति छन्दसां वा एष रसो
यद्वशा रस इव खलु ॥ २ ॥ वै ब्रह्मवर्चसं छन्दसामेव रसेन रसं
ब्रह्मवर्चसमव रुन्धे मैत्रावरुणीं द्विरूपामा लभेत वृष्टिकामो मैत्रं
वा अहर्वारुणी रात्रिरहोरात्राभ्यां खलु वै पर्जन्यो वर्षति मित्रा-
वरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मा अहोरात्राभ्यां
पर्जन्यं वर्षयतश्छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वै वृष्टि
श्छन्दसामेव रसेन ॥ ३ ॥ रसं वृष्टिमव रुन्धे मैत्रावरुणीं द्विरू-
पामा लभेत प्रजाकामो मैत्रं वा अहर्वारुणी रात्रिरहोरात्राभ्यां
खलु वै प्रजाः प्र जायन्ते मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप
धावति तावेवास्मा अहोरात्राभ्यां प्रजां प्र जनयतश्छन्दसां वा एष
रसो यद्वशा रस इव खलु वै प्रजा छन्दसामेव रसेन रसं प्रजामव
॥ ४ ॥ रुन्धे वैश्वदेवीं बहुरूपामा लभेतान्नकामो वैश्वदेवं वा
अन्नं विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मा
अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति छन्दसां वा एष रसो यद्वशा
रस इव खलु वा अन्नं छन्दसामेव रसेन रसमन्नमव रुन्धे वैश्वदेवीं
बहुरूपामा लभेत ग्रामकामो वैश्वदेवा वै ॥ ५ ॥ सजाता विश्वानेव
देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मै सजातान्प्र यच्छन्ति
ग्राम्येव भवति छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वै सजा-

விரும்பியவர்கட்குப் பசுக்கள்).

तास्छन्दसामेव रसेन रसꣳ सजातानव रुन्धे बार्हस्पत्यमुक्षवशमा लभेत ब्रह्मवर्चसकामो बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसम् ॥ ६ ॥ दधाति ब्रह्मवर्चस्येव भवति वशं वा एष चरति यदुक्षा वश इव खलु वै ब्रह्मवर्चसं वशेनैव व शं ब्रह्मवर्चसमव रुन्धे रौद्रीꣳ रोहिणीमा लभेताभिचरन्रुद्रमेव स्वेन भागधेयेनोप धावति तस्मा एवैनमा वृश्चति ताजगार्तिमार्छति रोहिणी भवति रौद्री ह्येषा देवतया समृद्ध्यै स्फ्यो यूपो भवति वज्रो वै स्फ्यो वज्रमेवास्मै प्र हरति शरमयं बर्हिश्शृणात्येवैनं वैभीदक इध्मो भिनत्त्येवैनम् ॥ ७ ॥

இதில், பிரமவொளி முதலானவற்றின் விருப்பமுடையவர்களுக்கு ஒத்தவாறு வேறுபசுக்களை விதித்தற்பொருட்டு முதலில்; அவற்றைப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

वषट्कारो वै गायत्रियै शिरोऽच्छिनत्तस्यै रसः पराऽपतत्तं बृहस्पतिरुपागृह्णात्सा शितिपृष्ठावशाऽभवद्यो द्वितीयः परापतत्तं मित्रावरुणावुपागृह्णीताꣳसा द्विरूपा वशाऽभवद्यस्तृतीयः परापतत्तं विश्वे देवा उपागृह्णन्त्सा बहुरूपा वशाऽभवद्यश्चतुर्थः परापतत्स पृथिवीं प्राविशत्तं बृहस्पतिरभ्यगृह्णादस्त्वेवायं भोगायेति स उक्षवशस्समभवद्यल्लोहितं परापतत्तद्रुद्र उपागृह्णात्सा रौद्री रोहिणी वशाऽभवत्।

என்பது

உரை

'வௌஷட்' என்னும் மந்திரத்தின் அபிமானி தேவதையாகிய வஷட்காரம், காயத்திரியின் தலையை அறுத்துவிட்டது. அதிலிருந்து இரத்தமும் நீரும் வெளிப்பட்டன. முதலில் வெளிப்பட்டதை பிருகற்பதி ஏந்திக்கொள்ள அது பின்புறத்தில் வெள்ளைநிறமுள்ள ஆடாயிற்று. இரண்டாவது

வெளிப்பட்டதை மித்திரா வருணர்கள் ஏந்திக்கொள்ள அது இரண்டு நிறமுடைய ஆடாயிற்று. மூன்றாவது வெளிப்பட்டதை விசுவதேவர்கள் ஏந்திக்கொள்ள அது பல் வேறுவகை நிறமுடைய ஆடாயிற்று. நான்காவது வெளிப்பட்டதைப் பிருகற்பதி ஏந்திக்கொள்ள அதுநீர் பிலைப்படுத்தாத வீரியமுடைய காளையாயிற்று. ஐந்தாவது இரத்தத்தை உருத்திரன் ஏந்திக்கொள்ள அது உருத்திரனுக்குரிய சிவப்புநிற மலட்டு ஆடாயிற்று என்பது.

அவற்றுள் முதலாவது பசுவை விதிக்கின்றது

பிராமணம் 2.

बार्हस्पत्यꣳ शितिपृष्ठमा लभेत ब्रह्मवर्चसकामो बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது.

உரை.

பிரமவொளியை விரும்புகின்றவன், பிருகற்பதி தேவதைக்குரிய பின்புறத்தில் வெண்மை நிறமுடைய கடாவைக்கொன்று வேள்விசெய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப்பெற்ற பிருகற்பதி, இவனுக்குப் பிரவொளியைக் கொடுக்கின்றான். இவன் பிரமவொளியுடையவனாகின்றான் என்பதாம்.

பிரமவொளி இவ்வுலக பரவுலக பூசைக்குக் காரணமாதலின் சாரமாம்.
ஆதலின் இரசத்திற் கொப்பாம் என்று கருதி அதற்குச் சாதனமாகிய
ஆண் ஆட்டைப்புகழ்கின்றது.

பிராமணம் 3.

छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वै ब्रह्मवर्चसं छन्दसामेव रसेन रसं ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது.

உரை.

சந்தங்களுடைய ரசம் பெண்ஆடாம். இந்தகைய சந்தங்களின் ரசவடிவமாகிய ஆட்டால் இரண்டுலகப் பூசைகட்குங் காரணமாகிய இரசமெனப்படும் பிரமவொளி உண்டாகின்றது என்பதாம்.

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

இரண்டாவது பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 4.

मैत्रावरुणीं द्विरूपामा लभेत वृष्टिकामो मैत्रं वा अहर्वारुणी रात्रिरहोरात्राभ्यां खलु वै पर्जन्यो वर्षति मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मा अहोरात्राभ्यां पर्जन्यं वर्षयतश्छन्दसां वा एष रसो यद्वशा रस इवखलु वै वृष्टिश्छन्दसामेव रसेन रसं वृष्टिमव रुन्धे ।

என்பது

உரை

மழையை விரும்பியவன், மைத்திரா வருணர்களுக்குரிய இரண்டு நிற முடைய பசுவைக்கொன்று வேள்விசெய்வானாக. மித்திரன் என்பது சூரியனு மாதலின் பகல் அதைப்பற்றியது. இரவு மறைப்புக்கேதுவாதலின் வருண னைப்பற்றியது. மித்திரா வருணர்கள் தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப்பெற்ற மித்திரா வருணர்கள் பகலிரவுகளால் மழையைப் பெய்விக் கின்றார்கள். மழையும் சந்தங்களின் இரசமொக்கும். இரசவடிவ ஆடு மழை யைப் பெய்விக்கின்றது. மழை, கொடி செடிகளையுண்டாக்குவதாலும், சார மானதாலும் இரசத்திற் கொப்பாம் என்பது.

அப்பசுவே வேறுபயனைக் குறித்து விதிக்கப் படுகின்றது

பிராமணம் 5.

मैत्रावरुणीं द्विरूपामा लभेत प्रजाकामो मैत्रंवा अहर्वारुणी रात्रिरहोरात्राभ्यां खलु वै प्रजाःप्रजायन्ते मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मा अहोरात्राभ्यां प्रजांप्रजनयतश्छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वै प्रजा छन्दसामेव रसेन रसं प्रजामव रुन्धे ।

என்பது

உரை

புத்திரனை விரும்பியவன், மைத்திரா வருணர்களுக்குரிய இரண்டு நிற முடைய பசுவைக்கொன்று வேள்வி செய்வானாக. பகல், மித்திரனாகிற சூரிய னைப் பற்றியது. இரவு வருணனைப் பற்றியது. பகலிரவுகளால் குழந்தை தோன்றுகின்றது. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடுபெற்ற மித்திரா வருணர்கள் பகலிரவுகளால் புத்திரவுற்பத்தியைச் செய்கின்றார்கள். ஏனை யவைகள் முன் போன்றன என்பதாம்.

(பிரமவோலி முதலானவைகளை

மூன்றுவது பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 6.

वैश्वदेवीं बहुरूपामा लभेतान्नकामो वैश्वदेवं वा अन्नं विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वा अन्नं छन्दसामेव रसेन रसमन्नमव रुन्धे ।

என்பது

உரை

அன்னத்தை விரும்பியவன், வைசுவ தேவர்கட்குரிய பல்வேறு வகை நிறமுடைய பசுவைக் கொன்று வேள்விசெய்வானாக. அன்னம் எல்லாத் தேவர்களாலும் உண்ணப்படுகின்றது. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற எல்லாத் தேவர்களும் இவனுக்கு அன்னத்தைக் கொடுக்கின்றார்கள். மற்றவை முன் போன்றன என்பது.

அன்னம் எல்லாத் தேவர்களாலும் அருந்தப்படுதலின் வைசுவதேவமாம். சீவித்தற்குக் காரணமாதலின் இரசமாம். அதாவது இரசத்திற் கொப்பாம் என்பதை யுணர்க.

அப்பசுவை மற்றொரு பயனைக்குறித்து விதிக்கின்றது

பிராமணம் 7.

वैश्वदेवीं बहुरूपामा लभेत ग्रामकामो वैश्वदेवा वै सजाता विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मै सजातान्प्र यच्छन्ति ग्राम्येव भवति छन्दसां वा एष रसो यद्वशा रस इव खलु वै सजाताश्छन्दसामेव रसेन रसꣳ सजातानव रुन्धे ।

என்பது

உரை.

கிராமத்தை விரும்பியவன், வைசுவதேவர்கட்குரிய பல்வகை நிறமுடைய பசுவைக்கொன்று வேட்பானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற வைசுவதேவர்கள் இவனுக்கு, உடன்பிறந்தோர் முதலான சுற்றத்தார்களைக் கொடுக்கின்றார்கள். இதனால் இவன் கிராமத்திற்குத் தலைவனாகின்றான் மற்றவை முன்போன்றன என்பது.

விரும்பியவர்கட்குப் பசுக்கள்)

நான்காவது பசுவை விதிக்கின்றது

பிராமணம் 8.

बार्हस्पत्यमुक्षवशमा लभेत ब्रह्मवर्चसकामो बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது

உரை.

பிரமவொளியை விரும்பியவன், பிருகற்பதி தேவதைக்குரிய வீரியத்தை விணையொழித்த காளையைக் கொன்று வேள்விசெய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற பிருகற்பதி, இவனுக்குப்பிரம வொளியைக் கொடுக்கின்றான். அதனால் இவன் பிரம வொளியுடையவனாகின்றான் என்பதாம்.

வசாத்தன்மை யாகிய விசேடணத்தைப் புகழ்கின்றது —

பிராமணம் 9.

वशं वा एष चरति यदुक्षा वश इव खलु वै ब्रह्मवर्चसं वशेनैव वशं ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது

உரை.

பசுக்களுடன் வனத்திற்குச்சென்று மீண்டும் பசுக்கட்குப் பிறகே வீட்டிற்குவந்து சேருவது "கோவசா" எனப்படும். [illegible] நியமத்துடன் கூடியதால் சுவாதீனம் என்னும் பொருளைத்தருகின்றது. ஆதலின் பிரமவொளியையுண்டாக்குகின்றது என்பதாம்.

ஐந்தாவது பசுவை விதிக்கின்றது

பிராமணம் 10.

रौद्रीं रोहिणीमा लभेताभिचरन्रुद्रमेव स्वेन भागधेयेनोप धावति तस्मा एवैनमा वृश्चति ताजगार्तिमार्छति रोहिणी भवति रौद्री ह्येषा देवतया समृद्ध्यै ।

என்பது

உரை.

பகைவரைக் கொல்ல விரும்பியவன், உருத்திரனுக்குரிய சிவந்த நிறமுடைய பசுவைக் கொன்று வேள்விசெய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடுபெற்ற உருத்திரன், எசமானன் பொருட்டு பகைவனைக் கொல்கின்றான். 'நீலக்ரீவோவிலோஹித' என்று கூறியிருத்தலின் லோகித நிறம் உருத்திரனுக்குரியதாயிற்றென்க என்பதாம்.

(பிரமவோளி முதலானவைகட்குப் பசுக்களை விரும்பியவர்கட்கு

முன்போல் விதியால் வந்நடைந்ததை நீக்குதைநந்த விதிக்கின்றது

பிராமணம் 11.

स्पयो यूपो भवति वज्रो वै स्पयो वज्रमेवास्मै प्र हरति शरमयं बर्हिःशृणा
त्येवैनं वैभीदक इध्मो भिनत्त्येवैनम् ।

என்பது

உரை

ஸ்ப்யம் என்னும் மரக்கத்திபோல் யூபம் இதற்கு உரியது ஆகின்றது. மரக்கத்தியைச்சிரமாய் வச்சிரமே இவன் பொருட்டுப் பகைவனைக் கொல்கின்றது. நாணைப்புல்லே தருப்பையாகிறது. நாணாலே அறுக்கிறது. வைபீதகம் விறகாம். அவ்விறகு இவனுடைய பகைவனைக் கொல்கின்றது என்பது,

ஏழாவது அநுவாகம்

முற்றிற்று

எட்டாவது அநுவாக விடயச் சுருக்கம்

ब्रह्मतेजोऽभिचारंच यज्ञप्राप्तिं तथापशून् ।

समयंच तथावृष्टिं वाञ्छतां पशवश्रुताः ॥ १ ॥

பிரமவொளி, பகைவனைக்கொல்வது, யக்ஞத்தை அடைவது, யுத்தம், மழை என்பவைகளின் காமங்களையுடையவர்களுக்குப் பசுக்கள் விதிக்கப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிகளைக் கொண்டது

மீண்டும் பிரமவோளி முதலியவற்றை விரும்பியவர்கட்கு வேறு பசுக்கள் விதிக்கப்படுகின்றன.

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा
एताꣳ सौरीꣳ श्वेतां वशामाऽलभन्त तयैवास्मिन्रुचमदधुर्यो ब्रह्म-

(வேறுபசுக்கள் விதிக்கப் படுகின்றன)

वर्चसकामस्स्यात्तसा एताꣳ सौरीꣳ श्वेतां वशामा लभेताग्रुमेवा-
ऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति
ब्रह्मवर्चस्येव भवति बैल्वो यूपो भवत्यसौ ॥ १ ॥ वा आदित्यो
यतोऽजायत ततो बिल्व उदतिष्ठत्सयोन्येव ब्रह्मवर्चसमव रुन्धे
ब्राह्मणस्पत्यां बभ्रुकर्णीमा लभेताभिचरन्वारुणं दशकपालं पुरस्तान्नि-
र्वपेद्वरुणेनैव भ्रातृव्यं ग्राहयित्वा ब्रह्मणास्तृणुते बभ्रुकर्णी भवत्येतद्वै
ब्रह्मणो रूपꣳ समृद्ध्यै स्फ्यो यूपो भवति वज्रो वै स्फ्यो वज्रमेवा-
स्मै प्र हरति शरमयं बर्हिश्शृणात्ति ॥ २ ॥ एवैनं वैभीदक इध्मो
भिनत्त्येवैनं वैष्णवं वामनमा लभेत यं यज्ञो नोपनमेद्विष्णुर्वै यज्ञो
विष्णुमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै यज्ञं प्र यच्छत्युपैनं
यज्ञो नमति वामनो भवति वैष्णवो ह्येष देवतया समृद्ध्यै त्वाष्ट्रं
वडबमा लभेत पशुकामस्त्वष्टा वै पशूनां मिथुनानाम् ॥ ३ ॥
प्रजनयिता त्वष्टारमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पशू-
न्मिथुनान्प्र जनयति प्रजा हि वा एतस्मिन्पशवः प्रविष्टा अथैष
पुमान्त्सन्वडबस्साक्षादेव प्रजां पशूनव रुन्धे मैत्रꣳ श्वेतमा
लभेत सङ्ग्रामे संयत्ते समयकामो मित्रमेव स्वेन भागधेयेनोप
धावति स एवैनं मित्रेण सं नयति ॥ ४ ॥ विशालो भवति
व्यवसाययत्येवैनं प्राजापत्यं कृष्णमा लभेत वृष्टिकामः प्रजा-

(பிரமவொளி முதலானவற்றை விரும்பியவர்கட்கு

पतिर्वै वृष्ट्या ईशे प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स

एवास्मै पर्जन्यं वर्षयति कृष्णो भवत्येतद्वै वृष्ट्यै रूपꣳ रूपेणैव

वृष्टिमव रुन्धे शबलो भवति विद्युतमेवास्मै जनयित्वा वर्षयत्यवा-

शृङ्गो भवति वृष्टिमेवास्मै नि यच्छति ॥ ५ ॥

பிரமவொளி முதலியவைகளிநிமித்தம் வேறு ஒரு பசுவை விதித்துப் பொருட்டு அதைப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एताꣳ सौरीꣳ श्वेतां वशामाऽलभन्त तयैवास्मिन्रुचमदधुः ।

என்பது

உரை.

ஒருபோது இவ்வாதித்தன் நன்கு விளங்கிலன். அதன் பொருட்டுத் தேவர்கள் பிராயச்சித்தஞ் செய்ய விரும்பியவர்களாய், சூரியனுக்குரிய வெண்மைநிற மலட்டு ஆட்டைக் கொன்று வேள்வி செய்தார்கள். அதனல், ஆதித்யனிடத்தில் பிரகாசத்தன்மை உண்டானது என்பதாம்.

மேற்கூறியதை விதிக்கின்றது.

பிராமணம் 2.

यो ब्रह्मवर्चसकामस्स्यात्तस्मा एताꣳ सौरीꣳ श्वेतां वशामा लभेतामुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது

உரை.

பிரம தேசசை விரும்பியவன் சூரியன் பொருட்டு வெண்மைநிறமுடைய மலட்டு ஆட்டைக் கொன்று வேள்வி செய்வானுகை, தனது அவிர்ப்பாகத்தால் வழிபடப்பெற்ற சூரியன் இவனுக்குப் பிரமவொளியைக் கொடுக்கின்றுன். இவனும் பிரமதேசசையுடையவனுகின்றுன் என்பது.

வேறுபசுக்கள் விதிக்கப் படுகின்றன)

கருங்காலியூபத்தை நீக்க விதிக்கின்றது

பிராமணம் 3.

वैल्वो यूपो भवत्यसौ वा आदित्यो यतोऽजायत ततो विल्व उदतिष्ठत्सयो-न्येव ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது.

உரை.

வில்வமரத்தாற் செய்த யூபம் இதில் விநியோகப்படுகின்றது. ஆதித்யன் உண்டான இடத்திலிருந்து வில்வமரம் உண்டாயிற்று. அது, மறையோதல் முதலியவற்றிலிருந்துண்டாகும் பிரமவொளியைத்தருகின்றது என்பதாம்.

பகைவரைக் கொல்ல விரும்பியவனுக்குப் பசுவை விதிக்கின்றது

பிராமணம் 4.

ब्राह्मणस्पत्यां बभ्रुकर्णीमा लभेताभिचरन् ।

என்பது.

உரை

பகைவரைக் கொல்லவிரும்பியவன், மங்கலான செங்கல் நிற முள்ள காதுகளையுடைய கடாவைக் கொன்று பிரமனுக்கு வேள்வி செய்வானாக என்பதாம்.

அப்பசுவிற்கு முதலில் அங்கமாகிய புரோடாசம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 5.

वारुणं दशकपालं पुरस्तान्निर्वपेद्वरुणेनैव भ्रातृव्यं ग्राहयित्वा ब्रह्मणा स्तृणुते ।

என்பது

உரை.

வருண தேவதையின் பொருட்டுப் பத்துக்கபாலத்தில் வைத்துப் புரோடாசஞ் செய்வானாக. செய்யில், பகைவனுக்கு முதலில் வருணனால் நோயையுண்டாக்கி பிறகு பிரமணப்பதியின் யாகத்தால் பகைவனைக் கொல்கின்றது என்பதாம்.

பிரமன் பொன்னிறத்தனாதலின் பொன்னிறக் காதையுடைய கடா பிரமன் வடிவமாம் என்னுங் கருத்துப்பற்றி பசுவின் விசேடணத்தைத் துதிக்கின்றது

பிராமணம் 6.

बभ्रुकर्णी भवत्येतद्वै ब्रह्मणो रूपं समृद्ध्यै ।

என்பது

(பிரமவோளி முதலானவைகளை விரும்பியவர்கட்கு

உரை.

பொன்னிறமுள்ள காதையுடையபசு பிரமனுடைய வடிவமெனப்படுகின்றது. இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

முன்போல் விதியால் வந்ததை விலக்குதற் பொருட்டு விதிக்கின்றது

பிராமணம் 7.

स्फ्यो यूपो भवति वज्रो वै स्फ्यो वज्रमेवास्मै प्र हरति शरमयं बर्हिश्शृणात्ये वैनं वैभीदक इध्मो भिनत्त्येवैनम् ।

என்பது.

உரை.

ஸ்ப்யம் என்னும் மரக்கத்திபோல் யூபம்இதற்கு உரியதாகிறது. ஸ்ப்யம் வச்சிரமாய்க் கொல்கிறது. நாணப்புல் தருப்பையாகிறது. நாணப்புல் அறுக்கிறது. வைபீதக விறகு பகைவனைக் கொல்கின்றது என்பதாம்.

அக்கினிஷ்டோம முதலிய மகாயக்ஞத்தை விரும்பியவனுக்குப் பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 8.

वैष्णवं वामनमा लभेत यं यज्ञो नोपनमेद्विष्णुर्वै यज्ञो विष्णुमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै यज्ञं प्र यच्छत्युपैनं यज्ञो नमति वामनो भवति वैष्णवो ह्येष देवतया समृद्ध्यै ।

என்பது

உரை

எக்ஞத்தை விரும்பியவன், விஷ்ணு தேவதையின் பொருட்டு வாமன (குட்டையான) ஆட்டுக் கடாவைக் கொன்று வேள்வி செய்வானாகை. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடுபெற்ற யக்ஞவடிவ விஷ்ணு இவனுக்கு யக்ஞத்தை யளிக்கின்றார். வாமனம் விஷ்ணு சம்பந்தமுடையது அது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம். இராசசூயத்தில் "மூன்று கபாலம் வாமனம் தட்சிணை" என்று கூறியிருத்தலின், வாமனம் என்பது விஷ்ணு தேவதையின் சம்பந்தமுடையது என்பதையுணர்க.

வேறுபசுக்கள் விதிக்கப் படுகின்றன)

மற்றொரு பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 9.

त्वाष्ट्रं वडबमा लभेत पशुकामस्त्वष्टा वै पशूनां मिथुनानां प्रजनयिता त्वष्टा-रमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पशून्मिथुनान्प्र जनयति ।

என்பது.

உரை.

பசுவை விரும்பியவன், துவஷ்டா தேவதைக்குரிய பெண்குதிரை போன்றுள்ள ஆண்குதிரையைக் கொன்று வேள்வி செய்வானாக. துவஷ்டா பசுக்களின் புணர்ச்சியை யுண்டாக்குகின்றான். தனது அவிர்ப்பாகத்தால் வழி பாடு பெற்ற துவஷ்டா இவனுக்குப் பசுக்களின் புணர்ச்சியை, அதாவது பெருக்கத்தை உண்டாக்குகின்றான் என்பதாம்.

சண்டு, மீசை முளைப்பதன் முன் முலைபெருத்துள்ள ஒரு ஆண்மகனைப் பெண்பாலென்று மயங்குவதுபோல் இது மயக்கத்திற் கிடமாகிய குதிரை யாம் என்பதை யுணர்க.

பசுவின் விசேடணத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 10.

प्रजा हि वा एतस्मिन्पशवः प्रविष्टा अथैष पुमान्त्सन्वडवस्साक्षादेव प्रजां पशू-नव रुन्धे ।

என்பது.

உரை.

எப்பசுவில் பெண்ணிலக்கணத்தைக் கண்டு குட்டியும், பசுக்களும் அதன்மீது ஏறிவிழுகின்றனவோ, அத்தகைய பசு வடிவை எனப்படுகின்றது. அது நேரே பசுக்களைக் கொடுக்கின்றது என்பதாம்.

பிறர் சேனையில் சூரனைக் கொல்வேன் என்று சபதங்கூறியவனுக்கு, அல்லது ஒற்றுமை செய்ய விரும்பியவனுக்குப் பசுவை விதிக்கின்றது

பிராமணம் 11.

मैत्रं श्वेतमा लभेत सङ्ग्रामे संयत्ते समयकामो मित्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं मित्रेण सं नयति।

என்பது

உரை.

பகைவர் சேனையில் வீரனைக் கொல்லுவேன் என்று உறுதி கூறியவன், அல்லது சமாதானஞ் செய்துவைக்க விரும்பியவன், மித்திர தேவதைக்குரிய வெண்மை நிறமுடைய ஆட்டுக் கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. அது தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற மித்திர தேவதையுடன் கூட்டிவைக்கின்றது. அல்லது, பகைவனை நண்பனுக்குச் சேர்த்து வைக்கின்றது என்பதாம்.

எசமானனுடைய அளவுள்ளது யூபம் என்று பிரகிருதியாகத்திற் கூறியதை விலக்குதற்கு அதிலும் மிகுந்த அளவு விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 12.

विशालो भवति व्यवसाययत्येवैनम् ।

என்பது

உரை

இதற்குப் பருத்த யூபமாகிறது. இது, உறுதிமொழி கூறியவனைத் தைரியமுடையனுக்கித் தனது காரியத்தில் உறுதியுடையவனுகச் செய்கின்றது. ஒற்றுமை செய்ய விரும்பியவனை எதிரியாகிய அரசன் எனது நண்பனே என்னும் உறுதியுடையனுகச் செய்கின்றது என்பதாம்.

மற்றொரு பசுவை விதிக்கின்றது.

பிராமணம் 13.

प्राजापत्यं कृष्णमा लभेत वृष्टिकामः प्रजापतिर्वै वृष्ट्या ईशे प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पर्जन्यं वर्षयति ।

என்பது

உரை.

மழையை விரும்பியவன், பிரசாபதிக்குரிய கருமை நிறக் கடாவைக் கொன்று வேள்வி செய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற பிரசாபதி, மழைக்கு இறைவனாயிருந்து இவனுக்கு மழையைப் பெய்விக்கின்றான் என்பதாம்.

வேறுபசுக்கள் விதிக்கப் படுகின்றன)

சூரியனை மேகம் மூடியபோது மீதுமழைபெய்யில் இருட்டைப்போல் இருக்கின்றது

அதைக்கருதி பசு விசேடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 14.

कृष्णो भवत्येतद्वै वृष्ट्यै रूपꣳ रूपेणैव वृष्टिमव रुन्धे ।

என்பது

உரை.

கறுப்புப் பசு இதற்குரியதாகிறது, மழையின் வடிவம் இருளாகிய கறுப்பு இதனால் மழையை உண்டாக்குகின்றது என்பதாம்

உடம்பெலாங் கறுப்பாய் வயிறு முதலிய கீழ்ப்புறத்தில் மாத்திரம் வெண்மைக் கலப்புடைய தன்மையை விதிக்கின்றது

பிராமணம் 15.

शबलो भवति विद्युतमेवास्मै जनयित्वा वर्षयति ।

என்பது.

உரை

வெண்மை நிறத்துடன் கூடிய பசு இதற்குரியது, வெண்மை மின்னலுக்கொப்பாம். ஆதலின் அது மின்னலையுண்டாக்கி மழையைப் பெய்விக்கின்றது என்பதாம்.

காதுவரை கீழேவளைந்த கொம்புடைய பசுவை விதிக்கின்றது.

பிராமணம் 16.

अवाश्ृङ्गो भवति वृष्टिमेवास्मै नि यच्छति ।

என்பது

உரை

கீழே தொங்கிய கொம்பையுடைய பசு இதற்குரியது. இது இவனுக்கு மழையைப் பெய்விக்கின்றது. இதன் கொம்பு கீழ்நோக்கிய தன்மையால் மழைத் தாரைக் கொப்பாம் என்பதையுணர்க என்பதாம்.

எட்டாவது அநுவாகம்

முற்றிற்று

ஒன்பதாவது அநுவாக விடயச்சுருக்கம்

अन्नाद्यमन्नमात्रंचवाञ्छन्तौदीर्घरोगवान् ॥

पुष्टिकामश्चनवम एतेषांपशवश्श्रुताः ॥ १ ॥

உணவை அருந்தலையும், கேவலம் அன்னத்தையும் விரும்பியவனுக்கும், நீண்ட வியாதியுடையவனுக்கும், புஷ்டியை விரும்பியவனுக்கும் பசுக்கள் விதிக்கப்படுகின்றன என்பதாம்.

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

ஒன்பதாம் அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தைந்து பதங்களைக் கொண்டது.

அருந்தல் முதலானவைகளை விரும்புகின்றவர்கட்குப் பசுக்களைக் கூறும் பிராமணங்கள்.

वरुणꣳ सुषुवाणमन्नाद्यं नोपानमत्स एतां वारुणींकृष्णां वशामप-
श्यत्ताꣳ स्वायै देवताया आऽलभत ततो वै तमन्नाद्यमुपानमद्यमलं
मन्नाद्याय सन्तमन्नाद्यं नोपनमेत्स एतां वारुणीं कृष्णां वशामा
लभेत वरुणमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मा अन्नं प्र
यच्छत्यन्नादः ॥ १ ॥ एव भवति कृष्णो भवति वारुणीह्येषा
देवतया समृद्ध्यै मैत्रꣳ श्वेतमा लभेत वारुणं कृष्णमपां चौषधीनां
च संधावन्नकामो मैत्रीर्वा ओषधयो वारुणी रापोऽपां च खलु वा
ओषधीनां च रसमुपजीवामो मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप
धावति तावेवास्मा अन्नं प्र यच्छतोऽन्नाद एव भवति ॥ २ ॥
अपां चौषधीनां च संधावा लभेत उभयस्यास्यावरुद्ध्यै

विशाखो यूपो भवति द्वे ह्येते देवते समृद्ध्यै मैत्रꣳ श्वेतमा
लभेत वारुणं कृष्णं ज्योगामयावी यन्मैत्रो भवति मित्रेणैवास्मै
वरुणꣳ शमयति यद्वारुणस्साक्षादेवैनं वरुणपाशान्मुञ्चत्युत
यदीतासुर्भवति जीवत्येव देवा वै पुष्टिं नाविन्दन् ॥ ३ ॥ तांमि-
थुनेऽपश्यन्तस्यां न समराधयन्तावश्विनावब्रूतामावयोर्वा एषा
मैतस्यां वदध्वमिति साऽश्विनोरेवाभवद्यः पुष्टिकामस्स्यात्स एता-
माश्विनीं यमीं वशामालभेताश्विनावेव स्वेन भागधेयेनोप
धावति तावेवास्मिन्पुष्टिं धत्तः पुष्यति प्रजया पशुभिः ॥ ४ ॥

நைமித்திகமாகிய ஒரு பசுவை விதிப்பதற்கு முதலில் அதைப் புகழ்கின்றது

பிராமணம் 1.

वरुणꣳ सुषुवाणमन्नाद्यं नोपानमत्स एतां वारुणीं कृष्णां वशामपश्यत्ताꣳ स्वायै देवताया आऽलभत ततो वै तमन्नाद्यमुपानमत् ।

என்பது.

உரை.

வருணன் சோமரசத்தைப் பிழிந்தானாயினும், அதை அருந்துந் தன்மையை யடையவில்லை. ஆதலின் அவன் வருணனுக்குரிய கருநிறமுடைய மலட்டு ஆட்டைக்கண்டு பிடித்து அதைத் தன் பொருட்டுக் கொன்றனன். அதிலிருந்து அவன் அன்ன முதலியவற்றைச் சாப்பிடுந் தன்மையை யடைந்தனன் என்பதாம்.

அதை விதிக்கின்றது

பிராமணம் 2.

यमलमन्नाद्याय सन्तमन्नाद्यं नोपनमेत्स एतां वारुणीं कृष्णां वशामालभेत वरुणमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मा अन्नं प्र यच्छत्यन्नाद एव भवति कृष्णा भवति वारुणी ह्येषा देवतया समृद्ध्यै ।

என்பது.

(அருந்தல் முதலானவைகளை

உரை

எல்லாப் போக்கியங்களையும் அநுபவிக்க ஆற்றலிருந்தும் அப் போகத்தை யடையாதவன், வருணதேவதைக்குரிய கரிய மலட்டு ஆட்டைக்கொன்று வேள்விசெய்வானாக. தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற வருணன் இவனுக்கு அன்ன முதலியவற்றைக் கொடுக்கின்றான். இவனும் அருந்தல் முதலியவைகளில் மிகவும் வல்லுநனாகின்றான். இது, வருணதேவதையால் சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம். வருணன், மழைவாயிலாக இருட்டாக்குவதால் கருநிறப்பசு அவனுக்கு உரியதாயிற்று என்பதையுணர்க.

இரண்டு பசுக்களைக்கொண்ட கருமத்தை விதிக்கின்றது

பிராமணம் 3.

मैत्रं श्वेतमा लभेत वारुणं कृष्णमपां चौषधीनां च संधावन्नकामो मैत्रीर्वा ओषधयो वारुणीरापोऽपां च खलु वा ओषधीनां च रसमुप जीवामो मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मा अन्नं प्र यच्छतोऽन्नाद एव भवति ।

என்பது

உரை.

அன்னத்தை விரும்பியவன், தண்ணீர்கட்கும் ஓஷதிகட்கும் இடையில் மித்திர தேவதைக்குரிய வெள்ளைப்பசுவையும், வருணனுக்குரிய கறுப்புப் பசுவையுங் கொன்று வேள்வி செய்வானாக. மித்திர தேவதையைப் பற்றியது ஓஷதி. வருணனைப்பற்றியது தண்ணீர். தண்ணீர் ஓஷதிகள் என்னுமிரண்டின் ரசம் பிராணன். அது அவிர்ப்பாகத்தால் வழிபாடு பெற்ற மித்திர வருணர்கள். இவனுக்கு அன்னத்தைக் கொடுக்கின்றார்கள். இவன் நன்கு அன்ன மருந்துகின்றவனுமாகின்றான் என்பதாம். இடையென்றது இருதுக்களின் நடுவிலும், நதி க்ஷேத்திரங்கட்கு நடுவிலுமாம் என்பதையுணர்க.

இக்கருத்தைக் கொண்டே சந்தியை (இடையை)ப் புகழ்கின்றது

பிராமணம் 4.

अपां चौषधीनां च संधावा लभत उभयस्यावरुद्धै ।

என்பது

உரை

தண்ணீர் ஒஷதிகள் என்னு மிரண்டின் இடையில் பசுக்களைக்கொன்று வேட்பானாக. இது அவ்விரண்டையும் அடைதற் பொருட்டு நிமித்தம் ஆகின்றது என்பதாம்.

யூபத்திற்கு இரண்டு கிளைகள் சொல்லப் படுகின்றது

பிராமணம் 5.

विशाखो यूपो भवति द्वे ह्येते देवते समृद्ध्यै ।

என்பது

உரை

கயிற்றுக்குமேல், அல்லது மேலே இரண்டு கிளைகளையுடையது யூபமாம். இதற்கு இரண்டு தேவதைகளானதால் இது நிறைந்த சம்பத்தியின் ஆகின்றது என்பதாம்.

நீண்ட வியாதியுடையவனுக்கு இரண்டு பசுக்கள் கொண்ட கருமத்தை விதிக்கின்றது

பிராமணம் 6

मैत्रँ श्वेतमा लभेत वारुणं कृष्णं ज्योगामयावी यन्मैत्रो भवति मित्रेणैवास्मै वरुणपाशान्मुञ्चत्युत यदीतासुर्भवति जीवत्येव ।

என்பது

உரை.

நெடுங்காலம் பிணியாற் பீடிக்கப்பட்டவன், மித்திரனுக்குரிய வெண்மை நிறப்பசுவையும், வருணனுக்குரிய கருநிறப்பசுவையுங் கொன்று யாகஞ் செய்வானாக. மித்திரன், கோபமடைந்த வருணனைச் சாந்தமாக்குகின்றான். வருணன் நேரே பாசக்கட்டை விடுவிக்கின்றான். இதனால் அவன் நல்லுயிர் பெற்று இனிது வாழ்கின்றான் என்பதாம்.

புஷ்டியை விரும்பியவனுக்குப் பசுவை விதித்தற் பொருட்டுப் புகழ்கின்றது

பிராமணம் 7

एषा वै पुष्टिं नाविन्दन्तां मिथुनेऽपश्यन्तस्यां न समराधयन्तावश्विनावब्रूतामावयोर्वा एषा मैतस्यां वदध्वमिति साऽश्विनोरेवाभवत् ।

என்பது.

உரை.

தேவர்கள், பிரசைகளின் பெருக்கத்தையும் பசுக்களின் பெருக்கத்தையும் அடைந்திலராய், இவ்விரண்டும் பெருகுவதற்கு இவ்விருவகையின் புணர்ச்சிகளே காரணமாமெனக்கண்டனர். கண்டும் அவற்றை அடையமுடியவில்லை. அக்கால், அசுவினிகள், அவ்விருவகையும் எமது வசப்பட்டதாம், ஆதலின் எம்மைத் தவிர்த்து அப்பேச்சுக்கூட இல்லை என்றனர். ஆதலின் மக்கள் பசுக்கள் என்னும் இருவகையார்களின் புணர்ச்சிகள் அசுவினிகளின் வசமாயின என்பதாம்.

அதை விதிக்கின்றது

பிராமணம் 8.

यः पुष्टिकामस्स्यात्स एतामाश्विनीं यमीं वशामा लभेताश्विनावेव स्वेन भाग-
धेयेनोप धावति तावेवास्मिन्पुष्टिं धत्तः पुष्यति प्रजया पशुभिः ।

என்பது.

உரை

பசுவையும், பிரசைகளின் புஷ்டியையும் விரும்பியவன், அசுவினி தேவதைகட்குரிய ஒன்றாய்த் தோன்றிய இரண்டு குட்டிகளுள் பெண்ணாகிய மலட்டு, ஆட்டைக் கொன்று வேள்வி செய்வானாக. தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடுபெற்ற அசுவினிகள், பசுக்களையும் பிரசைகளையும் இவன், அடையுமாறு செய்கின்றார்கள் என்பதாம்.

ஒன்பதாவது அநுவாகம்

முற்றிற்று

பத்தாவது அநுவாக விடயச் சுருக்கம்

दौर्ब्राह्मण्याभि शापौच सूर्याविर्भाव वर्जनम् ॥

निमित्तीकृत्य दशमे पशवस्समुदीरिताः ॥ १ ॥

மூன்று தலைமுறை சோமபானஞ் செய்யாமல் விட்டுப்போனவனுக்கும் சூரியன் உதயமாகாவிடிற் செய்யவேண்டியதுமாகிய பசுக்கள் விதிக்கப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தாறு பதங்களைக் கொண்டது.

நைமித்திக பசுக்களைக் கூறு பிராமணங்கள்.

आश्विनं धूम्रललाममा लभेत यो दुर्ब्राह्मणस्सोमं पिपासेदश्विनौ वै देवानामसोमपावास्तां तौ पश्चा सोमपीथं प्राऽऽप्नुतामश्विनावेतस्य देवता यो दुर्ब्राह्मणस्सोमं पिपासत्यश्विनावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै सोमपीथं प्र यच्छत उपैनꣳ सोमपीथो नमति यद्धूम्रो भवति धूम्रिमाणमेवास्मादपहन्ति ललामः ॥१॥ भवति मुखत एवास्मिन्तेजो दधाति वायव्यं गोमृगमा लभेत यमजघ्निवाꣳसमभिशꣳसेयुरपूता वा एतं वागृच्छति यमजघ्निवाꣳसमभिशꣳसन्ति नैष ग्राम्यः पशुर्नाऽऽरण्यो यद्गोमृगो नेवैष ग्रामे नारण्ये यमजघ्निवाꣳसमभिशꣳसन्ति वायुर्वै देवानां पवित्रं वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एव ॥ २ ॥ एनं पवयति पराची वा एतस्मै व्युच्छन्ती व्युच्छति तमः पाप्मानं प्र विशति यस्याऽऽश्विने शस्यमाने सूर्यो नाऽऽविर्भवति सौर्यं बहुरूपमा लभेतामुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मात्तमः पाप्मानमप हन्ति प्रतीच्यस्मै व्युच्छन्ती व्युच्छत्यप तमः पाप्मानꣳ हते ॥ ३ ॥

தீயபிராமணன் சோமபானம் விரும்புவதை முன்னிட்டுப் பசுவை விதிக்கப்படுகின்றது

பிராமணம் 1.

आश्विनं धूम्रललाममा लभेत यो दुर्ब्राह्मणस्सोमं पिपासेदश्विनौ वै देवानाम सोमपावास्तां तौ पश्चा सोमपीथं प्राऽऽप्नुतामश्विनावेतस्य देवता यो दुर्ब्राह्मणस्सोमं पिपासत्यश्विनावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै सोमपीथं प्र यच्छत उपैनꣳ सोमपीथो नमति यद्धूम्रो भवति मुखत-एवास्मिन्तेजो दधाति ।

என்பது

உரை.

மறை, மறையோதல் என்பது விடுபட்டதாகிய தீமையையுடையவன், தலையில் வெண்மைப்புள்ளியும், உடல் முழுதும் புகைநிறமுடையதுமாகிய பசுவை அசுவினிகளின் பொருட்டுக் கொன்று வேள்விசெய்வானாக. அசுவினிகள் சோமபானம் பண்ணத் தகாதவர்களாயிருந்து, பிறகு புனிதர்களாய்ச் சோமபானஞ் செய்தவர்கள். ஆதலின் அவர்கள் தமது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப்பெற்றவர்களாய் இவனைச்சோமபானஞ் செய்யும்படி செய்கின்றார்கள். பசுவின் புகைநிறம் இவனுடைய அழுக்கைப் போக்குகிறது. முகத்திலுள்ள வெண்மை இவனுக்கு அழகைக் கொடுக்கின்றது என்பதாம்.

பொய்யாகக் கெட்டபேரெடுத்த நிமித்தம் ஒரு பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 2.

वायव्यं गोमृगमा लभेत यमजघ्निवाꣳ सममिशꣳसेयुरपूता वा एतं वागृच्छति यमजघ्निवाꣳसमभिशꣳसन्ति नैष ग्राम्यः पशुर्नाऽऽरण्यो यद्गोमृगो नेवैष ग्रामे नारण्ये यमजघ्निवाꣳसमभिशꣳसन्ति वायुर्वै देवानां पवित्रं वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं पवति ।

என்பது

உரை.

கொலைபண்ணாதிருந்தும் கொலைபண்ணியதாகப் பேரெடுத்தவன், காளைக்கும் பெண்மானுக்கும் பிறந்த பசுவைக்கொன்று வாயுதேவதையின் பொருட்டு வேள்விசெய்வானாக. இவனே பாவியென வழங்கப்பட்டவன். இந்தக் கோமிருகம் காட்டிலுமிராது நாட்டிலுமிராது. இது இருவகைப் பிறப்

நைமித்திக பசுக்கள்)

பாதலின் என்க. வாயுதேவதை தேவர்களுக்குள் புனிதமானது. தனது அவிர்ப்பாக வழிபாட்டாற் களிப்புற்ற அத்தகைய வாயு, இவனைப் புனிதனுக்கு கின்றது என்பதாம்.

அதிராத்திரம் என்னுஞ் சோமயாகத்திற்கிடையில் அசுவினிகளின் சஸ்திரம் (ஒருவகைத் துதி முறையை) ஓதும்போது இரவி யெழாவிடில் ஒரு பசு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 3.

पराची वा एतस्मै व्युच्छन्ती व्युच्छति तमः पाप्मानं प्र विशति यस्याऽऽश्विने शस्यमाने सूर्यो नाऽऽविर्भवति सौर्यं बहुरूपमा लभेतामुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मात्तमः पाप्मानमप हन्ति प्रतीच्यस्मै व्युच्छन्ती व्युच्छत्यप तमः पाप्मानꣳ हते ।

என்பது

உரை.

'அக்கினிர் ஹோதா' என்பது முதலான ஆயிரம் இருக்கு மந்திரங் கொண்ட ஆசுவின சாஸ்திர மென்னும் மறை மந்திரங்களை, அதிராத்திரம் என்னுஞ் சோமயாகத்தில், இராத்திரி யென்னும் பெயர் பூண்ட சஸ்திரங்களை ஓதிய பிறகு, ஆசுவின சஸ்திரத்தை ஓதும்போது பொழுது விடிந்தும் மேகத்தால் இருளாயிருக்கின் இப்பசு வேண்டியதில்லை. உதயமாகாவிடில், அவ் வேள்வித் தலைவன் நரகத்தை யடைவானாதலின் சூரியனுக்குரிய பல்வகை நிறமுடைய பசுவைக்கொன்று வேள்விசெய்வானாக. அதனால் தனது அவிர்ப் பாகத்தால் வழிபாடுபெற்ற சூரியன், இருள்வடிவமாகிய பாவத்தைப் போக்குகின்றான் என்பதாம்.

பத்தாவது அநுவாகம்

முற்றிற்று.

பதினோராவது அநுவாகத்தின் விடயச் சுருக்கம்

ऐन्द्रयागे त्विन्द्रमिन्द्र मरुत्वावेति मारुते ।

भरेषु वैश्वदेवेन्द्रे प्रिया प्रैयंगवेचरौ ॥ १ ॥

अग्निर्वसुमदादीनां चतुर्णां हि समूहके ॥

यथाविकल्पितायाज्या कुत्र स्विष्टकृतो द्वयम् ॥

यज्ञोभुवद्वतिचरौ धारयद्धारयद्वति ॥
स्याद्गुत्रयं शुक्लचराविमं कृष्णचरौतथा ॥
एकादशानु वाकेस्मिन्मन्त्रा द्वाविंशतिर्मताः ॥ ३ ॥

இந்திரன், மருத்து என்னும் தேவதைகளின் யாஜ்யா புரோநு வாக்கியங்களின் தலைப்புச் சொற்கள், இந்திரா வைசுவதேவேஷ்டியில் யாஜ்யா புரோநு வாக்கியங்கள். மருத்து இஷ்டியில் தினைப் பொங்கலின் யாஜ்யா புரோநுவாக்கியம். அக்கினி வசும தேஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியங்கள். அதில் விகல்பித்து மற்றொரு யாஜ்யா வாக்கியம். அதில் சுவிஷ்டகிருத்தின் யாஜ்யாபுரோநுவாக்கியங்கள். புவத்வத், இஷ்டியில் யாஜ்யாபுரோநு வாக்கியம். தாரயத்வத் என்னும் இஷ்டியில் யாஜ்யா புரோநுவாக்யம், சுக்கில அவியின் யாஜ்யா புரோநுவாக்கியம், அதில், விகல்பித்து மற்றொரு யாஜ்யா வாக்கியம். கிருஷ்ண அவியின் யாஜ்யா புரோநுவாக்கியம். அதில் விகல்பித்து மற்றொரு யாஜ்யா வாக்கியம் என்பது,

---

இரண்டாங் காண்டம் முதற் பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

इन्द्रं वो विश्वतस्परीन्द्रं नरो मरुतो यद्वो दिवो या वः शर्म ।
भरेष्विन्द्रं सुहवं हवामहेऽꣳहोमुचꣳ सुकृतं दैव्यं जनम् ।
अग्निं मित्रं वरुणꣳ सातये भगं द्यावापृथिवी मरुतः स्वस्तये ।
ममत्तु नः परिज्मा वसर्हा ममत्तु वातो अपां वृषण्वान् । शिशी-
तमिन्द्रापर्वता युवं नस्तन्नो विश्वे वरिवस्यन्तु देवाः । प्रिया वो
नाम ॥ १ ॥ हुवे तुराणाम् । आयत्तृपन्मरुतो वावशानाः ।
श्रियसे कं भानुभिस्सं मिमिक्षिरे ते रश्मिभिस्त ऋक्वभिस्सुखा-
दयः । ते वाशीमन्त इष्मिणो अभीरवो विद्रे प्रियस्य मारुतस्य

धाम्नः । अग्निः प्रथमो वसुभिर्नो अव्यात्सोमो रुद्रेभिरभि रक्षतु त्मना । इन्द्रो मरुद्भिर्ऋतुधा कृणोत्वादित्यैर्नो वरुणस्सꣳ शिशातु । सं नो देवो वसुभिरग्निस्सम् ॥ २ ॥ सोमस्तनूभी रुद्रियाभिः । समिन्द्रो मरुद्भिर्यज्ञियैस्समादित्यैर्नो वरुणो अजिज्ञिपत् । यथा-ऽऽदित्या वसुभिस्संबभूवुर्मरुद्भी रुद्रास्समजानताभि । एवा त्रिणामन्नहृणीयमाना विश्वे देवास्समनसो भवन्तु । कुत्रा चिद्य-स्य समृतौ रण्वानरो नृषदने । अर्हन्तश्चिद्यमिन्धते संजनयन्ति जन्तवः । सं यदिषो वनामहे सꣳ हव्या मानुषाणाम् । उत द्युम्नस्य शवसः ॥ ३ ॥ ऋतस्य रश्मिमा ददे । यज्ञो देवानां प्रत्येति सुम्नमादित्यासो भवता मृडयन्तः । आ वोर्वाऽची सुमतिर्ववृत्यादꣳहोश्चिद्या वरिवोवित्तराऽसत् । शुचिरपस्सूयवसा अदब्ध उपक्षेति वृद्धवयास्सुवीरः । नकिष्टं घ्नन्त्यान्तितो न दूराद्य आदित्यानां भवति प्रणीतौ । धारयन्त आदित्यासो जगत्स्था देवा विश्वस्य भुवनस्य गोपाः । दीर्घाधियो रक्षमाणाः ॥ ४ ॥ असुर्यमृतावा नक्षयमाना ऋणानि । तिस्रो भूमीर्धारयन्तीꣳरुत द्यून्त्रीणि व्रतात्रिदेथ अन्तरेषाम् । ऋतेनाऽऽदित्या महि वो महित्वं तदर्यमन्वरुण मित्र चारु । त्यान्नु क्षत्रियाꣳ अव आदित्यान्याचिषामहे । सुमृडीकाꣳ अभिष्टये । न दक्षिणा वि चिकिते न सव्या न प्राचीनमादित्या नोत पश्चा । पाक्या

चिद्वसवो धीयां चित् ॥ ५ ॥ युष्मानोंतो अभयं ज्योतिरश्याम् । आदित्यानामवसा नूतनेन सक्षीमहि शर्मणा शंतमेन । अनागास्त्वे अदितित्वे तुरास इमं यज्ञं दधतु श्रोषमाणाः । इमं मे वरुण श्रुधी हवमद्या च मृडय । त्वामवस्युरा चके । तत्त्वा यामि ब्रह्मणा वन्दमानस्तदा शास्ते यजमानो हविर्भिः । अहेडमानो वरुणेह बोध्युरुशꣳस मा न आयुः प्र मोषीः ॥ ६ ॥

இப்பிரபாடகத்தின் அநுவாக எண்களைக் கொண்ட தலைப்புச் சொற்கள்:—

वायव्यं प्रजापतिस्ता वरुणं देवासुरा एष्वसावादित्यो दशर्ष भमिन्द्रो वलस्य वार्हस्पत्यं वषट्कारोऽसौसौरीं वरुणमाश्विनमिन्द्रं वोनर एकादश ॥ (११)

பஞ்சாதியின் எண்:—

वायव्यमाग्नेयीं कृष्णग्रीवीमसावादित्योवा अहो रात्राणि वषट्कारः प्रजनयिता हुवे तुराणां पञ्चषष्टिः ॥ (६५)

பதினொரு அநுவாகங்களால் காமியபசுக்கள் கூறப்பட்டன. இதில், காமியேஷ்டிகளின் யாஜ்யை புரோநுவாக்கியம் கூறப்படுகின்றன. அவற்றுள்,

முதல் மந்திரம் (1-2-3-4)

காமிய இஷ்டி காண்டத்தில் 'ऐन्द्रमेकादशकपालं निर्वपेत्' 'मारुतꣳ सप्तकपालं ग्रामकामः' என்று, சங்-கா-2. பிர-2-அநு-11 வதில் இரண்டு அவிகள் கொண்ட ஒரு இஷ்டியை விதிக்கின்றன. இவ்விரண்டு அவிகளின் யாஜ்யா புரோநுவாக்கியங்கள் முதற்காண்டத்திலேயே கூறப்பட்டிருக்கின்றன. அவைகளின் தலைப்புச்சொற்கள் மாத்திரம் இங்குக் கூறப்படுகின்றன;—

इन्द्रं वो विश्वतस्परीन्द्रं नरो मरुतो यद्वो दिवो या वश्शर्म !

என்பது

உரை.

இவற்றுள் முதலாவது இரண்டு சொற்றொடர் ஆறும் பிரபாடகத்தின் முடிவு அநுவாகத்திற் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது சொற்றொடர் ஐந்தாம் பிரபாடகத்தின் ஈற்றநுவாகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இதன் பொருளும் அங்குக் கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

அங்ஙனமே ‘ऐन्द्रमेकादशकपालं निर्वपेद्वैश्वदेवं द्वादशकपालं ग्रामकामः’ என்பது முதலிய, சங்-கா-2, பிர-2, அநுவா-11-வதில் விதித்திருக்கின்றது அதற்கு இது புரோநுவாக்கியம்:—

भरेष्विन्द्रꣳ सुहवꣳ हवामहेऽꣳहोमुचꣳ सुकृतं दैव्यं जनम् । अग्निं मित्रं
वरुणꣳ सातये भगं द्यावापृथिवी मरुतस्स्वस्तये ।

என்பது

உரை

இனிது அழைத்தற்குரியானும், பாவத்தைப் போக்குகின்றவனும், அழகையும், சீலத்தையுஞ் செய்கின்றவனும், வானில் உண்டாகியவனும், மழையால் பயிர் முதலியவற்றை உண்டாக்குகின்றவனுமாகிய இந்திரனை, தேவர்கட்கு அவிகொடுத்தற் பொருட்டும் வேள்வித்தலைவனுடைய மேம்பாட்டின் பொருட்டும் அழைக்கின்றோம். அங்ஙனமே, அக்கினி முதலான தேவர்களையும் அழைக்கின்றோம் என்பதாம்.

ஆறாவது மந்திரம்

மேற்கூறியதற்கே யாஜ்யா வாக்கியங் கூறப்படுகின்றது.

ममस्तु नःपरिज्मा वसर्हा ममस्तु वातो अपां वृषण्वान् । शिशीतमिन्द्रापर्वता
युवं नस्तन्नो विश्वे वरिवस्यन्तु देवाः ।

என்பது.

உரை.

நாற்புறமுஞ் சூழ்ந்துகொண்டு உண்ணும் அக்கினி எமக்கு இன்பளிக்குக, மற்றும், வருடத்தைத் தோற்றுவிக்கும் இரவியும், வாயுவும், மழையும், மலை

யாசனும், அல்லது மலையும் எமக்கு இன்பளிப்பனவாகுக. இந்திர மலைகளே! நீவிர், எமது பாவத்தைத் தொலைப்பீர்களாக. அவியளிப்பதால் விசுவதேவர்கள் அருளொடும் எம்மை நோக்குவார்களாக என்பதாம்.

ஏழாவது மந்திரம்.

இனி கறுப்பரிசி சிவப்பரிசிகளுள், வெள்ளரிசியால் ஆதித்தன் பொங்கலைக் கூறிவிட்டு; வருணனுக்குரிய கறுப்பரிசிப் பொங்கல் விதிக்கப் படுகின்றது

பிராமணம் 8.

अवगतोऽस्य विडनवगतं राष्ट्रमित्याहुर्ये कृष्णाः स्युस्तं वारुणं चरुं निर्वपेद्वारुणं वै राष्ट्रमुभे एव विशं च राष्ट्रं चाव गच्छति ।

என்பது.

உரை

எசமானனுக்கு, ஆதித்தனின் பொங்கலால் குடிகள் கிடைத்தனவாயினும் இராச்சியமும் பூமிவிசேடங்களும் கிடைக்கவில்லையெனப்படுதலின் இராச்சியத்தின் தேவதையாகிய வருணனுக்குக் கறுப்பு நெல்லரிசிப் பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

இராச்சியத்தையடைவதற்கு இஷ்டி செய்தும் சிலதடையால் இராச்சியத்தை யடையாதவனுக்கு விதி

பிராமணம் 9.

यदि नावगच्छेदिममहमादित्येभ्यो भागं निर्वपाम्यामुष्मादमुष्यै विशोऽवगन्तोरिति निर्वपेदादित्या एवैनं भागधेयं प्रेप्सन्तो विशमव गमयन्ति ।

என்பது.

உரை.

யான் எனது பகைவனிடத்திலிருந்து நெல்லைக் கொண்டுவந்து ஆதித்தனுக்கு அவி செய்வேன். எதன் பொருட்டெனின்? எனது பிரசைகளையும் இராச்சியத்தையும் அடைதற்பொருட்டு என்க. ஆதித்தர்கள் இராச்சிய முதலியவற்றைக் கொடுக்கின்றார்கள் என்பதாம்.

தடைகள் மிகுதியால் அவ்வளவாலும் கிடைக்காவிடில் மீண்டும் மற்றொரு விசேடம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 10.

यदि नावगच्छेदाश्वत्थान्मयूखान्त्सप्त मध्यमेषायामुप हन्यादिदमहमादित्यान्बध्नाम्यामुष्मादमुष्यै विशोऽवगन्तोरित्यादित्या एवैनं बद्धवीरा विशमव गमयन्ति ।

என்பது

உரை.

எனது பகைவனிடத்திலிருந்து என்னுடைய குடி முதலியவைகளை யடைதற் பொருட்டு ஆதித்தர்களை இப்படிக் கட்டுகின்றேன். என்னும் இம் மந்திரத்தால், அரசஞ் சுப்பியாற் செய்தமுளைகளை வேள்விப் பொருளை யேற்றிவந்த வண்டியின் நடுவில் வைத்து அடித்துவிடல் வேண்டும்என்பதாம்.

மாபெருந்தடைகளிருக்கில் மீண்டும் விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 11.

यदि नावगच्छेदेतमेवाऽऽदित्यं चरुं निर्वपेदिध्मेऽपि मयूखान्त्सं नह्येदनपरुध्य-मेवाव गच्छति ।

என்பது.

உரை.

முன்போன்றுசெய்துள்ள ஏழு முளைகளையும் விறகிலும் வைத்துக் கட்டி விடல் வேண்டும் என்பதாம்.

முளைகள் செய்யும் மரம் இன்னதென்று விதிக்கின்றது

பிராமணம் 12

आश्वत्था भवन्ति मरुतां वा एतदोजो यदश्वत्थ ओजसैव विशमव गच्छति ।

என்பது

உரை

அரசமரத்தால் முளைகள் செய்யப்படுகின்றன என்பதாம்.

முளைகள் இத்தனை எனவிதிக்கின்றது

பிராமணம் 13.

सप्त भवन्ति सप्तगणा वै मरुतो गणश एव विशमव गच्छति ।

என்பது

உரை.

ஈண்டு ஏழு முளைகள் கொள்ளப்படுகின்றன என்பதாம்.

முதல் அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

மிருத்யுவினால் பய முதலியவைகளை யடைந்தவனுக்கு நூறு பொன் தகடுகள் வைத்துச் செய்யும் இஷ்டி முதலியவைகள் விதிக்கப் படுகின்றன. எட்டுப்பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தொரு பதங்களைக் கொண்டது.

பிராமணங்கள்

देवा वै मृत्योरबिभयुस्ते प्रजापतिमुपाधावन्तेभ्य एतां प्राजापत्याꣳ शतकृष्णलां निरवपत्तयैवैष्वमृतमदधाद्यो मृत्योर्बिभीयात्तस्मा एतां प्राजापत्याꣳ शतकृष्णलां निर्वपेत्प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्नायुर्दधाति सर्वमायुरेति शतकृष्णला भवति शतायुः पुरुषश्शतेन्द्रिय आयुष्येवेन्द्रिये ॥ १ ॥ प्रति तिष्ठति घृते भवत्यायुर्वै घृतममृतꣳ हिरण्यमायुश्चैवास्मा अमृतं च समीची दधाति चत्वारि चत्वारि कृष्णलान्यव द्यति चतुरवत्तस्याऽऽप्त्या एकधा ब्रह्मण उप हरत्येकधैव यजमान आयुर्दधात्यसावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एतꣳ सौर्यं चरुं निरवपन्तेनैवास्मिन् ॥ २ ॥ रुचमदधुर्यो ब्रह्मवर्चसकामः स्यात्तस्मा एतꣳ सौर्यं चरुं निर्वपेदमुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवत्युभयतो रुक्मौ भवत उभयत एवास्मिन्रुचं दधाति प्रयाजेप्रयाजे कृष्णलं जुहोति दिग्भ्य एवास्मै ब्रह्मवर्चसमव रुन्ध आग्नेयमष्टाकपालं निर्वपेत्सावित्रं द्वादशकपालं भूम्यै ॥ ३ ॥ चरुं यः

कामयेत हिरण्यं विन्देय हिरण्यं मोप नमेदिति यदाग्नेयो भवत्या-ग्नेयं वै हिरण्यं यस्यैव हिरण्यं तेनैवैनद्विन्दते सावित्रो भवति सवितृप्रसूत एवैनद्विन्दते भूम्यै चरुर्भवत्यस्यामेवैनद्विन्दत उपैनꣳ हिरण्यं नमति वि वा एष इन्द्रियेण वीर्येणर्ध्यते यो हिरण्यं विन्दत एताम् ॥ ४ ॥ एव निर्वपेद्धिरण्यं विन्त्वा नेन्द्रियेण वीर्येण व्यृध्यत एतामेव निर्वपेद्यस्य हिरण्यं नश्येद्यदाग्नेयो भव-त्याग्नेयं वै हिरण्यं यस्यैव हिरण्यं तेनैवैनद्विन्दति सावित्रो भवति सवितृप्रसूत एवैनद्विन्दति भूम्यै चरुर्भवत्यस्यां वा एतन्नश्यति यन्नश्यत्यस्यामेवैनद्विन्दतीन्द्रः ॥ ५ ॥ त्वष्टुस्सोममभीषहाऽपि-बत्स विष्वङ्व्यार्च्छत्स इन्द्रियेण सोमपीथेन व्यार्ध्यत स यदूर्ध्व-मुदवमीत्ते श्यामाका अभवन्त्स प्रजापतिमुपाधावत्तस्मा एतꣳ-सोमेन्द्रꣳ श्यामाकं चरुं निरवपत्तेनैवास्मिन्निन्द्रियꣳ सोमपीथमद-धाद्वि वा एष इन्द्रियेण सोमपीथेनर्ध्यते यस्सोमं वमिति यः सोमवामी स्यात्तस्मै ॥ ६ ॥ एतꣳ सोमेन्द्रꣳ श्यामाकं चरुं निर्वपेत्सोमं चैवेन्द्रं च स्वेन भागधेयेनोप धावति तावेवास्मि-न्निन्द्रियꣳ सोमपीथं धत्तो नेन्द्रियेण सोमपीथेन व्यृध्यते यत्सौम्यो भवति सोमपीथमेवाव रुन्धे यदैन्द्रो भव-तीन्द्रियं वै सोमपीथ इन्द्रियमेव सोमपीथमव रुन्धे श्यामाको भवत्येष वाव स सोमः ॥ ७ ॥ साक्षादेव सोमपीथमव रुन्धेऽग्नेयं

दात्रे पुरोडाशमष्टाकपालं निर्वपेदिन्द्राय प्रदात्रे पुरोडाशमेकादश-
कपालं पशुकामोऽग्निरेवास्मै पशून्प्रजनयति वृद्धानिन्द्रः प्र यच्छति
दधि मधु घृतमापो धाना भवन्त्येतद्वै पशूनाꣳ रूपꣳ रूपेणैव
पशूनव रुन्धे पञ्चगृहीतं भवति पाङ्क्ता हि पशवो बहुरूपं
भवति बहुरूपा हि पशवः ॥ ८ ॥ समृद्ध्यै प्राजापत्यं भवति
प्राजापत्या वै पशवः प्रजापतिरेवास्मै पशून्प्र जनयत्यात्मा वै
पुरुषस्य मधु यन्मध्वग्नौ जुहोत्यात्मानमेव तद्यजमानोऽग्नौ प्र
दधाति पङ्क्त्यौ याज्यानुवाक्ये भवतः पाङ्क्तः पुरुषः पाङ्क्ताः
पशव आत्मानमेव मृत्योर्निष्क्रीय पशूनव रुन्धे ॥ ९ ॥

இதில் மிருத்யுவாற் பயமுற்றவனுக்குச் செய்யும் இஷ்டி முதலானவைகள் கூறப்படுகின்றன.

இஷ்டியைப் விதிக்கப் புகழ்கின்றது

பிராமணம் 1

देवा वै मृत्योरबिभयुस्ते प्रजापतिमुपाधावन्तेभ्य एतां प्राजापत्यꣳ शतकृष्णलां निरवपत्तयैवैष्वमृतमदधात् ।

என்பது

உரை

தேவர்கள் மிருத்யுவுக்குப் பயந்து பிரமனை அடைந்தார்கள். அவர்களின் பொருட்டு பிரமன் நூறு பொன் குன்றிகளால் செய்யப்படும் (சதகிருஷ்ணலா) இஷ்டியைச் செய்து தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்தான் என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

यो मृत्योर्बिभीयात्तस्मा एतां प्राजापत्यꣳ शतकृष्णलां निर्वपेत्प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्नायुर्दधाति सर्वमायुरेति ।

என்பது

உரை.

அவ மிருத்துவால் தனக்குள்ள ஆயுள் குறைந்துவிடுமென்று பயப்படுகின்றவன் பிரசாபதி தேவதைக்கு நூறு பொன் கிருஷ்ணலை வைத்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

நூறு என்னும் எண்ணைப் புகழ்கின்றது

பிராமணம் 3.

शतकृष्णला भवति शतायुः पुरुषश्शतेन्द्रिय आयुष्येवेन्द्रिये प्रतितिष्ठति ।

என்பது

உரை.

மனிதர்களுக்கு வயது நூறாதலின் நூறு என்னும் எண் சிறப்புடையதாய் இது வாழ்நாளைத் தருகின்றது என்பதாம்.

பக்குவத் திரவியம் இன்னதென விதிக்கின்றது

பிராமணம் 4.

घृते भवत्यायुर्वै घृतममृतꣳ हिरण्यमायुश्चैवास्मा अमृतं च समीची दधाति ।

என்பது.

உரை.

ஆயுள் நெய்யாம். அல்லது, நெய்யால் உடம்பு புலன் பொறிகள் வலுவடைதலின் ஆயுளாம் என்பதாம்.

அவியெடுக்கும் அளவு விதிக்கப்படுகின்றது

பிராமணம் 5

चत्वारिचत्वारि कृष्णलान्यवद्यति चतुरवत्तस्याऽऽप्त्यै ।

என்பது

உரை.

நான்கு நான்கு துண்டுகளாக அவியை எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

எல்லா வேள்விச் செயலாளர்களுக்கும் ஒரே காலத்தில் எடுக்குங்கால், பிரமனுக்கும் எடுத்துக்கொடுக்க வேண்டுமென்று விதிக்கின்றது

பிராமணம் 6.

एकधा ब्रह्मण उप हरत्येकधैव यजमान आयुर्दधाति ।

என்பது

உரை.

பிரமனுக்கு ஒன்றாகவே சேர்த்து பொன் துண்டுகளெல்லாவற்றையும் எடுத்துக்கொடுத்தல் வேண்டும் என்பதாம்.

பிரமதேசசை விரும்புகின்றவனுக்கு விதி

பிராமணம் 7.

असावादित्यो न व्यरोचत तस्मै देवाः प्रायश्चित्तिमैच्छन्तस्मा एतꣳ सौर्यं चरुं निरवपन्तेनैवास्मिन्रुचमदधुर्यो ब्रह्मवर्चसकामस्स्यात्तस्मा एतꣳ सौर्यं चरुं निर्वपेदमुमेवाऽऽदित्यꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मि-न्ब्रह्मवर्चसं दधाति ब्रह्मवर्चस्येव भवति ।

என்பது.

உரை.

சூரியன் ஒருகாலத்தில் நன்றாய்ப் பிரகாசிக்காமல் இருந்தான். அப்பொழுது தேவர்கள் அதற்குப் பரிகாரத்தைத் தேடி அச்சூரியனின் பொருட்டு பொங்கல் செய்து அவ்விஷ்டியால் சூரியனிடத்தில் ஒளியை அளித்தார்கள். ஆகையால் யாதொருவன் பிரமதேசசை விரும்புகிறானோ அவன் சூரியனுக்குப் பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டும். இதனால் தனது அவிர்ப்பாகத்தால் வழிபாடு செய்யப்பெற்ற சூரியன் இவனுக்கு பிரம தேசசைப் கொடுக்கிறான் என்பது.

(மிருத்துபய முதலானவற்றிற்கு

அவியைச் சாதனஞ் செய்யுஞ் சாதகத்தை விதிக்கிறது

பிராமணம் 8.

उभयतो रुक्मौ भवत उभयत एवास्मिन्रुचं दधाति ।

என்பது

உரை

அவியை வேதியில் எடுத்துவைக்கும்போது பொங்கல்செய்த பாத்திரத்திற்கு மேலுங் கீழும் இரண்டு பொன்தகடுகளை வைத்து எடுத்துவைத்தல் வேண்டும். அது, இவனுக்கு இரு பக்கத்திலும் பிரகாசத்தைத் தருகின்றது என்பது.

பிரயாஜை செய்யும் நெய்யில் பொன்போட விதிக்கின்றது

பிராமணம் 9.

प्रयाजेप्रयाजे कृष्णलं जुहोति दिग्भ्य एवास्मै ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது

உரை.

பொன் தகடுகளைப் போட்டு ஐந்து பிரயாஜை யாகங்களிலும் ஓமஞ் செய்தல் வேண்டும் என்பதாம்

பொன் வேண்டியவனுக்கு இஷ்டிவிதி

பிராமணம் 10.

आग्नेयमष्टाकपालं निर्वपेत्सावित्रं द्वादशकपालं भूम्यै चरुं यः कामयेत हिरण्यं विन्देय हिरण्यं मोप नमेदिति यदाग्नेयो भवत्याग्नेयो वै हिरण्यं यस्यैव हिरण्यं तेनैवैनद्विन्दते सावित्रो भवति सवितृप्रसूत एवैनद्विन्दते भूम्यै चरुर्भवत्यस्यामेवैनद्विन्दत उपैनꣳ हिरण्यं नमति ।

என்பது

உரை.

சிறிது முயன்று பொன்னைப் பெற்றுக் கொண்டவனும், அப்பொன் வளருமாறுவிரும்பியவனும் அக்கினிக்கு எட்டுக்கபாலங்களில் புரோடாசமும், சவிதா தேவதைக்கு பன்னிரண்டு கபாலங்களில் புரோடாசமும், பூமிதேவிக்குப் பொங்கலும் செய்து யாகஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

மற்றொரு பயனின்பொருட்டு அவ்விஷ்டிவிதிக்கப்படுகின்றது

பிராமணம் 11.

वि वा एष इन्द्रियेण वीर्येणर्ध्यते यो हिरण्यं विन्दत एतामेव निर्वपेद्धिरण्यं वित्त्वा नेन्द्रियेण वीर्येण व्यृध्यते ।

என்பது

உரை.

பொருள் களவு போய்விடுமென்று கலங்கினவன் மேற்கூறிய மூன்று அவிகள் கொண்ட இஷ்டியைச் செய்தல் வேண்டு மென்பதாம்.

மீண்டும் மற்றொரு பயனின்பொருட்டு அதையே விதிக்கின்றது

பிராமணம் 12.

एतामेव निर्वपेद्यस्य हिरण्यं नश्येद्यदाग्नेयो भवत्याग्नेयं वै हिरण्यं यस्यैव हिरण्यं तेनैवैनद्विन्दति सावित्रो भवति सवितृप्रसूत एवैनद्विन्दति भूम्यै चरुर्भवत्यस्यां वा एतन्नश्यति यन्नश्यत्यस्यामेवैनद्विन्दति ।

என்பது.

உரை

பொன் கெட்டுப்போனவன் முற்கூறிய இஷ்டியையே செய்தல் வேண்டுமென்பதாம்.

(மிருத்து பயமுதலானவற்றிற்கு

சோமரசத்தை யருந்தி வாந்தி பண்ணினவனுக்கு இஷ்டி விதிக்கப்படுகின்றது

பிராமணம் 13.

इन्द्रस्त्वष्टुस्सोममभीषहाऽपिबत्स विष्वङ्व्यार्च्छत्स इन्द्रियेण सोमपीथेन व्यार्ध्यत स यदूर्ध्वमुदवमीत्ते श्यामाका अभवन्त्स प्रजापतिमुपाधावत्तस्मा एतꣳ सोमेन्द्रꣳ श्यामाकं चरुं निरवपत्तेनैवास्मिन्निन्द्रियꣳ सोमपीथमदधात्।

என்பது

உரை

பிரமன் செய்த யாகத்தில் பயமின்றி பலாத்காரமாய் சோமரசத்தை இந்திரன் அருந்தினான். அருந்திவிட்டு, பிரமனுக்குப் பயந்து நாலு திக்குக் களிலும் ஓடினான். ஓடிச் சுற்றியதால், அச்சோமரசத்தை வாந்தி பண்ணிவிட் டான். அது பூமியில் விழுந்து சாமை என்னுந் தானியமாயிற்று. பிறகு அவன் பிரமாவின் உபதேசத்தால், சோம இந்திர தேவதைகளுக்கு பொங்கல் செய்து யாகஞ்செய்து தன் வயிற்றிலேயே ஜீரணமாகும்படி சோமத்தை அருந்தினான் என்பதாம்.

விதிக்கின்றது

பிராமணம் 14.

वि वा एष इन्द्रियेण सोमपीथेनर्ध्यते यस्सोमं वमिति यस्सोमवामीस्यात्तस्मा एतꣳ सोमेन्द्रꣳ श्यामाकं चरुं निर्वपेत्सोमं चैवेन्द्रं च स्वेन भागधेयेनोप धावति तावेवास्मिन्निन्द्रियꣳ सोमपीथंधत्तो नेन्द्रियेण सोमपीथेन व्यृध्यते।

என்பது

உரை

காலைச் சவனமுதலியவைகளில் சோமரசத்தை யருந்தி வாந்திபண்ணிய வேள்வித்தலைவன்; சோமனுக்கும் இந்திரனுக்கும் சாமைப்பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

இரண்டு தேவதைகளையும்; வேள்விப்பொருளையும் புகழ்கின்றது

பிராமணம் 15.

यत्सौम्यो भवति सोमपीथमेवाव रुन्धे यदैन्द्रो भवतीन्द्रियं वै सोमपीथ इन्द्रियमेव सोमपीथमव रुन्धे श्यामाको भवत्येष वाव स सोमस्साक्षा-देव सोमपीथमव रुन्धे ।

என்பது.

உரை.

இத்தேவதைகளும் வேள்விக்குரிய பொருள்களும் சோமரசங் குடிக்க வினை வாங்கியெழாமல் கட்டுப்படுத்துகின்றன என்பதாம்.

பசுவை விரும்பியவனுக்கு விதி

பிராமணம் 16.

अग्नये दात्रे पुरोडाशमष्टाकपालं निर्वपेदिन्द्राय प्रदात्रे पुरोडाशमेकादशकपालं पशुकामोऽग्निरेवास्मै पशून्प्रजनयति वृद्धानिन्द्रः प्र यच्छति ।

என்பது

உரை.

பசுவை விரும்பியவன் கொடையாளியாகிய அக்கினிக்கும் இந்திரனுக்கும் எட்டுக் கபாலங்களும், பதினொரு கபாலங்களுஞ் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஐந்து அவியைக்கொண்ட மூன்றாவது அவியை விதிக்கின்றது

பிராமணம் 17.

दधि मधु घृतमापो धाना भवन्त्येतद्वै पशूनाꣳ रूपꣳ रूपेणैव पशूनव रुन्धे ।

என்பது

உரை.

தயிர், தேன், நெய், நீர், பொரி அரிசி என்னும் ஐந்து அவிகளையும் இந்த இஷ்டியில் மூன்றாவது அவியாகச் செய்தல் வேண்டும். இவற்றுள், தயிரும், நெய்யும் மாட்டிலிருந்து உண்டானதால் அது பசுவைக் கொடுக்கிறது. அவைகளுடன் சேர்ப்பதால் எல்லாவற்றிற்கும் அச் சாமர்த்தியம் இருக்கின்றது என்பது.

(மிருத்து பய முதலானவற்றிற்த இஷ்டி முதலின

இந்த அவியில் பல்வகைப் பொருள் சேர்ந்திருக்கிறதென்று புகழ்கின்றது

பிராமணம் 18.

पञ्चगृहीतं भवति पाङ्क्ता हि पशवो बहुरूपं भवति बहुरूपा हि पशवस्समृद्ध्यै ।

என்பது.

உரை.

ஐவகைப் பொருளாகக் கொண்டது ஐசுவரியம் நிறைதற் பொருட்டாம். பசுக்களும் பல்வகை நிறமுடையவைகளாயிருக்கின்றன என்பதாம்.

தேவதையை விதிக்கின்றது

பிரமணம் 19.

प्राजापत्यं भवति प्राजापत्या वै पशवः प्रजापतिरेवास्मै पशून्प्र जनयति ।

என்பது

உரை.

பிரசாபதி தேவதையாம். பிராசாபதியால் பசுக்கள் உண்டாகின்றன என்பதாம்.

'கிருதம் நபூதம்' 'உபேகூச்சந்திர' என்னும் இவ்விரண்டு இருக்குகளையும் விதிக்கின்றது

பிராமணம் 20.

आत्मा वै पुरुषस्य मधु यन्मध्वग्नौ जुहोत्यात्मानमेव तद्यजमानोऽग्नौ प्र दधाति पङ्क्तौ याज्यानुवाक्ये भवतः पाङ्क्तः पुरुषः पाङ्क्ताः पशव आत्मानमेव मृत्योर्निष्क्रीय पशूनव रुन्धे ।

என்பது.

தேனும் ஆன்மாவும் அரியதாமாதலின் ஆன்மா தேன்எனப்படுகின்றது. தேன் ஹோமத்தால் தீயில் விட்ட ஆன்மா பங்திச் சந்தத்தாற் கூறப்பட்டிருத்தலின் மிருத்துவை நீக்குகின்றது என்பதாம்.

இரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

வேள்வி கெடில் இஷ்டி)

மூன்றாவது அநுவாக விஷயச்சுருக்கம்.

तृतीये यज्ञविभ्रष्टो यःकामं प्राप्तुमिच्छति ।
ब्रह्मवर्चसकामोयः क्लीबस्त्वाद्यो बिभेतिच
ग्रामकामो ब्राह्मणो यो विशस्स्थापनमिच्छति ॥ २ ॥

எக்ஞத்தைக் கெடுத்துவிட்டவன், இச்சித்ததை அடைய விரும்பியவன் பிரமதேஜஸை விரும்பியவன், நபும்சகன், கிராமத்தை விரும்பியவன், வைசியனை வணங்கச்செய்ய விரும்பியவன் என்னுமிவர்களுக்கு இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்
மூன்றாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் நாற்பது பதங்களைக் கொண்டது.

வேள்விகெடுதல் முதலானவைகளுக்கு இஷ்டிகளை விதிக்கும் பிராமணங்கள்.

देवा वै सत्रमासतर्द्धिपरिमितं यशस्कामास्तेषा॰ सोम॰ राजानं यश आर्छत्स गिरिमुदैत्तमग्निरनूदैत्तावग्नीषोमौ समभवतां ताविन्द्रो यज्ञविभ्रष्टोऽनु परैत्तावब्रवीद्याजयतं मेति तस्मा एतामिष्टिं निरव-पतामाग्नेयमष्टाकपालमैन्द्रमेकादशकपाल॰ सौम्यं चरुं तयैवास्मि-न्तेजः ॥ १ ॥ इन्द्रियं ब्रह्मवर्चसमधत्तां यो यज्ञविभ्रष्टस्स्यात्तस्मा एतामिष्टिं निर्वपेदाग्नेयमष्टाकपालमैन्द्रमेकादशकपाल॰ सौम्यं चरुं यदाग्नेयो भवति तेज एवास्मिन्तेन दधाति यदैन्द्रो भवतीन्द्रिय-मेवास्मिन्तेन दधाति यत्सौम्यो ब्रह्मवर्चसं तेनाऽऽग्नेयस्य च सौम्यस्य चैन्द्रे समाश्लेषयेत्तेजश्चैवास्मिन्ब्रह्मवर्चसं च समीची ॥ २ ॥ दधात्यग्नीषोमीयमेकादशकपालं निर्वपेद्यं कामो नोपन-मेदाग्नेयोवै ब्राह्मणस्स सोमं पिबति स्वामेव देवता॰ स्वेन भाग-

धेयेनोप धावति सैवैनं कामेन समर्धयत्युपैनं कामो नमत्य-
ग्नीषोमीयमष्टाकपालं निर्वपेद्ब्रह्मवर्चसकामोऽग्नीषोमावेव स्वेन
भागधेयेनोप धावति तावेवास्मिन्ब्रह्मवर्चसं धत्तो
ब्रह्मवर्चस्येव ॥ ३ ॥ भवति यदष्टाकपालस्तेनाऽऽग्नेयो यच्छ्यामा-
माकस्तेन सौम्यस्समृद्ध्यै सोमाय वाजिने श्यामाकं चरुं निर्व-
पेद्यः क्लैब्याद्बिभीयाद्रेतो हि वा एतस्माद्वाजिनमपक्रामत्यथैष
क्लैब्याद्बिभाय सोममेव वाजिनꣳ स्वेन भागधेयेनोप धावति स
एवास्मिन्रेतो वाजिनं दधाति न क्लीबो भवति ब्राह्मणस्पत्यमेका-
दशकपालं निर्वपेद्ग्रामकामः ॥ ४ ॥ ब्रह्मणस्पतिमेव स्वेन भाग-
धेयेनोप धावति स एवास्मै सजातान्प्रयच्छति ग्राम्येव भवतिगणवती
याज्यानुवाक्ये भवतस्सजातैरेवैनं गणवन्तं करोत्येतामेव निर्वपेद्यः
कामयेत ब्रह्मन्विशं वि नाशयेयमिति मारुती याज्यानुवाक्ये कुर्या-
द्ब्रह्मन्नेवविशं वि नाशयति ॥ ५ ॥

வேள்வி யழிந்ததற்கு இஷ்டி விதிப்பதன் பொருட்டு அதைப்புகழ்கின்றது

பிராமணம் 1.

देवा वै सत्रमासतर्द्धिपरिमितं यशस्कामास्तेषाꣳ सोमꣳ राजानं यश आर्च्छत्स गिरिमुदैत्तमग्निरनूदैत्तावग्नीषोमौ समभवतां ताविन्द्रो यज्ञविभ्रष्टोऽनु परैत्तावब्रवीद्याजयतं मेतितस्मा एतामिष्टिं निरवपतामाग्नेयमष्टाकपालमैन्द्रमेकादशकपालꣳ सौम्यं चरुं तयैवास्मिन्तेज इन्द्रियं ब्रह्मवर्चसमधत्ताम् ।

என்பது

உரை

கீர்த்தியைக் குறித்து தேவர்கள் ஆயிரம் வருடம்வரை சத்திரயாகத்தை அநுட்டித்து அதன் பயனாக சோமத்தை யடைந்தார்கள். அச் சோமம் கீர்த்தியுடன் மலைக்குகைக்குச் சென்றுவிட்டது. அதனுடன்கூடவே அக்கினியும் சென்றது. பிறகு இந்திரன் அதன் பயனையடைதற்பொருட்டு மூன்று அவிகளைக் கொண்ட இஷ்டியைச் செய்து கீர்த்தி முதலிய அப் பயன்களை யடைந்தனன் என்பது.

மேலே புகழ்ந்த இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

यो यज्ञविभ्रष्टस्स्यात्तस्मा एतामिष्टिं निर्वपेदाग्नेयमष्टाकपालमैन्द्रमेकादश-
कपालꣳ सौम्यं चरुं यदाग्नेयो भवति तेज एवास्मिन्तेन दधाति
यदैन्द्रो भवतीन्द्रियमेवास्मिन्तेन दधाति यत्सौम्यो ब्रह्मवर्चसं तेन ।

என்பது.

உரை.

எக்ஞஞ் செய்யத் தொடங்கிய பிறகு அது கெட்டுவிடில், அக்கினிக்கும், இந்திரனுக்கும் முறையே எட்டுக்கபாலங்களிலும், பதினொரு கபாலங்களிலும் புரோடாசமும், சோமனுக்குப் பொங்கலுஞ் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஈண்டு, இஷ்டி-பசு, சோமங்களின் அநுட்டானங்கள் அதனதன் காலத்திற் செய்யப்படாமையே எக்ஞங் கேடடைதலாம் என்பதை யுணர்க.

இதில் சில விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 3.

आग्नेयस्य च सौम्यस्य चैन्द्रे समाश्लेषयेत्तेजश्चैवास्मिन्ब्रह्मवर्चसं च
समीची दधाति ।

என்பது.

உரை

அக்கினி சோமன் என்னும் தேவதைகளுடைய அவியை, இந்திர அவியுடன் சேர்த்திருக்கும்படி வைத்தல் வேண்டும். அதனால், எசமானனுக்கு, ஆக்ஞை யிடுமாற்றலும், மறையோதல் கேட்டல் என்னுஞ் சம்பத்தும் நிறைய உண்டாகின்றது என்பதாம்.

விரும்பிய பொருள் கிடைத்தற் பொருட்டு மற்றொரு இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 4.

अग्नीषोमीयमेकादशकपालं निर्वपेद्यं कामो नोपनमेदाग्नेयो वै ब्राह्मणः स सोमं पिबति स्वामेव देवताꣳ स्वेन भागधेयेनोप धावति सैवैनं कामेन समर्धयत्युपैनं कामो नमति ।

என்பது.

உரை.

தான் விரும்பிய பொருள் கிடைக்கப்பெறாதவன், அக்கினி சோமர்களுக்கு பதினொரு கபாலங்களில் புரோடாசஞ் செய்து யாகஞ் செய்வானாக என்பதாம். இவை இரண்டும் பிராமண தேவதைகள்.

பிரம தேசசின் பொருட்டு, சாமைப் புரோடாசத்தை விதிக்கின்றது

பிராமணம் 5.

अग्नीषोमीयमष्टाकपालं निर्वपेद्ब्रह्मवर्चसकामोऽग्नीषोमावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मिन्ब्रह्मवर्चसं धत्तो ब्रह्मवर्चस्येव भवति यदष्टाकपालस्तेनाऽऽग्नेयो यच्छ्यामाकस्तेन सौम्यस्समृद्ध्यै ।

என்பது.

உரை

பிரமதேசசை விரும்பியவன், அக்கினி சோம தேவதைகட்கு எட்டுக் கபாலங்களில் சாமையரிசியிற் புரோடாசஞ் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஆண் தன்மை யில்லாமை நீங்குதற்கு இஷ்டி விதி.

பிராமணம் 6.

सोमाय वाजिने श्यामाकं चरुं निर्वपेद्यः क्लैब्याद्विभीयाद्रेतो हि वा एतस्माद्वाजिनमपक्रामत्यथैष क्लैब्याद्विभाय सोममेव वाजिनꣳ स्वेन भागधेयेनोप धावति स एवास्मिन्रेतो वाजिनं दधाति न क्लीबो भवति ।

என்பது.

உரை.

மக்களையுண்டாக்கும் (புணர்ச்சியில்) வன்மையில்லாதவன் புத்திரப் பேற்றிற்குக் காரணமாகிய அன்னரசத்தையுடைய சோமன்பொருட்டு சாமைப் பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

மற்றோர் இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 7.

ब्राह्मणस्पत्यमेकादशकपालं निर्वपेद्ग्रामकामो ब्रह्मणस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै सजातान्प्र यच्छति ग्राम्येव भवति।

என்பது,

உரை

கிராமத்தை விரும்பியவன் பிரமனுக்கு பதினொரு கபாலங்களில் புரோடாசஞ் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

இதில்; 'கணாநாம் த்வா' ஸஜேஜ்ஜநேந; என்னும் இரண்டு இருக்கு மந்திரங்களையும் ஓதல் வேண்டு மென்று விதிக்கின்றது.

பிராமணம் 8.

गणवती याज्यानुवाक्ये भवतस्सजातैरेवैनं गणवन्तं करोति ।

என்பது

உரை

'கண:' என்னுஞ் சொல்லைக்கொண்ட இரண்டு இருக்குக்களே இதற்கு யாஜ்ய புரோநுவாக்கியங்களாகின்றன என்பதாம்.

தனமிகுதியால் வணிகன் அந்தணனை மீறி நடக்கில் அவனை வசப்படுத்த விதி

பிராமணம் 9.

एतामेव निर्वपेद्यःकामयेत ब्रह्मन्विशं वि नाशयेयमिति ।

என்பது.

உரை

வணிகனுடைய ஆணவத்தைப் போக்கி தனது வசஞ் செய்துகொள்ள விரும்பிய அந்தணன் முற்கூறிய யாகத்தையே செய்தல் வேண்டுமென்பதாம்.

யாஜ்யா புரோநுவாக்கியங்களை விதிக்கின்றது

பிராமணம் 10.

मारुती याज्यानुवाक्ये कुर्याद्ब्रह्मन्नेव विशं विनाशयति ।

என்பது.

உரை.

மாருதி தேவதைகளின் சம்பந்தமான யாஜ்ய அநுவாக்கியங்கள் இதற்கு உரியன என்பதாம்.

மூன்றுவது அநுவாகம்

முற்றிற்று

நான்காம் அநுவாகவிடயச்சுருக்கம்

स्वर्गकामो दानकामस्सभांगन्तुंयइच्छति ।

राजन्यो ब्राह्मणश्च द्वौयौ स्यातामनुजावरौ ॥

तुर्येऽनुवाक एतेषा मान्नाता इष्टयः क्रमात् ॥ १ ॥

சுவர்க்கத்தை விரும்பியவன், தானத்தை விரும்பியவன், அரசன், அந்தணன், மேம்மாட்டடைவதற்கு இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

சுவர்க்க இச்சை முதலியவற்றை யுடையோர்கட்கு இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன.

अर्यम्णे चरुं निर्वपेत्सुवर्गकामोऽसौ वा आदित्योऽर्यमाऽर्यमण मेव स्वेन भागधेयेनोप धावति स एवैनᳲ सुवर्गं लोकं गमयत्य- र्यम्णे चरुं निर्वपेद्यः कामयेत दानकामा मे प्रजास्स्युरित्यसौ वा आदित्योऽर्यमा यः खलु वै ददाति सोऽर्यमाऽर्यमणमेव स्वेन

விருப்புடையவனுக்கு இஷ்டி)

भागधेयेनोप धावति स एव ॥ १ ॥ असौ दानकामाः प्रजाः करोति दानकामा अस्मै प्रजा भवन्त्यर्यम्णे चरुं निर्वपेद्यः कामयेत स्वस्ति जनतामियामित्यसौ वा आदित्योऽर्यमाऽर्यमणमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं तद्गमयति यत्र जिगमिषतीन्द्रो वै देवानामानुजावर आसीत्स प्रजापतिमुपाधावत्तस्मा एतमैन्द्रमानुषूकमेकादशकपालं निः ॥ २ ॥ अवपत्तेनैवैनमग्रं देवतानां पर्यण-यद्बुध्नवती अग्रवती याज्यानुवाक्ये अकरोद्बुध्नादेवैनमग्रं पर्यणयद्यो राजन्य आनुजावरस्स्यात्तस्मा एतमैन्द्रमानुषूकमेकादशकपालं निर्वपेदिन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनमग्रꣳ समानानां परि णयति बुध्नवती अग्रवती याज्यानुवाक्ये भवतो बुध्नादेवैनमग्रम् ॥ ३ ॥ परि णयत्यानुषूको भवत्येषा ह्येतस्य देवता य आनुजावरस्समृद्ध्यै यो ब्राह्मण आनुजावरस्स्यात्तस्मा एतं बार्हस्पत्यमानुषूकं चरुं निर्वपेद्बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनमग्रꣳ समानानां परि णयति बुध्नवती अग्रवती याज्यानुवाक्ये भवतो बुध्नादेवैनमग्रं परि णयत्यानुषूको भवत्येष ह्येतस्य देवता य आनुजावरस्समृद्ध्यै ॥ ४ ॥

ஸ்வர்க்கத்தை யடையவிரும்பியவனுக்கு இஷ்டி விதி

பிராமணம். 1.

अर्यम्णे चरुं निर्वपेत्सुवर्गकामोऽसौ वा आदित्योऽर्यमाऽर्यमणमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनꣳ सुवर्गं लोकं गमयति ।

என்பது

உரை

சுவர்க்கத்தை யுடைய விரும்பியவன், அரிய மன், என்னுந் தேவதைக்குப் பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

தானம் வாங்க விரும்பியவனுக்கு விதி

பிராமணம் 2

अर्यम्णे चरुं निर्वपेद्यः कामयेत दानकामा मे प्रजास्स्युरित्यसौ वा आदित्योऽर्यमा यः खलु वै ददाति सोऽर्यमाऽर्यमणमेव स्वेन भागधेयेनोप धावति स एव स्मै दानकामाः प्रजाः करोति दानकामा अस्मै प्रजा भवन्ति ।

என்பது

உரை.

பிறர் ஈவதைப் பெறுவதற்கு விருப்புடையவன் முற்கூறிய யாகத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம். கொடுப்போன் இரவிபோல் கீர்த்திவாய்ந்தவனாதலின் அரிய மன் என்னும் இரவிக்கு அவன் யாகஞ் செய்தல் வேண்டு மெனல் விதியாம் என்பது.

சபையில் வெற்றிபெற விரும்பியவனுக்கு விதி

பிராமணம் 3.

अर्यम्णे चरुं निर्वपेद्यः कामयेत स्वस्ति जनतामियामित्यसौ वा आदित्योऽर्यमाऽर्यमणमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं तद्गमयति यत्र जिगमिषति ।

என்பது.

உரை

சங்கத்தில் தடையின்றி வெற்றிபெற விரும்பியவன் முன்போல் யாகஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

அறிஞர் ஒத்தார்களுள் தாழ்மையின்றி மேன்மையடைய விரும்பியவனுக்கு விதித்தற்பொருட்டு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 4

इन्द्रो वै देवानामानुजावर आसीत्स प्रजापतिमुपाधावत्तस्मा एतमैन्द्रमानुषूकमेकादशकपालं निरवपत्तेनैवैनमग्रं देवतानां पर्यणयद्बुध्नवती अग्रवती याज्यानुवाक्ये अकरोद्बुध्नादेवैनमग्रं पर्यणयत् ।

என்பது

விருப்புடையவனுக்கு இஷ்டி)

உரை

இந்திரன், தேவர்களுக்குள் மிகத்தாழ்ந்தவனாயிருந்து, பிறகு, அறுத்து விட்ட நெற்பயிரின் கட்டையில் மீண்டுந் தளிர்த்து விளைந்த நெல்லரிசியைக் கொண்டு பிரமனுக்குப் புரோடாசஞ் செய்து யாகம் பண்ணி மேன்மையை யடைந்தனன் என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 5.

यो राजन्य आनुजावरस्स्यात्तस्मा एतमैन्द्रमानुषूकमेकादशकपालं निर्वपेदिन्द्रमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनमग्रं समानानांपरि-णयति वुध्नवती अग्रवती याज्यानुवाक्ये भवतो वुध्नादेवैनमग्रं परि-णयत्यानुषूको भवत्येषा ह्येतस्य देवता य आनुजावरस्समृद्ध्यै ।

என்பது

உரை.

அரசனுக்குள் மிகத் தாழ்ந்த நிலைமையுடையவன் மேன்மைபெற விரும்பில், முன் சொல்லிய நெல்லரிசியால் பதினொரு கபாலங்களில் புரோடாசஞ் செய்து இந்திரனுக்கு யாகஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

அந்தணன் மேன்மையடைய விதி

பிராமணம் 6.

यो ब्राह्मण आनुजावरस्स्यात्तस्मा एतं बार्हस्पत्यमानुषूकं चरुं निर्वपे-द्बृहस्पतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनमग्रं समानानां परिणयति वुध्नवती अग्रवती याज्यानुवाक्ये भवतो बुध्नादेवैनमग्रं परिणयत्यानुषूको भवत्येषा ह्येतस्य देवता य आनुजावरस्समृद्ध्यै ।

என்பது

உரை.

அந்தணர்கட்குள் மிகத்தாழ்ந்தவன் மேன்மையடைய விரும்பில், முன் போல் நெல்லரிசியால் பொங்கல் செய்து பிருகற்பதி தேவதைக்கு யாகஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

நான்காம் அநுவாகம்

முடிந்தது

ஐந்தாவது அநுவாக விடயச்சுருக்கம்

इष्टिर्यक्ष्म गृहीतस्य पञ्चमे समुदीरिता ॥

எக்ஷ்ம வியாதியுடையவனுக்கு இஷ்டி விதிக்கப்படுகின்றது என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் பதின்மூன்று பதங்களைக் கொண்டது.

காசநோய் கொண்டவனுக்கு இஷ்டி விதியைக் கூறுகின்றது.

प्रजापतेस्त्रयस्त्रिꣳशद्दुहितर आसन्तास्सोमाय राज्ञेऽददात्तासाꣳ-
रोहिणीमुपैत्ता ईर्ष्यन्तीः पुनरगच्छन्ता अन्वैत्ताः पुनरयाचत ता
अस्मै न पुनरददात्सोऽब्रवीदृतममीष्व यथा समावच्छ उपैष्या-
म्यथ ते पुनर्दास्यामीति स ऋतमामीत्ता अस्मै
पुनरददात्तासाꣳ रोहिणीमेवोप ॥ १ ॥ ऐत्तं यक्ष्म
आर्छद्राजानं यक्ष्म आरदिति तद्राजयक्ष्मस्य जन्म यत्पापीयानभ-
वत्तत्पापयक्ष्मस्य यज्जायाभ्योऽविन्दत्तज्जायेन्यस्य य एवमेतेषां
यक्ष्माणां जन्म वेद नैनमेते यक्ष्मा विन्दन्ति स एता एव नमस्य-
न्नुपाधावत्ता अब्रुवन्वरं वृणामहै समावच्छ एव न उपाय इति
तस्मा एतम् ॥ २ ॥ आदित्यं चरुं निरवपन्तेनैवैनं पापात्स्रामादमु-
ञ्चन्यः पापयक्ष्मगृहीतस्स्यात्तस्मा एतमादित्यं चरुं निर्वपेदादि-
त्यानेव स्वेन भागधेयेनोप धावति त एवैनं पापात्स्रामान्मुञ्चन्त्य-

காசநோய்க்கு இஷ்டி)

मावास्यायां निर्वपेदमुमेवैनमाप्यायमानमन्वा प्याययति नवोनवो भवति जायमान इति पुरोनुवाक्या भवत्यायुरेवास्मिन्तया दधाति यमादित्या अंशुमाप्याययन्तीति याज्यैवैनमेतया प्याययति ॥३॥

காசவியாதி யுடையவனுக்கு இஷ்டியை விதிப்பதற்கு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 1.

प्रजापतेस्त्रयस्त्रिंशद्दुहितर आसन्तास्सोमाय राज्ञेऽददात्तासाꣳ रोहिणीमुपैत्ता ईर्ष्यन्तीः पुनरयाचत ता अस्मै न पुनरददात्सोऽब्रवीदृतमीष्व यथा समावच्छ उपैष्याम्यथ ते पुनर्दास्यामीति स ऋतमामीत्ता अस्मै पुनरददात्तासाꣳ रोहिणीमेवोपैत्तं यक्ष्म आर्छद्राजानं यक्ष्म आरदिति तद्राजयक्ष्मस्य जन्म यत्पापीयानभवत्तत्पापयक्ष्मस्य जन्म यज्जायाभ्योऽविन्दत्तज्जायेन्यस्य य एवमेतेषां यक्ष्माणां जन्म वेद नैनमेते यक्ष्मा विन्दन्ति स एता एव नमस्यन्नुपाधावत्ता अब्रुवन्वरं वृणामहै समावच्छ एव न उपाय इति तस्मा एतमादित्यं चरुं निरवपन्तेनैवैनं पापात्स्रामादमुञ्चन् ।

என்பது.

உரை

பிரசாபதிக்கு முப்பத்துமூன்று பெண்கள் இருந்தார்கள்; அவர்களைச் சந்திரனுக்கு மணஞ் செய்து கொடுத்தனன். அவன், மற்றப் பெண்களிடத்துக் குறைந்த விருப்புடையனாய் உரோகணி என்பவளிடத்தில் மாத்திரம் மிக விருப்புடையவனாய் அவளை ஆதரித்து வந்தனன். அதைக்கேட்ட பிரசாபதி வெகுண்டு, 'க்ஷயரோகம்' என்னும் காச வியாதி பிடிக்குமாறு சந்திரனுக்குச் சாபமிட்டனன். பிறகு சந்திரன், ஆதித்தனுக்குப் பொங்கலிட்டு யாகஞ் செய்து அந் நோயைப் போக்கிக்கொண்டனன் என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

यः पापयक्ष्मगृहीतस्स्यात्तस्मा एतमादित्यं चरुं निर्वपेदादित्यानेव स्वेन भागधेयेनोप धावति त एवैनं पापात्स्रामान्मुञ्चन्ति ।

என்பது

உரை.

காசநோய் கொண்டவன், பொங்கல் செய்து ஆதித்தனுக்கு யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

பௌர்ணிமையை விலக்குதற்கு விதி

பிராமணம் 3.

अमावास्यायां निर्वपेदमुमेवैनमाप्यायमानमन्वाप्याययति ।

என்பது

உரை.

அமாவாசையில் இவ்விஷ்டியைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

நான்காம் பிரபாடகத்தின் ஈற்றிற் கூறப்பட்ட இரண்டு இருக்குகளை விதிக்கின்றது

பிராமணம் 4.

नवोनवो भवति जायमान इति पुरोनुवाक्या भवत्यायुरेवास्मिन्तया दधाति यमादित्या अꣳशुमाप्याययन्तीति याज्यैनमेतया प्याययति ।

என்பது

உரை.

முதலாவது இருக்கின் முடிவில் 'தீர்க்கமாயு:' என்று கூறியிருத்தலின் அதை ஓதலால் ஆயுளையடைகின்றான். அமாவாசையில் சந்திரகலை, யானது ஆதித்தனையடைந்து பிறகு ஆதித்தனிடத்திலிருந்து அடையப் பெறுதலின் சந்திரனுக்குச் சிறப்புக்கூறுதல் ஆதித்தனுக்கே சிறப்புக் கூறுவதாம் என்று கொண்டு அப்பொங்கல் ஆதித்தனுடைய பொங்கலுக்கு வேறுவதில்லை என்க. இரண்டாவது இருக்கில் " ஆப்யாயந்தி, அதாவது குளிப்பாட்டுகின்றார்கள் என்று கூறியிருத்தலின் குளித்தல் பொருந்துமாறறிக என்பதாம்.

ஐந்தாம் அநுவாகம்

முற்றிற்று.

ஆறாம் அநுவாக விடயச்சுருக்கம்.

यन्नाद्य कामस्य त्रिधातुर्यागर्इरितः ।

அன்னமருந்தும் ஆற்றலை அடைய விரும்பியனுக்கு இஷ்டி விதிக்கப்படுகின்றது என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் இருபத்தாறு பதங்களைக் கொண்டது.

அன்ன மருந்தும் ஆற்றலையடைய விரும்பியவனுக்கு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்

प्रजापतिर्देवेभ्योऽन्नाद्यं व्यादिशत्सोऽब्रवीद्यदिमाँल्लोकानभ्यतिरिच्याते तन्मामासदिति तदिमाँल्लोकानभ्यत्यरिच्यतेन्द्रꣳ राजानमिन्द्रमधिराजमिन्द्रꣳ स्वराजानं ततो वै स इमाँल्लोकाꣳस्त्रेधाऽदुहत्तत्त्रिधातोस्त्रिधातुत्वं यं कामयेतान्नादः स्यादिति तस्मा एतं त्रिधातुं निर्वपेदिन्द्राय राज्ञे पुरोडाशम् ॥ १ ॥ एकादशकपालमिन्द्रायाधिराजायेन्द्राय स्वराज्ञेऽयं वा इन्द्रो राजाऽयमिन्द्रोऽधिराजोऽसाविन्द्रः स्वराडिमानेव लोकान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति यथा वत्सेन प्रत्तां गां दुह एवमेवेमाँल्लोकान्प्रत्तान्कामम् अन्नाद्यं दुह उत्तानेषु कपालेष्वधि श्रयत्ययातयामत्वाय त्रयः पुरोडाशा भवन्ति त्रय इमे लोका एषां लोकानामाप्त्या उत्तरउत्तरो ज्यायान्भवत्येवमिव हीमे लोकास्समृद्ध्यै सर्वेषामभिगमयन्नव द्यत्यच्छम्बट्कारं व्यत्यासमन्वाहानिर्दाहाय ॥ २ ॥

இஷ்டியை விதித்தற் பொருட்டுப் புகழ்கின்றது

பிராமணம் 1.

प्रजापतिर्देवेभ्योऽन्नाद्यं व्यादिशत्सोऽब्रवीद्यदिमाँल्लोकानभ्यतिरिच्यातै तन्ममासदिति तदिमाँल्लोकानभ्यभ्यतिरिच्यतेन्द्रꣳ राजानमिन्द्रमधिराजमिन्द्रꣳ स्वराजानं ततो वै स इमाँल्लोकाꣳस्त्रेधाऽदुहत्तत्त्रिधातोस्त्रिधातुत्वम्।

என்பது

உரை.

பிரசாபதி, தேவர்கட்குரிய உணவுகளை இது இன்னாருக்கு, இது இன்னாருக்கு என்றிவ்வாறு பகுத்துக் கொடுத்துவிட்டு, அதையருந்த முன்வந்த தேவர்களிடம் மூன்றுலகங்களைக் கவர்ந்துகொண்டு சாரமாய் நிற்கும் மீந்த அன்னம் எம்பொருட்டாம் என்று கூறினன். பிறகு, பிரசாபதி மூன்றுலகங்களின் சாரத்தைக் கவர்ந்து கொண்டனன். அந்த மூன்று அவிகள் (புரோடாசங்கள்) உள்ளயாகம் மூன்று தாதுக்களையுடையதாம் என்பது.

அன்னமருந்தும் விருப்புடையவனுக்கு விதி

பிராமணம் 2.

यं कामयेतान्नादस्स्यादिति तस्मा एतं त्रिधातुं निर्वपेदिन्द्राय राज्ञे पुरोडाशमेकादशकपालमिन्द्रायाधिराजायेन्द्राय स्वराज्ञेऽयं वा इन्द्रो राजाऽयमिन्द्रोऽधिराजोऽसाविन्द्रस्स्वराडिमानेव लोकान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मा अन्नं प्र यच्छन्त्यन्नाद एव भवति यथा वत्सेन प्रत्तां गां दुह एवमेवे माँल्लोकान्प्रत्तान्काममन्नाद्यं दुहे।

என்பது.

உரை.

வேள்வித் தலைவன் நன்கு அன்னமருந்துவோனாதல் வேண்டும் என்று விரும்பும் வேட்போன், அரசனாகிய இந்திரன், அதிராசனாகிய இந்திரன் சுவராட் என்னும் இந்திரன் மூன்றுலகங்கட்கும் இறைவர்களான மூவர்கட்கும், பதினொரு கபாலங்களில் புரோடாசங்கள் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

தலைமேலாய் கபாலம் வைக்குமாறு விதிக்கின்றது

பிராமணம் 3.

उत्तानेषु कपालेष्वधि श्रयत्ययातयामत्वाय।

என்பது

உரை.

தலைமை யாகத்தில் தலைகீழாகவுள்ள அகல்களில் புரோடாசங்களை வைத்துச் சுடுவதுபோற் செய்யாமல் இதில் தலைமேலாயுள்ள அகல்களில் புரோடாசஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

புரோடாசத் தொகையின் விதி

பிராமணம் 4.

त्रयः पुरोडाशा भवन्ति त्रय इमे लोका एषां लोकानामाप्त्यै।

என்பது

உரை.

மூன்று புரோடாசங்கள் ஆகின்றன என்பதாம்.

மேலே மேலே பெரியதாய் இருக்கவேண்டும் என்று விதிக்கின்றது

பிராமணம் 5.

उत्तरउत्तरो ज्यायान्भवत्येवमिवहीमे लोकास्समृद्ध्यै।

என்பது

உரை.

பூலோகத்திலும் விண்ணுலகம் பெரியது, விண்ணுலகத்திலும் சுவர்க்கம் பெரியது ஆதலின் என்பதாம்.

புரோடாசத்தைக் கிள்ளி யெடுப்பதை விதிக்கின்றது

பிராமணம் 6.

सर्वेषामभिगमयन्नवद्यत्यच्छम्बट्कारम्।

என்பது

உரை.

ஒன்றின்மேல் ஒன்றாக உள்ள புரோடாசங்களில் ஒன்றும் வீண் போகாமல் ஒன்றாகவே கையைக்கொண்டெடுத்துக் கொள்ளல் வேண்டுமென்பதாம்.

யாஜ்யா புரோநுவாக்கியங்களின் விதி

பிராமணம் 7.

व्यत्यासमंवाद्यानिर्दाहाय ।

என்பது

உரை.

இந்த ஆறு யாஜ்யா புரோநுவாக்கியங்களையே மாறி ஓதல் வேண்டுமென்பதாம்.

ஆறுவது அநுவாகம்

முற்றிற்று

ஏழாவது அநுவாகம் விடயச் சுருக்கம்

सप्तमे सर्व पृष्ठोक्ता वीर्यकामाभि शस्तयोः ॥

வன்மையை விரும்பியவனுக்கு 'சருவ பிருஷ்டியம்' என்னும் இஷ்டியை விதிக்கின்றது என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் முப்பத்தெட்டு பதங்களைக் கொண்டது.

இந்திரிய ஆற்றல், உடம்பின் ஆற்றல்களை விரும்பியவனுக்கு இஷ்டியை விதிக்கும் பிராமணம்

देवासुरास्संयत्ता आसन्तान्देवानसुरा अजयन्ते देवाः पराजि-
ग्याना असुराणां वैश्यमुपाऽऽयन्तेभ्य इन्द्रियं वीर्यमपाक्रामत्तदि-
न्द्रोऽचायत्तदन्वपाक्रामत्तदवरुधं नाशक्नोत्तदस्मादभ्यर्धोऽचरत्स

प्रजापतिमुपाधावत्तमेतया सर्वपृष्ठयाऽयाजयत्तयैवास्मिन्निन्द्रियं वीर्यं मदधाय इन्द्रियकामः ॥ १ ॥ वीर्यं कामस्स्यात्तमेतया सर्वपृष्ठया याजयेदेता एव देवतास्स्वेन भागधेयेनोप धावति ता एवास्मिन्निन्द्रियं वीर्यं दधति यदिन्द्राय राथंतराय निर्वपति यदेवाग्नेस्तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय बार्हताय यदेवेन्द्रस्य तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय वैरूपाय यदेव सवितुस्तेजस्तत् ॥ २ ॥ एवाव रुन्धे यदिन्द्राय वैराजाय यदेव धातुस्तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय शाक्कराय यदेव मरुतां तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय रैवताय यदेव बृहस्पतेस्तेजस्तदेवाव रुन्ध एतावन्ति वै तेजांसि तान्येवाव रुन्ध उत्तानेषु कपालेष्वधि श्रयत्ययातयामत्वाय द्वादशकपालः पुरोडाशः ॥ ३ ॥ भवति वैश्वदेवत्वाय समन्तं पर्यवद्यति समन्तमेवेन्द्रियं वीर्यं यजमाने दधाति व्यत्यासमन्वाहानिर्दाहायाश्व ऋषभो वृष्णिर्वस्तस्सा दक्षिणा वृषत्वायैतयैव यजेताभिशस्यमान एताश्चेद्वा अस्य देवता अन्नमदन्त्यदन्त्युवेवास्य मनुष्याः ॥ ४ ॥

இஷ்டியை விதிப்பதன் பொருட்டுப் புகழ்கின்றது

பிராமணம் 1

देवासुरास्संयत्ता आसन्तेदेवानसुरा अजयन्ते देवाःपराजिग्याना असुराणां वैश्यमुपाऽऽयन्तेभ्य इन्द्रियं वीर्यमपाक्रामत्तदिन्द्रोऽचायत्तदन्वपाक्रामत्तदवरुधं नाशक्नोत्तदस्मादभ्यर्धोऽचरत्स प्रजापतिमुपाधावत्तमेतया सर्वपृष्ठयाऽयाजयत्तयैवास्मिन्निन्द्रियं वीर्यमदधात् ।

என்பது

உரை

தேவர்களும் அசுரர்களும் போர்புரிந்து தேவர்கள் அசுரர்களுக்கு அடிமையாயினர், அப்போது, தேவர்களின் இந்திரியம் உடம்பு என்னுமிரண்டின் ஆற்றல்களும் போய்விட்டன. இந்திரன் அதையுணர்ந்து அவற்றைப் போகாமல் தடுத்தும் அவை நிற்கவில்லை. பிறகு இந்திரன் தனது வன்மையில் பாதியளித்தனன். மற்றும், பிரசாபதிக்கு, பல்வகைத் தோத்திரங்கள் பாடப்பெறும் சருவப்பிருஷ்டிய இஷ்டி என்னும் யாகஞ் செய்து எல்லா வன்மைகளையும் பெற்றனன் என்பதாம்.

அவ்விஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

य इन्द्रियकामो वीर्यकामस्स्यात्तमेतया सर्वपृष्ठया याजयेदेता एव देवतास्स्वेन भागधेयेनोप धावति ता एवास्मिन्निन्द्रियं वीर्यं दधति ।

என்பது

உரை

இந்திரிய வன்மையையும் உடம்பின் உறுதியையும் விரும்பியவன் சருவப்பிருஷ்டிய யாகத்தால் இந்திரனை வழிபடுவானாக என்பதாம்.

இந்திரனுடைய பல்வகை வடிவுகளை விதிக்கின்றது

பிராமணம் 3.

यदिन्द्राय राथंतराय निर्वपति यदेवाग्नेस्तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय बार्हताय यदेवेन्द्रस्य तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय वैरूपाय यदेव सवितुस्तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय शाकराय यदेव मरुतां तेजस्तदेवाव रुन्धे यदिन्द्राय रैवताय यदेव बृहस्पतेस्तेजस्तदेवाव रुन्ध एतावन्ति वै तेजाꣳसि तान्येवाव रुन्धे ।

என்பது

உரை.

ரதந்தரம், பிருகத், வைரூபம், வைராசம், சாக்வரம், ரைவதம் என்னும் அறுவகைத் துதிகளையும் அபிமானிக்கும் ஆறு இந்திரர்களும் தேவர்களாவார்கள் என்பதாம்.

வன்மையின் பொருட்டு இஷ்டி)

சிலவிசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 4

उत्तानेषु कपालेष्वधि श्रयत्ययातयामत्वाय ।

என்பது.

உரை.

தலைமேலாகத் திருப்பிவைத்துள்ள கபாலங்களில் புரோடாசஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

கபாலங்களின் எண்ணை விதிக்கின்றது

பிராமணம் 5

द्वादशकपालः पुरोडाशो भवति वैश्वदेवत्वाय ।

என்பது

உரை.

வைசுவ தேவர்களின் பிரியத்தின் பொருட்டு பன்னிரண்டு கபாலங்கள் உரியன என்பதாம்.

புரோடாசத்தைக் கிள்ளி யெடுத்தல் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 6.

समन्तं पर्यवद्यति समन्तमेवेन्द्रियं वीर्यं यजमाने दधाति ।

என்பது.

உரை.

அதன் நாற்புறமும் எடுத்துக் கொள்ளல் வேண்டு மென்பதாம்.

யாஜ்யா புரோநுவாக்கியங்களின் விதி

பிராமணம் 7.

व्यत्यासमन्वाहानिर्दाहाय ।

என்பது

உரை.

மாறி மாறி ஓதலால் ஆறு யாஜ்யா புரோநுவாக்கியங்களாகின்றன என்பதாம்.

அந்வாஹாரிய தட்சிணையை மறுக்கின்றது

பிராமணம் 8.

अश्व ऋषभो वृष्णिर्बस्तस्सा दक्षिणा वृषत्वाय ।

என்பது.

உரை

இதற்கு, குதிரை இடபம் செம்மறி ஆட்டுக்கடா வெள்ளாட்டுக்கடா என்பவைகள் தட்சிணைகள் என்பதாம்.

பொய்ப்பேர் கொண்டவனுக்கு விதி

பிராமணம் 9.

एतयैव यजेताभिशस्यमान एताश्चेद्वा अस्य देवता अन्नमदन्त्यदन्त्युवेवा-
स्य मनुष्याः ।

என்பது

உரை.

பொய்யாக அபவாதம் கிளம்பப்பெற்றவன் மேற்கூறிய யாகத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஏழாவது அநுவாகம்
முற்றிற்று.

எட்டாம் அநுவாகம் விடயச் சுருக்கம்

अष्टमेदष्टिकामस्यत्रिहविष्केष्टिरीरिता ।

கண்ணை விரும்பியவனுக்கு இஷ்டி விதிக்கின்றது.

இரண்டாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிகட்குமேல் இருபத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

கண்ணை விரும்பியவனுக்கு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

रजनो वै कौणेयः क्रतुजितं जानकिं चक्षुर्वन्यमयाचत्तस्मा एता-
मिष्टिं निरवपदग्नये भ्राजस्वते पुरोडाशमष्टाकपालꣳ सौर्यं चरुमग्नये

भ्राजस्वते पुरोडाशमष्टाकपालं तयैवास्मिञ्चक्षु रदधाद्यश्चक्षुष्कामः
स्यात्तस्मा एतामिष्टिं निर्वपेदग्नये भ्राजस्वते पुरोडाशमष्टाकपालꣳ
सौर्यं चरुमग्नये भ्राजस्वते पुरोडाशमष्टाकपालमग्नेर्वै चक्षुषा मनुष्या
वि ॥ १ ॥ पश्यन्ति सूर्यस्य देवा अग्निं चैव सूर्यं च स्वेन
भागधेयेनोप धावति तावेवास्मिञ्चक्षुर्धत्तश्चक्षुष्मानेव भवति
यदाग्नेयौ भवतश्चक्षुषी एवास्मिन्तत्प्रति दधाति यत्सौर्यो नासिकां
तेनाभितस्सौर्यमाग्नेयौ भवतस्तस्मादभितो नासिकां चक्षुषी
तस्मान्नासिकया चक्षुषी विधृते समानी याज्यानुवाक्ये भवतः
समानꣳ हि चक्षुस्समृद्ध्या उदु त्यं जातवेदसꣳ सप्त त्वा हरितो
रथे चित्रं देवानामुदगादनीकमिति पिण्डान्प्र यच्छति चक्षुरेवास्मै
प्र यच्छति यदेव तस्य तत् ॥ २ ॥

இஷ்டியை விதித்தற்பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

रजनो वै कौणेयः क्रतुजितं जानकिं चक्षुर्वन्यमयात्तस्मा एतामिष्टिं निरव-
पदग्नयेभ्राजस्वते पुरोडाशमष्टाकपालꣳ सौर्यं चरुमग्नये भ्राजस्वते
पुरोडाशमष्टाकपालं तयैवास्मिञ्चक्षुरदधात् ।

என்பது

உரை.

குணியின் புத்திரனாகிய இரசினன் என்பவன், சனகனுடைய புத்திரனாகிய 'கிருதஜித்' என்னும் கண் வைத்தியனுக்கு மூன்று அவிகளைக் கொண்ட இஷ்டியைச் செய்து கண்ணுக்கு ஒளியிக்குடைமையைப் பெற்றுக் கொண்டனன் என்பதாம்.

(கண் பார்வையின் பொருட்டு இஷ்டி

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

यश्चक्षुष्कामस्स्यात्तस्मा एतामिष्टिं निर्वपेदग्नये भ्राजस्वते पुरोडाशमष्टा-
कपालꣳ सौर्यं चरुमग्नये भ्राजस्वते पुरोडाशमष्टाकपालमग्नेर्वै चक्षुषा
मनुष्या वि पश्यन्ति सूर्यस्य देवा अग्निं चैव सूर्यं च स्वेन भागधेये-
नोप धावति तावेवास्मिञ्चक्षुर्धत्तश्चक्षुष्मानेव भवति ।

என்பது.

உரை.

கண் ஒளி மிகுதியாக விரும்பியவன், பேரொளியையுடைய அக்கினிக்கு, எவ் வெட்டுக் கபாலங்களில் இரண்டு புரோடாசங்களும், சூரியனுக்குப் பொங்கலுஞ் செய்து யாகம் பண்ணல் வேண்டு மென்பதாம். ஈண்டு அிித்தியமாகிய மக்களின் கண்ணொளிக்கும் அக்கினிக்கும் ஒப்பு. தேவர்களின் கண்ணொளிக்கும் சூரியனுக்கும் ஒப்பு என்பதை யுணர்க.

அக்கினி யிரண்டிற்கும் நடுவிலுள்ள சூரியனுடைய பொங்கலை, கண்களிரண்டிற்கும் நடுவிலுள்ள மூக்கிற்கு ஒப்பாக்கிப் புகழ்கின்றது

பிராமணம் 3.

यदाग्नेयौ भवतश्चक्षुषी एवास्मिन्तत्प्रति दधाति यत्सौर्यो नासिकां तेना-
भितस्सौर्यमाग्नेयौ भवतस्तस्मादभितो नासिकां चक्षुषी तस्मान्नासि-
कया चक्षुषी विधृते ।

என்பது.

உரை

அக்கினியின் அவிகள் இரண்டாதலின் எசமானனுக்கு இருகண்கள் இனிது அமைகின்றன. சூரியன் பொங்கல் ஒன்றாதலின் மூக்கு மிக விலைக்கின்றது என்க. இதற்கு, முறையே, உதக்னே சுசயஸ்த்வ சுக்ரா, என்பது புரோநுவாக்கியம், 'விஜ்யோதிஷா ப்ருஹதாபாதி அக்கினி:' என்பது யாஜ்யா வாக்கியம் என்பதை யுணர்க என்பதாம்.

முடிவிலுள்ளதற்கு வேறு மந்திரம் என்னும் ஆசங்கை நீக்குதற்கு அதை விதிக்கின்றது

பிராமணம் 4.

समानी याज्यानुवाक्ये भवतस्समानꣳ हि चक्षुस्समृद्ध्यै ।

என்பது.

உரை

கண்களின் நலத்தின் பொருட்டு யாஜ்யா புரோநுவாக்கியங்கள் ஒரு விதமாயிருக்கின்றன என்பதாம்.

ஈண்டு முற்கூறியவைகளே யாஜ்யா புரோநுவாக்கியங்கள் என்பது கருத்து.

எசமானனுக்குப் பிண்டமளித்தல் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 5.

उदु त्यं जातवेदसꣳ सप्त त्वा हरितो रथे चित्रं देवानामुदगादनीकमिति पिण्डान्प्र यच्छति चक्षुरेवास्मै प्र यच्छति यदेव तस्य तत् ।

என்பது

உரை.

உதுத்யம், சித்திரம் தேவாநாம், சப்தத்வா என்னும் மூன்று மந்திரங்களாலும் பிண்டமளித்தல் வேண்டுமென்பதாம்.

எட்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஒன்பதாவது அநுவாக விடயச் சுருக்கம்

इष्टिस्सांग्रहणी प्रोक्ता नवमे ग्रामकामिनः ।

கிராமத்தை விரும்பியவனுக்கு இஷ்டி விதிக்கப்படுகின்றது என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் ஐந்து பதங்களைக் கொண்டது.

சாங்கிரகண இஷ்டியைக் கூறும் பிராமணங்கள்.

ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासं धीरश्चेत्ता वसुविद्ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासमुग्रश्चेत्ता वसुविद्ध्रुवोऽसिद्ध्रुवोऽहꣳ सजातेषु भूयासमभिभूश्चेत्ता वसुविदामनमस्यामनस्य

देवा ये संजाताः कुमारास्समनसस्तानहं कामये हृदा ते मां कामयन्ताꣳ हृदा तान्म आमनसः कृधि स्वाहाऽऽमनमसि ॥ १ ॥ आमनस्य देवा याः स्त्रियः समनसस्ता अहं कामये हृदा ता मां कामयन्ताꣳ हृदा ता म आमनसः कृधि स्वाहा वैश्वदेवीꣳ सांग्रहणीं निर्वपेद्ग्रामकामो वैश्वदेवा वै संजाता विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मै सजातान्प्र यच्छन्ति ग्राम्येव भवति सांग्रहणी भवति मनोग्रहणं वै संग्रहणं मनएव सजातानाम् ॥ २ ॥ गृह्णाति ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ संजातेषु भूयासमिति परिधीन्परि दधात्याशिषमेवैतामा शास्तेऽथो एतदेव सर्वꣳ सजातेष्वधि भवति यस्यैवं विदुष एते परिधयः परिधीयन्त आमनमस्यामनस्य देवा इति तिस्र आहुतीर्जुहोत्येतावन्तो वै सजाता ये महान्तो ये क्षुल्लका याः स्त्रियस्तानेवाव रुन्धे त एनमवरुद्धा उप तिष्ठन्ते ॥ ३ ॥

விதிவாக்கியத்தால் வந்தடைந்த; "த்ருவோஸி" என்பது முதலிய பரிதி மந்திர (விறகை வைக்கும் மந்திர)ங்களை விலக்கி வேறு மந்திரங்களை விதிக்கின்றது

பிராமணம் 1.

ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासं धीरश्चेत्ता वसुविद्ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासमुग्रश्चेत्ता वसुविद्ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासमभिभूश्चेत्ता वसुवित् ।

என்பது.

சாங்கிரகணி இஷ்டி.)

உரை.

நடுவில் வைக்கும் விறகே! நீ உறுதியாயிருக்கின்றாய். நானும் எமது பந்துக்களுள் வலிமையுடையனாவேன். மற்றும், தைரியம், மிகுந்த அறிவு, தனங்களையுடையவனாவேன். இவ்வாறே, வடக்குத் தெற்கு விறகுகளுக்கு மாம். அங்ஙனமே பந்துக்களுள் உக்கிரமுடையவனும், எதிரிகளைத் தாழ்த்துந் தன்மை யுடையவனுமாவேனாக என்பதாம்.

கருத்து.

இம்மந்திரத்தால் பரிதி என்னும் விறகுகளை, திக்கு மூன்று பக்கங்களிலும் வைத்தல் வேண்டு மென்பதாம்

உபஹோம மந்த்ரங்களைக் கூறுகின்றது

பிராமணம் 2.

आमनमस्यामनस्य देवा ये सजाताः कुमारास्समनसस्तानहं कामये हृदा ते मां कामयन्ताꣳ हृदा तान्म आमनसः कृधि स्वाहाऽऽमनमस्यामनस्य देवा यास्स्त्रियस्समनसस्ता अहं कामये हृदा ता मां कामयन्ताꣳ हृदा ता म आमनसः कृधि स्वाहा ।

என்பது.

உரை

ஆகுதி செய்த நெய்யே! நீ, கூடப்பிறந்தவர்களை ஆதரிக்கச் செய்கின்றோனாயிருக்கின்றாய். ஆதலின், எசமானனுடைய கூடப்பிறந்தார்கள் அநுகூலர்களாக இருக்கிறார்கள். தேவர்களே! கூடப்பிறந்தார்களை மனத்தில் அன்பு பாராட்டுகின்றேன். அவர்களும் எம்பால் அன்புடையவர்களாகுக. இந்த நெய் ஆகுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறே புத்திரன், புத்திரிகளுக்கும் உணர்ந்து கொள்க என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 3.

वैश्वदेवीꣳ सांग्रहणीं निर्वपेद्ग्रामकामो वैश्वदेवा वै सजाता विश्वानेव देवान्त्स्वेन भागधेयेनोप धावति त एवास्मै सजातान्प्र यच्छन्ति ग्राम्येव भवति ।

என்பது.

உரை.

கிராமத்தை விரும்பியவன், விசுவ தேவதைகட்குரிய சாங்கிரஹணீ, அதாவது, ஒன்றற்கொன்று ஒருமை மனதால் இனிது ஏற்றுக்கொள்ளப் படும் இஷ்டியைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

இக்கருத்தைக் கொண்டே இவ்விஷ்டியின் சிறப்பைப் புகழ்கின்றது

பிராமணம் 4.

सांग्रहणी भवति मनोग्रहणं वै संग्रहणं मन एव सजातानां गृह्णाति ।

என்பது

உரை.

சுற்றத்தார்களின் மனதைத் தன் வசப்படுத்திக் கொள்வதே மனோக் கிரஹணம். அதுவே சங்கிரகணமெனப்படுகின்றது. இவ்விஷ்டியால் கூடப் பிறந்தவர்களின மனம் தனது வசமாகிவிடுகின்றது என்பதாம்.

முதலிற் கூறிய மந்திரங்களை விநியோகிக்கின்றது

பிராமணம் 5.

**ध्रुवोऽसि ध्रुवोऽहꣳ सजातेषु भूयासमिति परिधीन्परि दधात्याशिषमेवै-
तामा शास्तेऽथो एतदेव सर्वꣳ सजातेष्वधि भवति यस्यैवं विदुष
एते परिधयः परिधीयन्ते ।**

என்பது

உரை.

'துருவோஸி' என்பது முதலிய மூன்று மந்திரங்களாலும் மூன்று பருதிகளை வைக்கில், அவற்றில் ஆசீர்வாதம் என்னும் வாழ்த்துச் சொற்கள் இருத்தலின் சுற்றத்தார்களுள் வேண்டப் பெற்றவனாய் மிகுந்த சம்பத்தை யடைகின்றான் என்பதாம்.

ஏனைய மந்திரங்களையும் விநியோகிக்கின்றது

பிராமணம் 6.

**आमनमस्यामनस्य देवा इति तिस्र आहुतीर्जुहोत्येतावन्तो वै सजाता ये
महान्तो ये क्षुल्लका याः स्त्रियस्तानेवाव रुन्धे त एनमवरुद्धा उप
तिष्ठन्ते ।**

என்பது

உரை

'குமாரா:' என்பது முதலிய மந்திரபாகத்தில், 'ஆமனஸி:' என்பது முதலிய மந்திரபாகத்தைச் சேர்த்துக் கொண்டு மூன்று மந்திரங்களால் மூன்று ஆகுதிகள் செய்யப் பெறுகின்றன. தனது, கிராமம், குடும்பத்தார் முதலியவர்கள் இந்த யாகத்தால் வசப்படுகின்றார்கள் என்பதாம்.

ஒன்பதாவது அநுவாகம்

முற்றிற்று.

பத்தாவது அநுவாக விடயச்சுருக்கம்

ज्योगामयाविनस्त्विष्टौ यन्नवेत्याज्यमीक्षते ।
अश्विनो रुपहोमास्स्युर्घृत स्वाम्याज्यमीक्षते ॥ १ ॥
स्पृष्ट्वर्त्विजोब्रह्महस्तं पावेति स्वामिनंजगुः ।
इमं घृतं पिबन्तन्तु स्वामिन मन्त्रयेतहि ॥ २ ॥
अग्निस्सोमश्चयज्ञश्च ब्रह्मदेवाः पितेतिषट् ।
यथोचितानुषङ्गैस्तैर्गृह्णीत स्वामि हस्तकम् ॥ ३ ॥
दशमेस्त्वनुवाकेऽस्मिन्मन्त्राष्षोडशवर्णिताः ॥

நெய்யை நோக்கல், உபஹோமங்கள், எசமானன் நெய்யைப் பார்த்தல், கையைப் பிடித்துக்கொண்டு ஓதல், நெய்யருந்தும் எசமானனைப் போற்றுதல், அக்கினி, சோமம், யக்ஞம், வேதம், தேவர்கள், பிதா என்பவைகளால் வேள்வித் தலைவன் கையை பிடித்தல் என்பதாம்.

இவ்வநுவாகத்தால் பொற்குண்டலஞ் செய்து நெய்யிற் போட்டு எசமானன் காதில் அணிந்துகொள்ளுதல் வழக்கமாய்க் காணப்படுதலின் இது குண்டலேஷ்டி என்றும் வழங்கப் பெறும்.

இரண்டாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்டுமேல் இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

மேல்வரும் ஆயுஷ்காம இஷ்டிக்குரிய மந்திரங்கள்.

यन्नवमैत्तन्नवनीतमभवद्यदसर्पत्तत्सर्पिरभवद्यदध्रियत तद्घृतम
भवदश्विनोः प्राणो ऽसितस्य ते दत्तां ययोः प्राणोऽसि स्वाहेन्द्रस्य

प्राणोऽसि तस्य ते ददातु यस्य प्राणोऽसि स्वाहा मित्रावरुणयोः प्राणोऽसि तस्य ते दत्तां ययोः प्राणोऽसि स्वाहा विश्वेषां देवानां प्राणोऽसि ॥ १ ॥ तस्य ते ददतु येषां प्राणोऽसि स्वाहा घृतस्य धारामम्‌तस्य पन्थामिन्द्रेण दत्तां प्रयतां मरुद्भिः । तत्त्वा विष्णुः पर्यपश्यत्तत्त्वेडा गव्यैरयत् । पावमानेन त्वा स्तोमेन गायत्रस्य वर्तन्योपाꣳशोर्वीर्येण देवस्त्वा सवितोत्सृजतु जीवातवे जीवनस्यायै बृहद्रथंतरयोस्त्वा स्तोमेन त्रिष्टुभो वर्तन्या शुक्रस्य वीर्येण देवस्त्वा सवितोत् ॥ २ ॥ सृजतु जीवातवे जीवनस्याया अग्नेस्त्वा मात्रया जगत्यै वर्तन्याऽऽग्रयणस्य वीर्येण देवस्त्वा सवितोत्सृजतु जीवातवे जीवनस्याया इममग्न आयुषे वर्चसे कृधि प्रियꣳ रेतो वरुण सोम राजन् । मातेवास्मा अदिते शर्म यच्छ विश्वेदेवा जरदष्टिर्यथाऽसत् । अग्निरायुष्मान्त्स वनस्पतिभिरायुष्मान्तेन त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि सोम आयुष्मान्त्स ओषधीभिर्यज्ञ आयुष्मान्त्स दक्षिणाभिर्ब्रह्माऽऽयुष्मत्तद्ब्राह्मणैरायुष्मद्देवा आयुष्मन्तस्तेऽमृतेन पितर आयुष्मन्तस्ते स्वधयाऽऽयुष्मन्तस्तेन त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ॥ ३ ॥

இம்மந்திரங்களால், 'ஆஜ்யமஸி' என்பது முதலிய நெய்யைப் பார்த்தற்குரிய பலமுய மந்திரங்கள் விலக்கப்பட்டன என்பதை யுணர்க.

முதலாவது மந்திரம்

நெய்யைப் பார்த்தல்

यज्जवमैत्तन्नवनीतमभवद्यदसर्पत्तत्सर्पिरभवद्यदध्रियत तद्घृतमभवत् ।

என்பது

உரை

தயிரிலிருந்து மேலே கிளம்பி புதியவடிவாய் எடுக்கப்படுதலின் வெண்ணெ நவநீதம் எனப்படும். அங்ஙனமே, அக்கினி பட்டவுடன் உருகுவதால் சர்ப்பி எனப்படும். குளிர்ந்த பாத்திரத்தில் வைக்கில் கெட்டிப்படுதலின் கிருத மெனப்படும் என்பதாம்.

இரண்டாவது மந்திரம்

உபஹோமம்

अश्विनोः प्राणोऽसि तस्य ते दत्तां ययोः प्राणोऽसि स्वाहेन्द्रस्य प्राणोऽसि तस्य ते ददातु यस्य प्राणोऽसि स्वाहा मित्रावरुणयोः प्राणोऽसि तस्य ते दत्तां ययोः प्राणोऽसि स्वाहा विश्वेषां देवानां प्राणोऽसि तस्य ते ददतु येषां प्राणोऽसि स्वाहा ।

என்பது

உரை.

எசமான! நீ, அசுவினிகட்கு உயிர்போன்றிருக்கின்றாய், ஆதலின் உனக்கு உயிரைக் கொடுப்பார்களாக. அசுவினிகட்கு இந்த நெய் ஆகுதி ஆகுக, மேலும் இவ்வாறே உரைத்துக்கொள்க என்பது.

மூன்றாவது மந்திரம்

வேதியின் மூலையில் வைத்த நெய்யை நோக்கல்

घृतस्य धाराममृतस्य पन्थामिन्द्रेण दत्तां प्रयतां मरुद्भिः । तत्त्वा विष्णुः पर्यपश्यत्तत्त्वेडा गव्यैरयत् ।

என்பது

உரை.

கருமபயனுக்குச் சாதனமும், இந்திரனால், புல் முதலியவற்றை யுண்டாக்கும் வாயிலாகக் கொடுக்கப் பெற்றதும், மருத்துக்களால் விலைப்படுத்தும் பாண்டங்களில் வைக்கப்பட்டதுமாகிய நெய்த்தாரையே! உன்னை, திருமாலுக்கொத்த எசமானன் பார்க்கின்றான். 'இடா' என்னும் ஆக்களை யபிமானிக்குந் தேவதை, உன்னைக் கோக்களிடத்தில் வைத்தது என்பதாம்.

நான்காவது மந்திரம்

பிரமன்; எசமானனுடைய ஆயுளைப் பற்றிக்கொண்டு மந்திரங்களை ஓதல்

पावमानेन त्वा स्तोमेन गायत्रस्य वर्तन्योपाꣳशोर्वीर्येण देवस्त्वा सवितो-
त्सृजतु जीवातवे जीवनस्यायै बृहद्रथंतरयोस्त्वा स्तोमेन त्रिष्टुभो वर्त-
न्या शुक्रस्य वीर्येण देवस्त्वा सवितोत्सृजतु जीवातवे जीवनस्याया-
अग्नेस्त्वा मात्रया जगत्यै वर्तन्याऽऽग्रयणस्य वीर्येण देवस्त्वा सविता-
त्सृजतु जीवातवे जीवनस्यायै ।

என்பது.

உரை.

எசமான! உன்னை, பகிழ்ப்பவமானத்தில் ஒன்பது முறை திருப்பி ஓதல் முதலான ஸ்தோமம் என்னுந் துதியாலும், காயத்ரி என்னுஞ் சந்தத்தின் வழியாகிய சோமத்தைதப்பெறல் என்னும் யக்ஞாங்கத்தைத் தேடுதலாலும், உபாம்சு கிரகத்தின் ஹோம வன்மையாலும் சவிதா தேவன் நீண்ட பிணிகளிலிருந்து விடுவிப்பானாக. விடுவிப்பதும், வாழுதற்கு வேண்டிய மருந்துகளைத்தேடி நீண்டநாளிருத்தற் பொருட்டென்க. இவ்வாறே இரண்டாவது மூன்றாவது மந்திரங்களுக்கும் உரைப்பாலது என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

அதில் போட்டிருந்த பொற்குண்டலத்தை எடுத்துவிட்டு அந்நெய்யை யருந்தும் எசமானை வேட்போன் போற்றல்

इममग्न आयुषे वर्चसे कृधि प्रियꣳरेतो वरुण सोम राजन् । मातेवास्मा-
अदिते शर्मयच्छ विश्वे देवा जरदष्टिर्यथाऽसत् ।

என்பது.

உரை

அக்கினியே! நீ இந்த எசமானை, நீண்ட வாழ்நாளுடையவனும். வன்மையுடையவனுமாகச் செய்வாயாக. வருண சோமராசர்களே! நீவிர், இவ்வெசமானனுக்குப் புத்திரோத்பத்தியைத தேடுவீர்களாக. அதிதி தேவியே! நீ, இவனுக்குச் சுகத்தைக் கொடுப்பாயாக. விசுவதேவர்கள், இவனுக்கு, இளமையிலும், தருணத்திலும் சாதலின்றி நிறைந்த ஆயுளைக் கொடுப்பார்களாக என்பதாம்.

எஞ்சிய அநுவாகமந்திரங்கள் ஆறினாலும் எசமானனுடைய வலதுகையைப் பிடித்துக்கொண்டு செபித்தல்,

மந்திரம் 6.

अग्निरायुष्मान्त्स वनस्पतिभिरायुष्मान्तेन त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि सोम आयुष्मान्त्स ओषधीभिर्यज्ञ आयुष्मान्त्स दक्षिणाभिर्ब्रह्माऽऽयुष्मत्तद्ब्राह्मणैरायुष्मद्देवा आयुष्मन्तस्तेऽमृतेन पितर आयुष्मन्तस्ते स्वधयाऽऽयुष्मन्तस्तेन त्वाऽऽयुषाऽऽयुष्मन्तं करोमि ।

என்பது

உரை.

வனத்திலுள்ள விறகைப் போடுவதால் வளர்ந்து கொண்டேயிருக்கும் நீண்ட ஆயுளையுடைய அக்கினி, உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க. சோமரசம் கொடி செடிகளுக்குள் வளருகின்றது. யக்ஞம் தட்சிணையால் வசம் பண்ணிய இருத்துவிக்குக் களிடத்தில் வளருகின்றது. வேதம், இடையறாது ஓதுவதால் அந்தணர்களுக்குள் வளருகின்றது. தேவர்கள் அவிபாகிய அமுதத்தால் வாழ்கின்றார்கள். பிதிர்க்கள் பிண்டத்தினால் ஜீவிக்கின்றார்கள். நீண்ட ஆயுளைக் கொடுக்க என்பதை எல்லாவற்றுடனுஞ் சேர்த்துக் கொள்க என்பதாம்.

பத்தாவது அநுவாகம்
முற்றிற்று

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

பதினோராம் அநுவாகம்

ஐந்து பஞ்சாதிகட்குமேல் இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

ஆயுட்காம இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

अग्निं वा एतस्य शरीरं गच्छति सोमꣳ रसो वरुण एनं वरुणपाशेन गृह्णाति सरस्वतीं वागग्नाविष्णू आत्मा यस्य ज्योगामयति यो ज्योगामयावी स्याद्यो वा कामयेत सर्वमायुरियामिति तस्मा एतामिष्टिं निर्वपेदाग्नेयमष्टाकपालꣳ सौम्यं चरुं वारुणं दशकपा-

ल९ सारस्वतं चरुमाग्नावैष्णवमेकादशकपालमग्नेरेवास्य शरीरं
निष्क्रीणाति सोमाद्रसम् ॥ १ ॥ वारुणेनैवैनं वरुणपाशान्मुञ्चति
सारस्वतेन वाचं दधात्यग्निस्सर्वा देवता विष्णुर्यज्ञो देवताभिश्चै-
वैनं यज्ञेन च भिषज्यत्युत यदीतासुर्भवति जीवत्येव यन्नवमैत्तन्नव
नीतमभवदित्याज्यमवेक्षते रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टेऽश्वि-
नोः प्राणोऽसीत्याहाश्विनौ वै देवानाम् ॥ २ ॥ भिषजौ
ताभ्यामेवास्मै भेषजं करोतीन्द्रस्य प्राणोऽसीत्याहेन्द्रियमेवास्मिन्ने-
तेनदधाति मित्रावरुणयोः प्राणोऽसीत्याह प्राणापानावेवास्मिन्नेतेन
दधातिविश्वेषां देवानांप्राणोऽसीत्याह वीर्यमेवास्मिन्नेतेन दधाति
घृतस्यधारामममृतस्य पन्थामित्याह यथायजुरेवैतत्पावमानेन त्वा
स्तोमेनेति ॥ ३ ॥ आह प्राणमेवास्मिन्नेतेन दधाति बृहद्रथंतरयो -
स्त्वा स्तोमेनेत्याहौर्ज एवास्मिन्नेतेन दधात्यग्नेस्त्वा मात्रयेत्याहा-
ऽऽत्मानमेवास्मिन्नेतेन दधात्यृत्विजः पर्याहुर्यावन्त एवर्त्विजस्त
एनं भिषज्यन्ति ब्रह्मणो हस्तमन्वारभ्य पर्याहुरेकधैव यजमान
आयुर्दधाति यदेव तस्य तद्धिरण्यात् ॥ ४ ॥ घृतं निष्पवत्यायुर्वै
घृतममृत९ हिरण्यममृतादेवाऽऽयुर्निष्पिबति शतमानं भवति
शतायुः पुरुषश्शतेन्द्रिय आयुष्येवेन्द्रिये प्रति तिष्ठत्यथो खलु
यावतीस्समा एष्यन्मन्येत तावन्मान९ स्यात्समृद्धया इममग्न
आयुषे वर्चसे कृधीत्याहाऽऽयुरेवास्मिन्वर्चो दधाति विश्वेदेवा

ஆயுட்காம இஷ்டி)

जरदष्टिर्यथाऽसदित्याह जरदष्टिमेवैनं करोत्यग्निरायुष्मानिति हस्तं गृह्णात्येते वै देवा आयुष्मन्तस्त एवास्मिन्नायुर्दधति सर्वमायुरेति ॥ ५ ॥

இவ்விஷ்டிக்குரிய மந்திரங்கள் பத்தாவது அநுவாகத்திற் கூறப்பட்டன. இதில் அவ்விஷ்டி மாத்திரம் விதிக்கப்படுகின்றது.

அவ்விஷ்டியைப் புகழ்கின்றது

பிராமணம் 1.

अग्निं वा एतस्य शरीरं गच्छति सोमꣳ रसो वरुण एनं वरुणपाशेन गृह्णाति सरस्वतीं वागग्नाविष्णू आत्मा यस्य ज्योगामयति ।

என்பது.

உரை

நீண்டபிணியால் பீடையுற்றவனுடைய உடம்பில் தசையை அருந்தலால் இளைத்துவிடுதலின் அக்கினி உட்புகுந்திருக்கின்றது. வயிற்றுவலி முதலியன இருத்தலின் வருணன் பாசத்தாலுங்கட்டுகின்றான். சோமன் இரசத்தை யிழுத்தலின் வன்மை குறைவு. இவன் பேசமுடியாமையின் சரசுவதியும் போய்விடுகிறாள். சீவான்மா அக்கினியையும் விஷ்ணுவையும் அடைகின்றது ஆதலின் இறக்கத்தக்கவனாகின்றான் என்பதாம்.

இப்போது இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2

यो ज्योगामयावी स्याद्यो वा कामयेत सर्वमायुरियामिति तस्मा एतामिष्टिं निर्वपेदाग्नेयमष्टाकपालꣳ सौम्यं चरुं वारुणं दशकपालꣳ सारस्वतं चरुमाग्नावैष्णवमेकादशकपालमग्नेरेवास्य शरीरं निष्क्रीणाति सोमाद्रसं वारुणेनैवैनं वरुणपाशान्मुञ्चति सारस्वतेन वाचं दधात्यग्निः सर्वा देवता विष्णुर्यज्ञो देवताभिश्चैवैनं यज्ञेन च भिषज्यत्युत यदीतासुर्भवति जीवत्येव ।

என்பது.

உரை

நீண்ட பிணியையுடையவன் அல்லது, நிறைந்த ஆயுளை விரும்பியவன், அக்கினிக்கு எட்டுக் கபாலங்களில் புரோடாசமும், சூரியனுக்குப் பொங்கலும் வருணனுக்குப் பத்துக் கபாலங்களில் புரோடாசமும், [illegible]க்குப் பொங்கலும், அக்கினி விஷ்ணுவிற்குப் பதினொரு கபாலங்களில் புரோடாசமுஞ் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்

மந்திரத்தை விநியோகப்படுத்துகின்றது

பிராமணம் 3.

यन्नवमैत्तन्नवनीतमभवदित्याज्यमवेक्षते रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे ।

என்பது

உரை

மந்திரத்திற் கூறியுள்ள, நவநீதம், சர்ப்பி: கிருதம் என்னும் சொற்களின் உரையால் நெய்யின் மகிமை வெளியாம்படி விரித்துரைக்கின்றது. அல்லது, நெய்யின் மகிமையே மந்திரத்தின் உரையாம். மந்திரத்திலுள்ள சொற்களாலேயே இனிது விளங்கப்படுதலின் வேறு உரை கூறல் எதற்கு? என்பது பொருள் என்பதாம்.

உபஹோம மந்திரங்கட்கு உரை கூறுகின்றது

பிராமணம் 4

अश्विनोः प्राणोऽसीत्याहाश्विनौ वै देवानां भिषजौ ताभ्यामेवास्मै भेषजं करोतीन्द्रस्य प्राणोऽसीत्याहेन्द्रियमेवास्मिन्नेतेन दधाति मित्रावरुणयोः प्राणोऽसीत्याह प्राणापानावेवास्मिन्नेतेन दधाति विश्वेषां देवानां प्राणोऽसीत्याह वीर्यमेवास्मिन्नेतेन दधाति ।

என்பது

உரை.

அசுவினிகள், தேவர்களின் வைத்தியர்கள் எனவும், இந்திரியத்தை இந்திரன் கொடுக்கின்றான் எனவும், மித்திராவருணர்கள் பிராண அபானனைக் கொடுக்கின்றார்கள் எனவும், விசுவதேவர்கள் வீரியத்தைக் கொடுக்கின்றார்கள் எனவுங் கூறுகின்றது என்பதாம்.

ஆயுட்காம் இஷ்டி)

எசமானன் நெய்யைப்பார்க்கும் மந்திரம் வெளிப்படையான பொருளையுடைய தென்கின்றது

பிராமணம் 5.

घृतस्य धाराममृतस्य पन्थामित्याह यथायजुरेवैतत् ।

என்பது.

உரை.

இதற்கு எசுரில் கூறிய பொருளேயாம் என்பதாம்.

இருத்துவிக்குகள் ஆசீர்வாத மந்திரங்களின் கருத்தை விளக்குகின்றது

பிராமணம் 6.

पावमानेन त्वा स्तोमेनेत्याह प्राणमेवास्मिन्नेतेन दधाति बृहद्रथंतर-योस्त्वा स्तोमेनेत्याहौज एवास्मिन्नेतेन दधात्यग्नेस्त्वा मात्रयेत्याहा-ऽऽत्मानमेवाऽस्मिन्नेतेन दधाति ।

என்பது

உரை.

பவமான மென்பது வாயு வாதலின் பிராணப் பிரதிஷ்டையாம். பிருகத், ரதந்தரம் என்னும் இரண்டும் பிருஷ்டத்துதியின் பிரகிருதியாம்; சாரமாத வின் வன்மையடைதலாம், ஆன்மாவை அளக்கின்றது என்றதால் ஆன்மப் பிரதிஷ்டையுண்டாகும் என்பதாம்.

இம்மூன்று மந்திரங்களின் பாடத்தை விதிக்கின்றது

பிராமணம் 7.

ऋत्विजः पर्याहुर्यावन्त एवर्त्विजस्त एनं भिषज्यन्ति ।

என்பது

உரை.

எல்லா இருத்துவிக்குக்களும் இம்மந்திரங்களை ஓதல் வேண்டும். அதனால் இருத்துவிக்குக்களால் வைத்தியஞ்செய்யப்பட்டதாகின்றது என்பதாம்.

படிக்கும்போது கையைப் பிடித்தலை விதிக்கின்றது

பிராமணம் 8.

ब्रह्मणो हस्तमन्वारभ्य पर्याहुरेकधैव यजमान आयुर्दधति यदेव तस्य तत् ।

என்பது

உரை.

ஒரேகாலத்தில் இருத்துவிக்குக்கள் தேடவேண்டிய எசமானனுடைய தீர்க்க ஆயுளை எசமானனிடத்தில் நிலைநிறுத்துகின்றார்கள் என்பதாம்.

பொற்குண்டலத்தால் அலைக்கப்பெற்ற நெய்யை அருந்தும்படி விதிக்கின்றது.

பிராமணம் 9.

हिरण्याद्घृतं निष्पिबत्यायुर्वै घृतममृतꣳ हिरण्यममृतादेवाऽऽयुर्निष्पिबति ।

என்பது.

உரை

ஆயுள் நெய் ஆயுள் பொன் பொன்னிலிருந்து எடுத்த நெய் அமுதம் அமுதமாகிய நெய்யை மிச்சமில்லாமல் அருந்துவதால் ஆயுள் நீடித்திருக்கின்றது என்பதாம்.

பொன்னின் பரிமாணத்தை விதிக்கின்றது

பிராமணம் 10.

शतमानं भवति शतायुः पुरुषश्शतेन्द्रिय आयुष्येवेन्द्रिये प्रतितिष्ठत्यथो खलु यावतीस्समा एष्यन्मन्येत तावन्मानꣳ स्यात्समृद्ध्यै ।

என்பது

உரை.

நூறு மானம், அதாவது ஐந்து பலம், அல்லது நூற்றில் சென்று போக மீந்த ஆயுள் கணக்கு, மானம் = குன்றுமணியிடை. இதனால், மேல் செல்லவேண்டிய ஆயுள் அளவு கொண்ட குன்றுமணி யிடை என்பதாம்.

நெய்யருந்தும் எசமானனைப் போற்றும் மந்திரத்தின், முதல், கடை அடிகளின் கருத்தை விளக்குகின்றது

பிராமணம் 11.

इममग्न आयुषे वर्चसे कृधीत्याहाऽऽयुरेवास्मिन्वर्चो दधाति विश्वे देवा जरदष्टिर्यथाऽसदित्याह जरदष्टिमेवैनं करोति ।

என்பது.

உரை.

'இமமக்னே' என்பது முதலிய மந்திரம், ஆயுளை இவனிடத்தில் அக்கினி நிலைக்கச் செய்கின்றது என்கின்றது. "விசுவே தேவா ஜரதஷ்டி:" என்பது முதலியது, கிழப்பருவம் வரை ஆயுளை அடைகின்றான் என்கின்றது இது நோயிலா வாழ்வு எனினும் அமையுமென்பதாம்.

வேட்போன், எசமானனுடைய வலக்கையைப் பிடிப்பதை விதிக்கின்றது

பிராமணம் 12.

अग्निरायुष्मानिति हस्तं गृह्णात्येते वै देवा आयुष्मन्तस्त एवास्मिन्नायुर्दधति सर्वमायुरेति ।

என்பது

உரை.

நீண்ட ஆயுளையுடைய தேவர்கள் இவனுக்கு நிறைந்த ஆயுளைக் கொடுக்கின்றார்கள் என்பதாம்.

பதினோராவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிகட்குமேல் பதினேழு பதங்களைக் கொண்டது

குதிரையின் தானத்தின் பொருட்டு இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

प्रजापतिर्वरुणायाश्वमनयत्स स्वां देवतामार्छत्स पर्यदीर्यत स एतं वारुणं चतुष्कपालमपश्यत्तं निरवपत्ततो वै स वरुणपाशाद-

मुच्यत वरुणो वा एतं गृह्णाति योऽश्वं प्रति गृह्णाति यावतोऽश्वा-न्प्रतिगृह्णीयात्तावतो वारुणाश्चतुष्कपालान्निर्वपेद्वरुणमेव स्वेन भाग-धेयेनोप धावति स एवैनं वरुणपाशान्मुञ्चति ॥ १ ॥ चतुष्कपा-ला भवन्ति चतुष्पाद्ध्यश्वस्समृद्ध्या एकमतिरिक्तं निर्वपेद्यमेव प्रतिग्राही भवति यं वा नाध्येति तस्मादेव वरुणपाशान्मुच्यते यद्यपरं प्रतिग्राही स्यात्सौर्यमेककपालमनु निर्वपेदमुमेवाऽऽदित्यमुच्चारं कुरुतेऽपोऽवभृथमवैत्यप्सु वै वरुणस्साक्षादेव वरुणमव यजतेऽपो नप्त्रीयं चरुं पुनरेत्य निर्वपेदप्सुयोनिर्वा अश्वस्स्वामेवैनं योनिं गमयतिस एनꣳ शान्त उपतिष्ठते ॥ २ ॥

இதில் குதிரையின் தானத்தின் பொருட்டுச் செய்யப்படும் இஷ்டி விதிக்கப்படுகின்றது.

இஷ்டியை விதிக்கப் புகழ்கின்றது

பிராம்மணம் 1.

प्रजापतिर्वरुणायाश्वमनयत्स स्वां देवतामार्छत्स पर्यदीर्यत स एतं वारुणं चतुष्कपालमपश्यत्तं निरवपत्ततो वै स वरुणपाशादमुच्यत ।

என்பது

உரை.

பிரசாபதி, தனது குதிரைக்குத் தலைவனுந் தன்மையை வருணனுக்கு அளித்துவிட்டு, அதனால் தனது உடம்பில் மிகுந்த நோயை உண்டாக்கிக் கொண்டனன். அந்நோய், வருணபாசமானதால் வருணனுக்குச் செய்த இஷ்டியால் நீங்கிற்று என்பதாம்.

அத்தகைய இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

वरुणो वा एतं गृह्णाति योऽश्वं प्रतिगृह्णाति यावतोऽश्वान्प्रतिगृह्णीयात्तावतो वारुणांश्चतुष्कपालान्निर्वपेद्वरुणमेव स्वेन भागधेयेनोप धावति स एवैनं वरुणपाशान्मुञ्चति ।

என்பது.

உரை.

குதிரையைத் தானஞ்செய்கின்றவன், வருணதேவதைக்கு, நான்கு கபாலங்களில் புரோடாசஞ் செய்து யாகஞ் செய்தல வேண்டும் என்பதாம்.

கபாலங்களின் எண்ணைப் புகழ்கின்றது

பிராமணம் 3.

चतुष्कपाला भवन्ति चतुष्पाद्ध्यश्वस्समृद्ध्यै ।

என்பது

உரை.

குதிரைக்கு நான்கு கால்களிருத்தலின் கபாலங்கள் நான்காம், இது மிகுந்த சம்பத்தைத் தருகின்றது என்பதாம்.

தானஞ் செய்த குதிரைகளின் எண்ணுக்கு மிகுந்த ஒரு புரோடாசத்தை விதிக்கின்றது

பிராமணம் 4.

एकमतिरिक्तं निर्वपेद्यमेव प्रतिग्राही भवति यं वा नाध्येति तस्मादेव वरुणपाशान्मुच्यते ।

என்பது

உரை.

முன்னும் பின்னும் மறந்தும் தானங்கொடுக்கப்பட்ட குதிரைகளின் பொருட்டுகுதிரைகளைவிட மிகுதியாக ஒரு புரோடாசஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

ஈண்டுச் சிலர் குதிரையைத் தானமாக வாங்கினவன் இவ்விஷ்டியைச் செய்தல் வேண்டுமென்பர்.

தானங் கொடுத்தவுடன் யாகஞ் செய்யாதவனுக்கு அங்கம் அதிகமாமென
விதிக்கின்றது

பிராமணம் 5.

यद्यपरं प्रतिग्राही स्यात्सौर्यमेककपालमनु निर्वपेदमुमेवाऽऽदित्यमुच्चारं कुरुते ।

என்பது

உரை.

குதிரையை தானங்கொடுத்தவுடன் யாகஞ் செய்யில் புரோடாசம் ஒன்று மிகுதியாகச் செய்தல் வேண்டும். தானஞ் செய்தவுடன் யாகஞ் செய்யாமல் பிறகு குதிரையைத் தானஞ் செய்து யாகஞ் செய்யில் மிகுதியாகப் புரோடாசஞ் செய்வதுடன் சூரியனுக்கும் ஒரு கபாலத்தில் புரோடாசஞ் செய்தல் வேண்டு மென்பதாம்.

இஷ்டியின் அங்கமாக அவபிருத நீராடலை விதிக்கின்றது

பிராமணம் 6.

अपोऽवभृथमवैत्यप्सु वै वरुणस्साक्षादेव वरुणमव यजते ।

என்பது

உரை.

நீரிருக்குமிடஞ் சென்று வேள்வியின் முடிவு நீராடல் செய்தல் வேண்டும். இதனால் வருணன் விலக்கப்படுகின்றான் என்பதாம்.

மற்றொரு அங்கம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 7.

अपोनप्त्रीयं चरुं पुनरेत्य निर्वपेदप्सुयोनिर्वा अश्वस्स्वामेवैनं योनिं गमयति स एनꣳ शान्त उप तिष्ठते ।

என்பது

உரை.

மீண்டும் வேள்விச் சாலையை யடைந்து நீரைத் தேவதையாக (பேரனை) வுடையதற்குப் பொங்கல் செய்து யாகஞ் செய்தல் வேண்டும். 'உச்சைச் சிரவம்' என்னுங் குதிரை கடலிற் பிறந்த தென்பது புராணங்களில் வெளிப் படையாம். அக்குதிரை, பொறுமையுடையதாயிருந்து நோயை யுண்டாக்காமல் இவ் வெசமானனை வழிபடுகின்றது என்பதாம்

பன்னிரண்டாவது அநுவாகம்

முற்றிற்று

பாவத்தின் பொருட்டு இஷ்டி)

பதின் மூன்றுவது அநுவாக விடையச்சுருக்கம்

यावामिति चतुर्मन्त्रैश्चतुर्धा व्यूहते हविः ।
यो वामित्यष्टभिर्मन्त्रैरुपहोमा उदीरिताः ॥ १ ॥
द्विपात्स्वित्यादिना मन्त्र भेदस्सप्तविधो भवेत् ।
त्रयोदशेनुवकेस्मिन्मन्त्रा द्वादश कीर्तिताः ॥ २ ॥

அவியை நான்காகப் பகுத்தல், உபஹோமம், மந்திரங்களை அநுஷங்கஞ் செய்துகொண்டு மந்திரங்களை வெவ்வேறாக்கல் என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

பதின்மூன்றுவது அநுவாகம்

மூன்று பஞ்சாசிகட்குமேல் இருபத்தாறு பதங்களைக் கொண்டது.

பாவமுடையவனுக்கு இஷ்டியை விதிக்கும் மந்திரங்கள்

या वामिन्द्रावरुणा यतव्या तनूस्तयेममꣳहसो मुञ्चतं या वामिन्द्रावरुणा सहस्या रक्षस्या तेजस्या तनूस्तयेममꣳहसो मुञ्चतं यो वामिन्द्रावरुणा द्विपात्सु पशुषु चतुष्पात्सु गोष्ठे गृहेष्वप्स्वोषधीषु वनस्पतिषु स्रामस्तं वामेतेनाव यज इन्द्रो वा एतस्य ॥ १ ॥ इन्द्रियेणापक्रामति वरुण एनं वरुणपाशेन गृह्णाति यः पाप्मना गृहीतो भवति यः पाप्मना गृहीतस्स्यात्तस्मा एतामैन्द्रावरुणीं पयस्यां निर्वपेदिन्द्र एवास्मिन्निन्द्रियं दधाति वरुण एनं वरुणपाशान्मुञ्चति पयस्या भवति पयो हि वा एतस्मादपक्रामत्यथैष पाप्मना गृहीतो यत्पयस्या भवति पय एवास्मिन्तया दधाति पयस्यायाम् ॥ २ ॥ पुरोडाशमव दधात्यात्मन्वन्तमेवैनं करोत्यथो आयतनवन्त-

मेव चतुर्धा व्यूहति दिक्ष्वेव प्रति तिष्ठति पुनस्समूहति दिग्भ्य-
एवास्मै भेषजं करोति समूह्यावं द्यति यथाऽऽविद्धं निष्कृन्तति
तादृगेव तद्यो वामिन्द्रावरुणावग्नौ स्नामस्तं वामेतेनावं यज
इत्याहैतावतीर्वा आप ओषधयो वनस्पतयः प्रजाः पशव
उपजीवनीयास्ता एवास्मै वरुणपाशान्मुञ्चति ॥ ३ ॥

இதில், பாவங்களாற் பீடிக்கப் பட்டவனுக்கு இஷ்டிகள் விதிக்கப்படுகின்றன.

முதலாவது மந்திரம்

இந்திர வருணர்களுடைய புரோடாசம் ஆமிக்ஷை என்பவைகளை யெடுப்பதைக் கூறுகின்றது

या वामिन्द्रावरुणा यतव्या तनूस्तयेममꣳहसो मुञ्चतम् ।

என்பது

உரை

இந்திரவருணர்களே! உங்களுடைய எவ்வுடம்புகள் பாவத்தினின்றும் எசமானனை நீக்குவதற்கு முயல்கின்றனவோ, அவைகளால் பாவத்தினின்றும் எம்மை விடுவிப்பீர்களாக என்பதாம்.

இரண்டாவது மூன்றாவது நான்காவது மந்திரங்கள்

या वामिन्द्रावरुणा सहस्या रक्षस्या तेजस्या तनूस्तयेममꣳहसो मुञ्चतम् ।

என்பது

உரை.

வன்மைக் குரியதும், பாதுகாப்பிற் குரியதும், விளக்குவதற் குரியதுமான உடம்புகளால் பாவத்தைப் போக்குவீர்களாக. 'உடம்புகளால் பாவத்தைப் போக்குவீர்களாக' என்பதை மற்றிரண்டிடத்துஞ் சேர்த்துக் கொள்க என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

உபஹோமத்தில் முதல் மந்திரம்

यो वामिन्द्रावरुणावग्नौ स्रामस्तं वामेतेनाव यजे ।

என்பது.

உரை

இந்திரவருண அக்கினி என்பவர்களே! உங்களுடைய ஹோமத்தின் பொருட்டுள்ள தீக்கு எசமானன் என்னபிழைகள் செய்துள்ளானோ, அத்தகைய உங்களைப் பற்றிச் செய்த பாவங்களை இந்த ஹோமத்தால் நீக்குகின்றேன் என்பதாம்.

மந்திரங்கள் 6 - 12.

இரண்டாவது முதலிய ஏழு மந்திரங்கள்

यो वामिन्द्रावरुणा द्विपात्सु पशुषु चतुष्पात्सु गोष्ठे गृहेष्वप्स्वोषधीषु वनस्पतिषु स्रामस्तं वामेतेनाव यजे ।

என்பது

உரை.

இந்திர வருணர்களே! உங்களைப் பற்றிய எசமானன் இருகாற் பிராணிகளிடத்தும், நாற்காற் பிராணிகளிடத்தும், நீரிடத்தும், கோஷ்டத்திலும், வீட்டிலும், கொடி செடிகளிடத்தும், வனஸ்பதிகளிடத்துஞ் செய்துள்ள பாவத்தை உங்களுடைய இத்தகைய இஷ்டிக் கருமத்தாற் போக்குகின்றேன் என்பதாம். 'எசமானன் செய்துள்ள பாவத்தை' என்பது முதலியவற்றை ஏழிடத்துஞ் சேர்த்துக்கொள்க என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 1.

इन्द्रो वा एतस्येन्द्रियेणाप क्रामति वरुण एनं वरुणपाशेन गृह्णाति यः पाप्मना गृहीतो भवति यः पाप्मना गृहीतस्स्यात्तस्मा एतामैन्द्रावरुणीं पयस्यां निर्वपेदिन्द्र एवास्मिन्निन्द्रियं दधाति वरुण एनं वरुणपाशान्मुञ्चति ।

என்பது

உரை.

இந்திரன், பாவஞ்செய்தவனை இந்திரியத்துடன் கூட விலக்கிவிடுகின்ருன். வருணன் துன்புறுத்துகின்ருன். ஆதலின், இந்திரனுக்கும் வருணனுக்கும் உரிய ஆமிட்சையைச் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

அந்த ஆமீக்ஷையைப் (முறிந்தபாலே) புகழ்கின்றது

பிராமணம் 2.

पयस्या भवति पयो हि वा एतस्मादपक्रामत्यथैष पाप्मना गृहीतो यत्पयस्या भवति पय एवास्मिन्तया दधाति ।

என்பது.

உரை

பால் என்றதால் சத்துவகுண வுணவால் உண்டாகும் ஆதரவால் வரும் புண்ணியங் கொள்ளப்படுகின்றது. அப்புண்ணியாநுட்டானத்தின் குற்றமே பாவமாய்க் கவர்ந்து கொண்டது. ஆதலின் முறிந்த பாலே அவியாகக் கொள்ளின் புண்ணியம் வந்ததாகின்றது என்பதாம்.

இதிற் சேராத சில கூறுகளின் விசேடம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 3.

पयस्यायां पुरोडाशमव दधात्यात्मन्वन्तमेवैनं करोत्यथो आयतनवन्तमेव ।

என்பது

உரை.

உடம்பைப் போன்ற உறுதியான புரோடாசத்தை ஆகுதி செய்வதால் உடம்பை வன்மையுடையதாகச் செய்கின்றது. பாவமிருக்கில் அதனாலெழும் நோய் வலிகுறையும். மற்றும், பால் ஆதாரமாதலின் எசமானனும் கிராம முதலிய இடத்தை ஆதாரமாகக் கொள்கின்ருன் என்பதாம்.

'யாவாமிந்திராவருணா' என்பது முதலிய மந்திரத்தால் அவிகளை எத்தனையாய்ப் பகுத்தல் வேண்டும் என்பதை விதிக்கின்றது

பிராமணம் 4.

चतुर्धा व्यूहति दिक्ष्वेव प्रति तिष्ठति ।

என்பது

உரை.

நான்காகப் பிரிக்கப் படுகின்றது என்பதாம்.

பிரித்ததை ஒன்றுக்கல் வேண்டும் மென்று விதிக்கின்றது

பிராமணம் 5.

पुनस्समूहति दिभ्य एवास्मै भेषजं करोति ।

என்பது

உரை

மீண்டும் ஒன்றுக்கப் படுகின்றது என்பதாம்.

ஒன்றுக்கிய புரோடாச ஆமிக்ஷைகளை ஒன்றகவே எடுத்தல் வேண்டும்
என்னும் விதி

பிராமணம் 6.

समूह्याव द्यति यथाऽऽविद्धं निष्कृन्तति तादृगेव तत् ।

என்பது

உரை.

பகைவனுல் விடப்பட்ட அம்பு உடம்பில் பாய்ந்துவிடில் கொறட்டால் பிடுங்கி எடுக்கப்படுகின்றது போலவே அவியைக் கிள்ளி எடுத்துக் கொள்ளல் வேண்டு மென்பதாம்.

உப்ஹோமத்தின் முதலாவது மந்திரத்தை விரித்துரைக்கின்றது

பிராம்ணம் 7.

यो वामिन्द्रावरुणावग्नौ स्रामस्तं वामेतेनाव यज इत्याह दुरिष्ट्या एवैनं पाति ।

என்பது.

உரை

ஹோமத்திற்கு ஆதாரமாகிய தீக்குச் செய்த பாவத்தால் இஷ்டி கெட்டு விடுகின்றது. அப் பிழையை நீக்குவாயாக என்றதால் அதிலிருந்து எசமானனைப் பாதுகாக்கின்றது என்பதாம்.

எஞ்சிய மந்திரங்களின் கருத்தை விளக்குகின்றது

பிராமணம் 8.

यो वामिन्द्रावरुणा द्विपात्सु पशुषु स्रामस्तं वामेतेनाव यज इत्याहैतावतीर्वा आप ओषधयो वनस्पतयः प्रजाः पशव उपजीवनीयास्ता एवास्मै वरुणपाशान्मुञ्चति ।

என்பது

உரை.

பிராணி முதலிய எழுவகைப் பொருள்களையும் எசமானன் பொருட்டு வருணனுடைய கட்டிலிருந்து விடுவிக்கின்றது என்பதாம்.

பதின் மூன்றாவது அநுவாகம்

முற்றிற்று

பதினான்காவது அநுவாக விடயச் சுருக்கம்

यज्ञविभ्रष्टयागेतु याज्यास्सप्तनिकेतिच ।
इन्द्रमिन्द्रं चैन्द्रयागे त्वं नस्सौम्यचरौतथा ॥ १ ॥
अग्नीकामप्रापकेऽग्नी ब्रह्मवर्चसिनस्त्रयम् ।
आप्या संते चरौ सौम्ये गणा ग्रामपदेत्रयम् ।
मरु यागे नाशकेष्टावर्यमाऽऽर्यमणेचरौ ।
बुध्नादैन्द्रे प्रयस्तिस्रो बार्हस्पत्यानुषूकके ॥ २ ॥
पञ्चविंशति तत्रोक्ता अनुवाके चतुर्दशे ।

மூன்று அவிகளைக் கொண்ட விப்ரஷ்டேஷ்டி, இந்திர இஷ்டி, சௌம்ய இஷ்டி, இச்சித்ததை அடைய விரும்பியவன் செய்யவேண்டிய இஷ்டி, பிரம்ஹ வர்சசை விரும்பியவன் செய்யவேண்டிய இஷ்டி, சோம்சரு இஷ்டி, கிராமத்தை யடைய விரும்பியவன் செய்யவேண்டிய மூன்று அவிகளை கொண்ட இஷ்டி, வைசியன் கெட்டுப்போக விரும்பிய அந்தணன் செய்யவேண்டிய இஷ்டி, அர்யம இஷ்டி, மூன்று அவிகளைக் கொண்ட ஆனுஷூகம் என்னும் இஷ்டி, என்னுமிவைகட்கு முறையே ஒவ்வொரு அவிக்கும் இரண்டிரண்டு இருக்குக்களாக யாஜ்யா புரோநுவாக்கியங்கள் என்பது.

இரண்டாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

பதினான்காவது அநுவாகம்

ஆறுபஞ்சாதிகட்குமேல் ஒன்பது பதங்களைக் கொண்டது.

காமிய பாஜ்ய புரோநுவாக்கியங்களைக்கூறும் மந்திரங்கள்

स प्रत्वन्नि काव्येन्द्र वो विश्वतस्परीन्द्रं नरः । त्वं नस्सोम विश्वतो रक्षा राजन्नघा यतः । न रिष्येत्त्वावतस्सखा । या ते धामानि दिवि या पृथिव्यां या पर्वतेष्वोषधीष्वप्सु । तेभिर्नो विश्वैः सुमना अहेळन्राजन्त्सोम प्रति हव्या गृभाय । अग्नीषोमा सवेदसा सहूती वनतं गिरः । सं देवत्रा बभूवथुः । युवम् ॥ १ ॥ एतानि दिवि रोचनान्यग्निश्च सोम सक्रतू अधत्तम् । युवꣳ सिन्धूꣳरभिशस्तेरवद्यादग्नीषोमावमुञ्चतं गृभीतान् । अग्नीषोमाविमꣳ सु मे शृणुतं वृषणा हवम् । प्रति सूक्तानि हर्यतं भवतं दाशुषे मयः । आऽन्यं दिवो मातरिश्वा जभारामथ्नादन्यं परि श्येनो अद्रेः । अग्नीषोमा ब्रह्मणा वावृधानोरुं यज्ञाय चक्रथुरु लोकम् । अग्नीषोमा हविषः प्रस्थितस्य वीतम् ॥ २ ॥ हर्यतं वृषणा जुषेथाम् । सुशर्माणा स्ववसा हि भूतमथा धत्तं यजमानाय शं योः । आ प्यायस्व सं ते । गणानां त्वा गणपतिꣳ हवामहे कविं कवीनामुपमश्रवस्तमम् । ज्येष्ठराजं ब्रह्मणां ब्रह्मणस्पत आ नः शृण्वन्नूतिभिस्सीद सादनम् । स इज्जनेन स विशा स जन्मना स पुत्रैर्वाजं भरते धना नृभिः । देवानां यः पितरमाविवासति

॥ ३ ॥ श्रद्धामना हविषा ब्रह्मणस्पतिम् । स सुष्टुभा स ऋक्वता गणेन वलꣳ रुरोज फलिगꣳ रवेण । बृहस्पतिरुस्रिया हव्यसूदः कनिक्रदद्वावशतीरुदाजत् । मरुतो यद्ध वो दिवो या चश्शर्म । अर्यमाऽऽयाति वृषभस्तुविष्मान्दाता वसूनां पुरुहूतो अर्हन् । सहस्राक्षो गोत्रभिद्वज्रबाहुरस्मासु देवो द्रविणं दधातु । ये तेऽर्य-मन्बहवो देवयानाः पन्थानः ॥ ४ ॥ राजन्दिव आचरन्ति । तेभिर्नो देव महि शर्म यच्छशं न एधि द्विपदे शं चतुष्पदे । बुध्नादग्रमङ्गिरोभिर्गृणानो वि पर्वतस्य दृꣳहितान्यैरत् । रुजद्रो-धाꣳसि कृत्रिमाण्येषाꣳ सोमस्य ता मद इन्द्रश्चकार । बुध्नादग्रेण वि मिमाय मानैर्वज्रेण खान्यतृणन्नदीनाम् । वृथाऽसृजत्पथिभिर्दीर्घयाथैस्सोमस्य ता मद इन्द्रश्चकार ॥ ५ ॥ प्र यो जज्ञे विद्वाꣳ अस्य बन्धुं विश्वानि देवो जनिमा विवक्ति । ब्रह्म ब्रह्मण उज्जभार मध्यान्नीचादुच्चा स्वधयाऽभि प्र तस्थौ । महान्मही अस्तभायद्वि-जातो द्याꣳ सद्म पार्थिवं च रजः । स बुध्नादाष्ट जनुषाऽभ्यग्रं बृहस्पतिर्देवता यस्य सम्राट् । बुध्नाद्यो अग्रमभ्यर्त्योजसा बृह-स्पतिमा विवासन्ति देवाः । भिनद्वलं वि पुरो दर्दरीति कनिक्रद-त्सुवरपो जिगाय ॥ ६ ॥

இப்பிரபாடகத்தின் அநுவாகத் தலைப்புச் சொற்கள்

आदित्येभ्यो देवा वै मृत्योर्देवा वै सत्रमासतैन्द्रम्णे प्रजापते त्रयस्त्रिꣳशत्प्रजापतिर्देवेभ्योऽन्नाद्यं देवासुरास्तान्त्वजनो ध्रुवोऽसि ।

புரோநுவாக்கியம்)

यन्नवमैदग्नि वै प्रजापतिर्वरुणाय या वामिन्द्रावरुणा स प्रत्नवच्चतु-
र्दश ॥ १४ ॥

பஞ்சாதிகளின் தலைப்புச் சொற்கள்

आदित्येभ्यस्त्वष्टुरसौ दानकामा एवाव रुन्धेऽग्नि वै स प्रत्नव-
त्षट्पञ्चाशत् ॥ ५२ ॥

1-2-3-4-வது மந்திரங்கள்

மூன்றாவது அநுவாகத்திற்கூறிய மூன்று அவிகளைக்கொண்டு யாகஞ்செய்து பலனடைந்ததின் பொருட்டுச் சொல்லப்படும் இவ்விஷ்டியின் முதலாவது இரண்டாவது அவிகட்கு முறையே யாஜ்யாநுவாக்கியங்களின் தலைப்புச் சொற்கள் கூறப்படுகின்றன:—

स प्रत्नवन्नि काव्येन्द्रं वो विश्वतस्परीन्द्रं नरः ।

என்பது.

உரை.

'சப்ரத்னவந்நவீயஸா' என்பது புரோநுவாக்கியம், "நிகாவ்யாவேதஸா" என்பது யாஜ்யா வாக்கியம். இவைகட்கு, 'ஹிரண்ய கர்ப்பஆப:' என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டுள்ளது. "இந்திரம் வோவிஸ்வத: பரி" என்பது புரோநு வாக்கியம், "இந்திரம் நரோநேமதிதா" என்பது யாஜ்யா வாக்கியம். இவ்விரண்டையும் ஐந்திர அவியிற் காண்க. இவ்விரண்டிற்கும், மூன்றாங்காண்டம் ஆறும் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டுள்ளது என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

சோமத்தின் அவித்துப் புரோநுவாக்கியம்:—

त्वं नस्सोम विश्वतो रक्षा राजन्नघायतः । न रिष्येत्त्वावतस्सखा ।

என்பது

உரை.

சோமராசமே! நீ எல்லாப் பாவங்களிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக. உன்னைப் போன்ற ஆற்றலுடையோரால் யான் துன்புறுத்தப்படாதொழிவேனாக என்பதாம்.

ஆறுவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியம்

या ते धामानि दिवि या पृथिव्यां या पर्वतेष्वोषधीष्वप्सु । तेभिर्नो विश्वैः सुमना अहेडन्राजन्त्सोम प्रति हव्या गृभाय ।

என்பது

உரை

சோமராசனே! நீ, வானுலகிலுள்ள உன்னுடைய எல்லா விடங்களிலுமிருந்து கொண்டு எமது அவியை ஏற்றுக்கொள்வாயாக என்பதாம்.

ஏழாவது மந்திரம்

'அக்னீஷோமீயம் ஏகாதசகபாலம் நிர்வபேத் யம் காமோநோபநமேதி'

என்பதற்குப் புரோநுவாக்கியம்

अग्नीषोमा सवेदसा सहूती वनतंगिरः । सं देवत्रा बभूवथुः ।

என்பது

உரை

ஒத்த அறிவுடையவர்களும், ஒன்றாக அழைக்கப்பெற்றவர்களும், தேவர்களுக்குள் கூடியே இருக்கின்றவர்களுமான அக்கினி சோமர்கள் எமது அவியை ஏற்றுக் கொள்வார்களாக என்பதாம்.

எட்டாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியம்

युवमेतानि दिवि रोचनान्यग्निश्च सोम सक्रतू अधत्तम् । युवꣳ सिन्धूꣳरभिशस्तेरवद्यादग्नीषोमावमुञ्चतं गृभीतान् ।

என்பது

உரை

சோமமே! அக்கினியும் நீயும் ஒத்த சங்கற்பமுடையவர்களாய் வானில் நட்சத்திரங்களை நிறுவியிருக்கின்றீர்கள். அக்கினி சோமர்களே! நீவிர், சிந்து முதலிய நதிகளையுங் குற்றமற்றவைகளாக்கினீர்கள் என்பதாம்.

புரோநுவாக்கியம்)

ஒன்பதாவது மந்திரம்

'அக்னீஷோமீய மஷ்டாகபாலம் நிர்வபேத் பிரமவர்சஸகாம:' என்பதற்குப் புரோநுவாக்கியம்

अग्नीपोमाविमꣳ सु मे शृणुतं वृपणा हवम्। प्रति सूक्तानि हर्यतं भवतं दाशुषे मयः।

என்பது

உரை

வேண்டியதையளிக்கும் அக்கினி சோமர்களே! நீவிர், யாம் அழைப்பதைக் கேட்பீர்களாக. எமது சுகத்தில் கவனம் வைப்பீர்களாக. அவியளிக்கு யசமானனுக்குச் சுகத்தைக் கொடுப்பீர்களாக என்பதாம்.

பத்தாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியம்

आऽन्यं दिवो मातरिश्वा जभारामथ्नादन्यंपरि श्येनो अद्रेः। अग्नीषोमा ब्रह्मणा वावृधानोरुं यज्ञाय चक्रथुरु लोकम्।

என்பது

உரை

அக்கினி சோமர்களே! உங்களைக் குறித்து வாயு ஒரு அக்கினியை வானிலிருந்து கொண்டு வந்தது, காயத்திரி, பறவையாய் உங்களை முன்னிட்டுப் போராடி சோமத்தைக் கொண்டுவந்தது. உங்களை முன்னிட்டு வேள்வியில் மந்திரத்தால் அதை வளர்த்து வேள்வியின் பயனாகிய உலகைத் தேடிக் கொண்டனர் என்பதாம்.

பதினொன்றாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே விகற்பமாகிய யாஜ்யாவாக்கியம்

अग्नीपोमा हविपः प्रस्थितस्य वीतꣳ हर्यतं वृपणा जुपेथाम्। सुशर्माणा स्ववसा हि भूतमथा धत्तं यजमानाय शं योः।

என்பது

உரை

வேண்டியவற்றையளிக்கும் அக்கினி சோமர்களே! உங்கட்கு அர்ப்பணஞ் செய்த அவியின் சாரத்தை யருந்துவீர்களாக. நீங்கள் நல்ல, சுகமுடையவர்களும், பாதுகாப்புடையவர்களுமாவீர்களாக. பிறகு, வேள்வித் தலைவன் பொருட்டு சுகத்தையும் புத்திரனையுங் கொடுப்பீர்களாக என்பதாம்

12 - 13-வது மந்திரங்கள்

'சோமாய வாஜினே ஶ்யாமகம்சரும் நிர்வபேத்' என்பதன் யாஜ்யா புரோநு வாக்கியங்களின் தலைப்புச் சொற்கள்

आ प्यायस्व सं ते ।

என்பது

உரை

'ஆப்யாயஸ்வ ஸமேதுதே' என்பது புரோநுவாக்கியம். ஸ்ம்தே பயாம்ஸி' என்பது யாஜ்யாவாக்கியம். இவ்விரண்டும், மேல் நான்காங் காண்டம் இரண்டாம் பிரபாடகம், 'மாநோஹிம்ஸீத்' என்னும் அநுவாகத்தில் கூறப்படுவதாம். ஆண்டே இதற்கு உரையுங் கூறப்படும் என்பதாம்.

பதினான்காவது மந்திரம்

'ப்ராமணஸ்பத்யம் ஏகாதசகபாலம் நிர்வபேத் கிராமகாம:' என்பதற்குப் புரோநுவாக்கியம்

गणानां त्वा गणपतिं हवामहे कविं कवीनामुपमश्रवस्तमम् । ज्येष्ठराजं ब्रह्मणां ब्रह्मणस्पत आ नः शृण्वन्नूतिभिस्सीद सादनम् ।

என்பது

உரை

கவிகளுக்குட் சிறந்த கவியும், எல்லாவற்றிற்கும் உவமையாகக் கூறப்படுவதென்னும் பெருமையையுடையதும், அரசர்களுக்குட் சிறப்புடையதும், எல்லா மந்திரங்கட்கும் இறையுமாகிய தேவகணத் தலைவ! உன்னையழைக்கின்றோம். கூறிய குணங்களையுடைய நீ எமது வேள்வியைப் பாதுகாத்தற் பொருட்டு வந்து இதை அடைவாயாக என்பதாம்.

பதினைந்தாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியம்

स इज्जनेन स विशा स जन्मना स पुत्रैर्वाजं भरते धना नृभिः । देवानां यः पितरमाविवासति श्रद्धामना हविषा ब्रह्मणस्पतिम् ।

என்பது

உரை

எவ்வெசமானன், அன்புடையவனைத் தேவர்களைப் பாதுகாக்கும் பிரமணப்பதியை தனது அவியால் நன்கு வழிபடுகின்றானோ, அவனே, ஏவலாளர்களுடன்கூட உணவுப் பொருளையும் உடையவனாகின்றான். அங்ஙனமே, வரிகொடுக்கும் வகையாலும், அந்தணன் முதலிய பிறப்புடனும், புத்திரனோடும் உணவுப்பொருளையும் நிறைய அடைகின்றான். மற்றும், அவனே, சுற்றத்தார்களுடன் கூட தனங்களையும் நிறைய அடைகின்றான் என்பதாம்.

பதினாறாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே விகற்பமாகிய யாஜ்யாவாக்கியம். அல்லது, அதற்கு உபஹோமமந்திரம்

स सुष्टुभा स ऋक्वता गणेन वलꣳ रुरोज फलिगꣳ रवेण । बृहस्पतिरुस्रि-
या हव्यसूदः कनिक्रदद्वावशतीरुदाजत् ।

என்பது

உரை

அத்தகைய தேவன், சாமப்பாடலாகிய அங்கங்களையுடைய அழகிய இருக்கு மந்திரத்தொகுதியின் ஒலியால் களிப்புடையனாகி வன்மையுடைய தடைகளைப் பொடியாக்குகின்றான். பிருகற்பதி, இந்த அவி மிக இனியது என்று கூறிக்கொண்டு, பால்நிறைந்ததால் கன்றை நினைத்துக் கதறும் பாற்பசுக்களை எசமானன் வீட்டுக்குச் செலுத்துகின்றான் என்பதாம்.

---

17 - 18-வது மந்திரம்

'ஏதாமேவ நிர்வபேத்' என்பது முதலியால் விதித்த யாஜ்யாநுவாக்கியத்திற்குத் தலைப்புச் சொற்கள்

मरुतो यद्ध वो दिवो या वश्शर्म ।

என்பது

உரை

இதற்கு உரை முதற் காண்டம் ஐந்தாம் பிரபாடகத்திற் கூறப்பட்டது என்பதாம்.

பத்தொன்பதாவது மந்திரம்

'அர்யமணே சரும் நிர்வபேத் சுவர்க்ககாம:' என்று நான்காம் அநுவாகத்திற் கூறியதற்குப் புரோநுவாக்யம்

अर्यमाऽऽयाति वृषभस्तुविष्मान्दाता वसूनां पुरुहूतो अर्हन्। सहस्राक्षो गोत्रभिद्वज्रबाहुरस्मासु देवो द्रविणं दधातु।

என்பது.

உரை

வேண்டியவற்றை அளிப்பதும், பேராற்றலுடையதும், தனத்தைக் கொடுப்பதும், பல்வகை வேள்விகளில் அழைக்கப் பெறுவதும், சுவர்க்கத்தை அளிக்கத் தக்கதும், ஆயிரங் கண்களையுடையதும், மலையைப் பிளந்ததும் வச்சிரத்தைக் கையிற்றாங்கியதுமாகிய அரியமா என்னும் ஆதித்த தேவதை வருகின்றது. வந்து எங்களுக்குத் தனத்தைக் கொடுக்கும் என்பது. இதனால் இந்திரனுடைய குணங்களால் ஆதித்தன் போற்றப்படுகின்றான் என்பதை யுணர்க.

இருபதாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியம்

ये तेऽर्यमन्बहवो देवयानाः पन्थानो राजन्दिव आचरन्ति। तेभिर्नो देव महि शर्म यच्छ शं न एधि द्विपदे शं चतुष्पदे।

என்பது

உரை

சூரிய! (அர்யமா) தேவர்கள் செல்லும் உனது மார்க்கங்கள் சுவர்க்கம் வரையிற் போகின்றன. அம்மார்க்கங்களால் எமக்குச் சுகங் கொடுப்பாயாக. எமது மக்கட்குஞ் சுகங் கொடுப்போனுவாயாக. பசு முதலியவைகட்குஞ் சுகங் கொடுப்பாயாக என்பது. இதுவே மற்றிரண்டுக்கும் யாஜ்யாநுவாக்கியங்களாகின்றன.

இருபத்தைந்தாவது மந்திரம்

'யோராஜன்யம:' என்பது முதலியவற்றிற்கு புரோநுவாக்கியம்

वृघाद्रिमङ्गिरोभिर्गृणानो वि पर्वतस्य दृंहितान्यैरत्। रुजद्रोधांसि कृत्रिमाण्येषां सोमस्य ता मद इन्द्रश्चकार।

என்பது

உரை

கருமத் தொடக்கத்திலிருந்து முடிவுவரை அங்கிராமுனிக் கோப்பான வேள்விச் செயலாளர்களால் துதிக்கப்பெற்ற இந்திரன், சோமரசத்தினால் மதங்கொண்டு மலைபோன்று வரும் இடையூற்றைக் களைந்தனன் என்பதாம்.

இருபத்திரண்டாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியம்

बुध्नादग्रेण वि मिमाया मानैर्वज्रेण खान्यतृणन्नदीनाम् । वृथाऽसृजत्पथिभिर्दीर्घयाथैस्सोमस्य ता मद इन्द्रश्चकार ।

என்பது

உரை

இந்திரன் விளையாட்டாக நதிகளில் நீரோட்டத்திற்குத் தடையாயிருந்த மலை முதலியவைகளை உடைத்தெறிந்துவிட்டு நேர்நெறியாக ஓடும் நதிகளை யுண்டாக்கினன் என்பதாம்.

இருபத்து மூன்றாவது மந்திரம்

'யோ ப்ராஹ்மண' என்பது முதலிய வற்றிற்குப் புரோநு வாக்யம்

प्र यो जज्ञे विद्वाँ अस्य बन्धुं विश्वानि देवो जनिमा विवक्ति । ब्रह्म ब्रह्मण उज्जभार मध्यान्नीचादुच्चा स्वधयाऽभि प्र तस्थौ ।

என்பது

உரை

எல்லாவற்றையு முணரும் பிருகற்பதி தேவன், வேள்வித் தலைவனுடைய சுற்றத்தார்களின் அநுகூலம் இதுவென உணர்கின்றான். இது எதனாலெனின்? எல்லா வுயிர்களின் பிறப்புக்களையும் பிரிக்கின்றான், மீண்டும் மீண்டும் கூறுகின்றான் ஆதலினென்க. வேதத்தினுடைய உத்தம பாகம் மத்திய பாகத்திலிருந்து கரும வகைகளைப் பிரித்தெடுத்தனன். தத்துவத்தைப் பெருமையளிக்க வேள்வித் தலைவன்பால் வந்தனன் என்பதாம்.

இருபத்துநான்காவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியம்

महान्मही अस्तभायद्वि जातो द्याँ सद्म पार्थिवं च रजः । स बुध्नादाष्ट जनुषाऽभ्यग्रं बृहस्पतिर्देवता यस्य सम्राट् ।

என்பது

உரை

பேராற்றல்கொண்ட பிருகற்பதி தேவன், தோற்றுமாத்திரத்தால் வானையும் மண்ணையும் நிறுவினன். இறைவன் படைப்பாமெனினும் இது பிருகற்பதியின் துதியாம். பரமேசுரன் அருளால் பிருகற்பதியே செய்கின்றானெனினும் ஒவ்வும். இவ்வாறு பிருகற்பதியின் சாமர்த்தியத்தையடைந்தவன் பிறப்புமாத்திரத்தால் தொடங்கியகருமத்தின் முடிவுவரை செய்து முடிக்கின்றான். பிருகற்பதியின் அநுக்கிரகத்தால் எவ்வாற்றானும் மேன்மையையே யடைகின்றான் என்பதாம்.

இருபத்தைந்தாவது மந்திரம்

மேற்கூறிய அதற்கே விகற்பமாகிய யாஜ்யாவாக்கியம்

बुध्नाद्यो अग्रमभ्यर्त्योजसा बृहस्पतिमा विवासन्ति देवाः । भिनद्वलं वि
पुरो दर्दरीति कनिक्रदत्सुवरपो जिगाय ।

என்பது

பிருகற்பதி தேவன் உலககருமத்தின், அல்லது உடம்பின் முதலிலிருந்து கடை வரை கலந்திருக்கின்றான்; ஆதலின் அவனை எல்லாத் தேவர்களும் வழிபடுகின்றார்கள். எசமானனைச் சேர்ந்தவர்களுக்குள் பெரியவனை வேறாக்கிவிட்டு ஏனையோர்கட்கு தடையை நீக்கிவிட்டு பூமி நீர் முதலியவைகளைத் தேடினன் என்பதாம்.

பதினான்காம் அநுவாகம்

முற்றிற்று.

மூன்றாம் பிரபாடகம்

முடிந்தது.

நான்காம் பிரபாடகத்தின்
விடயச்சுருக்கம்

प्रपाठकेद्वितीयेच तृतीयेचेष्टयः क्रमात् ॥
प्रोक्तास्तत्रावशिष्टास्तुवक्ष्यन्तेऽस्मिंश्चतुर्थके ॥ १ ॥

இரண்டாவது மூன்றாவது பிரபாடகங்களில், முறையே காமிய இஷ்டிகள் சொல்லப்பட்டன. இந் நான்காம் பிரபாடகத்தில் மீந்த சிலஇஷ்டிகள் விதிக்கப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்
முதலாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

பகைவரை யுடையவன் செய்யவேண்டிய இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

देवा मनुष्याः पितरस्तेऽन्यत आसन्नसुरा रक्षाꣳसि पिशाचास्तेऽन्यतस्तेषां देवानामुत यदल्पं लोहितमकुर्वन्तद्रक्षाꣳसि रात्रीभिरसुभ्नन्तान्त्सुब्धान्मृतानभि व्यौच्छत्ते देवा अविदुर्यो वै नोऽयं म्रियते रक्षाꣳसि वा इमं घ्नन्तीति ते रक्षाꣳस्युपामन्त्रयन्त तान्यब्रुवन्वरं वृणामहै यत् ॥ १ ॥ असुराञ्जयाम तन्नस्सहासदिति ततो वै देवा असुरानजयन्तेऽसुराञ्जित्वा रक्षाꣳस्यपानुदन्त तानि रक्षाꣳस्यनृतमकर्तेति समन्तं देवान्पर्यविशन्ते देवा अग्नावनाथन्त तेऽग्नये प्रवते पुरोडाशमष्टाकपालं निरवपन्नग्नये विबाधवतेऽग्नये प्रतीकवते यदग्नये प्रवते निरवपन्यान्येव पुरस्ताद्रक्षाꣳसि ॥ २ ॥ आसन्तानि तेन प्राणुदन्त यदग्नये विबाधवते यान्येवाभितो रक्षाꣳस्यासन्तानि तेन व्यबाधन्त यदग्नये प्रतीकवते यान्येव पश्चाद्-

क्षाꣳस्यासन्तानि तेनापानुदन्त ततो देवा अभवन्पराऽसुरा यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमान एतयेष्ट्या यजेताग्नये प्रवते पुरोडाशमष्टाकपालं निर्वपेदग्नये विबाधवते ॥ ३ ॥ अग्नये प्रतीकवते यदग्नये प्रवते निर्वपति य एवास्माच्छ्रेयान्भ्रातृव्यस्तं तेनप्रणुदते यदग्नयेविबाधवते य एवैनं सदृङ्तं तेन वि बाधते यदग्नये प्रतीकवते य एवास्मात्पापीयान्तं तेनाप नुदते प्रश्रेयाꣳसं भ्रातृव्यं नुदतेऽति सदृशं क्रामति नैनं पापीयानाप्नोति य एवं विद्वानेतयेष्ट्यायजते ॥ ४ ॥

மூன்று அவிகள் கொண்ட ஒரு இஷ்டியை விதித்தற் பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

देवा मनुष्याः पितरस्तेऽन्यत आसन्नसुरा रक्षाꣳसि पिशाचास्तेषां देवानामुत यदल्पं लोहितमकुर्वन्तद्रक्षाꣳसि रात्रीभिरसुभ्नन्तान्त्सुब्धान्मृतानभि व्यौच्छत्ते देवा अविदुर्यो वै नोऽयं म्रियते रक्षाꣳसिवा इमं घ्नन्तीति ते रक्षाꣳस्युपामन्त्रयन्त तान्यब्रुवन्वरं वृणामहै यदसुराञ्जयाम तन्नस्सहासदिति ततो वै देवा असुरानजयन्तेऽसुराञ्जित्वा रक्षाꣳस्यपानुदन्त तानि रक्षाꣳस्यनृतमकर्तेति समन्तं देवान्पर्यविशन्ते देवा अग्नावनाथन्ततेऽग्नये प्रवते पुरोडाशमष्टाकपालं निरवपन्नग्नये विबाधवतेऽग्नये प्रतीकवते यदग्नये प्रवते निरवपन्यान्येव पुरस्ताद्रक्षाꣳस्यासन्तानि तेन प्राणुदन्त यदग्नये विबाधवते यान्येवाभितो रक्षाꣳस्यासन्तानित्ते न व्यबाधन्त यदग्नये प्रतीकवते यान्येव पश्चाद्रक्षाꣳस्यासन्तानि तेनापानुदन्त ततो देवा अभवन्पराऽसुराः ।

என்பது

உரை.

ஒருகால் தேவர்களுடைய சைன்யமும் அசுரர்களுடைய சைன்யமும் போரிடத் தொடங்கிற்று, அதில், தேவர்கட்குச் சிறிது காயம்படில் அதில்

இரத்தம் ஒழுகுமிடத்து நடோறும் இரவில் இராக்கதர்கள் வந்து அதிற் புகுந்து விஷப்பிரயோகத்தால் அவ் விரத்தத்தைக் கலக்கி விடுவதால் விடியற் காலையில் அவர்கள் இறந்துவிடுவார்கள். இவ்வாறு நடக்கும்போது இது இராக்கதர்களுடைய செயலெனத் தெரிந்து இராக்கதர்களைக் கொண்டு அவர்களை தண்டித்து தம்வசப்படுத்திக் கொண்டனர்; கொள்ளவே, இராக்கதர்கள் தேவர்களுடைய சைன்யத்துடன் சேர்ந்துகொண்டனர். அதனால் தேவர்கள் அசுரர்களைவென்ற பிறகு இராக்கதர்களை வெளியேற்றி விட்டனர். அதைக் கண்ட இராக்கதர்கள் முனிவுற்றுத் தேவர்களைச் சூழ்ந்துகொண்டு கொல்லத் தொடங்கினர். அப்போது, தேவர்கள் மூன்று அவிகள் கொண்ட வேள்வியால் அக்கினியை வழிபட்டு இராக்கதர்களை நீக்கிவிட்டனர். அதனால்; தேவர்கள்வெற்றி பெற்றனர் அசுரர்கள் தோல்வி யடைந்தனர் என்பதாம்.

பகைவரின் போநட்டு அவ்விஷ்டியை விதிக்கின்றது.

பிராமணம் 2

यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमान एतयेष्ट्या यजेताग्नये प्रवते पुरोडाश-मष्टाकपालं निर्वपेदग्नये विबाधवतेऽग्नये प्रतीकवते यदग्नये प्रवते निर्व-पति य एवास्माच्छ्रेयान्भ्रातृव्यस्तं तेन प्र णुदते यदग्नये विबाधवते य एवैनेनसदृक्तं तेन वि बाधते यदग्नये प्रतीकवते य एवास्मात्पापीयान्तं तेनापनुदते ।

என்பது

உரை.

மிகுந்த வன்மையுடையவன், ஒத்த ஆற்றலுடையவன், குறைந்த வலியுடையவன் என்னும் மூவகைப் பகைவரையு முடையவன், பிரவான், விபாதவான், பிரதீகவான் என்னும் மூவகை அக்கினிகட்கும் எட்டுக்கபாலங்களில் புரோடாசங்கள் செய்து யாகஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

இவ்வாறு உணர்ந்து செய்கின்றவனைத் துதிக்கின்றது

பிராமணம் 3.

प्र श्रेयांसं भ्रातृव्यं नुदतेऽति सदृशं क्रामति नैनं पापीयानाप्नोति य एवं विद्वानेतयेष्ट्या यजते ।

என்பது.

உரை

பெரும் பகைவனை ஒழிக்கின்றான். ஒத்தவனைத் தாண்டிவிடுகின்றான். பாவியை, தன்னை வந்தடையாமற் செய்கின்றான் என்பதாம்.

முதல் அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

பகையுடையவனுக்கு விஜிதம் என்னும் இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

देवासुरास्संयत्ता आसन्ते देवा अब्रुवन्योनो वीर्यावत्तमस्तमनु
समारभामहा इति त इन्द्रमब्रुवन्त्वं वै नो वीर्यावत्तमोऽसि त्वामनु
समारभामहा इति सोऽब्रवीत्तिस्रो म इमास्तनुवो वीर्यावतीस्ताः
प्रीणीताथासुरानभि भविष्यथेति ता वै ब्रूहीत्यब्रुवन्नियमꣳहोमु
गियं विमृधेयमिन्द्रियावती ॥ १ ॥ इत्यब्रवीत्त इन्द्रायाꣳहोमुचे
पुरोडाशमेकादशकपालं निरवपन्निन्द्राय वैमृधायेन्द्रायेन्द्रियावते यदि-
न्द्रायाꣳहोमुचे निरवपन्नꣳहस एव तेनामुच्यन्त यदिन्द्राय वैमृधाय
मृध एव तेनापाघ्नत यदिन्द्रायेन्द्रियावत इन्द्रियमेव तेनाऽऽत्मन्नद-
धत त्रयस्त्रिꣳशत्कपालं पुरोडाशं निरवपन्त्रयस्त्रिꣳशद्वै देवतास्ता
इन्द्र आत्मन्ननु समारम्भयत भूत्यै ॥ २ ॥ तां वाव देवा विजिति
मुत्तमामसुरैर्व्यजयन्त यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमान एतयेष्ट्या

यजेतेन्द्रायाꣳहोमुचे पुरोडाशमेकादशकपालं निर्वपेदिन्द्राय वैमृधा-
येन्द्रायेन्द्रियावतेऽꣳहसा वा एष गृहीतो यस्माच्छ्रेयान्भ्रातृव्यो
यदिन्द्रायाꣳहोमुचे निर्वपत्यꣳहस एव तेन मुच्यते मृधा वा एषो
ऽभिषण्णो यस्मात्समानेष्वन्यः श्रेयानुत ॥ ३ ॥ अभ्रातृव्यो यदि-
न्द्राय वैमृधाय मृध एव तेनाप हते यदिन्द्रायेन्द्रियावत इन्द्रियमेव
तेनाऽऽत्मन्धत्ते त्रयस्त्रिꣳशत्कपालं पुरोडाशं निर्वपति त्रयस्त्रिꣳशद्वै
देवतास्ता एव यजमान आत्मन्ननु समारम्भयते भूत्यै सा वा एषा
विजितिर्नामेष्टिर्य एवं विद्वानेतयेष्ट्या यजत उत्तमामेव विजितिं
भ्रातृव्येण वि जयते ॥ ४ ॥

இஷ்டியை விதிப்பதன் பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

देवासुराः संयत्ता आसन्ते देवा अब्रुवन्यो नो वीर्यावत्तमस्तमनु समार-
भामहा इति त इन्द्रमब्रुवन्त्वं वै नो वीर्यावत्तमोऽसि त्वामनु समार-
भामहा इति सोऽब्रवीत्तिस्रो म इमास्तनुवो वीर्यावतीस्ताः प्रीणीताथा-
सुरानभि भविष्यथेति ता वै ब्रूहीत्यब्रुवन्नियमꣳहोमुगियं विमृधेय-
मिन्द्रियावतीत्यब्रवीत्त इन्द्रायाꣳहोमुचे पुरोडाशमेकादशकपालं
निरवपन्निन्द्राय वैमृधायेन्द्रायेन्द्रियावते यदिन्द्रायाꣳहोमुचे निरव-
पन्नꣳहस एव तेनामुच्यन्त यदिन्द्राय वैमृधाय मृध एव तेनापाघ्नत
यदिन्द्रायेन्द्रियावत इन्द्रियमेव तेनाऽऽत्मन्नधत्त त्रयस्त्रिꣳशत्कपालं
पुरोडाशं निरवपन्त्रयस्त्रिꣳशद्वै देवतास्ता इन्द्र आत्मन्ननु समारम्भ-
यत भूत्यै तां वाव देवा विजितिमुत्तमामसुरैर्व्यजयन्त ।

என்பது.

உரை.

தேவர்கள் போர்தொடங்கும்போது தம்முள் ஒருவர்க்கொருவர் நமக்குள் யார் வல்லுநர்? என்பதை உறுதியாய்த் தெரிந்துகொண்டு தொடங்குவோம் என்று பேசிக்கொண்டு, ஆராய்ந்து தேவர்களுக்குள் இந்திரனே அதிசயமாகிய வீரியத்தையுடையவன் என்று உறுதிகொண்டு அவ்விந்திரனுடைய மூவகைத் திருமேனிகளுக்குள், பாவத்தை போக்குந் திருமேனிக்கும், பகையைய யொழிக்குந் திருமேனிக்கும், பேராற்றல் கொண்ட திருமேனிக்கும் ஒவ்வொன்றிற்கும் பதினொரு கபாலங்களாக முப்பத்துமூன்று கபாலங்களில் மூன்று புரோடாசங்கள் செய்து யாகம் பண்ணி அவற்றை யடைந்து அசுரர்களை வென்றனர் என்பதாம்.

பகையுடையவன் செய்யவேண்டிய விசிதமென்னும் இஷ்டி விதிக்கப்படுகின்றது

பிராமணம் 2.

यो भ्रातृव्यवान्त्स्यात्सस्स्पर्धमान एतयेष्ट्या यजेतेन्द्रायाꣳहोमुचे पुरो-
डाशमेकादशकपालं निर्वपेदिन्द्राय वैमृधायेन्द्रायेन्द्रियावतेऽꣳहसा वा
एष गृहीतो यस्माच्छ्रेयान्भ्रातृव्यो यदिन्द्रायाꣳहोमुचे निर्वपत्यꣳहस
एव तेन मुच्यते मृधा वा एषोऽभिषण्णो यस्मात्समानेष्वन्यः श्रेयानुत-
भ्रातृव्यो यदिन्द्राय वैमृधाय मृध एव तेनाप हते यदिन्द्रायेन्द्रियावत
इन्द्रियमेव तेनाऽऽत्मन्धत्ते त्रयस्त्रिꣳशत्कपालं पुरोडाशं निर्वपति
त्रयस्त्रिꣳशद्वै देवतास्ता एव यजमान आत्मन्ननु समारम्भयते भूत्यै ।

என்பது

உரை.

பாவத்தைப் போக்கவும், பகையை வெல்லவும், சம்பத்தை யடையவும் விரும்பிய எசமானன், மூவகையான இந்திரத் திருமேனிகட்கும் ஒவ்வொன்றிற்குப்பதினொரு கபாலங்களாக முப்பத்துமூன்று கபாலங்கள் வைத்து மூன்று புரோடாசங்கள் செய்து யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

இஷ்டியின் பெயரை யறிந்து செய்வதைப் புகழ்கின்றது.

பிராமணம் 3.

सा वा एषा विजितिर्नामेष्टिर्य एवं विद्वानेतयेष्ट्या यजत उत्तमामेव
विजितिं भ्रातृव्येण वि जयते ।

என்பது.

உரை.

செயத்திற்குக் காரணமாதலின் இவ்விஷ்டி விஜிதம் எனவழங்கப்படுகின்றது. இப்பெயரின் பொருளை யுணர்ந்தவன், பகைவனுடன் போர்புரிந்து பாவம் நீங்கல் முதலான வெற்றியை யடைகின்றான் என்பதாம்.

இரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தைந்து பதங்களைக் கொண்டது

பகைவுடையவனுக்கே 'சம்வர்க்கம்' என்னும் இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

देवासुरास्संयत्ता आसन्तेषां गायत्र्योजो बलमिन्द्रियं वीर्यं प्रजां
पशून्त्संगृह्याऽऽदायापक्रम्यातिष्ठत्तेऽमन्यन्त यतरान्वा इयमुपावर्त्स्य-
ति त इदं भविष्यन्तीति तां व्यह्वयन्त विश्वकर्मन्निति देवा
दाभीत्यसुरास्सा नान्यतरांश्चनोपावर्तत ते देवा एतद्यजुरपश्यन्नो
जोऽसि सहोऽसि बलमसि ॥ १ भ्राजोऽसि देवानां धाम नामासि
विश्वमसि विश्वायुस्सर्वमसि सर्वायुरभिभूरिति वाव देवा असुराणा
मोजो बलमिन्द्रियं वीर्यं प्रजां पशूनवृञ्जत यद्गायत्र्यपक्रम्यातिष्ठत्त-
स्मादेतां गायत्रीतीष्टिमाहुस्संवत्सरो वै गायत्री संवत्सरो वै
तदप क्रम्यातिष्ठद्यदेतया देवा असुराणामोजो बलमिन्द्रियं
वीर्यम् ॥ २ ॥ प्रजांपशूनवृञ्जत तस्मादेताꣳ संवर्ग इतीष्टिमाहुर्यो
भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमान एतयेष्ट्या यजेताग्नेयं संवर्गाय पुरो-

डाशंमष्टाकंपालं निर्वपेत्तम् श्रूतमासन्नमेतेन यजुषाऽभि मृशेदोज एव बलमिन्द्रियं वीर्यं प्रजां पशून्भ्रातृव्यस्य वृङ्क्ते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति॥ ३ ॥

சம்வர்க்க இஷ்டியை விதிப்பதன் பொருட்டு அதனுடைய அங்கமாகிய மந்திரத்தை ஏதுவைநற்றுத் துதிக்கின்றது.

பிராமணம் 1.

देवासुरास्संयत्ता आसन्तेषां गायत्र्योजो बलमिन्द्रियं वीर्यं प्रजां पशून्त्सं गृह्याऽऽदायापक्रम्यातिष्ठत्तेऽमन्यन्त यतरान्वा इयमुपावर्त्स्यति त इदं भविष्यन्तीति तां व्यह्वयन्त विश्वकर्मन्निति देवा दाभीत्यसुरास्सा नान्यतरांश्चनोपावर्तत ते देवा एतद्यजुरपश्यन् ।

என்பது

உரை.

தேவாசுரர்கள் போரிட்டபோது அவர்களுடைய தாது, உடம்பின் வன்மை, இந்திரியங்களின் வல்லுநத்தன்மை, உற்சாகம், புத்திரன் முதலியன, பசுக்கள் என்பவற்றைக் காயத்திரி கவர்ந்து வேறோரிடத்தில் வைத்து விட்டது. அப்போது, இருவகையாருள் யாரிடத்தில் காயத்திரி சேர்ந்ததோ, அவருக்கு எல்லாவற்றையும் கொடுக்கல் வேண்டும் என்று பேசி முடித்துக் கொண்டு, அத்தகைய காயத்திரியை 'விசுவகர்மன்' என்று தேவர்களும், தாபி (பகையை யொழிப்போய்) என்று அசுரர்களும் அழைத்தனர். காயத்திரி தேவி ஒருவரையும் அடைந்திலள். அப்போது காயத்திரியை யடைவதற்கு கீழ் வரும் மந்திரத்தைத் தேவர்கள் கண்டுபிடித்தனர் என்பதாம்.

அந்த எசுர் மந்திரத்தைப் படிக்கின்றது.

பிராமணம் 2.

ओजोऽसि सहोऽसि बलमसि भ्राजोऽसि देवानां धाम नामासि विश्वमसि विश्वायुस्सर्वमसि स सर्वायुरभिभूः ।

என்பது

உரை.

காயத்திரியே! நீ, தாது, வீரியம், தைரியம், ஒளி, சுவர்க்கம், இந்திரன் முதலானோர்கள், அசேதனமாகிய வுலகம், ஆயுள், சேதனமாகிய உலகம், பகைவரை யடக்கல் என்னும் அனைத்து மாயிருக்கின்றாய் என்பதாம்.

யசுர்மந்திரப் பொருளை யுணர்ந்ததற்குப் பயனைக் கூறுகின்றது.

பிராமணம் 3.

इति वाव देवा असुराणामोजो बलमिन्द्रियं वीर्यं प्रजां पशूनवृञ्जत ।

என்பது

உரை

மேற்கூறிய இத் துதிமந்திரத்தால் காயத்திரியை யடைந்து அதனருளால் அசுரர்களுடைய தாது முதலிய ஆறு குணங்களையுங் கெடுத்துவிட்டு தேவர்கள் அவற்றை யடைந்தார்கள் என்பதாம்.

இஷ்டியை விதித்தற் பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 4

यद्वा यस्यपक्रम्यातिष्ठत्तस्मादेतां गायत्रीतीष्टिमाहुस्संवत्सरो वै गायत्री संवत्सरो वै तदपक्रम्यातिष्ठद्यदेतया देवा असुराणामोजो बलमिन्द्रियं वीर्यं प्रजां पशूनवृञ्जत तस्मादेनां संवर्ग इतीष्टिमाहुः ।

என்பது

உரை.

இவ்விஷ்டியானது, காயத்திரி மந்திரத்தால் அவியைத் தொட்டுச் செய்யப்படுதலின் 'காயத்திரி' என்றும், இதனால் அசுரர்களுடைய தாது முதலிய ஆறும் கெடுக்கப்பட்டதால் சம்வர்க்கம் எனவும் வழங்கப்படுகின்றது. சம்வர்க்கம் = அடியோடு கெடுத்தல். மற்றும், காயத்திரி சம்வச்சரமாய் இருத்தலின் இவ்விஷ்டி பிரசித்திபெற்றதென்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 5.

यो भ्रातृव्यवान्त्स्यात्स स्पर्धमान एतयेष्ट्या यजेताग्नये संवर्गाय पुरोडाशमष्टाकपालं निर्वपेत् ।

என்பது.

உரை

பகையையுடையவன், சம்வர்க்கம் என்னும் அக்கினிக்கு எட்டுக் கபாலங்களில் புரோடாசஞ் செய்து யாகஞ் செய்வானாக என்பதாம்.

ஈண்டு,'संवर्गं रयिंजय' என்னும் யாஜ்யா வாக்கியத்தில் 'சம்வர்க்கம்' என்னுஞ் சொல் கூறப்பட்டிருத்தலானும், பகைவருடைய தாது முதலிய ஆறு குணங்களையுங் கெடுப்பதற்குக் காரணமாதலானும் ஈண்டு அக்கினியே சம்வர்க்கம் எனப்படுகின்றது என்பதையுணர்க.

முன் சொல்லிய 'ஓஜோஸி' முதலிய மந்திரத்தை விநியோகிக்கின்றது

பிராமணம் 6.

तं शृतमासन्नमेतेन यजुषाऽभि मृशेदोज एव बलमिन्द्रियं वीर्यं प्रजां पशून्भ्रातृव्यस्य वृङ्क्ते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति ।

என்பது

உரை.

மேற்சொல்லிய அவியைப் பக்குவஞ் செய்து வேதியில் வைத்துப் போற்றும்போது முன்சொல்லிய 'ஓஜோஸி' முதலிய மந்திரத்தையுஞ் சொல்லிப் போற்றல் வேண்டுமென்பதாம்.

மூன்றுவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

நான்காம் அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

'கார்முத' என்னும் காட்டுளுந்துப் பொங்கலை விதிக்கும் பிராமணங்கள்

प्रजापतिः प्रजा असृजत ता अस्मात्सृष्टाः पराचीरायन्ता यत्रा वसन्ततो गर्मुदुदतिष्ठत्ता बृहस्पतिश्चान्वैत्ताः सोऽब्रवीद्बृहस्पतिर-नयात्वा प्र तिष्ठान्यथ त्वा प्रजा उपावर्त्स्यन्तेति तं प्रातिष्ठत्ततो वै प्रजपतिं प्रजा उपावर्तन्त यः प्रजाकामस्स्यात्तस्मा एतं प्राजा-

पत्यं गार्मुतं चरुं निर्वपेत्प्रजापतिम् । ॥ १ ॥ एव स्वेन भागधेये-
नोप धावति स एवास्मै प्रजां प्र जनयति प्रजापतिः पशूनसृजत
तेऽस्मात्सृष्टाः पराञ्च आयन्ते यत्रावसन्ततो गर्मुदुदतिष्ठत्तान्पूषा
चान्ववैतां सोऽब्रवीत्पूषाऽनया मा प्र तिष्ठाथ त्वा पशव उपाव-
र्त्स्यन्तीति मां प्र तिष्ठेति सोमोऽब्रवीन्मम वै ॥ २ ॥ अकृष्टपच्य-
मित्युभौ वां प्रतिष्ठानीत्यब्रवीत्तौ प्रातिष्ठत्ततो वै प्रजापतिं पशव
उपावर्तन्त यः पशुकामस्स्यात्तस्मा एतꣳ सोमापौष्णं गार्मुतं
चरुं निर्वपेत्सोमापूषणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै
पशून्प्र जनयतस्सोमो वै रेतोधाः पूषा पशूनां प्रजनयिता सोम
एवास्मै रेतो दधाति पूषा पशून्प्र जनयति ॥ ३ ॥

இஷ்டியை விதித்தற் பொருட்டு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 1.

प्रजापतिः प्रजा असृजत ता अस्मात्सृष्टाः पराचीरायन्ता यत्रावसन्ततो गर्मुदुदतिष्ठत्ता बृहस्पतिश्चान्ववैतां सोऽब्रवीद्बृहस्पतिरनयात्वा प्रतिष्ठान्यथ त्वा प्रजा उपावर्त्स्यन्तीति तं प्रजापतिं प्रजा उपावर्तन्त ।

என்பது

உரை

ஈண்டு, வாழும் குடிகள் கவனமின்றிப் பாண்டங்களைக் கழுவி விடுமிடத்திலிருந்து காட்டுளுந்து முளைக்கின்றது. அப்போது அக்குடிகள் பிருகற்பதி பிரசாபதி என்பவர்களைத் தழுவியிருந்தன. பிறகு, பிரசாபதியை நோக்கி, "காட்டுளுந்தினால் உன்னை வழிபடுகின்றேன் அதனால் தானியங்களையுடைய உன்னைக் குடிகள் சூழ்ந்து கொள்ளும்" என்று கூறிவிட்டு அவ்வாறே பிருகற்பதி செய்ததால் பிரசைகள் பிரசாபதியைச் சூழ்ந்துகொண்டிருந்தன என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2.

यः प्रजाकामस्स्यात्तस्मा एतं प्राजापत्यं गार्मुतं चरुं निर्वपेत्प्रजापतिमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै प्रजां प्र जनयति ।

என்பது

உரை.

பிரசை (குடி) களை விரும்பியவன் பிரசாபதி தேவதைக்குரிய காட்டுளுந்துப் பொங்கலைச் செய்து யாகஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

பசுக்களை விரும்பியவன் சோமன் பூஷா என்னும் இருவர்க்குமுரிய காட்டுளுந்துப் பொங்கலை விதித்தற்பொருட்டு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 3.

प्रजापतिः पशूनसृजत तेऽस्मात्सृष्टाः पराञ्च आयन्ते यत्रावसन्ततो गर्मुदुदतिष्ठत्तान्पूषाचान्ववैतां सोऽब्रवीत्पूषाऽनया मा प्रतिष्ठाथ त्वा पशव उपावर्त्स्यन्तीति मां प्रतिष्ठेति सोमोऽब्रवीन्मम वा अकृष्टपच्यमित्युभौ वां प्र तिष्ठानीत्यब्रवीत्तौ प्रातिष्ठत्ततो वै प्रजापतिं पशव उपावर्तन्त ।

என்பது.

உரை

பிரசாபதி பசுக்களைப்படைத்தனன்; அப்பசுக்கள் நோக்கமற்றிருந்தன ஆதலின், பசுக்கள் கட்டியிருக்குமிடத்தில் பசுக்களின் மூத்திர சாணங்களைப் போடுமிடத்தில் முளைத்த காட்டுளுந்தைப் பொங்கல் செய்து பூஷா தேவதைக்கும் சோமனுக்கும் வேள்விசெய்து பசுக்களை நோக்கத்துடன் பெற்றுக்கொண்டனன் என்பதாம்.

இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 4.

यः पशुकामस्स्यात्तस्मा एतं सोमापौष्णं गार्मुतं चरुं निर्वपेत्सोमापूषणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै पशून्प्र जनयतस्सोमो वै रेतोधाः पूषा पशूनां प्रजनयिता सोम एवास्मै रेतो दधाति पूषा पशून्प्र जनयतति ।

என்பது.

உரை.

பசுக்களை விரும்பியவன், சோமனுக்கும் பூஷாவுக்கும் காட்டுளுந்துப் பொங்கல் செய்து யாகஞ் செய்வானுக என்பதாம்.

நான்காவது அநுவாகம்
முற்றிற்று

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் முப்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

மேல்வரும் சித்திராயாகத்தின் உபஹோம மந்திரங்கள்

अग्ने गोभिर्न आ गहीन्दो पुष्ट्या जुषस्व नः । इन्द्रो धर्ता गृहेषु नः । सविता यस्सहस्रियस्स नो गृहेषु रारणत् । आ पूषा एत्वा वसु । धाता ददातु नो रयिमीशानो जगतस्पतिः । स नः पूर्णेन वावनत् । त्वष्टा यो वृषभो वृषा स नो गृहेषु रारणत् । सहस्रेणायुतेन च । येन देवा अमृतम् ॥ १ ॥ दीर्घꣳश्रवो दिव्यैरयन्त । रायस्पोष त्वमस्मभ्यं गवां कुल्मिं जीवस आ युवस्व । अग्निर्गृहपतिस्सोमो विश्ववनिस्सविता सुमेधास्स्वाहा । अग्ने गृहपते यस्ते घृत्यो भागस्तेन सह ओज आक्रममाणाय धेहि श्रैष्ठ्यात्पथो मा योषं मूर्धा भूयासꣳ स्वाहा ॥ २ ॥

முதலாவது மந்திரம்

अग्ने गोभिर्नआ गहीन्दो पुष्ट्या जुषस्व नः । इन्द्रो धर्ता गृहेषु नः ।

என்பது

உரை.

அக்கினியே! நீ, கோக்களுடன்கூட எம்பொருட்டு வருவாயாக. இந்துவே! நீ, பசுக்களின் புஷ்டிவாயிலாக எம்மைச் சுகப்படுத்துவாயாக. இந்திர! நீ, எமது பசுக்களைப் பாதுகாப்பாற்றுவாயாக என்பதாம்.

இரண்டாவது மந்திரம்

सविता यस्सहस्रियस्स नो गृहेषुरारणत् । आ पूषा एत्वा वसु ।

என்பது

உரை.

ஆயிரக்கணக்கான பசுக்களையுடைய சவிதா, எமது வீட்டில் களிப்புற்று வாழ்க. பசுக்களைப் பரிபாலிக்குந் தேவனும் வருவானாக. தனமும் வருக என்பதாம்.

மூன்றாவது மந்திரம்

धाता ददातु नो रयिमीशानो जगतस्पतिः । स नः पूर्णेन वावनत् ।

என்பது

உரை

உலகைக்காக்கும் ஈசுரன் எமக்குத் தனங்களைக் கொடுப்பானாக. அவ்வீசுரனே மிகுந்த தனத்தால் எம்மைப் பாதுகாப்பானாக என்பதாம்.

நான்காவது மந்திரம்

त्वष्टा यो वृषभो वृषा स नो गृहेषु रारणत् । सहस्रेणायुतेन च ।

என்பது.

உரை.

வேண்டியவற்றை அளிக்கும் துவஷ்டா தேவதை ஆயிரம் பசுக்களுடனும், அயுதம் பசுக்களுடனும் எமது வீடுகளில் இன்புற்றிருப்பதாகுக என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

येन देवा अमृतं दीर्घं श्रवो दिव्यैरयन्त । रायस्पोष त्वमस्मभ्यं गवां कुल्मिं जीवस आ युवस्व ।

என்பது.

உரை.

தனத்தைப் பரிபாலிக்குந் தேவதையே! உன்னால், தேவர்கள், அமுதத்தையும், நிறைந்த கீர்த்தியையும், கொடுக்கத்தக்க உணவுப்பொருள்களையும் தேவத்தன்மையால் நிலைநாட்டிக்கொண்டனர். அத்தகைய நீ எம்பொருட்டு சங்கமான கோக்கள் பிழைத்திருக்கும் பொருட்டு ஆயுளைக்கொடுப்பாயாக என்பதாம்.

ஆறாவது மந்திரம்

अग्निर्गृहपतिस्सोमो विश्ववनिस्सविता सुमेधास्स्वाहा ।

என்பது.

உரை

எமது வீட்டிற்குத் தலைவர்களான, உலகம் போற்றுஞ் சோமன், அழகிய நுண்ணறிவுடைய சவிதா என்னுமிவர்களுக்கு இவ்வாகுதி அர்ப்பணமாகுக என்பதாம்.

ஏழாவது மந்திரம்

अग्ने गृहपते यस्ते घृत्यो भागस्तेन सह ओज आक्रममाणाय धेहि श्रैष्ठ्यात्पथो मा योषं मूर्धा भूयासꣳ स्वाहा ।

என்பது

உரை.

கிருகத்திற்குத் தலைமையாகிய அக்கினியே! உனது பாகமாகிய நெய்யுடன், 'ஓசஸ்' என்னும் எட்டாவது தாதுவையும் எசமானனுக்குக் கொடுப்பாயாக. எசமானனாகிய யான் சிறந்த அநுஷ்டான மார்க்கத்திலிருந்து பிரியாதவனாகுக. எசமானர்களுக்குள் தலைமையனாவேனாக. இது உனக்கு இனிது ஆகுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதாம்.

ஐந்தாவது அநுவாகம்

முற்றிற்று

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஆருவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிகட்குமேல் பன்னிரண்டு பதங்களைக் கொண்டது.

'சித்திரா' என்னும் யாகங்களை விதிக்கும் பிராமணங்கள்.

चित्रया यजेत पशुकाम इयं वै चित्रा यद्वा अस्यां विश्वं भूतमधि प्रजायते तेनेयं चित्रा य एवं विद्वाꣳश्चित्रया पशुकामो यजते प्र प्रजया पशुभिर्मिथुनैर्जायते प्रैवाऽऽग्नेयेन वापयति रेतः सौम्येन दधाति रेत एव हितं त्वष्टा रूपाणि वि करोति सारस्वतौ भवत एतद्वै दैव्यं मिथुनं दैव्यमेवास्मै ॥ १ ॥ मिथुनं मध्यतो दधाति पुष्ट्यै प्रजननाय सिनीवाल्यै चरुर्भवति वाग्वै सिनीवाली पुष्टिः खलु वै वाक्पुष्टिमेव वाचमुपैत्यैन्द्र उत्तमो भवति तेनैव तन्मिथुनꣳ सप्तैतानि हवीꣳषि भवन्ति सप्त ग्राम्याः पशवः सप्ताऽऽरण्याः सप्त छन्दाꣳस्युभयस्यावरुद्ध्या अथैता आहुतीर्जुहोत्येते वै देवाः पुष्टिपतयस्त एवास्मिन्पुष्टिं दधाति पुष्यति प्रजया पशुभिरथो यदेता आहुतीर्जुहोति प्रतिष्ठित्यै ॥ २ ॥

ஈண்டுப் பல்வகையான விசித்திரப் பிராணிகள் உண்டாதற்குக் காரணமாதலின் பூமி சித்திரம் எனவழங்கப் படுவதுபோல் சித்திரா என்பதும் யாகத்தின் பெயராம். அதுவும், விசித்திரமான யாகத்திற்குரிய பொருள்களையும் தேவதைகளையுமுடைமையின் நிமித்தம் பற்றியதாம்.

(சித்திராயாகம்)

பொதுவகையில் சித்திரா யாகத்தை விதிக்கின்றது.

பிராமணம் 1

चित्रया यजेत पशुकाम इयं वै चित्रा यद्वा अस्यां विश्वं भूतमधि प्रजायते तेनेयं चित्रा य एवं विद्वाꣳश्चित्रया पशुकामो यजते प्र प्रजया पशुभिर्मिथुनैर्जायते ।

என்பது

உரை.

பசுக்களை விரும்பியவன் விசித்திரமான உயிர்களின் உற்பத்திக்குக்காரணமாகிய சித்திரா என்னும் பெயர் பூண்ட யாகத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

சிறப்பு வகையால் சித்திரா யாகத்திற்குள்ள ஏழுவகைகளை விதித்தற்பொருட்டு அவ்விதிகளை முறையாய் அறிவுறுத்துகின்றது.

பிராமணம் 2.

मैत्राऽऽग्नेयेन वापयति रेतस्सौम्येन दधाति रेत एव हितं त्वष्टा रूपाणि वि करोति सारस्वतौ भवत एतद्वै दैव्यं मिथुनं दैव्यमेवास्मै मिथुनं मध्यतो दधाति पुष्ट्यै प्रजननाय सिनीवाल्यै चरुर्भवति वाग्वै सिनीवाली पुष्टिः खलु वै वाक्पुष्टिमेव वाचमुपैत्यैन्द्र उत्तमो भवति तेनैव तन्मिथुनम् ।

என்பது

உரை.

அக்கினியின் அவியால் பசுக்களின் உற்பத்திக்குக் காரணந்தோன்றுகின்றது. சோமத்தின் அவி, நெல்விதை முதலியவைகளிலும், உயிரின் பீசம் முதலியவைகளிலும் பசு காரணமாகின்கின்றது. மூன்றாவது அவிக்கு தேவதை துவஷ்டா ; அதனால் இனிய கம்பிலம் பல்வகையாகப் பரிணமிக்கின்றது. சரசுவதி சரஸ்வான் என்னும் இருவர்களின் அவிகள் மிதுனத்தை (புணர்ச்சியை) உண்டாக்குகின்றன. இது, ஆண் பெண் தேவதைகளாதலினென்க. இவை பசுக்களும் மக்களும் உண்டாவதற்கும், உண்டானவைகள் வளருவதற்கும் காரணங்களாகின்றன. சினீவாலி என்னும் வாக் தேவதைக்கும் இந்திரனுக்கும் பொங்கல் செய்யவேண்டும். இதை, இந்திர யாக முடிவில் செய்தல் வேண்டும். சினீவாலி, பெண், இந்திரன் ஆண் ஆதலின் இதுவும் புணர்ச்சியாம் என்பதாம்.

அவிகள் ஏழானமைப்பற்றிப் புகழ்கின்றது.

பிராமணம் 3.

सप्तैतानि हवीꣳषि भवन्ति सप्त ग्राम्याः पशवस्सप्ताऽऽरण्यास्सप्तच्छन्दाꣳस्युभयस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை

ஏழு அவிகளாகின்றன. கோ, குதிரை, புருடன், ஆடு, கழுதை, ஒட்டை என்னுமிவைகள் கிராமத்திலுள்ள ஏழு பசுக்கள். இரண்டு கொளும்புகளையுடைய பறவை பாம்பு குரங்கு முதலிய ஏழும் ஆரண்ய பசுக்கள். காயத்திரி, உஷ்ணிக், அநுஷ்டுப், பங்தி, திருஷ்டுப், சகதி, பிருகதி என்பன ஏழுசந்தங்கள். இவ்வாறு, பசுக்கட்கும் சந்தங்கட்கும் ஒத்த எண்ணாயிருத்தலின் மிக நலமுடையன என்பதாம்.

முற்கூறிய, ‘ அக்னே கோபி : ’ என்பது முதலிய மந்திரங்களால் உபஹோமங்கள் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 4.

अथैता आहुतीर्जुहोत्येते वै देवाः पुष्टिपतयस्त एवास्मिन्पुष्टिं दधति पुष्यति प्रजया पशुभिरथो यदेता आहुतीर्जुहोति प्रतिष्ठित्यै ।

என்பது

உரை.

அம்மந்திரங்களால் ஆகுதிகள் செய்யப்படுகின்றன. அம்மந்திரங்களிற் கூறிய இந்திரன் முதலிய தேவர்கள் புஷ்டிக்குப்பதி (தலைவர்) களாவர்கள். ஆதலின் இதனால் புஷ்டியை யடைகின்றான் என்பதாம்.

ஆறுவது அநுவாகம்

முற்றிற்று

ஏழாவது அநுவாகம் விடயச் சுருக்கம்

कारीर्यां मारुतं कृष्णं स्वामी धारयते पटम् ।
रमेति पश्चिमं वातं पुरोवातं करोतिहि ॥ १ ॥
पुरोऽश्वा वाहुतिर्हुत्वा मान्दास्संयौति सक्तुकम् ।
वृष्णस्संनह्यते सक्तुं मन्त्रा द्वादशवर्णिताः ॥ २ ॥

காரீரி இஷ்டி)

வேள்வித்தலைவன் கறுப்பு ஆடையையணிந்து கொள்ளல், மேல்காற்றை கீழ்காற்றாகச் செய்தல், எட்டு வாதநாம ஆகுதிகள், பேரிச்சைப் பழப் பொடியையும் மூங்கில் பொடியையும் உருண்டையாக்கல், அதைக்கட்டுதல் என்பது.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

காரீரி இஷ்டியை விதிக்கும் மந்திரங்கள்.

मारुतमसि मरुतामोजोऽपां धारां भिन्धि रमयत मरुतश्श्येन-मायिनं मनोजवसं वृषणꣳ सुवृक्तिम् । येन शर्ध उग्रमवसृष्टमेति तदश्विना परि धत्तꣳ स्वस्ति । पुरोवातो वर्षञ्जिन्वरावृत्स्वाहा वातावद्वर्षन्नुग्ररावृत्स्वाहा स्तनयन्वर्षन्भीमरावृत्स्वाहाऽनशन्यवस्फूर्ज-न्दिद्युद्वर्षन्त्वेषरावृत्स्वाहाऽतिरात्रं वर्षन्पूर्तिरावृत् ॥१॥ स्वाहा बहु-हायमवृषादिति श्रुतरावृत्स्वाहाऽऽतपति वर्षन्विराडावृत्स्वाहाऽ-वस्फूर्जन्दिद्युद्वर्षन्भूतरावृत्स्वाहा मान्दा वाशाश्शुन्ध्यूरजिराः । ज्यो-तिष्मतीस्तमस्वरीरुन्दतीस्सुफेनाः । मित्रभृतः क्षत्रभृतस्सुराष्ट्रा इह माऽवत । वृष्णो अश्वस्य संदानमसि वृष्ट्यै त्वोप नह्यामि ॥ २ ॥

இது முதல் பத்தாவது அநுவாகம் வரையுள்ள நான்கு அநுவாகங்களாலும் காரீரி இஷ்டி அதாவது மழையை விரும்பியவன் பேரிச்சம் பொடி அல்லது கரீரம் என்னும் மரப்பொடியால் செய்த அவியாகஞ் செய்தல் வேண்டுமென்று விதிக்கின்றது. அதன் முறை வருமாறு:—புண்ணிய நட்சத்திரத்தில் அல்லது பன்மையாகிய நட்சத்திரத்தில், மழை காலத்தில் நாடோறுஞ் செய்யும் அக்கினி ஹோத்திரத்தைச் செய்து முடித்துக்கொண்டு, "காரீரியா யக்ஷ்யே வருஷ பலார்த்தம்" என்று சங்கற்பித்துக் கொண்டு, விரிந்த இடங்கொண்ட யாகசாலை ஒன்றைச்செய்து, தீக்கடைக்கோலில் விட்டிலுள்ள

தீயை ஏற்றிக்கொண்டு சாலைக்குச் சென்று தீக்கடைந்து காருகபத்திய முதலிய குண்டங்களில் தீயை உண்டாக்கிவிட்டு, 'வித்யுதஸி' என்பது முதலிய மந்திரத்தாற் கையலம்பிக்கொண்டு, தரிசபூர்ணமாஸ யாகத்தைப்போல் இருத்துவிக்குகளை அழைத்தல் வேண்டும்.

வேட்போன் 'மமாக்நே' என்பது முதலிய மந்திரத்தால் ஆகவனீயத் தீயில் சமித்தை வைத்தல் வேண்டும்.

வேள்வித்தலைவன், 'அக்னிம் க்ருண்ஹாமி' என்பது முதலிய மந்திரத்தால் போற்றல் வேண்டும். போற்றுங்கால் 'காரீர்யம் ஹவி:' என்று ஊகித்துக்கொள்ளல் வேண்டும்.

பிறகு வேட்போன், காருகபத்தியத் தீயில் சமித்தை வைப்பது முதல், வேள்வித்தலைவன் வேதியைத் தாண்டி தெற்கில் நிற்கும்வரை தரிசபூர்ணமாதயாகத்திற் செய்தது போலவே செய்து கொள்ளல் வேண்டும்.

ஈண்டு, இவ்விஷ்டிக்கு வேண்டிய மந்திரங்களுள் சில மந்திரங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள்,

முதல் விநியோகம்

வேள்வித்தலைவன் கறுப்பு ஆடையணிதல்.

मारुतमसि मरुतामोजोऽपां धारां भिन्धि ।

என்பது

உரை

கறுப்பு நிற ஆடையே! நீ, கறுப்புச் சாயங்கலந்த நீரைக்காயவைக்குந் தன்மையில் மருத் (வாயு) சம்பந்த முடையதாயிருக்கின்றாய். இது கொண்டே மருத்துக்களின் ஆற்றல் வடிவாயிருக்கின்றாய். மேகதாரையைக்குறித்து தடையாயுள்ள மேகத்தை உடைப்பாயாக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் கறுப்பு நிறக்கோடுள்ள வேஷ்டியை அணிந்து கொள்ளல் வேண்டும் என்பதாம்.

இரண்டாவது விநியோகம்

மேல்காற்றைக் கட்டுதல்

रमयत मरुतश्श्येनमायिनं मनोजवसं वृषणꣳ सुवृक्तिम् । येन शर्ध उग्रमवसृष्टमेति तदश्विना परि धत्तꣳ स्वस्ति ।

என்பது

காரீரீ இஷ்டி)

உரை

மருத்துக்காள் ! நீவிர், வந்து கொண்டிருப்பதும், மனவேகமுடையதும், மழையைப் பெய்விப்பதும், மேல்காற்றைத் தடுப்பதும், அதாவது மழைத் தாரைகளைத் தாங்கிக்கொண்டு இருண்ட மேகத்துடன் வரும் மேல்காற்றை அடக்கிக்கொண்டு வருவதும், பருந்து போல் வன்மையுடையதுமாகிய கீழ் காற்றை விளையாடச்செய்வீர்களாக. தேவ வைத்தியர்களான அசுவினிகளே ! நீவிர், நீரை, நலந்தரும்படி காற்புறத்துக்கட்டிக் கொள்வீர்களாக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் மேல்காற்றைக் கட்டிவிட்டுக் கீழ்காற்று உண்டாகும் படி செய்தல் வேண்டுமென்பதாம்.

கண்டு கட்டுதலும் அழைத்தலும் மந்திரத்தை ஓதுதல் மாத்திரமாம் என்பதையுமுணர்க.

மற்றும், ஒரு கறுப்புக் குதிரையை யாகசாலைக்குக் கிழக்கில் மேற்கு முகமாய் நிறுத்திவைத்து, வெள்ளித்தலைவன் அணிந்திருக்கின்ற கறுப்பு வேஷ்டியால், 'अभिक्रन्द' என்பது முதலிய மந்திரத்தால் அக்குதிரைத் துடைத்துவிடல் வேண்டும் அப்போது, அக்குதிரை உடம்பை அசைக்கினும், அல்லது மூத்திரம் பெய்யினும் மழைபெய்யும் என்பது கருதப்படுகின்றது.

மூன்றாவது விநியோகம்

வாதநாமங்களாற் செய்யப்படும் எட்டு ஹோமங்களுள் முதலாவது ஹோமம்.

पुरोवातो वर्षञ्जिन्वरावृत्स्वाहा ।

என்பது

உரை

மழையைக் கொண்டுவந்து மக்களைக் களிப்புறச்செய்யும் கீழ்காற்றுச் சுற்றிவருக. அதன் பொருட்டு இவ்வாகுதி செய்யப்படுகின்றது என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் முதலாவது ஹோமஞ்செய்தல் வேண்டுமென்பதாம்.

நான்காவது விநியோகம்

இரண்டாவது ஹோமம்

वातावद्वर्षन्नुग्ररावृत्स्वाहा ।

என்பது

உரை.

புயல் காற்றுடனும் உக்கிரமான மழைத்தாரையுடனும் வரும் கீழ் காற்றுக்கு இது ஆகுதி செய்யப்படுகின்றது என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் இரண்டாவது ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஐந்தாவது விநியோகம்

மூன்றாவது ஹோமம்

स्तनयन्वर्षन्भीमरावृत्स्वाहा ।

என்பது.

உரை

கர்ச்சித்துக்கொண்டும் பயப்படுமாறு மழையுடனும் வரும் கீழ்காற்றுக்கு இது ஆகுதி செய்யப்படுகின்றது என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் மூன்றாவது ஆகுதியைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஆறுவது விநியோகம்

நான்காவது ஹோமம்

अनशान्यवस्फूजन्दिद्युद्वर्षंस्त्वेपरावृत्स्वाहा ।

என்பது.

உரை.

உயிரைக் கெடுக்காதவாறு பேரொலி செய்துகொண்டு மின்னல் ஒளியுடன் மழையைக் கொண்டுவரும் கீழ்காற்றுக்கு இது ஆகுதி செய்யப்படுகின்றது என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் நான்காவது ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்,

ஏழாவது விநியோகம்

ஐந்தாவது ஹோமம்

अतिरात्रं वर्षन्पूर्तिरावृत्स्वाहा ।

என்பது

உரை

இரவு பகல் பூமி நிறையும்படி மழையைப் பெய்விக்கும் கீழ்காற்றுக்கு இது அர்ப்பணஞ் செய்யப்படுகின்றது என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் ஐந்தாவது ஹோமத்தைச் செய்தல் வேண்டும்.

எட்டாவது விநியோகம்

ஆறாவது ஹோமம்

यदु ह्वायमवृषादिति श्रुतरावृत्स्वाहा ।

என்பது

உரை.

‘இக்காற்று உள்ளவாறு மழைபெய்விக்கும்’ என்று மக்களிடத்திற் கீர்த்திபெற்றுள்ள வாயுவிற்கு இது அர்ப்பணமாகுக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் ஆறாவது ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஒன்பதாவது விநியோகம்

ஏழாவது ஹோமம்

आतपति वर्षन्विराडावृत्स्वाहा ।

என்பது.

உரை.

வெய்யில் இருக்கும்போதே மின்னலொளியுடன் மழையைக்கொண்டு வரும் கீழ்காற்றுக்கு இது அர்ப்பணஞ் செய்யப்படுகின்றது என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் ஏழாவது ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

பத்தாவது விநியோகம்

எட்டாவது ஹோமம்

अवस्फूर्जन्दिद्युद्वर्षन्भूतरावृत्स्वाहा ।

என்பது

உரை.

மின்னலுடன் பெருமழையைக் கொண்டுவரும் கீழ்காற்றுக்கு இது அர்ப்பணமாகுக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் எட்டாவது ஹோமத்தைச் செய்தல் வேண்டுமென்பதாம்.

பிறகு சூத்திரப்படி மந்திரமின்றியே ஒரு மான்தோலை அந்தர் வேதியில் கிழக்கு முகமாய் மயிர்ப்புறம் மேலாக விரித்து வைத்தல் வேண்டும்.

பதினோராவது விநியோகம்

காரீரி அவியைச் செய்தல்

मान्दा वाशाः शुन्ध्यूरजिराः । ज्योतिष्मतीस्तमस्वरीरुन्दतीस्सुफेनाः ।
मित्रभृतः क्षत्रभृतः सुराष्ट्रा इह मावत ।

என்பது

உரை.

களிப்பைத்தருவதும், மழை பெய்தலையுடையதும், புநிதஞ் செய்வதும், ஓடுவதும், வெண்மை நிறமுடையதும், சூரிய வெயிலின்றி கறுப்பாய் ஓடுவதும், பூமியை நனைப்பதும், மிகுந்த நுரைகளையுடையதும், கொடி செடிகளை வளர்த்துக்கொண்டு உலகிற்கு நட்பாயிருப்பதும், அரசனை, நல்ல மழை பெய்வதால் களிப்புண்டாக்கிப் பாதுகாப்பதும், பயிர்களையுடைய இராச்சியத்தில் நிறைந்திருப்பதுமான பதினைந்துவகைப் பேர்களையுடைய தண்ணீர்களே! நீங்கள், பயனைக் கொடுக்கும் வகையால் இக்கருமத்தைப் பாதுகாப்பீர்களாக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால், விரித்துள்ள மான்தோலின் மீது பேரீச்சம் பழப்பொடியையேனும், கரீரம் என்னும் மரத்தின் பொடியையேனும் சுருக்தேனைக் கலந்து மூன்று உருண்டைகள் செய்தல் வேண்டும் என்பதாம்.

ஈண்டு, மந்திரமின்றி, அவ்வுருண்டைகளை தாமரையிலைகளாற் சுற்றி அம்மான் தோலின்மீது வைத்திருத்தல் வேண்டும்.

பன்னிரண்டாவது விநியோகம்

மான்தோலைக் கட்டல்.

वृष्णो अश्वस्य संदानमसि वृष्ट्यै त्वोप नह्यामि ।

என்பது

உரை

கயிறே! நீ, தெளிக்குமாற்றலுடைய இம் மான்தோலைக் கட்டுவதற்குச் சாதனமாயிருக்கின்றாய். மான்தோலே! உன்னைக்கட்டுகின்றேன் என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் கறுப்புக் கயிற்றால் அம் மான்தோலின் நான்கு மூலைகளையுஞ் சேர்த்துக் கட்டல் வேண்டுமென்பதாம்.

ஏழாவது அநுவாகம்

முற்றிற்று

எட்டாவது அநுவாக விடையச்சுருக்கம்

वृष्टिप्रदायां कारीयां देवाइत्यादिकैस्त्रिभिः ।
दिनत्रयेचर्मबन्धश्शकटस्थे छदिस्त्रये ॥ १ ॥
उदुनोदत्तेति वाक्यन्तु त्रयाणांशेष इष्यते ।
दिवा त्रिभिस्सक्तु होमस्सृजेत्युत्तरसंस्थिताम् ॥ २ ॥
स्थालीमद्भिः पूरयित्वा ह्यब्जाः प्रोक्षत्यविंस्थिताम् ।
उन्नंपुनर्नवाहोमो येचमग्नौतु धूयते ।
अष्टमेत्वनुवाकेस्मिन्दश मन्त्रा उदीरिता : ॥ ३ ॥

மழைபெய்யாவிடில், கிருஷ்ணாஜினத்தில் மூன்று மந்திரங்களால் அவியை வண்டியிற் கட்டுதல், மாவை ஹோமஞ் செய்தல், ஈரத பண்பாத்திரத்தில் நீர் விடுதல், வெள்ளாட்டை நீரால் தெளித்தல், காரீரைச் செடியை நடுதல் கிருஷ்ணாஜினத்தை உதறி விடல் என்பது.

இரண்டாம் காண்டம் நான்காம் பிரபாடகம்

எட்டாம் அநுவாகம்

இரண்டு பஞ்சாசிகட்குமேல் இருபத்து பதங்களைக் கொண்டது.

காரீரி இஷ்டி மந்திரங்கள்.

देवा वसव्या अग्ने सोम सूर्य । देवाश्शर्मण्या मित्रावरुणाऽर्यमन् । देवास्सपीतयोऽपां नपादाशुहेमन् । उद्नो दत्तोदधिं भिन्त दिवः पर्जन्यादन्तरिक्षात्पृथिव्यास्ततो नो वृष्ट्याऽवत । दिवा चित्तमः कृण्वन्ति पर्जन्येनोदवाहेन । पृथिवीं यद्व्युन्दन्ति । आ यं नरस्सुदानवो ददाशुषे दिवः कोशमचुच्यवुः । वि पर्जन्याः सृजन्ति रोदसी अनु धन्वना यन्ति ॥ १ ॥ वृष्टयः । उदीरयथा मरुतस्समुद्रतो यूयं वृष्टिं वर्षयथा पुरीषिणः । न वो दस्रा उप दस्यन्ति धेनवश्शुभं यातामनु रथा अवृत्सत । सृजा वृष्टिं दिव आऽद्भिस्समुद्रं पृण । अब्जा असि प्रथमजा बलमसि समुद्रियम् । उन्नम्भय पृथिवीं भिन्धीदं दिव्यं नभः । उद्नो दिव्यस्य नो देहीशानो वि सृजा दृतिम् । ये देवा दिविभागा येऽन्तरिक्षभागा ये पृथिविभागाः । त इमं यज्ञमवन्तु त इदं क्षेत्रमा विशन्तुत त इदं क्षेत्रमनु वि विशन्तु ॥ २ ॥

காரீரிக்குக் கூறியதில் எஞ்சின மந்திரங்களை இவ்வநுவாகங் கூறுகின்றது.

ஈண்டுச் சூத்திரங் கூறியவாறே, உத்கரம் என்னும் வேள்விக்குப்பையைப் போடுமிடத்தில் மூன்று பாய்களால் மூடப்பெற்ற ஒரு வண்டியை, கிழக்கில் ஏருகால் வருமாறு நிறுத்திவைத்தல் வேண்டும்.

முதல் விநியோகம்

காரீரி அவி மூட்டையை வண்டியிற் கட்டிவைத்தலில் முதல் மந்திரம்

देवा वसव्या अग्ने सोम सूर्य । उद्नोदत्तोदधिं भिन्त दिवः पर्जन्या-
दन्तरिक्षात्पृथिव्यास्ततो नो वृष्ट्याऽवत ।

என்பது.

உரை

மக்களை வாழவைக்கும், சோம, சூரிய, அக்கினி என்னுந் தேவர்களே! நீவிர், மூவுலகத்தின் பொருட்டும் மேகத்தைப் பிளந்து விடுவீர்களாக. அதற்குமேல் பெய்யும் மழையால் எம்மைப் பாதுகாப்பீர்களாக என்பதாம்.

இரண்டாவது மந்திரம்

देवा श्शर्मण्या मित्रावरुणाऽर्यमन् । उद्नो दत्तोदधिं भिन्त दिवः पर्जन्या-
दन्तरिक्षात्पृथिव्यास्ततो नो वृष्ट्याऽवत ।

என்பது.

உரை

சுகத்தைக் கொடுக்கும் மித்திர, வருண, அரியமா என்னுந் தேவர்களே! நீவிர், மற்றவை முன்போல் என்பது.

மூன்றாவது மந்திரம்

देवास्सपीतयोऽपां नपादाशुहेमन् । उद्नो दत्तोदधिं भिन्त दिवः पर्ज-
न्यादन्तरिक्षात्पृथिव्यास्ततो नो वृष्ट्याऽवत ।

என்பது

உரை

ஒத்துச் சோமரசமருந்திய தேவர்களே! நீவிர், மற்றவை முன்போல் என்பது.

ஈண்டு, உத்நோ, அவத என்பது இரண்டு மந்திரங்களிலுஞ் சேர்க்கப் பட்டிருக்கிறது.

சாணபாடியக் கருத்து

இம் மூன்று மந்திரங்களாலும், வண்டியிலுள்ள பாய்களுள் மான் தோல் மூட்டையைக் கட்டிவைத்தல் வேண்டும் என்பதாம்.

பிறகு, சூத்திரத்திற் கூறியவாறே மான்தோல் முட்டை அதிற் கட்டியவாறே இரவு பகல் இருத்தல் வேண்டும். அதன் மேல் மழை பெய்தால் அதிலுள்ள உருண்டைகளை ஹோமஞ் செய்தல் வேண்டும்.

ஈண்டு, இவ்வாறு செய்யும் ஹோமம் காரீரி ஹோமம் என்றும், இஷ்டியென்றும் இருவகைப்படும். அவற்றுள்; காரீரி ஹோமம் என்பது வருமாறு:—கிருகியத்திற் செய்வதுபோல் அக்நியைக் கிள்ளி எடுத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு,

---

இரண்டாம் விநியோகம்

முதலாவது அவியுருண்டையின் ஹோமம்

दिवा चित्तमः कृण्वन्ति पर्जन्येनोदवाहेन । पृथिवीं यद्युन्दन्ति ।

என்பது

உரை

தேவர்கள், மழையால் நன்றாய் பூமியை நனைக்கும்போது பெய்யும் மழையால் பகலும் இருளாகின்றது. இரவிற்கென்சொல்லல் வேண்டும்? என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் காரீரியின் முதலாவது உருண்டையை ஹோமஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

மூன்றாம் விநியோகம்

இரண்டாவது உருண்டையின் ஹோமம்

आ यं नरस्सुदानवो ददाशुषे दिवः कोशमचुच्यवुः । वि पर्जन्याः सृजन्ति रोदसी अनु धन्वना यन्ति वृष्टयः ।

என்பது

உரை.

இவ்விருத்துவிக்குக்கள் (வேள்விச் செயலாளர்கள்) இனிய அவிகளையளித்த எசமானன் பொருட்டு நீர் கொண்ட மேகத்தைப்பரப்பி விட்டார்கள். அம்மேகம், முதலில் ஒன்றாகவே யிருப்பினும் மூவுலகங்களைக் குறித்து இப்போது பல்வகைகளாகிவிட்டன. ஆதலின் காய்ந்த விடங்களில் மழைகளும் பெய்கின்றன என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம் மந்திரத்தால் இரண்டாவது அவியுருண்டையை ஹோமஞ் செய்தல் வேண்டுமென்பதாம்

நான்காவது விநியோகம்

மூன்றாவது அவியுருண்டையின் ஹோமம்

उदीरयथा मरुतस्समुद्रतो यूयं वृष्टिं वर्षयथा पुरीषिणः । न वो दस्रा उप दस्यन्ति धेनवश्शुभं यातामनु रथा अवृत्सत ।

என்பது

உரை

மருத்துக்களே! நீங்கள், கடல்போல் மழையைப் பெய்விப்பீர்களாக. பிறகு மணல் நிறைந்த பூமியை நனைக்கச் செய்வீர்களாக. பூமியின் காய்வைப் போக்கும் மருத்துக்களே! மங்களத்தைச் செய்யும் உங்களுடைய காமதேனுக் கொத்த மேகங்கள் கெட்டுப் போகவில்லை. மழையைக் கொடுக்க நீங்கள் தேரிலேறிக்கொண்டு வரும்போது ஏனைய தேவர்களும் உங்களைப் பின்பற்றுவார்களாக என்பதாம்.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் மூன்றாவது அவியுருண்டையை ஹோமஞ் செய்தல் வேண்டுமென்பதாம்

ஈண்டுச் சூத்திரப்படியே, ஹோமஞ் செய்யும்போதெழுகின்ற புகையை அஸிதவர்ண:, என்பது முதலிய மந்திரத்தாற் போற்றுதல் வேண்டும்.

வேள்வித்தலைவன், இம்மூன்று ஹோமங்கட்கும் मरुद्भ्य इदं என்று, தியாகங்கள் செய்தல் வேண்டும். இத்துடன் காரீரீஹோம முறை முடிந்தது.

இனி, இஷ்டிவகை பற்றியது என்னையெனின்? முன் அக்கினி உண்டாக்கப்பெற்றது. மற்றும், தருப்பைகளைக் கொண்டுவருதல் முதல் ஏனைய கிரியைகளைச்செய்து கொள்ளல் வேண்டும். பாத்திரங்களை வைக்கும்போது மாத்திரம் காருகபத்தியத்திற்கு வடக்கில் ஸ்ப்யம் (மரக்கத்தி) அக்கினிஹோத்திர ஹவணி (அகப்பை விசேடம்) என்பவற்றை வைத்து விட்டு கிழக்கில் உபசத்யாகத்தில் வைப்பது போலவே வைத்தல் வேண்டும்.

பவித்திரத்தைச் செய்து கொண்டு, मरुद्भ्यो वोजुष्टं प्रोक्षामि என்று, அவிபுருண்டைகளின் மேல் நீர் தெளித்தல் வேண்டும். இதில் நெல் எடுத்தல் இல்லை.

பிறகு, வேதிகையில் தருப்பைகளைப் பரப்பும்வரை செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து முடித்துக் கொண்டு உத்தரத்தில் மாத்திரம் தருப்பையைப் பரப்புதல் வேண்டும். பரப்பி அதன் மேல் அருமுதலான பாத்திரங்களை வைத்தல் வேண்டும்.

அதன் பிறகு, மந்திரமின்றி அவ்வுருண்டைகட்கு நெய் தடவி விட்டு, आर्द्रोभुवनस्य என்பது முதலிய மந்திரத்தால் எடுத்துக் கொண்டு, देवस्त्वा என்பது முதலிய மந்திரத்தால் நெய்யால் நனைத்துக் கொண்டு प्रियेणनाम्ना என்பது முதலிய மந்திரத்தால் உத்கரம் என்னுமிடத்தில் அதை வைத்து விடல் வேண்டும்.

பிறகு, வேள்வித்தலைவன் அந்த அவிகளைத் தொட்டுப் போற்றுதல் வேண்டும். போற்றும் போது, अपतं मरुतो भुवनानुदन्ताम् என்று ஊகித்துக் கொள்ளல் வேண்டும்.

வேட்போன் ஆஜ்ய பாகங்களை (நெய் ஹோமங்களை)ச் செய்து விட்டு, அவிப்பிண்டங்களைப் பகுத்தெடுத்துக் கொண்டு தரிச பூரண மாத வேள்வியில் ஹோமஞ் செய்ததுபோல் ஹோமஞ் செய்தல் வேண்டும்.

இவைகட்கு, 'அஸிதவர்ண:, என்பது முதலிய ஆறு மந்திரங்களும் யாஜ்யானு வாக்கியங்களென்று தெரிந்து கொள்க.

வேள்வித்தலைவன், இம் மூன்று ஹோமங்கட்கும் 'மருத்ப்ய இதம்' என்று, தியாகஞ் செய்தல் வேண்டும். மற்றும், முன்போலவே அதிலெழும் புகையைப் போற்றுதலும் வேண்டும்.

இதற்கு, தரிசபூரணமாத வேள்வியைப் போலவே அன்னஞ் சமைத்து அருந்துதல் தட்சிணையாம். கறுப்பு ஆடையை யளித்தல் என்பர் சிலர்.

ஈண்டு, இவ்வாறு செய்யப்படும் இஷ்டியும் முன்னர்க் கூறியவாறே வண்டியின் முதலாவது பாயில் கட்டி வைத்த அவியின்மேல் மழை பெய்யில் செய்யவேண்டியதாம் என்பதையுணர்க.

இனி, அவ்வாறு மழை பெய்யாவிடில், முற்கூறிய மூன்று மந்திரங்களுள் இரண்டாவது மூன்றாவது மந்திரங்களால், இரண்டாவது பாய் மூன்றாவது பாய்களில் முன்போல் அவிபுருண்டைகளைக் கட்டி வைத்தல் வேண்டும். கட்டியபடியே ஒரு நாளிருந்தும் மழை பெய்யாவிடில் நான்காம் நாள், 'தாமச்சத்' என்னும் ஒரு இஷ்டியைச் செய்தல் வேண்டும் அதன் பிரயோகம் வருமாறு:-

காரீரீ இஷ்டி)

முன்னரே அக்கினி யுண்டாக்கப் பட்டிருக்கின்றது; மற்றும், வைசுவ தேவ பருவத்தைப்போல் பூவோடுகூட தருப்பையையுங் கொண்டு வருதல் வேண்டும். பாத்திரங்களை வைக்கும்போது காருகபத்தியத்திற்கு வடக்கில் பதினாறு அகல்களையும், ஸ்ப்யம் என்னும் மரக்கத்தியையும் வைத்த பிறகு ஏனையவைகளை முன்போல் வைத்தல் வேண்டும்.

நெல்லெடுக்கும் போது, अग्नये धामच्छदे जुष्टं निर्वपामि என்று மூன்று முறையும், मरुद्भ्यो जुष्टं निर्वपामि என்று மூன்று முறையும், सूर्याय जुष्टं निर्वपामि என்று மூன்று முறையும் ஓதிக்கொண்டு எடுத்தல் வேண்டும்.

பிறகு, புரோடாசங்களைச் செய்து கபாலங்களில் வைத்துவிட்டு வேதிகையில் தருப்பையைப் பரப்புதல் முதலிய கிரியைகளை உத்கரம் என்னுமிடத்திற் செய்தல் வேண்டும்.

பிறகு, புரோடாசங்களை எடுத்து வேதிகையில் வைத்து, 'ப்ரியேண' என்பது முதலிய மந்திரத்தால் உத்கரத்தில் விரித்துள்ள தருப்பையின்மீது வைத்தல் வேண்டும்.

மற்றும், வைசுவதேவ பருவத்தைப் போல் தீயைக் கடைந்து ஆகவனீயத்தீயுடன் சேர்த்துவிட்டு புரோடாசங்களை தரிசபூரணமாத வேள்வியிற் செய்தது போலவே ஹோமஞ் செய்தல் வேண்டும். செய்யுங்கால், சூரியனுக்குரிய புரோடாச ஹோமம் முடிந்தவுடன், संसर्पोऽसि என்பது முதலிய மந்திரத்தால் வேதிகைக்கு வடக்கில் வந்து ஹோமஞ்செய்தல் வேண்டும். மற்றவைடனைத்து முன்போலவே செய்து கொள்ளற்பாலன என்பது.

ஐந்தாவது விநியோகம்

பச்சை மட்குடத்தில் நீர் நிறைத்தல்

सृजा वृष्टिं दिव आद्भिःसमुद्रं पृण।

என்பது

உரை.

மருத்துக் கூட்டங்களே! நீங்கள், வானிலிருந்து மழையுண்டாக்குவீர்களாக. வெய்யிலிற் காய்ந்துள்ள இம் மட்குடத்தில் நீரை நிறையுமாறு செய்வீர்களாக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால், உத்கரம் என்னுமிடத்தில் சுடாத மட்குடத்தை வைத்து அதில் நீர் நிறைத்தல் வேண்டுமென்பதாம்.

ஈண்டு, அம் மட்குடம் உடைந்து போனால் மழைபெய்யும் என்று கருதிக் கொள்ளல் வேண்டும்.

பிறகு, வண்டியில் ஒரு கறுப்பாட்டைக் கட்டிவைத்தல் வேண்டும். அதன் பிறகு,

---

ஆறுவது விநியோகம்

ஆட்டின்மீது நீர் தெளித்தல்

अब्जा असि प्रथमजा बलमसि समुद्रियम्।

என்பது

உரை

ஆடே! நீ, மாதாபிதாக்களின் சோணித சுக்கிலமாகிய தண்ணீரால் உண்டாகியிருக்கின்றாய். ஆனாலும் முதலில் சூரியனால் நீங்கும் இருளால் உண்டானாய். மழை பெய்வதை அறிவுறுத்தும் ஆற்றலையுடைத்தாயிருக்கின்றாய் என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால், வண்டியிற் கட்டியுள்ள ஆட்டின்மீது நீரைத் தெளித்தல் வேண்டுமென்பதாம்.

ஈண்டு, அவ்வாடு மயிர்க்கூச்செறிதல் முதலான குறிகளால் மழை பெய்யும் என்பதைக் கருதிக் கொள்ளல் வேண்டும் என்பதையு முணர்க.

பிறகு, உத்கரம் என்னுமிடத்தில் மந்திரமின்றி ஒரு சத்திச்சாரணைக் கொடியை நாட்டிவைத்தல் வேண்டும்.

ஏழாவது விநியோகம்

அச் சாரணைக் கொடியின்மீது நெய்யை விடுதல்

उन्नम्भय पृथिवीं भिन्धीदं दिव्यं नभः। उद्नो दिव्यस्य नो देहीशानो वि सृजा दृतिम्।

என்பது

உரை

சத்திச் சாரணைக் கொடியே! நீ, பூமியை நனைத்தற் பொருட்டு மேகத்தைப் பிளப்பாயாக. வானிலுண்டாகும் நீரை எமக்குக் கொடுப்பாயாக. சத்திச் சாரணையால் உண்டாகும் தேவதையே! நீ, மேகத்தை மழை பெய்யும்படி செய்வாயாக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால் சத்திச் சாரணையின்மீது நெய்யை விடல் வேண்டும் என்பதாம்.

தண்ணீரை விடல் வேண்டுமென்பாரு முளர். பிறகு, அச் சத்திச் சாரணைக் கொடியை, ஆகவனீயத்திற் போட்டுவிட்டு, 'ஹிரண்ய கேஶ:' என்பது முதலிய மந்திரத்தால் அதனுலெழும் புகையைப்போற்றல் வேண்டும்.

ஏழாவது விநியோகம்

மான் தோலை உதறுதல்

ये देवा दिविभागा येऽन्तरिक्षभागा ये पृथिविभागाः। त इमं यज्ञमवन्तु त इदं क्षेत्रमाविशन्तु त इदं क्षेत्रमनु वि विशन्तु।

என்பது

உரை

எத்தேவர்கள் வானில் வாழ்கின்றார்களோ, அத்தேவர்கள் அனைவரும், வேள்வியையடைந்து பொதுவாக பயிருண்டாகும் பூமிக்குள் நுழைந்து, பிறகு ஒவ்வொரு கழனிகளிலும் புகுவார்களாக என்பது.

சாயணபாடியக் கருத்து

இம்மந்திரத்தால், முன் அவிகளைக் கட்டிவைத்திருந்த மான் தோலை ஆகவனீயத்தின்மீது உதறிவிடல் வேண்டும் என்பதாம்.

எட்டாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காவது பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் இருபத்தொன்பது பதங்களைக் கொண்டது.

ஏழாவது அநுவாகத்திற்கு உரைகூறும் பிராமணங்கள்.

मारुतमसि मरुतामोज इति कृष्णं वासः कृष्णतूषं परि धत्त एतद्वै वृष्टयै रूपꣳ सरूप एव भूत्वा पर्जन्यं वर्षयति रमयत

मरुतश्श्येनमायिनमिति पश्चाद्वातं प्रति मीवति पुरोवातमेव जन-
यति वर्षस्यावरुद्ध्यै वातनामानि जुहोति वायुर्वै वृष्ट्या ईशे वायु-
मेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पर्जन्यं वर्षयत्यष्टौ
॥ १ ॥ जुहोति चतस्रो वै दिशश्चतस्रोऽवान्तरदिशा दिग्भ्य एव
वृष्टिꣳ सं प्र च्यावयति कृष्णाजिने सं यौति हविरेवाकरन्तर्वेदि
सं यौत्यवरुद्ध्यै यतीनामद्यमानानाꣳ शीर्षाणि पराऽपतन्ते खर्जूरा
अभवन्तेषाꣳ रस ऊर्ध्वोऽपतत्तानि करीराण्यभवन्त्सौम्यानि वै
करीराणि सौम्या खलु वा आहुतिर्दिवो वृष्टिं च्यावयति यत्करीरा-
णि भवन्ति ॥ २ ॥ सौम्ययैवाऽऽहुत्या दिवो वृष्टिमव रुन्धे
मधुषा सं यौत्यपां वा एष ओषधीनाꣳ रसो यन्मध्वद्भ्य
एवौषधीभ्यो वर्षत्यथो अद्भ्य एवौषधीभ्यो वृष्टिं
नि नयति मान्दा वाशा इति सं यौति नामधेयैरेवैना
अच्छैत्यथो यथा ब्रूयादसावेहीत्येवमेवैना नामधेयैरा ॥ ३ ॥ च्या-
वयति वृष्णो अश्वस्य संदानमसि वृष्ट्यै त्वोप नह्यामीत्याह
वृषा वा अश्वो वृषा पर्जन्यः कृष्ण इव खलु वै भूत्वा वर्षति
रूपेणैवैनꣳ समर्धयति वर्षस्यावरुद्ध्यै ॥ ४ ॥

ஈண்டு, காரீரி இஷ்டியின் இரண்டாம் பாக மந்திரங்கள் எட்டாம் அநு வாகத்திற் கூறப்பட்டன. இவ்வொன்பதாவது அநுவாகத்தில் ஏழாவது அநு வாக மந்திரங்கட்கு உரை கூறப்படுகின்றது.

வேள்வித்தலைவன் வேஷ்டியை அணிந்து கொள்ளல் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 1.

मारुतमसि मरुतामोज इति कृष्णं वासः कृष्णतूषं परि धत्त एतद्वै वृष्ट्यै रूपꣳ सरूप एव भूत्वा पर्जन्यं वर्षयति ।

என்பது

உரை.

கருப்பு நிறக் கோடிட்ட ஆடை என்பது பொருள். மேகஞ்சூழ்ந்து இருளாகும்போது மழையின் வடிவம் கருநிறமாய்த் தோற்றுகின்றது, வேள்வித்தலைவனும் கரிய ஆடையால் மறைத்துக் கொள்ளில் மழையையுண்டாக்க ஆற்றலுடையவனாகின்றான் என்பதாம்.

மற்றொரு மந்திரத்தை விநியோகக்கின்றது.

பிராமணம் 2.

रमयत मरुतश्श्येनमायिनमिति पश्चाद्वातं प्रति मीवति पुरोवातमेव जनयति वर्षस्यावरुद्ध्यै ।

என்பது

உரை.

இது மேல் காற்றைக் கட்டி கீழ்காற்றையுண்டாக்குகின்றது என்பதாம்.

'புரோவா தோவர்ஷன்' என்பது முதலிய மந்திரங்கட்கு விநியோகத்தைக் காட்டுகின்றது.

பிராமணம் 3

वातनामानि जुहोति वायुर्वै वृष्ट्या ईशे वायुमेव स्वेन भागधेयेनोप धावति स एवास्मै पर्जन्यं वर्षयति ।

என்பது

உரை.

ஜின்வ: உக்ர: என்பது முதலியன வாயுக்களின் பெயர்கள். அவைகளைக்குறித்து ஹோமஞ்செய்யில் மழைக்குத் தலைமையாகிய வாயு களிப்புற்று மழையைப் பெய்விக்கின்றது என்பதாம்.

பாடத்திலுள்ள மந்திர எண்ணிக்கையைப் புகழ்கின்றது.

பிராமணம் 4.

अष्टौजुहोति चतस्रो वै दिशश्चतस्रोऽवान्तरदिशा दिग्भ्य एव वृष्टिं सं प्र च्यावयति ।

என்பது

உரை.

ஆகுதிகள் எட்டுத்திசைகளுக்கும் எட்டு ஆதலின், எல்லாத் திக்குக்களி லிருந்து மழை இறங்குகின்றது என்பதாம்

மாந்தா, வாமா என்னும் மந்திரத்தால், மாவைக் கலத்தல் விதிக்கப்பட்டதற்கு ஆதாரம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 5.

कृष्णाजिने सं यौति हविरेवाकः ।

என்பது.

உரை

பிரகிருதியில் மான்தோலின்மீது அவியாகிய நெல் குத்தப்படுகின்றது, மாவு பிசையப்படுகின்றது ஆதலின் இதிலும் மான்தோலின்மீது அவிசெய்யப் படுகின்றது என்பதாம்.

இடம் இன்னதென்று விதிக்கின்றது

பிராமணம் 6

अन्तर्वेदि सं यौत्यवरुद्ध्यै ।

என்பது.

உரை.

வேதிகைக்கு வெளியே செய்யில் அவியாகாமற்போய்விடும் ஆகையால் வேதியிற் செய்தல் வேண்டும் என்பதாம்.

கரீரம் (மூங்கில்போத்து, பேரீச்சம்பழம்) என்னும் அவியை விதிப்பதன் பொருட்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 7

यतीनामद्यमानानाꣳ शीर्षाणि पराऽपतन्ते खर्जूरा अभवन्तेषाꣳ रस ऊ-र्ध्वोऽपतत्तानि करीराण्यभवन्त्सौम्यानि वै करीराणि सौम्या खलु वा आहुतिर्दिवो वृष्टिं च्यावयति ।

என்பது.

உரை.

பரமாஞ்சத்துறவிகள் வேதாந்த மோதாமல் நித்தியஞ் செய்யவேண்டிய கருமங்களை விட்டுவிட்டதால் இந்திரன் அவர்களுடைய தலைகளையறுத்து செந்நாய்க்குப் போட்டுவிட்டனன். செந்நாய் அவற்றையருந்தும்போது தலையின் பாதி கீழேவிழுந்து விட்டது. அதுவே பேரீச்சைமரம் சித்திச்சை மரங்களாயிற்று. அவைகளின் இரசம் மேலெழும்பிக் கீழேவிழுந்தது அதுவே. சோமக் கொடியைப் போன்ற மரமாயிற்று. (மூங்கில்) இதுவே கரீரம் எனப்படுகின்றது. இது சோமத்திற் கொப்பாதலின் சோமசம்பந்தமுடையதாம் ; இது வானிலிருந்து மழையைப் பெய்விக்கின்றது என்பதாம்.

மாவுக்கு பிரகிருதிப் பொருள் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 8

यत्करीराणि भवन्ति सौम्ययैवाऽऽहुत्या दिवो वृष्टिमव रुन्धे ।

என்பது.

உரை.

மூங்கில் போத்து சோமசம்பந்த முடையதாதலின் வானிலிருந்து மழையை இறங்கும்படி செய்கின்றது என்பதாம்.

மாவைக் கலந்தற்குரிய சாதனத்தை விதிக்கின்றது

பிராமணம் 9

मधुषा सं यौत्यपां वा एष ओषधीनाꣳ रसो यन्मध्वद्भ्य एवौषधीभ्यो-वर्षत्यथो अद्भ्य एवौषधीभ्यो वृष्टिं नि नयति ।

என்பது.

உரை

தேன் ஈக்கள் பல்வகைப் பூக்களிலிருந்து கொண்டுவருதலாலும் அந்த இரசங்கள் கொடி செடிகளிலிருந்து உண்டாவது ஆகையாலும், நெகிழ்ச்சியுடையதாலும் இரண்டின் சாரமாம் என்பதாம்.

மந்திரத்தால் மாலைக்கலக்குதல் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 10

मान्दा वाशा इति सं यौति नामधेयैरेवैना अच्छैत्यथो यथा ब्रूयादसावे-
हीत्येवमेवैना नामधेयैरा च्यावयति ।

என்பது

உரை

மாந்தா, என்பது முதலியன நீரின் பெயர்கள். அவைகளால் நேராய் அடையப்படுகின்றது. ஒருவனை ஒரு பெயரிட்டுஉலகில் அழைப்பதுபோல் நீரின் பெயர்களைச்சொல்லி அழைக்கப்படுகின்றது. அதாவது இறங்கும்படி செய்கின்றது என்பதாம்.

மான்தோலைக் கட்டுவதற்குரிய மந்திரத்திற்கு உரை கூறுகின்றது

பிராமணம் 11

वृष्णो अश्वस्य संदानमसि वृष्ट्यै त्वोप नह्यामीत्याह वृषा वा अश्वो वृषा
पर्जन्यः कृष्ण इव खलु वै भूत्वा वर्षति रूपेणैवैनꣳ समर्धयति वर्षस्या-
वरुद्ध्यै ।

என்பது.

உரை.

குதிரை சுக்கிலத்தைத் தெளிப்பதற்கு ஆற்றலுடையதா யிருப்பது போன்று மழையும் தெளிப்பதற்கு ஆற்றலுடையதாம். மேகம் நீரால் நிறைந்து கறுப்பாய் பிறகு மழைபெய்கின்றது. இதனால், கறுப்புக்கயிற்றால் மழை கட்டுப்படுத்தப்பட்டதாகின்றது. அதுவும் மழையைக் கட்டுவதற்குத் தக்கதாகின்றது என்பதாம்.

ஒன்பதாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் இருபத்தொரு பதங்களைக் கொண்டது, காரீரி இஷ்டியின் இரண்டாம்பாக சம்மிதா மந்திரங்களுக்கு உரைகூறும் பிராமணங்கள்.

देवा वसव्या देवाश्शर्मण्या देवास्सपीतय इत्या बध्नाति देवताभिरेवान्वहं वृष्टिमिच्छति यदि वर्षेत्तावत्येव होतव्यं यदि न वर्षेच्छ्वो भूते हविर्निर्वपेदहोरात्रे वै मित्रावरुणावहोरात्राभ्यां खलु वै पर्जन्यो वर्षति नक्तं वा हि दिवा वा वर्षति मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मै ॥ १ ॥ अहोरात्राभ्यां पर्जन्यं वर्षयतोऽग्नये धामच्छदे पुरोडाशमष्टाकपालं निर्वपेन्मारुतꣳ सप्तकपालꣳ सौर्यमेककपालमग्निर्वा इतो वृष्टिमुदीरयति मरुतस्सृष्टां नयन्ति यदा खलु वा असावादित्यो न्यङ्रश्मिभिः पर्यावर्ततेऽथ वर्षति धामच्छदिव खलु वै भूत्वा वर्षत्येता वै देवता वृष्ट्या ईशते ता एव स्वेन भागधेयेनोप धावति ताः ॥ २ ॥ एवास्मै पर्जन्यं वर्षयन्त्युतावर्षिष्यन्वर्षत्येव सृजा वृष्टिं दिव आऽद्भिस्समुद्रं पृणेत्याहेमाश्चैवामूश्चापस्समर्धयत्यथो आभिरेवामूरच्छैत्यब्जा असि प्रथमजा बलमसि समुद्रियमित्याह यथायजुरेवैतदुन्नम्भय पृथिवीमिति वर्षाह्वां जुहोत्येषा वा ओषधीनां वृष्टिवनिस्तयैव वृष्टिमा च्यावयति ये देवा

दिविभागा इति कृष्णाजिनमव धूनोतीम एवास्मै लोकाः प्रीता अभीष्टा भवन्ति ॥ ३ ॥

ஈண்டுக் காரீரி யிஷ்டியின் உத்தரபாகத்திலுள்ள மந்திரங்கட்கு இப் பிராமணம் உரை கூறுகின்றது.

அவற்றுள், மூன்று நாட்களில் முறையாய் வண்டியின் மூன்று பாய்களிலும் கரீரமாவைகட்டுதற் பொருட்டு மந்திரங்களை விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம் 1

देवा वसव्या देवाश्शर्मण्या देवास्सपीतय इत्या बध्नाति देवताभिरेवान्वहं वृष्टिमिच्छति ।

என்பது

உரை

அவ்வம் மந்திரத்திற்குரிய தேவதையால் அருள் பெற்றோனாய் ஒவ்வொருநாளும் மழையை விரும்புகின்றான் என்பது பொருள்.

மழை மழையில்லாமை என்னும் இரண்டு பக்ஷங்களிலும் மாவின் ஹோமமும் புரோடாசத்திற்கு நெல்லெடுத்தலும் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 2

यदि वर्षेत्तावत्येव होतव्यं यदि न वर्षेच्छ्वो भूते हविर्निर्वपेत् ।

என்பது

உரை.

அவ்வளவில் மாவுருண்டைகள் செய்தபோது புரோடாசத்திற்கு நெல்லெடுத்தலின்றி மாவுருண்டையை ஹோமஞ் செய்தல் வேண்டும். முதல் நாளில் மழை பெய்யில் மூன்று மாவுருண்டைகளின் ஹோமத்திலேயே கருமம் முடிந்து விட்டது. அவ்வாறே இரண்டாம் நாள் மூன்றாம் நாட்களிலுமாம். மூன்று நாட்களிலும் மழையின்றேனில் நான்காம் நாளில் புரோடாசத்தின் பொருட்டு நெல்லெடுத்தல் வேண்டுமென்பதாம்.

பகலிரவு கட்டிவைத்தல் வேண்டுமென்னும் சூத்திரகாரர் கூறிய பொருளையே அர்த்தவாதத்தினுல் (குணத்தைப் புகழ்தலால்) விதிக்கின்றது.

பிராமணம் 3.

अहोरात्रे वै मित्रावरुणावहोरात्राभ्यां खलु वै पर्जन्यो वर्षति नक्तं वा हि दिवा वा वर्षति मित्रावरुणावेव स्वेन भागधेयेनोप धावति तावेवास्मा अहोरात्राभ्यां पर्जन्यं वर्षयतः ।

என்பது

உரை.

பகல், இரவியின் வெளிச்சமாதலின் மித்திரனெனப்படும். இரவு, இருளால் மூடப்பட்டமையின் வருணனெனப்படும். ஆதலின், இவற்றைத் தவிர்த்து வேறுசமயம் ஒன்றுமின்மையினுலும், இவற்றுள்ளும் இரவிலோ, அல்லது பகலிலோ, மழைபெய்யும் என்னும் உணர்ச்சியின்மையினுலும், அவ்விருண்டைகளை ஒருநாள் முழுதுங் கட்டிவைத்தல் வேண்டுமென்பதாம். ஈண்டு இதனுல், களிப்படைந்த மித்திர வருணர்களிருவரும் மழையைப் பெய்விக்கின்றனர் என்பது கொள்ளக் கிடந்தமை காண்க.

அவி (நெல்) யெடுத்தல் வேண்டும் என்றும் பொது விதியைச் சிறப்பித்து விரித்துரைக்கின்றது

பிராமணம் 4

अग्नये धामच्छदे पुरोडाशमष्टाकपालं निर्वपेन्मारुतꣳ सप्तकपालꣳ सौर्य-मेककपालमग्निर्वा इतो वृष्टिमुदीरयति मरुतस्सृष्टां नयन्ति यदा खलु वा असावादित्यो न्यङ्रश्मिभिः पर्यावर्ततेऽथ वर्षति धामच्छदिव खलु वै भूत्वा वर्षत्येता वै देवता वृष्ट्या ईशते ता एव स्वेन भागधेये-नोप धावति ता एवास्मै पर्जन्यं वर्षयन्त्युतावर्षिष्यन्वर्षत्येव ।

என்பது

உரை.

எமது வீடுகளை மழையால் இருட்டும்படி செய்யும் 'தாமம்' என்னும் சொல்லைக்கொண்ட இருக்கு மந்திரங்களாற் புகழப் பெறும் 'தாமச்சத்' என்னும் அக்கினியின் பொருட்டு எட்டுக் கபாலங்களிற் புரோடாசஞ் செய்தும், மாருதத்திற்கு ஏழு கபாலங்களிலும் சூரியனுக்கு ஒரு கபாலத்திலும் புரோடாசங்கள் செய்தும் யாகஞ் செய்தல் வேண்டும். நிர்விட்ட ஆகுதி இரவி வாயிலாய் மழையையுண்டாக்குகின்றது; இரவி, தனது கிரணங்

களைப்பரப்பி அதிசயமாகிய வெய்யிலை எறிக்கில் மழையாய்ப் பெய்யும். அம் மழையை, காற்று எங்கெங்கேயோ கொண்டுபோய் விடுகின்றது. இவ்வாற்றால், அக்கினி, காற்று, சூரியன் என்னும் மூன்றுமே மழையையுண்டாக்கி நீரைப் பெய்விக்கின்றன என்பது.

பச்சை மட்குடத்தில் நீர்நிறைக்கும் மந்திரத்திற்கு உரை கூறுகின்றது

பிராமணம் 5.

सृजा वृष्टिं दिव आऽद्भिस्समुद्रं पृणेत्याहेमाश्चैवामूश्चापस्समर्धयत्यथो आभिरेवामूरच्छैति ।

என்பது.

உரை

சுவர்க்கத்திலுள்ளதை அடைவதற்குப் பூமியிலுள்ள நீர் செல்கின்றது என்பதாம்.

கறுப்பு ஆட்டின்மீது நீர் தெளிக்கும் மந்திரம் வெளிப்படையானதென்று காட்டுகின்றது,

பிராமணம் 6.

अब्जा असि प्रथमजा बलमसि समुद्रियमित्याह यथायजुरेवैतत् ।

என்பது

உரை.

சத்திச்சாரணை முதலிலுண்டாகிய நீரின் வன்மையாயிருக்கின்றது என்பது.

சத்திச்சாரணைக்கோடியின் ஓமத்தை விதிக்கின்றது,

பிராமணம் 7.

उन्नम्भय पृथिवीमिति वर्षाह्वां जुहोत्येषा वा ओषधीनां वृष्टिमा च्याव-यति ।

என்பது

உரை

கொடி செடிகளுக்குள் இச் சத்திச்சாரணைக் கொடியே மழை நாளில் மிகுதியாயுண்டானதுபற்றி மழையை அநுபவிக்கின்றது என்பதாம்.

மற்றொரு மந்திரத்தை விநியோகஞ் செய்கின்றது.

பிராமணம் 8.

ये देवा दिविभागा इति कृष्णाजिनमव धूनोतीम एवास्मै लोकाः प्रीता अभीष्टा भवन्ति ।

என்பது

உரை.

அந்தரிக்ஷத்தில் வாழ்கின்றவர்கள், பூமியில் வாழ்கின்றவர்கள் என்று கூறியதால் அவர்கள் அன்புடையர்களாய் வேள்வித்தலைவர்கட்கு வேண்டியவற்றையளிக்குந் தேவர்கள் என்பதாம்.

பத்தாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிக்குமேல் முப்பது பதங்களைக் கொண்டது.

மூவகை அவியிஷ்டி (த்ரைதாதவீய இஷ்டி) யை விதிக்கும் பிராமணங்கள்.

सर्वाणि छन्दांस्येतस्यामिष्ट्यामनूच्यानीत्याहुस्त्रिष्टुभो वा एतद्वीर्यं यत्ककुदुष्णिहा जगत्यै यदुष्णिहककुभावन्वाह तेनैव सर्वाणि छन्दांस्यव रुन्धे गायत्री वा एषा यदुष्णिहा यानि चत्वार्यध्यक्षराणि चतुष्पाद एव ते पशवो यथा पुरोडाशे पुरोडाशोऽध्येवमेव तद्यदृच्यध्यक्षराणि यज्जगत्या ॥ १ ॥ परिदध्यादन्तं यज्ञं गमयेत्त्रिष्टुभा परि दधातीन्द्रियं वै वीर्यं त्रिष्टुगिन्द्रिय एव वीर्ये यज्ञं प्रतिष्ठापयति नान्तं गमयत्यग्ने त्रीतेवाजिनात्री षधस्थेति त्रिवत्या परि दधाति सरूपत्वाय सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीयं कामायकामाय प्र युज्यते सर्वेभ्यो हि कामेभ्यो यज्ञः

प्रयुज्येत त्रैधातवीयेन यजेताभिचरन्त्सर्वो वै ॥ २ ॥ एष यज्ञो यत्त्रैधातवीय५ सर्वेणैवैनं यज्ञेनाभि चरति स्तृणुत एवैनमेतयैव यजेताभिचर्यमाणस्सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीय५ सर्वेणैव यज्ञेनं यजते नैनमभिचरन्त्स्तृणुत एतयैव यजेत सहस्रेण यक्ष्यमाणः प्रजातमेवैनद्ददात्येतयैव यजेत सहस्रेणेजानोऽन्तं वा एष पशूनां गच्छति ॥ ३ ॥ यस्सहस्रेण यजते प्रजापतिः खलु वै पशूनसृजत ता५स्त्रैधातवीयेनैवासृजत य एवं विद्वा५स्त्रैधातवीयेन पशुकामो यजते यस्मादेव योनेः प्रजापतिः पशूनसृजत तस्मादेवैनान्त्सृजत उपैनमुत्तर५ सहस्रं नमति देवताभ्यो वा एष आवृश्च्यते यो यक्ष्य इत्युक्त्वा न यजते त्रैधातवीयेन यजेत सर्वो वा एष यज्ञः ॥ ४ ॥ यत्त्रैधातवीय५ सर्वेणैव यज्ञेन यजते न देवताभ्यआ वृश्च्यते द्वादशकपालः पुरोडाशो भवति ते त्रयश्चतुष्कपालास्त्रिषमृद्धत्वाय त्रयः पुरोडाशा भवन्ति त्रय इमे लोका एषां लोकानामाप्त्या उत्तरउत्तरो ज्यायान्भवत्येवमिव हीमे लोका यवमयो मध्य एतद्वा अन्तरिक्षस्य रूप५ समृद्ध्यै सर्वेषामभिगमयन्नव द्यत्यछम्बट्कार५ हिरण्यं ददाति तेज एव ॥५॥ अव रुन्धे तार्प्यं ददाति पशूनेवाव रुन्धे धेनुं ददात्याशिष एवाव रुन्धे साम्नो वा एष वर्णो यद्धिरण्यं यजुषां तार्प्यमुक्थामदानां धेनुरेतानेव सर्वान्वर्णानव रुन्धे ॥ ६ ॥

அவி இஷ்டி)

சமித்வைக்கும் மந்திரங்களுக்குள் இரண்டு தாயிகள் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 1.

सर्वाणि छन्दाꣳस्येतस्यामिष्ट्यामनूच्यानीत्याहुस्त्रिष्टुभो वा एतद्वीर्यं यत्ककुदुष्णिहा जगत्यै यदुष्णिहककुभावन्वाह तेनैव सर्वाणि छन्दाꣳस्यव रुन्धे ।

என்பது

உரை.

'திரிதாதவீயம்' என்னும் இந்த இஷ்டியில் சாமிதேனி (சமித்தை வைக்கும் மந்திர) வடிவமாய் எல்லாச்சந்தங்களையும் கூறவேண்டுமென்று ஆன்றோர் கூறுகின்றனர். அது பொருந்துமாறு யாங்ஙனமெனின்? 'ககுப்' என்னுஞ் சந்தம், 'திரிஷ்டுப்' என்னுஞ் சந்தத்தின் சாரமாம். அங்ஙனமே உஷ்ணிக் என்னுஞ் சந்தம், 'சகதி' என்னுஞ் சந்தத்தின் சாரமாம். ஆதலின், அவ்விரண்டையும் எடுத்துக் கூறுவதால் எல்லாச்சந்தங்களையும் கூறியதாயிற்று என்பதாம். தாயி = சேர்த்தல்.

இவ்விரண்டைக் கூறுவதால், திருஷ்டுப், சகதி என்னும் இரண்டு சந்தங்களும் இலாபமாயினும் காயத்திரியின் இலாபம் இல்லை என்னும் ஆசங்கையைப் போக்குதற்பொருட்டு அதுவும் இதில் அடங்கியதென்று காட்டுகின்றது.

பிராமணம் 2.

गायत्री वा एषा यदुष्णिहा यानि चत्वार्यध्यक्षराणि चतुष्पाद एव ते पशवो यथा पुरोडाशे पुरोडाशोऽध्येवमेव तद्यदृच्यध्यक्षराणि ।

என்பது

உரை.

'உஷ்ணிக்' என்னுஞ் சந்தம் இருபத்தெட்டு எழுத்துக்களைக்கொண்டது, அவற்றுள் இருபத்துநான்கு எழுத்துக்களிருக்கின்றமையி[illegible] காயத்திரி என்னுஞ் சந்தம் உள்ளீடானதேயாம். மிகுதியா[illegible] எழுத்துக்களும் [illegible] தின்மேல் மற்றொரு புரோடாசம் [illegible]கின்றது. [illegible] உஷ்ணிக் சந்தமுடைய இருக்கு மந்திரத்தில் காயத்திரி சந்த எழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் நான்கு என்று உணர்க. இவ்வாற்றால் [illegible] சமமாதற்பொருட்டு எழுத்துக்களில் மிகுதி[illegible] பொருந்துமென்பதாம்.

(முவகையான

பிரகிருதியில், 'ஆசுஷோததுவஸ்யந்' என்று காயத்திரீயச்சந்த சமித் மந்திரமும், 'த்வாம்வாநஸ' என்று சகதிச்சந்தமுங் கூறப்பட்டன. அவ்விரண்டையும் நீக்குதற்பொருட்டு திருஷ்டுப் சந்தத்தை விதிக்கின்றது.

பிராமணம் 3.

यज्जगत्या परिदध्यादन्तं यज्ञं गमयेत्त्रिष्टुभापरि दधातीन्द्रियं वै वीर्यं त्रिष्टु-
गिन्द्रिय एव वीर्यं यज्ञं प्रति ष्ठापयति नान्तं गमयति।

என்பது.

உரை

சகதிச்சந்தம் உஷ்ணிக் சந்தத்தின் சாரம் என்று எடுத்துக்காட்டியதால் அதுவே ஈண்டு 'சகதி' என்னுஞ் சொல்லாற் குறிப்பிடப்படுகின்றது. அந்த உஷ்ணிக் சந்தத்தில் காயத்திரிச்சந்தம் உள்ளடங்கியதென்று கூறியதால் பொருளின் சம்பந்தமுடையதின் சம்பந்தமாகிய இலக்கணையில் 'சகதி, என்னுஞ்சொல் காயத்திரியைக் கூறுகின்றது ஆதலின் காயத்திரிச்சந்தம் நீக்கப்பட்டது. மற்றும், வேறு சாகையாலும், சகதியால் பரிதானங்கூடாதென்று கூறப்படுகின்றது, கொள்ளிலோ யக்ஞங்கெடும். எனவே திருஷ்டுப் சந்தத்தால் முடித்தல் வேண்டுமென்பதேயாம். திருஷ்டுப் இந்திரிய வன்மை வடிவமாதலின் வேள்வி உறுதியாய் நிறுவப்பட்டதாகின்றது அதனால் யக்ஞம் கெடாது என்பதாம்.

அத் திரிஷ்டுப் சந்தத்தைக் காட்டுகின்றது.

பிராமணம் 4.

अग्ने त्री ते वाजिना त्री षधस्थेति त्रिवत्या परि दधाति सरूपत्वाय।

என்பது

உரை

இம்மந்திரம் மூன்றாவது காண்டம் இரண்டாம் பிரபாடகத்திற் கூறப்பட்டிருத்தலின் இதன் உரை அங்கு எழுதப்பட்டுள்ளது. இம்மந்திரத்தில் 'த்ரி, என்னுஞ் சொல் மிகுதியாகக் காணப்படுதலின் திரிவதி எனப்படுகின்றது. இவ்வாறே; த்ரைதாதவீய பெயருங் கருமத்தின் பெயரும் வந்ததென்று உணர்க என்பதாம்.

அவி இஷ்டி)

எல்லா விருப்பங்களிலும் இந்த யாகம் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 5

सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीयं कामायकामाय प्र युज्यते सर्वेभ्यो हि
कामेभ्यो यज्ञः प्रयुज्यते ।

என்பது

உரை

எல்லா யாகங்களிலும் ஓதப்படும் சங்கங்களெல்லாம் இந்த யாகத்தில் உள்ளன என்று கூறியதால் இந்த யாகம் எல்லா யாகங்களின் வடிவமாதலின் எவ்விச்சை யெழினும் இவ்வேள்வியைச் செய்யலாம் என்பதாம்.

பகைவரைக் கொல்லுதற்கும் இது ஏதுவாமென விதிக்கின்றது.

பிராமணம் 6.

त्रैधातवीयेन यजेताभिचरन्त्सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीयꣳ सर्वेणैवैनं
यज्ञेनाभि चरति स्तृणुत एवैनम् ।

என்பது

உரை

எல்லா வேள்வி வடிவாகிய திரிதாதவீய மென்னும் இவ்வேள்வியால் பகைவனைக் கொல்வானுக என்பதாம்.

இதனால் பகைவரின் செய்வினையைப் போக்கவுங் கூடுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 7.

एतयैव यजेताभिचर्यमाणस्सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीयꣳ सर्वेणैव
यज्ञेन यजते नैनमभिचरन्त्स्तृणुते ।

என்பது

உரை.

இத்தகைய திரிதாதவீய இஷ்டியாலேயே பகைவர் செய்த செய்வினையும் நீக்கிவிடுமென்பதாம்.

ஆயிரம் கோ தட்சிணையீதல், சோதி, விசுவச்சோதி, அப்தோர்யாமம், மகாவிரதம் முதலியவைகளிலும் முடிதற்பொருட்டும் இது சாதனமென விதிக்கின்றது.

பிராமணம் 8.

एतयैव यजेत सहस्रेण यक्ष्यमाणः प्रजातमेवैनद्ददाति ।

என்பது

உரை.

ஆயிரங் கோக்களை யளிக்க இயலாதவன் இந்த வேள்வியைச் செய்யில் ஆயிரம் கோக்களைத் தானம்பண்ணும் ஆற்றலுடையவனாகின்றான். அதனால் அத்தகைய கருமானுட்டானங்களும் நிறைவேறுகின்றன என்பது.

ஆயிரங் கோக்களைத் தட்சிணையாகக்கொண்ட யாகத்தால் வழிபட்டவனுக்கு பல்வகை வேள்விப்பொருள்களின் பொருட்டும் விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 9.

एतयैव यजेत सहस्रेणानोऽन्तं वा एष पशूनां गच्छति यस्सहस्रेण यजते प्रजापतिः खलु वै पशूनसृजत ताꣳस्त्रैधातवीयेनैवासृजत य एवं विद्वाꣳस्त्रैधातवीयेन पशुकामो यजते यस्मादेव योनेः प्रजापतिः पशून-सृजत तस्मादेवैनान्त्सृजत उपैनमुत्तरꣳ सहस्रं नमति ।

என்பது

உரை.

ஆயிரங் கோக்களைத் தானமாகக் கொடுத்து யாகஞ் செய்தவனே பசுக்களின் பெருக்கின் முடிவை யடைகின்றான். அதனால் உத்தரவேள்விகளைச் செய்யவல்லனாகின்றான். இதனால், அவ்வாற்றலின்பொருட்டு பசுவிருப்புடையோனாய் பிரமனைப்போல இதனால் வழிபட்டு பசுக்கட்குக் காரணமாகிய இந்த யாகத்தால் பசுக்களை யடைகின்றான். உத்தர வேள்வியில் கொடுக்கத்தக்க ஆயிரக்கணக்கான கோக்களை எசமானன் அடைகின்றான் என்பதாம்.

யக்ஞ சங்கற்பஞ் செய்து யஞ்ஞஞ் செய்ய முடியாதவனுக்கு சங்கற்பங் கெட்டபோது பரிகாரத்தின்பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம் 10.

देवताभ्यो वा एष आ वृश्च्यते यो यक्ष्य इत्युक्त्वा न यजते त्रैधातवीयेन यजेत सर्वो वा एष यज्ञो यत्त्रैधातवीयꣳ सर्वेणैव यज्ञेन यजते न देवताभ्य आ वृश्च्यते ।

என்பது

அவிகள்)

உரை.

"யாகஞ் செய்வேனாக" என்று சங்கற்பித்துக்கொண்டு யாகஞ் செய்யாமல் தேவதைகட்குத் துரோகம் பண்ணியவன் இந்த யாகத்தைச் செய்யின் அக் குற்றம் நீங்கிவிடுமென்பதாம்.

இவ்வேள்விக்குப் பொருள் இன்னதென்று விதிக்கின்றது.

பிராமணம் 11.

द्वादशकपालः पुरोडाशोभवति ते त्रयश्चतुष्कपालास्त्रिषमृद्धत्वाय ।

என்பது.

உரை.

கூட்டிப்பார்க்குமிடத்துப் பன்னிரண்டு கபாலங்களாயினும் நான்கு மூன்றாகச் செய்யத்தக்கதாம். மூன்று என்றால் எசமானனுக்கு மும்முறை சம்பத்துக்கிடைக்கின்றது என்பதாம்.

புரோடாசத் தொகை இன்னதுஎன்று புகழ்கின்றது.

பிராமணம் 12

त्रयः पुरोडाशा भवन्ति त्रय इमे लोका एषां लोकानामाप्त्यै ।

என்பது.

உரை.

உலகங்கள் மூன்றுமாதலின் அவைகளை யடைவதன்பொருட்டு மூன்று புரோடாசங்கள் என்பதாம்.

புரோடாசங்களின் அளவை விதிக்கின்றது.

பிராமணம் 13

उत्तरउत्तरो ज्यायान्भवत्येवमिव हीमे लोकाः ।

என்பது

உரை.

ஒன்றின்மேல் ஒன்றாய் மூன்று புரோடாசங்களிருத்தல் வேண்டும் என்பதாம்.

(மூவகையான

விதியால் நெல் மயப்புரோடசத்தை ஒதுக்குவதற்கு வாற்கோதுமை விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 14

यवमयो मध्य एतद्वा अन्तरिक्षस्य रूपꣳ समृद्ध्यै ।

என்பது.

உரை

நடுவிலுள்ள புரோடாசத்தை வாற்கோதுமையாற் செய்தல்வேண்டும், மற்றிரண்டும், நெல்லால், ஏனெனின்? மண்ணுலகிலுள்ள மக்களும், சுவர்க்கத்திலுள்ள இரவி மதி முதலியவைகளும் வெளிப்படையாய்க் காணப்படுதலின் அவ்விரண்டிற்கு ஒருவிதமேயாம். அந்தரிக் கத்திலுள்ள யட்சகந்தருவர்கள் காணப்படாமையின் அவர்கட்கு வேறும். இது சம்பத்தின் பொருட்டாகின்றது என்பதாம்.

மூன்று நாதுக்களான மூன்று புரோடாசங்களிலும் ஒரேமுறையாய்க் கையால் பங்கிட்டு எடுத்துக்கொள்ளல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 15

सर्वेषामभिगमयन्नव द्यत्यछम्बट्कारम् ।

என்பது

உரை

மூன்று புரோடாசங்களிலும் ஒன்றாகவே கை படுப்படிவைத்து மூன்றிலும் சிறிது சிறிது கிள்ளியெடுத்துக் கொள்ளல் வேண்டுமென்பதாம்.

சூத்திரகாரர் கூறிய தட்சிணையை விதிக்கின்றது.

பிராமணம் 16

हिरण्यं ददाति तेज एवाव रुन्धे तार्प्यं ददाति पशूनेवाव रुन्धे धेनुं ददात्याशिष एवाव रुन्धे साम्नो वा एष वर्णो यद्धिरण्यं यजुषां तार्प्यमुक्थामदानां धेनुरेतानेव सर्वान्वर्णानव रुन्धे ।

என்பது.

அவிகள்)

உரை.

பொன்னைத் தானஞ் செய்வதால் அழகுவரும். நெய்யால் நனைக்கப் பெற்ற ஆடையைத் தானஞ்செய்வதால் பசுக்கள் கிடைக்கும். கோ, காம தேனுக் கொப்பா மாதலின் ஆசிர்வாதங் கிடைக்கும். இம் மூன்றும் மூன்று வேதங்களின் நிறங்களா மாதலின் மூன்று நிறங்களும் அடையப்படு கின்றன என்பதாம்.

இத்துடன் இக்காமிய இஷ்டிகள் முடிந்தன.

பதினோராவது அநுவாகம்
முற்றிற்று

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்
பன்னிரண்டாவது அநுவாகம்

இதில் முற்கூறிய யாகம் விளக்கப்படுகின்றது.

ஏழு பஞ்சாதிகட்குமேல் இருபத்தொரு பதங்களைக்கொண்டது.

त्वष्टा हतपुत्रो वीन्द्रꣳ सोममाऽहरत्तस्मिन्निन्द्र उपहवमैच्छत तं नोपाह्वयत पुत्रं मेऽवधीरिति स यज्ञवेशसं कृत्वा प्रासहा सोममपिबत्तस्य यदत्यशिष्यत तत्त्वष्टाऽऽहवनीयमुप प्रावर्तय-त्स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति स यावदूर्ध्वः पराविध्यति तावति स्वयमेव व्यरमत यदि वा तावत्प्रवणम् ॥ १ ॥ आसीद्यदि वा तावदध्यग्ने-रासीत्स संभवन्नग्नीषोमावभि समभवत्स इषुमात्रमिषुमात्रं विष्व-ङ्ङवर्धत स इमाँल्लोकानवृणोद्यदिमाँल्लोकानवृणोत्तद्वृत्रस्य वृत्रत्वं तस्मादिन्द्रोऽबिभेदपि त्वष्टा तस्मै त्वष्टा वज्रमसिञ्चत्तपो वै स वज्रं आसीत्तमुद्यन्तुं नाशक्नोदथ वै तर्हि विष्णुः ॥ २ ॥ अन्या देवताऽऽसीत्सोऽब्रवीद्विष्णवेही-

दमा हरिष्यावो येनायमिदमिति स विष्णुस्त्रेधाऽऽत्मानं वि न्यधत्त पृथिव्यां तृतीयमन्तरिक्षे तृतीयं दिवि तृतीयमभिपर्या-वर्ताद्ध्यबिभेद्यत्पृथिव्यां तृतीयमासीत्तेनेन्द्रो वज्रमुदयच्छद्वि-ष्णवनुस्थितस्सोऽब्रवीन्मा मे प्र हारस्ति वा इदम् ॥ ३ ॥ मयि वीर्यं तत्ते प्र दास्यामीति तदस्मै प्रायच्छत्तत्प्रत्यगृह्णादधा मेति तद्विष्णवेऽति प्रायच्छत्तद्विष्णुः प्रत्यगृह्णादस्मास्विन्द्र इन्द्रियं दधात्विति यदन्तरिक्षे तृतीयमासीत्तेनेन्द्रो वज्रमुदयच्छद्विष्णवनु-स्थितस्सोऽब्रवीन्मा मे प्र हारस्ति वा इदम् ॥ ४ ॥ मयि वीर्यं तत्ते प्र दास्यामीति तदस्मै प्रायच्छत्तत्प्रत्यगृह्णाद्द्विर्माऽधा इति तद्विष्णवेऽति प्रायच्छत्तद्विष्णुः प्रत्यगृह्णादस्मास्विन्द्र इन्द्रियं दधात्विति यद्दिवि तृतीयमासीत्तेनेन्द्रो वज्रमुदयच्छद्विष्णवनुस्थितः सोऽब्रवीन्मा मे प्र हार्येनाहम् ॥ ५ ॥ इदमसि तत्ते प्र दास्यामीति त्वी३ इत्यब्रवीत्संधां तु सं दधावहै त्वामेव प्र विशा-नीति यान्मां प्रविशेः किं मा भुञ्ज्या इत्यब्रवीत्त्वामेवेन्धीय तव भोगाय त्वां प्र विशेयमित्यब्रवीत्तं वृत्रः प्राविशदुदरं वै वृत्रः क्षुत्खलु वै मनुष्यस्य भ्रातृव्यो यः ॥ ६ ॥ एवं वेद हन्ति क्षुधं भ्रातृव्यं तदस्मै प्रायच्छत्तत्प्रत्यगृह्णात्त्रिर्माऽधा इति तद्विष्णवेऽति प्रायच्छत्तद्विष्णुः प्रत्यगृह्णादस्मास्विन्द्र इन्द्रियं दधात्विति यत्त्रिः प्रायच्छत्त्रिः प्रत्यगृह्णात्तत्त्रिधातोस्त्रिधातुत्वं यद्विष्णुरन्वातिष्ठत

विष्णवेऽति प्रायच्छत्तस्मादैन्द्रावैष्णवꣳ हविर्भवति यद्वा इदं किं च तदस्मै तत्प्रायच्छदृचस्सामानि यजूꣳषि सहस्रं वा अस्मै तत्प्रायच्छत्तस्मात्सहस्रदक्षिणम् ॥ ७ ॥

ஈண்டு, இப்பன்னிரண்டாவது அநுவாகத்தில் அத்தகைய யாகத்தின் பொருட்டு இந்திரனும் விஷ்ணுவும் தேவதை என்பதையும், ஆயிரம் தட்சிணைகளையும் கூறிவிட்டு முதலில் இதற்கு கிரிதாதுத்தன்மையைத் தேடுவதன்பொருட்டு ஒரு கதை கூறப்படுகின்றது.

அக்கதை வருமாறு :— விசுவரூபன் என்னும் பெயர்கொண்ட துவஷ்டா என்பவனுடைய புத்திரன் இந்திரனாற் கொல்லப்பட்டான் என்பது மேல் வரும் பிரபாடகத்தில் தெற்றெனவிளங்கும், அதில் புத்திரன் இறந்ததால் துன்புற்ற துவஷ்டா சோமயாகஞ்செய்ய முயன்றபோது இந்திரன் அந்த யாகத்திற்குத் தன்னை அழைக்கவேண்டுமென்று கூறியும், அவன், எனது புத்திரனைக் கொன்றதால் உன்னை அழைக்கமாட்டேன் என்றனன். அதைக்கேட்ட இந்திரன் முனிந்து சோமயாகத்தைக் கெடுத்துவிட்டு அச்சோமரசத்தையும் பலாத்காரமாகக் குடித்துவிட்டனன். குடித்ததில் மீந்த சோமரசத் துளியைக்கொண்டு துவஷ்டா இந்திரனைக் கொல்ல யாகஞ்செய்தனன். அந்த யாகத்தில், அக்கினியே! நீ இந்திரனுடைய பகைவனை யெழுவாயாக என்று மந்திரத்தை மாறி ஓதியதால் யாகத்தீ யவிந்துபோய் இந்திரனுக்குப் பகைவனாய் கோரப் பற்களையுடைய ஒருவன் உதித்தனன். அவன், ஒரு பாணம் போய் விழும் இடம்வரை வளர்ந்துகொண்டேவந்து எல்லாத்திசைகளையும் மறைத்து விட்டனன். அதனால் அவன் விருத்திரன் என வழங்கப்பெற்றனன். அவனைக்கண்டு இந்திரன் துவஷ்டா என்னும் இருவரும் நடுங்கினர்.

பிறகு, அவனைத் கொல்வதற்கு. துவஷ்டா, இந்திரனுக்கு வச்சிராயுதத்தைக் கொடுத்தனன். கொடுத்த அதை எடுப்பதற்கு இந்திரனுக்கு வன்மை போதாமையின், உதவியாயிருக்குமாறு ஒருவனைத் தேவதையாகிய விஷ்ணுவை வேண்டிக்கொள்ள, அவ்விஷ்ணு மும்மூர்த்தியாய் மூன்றுலகத்தையுஞ் சூழ்ந்துகொண்டனர். அப்பால், மூன்றுருவாகிய விஷ்ணுவின் வடிவில் மறைந்து நின்றுகொண்டு இந்திரன் வச்சிராயுதத்தை விட்டனன். அப்போது, விருத்திரன், திருமாலே! நீ என்னைக் கொல்லாதே எனது வீரியம் பூமியில் நிறைந்திருக்கின்றது அதை. உனக்குக் கொடுக்கின்றேன் என்று சொல்லிவிட்டு பூமியின் சாரத்தை இந்திரனுக்குக் கொடுத்துவிட்டனன். இந்திரன் அதைப் பெற்றுக்கொண்டு, என்னையுந் தாங்குவாயாக, என்று

அதை அன்போடு விஷ்ணுவிடத்திற் கொடுத்தனன். விஷ்ணுவும், அதை வாங்கி, நமக்குள் இந்திரனிடத்தில் இவ்வீரியம் இருக்கத்தக்கது என்று மீண்டும் இந்திரனிடத்திலேயே கொடுத்துவிட்டனன்.

அதன்பிறகு, இரண்டு முறை என்னைத் தாங்கிக்கொள்ளென்று கூறி மற்றுமொரு அந்தரிக்ஷத்திலுள்ள வீரியத்தையுங் கொடுத்தான்.

மற்றும், அங்ஙனமே மூன்றுமுறை கூறிக்கொண்டு மற்றுமொரு சுவர்க்கத்திலுள்ள வீரியத்தையுங் கொடுத்தனன். இவ்வாறு கொடுத்தவைகளை இந்திரன் உடன் பட்டுப் பெற்றுக்கொண்டனன்.

பிறகு, விருத்திரன், இந்திரனிடம், இந்திர! என்னை, ஒற்றுமையாக்கிக் கொள்வாயாக என்றனன். ஆம், அஃதெவ்வாறு? எனின்? நான் உன்னிடத்தில் நுழைந்து கொள்கின்றேன் என்றனன். அதைக்கேட்ட இந்திரன், அற்றேல், நீ என்னையே அருந்திவிடுவாய் என்றனன். அற்றன்று, மற்றோ, உன்னுடைய வயிற்றில் சாடராக்கினியாக இருந்து பசியையுண்டாக்கி மிகுந்த உணவருந்துமாறு செய்கின்றேன் என்று இந்திரனுடைய வயிற்றுக்குள் நுழைந்து கொண்டனன். இவ்வாறு, இந்திரன் மும்முறை கொடுத்ததாலும், மும்முறை வாங்கிக்கொண்டதாலும், மும்முறை கூறியதாலும் இந்த அவி திரிதாது என்னும் பெயர் பெற்றது. இது நான்கு மூன்றாகிய பன்னிரண்டு கபாலங்களிற் செய்யப்படும் மூன்று புரோடாசங்களாம். இந்திரனும் விஷ்ணுவுங் கொடுத்து வாங்கிக் கொண்டதால் இதற்கு இந்திரனும் விஷ்ணுவும் தேவதைகளாவார்கள். இந்த மூன்று அவிகளும் மூன்று வேதவடிவங்களாகின்றன. ஆயிரக்கணக்கான வேற்றுமைகளுடன் கூடிய வீரியமாதலின் இதற்கு ஆயிரங் கோக்கள் தட்சிணையாம் என்பது.

பன்னிரண்டாவது அநுவாகம்

முற்றிற்று

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதின்மூன்றாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் பன்னிரண்டு பதங்களைக் கொண்டது.

ஐந்திர பிருகற்பத்தியப் பொங்கல்களை விதிக்கும் பிராமணங்கள்

देवा वै राजन्याज्जायमानादबिभयुस्तमन्तरेव सन्तं दाम्नाऽपौ-

म्भन्त्स वा एषोऽपोम्भ्यो जायते यद्राजन्यो यद्वा एषोऽनपोम्भ्यो

जायेत वृत्रान्घ्नꣳश्चरेद्यं कामयेत राजन्यमनपोब्धो जायेत वृत्रान्घ्नꣳश्चरेदिति तस्मा एतमैन्द्राबार्हस्पत्यं चरुंनिर्वपेदैन्द्रो वै राजन्यो ब्रह्म बृहस्पतिर्ब्रह्मणैवैनं दाम्नोऽपोम्भनान्मुञ्चति हिरण्मयं दाम दक्षिणा साक्षादेवैनं दाम्नोऽपोम्भनान्मुञ्चति ॥ १ ॥

இந்திரபிருகஸ்பதிகளின் பொங்கல்களை விதித்தற்பொருட்டுப் புகழ்கின்றது

பிராமணம் 1

देवा वै राजन्याज्जायमानादबिभयुस्तमन्तरेव सन्तं दाम्नाऽपौम्भन्त्स वा एषोऽपोब्धो जायते यद्राजन्यो यद्वा एषोऽनपोब्धो जायेत वृत्रान्घ्नꣳश्चरेत् ।

என்பது

உரை.

அரசன், தடையிலாத பேராற்றலையுடையோனாயின் ஏனையோர்களைக் கொல்வதுபோல் நம்மையுங் கொன்றுவிடுவான் என்னும் பயத்தால் தேவர்கள் அவ்வரசனுடைய கருப்பத்திலேயே அவனுக்கு ஆற்றல்கள் குறையுமாறு செய்துவிடுகின்றனர். அவ்வாறு தடைப்படாத ஆற்றலையுடையனாய்ப் பிறப்பானெனின் அவன் பகைவரை யழித்துக்கொண்டே யிருப்பன் என்பதாம்.

இப்போது அதை விதிக்கின்றது

பிராமணம் 2.

यं कामयेत राजन्यमनपोब्धो जायेत वृत्रान्घ्नꣳश्चरेदिति तस्मा एतमैन्द्राबार्हस्पत्यं चरुं निर्वपेदैन्द्रो वै राजन्यो ब्रह्म बृहस्पतिर्ब्रह्मणैवैनं दाम्नोऽपोम्भनान्मुञ्चति ।

என்பது.

உரை

எவ்வேட்போன் (அத்வர்யு) "இவ்வரசன் தேவர்களால் தடைபண்ணாத ஆற்றலுடையனாய்ப் பிறந்து எங்கும் பகைவரைக்கொன்று நடப்பானாக" என்று விரும்புகின்றானோ, அவன் இந்திரனுக்கும் பிருகஸ்பதிக்கும் பொங்

கல்செய்து வேட்பானாகை. இதனால், மக்களுக்குள் அரசனாயிருக்கும் இந்திரனும், தேவர்களுக்குள் அந்தணனாகிய பிருகற்பதியும் தேவர்களாற் செய்யப்படும் தடையை நீக்கிவிடுகின்றனர் என்பதாம்.

இதற்குரிய தட்சிணையை விதிக்கின்றது

பிராம்மணம் 3.

हिरण्मयं दाम दक्षिणा साक्षादेवैनं दाम्नोऽपोम्भनान्मुञ्चति ।

என்பது

உரை.

பொன் கயிறு தானஞ்செய்யில் நேராகவே தடை விடுப்பட்டுப் போகின்றது என்பதாம்.

பதிமூன்றாவது அநுவாகம்
முற்றிற்று.

பதினான்காவது அநுவாக விடயச்சுருக்கம்

आदित्येष्टौ नवोद्वेतु प्राच्यामित्यादिकंत्रयम् ।
राजादि गुणकेन्द्रस्य पुरोडाशसमूहके ॥ १ ॥
आग्नेय उदविज्योद्वे उदुत्यं जातवेदसम् ।
सप्त चित्रं त्रयं सौर्ये सांग्रहण्या उभेइमे ॥ २ ॥
विश्वेदेवाइति प्रोक्ता मन्त्रास्सप्तदशैवहि ॥

பாவத்தினாற் பிடிக்கப்பட்டவன் செய்யும் ஆதித்ய இஷ்டி, திரிதாது இஷ்டி, வீரியத்தை அடைவதற்குச் செய்யும் ஸர்வபிருஷ்ட இஷ்டி, க்ராமணீயை விரும்புகிறவன் செய்யும் ஆக்னேய இஷ்டி, சூரிய இஷ்டி, ஸாங்க்ரஹணேஷ்டி என்பவைகட்கு முறையே யாஜ்யாபுரோநுவாக்யங்கள் என்பது.

இரண்டாங் காண்டம் நான்காம் பிரபாடகம்
பதினான்காவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் முப்பது பதங்களைகொண்டது.

யாஜ்யா புரோநுவாக்கியங்களைக் கூறுமந்திரங்கள்

नवोनवो भवति जायमानोऽह्नां केतुरुषसामेत्यग्रे। भागं देवेभ्यो विदधात्यायन्प्रचन्द्रमास्तिरति दीर्घमायुः। यमादित्या अ॰शुमाप्याययन्ति यमक्षितमक्षितयः पिबन्ति। तेनन्नो राजा वरुणो बृहस्पतिरा प्याययन्तु भुवनस्य गोपाः। प्राच्यां दिशि त्वमिन्द्रासि राजोतोदीच्यां वृत्रहन्वृत्रहाऽसि। यत्र यन्ति स्रोत्यास्तत् ॥ १ ॥ जितं ते दक्षिणतो वृषभ एधि हव्यः। इन्द्रो जयाति न परा जयाता अधिराजो राजसु राजयाति। विश्वाहि भूयाः पृतना अभिष्टीरुपसद्यो नमस्यो यथाऽसत्। अस्येदेव प्ररिरिचे महित्वंदिवः पृथिव्याः पर्यन्तरिक्षात्। स्वराडिन्द्रो दम आ विश्वगूर्तस्स्वरिरमत्रो ववक्षे रणाय। अभि त्वा शूर नोनुमोऽदुग्धा इव धेनवः। ईशानम् ॥ २ ॥ अस्य जगतस्सुवर्दृशमीशानमिन्द्रतस्थुषः। त्वामिद्धि हवामहे साता वाजस्य कारवः। त्वां वृत्रेष्विन्द्र सत्पतिं नरस्त्वां काष्ठास्ववर्तः। यद्द्याव इन्द्र ते शत॰ शतं भूमीरुत स्युः। न त्वा वज्रिन्त्सहस्र॰ सूर्या अनु न जातमष्ट रोदसी। पिबा सोममिन्द्रमन्दतु त्वा यं ते सुषाव हर्यश्वाद्रिः ॥ ३ ॥ सोतुर्बाहुभ्या॰ सुयतो नार्वा। रेवतीर्नस्सधमाद इन्द्रे सन्तु तुविवाजाः।

क्षुमन्तो याभिर्मदेम । उदग्ने शुचयस्तव वि ज्योतिषोदु त्यं जातवेदसꣳ सप्त त्वा हरितो रथे वहन्ति देव सूर्य । शोचिष्केशं विचक्षण । चित्रं देवाना मुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः । आऽप्रा द्यावापृथिवी अन्तरिक्षꣳ सूर्य आत्मा जगतस्तस्थुषः ॥ ४ ॥ च । विश्वे देवा ऋता वृध ऋतुभिर्हवनश्रुतः । जुषन्तां युज्यं पयः । विश्वे देवाश्शृणुतेमꣳ हवमे ये अन्तरिक्षे य उप द्यवि-ष्ठ । ये अग्निजिह्वा उत वा यजत्रा आसद्यास्मिन्बर्हिषि मादयध्वम् ।

இங்கு, அநுவாகத்தின் தொகையைக் காட்டுந் தலைப்புச்சொற்கள்.

देवामनुष्या देवासुरा अब्रुवन्देवासुरास्तेषां गायत्रो प्रजापतिस्ता यत्राग्ने गोभिश्चित्रया मारुतं देवा वसव्या अग्ने मारुतं देवा वसव्या देवाश्शर्मण्यास्सर्वाणि त्वष्टा हतपुत्रो देवा वै राजन्यान्नवो नवचतुर्दश ॥ १४ ॥

பஞ்சாதிகளின் தொகையைக்காட்டுந் தலைப்புச் சொற்கள்.

देवामनुष्याः प्रजां पशून्देवा वसव्याः परिद्यादिदमस्य-ष्टाचत्वारिꣳशत् ॥ ४८ ॥

ஈண்டு, இத்துடன் காமிய இஷ்டிப்பிரகரணம் முடிந்துவிட்டது. ஆதலின், ஈற்றநுவாகத்தில் யாஜ்யை புரோநுவாக்கியங்கள் கூறத்தக்கன. அவற்றுள்,

புரோநு வாக்கியங்கள்)

"பாவமாகிய நோய் கொண்டவன் ஆதித்தனுக்குப் பொங்கல் செய்து யாகஞ் செய்வானாக" என்பதற்கு புரோநுவாக்கியம்:—

மந்திரம் 1

नवोनवो भवति जायमानोऽह्नां केतुरुषसामेत्यग्रे। भागं देवेभ्यो विदधात्यायन्प्र चन्द्रमास्तिरति दीर्घमायुः।

என்பது.

உரை

கலை தேய்ந்து வளருவதால் புதிது புதிதாய் உண்டாவதாகிய சந்திரனுக்கு நிமித்தமானதும், நாடோறும் உதயாத்தமனத்தாற் புதிதாவதும், பகலுக்குக் குறியாயுள்ளதும், உஷாக் காலத்தில் உதயமாய் அக்கினிஹோத்திர முதலானவைகளைச் செய்து தேவர்கட்கு அவிர்ப்பாகங் கொடுக்கும்படி செய்வதுமாகிய ஆதித்தன் இங்கு வந்து நீண்ட ஆயுளை யளிப்பானாக என்பதாம். இஃது இரவிமதியை ஒன்றுபடுத்தித் துதிப்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்யங் கூறப்படுகின்றது

மந்திரம் 2

यमादित्या अंशुमाप्याययन्ति यमक्षितमक्षितयः पिबन्ति। तेन नो राजा वरुणो बृहस्पतिरा प्याययन्तु भुवनस्य गोपाः।

என்பது

உரை

சுக்கிலபட்சத்தில் இரவியால் ஒவ்வொரு கலையாகக் கொடுக்கப்பெற்று வளரப்பெற்றதும், கிருஷ்ணபட்சத்தில் ஒவ்வொரு கலையாக அக்கினி முதலிய தேவதைகளாற் கவரப்பட்டு தேயப்பெற்றதுமாகிய சந்திரனாகிய அமுதத்தால் விளங்குகின்ற ஆதித்தனும், வருணன், பிருகற்பதி முதலான உலகைப் பாதுகாக்குந் தேவர்களும், பிணியால் துன்புறுத்தப்பட்ட எமது பிணியை நீக்கிப் பாதுகாப்பார்களாக என்பதாம்.

அன்னத்தை நன்கு அநுந்த விரும்பியவன், "இந்திரன், அதிராசஇந்திரன், சுவராக்ஜ இந்திரன் என்னும் மூவர்க்கும் பதினொரு கபாலங்கள் வைத்துப் புரோடாசஞ் செய்து யாகம் பண்ணல் வேண்டும் என்பதில், ராசேந்திரனுடைய அவிக்குப் புரோநுவாக்கியமும், சுவாராஜ்ஜிய இந்திரனுடைய அவிக்கு யாஜ்யாவாக்கியமு மாகிய இருக்கு மந்திரம் கூறப்படுகின்றது

மந்திரம் 3

प्राच्यां दिशि त्वमिन्द्रासि राजोतोदीच्यां वृत्रहन्वृत्रहाऽसि । यत्र यन्ति
स्रोत्यास्तज्जितं ते दक्षिणतो वृषभ एधि हव्य : ।

என்பது.

உரை.

இந்திர! நீ, கீழ்த்திசைக்குத் தலைவனா யிருக்கின்றாய். மற்றும் நீ, மேல் திசையிலும் பகைவனைக் கொல்கின்றோனாயிருக்கின்றாய். ஓடும் நதிக ளனைத்தும் உன்னால் வெற்றிபெறப்பட்டன. விரும்பியவைகளை யளிக்கின்றவன் நீ ஹோமத்திற்குரியோனாய் ஆகவனீயத்திற்குத் தெற்கிலிருப்பாயாக. அதாவது அந்த இடத்தினின்றுகொண்டு வேள்விச் செயலாளர்கள் அவியைக் கொடுக்கின்றார்கள் என்பதாம்.

இராசேந்திர அவிக்கு யாஜ்யையும், அதிராசேந்திர அவிக்குப் புரோநுவாக்கிய முமாகிய இருக்குக் கூறப்படுகின்றது,

மந்திரம் 4

इन्द्रो जयाति न परा जयाता अधिराजो राजसु राजयाति । विश्वा हि
भूया: पृतना अभिष्टीरुपसद्यो नमस्यो यथाऽसत् ।

என்பது

உரை

இந்திரன் எல்லாவிடங்களிலும் வெற்றி பெறுகின்றான். ஆதலின், எல்லா அரசர்களை நோக்க மிகச்சிறப்பாய் விளங்குகின்றான். எல்லாரையும் அரசர்களாகச் செய்கின்றான். எல்லா அரசர்களும் வந்து தன்னைச் சரணடையத்தக்கோனாயிருக்கின்றான். மற்றும், பிறருடைய சேனைகளை அடக்கும் ஆற்றலுடையவனுமாவன் என்பதாம்.

புரோநு வாக்கியங்கள்)

அதிராச இந்திரனுடைய அவிக்கு யாஜ்யையும், சுவராட்இந்திர அவிக்குப் புரோநு வாக்கிய மூமாகிய இநக்த மந்திரங் கூறப்படுகின்றது,

மந்திரம் 5

अस्येदेव प्र रिरिचे महित्वं दिवः पृथिव्याः पर्यन्तरिक्षात्। स्वराडिन्द्रो दम आ विश्वगूर्तस्स्वरिरमत्रो ववक्षे रणाय।

என்பது

உரை

தானாகவே அரசனாயிருக்கின்ற (விளங்குகின்ற) வனும், எல்லா ஆயுதங்களையும் எடுத்துக் கையாளுகின்றவனும், தனது வீட்டிலுங்கூட ஆயுதத்தைத் தாங்கியுள்ளானெனின் போர்க்களத்தில் என்சொல்ல வேண்டும்? பிறருடைய சேனைக்குப் பகைவனும், பசிநோயிலிருந்து பாதுகாக்கின்றவனுமாகிய இந்திரனுடைய பெருமை மூன்றுலகங்களையுங் கடந்திருக்கின்றது என்பதாம்.

"இந்திரிய காமனும் வீரியகாமனும் சநவபிநஷ்ட மென்னும் யாகஞ் செய்வானாக" என்பதில், ராதந்தர இந்திர அவியின் புரோநுவாக்கியமும், ரைவத இந்திர அவிக்கு யாஜ்யையுமாகிய இநக்கு மந்திரத்தைக் கூறுகின்றது

மந்திரம் 6

अभि त्वा शूर नोनुमोऽदुग्धा इव धेनवः। ईशानमस्य जगतस्सुवर्दृश-मीशानमिन्द्र तस्थुषः।

என்பது

உரை

சங்கமமாகிய உலகிற்கும், தாவரமாகிய உலகிற்கும் இறைவனும், சுவர்க்கத்தை விளக்குகின்றவனுமாகிய இந்திரனை, பால்கறக்காதபசு தனது கன்றைக் குறித்துக்கதறுவதுபோல், சுரேந்திரனாகிய இந்திர! உன்னை அன்போடு எல்லாவகையானும் அன்புபாராட்டி வணங்குகின்றோம் என்பதாம்.

ராதந்தரஇந்திர அவிக்கு யாஜ்யையும் பார்கத இந்திரனுடைய அவிக்குப் புரோநுவாக்கியமுமாகிய இநக்கு மந்திரங் கூறப்படுகின்றது,

மந்திரம் 7

त्वामिद्धि हवामहे साता वाजस्य कारवः। त्वां वृत्रेष्विन्द्र सत्पतिं नरस्त्वां काष्ठास्वर्वतः।

என்பது

உரை

இந்திர! தலைவர்களான யாம், அன்னமளித்தற்பொருட்டு உன்னையே அழைக்கின்றோம். பகைவர்கள் வந்தபோது நன்னெறியைப் பாதுகாக்கும் உன்னை அழைக்கின்றோம். மச்சளான யாம் எல்லாத் திக்குகளிலும் இருந்து வரும் பகைவர் சேனையின் குதிரைகளைப் பார்த்துவிட்டு உன்னை அழைக்கின்றோம். இவ்வாற்றால் வீரியத்தையளித்து எம்மைப் பாதுகாப்பாயாக என்பதாம்.

பார்கத இந்திர அவிக்கு யாஜ்யையும், வைநபஇந்திர அவிக்குப்
புரோநு வாக்கியமுமாகிய இநக்கு மந்திரம் படிக்கப்படுகின்றது

மந்திரம் 8

यद्द्याव इन्द्र ते शतꣳ शतं भूमीरुत स्युः । न त्वा वज्रिन्त्सहस्रꣳ सूर्या अनु न जातमष्ट रोदसी ।

என்பது

உரை

இந்திர! வானுலகம் நூற்றுக்கணக்காக ஆகுக. மண்ணுலகமும் நூற்றுக்கணக்காக ஆகுக. ஆயினும், அத்தகைய வானும் மண்ணும் தோற்ற மாத்திரத்தால் வரும் உனது பெரும் ஐசுவரியத்தை ஒப்பிடாது. இரவிகள் ஆயிரங்களாயினும் உனது ஒளிக்கு ஒப்பாகாது என்பதாம்.

ஈண்டு, வைரூப இந்திரனுடைய யாஜ்யையும், வைராஜ இந்திரனுடைய புரோநுவாக்கியமுமாகிய, "சுதாசன ஸ்த்ரீரவி" என்பது கூறப்படவில்லை. அதை வேறு சாகைவாயிலாக விவகரித்துக் கொள்ளவும் அதனுடைய உரை முதற் காண்டத்திற் கூறப்பட்டுளது என்பது.

வைசாக இந்திரனுடைய யாஜ்யையும், சாக்வரஇந்திரனுடைய
புரோநு வாக்கியமுமாகிய இநக்குக் கூறப்படுகின்றது

மந்திரம் 9

पिबा सोममिन्द्र मन्दतु त्वा यं ते सुषाव हर्यश्वाद्रिः सोतुर्बाहुभ्याꣳ सुयतो नार्वा ।

என்பது

புரோநு வாக்கியங்கள்)

உரை

இந்திர! நீ, சோமத்தை இடிப்போர்களின்கைகளால் தூக்கும் கற்களால் இடித்துப் பிழிந்ததும், எம்மனோரால் நியமிக்கப்படாததுமாகிய சோமரசத்தை அருந்துவாயாக. அருந்திய சோமரசம் உனக்குக் களிப்பையுண்டாக்குக என்பதாம்.

சாக்வர இந்திரனுடைய யாஜ்யையும், ரைவத இந்திரனுடைய புரோநு வாக்கியமுமாகிய இருக்குக் கூறப்படுகின்றது

மந்திரம் 10

रेवतीर्नस्सधमाद इन्द्रे सन्तु तुविवाजाः । क्षुमन्तो याभिर्मदेम ।

என்பது

உரை

தனமுடையதும், எம்மோடுகூடக் களிப்புறுவதும் மிகுந்த அன்னத்துடன் கூடியதுமாகிய தண்ணீர், எமது தலைவனாகிய இந்திரனிடத்தில் இருப்பதாகுக. எந்த நீருடன்கூட யாம் ஒலித்துக்கொண்டு இந்திரனைத் துதிப்போமோ, அத் தண்ணீர் என்று மேலே அந்நுவயஞ் செய்துகொள்க என்பதாம்.

கன்னை விரும்பியவன், பேரொளியுடைய அக்கினிக்கு இருமுறை எட்டுக்கபால புரோடாசமும், சூரியனுக்குப் பொங்கலுஞ் செய்து வேள்வி செய்வானாக. என்பதில்; ஆக்னேய கருமத்திற்கு, யாஜ்யாநுவாக்கியங்களின் தலைப்புச் சொற்கள் காட்டப்படுகின்றன.

மந்திரம் 11 - 12

उदग्ने शुचयस्तव वि ज्योतिषा ।

என்பது

உரை

'உதக்னே சுசயஸ்தவ சுக்ரா' என்பது புரோநுவாக்கியம். இதற்கு முதலாவது காண்டம் மூன்றும் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. "விஜ்யோதிஷா ப்ருஹதா பாத்யக்னி:" என்னுமிது யாஜ்யாவாக்கியம் இதற்கு முதற்காண்டம் இரண்டாம் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்.

(யஜ்மபர் வர்க்கிய

சூரியனைப்பற்றிய கருமத்தில் புரோநுவாக்கியங் கூறப்படுகின்றது

மந்திரம் 13

उदु त्यं जातवेदसम् ।

என்பது

உரை

இதற்கு, முதற்காண்டம் நான்காம் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டுளது என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியங் கூறப்படுகின்றது

மந்திரம் 14

सप्त त्वा हरितो रथे वहन्ति देव सूर्य । शोचिष्केशं विचक्षण ।

என்பது

உரை

கிரணங்களையே கேசமாகவுடைய சூரிய தேவ! உன்னை, ஏழு குதிரைகள் இரதத்தின்மீது வைத்து இழுத்துக்கொண்டு வருகின்றன என்பதாம்.

மேற்கூறிய அதற்கே விகல்பமாக மற்றொரு யாஜ்யாவாக்கியங் கூறப்படுகின்றது

மந்திரம் 15

चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः । आऽप्रा द्यावापृथिवी अन्तरिक्ष्ँ सूर्य आत्मा जगतस्तस्थुषश्च ।

என்பது.

உரை.

மித்திரன் முதலான தேவர்களால் உபலக்கணமாயுணர்ந்த எல்லா வுயிர்களுக்குங் கண்போன்றதும், செம்மை கருமை முதலான பல்வகை நிறங்களையுடைய கிரணங்களென்னும் சைன்யத்தையுடையதுமாகிய சூரிய மண்டலம் எழுகின்றது. அதன் நடுவில் சூரியன் தாவர சங்கமவடிவ உலகைச்சூழ்ந்து நிறைந்திருக்கின்றான் என்பதாம்.

புரோநுவாக்கியங்கள்)

"வைஶ்வ தேவீம் சாங்கிரஹணீம் நிர்வபேத் கிராமகாம:"

என்பதற்குப் புரோநுவாக்கியம்,

மந்திரம் 16

विश्वे देवा ऋतावृध ऋतुभिर्हवनश्रुतः । जुषन्तां युज्यं पयः ।

என்பது.

உரை.

சத்தியம், அல்லது, எக்ஞம் என்பவற்றை வளரச்செய்கின்றவர்களும், யாகத்தில் அழைப்பதைக் கேட்பவர்களுமான விசுவதேவர்காள்! நீவிர் பால்போன்ற எமது அவியை அருந்துவீர்களாக என்பதாம்,

---

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியங் கூறப்படுகின்றது.

மந்திரம் 17

विश्वे देवाश्शृणुतेमꣳ हवं मे ये अन्तरिक्षे य उप द्यवि ष्ठ । ये अग्निजिह्वा उत वा यजत्रा आसद्यास्मिन्बर्हिषि मादयध्वम् ।

என்பது

உரை

விசுவதேவர்காள்! நீவிர், எமது அழைப்பைக் கேட்பீர்களாக. அந்தரிக்கத்திலும், மண்ணிலும், சுவர்க்கத்திலும் இருக்கின்றவர்களும், தீயை நாவாக்வுடையவர்களும், அக்கினிவாயிலாக அவிகளை யேற்றுக்கொள்கின்றவர்களும், மற்றும், வேள்வியால் ஆராதிக்கத் தக்கவர்களுமான எல்லாத் தேவர்களே! நீங்கள் வேள்வித் தலைவனைக் களிப்படையச் செய்வீர்களாக.

பதிநான்காம் அநுவாகம்

முற்றிற்று.

நான்காவது பிரபாடகம்

முடிந்தது.

ஐந்தாவது பிரபாடக விடயச் சுருக்கம்

अतोऽनुब्राह्मणं त्वत्र वार्ण्यते पाठकद्वये ।
प्रपाठके पञ्चमेऽनुवाका द्वादश संस्थिताः ॥ १ ॥
आध्वर्यकं पूर्वषट्के याज्या उत्तमईरिताः ।
हौत्रमन्त्रविधिन्याख्याऽऽघारादि प्रायमन्तरे ॥ २ ॥
अग्नीषोमीयहविषो विधिस्तत्राऽऽद्ययोर्द्वयोः ।

இனி, அநுப்பிராமணம், அதாவது பிராமணத்திற் கூறியதை சில விசேடங்களுடன் மீண்டுங் கூறுவது. அது ஐந்து, ஆறு, இவ்விரண்டு பிரபாடகங்களிலுங் கூறப்படுகின்றது. அவற்றுள் ஐந்தாம் பிரபாடகத்தில் பன்னிரண்டு அநுவாகங்கள் இருக்கின்றன. அவற்றுள், முதல் ஆறு அநுவாகங்களில் ஆத்வரமும், பின் ஐந்தில் ஹௌத்திரமும் கடைசியில் யாஜ்யையுஞ் சொல்லப்படுகின்றது. அதிலும் முதல் இரண்டு அநுவாகங்களில் அக்னீஷோமீய புரோடாசம் விதிக்கப்படுகின்றது என்பது.

இரண்டாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

முதலநுவாகம்

எழு பஞ்சாதிகட்குமேல் மூன்று பதங்களைக் கொண்டது.

பௌர்ணமியில் அக்கினி ஷோமீய அவி விதியின் உபோற்காதத்தைக் கூறும் பிராமணங்கள்.

विश्वरूपो वै त्वाष्ट्रःपुरोहितो देवानामासीत्स्वस्रीयोऽसुराणां तस्य त्रीणि शीर्षाण्यासन्त्सोमपानꣳ सुरापानमन्नादनꣳ स प्रत्यक्षं देवेभ्यो भागमवदत्परोक्षमसुरेभ्यस्सर्वस्मै वै प्रत्यक्षं भागं वदन्ति यस्मा एव परोक्षं वदन्ति तस्य भाग उदितस्तस्मादिन्द्रोऽबिभेदीदृङ्वै राष्ट्रं वि पर्यावर्तयतीति तस्य वज्रमादाय शीर्षाण्यच्छिनद्यत्सोमपानम् ॥ १ ॥ आसीत्स कपिञ्जलोऽभवद्यत्सुरापानꣳ स कल-

विङ्क्षो यदन्नादनꣳ स तित्तिरिस्तस्मान्ञ्जलिना ब्रह्महत्यामुपा-
गृह्णात्ताꣳ संवत्सरमबिभस्तं भूतान्यभ्यक्रोशन्ब्रह्मन्निति स
पृथिवीमुपासीददस्यै ब्रह्महत्यायै तृतीयं प्रति गृहाणेति साऽब्र-
वीद्वरं वृणै खातात्पराभविष्यन्ती मन्ये ततो मा परा भूवमिति
पुरा ते ॥ २ ॥ संवत्सरादपि रोहादित्यब्रवीत्तस्मात्पुरा संवत्सरा-
त्पृथिव्यै खातमपि रोहति वारे वृतꣳ ह्यस्यै तृतीयं ब्रह्महत्यायै
प्रत्यगृह्णात्तत्स्वकृतमिरिणमभवत्तस्मादाहिताग्निश्श्रद्धादेवस्स्वकृतइरिणे
नावस्येद्ब्रह्महत्यायै ह्येष वर्णस्स वनस्पतीनुपासीददस्यै
ब्रह्महत्यायै तृतीयं प्रति गृह्णीतेति तेऽब्रुवन्वरं वृणामहै वृक्णात्
॥ ३ ॥ पराभविष्यन्तो मन्यामहे ततो मा परा भूमेत्याव्रश्चनाद्वो
भूयाꣳस उत्तिष्ठानित्यब्रवीत्तस्मादाव्रश्चनाद्वृक्षाणां भूयाꣳस उत्ति-
ष्ठन्ति वारेवृतꣳ ह्येषां तृतीयं ब्रह्महत्यायै प्रत्यगृह्णन्त्स निर्यासोऽ-
भवत्तस्मान्निर्यासस्य नाऽऽश्यं ब्रह्महत्यायै ह्येष वर्णोऽथो खलु य
एव लोहितो यो वाऽऽव्रश्चनान्निर्येषति तस्य नाऽऽश्यम् ॥ ४ ॥
कामममन्यस्य स स्त्रीषꣳसादमुपासीददस्यै ब्रह्महत्यायै तृतीयं
प्रति गृह्णीतेति ता अब्रुवन्वरं वृणामहा ऋत्वियात्प्रजां विन्दामहै
काममा विजनितोस्सं भवामेति तस्मादृत्वियात्स्त्रियः प्रजां विन्दन्ते
काममा विजनितोस्सं भवन्ति वारेवृतꣳ ह्यासां तृतीयं ब्रह्महत्यायै
प्रत्यगृह्णन्त्सा मलवद्वासा अभवत्तस्मान्मलवद्वाससा सं वदेत ॥ ५ ॥

न स॒हाऽऽसी॑त॒नास्या॒ अन्न॑मद्याद्ब्रह्मह॒त्यायै॒ ह्ये॑षा वर्ण॑ꣳ प्रति॒मुच्या-ऽऽस्तेऽथो॒ खल्वा॑हुर॒भ्यञ्ज॑नं॒ वाव स्त्रि॒या अन्न॑म॒भ्यञ्ज॑नमे॒व न प्र॒तिगृह्यं॒ काम॑म॒न्यदिति॒ यां मल॑वद्वाससꣳ स॒ंभव॑न्ति॒ यस्ततो॒ जाय॑ते॒ सो॑ऽभिश॒स्तो याम॑रण्ये॒ तस्यै॑ स्ते॒नो यां परा॑चीं॒ तस्यै॑ ह्रीतमु॒ख्य॑पग॒ल्भो या स्नाति॒ तस्या॑ अ॒प्सु मारु॑को॒ या ॥ ६ ॥ अ॒भ्यङ्क्ते तस्यै॑ दु॒श्चर्मा॒ या प्र॑लि॒खते॒ तस्यै॑ खल॒तिर॑प॒मारी या ऽऽङ्क्ते तस्यै॑ का॒णो या द॒तो धाव॑ते॒ तस्यै॑ श्या॒वद॒न्या न॒खानि॑ निकृ॒न्तते॒ तस्यै॑ कु॒नखी या कृ॒णत्ति॒ तस्यै॑ क्ली॒बो या रज्जु॑ꣳ सृ॒जति॒ तस्या॑ उ॒द्बन्धु॑को॒ या प॒र्णेन॒ पिब॑ति॒ तस्या॑ उ॒न्मादु॑को॒ या ख॒र्वेण॒ पिब॑ति॒ तस्यै॑ ख॒र्वस्ति॒स्रो रात्री॑र्व्र॒तं च॑रेदञ्ज॒लिना॑ वा॒ पिबे॒दख॑र्वेण वा॒ पात्रे॑ण प्र॒जायै॑ गोपी॒थाय॑ ॥ ७ ॥

ஈண்டு, இரண்டாவது அநுவாகத்தில் பௌர்ண மாஸத்திலுள்ள அக்கினி ஷோமீய புரோடாசத்தை விதிக்கும் விருப்புடையதாய் அதன் உபோற்காதமாகிய கதையைக் கூறுகின்றது.

பிராமணம் 1.

विश्वरूपो वै त्वाष्ट्रः पुरोहितो देवानामासीत्स्वस्रीयोऽसुराणां तस्य त्रीणि शीर्षाण्यासन्त्सोमपानꣳ सुरापानमन्नादनꣳ स प्रत्यक्षं देवेभ्यो भागमवदत्परोक्षमसुरेभ्यस्सर्वस्मै वै प्रत्यक्षं भागं वदन्ति यस्मा एव परोक्षं वदन्ति तस्य भाग उदितस्तस्मादिन्द्रोऽबिभेदीदृङ्वै राष्ट्रं वि पर्यावर्तयतीति तस्य वज्रमादाय शीर्षाण्यच्छिनद्यत्सोमपानमासीत्स कपिञ्जलोऽभवद्यत्सुरापानꣳ स कलविङ्को यदन्नादनꣳ स तित्तिरिः ।

அவி விதிக்கு உபோற்காதம்)

உரை.

மூன்று தலைகளையுடைய துவஷ்டாவின் புத்திரனாகிய விசுவரூபன் தேவர்கட்குப் புரோகிதனும், அசுரர்களுக்கு மருமகனாகவும் இருந்தனன். அவன், சத்துவகுணத் தலைமையால் சோமத்தையும், இரசோகுணத் தலைமையால் அன்னத்தையும், தமோகுணத் தலைமையால் கள்ளையுங் குடிக்கின்றவன். அத்தகைய விசுவரூபன், யாகசாலைக்குட் சென்று எல்லாச் செயலாளர்களும் கேட்கும்படி உரக்க தேவர்கட்கு அவிர்ப்பாகங் கொடுத்தல் வேண்டும் என்பன். வேள்விச் செயலாளர்களிடமாத்திரஞ் சென்று இரகசியமாக அசுரர்கட்கு அவிர்ப்பாகங் கொடுத்தல் வேண்டுமென்பன். உலகில் வெளிப்படையாகக் கூறுதலில் ஆதரவு குறைவும், இரகசியமாய்க் கூறுதலில் ஆதரவு மிகுதியுங் காணப்படுகின்றது. இதைக் கேட்ட இந்திரன், இவ்வாறு இவன் எசமானனுக்குத் துரோகஞ்செய்து இராச்சியத்தை அசுரர்களுக்கு ஒப்படைத்து விடுவானோ? என்னும் பயத்தால் விசுவரூபனுடைய மூன்று தலைகளையும் அறுத்து விட்டான்; அவைகள், மூன்று பறவை வடிவங்களாயின என்பதாம்.

அவ்விந்திரனுக்குண்டாய தோஷத்தையும் சனங்களின் நிந்தையையுங்காட்டுகின்றது

பிராமணம் 2

तस्याञ्जलिना ब्रह्महत्यामुपागृह्णात्ताꣳ संवत्सरमबिभस्तं भूतान्यभ्यक्रोशन्ब्रह्महन्निति ।

என்பது.

உரை

இந்திரன் அவ்வசுரனைக் கொன்றதாலுண்டாய பிரமஹத்தி தோஷத்தை, பாவிகளைத் தண்டிக்கு இயமனுடைய சந்நிதியில் கைகுவித்து 'நான் பிரமஹத்தி செய்துள்ளேன்' என்று மனப்பூர்வகமாக அத்தோஷத்தை ஏற்றுக் கொண்டனன். அவன் ஒருவருடம்வரை பிரமஹத்தி பிடித்தவனாயிருந்தனன். இதனால் தத்துவ ஞானிக்குப் பாவம் இன்றேனும், இந்திரன் பிரமஹத்தி தோஷமுடையவனென்று சனங்கள் நிந்திக்கத்தொடங்கிவிட்டனர் என்பதாம்.

சனங்களின் நிந்தையைப் போக்குவதற்கு இந்திரன் செய்த உபாயத்தைக் கூறுகின்றது

பிராமணம் 3

स पृथिवीमुपासीददस्यै ब्रह्महत्यायै तृतीयं प्रति गृहाणेति साऽब्रवीद्वरं वृणै खातात्पराभविष्यन्ती मन्ये ततो मा परा भूवमिति पुरा ते संवत्सरादपिरोहादित्यब्रवीत्तस्मात्पुरा संवत्सरात्पृथिव्यै खातमपिरोहति वारेवृ-

तꣳ ह्यस्यै तृतीयं ब्रह्महत्यायै प्रत्यगृह्णात्तत्स्वकृतमिरिणमभवत्तस्मादाहि-
ताग्निश्श्रद्धादेवस्स्वकृत इरिणे नावस्येद्ब्रह्महत्यायै ह्येष वर्णः ।

என்பது

உரை.

இந்திரன் பூமியையடைந்து "பூமியே! நீ, எனது பிரமஹத்தியைப் ஏற்றுக் கொள்வாயாக" என்று வேண்டினன். அதைக் கேட்டபூமி, சனங்கள் தமது விருப்பால் குழிகள் தோண்டில் அக்குழிகளால் துன்புறுகின்றேன். ஆதலின் அக்குழிகள் மண் போடுதலின்றி தாமே தூர்ந்துவிடல் வேண்டும் என்னும் வரத்தைக் கொடுக்கில் ஏற்றுக் கொள்கின்றேன் என்றது. அவ்வாறே இந்திரனும் வரத்தைக் கொடுத்தபின் பூமி அவனுடைய ஒரு பிரமஹத்தி தோஷத்தை ஏற்றுக்கொண்டது. அதுவே இயற்கை உவர்ப் பூமியாயிற்று. இது பற்றியே பூமியில் எவரேனும் ஒரு பள்ளங் கெல்லிவைப்பரேல் அது தானே தூர்ந்துபோய்விடுகின்றது. இவ்வாறுண்மையின், நியமமுடையோர்கள் அத்தகைய உவர்ப் பூமியை மிதித்தல் கூடாதென்பதாம்.

இரண்டாவது பிரமஹத்தியின் பரிகாரமுறையைக்கூறுகின்றது.

பிராமணம் 4

स वनस्पतीनुपासीददस्यै ब्रह्महत्यायै तृतीयं प्रति गृह्णीतेति तेऽब्रुवन्वरं
वृणामहै वृक्णात्पराभविष्यन्तो मन्यामहे ततो मा परा भूमेत्याव्रश्च-
नाद्वो भूयाꣳस उत्तिष्ठानित्यब्रवीत्तस्मादाव्रश्चनाद्वृक्षाणां भूयाꣳस
उत्तिष्ठन्ति वारेवृतꣳ ह्येषां तृतीयं ब्रह्महत्यायै प्रत्यगृह्णन्त्स निर्यासोऽभ-
वत्तस्मान्निर्यासस्य नाऽऽश्यं ब्रह्महत्यायै ह्येष वर्णोऽथो खलु य एव
लोहितो यो वाऽऽव्रश्चनान्निर्येषति तस्य नाऽऽश्यं काममन्यस्य ।

என்பது

உரை.

அவ்விந்திரன், மரங்களையடைந்து மரங்களே! எனது பிரமஹத்தியை எடுத்துக் கொள்வீர்களாக என்று வேண்டினன். அதைக்கேட்ட மரங்கள், நாங்கள் வெட்டப்படுவோமெனின், அவ்விடத்தில் தளிர்த்தெழும்படி வரத்தில் இதைப் பெற்றுக் கொள்கின்றோம் என்றன. அவ்வாறே வரங் கொடுக்க, இந்திரனுடைய இரண்டாவது பிரமஹத்தியை மரங்கள் வாங்கிக்கொண்டன. மரத்தை வெட்டும்போது முதலில் குழம்பாய் உண்டாகுவது அப்பிரமஹத்தியின் கூறுமாதலின் அவைகளை அருந்துதல் கூடாது. சிவப்பாக வரும் சாற்றையுமருந்தல்கூடாது ஏனையவற்றை அருந்தலாமென்பர் சிலர் என்பதாம்.

மூன்றாவது பிரமஹத்தியின் பரிகார முறையைக் கூறுகின்றது.

பிராமணம் 5.

स स्त्रीषꣳसादमुपासीददस्यै ब्रह्महत्यायै तृतीयं प्रति गृह्णीतेति ता अब्रुवन्वरं वृणामहा ऋत्वियात्प्रजां विन्दामहै काममाविजनितोस्संभवामेति तस्मादृत्वियात्स्त्रियः प्रजां विन्दन्ते कामम्आ विजनितोस्सं भवन्ति वारेवृतꣳ ह्यासां तृतीयं ब्रह्महत्यायै प्रत्यगृह्णन्त्सा मलवद्वासा अभवत्तस्मान्मलवद्वाससा न सं वदेत न सहाऽऽसीत नास्या अन्नमद्याद्ब्रह्महत्यायै ह्येषा वर्णं प्रतिमुच्याऽऽस्तेऽथो खल्वाहुरभ्यञ्जनं वाव स्त्रिया अन्न मभ्यञ्जनमेव न प्रतिगृह्यं काममन्यदिति ।

என்பது.

உரை

அவ்விந்திரன், பெண்பால்கள் கூடிய கூட்டத்திற்சென்று. மாதர்காள்! நீங்கள் எமது பிரமஹத்தியை ஏற்றுக் கொள்வீர்களாக என்று வேண்டிக் கொண்டனன். அதைக் கேட்ட மாதர்கள், முதல் இருதுகாலப் புணர்ச்சியிலேயே கருப்பந்தரித்துவிடினும் மீண்டும் மீண்டும் புணர்ச்சி யின்பத்தை அநுபவிப்பதில் எமக்குத் தடை இருத்தல் கூடாது என்று வரந்தரில் ஏற்றுக் கொள்வோ மென்றனர். அவ்வாறே வரங்கொடுக்க, அம்மாதர்கள் இந்திரனுடைய மூன்றாவது பிரமஹத்தியையும் வாங்கிக்கொண்டனர். அதுவே வீட்டுக்குப் புறமாய் இருக்கும் இருது காலமாம். இதுபற்றியே, பெண்பால் தீட்டாய்விடில், அவளுடைய கணவன் அவளைக் கண்ணால் காணுதலும், பேசுதலும், தொடுதலும் மற்றும் எதுவுங் கூடாதென்பதாம்.

தொடர்புபற்றி இருதுகாலமாதரின் விரதங்கள் கூறப்படுகின்றன.

பிராமணம் 6

यां मलवद्वाससꣳ संभवन्ति यस्ततोजायते सोऽभिशस्तो यामरण्ये तस्यै स्तेनो यां पराचीं तस्यै ह्रीतमुख्यपगल्भो या स्नाति तस्या अप्सु मारुको याऽभ्यङ्क्ते तस्यै दुश्चर्मा या प्रलिखते तस्यै खलतिरपमारी याऽऽङ्क्ते तस्यै काणो या दतो धावते तस्यै श्यावदन्या नखानि निकृन्तते तस्यै कुनखी या कृणत्ति तस्यै क्लीबो या रज्जुꣳ सृजति तस्या उद्बन्धुको या पर्णेन पिबति तस्या उन्मादुको या खर्वेण पिबति तस्यै खर्वस्तिस्रो रात्रीर्व्रतं चरेदञ्जलिना वा पिबेदखर्वेण वा पात्रेण प्रजायै गोपीथाय ।

என்பது.

உரை.

வீட்டுக்குப் புறம்பாயுள்ள (ரசுஸ்வலையாகிய) மாதர் புருடனைப் புணரில் அவளுக்குக் குழந்தை பிறக்கில், அது, பொய்மிந்தைக்கு ஆளாகும். காட்டில் புணர்வாளாகில் குழந்தை திருடனாவான். நாணத்தால் முகத்தைத் திருப்புவாளெனின் குழந்தை அவைக் கோழையாவன். நீராடுவாளெனின்; குழந்தை நீரில் விழுந்து இறக்கும். எண்ணெ தேய்க்கில் குழந்தை தோல் நோயுடையதாகும். சித்திரமெழுதினளெனின்? குழந்தை மயிரின்றியதும், கெட்டமரணமுடையதுமாகும். உடம்பில் எதாகிலும் தடவிக் கொள்வாளெனின் குழந்தை இந்திரியங்கள் குறைந்ததாய்விடும். பல்விளக்கில் குழந்தை கரிய பல்லுடையதாகும். நகத்தை நறுக்குவாளெனின், குழந்தை நகம் கோணலாகும். துரும்பு கிள்ளுவாளெனின்? கயிற்றினால் சுருக்கிட்டுக் கொண்டு இறக்குந் தன்மையுடைய குழந்தையாகும். அக்கினியால் வெந்த பாண்டத்தில் நீருந்துவாளெனின், குழந்தை குட்டையாயிருக்கும். ஆதலின், வீட்டுக்குப் புறம்பாகும் இருது காலத்தில் மாதர் நியமமாகிய விரதத்துடன் இருத்தல் வேண்டுமென்பதாம்.

முதலாவது அநுவாகம்
முற்றிற்று

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

எழு பஞ்சாதிகட்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

இவ்வநுவாகத்தில் அக்கினி ஷோமீய புரோடாசத்தை விதித்தற் பொருட்டு முதலில் அதன் உபோற்காதம் விதிக்கு உபயோகமாமென்பதைக் காட்டுகின்ற பிராமணங்கள்.

त्वष्टा हतपुत्रो वीन्द्रꣳ सोममाऽहरत्तस्मिन्निन्द्र उपहवमैच्छत
तं नोपाह्वयत पुत्रं मेऽवधीरिति स यज्ञवेशसं कृत्वा प्रासहा सोम-
मपिबत्तस्य यदत्यशिष्यत तत्त्वष्टाऽऽहवनीयमुप प्रावर्तयत्स्वाहेन्द्रशत्रु-
र्वर्धस्वेति यदवर्तयत्तद्वृत्रस्य वृत्रत्वं यदब्रवीत्स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति
तस्मादस्य ॥ १ ॥ इन्द्रश्शत्रुरभवत्स संभवन्नग्नीषोमावभि

समभवत्स इषुमात्रमिषुमात्रं विष्वङ्ङवर्धत स इमाँल्लोकानवृणो-
द्यदिमाँल्लोकानवृणोत्तद्वृत्रस्य वृत्रत्वं तस्मादिन्द्रोऽबिभेत्स प्रजा
पतिमुपाधावच्छत्रुर्मेऽजनीति तस्मै वज्रꣳ सिक्त्वा प्रायच्छदेतेन
जहीति तेनाभ्यायत तावब्रूतामग्नीषोमौ मा ॥ २ ॥ प्र हाराववमन्तः
स्व इति मम वै युवꣳ स्थ इत्यब्रवीन्मामभ्येतमिति तौ भागधेय
मैच्छेतां ताभ्यामेतमग्नीषोमीयमेकादशकपालं पूर्णमासे प्रायच्छत्ता
वब्रूतामभि संदष्टौ वै स्वो न शक्नुव ऐतुमिति स इन्द्र आत्मनः
शीतरूरावजनयत्तच्छीतरूरयोर्जन्म य एवꣳ शीतरूरयोर्जन्म वेद
॥ ३ ॥ नैनꣳशीतरूरौ हतस्ताभ्यामेनमभ्यनयत्तस्माज्जञ्जभ्यमाना-
दग्नीषोमौ निरक्रामतां प्राणापानौ वा एनं तदजहितां
प्राणो वै दक्षोऽपानः क्रतुस्तस्माज्जञ्जभ्यमानोब्रूयान्मयि
दक्षक्रतू इति प्राणापानावेवाऽऽत्मन्धत्ते सर्वमायुरेति स
देवता वृत्रान्निर्हूय वार्त्रघ्नꣳ हविःपूर्णमासे निरवपद्घ्नन्ति वा एनं
पूर्णमास आ ॥ ४ ॥ अमावास्यायां प्यायन्ति तस्माद्वार्त्रघ्नी
पूर्णमासेऽनूच्येते वृधन्वती अमावास्यायां तत्सꣳ स्थाप्य वार्त्रघ्नꣳ-
हविर्वज्रमादाय पुनरभ्यायत ते अब्रूतां द्यावापृथिवी मा प्र हारा-
वयोर्वै श्रित इति ते अब्रूतां वरं वृणावहै नक्षत्रविहिताऽहमसानीत्य-
सावब्रवीच्चित्रविहिताऽहमितीयं तस्मान्नक्षत्रविहिताऽसौ चित्रविहितेयं
य एवं द्यावापृथिव्योः ॥ ५ ॥ वरं वेदैनं वरो गच्छति स आभ्या-

मेव प्रसूत इन्द्रो वृत्रमहन्ते देवा वृत्रꣳ हत्वाऽग्नीषोमावब्रुवन्हव्यं
नो वहतमिति तावब्रूतामपतेजसौ वै त्यौ वृत्रे वै त्ययोस्तेज इति
तेऽब्रुवन्क इदमच्छैतीति गौरित्यब्रुवन्गौर्वाव सर्वस्य मित्रमिति
साऽब्रवीत् ॥ ६ ॥ वरं वृणै मय्येव सतोभयेन भुनजाध्वा इति
तद्गौराऽहरत्तस्माद्गवि सतोभयेन भुञ्जत एतद्वा अग्नेस्तेजो यद्घृत-
मेतत्सोमस्य यत्पयो य एव मग्नीषोमयोस्तेजो वेद तेजस्व्येव
भवति ब्रह्मवादिनो वदन्ति किंदेवत्यं पौर्णमासमिति प्राजापत्य-
मिति ब्रूयात्तेनेन्द्रं ज्येष्ठं पुत्रं निरवासाययदिति तस्माज्ज्येष्ठं पुत्रं
धनेन निरवसाययन्ति ॥ ७ ॥

பிராமணம் 1

त्वष्टा हतपुत्रो वीन्द्रꣳ सोममाऽहरत्तस्मिन्निन्द्र उपहवमैच्छत तं नोपाह्वयत
पुत्रं मेऽवधीरिति स यज्ञवेशसं कृत्वा प्रासहा सोममपिबत्तस्य
यदत्यशिष्यत तत्त्वष्टाऽऽहवनीयमुप प्रावर्तयत्स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति-
यदवर्तयत्तद्वृत्रस्य वृत्रत्वं यदब्रवीत्स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति तस्माद-
स्येन्द्रश्शत्रुरभवत्स संभवन्नग्नीषोमावभि समभवत्स इषुमात्रमिषुमात्रं
विष्वङ्ङवर्धत स इमाँल्लोकानवृणोद्यदिमाँल्लोकानवृणोत्तद्वृत्रस्य वृत्रत्वं
तस्मादिन्द्रोऽबिभेत्।

என்பது

உரை.

முன் அநுவாகத்தில் துவஷ்டாவின் புத்திரன் இந்திரனால் கொல்லப்பட்டான் என்று கூறப்பட்டது. அதைப்பற்றிய கதைகளும் முன் அநுவாகத்திலேயே வெளிப்படையாயின. ஈண்டு, அந்த யாகத்தில் 'இந்திரன் சத்துரு உண்டாக' என்னும் மந்திரத்தில் இந்திரனுக்குச் சத்துரு என்று சமாசம் (வேற்றுமைத்தொகை) ஆகாமல், இந்திரனைச் சத்துருவாக உடையவன் என விரிதலின் விருத்திரன் என்பவன் தோன்ற அதனால் இந்திரன் பயமுற்றனன் என்பதாம்.

உபயோகம்.

அவனைக் கொல்வதற்கு உபாயந் தெரிவிக்கின்றது.

பிராமணம் 2

स प्रजापतिमुपाधावच्छत्रुर्मेऽजनीति तस्मै वज्रं सिक्त्वा प्रायच्छदेतेन जहीति तेनाभ्यायत ।

என்பது

உரை.

இந்திரன், பிரசாபதியை வழிபட்டு எனக்கு ஒரு பகைவன் தோன்றியுள்ளான் அவனைக் கொல்ல உபாயம் அருள்வாயாக என்று வேண்டினன். அதற்கு, பிரசாபதி, நீரை மந்திரித்துத் தெளித்து "இதனால் அவனைக் கொல்வாயாக" என்று வச்சிராயுதத்தையும் இந்திரனுக்கு அளித்தனன். அதைப் பெற்றுக்கொண்டு இந்திரன் விருத்திரனைக் கொல்வதன் பொருட்டு வந்தனன் என்பதாம்.

உபோற்காதத்தையும் அதன் உபயோகத்தையுங் கூறிவிட்டு, அக்கினி ஷோமீய புரோடாச விதியை அர்த்தவாத முகத்தால் அறிவுறுத்துகின்றது.

பிராமணம் 3

तावब्रूतामग्नीषोमौ मा प्रहारावमन्तस्स्व इति मम वै युवं स्थ इत्यब्रवीन्मामभ्येतमिति तौ भागधेयमैच्छेतां ताभ्यामेतमग्नीषोमीयमेकादशकपालं पूर्णमासे प्रायच्छत् ।

என்பது

உரை.

அக்கால், அக்கினியும் சோமனும், இந்திர! விருத்திரனைக் கொல்லாதே, நாங்களிருவரும் அவனுடைய வாயிலிருக்கின்றோம் என்றனர். அதைக் கேட்ட இந்திரன், நீவிர் எம்மவர், நான் விருத்திரனைக் கொல்ல வந்துள்ளேன் நீங்களிருவரும் வெளியே வந்துவிடுவீர்களாக என்றனன். அதைக்கேட்ட அக்கினி சோமர்கள் யாம் வரில் எமக்கு ஏது பாகதேயம் ? என்று கேட்டனர். இந்திரன், பூரணமாத யாகத்திற் கொடுக்கப்படும் புரோடாசம் என்றனன். இதை அக்கினிஷோமீய புரோடாசம் ஏகாதசகபாலம் நிர்வபேத்" என்பதிற் காண்க என்பதாம்.

அக்கினி ஷோமர்கள் வெளியில் வந்ததைக் கூறுகின்றது.

பிராமணம் 4.

तावब्रूतामभि संदष्टौ वै स्वो न शक्नुव ऐतुमिति स इन्द्र आत्मनश्शीतरूरावजनयत्तच्छीतरूरयोर्जन्म य एवꣳ शीतरूरयोर्जन्म वेदनैनꣳ शीतरूरौ हतस्ताभ्यामेनमभ्यनयत्तस्माज्जञ्जभ्यमानादग्नीषोमौ निरक्रामताम् ।

என்பது.

உரை

மற்றும், இந்திர! விருத்திரனுடைய முகத்தில் பற்களின் பக்கத்தில் நாற்புறமும் கடித்து பிடிக்கப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஆகையால் நாங்கள் வெளியே வரமுடியாது என்றார்கள். அப்போது இந்திரன் அவர்கள் வெளியேவருவதன் பொருட்டு தன்னிடத்திலிருந்து குளிரையும் ஜ்வரத்தையும் உண்டாக்கினான். அப்போதுதான் குளிரும் ஜ்வரமும் உண்டாயிற்று. இவ்வாறு, குளிர் ஜ்வரத்தின் உற்பத்தியை அறிந்தவன் குளிர் ஜ்வரத்தால் இறக்கமாட்டான். பிறகு, இந்திரன், பாணம்போன்ற, குளிரையும் ஜ்வரத்தையும் வில்லில் நாணேற்றி விருத்திரனைக் குறித்து ஏவினன். அப்பொழுது அதனாற் பீடிக்கப்பட்ட விருத்திரன் வாயைப் பிளந்தனன். அதிலிருந்து அக்கினியும் சோமனும் வெளியில் வந்து விட்டார்கள் என்பதாம்.

தொடர்புபற்றி மந்திரத்தைத் தோற்றுவித்து விநியோகப்படுத்துகின்றது.

பிராமணம் 5.

प्राणापानौ वा एनं तदजहितां प्राणो वै दक्षोऽपानः क्रतुस्तस्माज्जञ्जभ्यमानो ब्रूयान्मयि दक्षक्रतू इति प्राणापानावेवाऽऽत्मन्धत्ते सर्वमायुरेति ।

என்பது.

உரை

அக்கினியும் சோமனும் வாயிலிருந்து வெளிப்பட்டவுடனே பிராண அபான வாயுக்கள் விருத்திரனை விட்டு நீங்கிற்று. பிராணனுடைய பெயர் தக்ஷன், அபானனுடைய பெயர் கிருது. இக்காரணத்தால், வேள்விக்தலைவன் வேள்வி செய்யும்போது வாயைத்திறக்கில் 'மயிதக்ஷக்கிருதூ', என்னும் மந்திரத்தை ஓதல் வேண்டுமென்பதாம். அதனால் பிராணபானன்கள் தனக்கு நிலையுடையன வாயிற்று எனப்பெற்று அவமிருத்து நீங்கி ஆயுள் நீடிக்குமென்பதாம்.

உபயோகம்)

விருத்திரனைக் கொல்லும் வகைபற்றி ஆச்யபாக மந்திரங்களிரண்டையும் காலவேறுபாட்டால் பாகுபாடு செய்கின்றது.

பிராமணம் 6.

स देवता वृत्रान्निर्हूय वार्त्रघ्नं हविः पूर्णमासे निरवपद्घ्नन्ति वा एनं
पूर्णमास आऽमावास्यायां प्यायन्ति तस्माद्वार्त्रघ्नी पूर्णमासेऽनूच्येते
वृधन्वती अमावास्यायाम् ।

என்பது

உரை.

இந்திரன், விருத்திரனுடைய வாயிலிருந்த அக்கினி சோமன் முதலான தேவர்களை வெளியில் வரும்படி செய்து விருத்திரனைக் கொல்வதற்கு நிமித்தமாகிய ஆச்ய பாகமென்னும் அவியை பூர்ணமாஸத்தில் தேடிக்கொண்டனன். உலகில் பௌர்ணமியில் சந்திரனுடைய நிலவொளியால் இருளாகிய விருத்திரன் நீங்குகின்றான். அமாவாசையில் நிலவொளியின்மையால் இருள்வடிவ விருத்திரன் வளர்கின்றான். ஆதலின், விருத்திரனைக் கொல்லுங் குறியுள்ள சொற்கள் கொண்ட ஆச்சியபாக மந்திரங்களை பூர்ணமாஸத்தில் புரோநுவாக்கியமாகவும், வளர்தலைக்குறிப்பிக்குஞ் சொற்கள் கொண்ட இருக்குக்களை அமாவாசையில் புரோநுவாக்கியமாகவுங் கொள்ளல் வேண்டுமென்பதாம்.

விருத்திரனைக் கோல்லும் வகையைக் காட்டுகின்றது.

பிராமணம் 7

तत्संस्थाप्य वार्त्रघ्नं हविर्वज्रमादाय पुनरभ्यायत ते अब्रूतां द्यावापृथि-
वी मा प्रहारावयोर्वै श्रित इति ते अब्रूतां वरं वृणावहै नक्षत्रविहिता-
ऽहमसानीत्यसावब्रवीच्चित्रविहिताऽहमितीयं तस्मान्नक्षत्रविहिताऽसौ
चित्रविहितेयं य एवं द्यावापृथिव्योर्वरं वेदैनं वरो गच्छति स आभ्या-
मेवप्रसूत इन्द्रो वृत्रमहन् ।

என்பது

உரை.

இந்திரன், ஆச்சியபாகமாகிய அவியை முடித்துவிட்டு முன்போல் வச்சிராயுதத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் விருத்திரனை நோக்கி வந்தனன். அப்போது, மண்ணும் விண்ணும், இவ்விருத்திரன் பூமியிலிருந்து விண்ணுலகம் வரையிலும் நிறைந்து எங்களைப்பற்றிக் கொண்டிருக்கின்றான். ஆதலின் அவனைக் கொல்லக்கூடாது; கொல்லவேண்டுமெனின் நக்ஷத்திர முதலி

யவைகளால் அழகுற்றிருக்கவும், மக்கள், விலங்கு, மரம், மலை, நதி முதலிய வைகளால் அழகுற்றிருக்கவும் எமக்கு வரந்தரில் அவ்வாறுகுக, என்று கேட்டுக் கொண்டன. பிறகு, அவ்வாறே மண் விண்களுக்கு வரங்களைக் கொடுத்து விட்டு விருத்திரனைக் கொன்றனன் என்பதாம்.

அக்கினி ஷோமீய புரோடாசங்களில் தேவர்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 8

ते देवा वृत्रꣳ हत्वाऽग्नीषोमावब्रुवन्हव्यं नो वहतमिति तावब्रूतामपतेजसौ वै त्यौ वृत्रे वै त्ययोस्तेज इति तेऽब्रुवन्क इदमच्छैतीति गौरित्यब्रुवन्गौर्वाव सर्वस्य मित्रमिति साऽब्रवीद्वरं वृणै मय्येव सतोभयेन भुनजाध्वा इति तद्गौराऽहरत्तस्माद्गवि सतोभयेन भुञ्जत एतद्वा अग्नेस्तेजो यद्घृतमेतत्सोमस्य यत्पयो य एवमग्नीषोमयोस्तेजो वेद तेजस्व्येव भवति ।

என்பது.

உரை.

அக்கால் நெடுநாள், அக்கினியும் சோமனும் விருத்திரனுடைய வாயில் தமது ஒளிகளை விட்டு விட்டிருந்தமையின் அவ்வொளி விருத்திரனிடத்தில் தங்கிவிட்டது அதைக்கொண்டு வரத்தக்கார் யார்? என, எல்லா வுயிர்கட்கும் இனிமையாகிய கோ ஆகும் என்றனர். தேவர்கள், அவ்வாறே, ஆவும், ஒப்புக் கொண்டுவிட்டு, அற்றேல், நான் கொண்டுவரும் அதனால் உலகில் யாவரும் உணவருந்தல் வேண்டும் என்று வரங்கேட்டது. அவ்வாறே வரங்கொடுத்த பிறகு, கோ, விருத்திரனுடைய உடம்புட் புகுந்து அக்கினி சோமன் என்பவர் களின் ஒளியைக் கொண்டுவந்தது; அதுவே, அக்கினியின் கூறு நெய்யாகவும், சோமனுடைய கூறு பாலாகவும் ஆயிற்று. அவ்வரப்படியே பசுவின் பால் நெய் களால் யாவரும் உணவருந்துகின்றனர். இவ்வாறு பால் நெய்களை உணர்ந்த வன் மிகுந்த ஒளியுடையவனுகின்றுன் என்பதாம்.

அக்கினீ ஷோமீய புரோடாசமாகிய பௌர்ணமாத கருமம், பிரசாபதி இந்திர சம்பந்த முடைமையால் புகழப்படுகின்றது.

பிராமணம் 9

ब्रह्मवादिनो वदन्ति किंदेवत्यं पौर्णमासमिति प्राजापत्यमिति ब्रूयात्तेनेन्द्रं ज्येष्ठं पुत्रं निरवासाययदिति तस्माज्ज्येष्ठं पुत्रं धनेन निरवसाययन्ति ।

என்பது

உரை

பெரியார்கள், பௌர்ணமாத யாகத்திற்குப் பிரசாபதியே தேவதை என்று கூறுகின்றார்கள். பிரசாபதி தனது மூத்தபுதல்வனாகிய இந்திரனை தனத்தால் நிலைநாட்டினன். ஆதலின் பிரசாபதியின் சம்பந்தமுடையவன் இந்திரன். இது பற்றியே உலகிலும் மூத்த புதல்வனை, தனம் மிகுதியாகக் கொடுத்துப் பாராட்டுகின்றனர் என்பதாம்.

இரண்டாவது அநுவாகம்
முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் நாற்பத்திரண்டு பதங்களைக் கொண்டது.

அமாவாசையில் பால் தயிர் யாகத்தை விதிக்கும் பிராமணங்கள்.

इन्द्रं वृत्रं जघ्निवाꣳसं मृधोऽभि प्रावेपन्त स एतं वैमृधं पूर्णमासेऽनुनिर्वाप्यमपश्यत्तं निरवपत्तेन वै स मृधोऽपाहत यद्वैमृधः पूर्णमासेऽनुनिर्वाप्यो भवति मृध एव तेन यजमानोऽप हत इन्द्रो वृत्रꣳ हत्वा देवताभिश्चेन्द्रियेण च व्यार्ध्यत स एतमाग्नेयमष्टाकपालममावास्यायामपश्यदैन्द्रं दधि ॥ १ ॥ तं निरवपत्तेन वै स देवताश्चेन्द्रियं चावारुन्ध यदाग्नेयोऽष्टाकपालोऽमावास्यायां भवत्यैन्द्रं दधि देवताश्चैव तेनेन्द्रियं च यजमानोऽव रुन्ध इन्द्रस्य वृत्रं जघ्नुष इन्द्रियं वीर्यं पृथिवीमनु व्यार्छत्तदोषधयो वीरुधोऽभवन्त्स प्रजापतिमुपाधावद्वृत्रं मे जघ्नुष इन्द्रियं वीर्यम् ॥ २ ॥ पृथिवीमनु व्यारत्तदोषधयो वीरुधोऽभूवन्निति स प्रजापतिः पशूनब्रवीदेतदस्मै सं नयतेति तत्पशव ओषधीभ्योऽध्यात्मन्त्सम-

नयन्तत्प्रत्यदुहन्यत्समनयन्तत्सांनाय्यस्य सांनाय्यत्वं यत्प्रत्यदुहन्तत्प्रतिधुषः प्रतिधुक्त्वꣳ समनैषुः प्रत्यधुक्षन्न तु मयि श्रयत इत्यब्रवीदेतदस्मै ॥ ३ ॥ शृतं कुरुतेत्यब्रवीत्तदस्मै शृतमकुर्वन्निन्द्रियं वावास्मिन्वीर्यं तदश्रयन्तच्छृतस्य शृतत्वꣳ समनैषुः प्रत्यधुक्षञ्छृतमक्रन्न तु मा धिनोतीत्यब्रवीदेतदस्मै दधि कुरुतेत्यब्रवीत्तदस्मै दध्यकुर्वन्तदेनमधिनोत्तद्दध्नो दधित्वं ब्रह्मवादिनो वदन्ति दध्नः पूर्वस्यावदेयम् ॥ ४ ॥ दधि हि पूर्वं क्रियत इत्यनादृत्य तच्छृतस्यैव पूर्वस्याव द्येदिन्द्रियमेवास्मिन्वीर्यꣳ श्रित्वा दध्नोपरिष्टाद्धिनोति यथापूर्वमुपैति यत्पूतीकैर्वा पर्णवल्कैर्वाऽऽतञ्च्यात्सौम्यं तद्यत्क्वलै राक्षसं तद्यत्तण्डुलैर्वैश्वदेवं तद्यदातञ्चनेन मानुषं तद्यद्दध्ना तत्सेन्द्रं दध्नाऽऽतनक्ति ॥ ५ ॥ सेन्द्रत्वायाग्निहोत्रोच्छेषणमभ्यातनक्ति यज्ञस्य संतत्या इन्द्रो वृत्रꣳ हत्वा परां परावतमगच्छदपाराधमिति मन्यमानस्तं देवताः प्रैषमैच्छन्त्सोऽब्रवीत्प्रजापतिर्यः प्रथमोऽनुविन्दति तस्य प्रथमं भागधेयमिति तं पितरोऽन्वविन्दन्तस्मात्पितृभ्यः पूर्वेद्युः क्रियते सोऽमावास्यां प्रत्याऽगच्छत्तं देवा अभि समगच्छन्तामा वै नः ॥ ६ ॥ अद्य वसु वसतीन्द्रो हि देवानां वसु तदमावास्यायां अमावास्यत्वं ब्रह्मवादिनो वदन्ति किंदेवत्यꣳ सांनाय्यमिति वैश्वदेवमिति ब्रूयाद्विश्वे

हि तद्देवा भागधेयमभि सम उரை येव ब्रूयादिन्द्रं

वावते तद्विषज्यन्तोऽभि स ன்றபோது விருத்திர டிகளாயும் எழுந்தது.

ாசாபதிக்கு முன்

பௌர்ண மாதத்தில் பிறகு நெல ட செடி ண்டியதாகிய வைமிருதத்தையு (இந்திரன் பகைவனைக் கொன்றதையு)', விதிக்கும் விதப்புடைய தாய் முதலில் அவற்றைப் புகழ்கின்றது.

பிராமணம் 1.

इन्द्रं वृत्रं जघ्निवाꣳसं मृधोऽभि प्रावेपन्त स एतं वैमृधं पूर्णमासेऽनुनिर्वाप्यमपश्यत्तं निरवपत्तेन वै स मृधोऽपाहत ।

என்பது

உரை.

விருத்திரனைக் கொன்ற இந்திரனுக்குரிய பதினொருகபாலப் புரோடாசம் வைமிருத மெனப்படும். அதன் பொருட்டு, பூரணமாத யாகத்தில் முக்கியமாகிய கருமத்திற்குப் பிறகு நெல் எடுத்தல் வேண்டும் என்பதாம்.

இனி, அது விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 2.

यद्वैमृधः पूर्णमासेऽनुनिर्वाप्यो भवति मृध एव तेन यजमानोऽप हते ।

என்பது

உரை.

வைமிருத மென்னும் இந்திரனுடைய புரோடாசத்தின் பொருட்டு பௌர்ணமி இஷ்டிக்கு பிறகு நெல் எடுத்தல் வேண்டும். அதனால் எசமானன் பகைவனை வென்றவனாகின்றான் என்பதாம்.

'சாம் நாய்யம்' எனப்படும் இந்திரனுக்குரிய தயிரை விதிக்கின்றது.

பிராமணம் 3.

इन्द्रो वृत्रꣳ हत्वा देवताभिश्चेन्द्रियेण च व्यार्ध्यत स एतमाग्नेयमष्टाकपालममावास्यायामपश्यदैन्द्रं दधि तं निरवपत्तेन वै स देवताश्चेन्द्रियं चावारुन्ध ।

என்பது

नयन्तत्प्रत्यदुहन्यत्समनयन्तत्सांनाय्यस

ல் பயப்பட்டு தூரத்தில் ஓடி

हन्तत्प्रतिधुषः प्रतिधुक्त्वं समनैषुः प्र யினின்றும், தனது வன்மையி

னுக்குரிய எட்டுக்கபால புரோடா

इत्यब्रवीदेतदस्मै ॥ ३ ॥ ...திரனுக்குரிய தயிரை எடுத்துக்கொண்ட

தும தேவதைகளும் இந்திரியங்களை யடைந்தார்கள்

न्द्रियं वा...

இனி அதை விதிக்கின்றது.

பிராமணம் 4.

यदाग्नेयोऽष्टाकपालोऽमावास्यायां भवत्यैन्द्रं दधिदेवताश्चैव तेनेन्द्रियं च यजमानोऽव रुन्धे ।

என்பது

உரை.

இங்கு ஆக்கினேயம் விதிக்கப்படவில்லை, ஏனெனின்? ஆறுவது பிரபா கத்தில் அமாவாசையிலும், பௌர்ணமியிலும் விதிக்கப்பட்டிருத்தலின்என் இது, ஐந்திராக்கினிவிதியை யறிவித்தற்பொருட்டு அர்த்தவாதமாம். ஆக் னேய எட்டுக்கபாலப் புரோடாசம் அமாவாசையில் உரித்தாய்ச் செய்யப்ப கின்றது. ஐந்திர தயிரும் தேவதையுங் கூறப்படுகின்றன. அதனால் எச னன் இந்திரியவன்மையையடைகின்றான் என்பதாம்.

இதனால், தனித்த ஆக்கினேயத்தாலும் தேவதைகளும் இந்திரியமும் அடையப்படுமெனின், ஐந்திராக்கினிகளால் அவை அடையப்படுமென்பதில் என் சொல்ல வேண்டும்? இவ்விரண்டு துதிகளால் அவ்விதி யூகித்துணரப்படு கின்றது என்பது உணரப்பாலது

அவ்விதியைப் புகழ்தற் பொருட்டு 'சாம்நாய்யம்' என்பதன் பொருளை விரித்துரைக்கின்றது.

பிராமணம் 5.

इन्द्रस्य वृत्रं जघ्नुष इन्द्रियं वीर्यं पृथिवीमनु व्यार्छत्तदोषधयो वीरुधोऽभ-वन्त्स प्रजापति मुपाधावद्वृत्रं मे जघ्नुष इन्द्रियं वीर्यं पृथिवीमनु व्या-रत्तदोषधयो वीरुधोऽभूवन्निति स प्रजापतिः पशूनब्रवीदेतदस्मै सं नयतेति तत्पशव ओषधीभ्योऽध्यात्मन्त्समनयन्तत्प्रत्यदुहन्यत्समन-यन्तत्सांनाय्यस्य सांनाय्यत्वं यत्प्रत्यदुहन्तत्प्रतिधुषः प्रतिधुक्त्वम् ।

என்பது

உரை

இந்திரன் விருத்திரனைக்கொன்றபோது விருத்திரனுடைய வீரியம் பூமியில் பல்வகைக் கொடிகளாயும் செடிகளாயும் எழுந்தது. இந்திரிய வன்மையே கொடி செடிகளின் வடிவமென்று பிரசாபதிக்கு முன்னே கூறினன். அதை அவன் பசுக்கட்குக் கூறினன். பசுக்கள் கொடி செடிகளினின்றும் அவ் வீரியத்தைக் கொண்டுவந்து தமது உடம்பில் வைத்துக்கொண்டன. பிறகு, பசுக்கள், வீரியமாகிய பால் தயிரை இந்திரன் பொருட்டுக் கறந்தன. பசுக்கள் நன்கு கொண்டுவந்தமையின் சமநயம் என்பதாம், அதிலிருந்து வந்தமையின் பால் தயிர் சாம் நாய்யம் எனப்பட்டன. இது இந்திரனைக் குறித்து நடோறுங் கறக்கப்படுதலின் 'பிரதிதுக்' என்றும் வழங்கப்பெறும் என்பதாம்.

காய்ச்சுதல் என்பதன் பொருள் விரித்துரைக்கப் படுகின்றது.

பிராமணம் 6.

समनैषुः प्रत्यधुक्षन्न तु मयि श्रयत इत्यब्रवीदेतदस्मै शृतं कुरुतेत्यब्रवीत्तदस्मै शृतमकुर्वन्निन्द्रियं वावास्मिन्वीर्यं तदश्रयन्तच्छृतस्य शृतत्वम्।

என்பது

உரை

பிரசாபதியே! உனது ஆக்ஞையால் பசுக்கள் கொண்டுவந்ததும் நாடோறுங் கறப்பதுமாகிய பாலென்னும் அவ்வீரியம் எனக்குச் சீரணமாவதில்லை என்றனன். அதைக்கேட்ட பிரசாபதி, பசுக்களைக் குறித்துப்பாலைப் பக்குவஞ் செய்வீர்களாக என்றனன். இவ்வாறு பால்காய்ச்சியதால் இந்திரனுக்குச் சீரணமாயிற்று என்பதாம்.

ததி, என்னும் பெயரின் பொருளை விரித்துரைக்கின்றது.

பிராமணம் 7.

समनैषुः प्रत्यधुक्षन्छृतमकन्न तु मा धिनोतीत्यब्रवीदेतदस्मै दधि कुरुतेत्यब्रवीत्तदस्मै दध्यकुर्वन्तदेनमधिनोत्तद्दध्नो दधित्वम्।

என்பது

உரை.

சம்நயனம், பிரதி தோஹனம், ச்ருதம், ஆதாவது பசுக்களால் கொண்டு வரல், நாடோறுங் கறத்தல் காய்ச்சுதல் என்னும் பொருள்கள் கிடைத்து விட்டன. ஆனால் களிப்புண்டாக்கும் தன்மையது என்பது மாத்திரம் உண்டாகவில்லை. இது, திரோதி = களிப்புண்டாக்குகின்றது என்பதால் பெறப்படுவதாம். பிறகு, பிரசாபதி, உறைக் குத்துவோனிடத்தில் தயிர் செய்வாயாக என்றனன். அவன் தயிராக்கிக்கொடுத்து இந்திரனைக் களிப்புறச் செய்தனன் ஆதலின் (ததி) எனப்படுகின்றதென்பதாம்.

அதன் ஆராய்ச்சியைக் கருத்துள் வைத்துக்கொண்டு ஆசங்கையைக் கூறுகின்றது.

பிராமணம் 8.

ब्रह्मवादिनो वदन्ति दध्नः पूर्वस्यावेद्यं दधि हि पूर्वं क्रियत इति ।

என்பது

உரை.

பிரமவாதிகள், தயிர் முதல்நாளிரவிலேயே செய்யப்படுதலின் தயிரை சுருவில் முதலில் எடுத்தல் வேண்டுமென்கின்றனர் என்பதாம்.

உத்தரங் கூறுகின்றது.

பிராமணம் 9.

अनादृत्य तच्छृतस्यैव पूर्वस्याव द्येदिन्द्रियमेवास्मिन्वीर्यं श्रित्वा दध्नोप-
रिष्टादिनोति यथापूर्वमुपैति ।

என்பது

உரை

முதலில் தயிரை எடுத்துக்கொள்ளல்கூடாது பாலையே முதலில் எடுத்துக்கொள்ளல் வேண்டும். இதனால், எசமானனிடத்தில் இந்திரிய வடிவமாகியபால் தங்கி தயிராய்க் களிப்பிக்கின்றது. பாலே முதலிலுண்டானது. தயிர் பிறகு உண்டானது என்பதும் பொருந்துமாறறிக என்பதாம்.

உறைக்குத்தலை விதிக்கின்றது.

பிராமணம் 10.

यत्पूतीकैर्वा पर्णवल्कैर्वाऽऽतञ्च्यात्सौम्यं तद्यत्क्वलै राक्षसं तद्यत्तण्डुलैर्वैश्व-
देवं तद्यदातञ्चनेन मानुषं तद्यद्दध्ना तत्सेन्द्रं दध्नाऽऽतनक्ति सेन्द्र-
त्वाय ।

என்பது

உரை.

சோமக் கொடியைப் போன்ற (ஆட்லாங்) கொடியின் துண்டும், புரசைமரத்தின் பட்டையும், இலந்தைப்பழமும், புளித்தமோரும் உறைக்குத்துதற்குரியவைகள். சோமன், ராக்ஷஸன் விசுவதேவர்கள், மனுஷ்யர்கள் என்பவர்களுடைய பிரியத்தின் பொருட்டு ஆட்லாங் கொடிமுதலியன. இந்திரனுடைய பிரியத்தின் பொருட்டு தயிர் உறைக் குத்தல்; ஆதலின் இது தயிரால் தான் உறைக் குத்தல் வேண்டும் என்பதாம்.

தயிர்க்குத்திய பாலின்மீது அக்கினி ஹோத்திரத்தின் பொருட்டுச் செய்த கஞ்சியின் சேடத்தை வார்த்தல் வேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம் 11

अग्निहोत्रोच्छेषणमभ्यातनक्ति यज्ञस्य संतत्यै ।

என்பது,

உரை

தரிசயாகம் அக்கினி ஹோத்திரத்துடன் தொடர்ந்திருத்தற் பொருட்டு அக்கினி ஹோத்திரத்தில் மீந்துள்ள கஞ்சியின் சேடத்தை உறையிட்ட பாலின்மீது ஊற்றல் வேண்டுமென்பதாம்

பிண்ட பித்ரு யக்ஞத்தை விதிக்கின்றது.

பிராமணம் 12

इन्द्रो वृत्रं हत्वा परां परावतमगच्छदपाराधमिति मन्यमानस्तं देवताः प्रैषमैच्छन्त्सोऽब्रवीत्प्रजापतिर्यः प्रथमोऽनुविन्दति तस्य प्रथमं भाग-
धेयमिति तं पितरोऽन्वविन्दन्तस्मात्पितृभ्यः पूर्वेद्युः क्रियते ।

என்பது

உரை

இந்திரன், விருத்திரனைக் கொன்றதால் அசுரர்களுக்கு யான் பிழைசெய்தனன் என்று எண்ணிக்கொண்டு மிகுந்த தூரஞ் சென்று விட்டனன். தேவர்கள் அவ்விந்திரனை யழைத்துக்கொண்டுவர விரும்பி தேவர்களுக்குள் யாராகினும் ஒருவர் இந்திரனை முதலில் கண்டு பிடிக்கில் அவருக்கு முதலில் அவிர்ப்பாகங் கொடுக்கின்றோம் என்று பிரசாபதி சொல்லியவாறே பிதிர்க்கள் முதலில் இந்திரனைக் கண்டுபிடித்தனராதலின் முதல் நாள் பிண்டபிதிரு யக்ஞஞ் செய்தல் வேண்டும். தரிசயாகம் அமாவாசையிற்றொடங்கி பிரதிபதத்தில் செய்யப்படுவதாம். பித்திருக்கட்கோ, அமாவாசையிலேயே பிண்டதானம் என்பதாம்.

Page Missing

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் முப்பது பதங்களைக் கொண்டது.

ஆக்கினி வைஷ்ணவ முதலிய யாகங்களைக் கூறு பிராமணங்கள்.

ब्रह्मवादिनो वदन्ति स त्वै दर्शपूर्णमासौ यजेत य एनौ सेन्द्रौ यजेतेति वैमृधः पूर्णमासेऽनुनिर्वाप्यो भवति तेन पूर्णमासस्सेन्द्र ऐन्द्रं दध्यमावास्यायां तेनामावास्या सेन्द्रा य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते सेन्द्रावेवैनौ यजते श्वश्वोऽस्मा ईजानाय वसीयो भवति देवा वै यद्यज्ञेऽकुर्वत तदसुरा अकुर्वत ते देवा एताम् ॥ १ ॥ इष्टिमपश्यन्नाग्नावैष्णवमेकादशकपालꣳ सरस्वत्यै चरुꣳ सरस्वते चरुं तां पौर्णमासꣳ सꣳस्थाप्यानु निरवपन्ततो देवा अभवन्पराऽसुरा यो भ्रातृव्यवान्त्स्यात्स पौर्णमासꣳ सꣳस्थाप्यैतामिष्टिमनु निर्वपेत्पौर्णमासेनैव वज्रं भ्रातृव्याय प्रहृत्याऽऽग्नावैष्णवेन देवताश्च यज्ञं च भ्रातृव्यस्य वृङ्क्ते मिथुनान्पशून्त्सारस्वताभ्यां यावदेवास्यास्ति तत् ॥ २ ॥ सर्वं वृङ्क्ते पौर्णमासीमेव यजेत भ्रातृव्यवान्नामावास्याꣳ हत्वा भ्रातृव्यं नाऽऽप्याययति साकम्प्रस्थायीयेन यजेत पशुकामो यस्मै वा अल्पेनाऽऽहरन्ति नाऽऽत्मना तृप्यति नान्यस्मै ददाति यस्मै महता तृप्यत्यात्मना ददात्यन्यस्मै महता पूर्णꣳ होतव्यं तृप्त एवैनमिन्द्रः प्रजया पशुभिस्तर्पयति दारुपात्रेण जुहोति न हि मृन्मयमाहुतिमानश औदुम्बरम् ॥ २ ॥

भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्क्पशव ऊर्जैवास्मा ऊर्जं पशूनव रुन्धे नाग-
तश्रीर्महेन्द्रं यजेत त्रयो वै गतश्रियः शुश्रुवान्ग्रामणी राजन्यस्तेषां
महेन्द्रो देवता यो वै स्वां देवतामतियजते प्र स्वायै देवतायै
च्यवते न परां प्राप्नोति पापीयान्भवति संवत्सरमिन्द्रं यजेत संव-
त्सरꣳ हि व्रतं नाति स्वा ॥ ४ ॥ एवैनं देवतेज्यमाना भूत्या इन्धे
वसीयान्भवति संवत्सरस्य परस्तादग्नये व्रतपतये पुरोडाशमष्टाकपालं
निर्वपेत्संवत्सरमेवैनं वृत्रं जघ्निवाꣳसमग्निर्व्रतपतिर्व्रतमा लम्भयति ततो-
ऽधि कामं यजेत ॥ ५ ॥

முன்னர் இரண்டநாளாகங்களாய்க் கூறிய தரிசபூரண மாத யாகங்களிரண்டையும்
புகழ்கின்றது

பிராமணம் 1

ब्रह्मवादिनो वदन्ति स त्वै दर्शपूर्णमासौ यजेत य एनौ सेन्द्रौ यजेतेति
वैमृधः पूर्णमासेऽनुनिर्वाप्यो भवति तेन पूर्णमासस्सेन्द्र ऐन्द्रं दध्यमा-
वास्यायां तेनामावास्या सेन्द्रा य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते
सेन्द्रावेवैनौ यजते श्वश्श्वोऽस्मा ईजानाय वसीयो भवति ।

என்பது.

உரை.

பகைவனைக் கொன்றதால் வந்த புரோடாசம் பௌர்ணமியிலும் அமாவாசையில் பாலுந்தயிரும் இந்திரனுடைய அவியாக இருத்தலின் இந்திரனுடன் கூட தரிசபூரணமாத யாகங்களைச் செய்கின்றவனே அதைச் செய்தோனவன். மற்றையனலன். இவ்வாறுணர்ந்து செய்கின்றவன் மென்மேலும் தனப் பெருக்கையடைகின்றான் என்பதாம்.

அக்கினி விஷ்ணுக்களின் யாகங்கள்)

பௌர்ண மாச யாகத்தில் பிறகு அவியெடுத்துச் செய்யும் மற்றொரு இஷ்டியை விதித்தற் பொருட்டு அதைப் புகழ்கின்றது

பிராமணம் 2.

देवा वै यद्यज्ञेऽकुर्वत तदसुरा अकुर्वत ते देवा एतामिष्टिमपश्यन्नाग्ना-
वैष्णवमेकादशकपालꣳ सरस्वत्यै चरुꣳ सरस्वते चरुं तां पौर्णमासꣳ-
सꣳस्थाप्यानु निरवपन्ततो देवा अभवन्पराऽसुराः ।

என்பது

உரை.

தேவர்கள் எந்த யாகத்தைச் செய்கின்றார்களோ, அந்த யாகத்தை அசுரர்களுஞ் செய்தனர்; அதைக் கண்ட தேவர்கள், கபடமாய், அக்கினி விஷ்ணுக்களுக் குரிய பதினொரு கபாலப் புரோடாசமும், சரஸ்வதியின் பொருட்டுப் பொங்கலும், சரசுவான் பொருட்டுப் பொங்கலும் அதே பௌர்ணமாதத்திற் செய்து விட்டனர். அதனால் அசுரர்கள் உண்மை தெரியாமல் தோல்வியடைந்தனர் என்பதாம்.

அதை விதிக்கின்றது

பிராமணம் 3.

यो भ्रातृव्यवान्स्यात्स पौर्णमासꣳ सꣳस्थाप्यैतामिष्टिमनु निर्वपेत्पौर्ण-
मासेनैव वज्रं भ्रातृव्याय प्रहृत्याऽऽग्नावैष्णवेन देवताश्च यज्ञं च भ्रातृ-
व्यस्य वृङ्क्ते मिथुनान्पशून्त्सारस्वताभ्यां यावदेवास्यास्ति तत्सर्वं
वृङ्क्ते ।

என்பது

உரை.

பகையையுடையவன் பௌர்ணமாத யாகத்தைச் செய்துவிட்டு பிறகு இந்த இஷ்டியைச் செய்தல் வேண்டும். பௌர்ணமாத யாகத்தால் வச்சிரத்தால் அடி விழுகின்றது. இந்த ஆக்கின வைஷ்ணவ யாகத்தால் அக்கினியும் விஷ்ணுவும் பகைவனைக் கொல்கின்றனர். சரச்வான் சரஸ்வதி என்பது ஆண் பெண்ணாதலின் ஆண் பெண்ணாய்ப் பெருகியுள்ள பகைவனுடைய பசுக்களை நாசமாக்குகின்றது என்பதாம்.

(அக்கினி விஷ்ணுக்களின்

பகையுடையவன் பௌர்ணமாதத்தில் யாகஞ் செய்தல் வேண்டும் அமாவாசையிற் பிண்டபிதிருயக்ஞஞ் செய்யவேண்டுமேயன்றி யாகஞ் கூடாதெனல்.

பிராமணம் 4

पौर्णमासीमेव यजेत भ्रातृव्यवान्नामावास्याꣳ हत्वा भ्रातृव्यं नाऽऽप्याययति ।

என்பது.

உரை.

பகையுடையவன் பௌர்ணமாத யாகத்தைச்செய்து பகைவரைக்கொன்று அதனல் அமாவாசை யாகத்தை விட்டுவிட்டவனாகின்றான் ஆகலின் இவன் பகைவனுக்குத் திருப்தி இல்லாமல் நீக்கியவனாகின்றான் என்பதாம்.

தரிசபூரணமாத யாகத்தின் துணைவிகாரமாகிய ஒருயாகம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 5

साकंप्रस्थायीयेन यजेत पशुकामो यस्मै वा अल्पेनाऽऽहरन्ति नाऽऽत्मना तृप्यति नान्यस्मै ददाति यस्मै महता तृप्यत्यात्मना ददात्यन्यस्मै महता पूर्णꣳ होतव्यं तृप्त एवैनमिन्द्रः प्रजया पशुभिस्तर्पयति ।

என்பது.

உரை

தயிர் பால்களிறைந்த நான்கு கலசங்களுடன் வேட்போன் ஹோமஞ் செய்யுமிடத்திற்குப் புறப்பட்டுச் சென்று அங்குச் செய்யப்படும் யாகமாகிய சாகம் பிரஸ்தாயீயம் என்னும் யாகத்தை, பசுவில் விருப்புடையவன் செய்தல் வேண்டும். சிறிது தனந்தேடுகின்றவன் தானுங்களிப்படையான் பிறரையுங் களிப்படையச் செய்யமாட்டான். நிறையப் பொருள் தேடுகின்றவனே, தான் களிப்புறுவதுடன் பிறருக்குங் கொடுப்பான் அது போல் ஹோமப் பொருண் முழுதையும் ஓமஞ் செய்ததால் இந்திரன் களிப்புற்று எசமானனை நன்கு களிப்புறச் செய்கின்றான் என்பதாம். இது, காலை, மாலை கறந்த பால்களாற் செய்யப்படுவது என்பதை யுணர்க.

மரப் பாத்திரத்தினல் ஹோமஞ் செய்ய வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 6

दारुपात्रेण जुहोति न हि मृन्मयमाहुतिमानशे ।

என்பது.

உரை

மட் பாத்திரத்தால் ஹோமஞ் செய்தல் அமையாமையின் மரப்பாத்திரத்தால் ஹோமஞ் செய்தல் வேண்டும். அதுவும், சுருவிலெடுத்துச் செய்யாமல் முழு அவியையுங் கொள்ளத்தக்க வேறொரு பாத்திரத்தாலேயே ஹோமஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

மரத்தை விதிக்கின்றது

பிராமணம் 7

औदुम्बरं भवत्यूर्ग्वा उदुम्बर ऊर्क्पशव ऊर्जैवास्मा ऊर्जं पशूनव रुन्धे !

என்பது

உரை

அம்மரமும் அத்திமரமாயிருத்தல் வேண்டும், ஏனெனின்? அத்திமரத்தின் இரசம் பசுக்களாம். ஆதலின் பசுக்களை யுண்டாக்குகின்றது என்பதாம்.

அதிகாரி பேதத்தால் பால் தயிர்களின் தேவதையை நியமிக்கின்றது

பிராமணம் 8.

नागतश्रीर्महेन्द्रं यजेत त्रयो वै गतश्रियश्शुश्रुवान्ग्रामणी राजन्यस्तेषां महे-
न्द्रो देवता यो वै स्वां देवतामतियजते प्र स्वायै देवतायै च्यवते न परां
प्राप्नोति पापीयान्भवति।

என்பது

உரை.

மூன்று வேதங்களையு முணர்ந்தவன், கிராமத் தலைவனும், அரசகுமாரனும் சிரேஷ்டதையை யுடையவர்களாவார்கள்; இவர்கட்கு மாகேந்திரன் தேவதையாவன். எவன் தனது தேவதையைவிட்டு பிறதேவதையை வழிபடுகின்றானோ அவன், சாபவசத்தால் பாவியும் வறுமையு முடையவனுமாவன் என்பதாம்.

செல்வமில்லாத ஏனையோர்கள் எப்போதும் இந்திரனை யடைவதில் சிறப்பை விதிக்கின்றது,

பிராமணம் 9

संवत्सरमिन्द्रं यजेत संवत्सरं हि व्रतं नाति स्वैवैनं देवतेज्यमाना भूत्या
इन्धे वसीयान्भवति।

என்பது

உரை.

ஒரு வருடத்திற்குமேல் விரதாநுட்டானம் இல்லை. ஆதலின், செல்வமில்லாதவன் ஒரு வருடம்வரை இந்திரனை வழிபடல் வேண்டும். பிறகு, அவன் எசமானனைத் தனத்தால் விளங்கும்படி செய்கின்றான். அதாவது தனமுடையவனாக்குகின்றான் என்பதாம்.

செல்வமில்லாதவர்களுக்கு மற்றொரு இஷ்டி விதிக்கப்படுகின்றது

பிராமணம் 10

संवत्सरस्य परस्तादग्नये व्रतपतये पुरोडाशमष्टाकपालं निर्वपेत्संवत्सर-
मेवैनं वृत्रं जघ्निवाꣳसमग्निर्व्रतपतिर्व्रतमा लम्भयति ।

என்பது

உரை

ஒருவருடஞ் சென்றபிறகு, விரதபதியாகிய அக்கினிக்கு எட்டுக்கபாலங்களில் புரோடாசஞ் செய்தல் வேண்டும். அத்தகைய அக்கினி, மாகேந்திர யாகத்திற்கு அதிகார மில்லாமற் செய்யும் பாவத்தைப் போக்கி மாகேந்திர அநுட்டானமாகிய விரதத்தை அடையச் செய்கின்றது என்பதாம்.

விரதபதி இஷ்டிக்குமேல் செல்வமில்லாவர்களுக்கு இந்திரயாகம் மாகேந்திர யாகம் என்னும் இரண்டும் விருப்பத்தை முன்னிட்டதென்று விதிக்கின்றது

பிராமணம் 11

ततोऽधि कामं यजेत ।

என்பது.

உரை

பிறகு விருப்பப்படி வேள்வி செய்க என்பதாம்.

நான்காவது அநுவாகம்
முற்றிற்று.

இரண்டாம் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் ஆறு பதங்களைக் கொண்டது

அப்யுதய இஷ்டி முதலியவைகளைக் கூறும் பிராமணங்கள்

नासोमयाजी सं नयेदनागतं वा एतस्य पयो योऽसोमयाजी यदसोमयाजी सं नयेत्परिमोष एव सोऽनृतं करोत्यथो परैव सिच्यते सोमयाज्येव सं नयेत्पयो वै सोमः पयस्सांनाय्यं पयसैव पय आत्मन्धत्ते वि वा एतं प्रजया पशुभिरर्धयति वर्धयत्यस्य भ्रातृव्यं यस्य हविर्निरुप्तं पुरस्ताच्चन्द्रमाः ॥ १ ॥ अभ्युदेति त्रेधा तण्डुलान्वि भजेद्ये मध्यमास्स्युस्तानग्नये दात्रे पुरोडाशमष्टाकपालं कुर्याद्ये स्थविष्ठास्तानिन्द्राय प्रदात्रे दधंश्चरुं येऽणिष्ठास्तान्विष्णवे शिपिविष्टाय शृते चरुमग्निरेवास्मै प्रजां प्रजनयति वृद्धामिन्द्रः प्र यच्छति यज्ञो वै विष्णुः पशवः शिपिर्यज्ञ एव पशुषु प्रति तिष्ठति न द्वे ॥ २ ॥ यजेत यत्पूर्वया संप्रति यजेतोत्तरया छम्बट्कुर्याद्यदुत्तरया संप्रति यजेत पूर्वया छम्बट्कुर्यान्नेष्टिर्भवति न यज्ञस्तदनु ह्रीतमुख्यपगल्भो जायत एकामेव यजेत प्रगल्भोऽस्य जायतेऽनादृत्य तद्द्वे एव यजेत यज्ञमुखमेव पूर्वयाऽऽलभते यजत उत्तरया देवता एव पूर्वयाऽवरुन्ध इन्द्रियमुत्तरया देवलोकमेव ॥ ३ ॥ पूर्वयाऽभिजयति मनुष्यलोकमुत्तरया

(அப்யுதய

भूयसो यज्ञक्रतूनुपैत्येषा वै सुमना नामेष्टिर्यमद्येजानं पश्चाच्चन्द्रमा अभ्युदेत्यस्मिन्नेवास्मै लोकेऽर्धुकं भवति दाक्षायणयज्ञेन सुवर्गकामो यजेत पूर्णमासे सं नयेन्मैत्रावरुण्याऽऽमिक्षयाऽमावास्यायां यजेत पूर्णमासे वै देवानाꣳ सुतस्तेषामेतमर्धमासं प्रसुतस्तेषां मैत्रावरुणी वशाऽमावास्यायामनूबन्ध्या यत् ॥ ४ ॥ पूर्वेद्युर्यजते वेदिमेव तत्करोति यद्वत्सानपाकरोति सदोहविर्धाने एव सं मिनोति यद्यजते देवैरेव सुत्याꣳ सं पादयति स एतमर्धमासꣳसधमादं देवैस्सोमं पिबति यन्मैत्रावरुण्याऽऽमिक्षयाऽमावास्यायां यजते यैवासौ देवानां वशाऽनूबन्ध्या सो एवैषैतस्य साक्षाद्वा एष देवानभ्यारोहति य एषां यज्ञम् ॥ ५ ॥ अभ्यारोहति यथा खलु वै श्रेयानभ्यारूढः कामयते तथा करोति यद्यवविध्यति पापीयान्भवति यदि नावविध्यति सदृङ्व्यावृत्काम एतेन यज्ञेन यजेत क्षुरपविर्ह्येष यज्ञस्ताजक्पुण्यो वा भवति प्र वा मीयते तस्यैतद्व्रतं नानृतं वदेन्न माꣳसमश्नीयान्न स्त्रियमुपेयान्नास्य पल्पूलनेन वासः पल्पूलयेयुरेतद्धि देवास्सर्वं न कुर्वन्ति ॥ ६ ॥

ஈண்டு, சதுர்த்தசியை அமாவாசை என்று மயங்கி தரிசயாகஞ் செய்யத் தொடங்கும்போது அதிகாலையில் சந்திர னுதிக்கில் அதைக்கண்டு பிராயச்சித்தமாகச் செய்யும் இஷ்டி அப்யுதய இஷ்டியாம் என்பதை யுணர்க.

சாம்நாய்ய யாகத்திற்கு (பால் தயிருக்)கு அதிகாரியை வேறுபடுத்துகின்றது

பிராமணம் 1

नासोमयाजी सं नयेदनागतं वा एतस्य पयो योऽसोमयाजी यदसोमयाजी सं नयेत्परिमोष एव सोऽनृतं करोत्यथो परैव सिच्यते सोमयाज्येव सं नयेत्पयो वै सोमः पयस्सांनाय्यं पयसैव पय आत्मन्धत्ते ।

என்பது

உரை.

சோமயாகஞ் செய்வதற்குமுன் தரிச(அமாவாசை) யாகஞ் செய்கின்றவன் பால் தயிரை ஹோமஞ் செய்யக்கூடாது. சோமயாகம் பண்ணாதவனுக்கு, பாலே கிட்டமாட்டாது. ஏனெனின்? சோமம் ஓஷதி (கொடி செடி)களின் இரசமா மாதலின் அஃதின்றியபோது அவற்றின் சார விசேடமாகிய பால் இல்லாமையினென்க. இவ்வாற்றால் சோமயாகம் பண்ணாதவன் அமாவாசையில் பால் தயிர் ஹோமஞ் செய்யில் அவன் திருடனும் அநியாயஞ் செய்கின்றவனுமாகின்றான். மற்றும், தீயிலிட்ட பால் தயிர் வீணாயொழிந்து போகின்றது. ஆதலின், சோமயாகஞ் செய்தவனே அமாவாசையில் பால் தயிர் ஹோமஞ் செய்தல் வேண்டும். சோமமாகிய ஓஷதிகளின் இரசமே பால் வடிவாதலின் என்க. இவ்வாற்றால் சோமயாகம் பண்ணியவன் சோமமாகிய பாலுடன் சாம்நாய்யத்தை ஆன்மாவில் ஏற்றுக் கொள்கின்றான் என்பதாம்.

அப்யுதயம் (சந்திரோதயம்) என்னும் இஷ்டியை விதிக்கின்றது

பிராமணம் 2

वि वा एतं प्रजया पशुभिरर्धयति वर्धयत्यस्य भ्रातृव्यं यस्य हविर्निरुप्तं पुरस्ताच्चन्द्रमा अभ्युदेति त्रेधा तण्डुलान्वि भजेद्ये मध्यमास्स्युस्तानग्नये दात्रे पुरोडाशमष्टाकपालं कुर्याद्ये स्थविष्ठास्तानिन्द्राय प्रदात्रे दधँश्चरुं येऽणिष्ठास्तान्विष्णवे शिपिविष्टाय शृते चरुमग्निरेवास्मै प्रजां प्र जनयति वृद्धामिन्द्रः प्र यच्छति यज्ञो वै विष्णुः पशवश्शिपिर्यज्ञ एव पशुषु प्रति तिष्ठति ।

என்பது

உரை

அமாவாசையில் யாகம்பண்ண வேண்டியவன், மயங்கி, சதுர்த்தசியிற் செய்யத் தொடங்கில் அன்று அதிகாலையில் உதிக்கும் சந்திரன் வேள்வித் தலைவனுக்கு பசு முதலியவைகளை வளர்க்கின்றான். ஆனால், இவனுடைய பகைவர்களையும் வளர்க்கின்றான் ஆகலின் இந்த அப்யுதய இஷ்டி செய்யத் தக்கதாம்.

இவ்விஷ்டி செய்வதன் முறை வருமாறு :—

சதுர்தசியின் மாலையில் அக்கினி ஹோத்திரஞ் செய்வதற்குமுன் கன்று களை விட்டுப் பால்கறந்து தயிர் செய்தபின், இன்று, சதுர்த்தசியோ, அல்லது, அமாவாசையோ என்று சந்தேகபட்டபோது, நடு இரவிலேயே நெல்லெடுத்து அரிசி குத்துதல் முதல் தவிட்டைப் புடைத்து எடுத்தல்வரை செய்து வைத்துக் கொண்டு சந்திர உதயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் தோய்த்துவைத்த தயிரில் பாதியை எடுத்துத் தனியே வைத்துவிடல் வேண்டும். அதை, அமாவாசை யிரவில் பால்கறந்து பாலில் உறையாகக் குத்தி வைத்திருந்து பாட்டிமை முதந்தி(பிரதமையி)ல் தரிசயாகஞ் செய்தல் வேண்டும்.

முற்கூறியபடி சந்திரன் உதித்தவுடன், குத்திவைத்துள்ள அரிசியை, முழு அரிசி, உடைந்த பாதி அரிசி, நொய்யாகிய அரிசி என்று மூவகையாகப் பிரித்து முழு அரிசியைபிரதாதா வென்னும் இந்திரனுக்குப் பொங்கல் செய்து ஹோமஞ் செய்தல் வேண்டும். பாதியாயுடைந்த அரிசியை, தாதாவாகிய அக்கினிக்கு எட்டுக் கபாலங்களில் புரோடாசஞ் செய்து ஹோமஞ் செய்தல் வேண்டும். நொய்யை சிபிவிஷ்டனாகிய விஷ்ணுவிற்குப் பொங்கல் செய்து ஓமஞ் செய்தல் வேண்டும். அக்கினி, வேள்வித் தலைவனுக்கு புத்திரனை யுண்டு பண்ணுகின்றது. இந்திரன் அப்புத்திரனை வளர்க்கின்றான். விஷ்ணு பசுக் களை வளர்க்கின்றான் என்பதாம்.

சுமன இஷ்டியை விதிக்கும் விதப்புடையதாய் ஆசங்கையை எழுப்புகின்றது

பிராமணம் 3

न द्वे यजेत यत्पूर्वया संप्रति यजेतोत्तरया छम्बट्कुर्याद्यदुत्तरया संप्रति यजेत पूर्वया छम्बट्कुर्यान्नेष्टिर्भवति न यज्ञस्तदनु ह्रीतमुख्यपगल्भो जायत एकामेव यजेत प्रगल्भोऽस्य जायते ।

என்பது

உரை.

தரிசபூரணமாதயாகங்களை இரண்டுமுறை செய்தல் வேண்டுமென்பது பொருத்தமுடையதன்று; என்னை? முதலாவது பௌர்ணமி யாகத்தைச் செய்து இரண்டாவது முறையுஞ் செய்யில் இரண்டாவது வீணாய் ஒழியும். இரண்டாவதை நன்கு செய்யில் முதலாவது செய்தது வீணாயொழியும். ஆதலின் இது இருமுறை செய்யும் யாகம் என்றாவது அக்கினிஷ்டோமம் என்றாவது சொல்லமுடியாது. காலைச் சவனம் முதலியவைகள் இல்லாமையின் இரண்டும் நழுவி விட்டமையின் இந்த யாகத்தைச் செய்தவனை வினவில், அதற்கு பதில்கூறுவது நாணுவன், ஆதலின், ஐசுவரியத்தை விரும்பி இருமுறை செய்வதை ஒழித்து ஒரே பௌர்ணமியில் அமாவாசையில் யாகஞ்செய்வானாக. இவ்வாறுசெய்யில் இவ்வேள்வித் தலைவனுடைய பிள்ளையும் சபையில் இனிது பேசுவன் எனின்? செய்த இவன் பேசுவான் என்பதில் என் சொல்ல வேண்டும்? என்பதாம்.

ஆசங்கையை மறுத்து சித்தாந்தத்தை விதிக்கின்றது:

பிராமணம் 4

अनादृत्य तद्द्वे एव यजेत यज्ञमुखमेव पूर्वयाऽऽलभते यजत उत्तरया देवता एव पूर्वयाऽवरुन्ध इन्द्रियमुत्तरया देवलोकमेव पूर्वयाऽभिजयति मनुष्यलोकमुत्तरया भूयसो यज्ञक्रतूनुपैत्येषा वै सुमना नामेष्टिर्यमद्येजानं पश्चाच्चन्द्रमा अभ्युदेत्यस्मिन्नेवास्मै लोकेऽर्धुकं भवति ।

என்பது

உரை.

ஒருயாகந்தான் செய்தல் வேண்டும் என்றதை உடன்படாமல் இருமுறையே செய்தல் வேண்டும். ஏனெனின்? முதலிற் செய்வதால் வேள்வியின் முகமென்னுந் தொடக்கமும், தேவர்களின் அடைவும், தேவலோக வெற்றியும் பயனாகின்றன. இரண்டாவது செய்வதால் தொடங்கிய யாகத்தின் முடிவும், இந்திரிய அடைவும் மனிதலோக வெற்றியும் பயனாகின்றன. ஆதலின் ஒன்றும் வீணாவதில்லை. இஷ்டியும் வேள்வியும் என்னும் இருவகையும் சித்தியாம். தனித்தது இஷ்டியாம் அஃதுடன் கூடியது வேள்வியாம். ஆதலின். இதைச்செய்வதால் ஏகாஹ அஹீனம் சத்ர முதலான பல்வகையான யாகங்களையுமடைகின்றான். இது சந்திரப் பிறை வளர்ந்து களிப்பைத்தருவதை நிமித்தமாகக் கொண்டதால் 'சுமன' எனவழங்கப்பெறும். இதனால் இவ்வுலகிலேயே நிறைந்த செல்வம் உண்டாகின்றது என்பதாம்.

தரிசபூரண மாதங்களின் மற்றொரு குணவிகிர்தி யாகத்தை விதிக்கின்றது.

பிராமணம் 5

दाक्षायणयज्ञेन सुवर्गकामो यजेत ।

என்பது.

உரை

தாக்ஷாயண யாகத்தால் சுவர்க்கத்தை விரும்பியவன் வேட்கவேண்டு மென்பதாம்.

ஈண்டு, 'தாக்ஷாயண' என்னுஞ் சொல், தரிசபூரணமாத யாகங்களின் ஆவிருத்தியை (மறித்தும் மறித்துஞ் செய்வதை)க் குறிக்கின்றது. அல்லது தக்ஷர் என்பவரால் கண்டு பிடிக்கப் பெற்றதெனினுமாம்.

இதன் போதுமுறை வருமாறு :—

இது, இரண்டு அமாவாசை இரண்டு பௌர்ணிமையைச் செய்வதாம். எவ்வாறெனின்? முதலாவது பௌர்ணிமையில் அக்கினி தேவதைக்குரிய எட்டுக்கபாலமும், அக்கினி சோமர்கட்குரிய பதினொரு கபாலங்களுமாம். இரண்டாவது பௌர்ணிமையில், அக்கினிக்குரிய எட்டுக்கபாலமும், இந்திரனுக்குரிய தயிருமாம். இவ்வாறே, முதலாவது அமாவாசையில் அக்கினிக்குரிய எட்டுக்கபாலமும், ஐந்திராக்கினிகட்குரிய பதினொருகபாலமுமாம். இரண்டாவது அமாவாசையில் அக்கினிக்குரிய எட்டுக் கபாலமும், மைத்திரா வருண ஆமிக்ஷையுமாம்.

சுருக்க இஷ்டிப்ரயோகம்

பௌர்ணமி தினம் காலையில் அக்கினி ஹோத்திரம் முடிந்ததும் பௌர்ணமாச இஷ்டியைப்போல், அன்வாதானஞ் செய்து இரவில் பரிஸ்தரணம் போடுவதுவரை செய்தல்வேண்டும். மறுதினங்காலை கையைக்கழுவது முதலியவைகளைச் செய்யத்தொடங்கி பௌர்ணமாச இஷ்டியைப்போல் இந்த இஷ்டியையுஞ் செய்து முடித்துவிடல் வேண்டும். பிறகு முன்போல் அன்வாதானஞ் செய்து இரவில் பரிஸ்தரணம் போடுவது வரையில் செய்து மறு தினம், அதாவது துவிதீயையன்று காலையில் கையைக் கழுவதுமுதல் முன் போல் இஷ்டியைச் செய்து முடித்துவிடல் வேண்டும். இதைப் போலவே அமாவாசையிலும் இரண்டு இஷ்டிகளைச் செய்யவேண்டும். அல்லது, இவைகளை சதுர்தசியன்று அன்வாதானஞ்செய்து பௌர்ணமி தினம் இஷ்டியைச் செய்துவிட்டு, பிறகு, அன்வாதானஞ்செய்து பிரதிமையிற் செய்யலாம் என்பதும் ஒருபக்ஷம். இவைகளில் தேவதைகளெல்லாம் தரிசபூரணமாசத்தில் சொன்னபடியேயாம்.

சுமனயாகம் முடிந்தது.

மேற்கூறியவைகளுள் இரண்டாவது, பௌர்ணிமை அமாவாசைகளில்
ஒவ்வொன்றை விதிக்கின்றது.

பிராமணம் 6

पूर्णमासे सं नयेन्मैत्रावरुण्याऽऽमिक्षयाऽमावास्यायां यजेत ।

என்பது.

உரை

பௌர்ணிமையில் சாம்நாயத்தாலும் அமாவாசையில் ஆமிக்ஷையாலும் யாகஞ் செய்தல் வேண்டுமென்பதாம்.

இரண்டாவது பௌர்ணிமையில் இந்திரனுக்குரிய தயிராகிய
சாம்நாய்யத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 7

पूर्णमासे वै देवानाꣳ सुतस्तेषामेतमर्धमासं प्रसुतः ।

என்பது.

உரை.

பௌர்ணமாதத்தில் இந்திரனுக்கு தயிர் அநுட்டானஞ் செய்ததால் தேவர்கட்கு சோமம் பிழியப்பட்டதாகின்றது. 'பாலே சோமம்; பாலே சாம்நாய்யம்' எனப்பட்டிருத்தலின் என்க. தேவர்கட்குப், பௌர்ணிமையிலிருந்து அமாவாசைவரையில் பாதிமாதம் இடையறுமல் சோமம் பிழியப்பட்டதாகின்றது. நாடோறும் அநுட்டிக்கப்படும் சோமவிகிருதிகளால் உண்டாகும் பிரியம் அச் சாம்நாய்யத்தா (தயிரா)ல் உண்டாகி விடுகின்றது என்பதாம்.

இரண்டாவது அமாவாசையில் விதிக்கப்பட்ட ஆமிக்ஷையைப் புகழ்கின்றது.

பிராமணம் 8

तेषां मैत्रावरुणी वशाऽमावास्यायामनूबन्ध्या यत्पूर्वेद्युर्यजते वेदिमेव तत्करोति यद्वत्सानपाकरोति सदोहविर्धाने एव सं सिनोति यद्यजते देवैरेव सुत्याꣳ सं पादयति स एतमर्धमासꣳ सधमादं देवैस्सोमं पिबति यन्मैत्रावरुण्याऽऽमिक्षयाऽमावास्यायां यजते यैवासौ देवानां वशाऽनूबन्ध्या सो एवैषैतस्य ।

என்பது

உரை.

இவ் வம்மாவாசையில் அநுட்டிக்கப்பட்ட ஆமிக்ஷை அத்தேவர்கட்கு வசாநுபந்தியமாய் விடுகின்றது. அஃதெவ்வாறெனின் ? சுக்கிலபட்சப்பிரதிபதாவில் யாகஞ்செய்கின்றான். அதில், சோமசம்பந்தமாகிய வேதிகையைச் செய்தவனாகின்றான். பிறகு, அம்மாவாசையில் கன்றை விடுகின்றான் ஆதலின் பால்கறத்தலுடன் இரண்டு அவிவைக்கும் மண்டபத்தையுஞ் செய்தவனாகின்றான். துவிதீயையில் காலஆக்னேய அஷ்டகபாலத்தால் யாகஞ்செய்கின்றான் அதனால் தேவர்கள் விரும்புஞ் சோமத்தைப் பிழிந்தவனாகின்றான். அத்தகைய எசமானன், சுக்கிலபட்சமாகிய பாதிமாதமும் இடையறாமல் தேவர்களுடன் களிப்புடன் சோமத்தை அருந்தியவனாகின்றான். ஆதலின், ஆக்னேயத்திற்கு அந்த அமாவாசைக் கருமத்தில் மைத்திராவருணா ஆமிக்ஷையால் யாகஞ் செய்கின்றான். ஆதலின், அந்த ஆமிக்ஷையே எசமானனுக்கு வசாவெனப் படுகின்றது. எவ்வசாவெனின்? சோமயாக முடிவில் தேவர்களின் பொருட்டு வசாநுபந்தியாகச் செய்யப்படுகின்றதல்லவா? அதுவே ஆமிக்ஷையாம் பொருள் என்பதாம்.

தாக்ஷாயண யக்ஞத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 9

साक्षाद्वा एष देवानभ्यारोहति य एषां यज्ञमभ्यारोहति यथा खलु वै श्रेयानभ्यारूढः कामयते तथा करोति ।

என்பது

உரை.

எவன் இந்த யாகத்தால் விதிப்படி அக்கினி முதலிய தேவதைகளை வழிபடுகின்றானோ அவன், நேரே அத்தேவதைகளை யடைகின்றான். விண்ணில் தேவர்கட் கொத்த போகங்களையுமடைகின்றான் என்பது பொருள். அடைந்து, அரசன் முதலான உத்தம பதவியை யடைந்துள்ளவன், எனக்கு இப்போக சாதனத்தைக் கொண்டுவா, என்று பல்வகைப் போகங்களை மீண்டும் மீண்டும் விரும்புவதுபோல் விரும்புவன். அதாவது பெரும்பயனையடைவன் என்பதாம்.

(இஷ்டிகள்)

பிறரிலிருந்து பெரியவனாகவிரும்பியவனும் இத் தாக்ஷாயண யாகத்தைச் செய்யலாமெனக் கூறுகின்றது

பிராமணம் 10.

यद्यवविध्यति पापीयान्भवति यदिनावविध्यति सदृङ्ङ्यावृत्काम एतेन यज्ञेन यजेत क्षुरपविर्ह्येष यज्ञस्ताजक्पुण्यो वा भवति प्र वा मीयते।

என்பது.

உரை

அன்னிய வேள்விகளில் குறைவுபாடு செய்யில் பாவியாகின்றான். அக்கால் ஏனைய வேள்வித் தலைவர்களிலிருந்தும் தாழ்ந்தவனாகின்றான். ஆகவே பிறர்களுக்கு ஒப்பாகின்றானேயன்றி பெரியவனாக மாட்டான். அப்போது பிறரை நோக்க அதிகமாந் தன்மையை யடைய விரும்பியவன் தாக்ஷாயண யக்ஞத்தைச் செய்தல் வேண்டும். செய்யில், அது, கத்தியைப் போலும், வச்சிரத்தைப் போலும் கூரியதாதலின் செய்தவன் புண்ணியனாகின்றான், அல்லது பிறர்களைவிடச் சிறந்தோனாகின்றான். அவனுடைய பகைவன் இறக்கின்றான் அல்லது, செய்தவன் முறையாய்ச் செய்யில் உத்தமனாகின்றான். குறைநேரிடில் இறந்து விடுகின்றான் என்பதாம்.

விரத விசேடங்களை விதிக்கின்றது

பிராமணம் 11.

तस्यैतद्व्रतं नानृतं वदेन्न मा॒ꣳसमश्नीयान्न स्त्रियमुपेयान्नास्य पल्पूलनेन वासः पल्पूलयेयुरेतद्धि देवास्सर्वं न कुर्वन्ति।

என்பது.

உரை.

பொய் சொல்லாமை, ஊன் அருந்தாமை, மாதரைச் சேராமை உவர்மண் முதலியவைகளால் ஆடையைத் தோய்க்காமை என்பவற்றை தேவர்கள் செய்யார்களாதலின் இவ்வேள்வித் தலைவனும் செய்தல் கூடாது; இதுவே இவனுடைய விரதம் என்பதாம்.

தாக்ஷாயண யக்ஞப் பிரயோகம்.

சதுர்த்தசி திதி யன்று காலை அக்கினி ஹோத்திரம் முடிந்ததும் பத்தினியுடன் காருகபத்யத்திற்கு மேற்கில் தருப்பைகளின்மேல் உட்கார்ந்து கொண்டு, 'दाक्षायणयज्ञप्रथमपूर्णमासेनयक्ष्ये' என்று சங்கற்பஞ் செய்துகொண்டு विद्युत् என்பது முதலிய மந்திரத்தால் கைகளைக் கழுவிக்கொள்வது முதலிய கர்மங்களைச் செய்யத்தொடங்கி அன்வாதானஞ் செய்து இரவில் பரிஸ்தரணம் போடுவதுவரை செய்துவிட்டு, மறுதினம் காலை அதாவது பௌர்ணமி தினம் காலை கைபைக்கழுவுவது முதலிய கர்மங்களைத் தொடங்கி பௌர்ணமி இஷ்டியைபோல் (8) கபாலங்களை வைத்து அக்கினிக்கு ஒரு புரோடாசமும், 11-கபாலங்களை வைத்து அக்னீ ஷோமர்களுக்குப் புரோடாசமுஞ் செய்து கொண்டு, உபாம்சு (மெல்லக்கூறிச் செய்யும்) யாகமில்லாமல் இஷ்டியை முடித்துவிடல் வேண்டும். பிறகு முன்போல் காருகபத்யத்திற்கு மேற்கில் உட்கார்ந்து கொண்டு, 'दाक्षायण यज्ञ द्वीतीयपूर्णमासेन यक्ष्ये' என்று சங்கற்பஞ் செய்துக் கொண்டு विद्युत् என்பது முதலிய மந்திரத்தால் கைகளைக் கழுவிக் கொண்டு புரசஞ் சாகையைக் கொண்டுவரல் வேண்டும்.

கொண்டுவந்து மாடுகளை ஓட்டுங்கால் 'आप्यायध्वमग्नियेन्द्रायदेवभागम्' என்று ஊகஞ் செய்யவேண்டும். பிறகு தருப்பைகளைக் கொண்டுவரல் வேண்டும். பிறகு வேதத்தை செய்து கொண்டு, சாகையிலிருந்து உபவேஷத்தை (தணல் தள்ளுந்தடியை) வெட்டி எடுத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு பவித்திரம் செய்து சாகையில் கட்டிவிட்டு, சாகையை மேலேவைத்தல் வேண்டும். பிறகு, அக்கினிகளின்மேல் இருக்கும் தூசுகளைத் துடைத்துவிடுவது முதல் பால் கறக்கும் பாத்திரத்திற்கு சாணியைப் பூசுவதுவரை செய்துவிட்டு, இரவில் கஞ்சியால் அக்கினி ஹோத்திரஞ் செய்த பிறகு பால்கறந்து தயிர் செய்து வைத்தல் வேண்டும். பால்கறக்கும்போது 'बहुदुग्धि इन्द्रायदेवेभ्यः' என்று ஊகஞ் செய்தல் வேண்டும். பிறகு பரிஸ்தரணம் போடல் வேண்டும்.

மறுதினம் அதாவது பிரதமைதினம் காலையில் கை கழுவிக்கொள்வது முதல் அக்னீஷோமீய புரோடாசமன்றி பௌர்ணமாசை இஷ்டியைப்போல் ஆஜ்யபாகம் வரை செய்தல் வேண்டும். பிறகு, ஆக்னேய புரோடாசத்தை ஹோமஞ் செய்ததும் தயிரை உபாம்சு (மெல்லக் கூறி) ஹோமஞ் செய்ய வேண்டும். பிறகு, வேள்வித் தலைவன் 'दधिघरसि' என்பது முதலியதால் தன்னை வாழ்த்திக் கொள்ளல் வேண்டும். பிறகு, பார்வண ஹோமம் முதலிய இஷ்டியை முடித்தல் வேண்டும். இதில் எஜமானனுக்குப் பாகங் கொடுக்கும் போது தயிரை நிரம்பக் கொடுத்தல் வேண்டும், அதை எஜமானன் பதினைந்து தினங்கள்வரை அருந்தல் வேண்டும்.

(இஷ்டிகள்)

பிறகு மேல்வரும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி தினம் காலையில் அக்கினி ஹோத்திரம் முடிந்ததும் 'दाक्षायण यज्ञ प्रथमामावास्ययायक्ष्ये' என்று சங்கற்பஞ் செய்து கொண்டு, அன்வாதானஞ் செய்து, இரவில் பரிஸ்தரணம் போடுவது வரை செய்து விடல்வேண்டும். மறுதினங் காலை அதாவது அமாவாசை தினம் காலை கைகழுவுவது முதலியவைகளைச் செய்யத் தொடங்கி அக்கினிக்கு 8-கபாலங்களை வைத்துப் புரோடாசமும், இந்திராக்கினிகளுக்கு பதினோரு கபாலங்களை வைத்து ஒரு புரோடாசமுஞ் செய்து அமாவாசை இஷ்டியைப் போல் இஷ்டியை முடித்தல் வேண்டும்.

பிறகு, 'दाक्षायण यज्ञ द्वितीयामावास्ययायक्ष्ये' என்று சங்கற்பஞ் செய்து கொண்டு சாகையைக் கொண்டுவரல் வேண்டும். கொண்டு வந்து பாடுகளை ஓட்டுங்கால் 'आप्यायध्वमघ्नियामित्रावरुणाभ्यां देवभागम्' என்று ஊகஞ் செய்து கொள்ளல்வேண்டும்.

• பிறகு கருப்பையை அறுத்துக்கொண்டு வருவதுமுதல், பால் கறக்கும் பாத்திரத்திற் சாணிபூசுவதுவரை செய்துவிட்டு இரவில் கஞ்சியால் அக்கினி ஹோத்திரஞ் செய்யவேண்டும். பிறகு, பாலைக்கறந்து காச்சி தயிராக்குவதன்பொருட்டு உறை போட்டுவைத்தல் வேண்டும். பால் கறக்கும்போது 'बहुदुग्धिमित्रावरुणाभ्यां देवेभ्यः' என்று ஊகஞ்செய்து கறத்தல் வேண்டும்.

பிறகு பரிஸ்தரணம் போட்டுவிடல் வேண்டும். மறுதினங்காலை, அதாவது பிரதமைதினங்காலை கைகழுவுவது முதலிய கர்மங்களைத் தொடங்கி, அக்கினிக்கு எட்டுக்கபாலங்களை வைத்த பிறகு பாலைக்கறத்தல் வேண்டும். கறந்து காய்ச்சி, அதில் இரவில் உறைபோட்டு வைத்திருக்கும் தயிரை அதில் சேர்த்துவிடல்வேண்டும். பிறகு, அதை வடிக்கட்டி கட்டியாக வருவதை (ஆமிக்ஷையை) திரட்டி எடுத்துவைத்துக் கொள்ளல்வேண்டும். தண்ணீரை (வாஜினத்தை)யும் எடுத்து வைத்தல் வேண்டும். பிறகு, உத்வாசனம் முதல் அக்கினி புரோடாசத்தை ஹோமஞ் செய்துவிட்டு ஆமிக்ஷையை ஹோமஞ்செய்தல் வேண்டும்.

பிறகு பார்வண ஹோமம் முதல் சம்ஸ்ராவ ஹோமம்வரை செய்தல்வேண்டும். பிறகு, வாஜினத் (மறித்த ஜலத்)தை வைத்திருக்கும் பாத்திரத்தை எடுத்துவேதியில் வைத்துக்கொண்டு, [illegible] எடுத்து ஹோமஞ் செய்தல்வேண்டும். பிறகு பத்னீசம்யாஜம் முதல் அமாவாசை இஷ்டியைப்போல் இஷ்டியைச் செய்து முடித்தல் வேண்டும்.

தாக்ஷாயணயக்ஞப் பிரயோகம்
முடிந்தது.

ஐந்தாவது அநுவாகம்
முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

ஆறாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் ஏழு பதங்களைக் கொண்டது.

தரிசபூரணமாதங்கட்கு சோம்யாகத்துடன் முன்பின்னாகுந்தன்மையை விதிக்கும் பிராமணங்கள்.

एष वै देवरथो यद्दर्शपूर्णमासौ यो दर्शपूर्णमासाविष्ट्वा सोमेन यजते रथस्पष्ट एवावसाने वरे देवानामव स्यत्येतानि वा अङ्गापरूꣳषि संवत्सरस्य यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजतेऽङ्गापरूꣳष्येव संवत्सरस्य प्रति दधात्येते वै संवत्सरस्यचक्षुषी यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते ताभ्यामेव सुवर्गं लोकमनु पश्यति ॥ १ ॥ एषा वै देवानां विक्रान्तिर्यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते देवानामेव विक्रान्तिमनु वि क्रमत एष वै देवयानः पन्था यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते य एव देवयानः पन्थास्तꣳ समारोहत्येतौ वै देवानाꣳ हरी यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते यावेव देवानाꣳ हरी ताभ्याम् ॥ २ ॥ एवैभ्यो हव्यं वहत्येतद्वै देवानामास्यं यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते साक्षादेव देवानामास्ये जुहोत्येष वै हविर्धानी यो दर्शपूर्णमासयाजी सायंप्रातरग्निहोत्रं जुहोति यजते

दर्शपूर्णमासावहरहर्हविर्धानिनाꣳसुतो य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते हविर्धान्यसीति सर्वमेवास्य बर्हिष्यं दत्तं भवति देवा वा अहः ॥ ३ ॥ यज्ञियं नाविन्दन्ते दर्शपूर्णमासावपुनन्तौ वा एतौ पूतौ मेध्यौ यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते पूतावेवैनौ मेध्यौ यजते नामावास्यायां च पौर्णमास्यां च स्त्रियमुपेयाद्यदुपेयान्निरिन्द्रियस्स्यात्सोमस्य वै राज्ञोऽर्धमासस्य रात्रयः पत्नय आसन्तासाममावास्यां च पौर्णमासीं च नोपैत् ॥ ४ ॥ ते एनमभि समनह्येतां तं यक्ष्म आर्छद्राजानं यक्ष्म आरदिति तद्राजयक्ष्मस्य जन्म यत्पापीयानभवत्तत्पापयक्ष्मस्य यज्जायाभ्यामविन्दत्तज्जायेन्यस्य य एवमेतेषां यक्ष्माणां जन्म वेद नैनमेते यक्ष्मा विन्दन्ति स एते एव नमस्यन्नुपाधावत्ते अब्रूतां वरं वृणावहा आवं देवानां भागधे असाव ॥ ५ ॥ आवदधि देवा इज्यान्ता इति तस्मात्सदृशीनाꣳ रात्रीणाममावास्यायां च पौर्णमास्यां च देवा इज्यन्त एते हि देवानां भागधे भागधा अस्मै मनुष्या भवन्ति य एवं वेद भूतानि क्षुधमघ्नन्त्सद्यो मनुष्या अर्धमासे देवा मासि पितरस्संवत्सरे वनस्पतयस्तस्मादहरहर्मनुष्या अशनमिच्छन्तेऽर्धमासे देवा इज्यन्ते मासि पितृभ्यः क्रियते संवत्सरे वनस्पतयः फलं गृह्णन्ति य एवं वेद हन्ति क्षुधं भ्रातृव्यम् ॥ ६ ॥

இரதமாக் வர்ணித்தல்

பிராமணம் 1

एष वै देवरथो यद्दर्शपूर्णमासौ यो दर्शपूर्णमासाविष्ट्वा सोमेन यजते रथ-
स्पष्ट एवावसाने वरे देवानामव स्यति ।

என்பது

உரை

தரிசபூரணமாத யாகங்கள் எனப்படுவன தேவர்கட்கு இரதம் போன்றன. ஆதலின், தரிசபூரண யாகங்களை முன்னர்ச் செய்துவிட்டு பிறகு சோமயாகஞ் செய்தல் வேண்டும். செய்யில், பெரும் அநுகூலமாகும். இதனில் முள் முதலிய இடையூறுகளின்றிய பெரியவழியில் மனிதர்கள் வருத்தமின்றி நடப்பதுபோல், தரிசபூரணமாத யாகங்களால் வழி நன்கு சீர்திருத்தப் பெற்றுவிடத்து சோமயாகத்தால் நல்ல வேள்விசெய்த லமைதல்கூடும். தரிச பூரணமாத யாகங்களென்னும் இஷ்டியாகிய பிரகிருதி யாகங்களின் பிரயோகங்கள் கைவந்தபோது அவற்றின் விகிருதிகளும் சோமயாகத்தின் அங்கங்களுமான பிராணீய இஷ்டிகள் முதலியவற்றை அங்கங்களோடு இனிது செய்தல் கூடும். தரிசபூரணமாத யாகங்களைச் செய்யாவிடினே, சோமயாகப் பிரகரணத்தில் தீக்ஷணீய முதலியவற்றின் சொரூபமாத்திரம் கூறப்பட்டிருத்தலின் அதன் அங்கமாகிய பிரயாச முதலியவற்றை அநுட்டிக்கமுடியாது. ஆதலின், தரிசபூரணமாத யாகம் முதலில் அநுட்டிக்கத்தக்கதென்று பல்வகையுமாகப் புகழப்படுகின்றது என்பதாம்.

வருடத்தின் அங்கமாகவர்ணித்தல்

பிராமணம் 2

एतानि वा अङ्गपरूंष्षि संवत्सरस्य यद्दर्शपूर्णमासौय एवं विद्वान्दर्शपूर्ण-
मासौ यजतेऽङ्गपरूंष्ष्येव संवत्सरस्य प्रति दधाति ।

என்பது

உரை

ஒரு மனிதனுக்கு மணிக்கட்டுமுதலான சந்திகளென்னுங் கணுக்கள் இருக்கின்றனவே, அதைப்போல் பன்னிரண்டு தரிசயாகங்களும் (அமாவாசை) பௌர்ணமியாகங்களும் வருடத்திற்கு அங்கங்களாம். அவற்றையுணர்ந்து செய்யில் நன்கு தரிசபூரண மாதயாகங்கள் அநுட்டிக்கப்பெற்றதாகின்றன என்பதாம்.

கண்களாகப் புகழ்கின்றது

பிராமணம் 3

एते वै संवत्सरस्य चक्षुषी यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते ताभ्यामेव सुवर्गं लोकमनु पश्यति ।

என்பது

உரை.

தரிசபூரண மாதங்களிரண்டும் வருடத்திற்கு கண்களாகின்றன. ஆதலின், இந்த யாகங்களைச் செய்தவன், இவ்வேள்வியாகிய கண்களால் சுவர்க்க லோகத்தைப் பார்க்கின்றான் என்பதாம்.

பராக்கிரமமென்று புகழ்கின்றது

பிராமணம் 4.

एषा वै देवानां विक्रान्तिर्यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते देवानामेव विक्रान्तिमनु वि क्रमते ।

என்பது

உரை.

தரிசபூரணமாத யாகங்கள் தேவர்களின் பராக்கிரமமாம். எதனாலெனின்? எல்லா விருப்பங்களின் பொருட்டு தரிசபூரணமாதங்கள் செய்தல் கூடும் என்று கூறுதலின் என்க. போரில் வெற்றி கொள்வதற்கும் நிமித்தமாதலின் இது பராக்கிரமவடிவமாம். இதை யநுட்டிக்கில் தேவர்களைப் போன்று பராக்கிரமத்தை யடைதல்கூடும் என்பதாம்.

சுவர்க்கத்தின் வழியென்று புகழ்கின்றது

பிராமணம் 5.

एष वै देवयानः पन्था यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते य एव देवयानः पन्थास्तꣳ समारोहति ।

என்பது.

உரை

தரிசபூரணமாத யாகங்கள் சுவர்க்கத்திற்குச் செல்லும் தேவமார்க்கமாகின்றன. தரிசபூரணயாகங்களைச் செய்தவன் தேவமார்க்கமாக சுவர்க்கத்தில் ஏறுகின்றான் என்பதாம்.

குதிரையாகப் புகழ்தல்

பிராமணம் 6.

एतौ वै देवानाꣳ हरी यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते

यावेव देवानाꣳ हरी ताभ्यामेवैभ्यो हव्यं वहति ।

என்பது

உரை

தரிசபூரணமாதயாகங்கள் தேவர்கட்குக் குதிரைகளாம். இவற்றைச் செய்கின்றவன், தேவர்களின் பொருட்டு இவைகளால் புரோடாசமாகிய அவியைக்கொண்டு செல்கின்றான் என்பதாம்.

தேவர்கட்கு வாயாகப் புகழ்கின்றது

பிராமணம் 7

एतद्वै देवानामास्यं यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यज

साक्षादेव देवानामास्ये जुहोति ।

என்பது.

உரை

தரிசபூரணமாத யாகங்கள் தேவர்கட்கு வாயாக இருக்கின்றன. ஆதலின், தரிசபூரண யாகங்களைச் செய்தவன் நேரே தேவர்களுடைய வாயில் ஹோமஞ் செய்கின்றான் என்பதாம்.

சோமயாகத்திற்கு முன் பின் எனல்)

சோமயாகஞ் செய்யுந் தன்மையைத் தேடுவதெனப் புகழ்கின்றது

பிராமணம் 8

एष वै हविर्धानी यो दर्शपूर्णमासयाजी सायंप्रातरग्निहोत्रं जुहोति यजते दर्शपूर्णमासावहरहर्हविर्धानिनाꣳ सुतो य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते हविर्धान्यस्मीति सर्वमेवास्य बर्हिष्यं दत्तं भवति ।

என்பது.

உரை.

தரிசபூரணமாத யாகங்களைச் செய்தவன் சோமயாகி என்னுந்தன்மையை யடைகின்றான். எவ்வாறாலெனின்? ஆதானஞ் செய்தபிறகுதான் அக்கினி ஹோத்திரஞ் செய்யப்படுகின்றது நாடோறும் அக்கினி ஹோத்திரஞ் செய்து கொண்டே பருவத்தில் தரிசபூரணமாத யாகங்களைச் செய்கின்றான். அதைச் செய்ததால் சோமத்தை விரும்பும் தேவர்கட்கு நாடோறும் சோமரசம் பிழிந்ததுபோலாகின்றது. அதாவது தரிசபூரணமாத வேள்விசெய்யும்போதே தேவர்களுக்கு சோமரசம் பிழியவேண்டும் மென்பதில் விருப்புண்டாகி விடுகின்றது என்பதாம். எவ்வாறாலெனின்? அக்கினிஹோத்திர, தரிசபூரண யாகங்களைச் செய்யுங்கால் அதன்பின் செய்யப்படும் சோமயாகத்தையும் இவன் செய்வான் என்னும் உறுதிப்பாடு உண்டாகிவிடுகின்றமையா லென்க. இதனால், எவ்வேள்வித்தலைவன், வருங்காலத்திற் செய்யப்படும் சோமயாகப் பிரியனாய், "யான் சோமயாகியாகுவன், என்பதை யுணர்ந்து தரிசபூரணமாத யாகங்களைச் செய்கின்றானோ, அதற்குமேல், இவனுக்கு சோம யாகத்திற் கொடுக்கின்றவைகளனைத்துங் கொடுக்கப்பட்டதாகின்றன என்பதாம்.

தரிச பௌர்ணிமை என்னுங் காரணப் பெயர் கொண்டவிதி என்பதை

அறிவுறுத்துகின்றது

பிராமணம் 9

देवा वा अहर्यज्ञियं नाविन्दन्ते दर्शपूर्णमासावपुनन्तौ वा एतौ पूतौ मेध्यौ यद्दर्शपूर्णमासौ य एवं विद्वान्दर्शपूर्णमासौ यजते पूतावेवैनौ मेध्यौ यजते ।

என்பது

உரை.

அவர்கள் யக்ஞஞ் செய்வதற்குரிய ஒருதினத்தை நோக்க ஒன்றும் பொருத்தமாய்க் கிடைக்கவில்லை. பிறகு, ஆராய்ந்து, சூரியமாத்திரம் தரிசனமாகும் தரிசம் என்னும் அமாவாசைத் திதியையும், சந்திரன் பூரணமாய்க் காணப்படும் பூரணிமை யென்னுந் திதியையும் கருமம் இனிது முடிவுறுங் குறியைக் காட்டும் நல்ல திதிகளாக உணர்ந்து கொண்டார்கள். ஆதலின், இப்பெயர்கள் கருமங்களைப் பற்றினவைகளன்று, மற்றோ, திதியைப்பற்றினவைகள். ஆதலின், இவ்விரண்டு திதிகளிலும் யாகங்கள் செய்தல் வேண்டுமென்பதாம்.

ஒருவகைப் புருடார்த்த நியமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 10.

नामावास्यायां च पौर्णमास्यां च स्त्रियमुपेयाद्यदुपेयान्निरिन्द्रियस्स्यात् ।

என்பது.

உரை.

அமாவாசையிலும் பௌர்ணமியிலும் மாதரைப் புணர்தல் கூடாது புணரில் இந்திரிய மின்றியதாய்விடும் என்பதாம்.

முற்கூறிய தரிசபூரணமாதங்கள் எக்ஞத்திற்கு உரியவைகளென்றுணர்த்துவதற்கு ஒரு கதையை விரித்துக் கூறுகின்றது.

பிராமணம் 11

सोमस्य वै राज्ञोऽर्धमासस्य रात्रयः पत्नय आसन्तासाममावास्यां च पौर्णमासीं च नोपैत्ते एनमभि समनह्येतां तं यक्ष्म आर्छद्राजानं यक्ष्म आरदिति तद्राजयक्ष्मस्य जन्म यत्पापीयानभवत्तत्पापयक्ष्मस्य यज्जायाभ्यामविन्दत्तज्जायेन्यस्य य एवमेतेषां यक्ष्माणां जन्म वेदनैनमेते यक्ष्मा विन्दन्ति स एते एव नमस्यन्नुपाधावत्ते अब्रूतां वरं वृणावहा आवं देवानां भागधे असावाऽऽवदधि देवा इज्यान्ता इति तस्मात्सदृशीनाꣳरात्रीणाममावास्यायां च पौर्णमास्यां च देवा इज्यन्त एते हि देवानां भागधे भागधा अस्मै मनुष्या भवन्ति य एवं वेद ।

என்பது

சோமயாகத்திற்கு முன் பின் எனல்)

உரை

சோமராசனுக்கு சுக்லபக்ஷம் கிருஷ்ண பக்ஷம் என்னும் இரண்டின் இரவுகள் பத்தினிகள்; அவர்களுள் அமாவாசை பௌர்ணமி இரவுகளிரண்டையுமே அவன் பிரியத்துடன் அநுபவித்துக்கொண்டு வந்தனன். அதனால் அவன் க்ஷயரோகத்தை அடைந்தனன். ஏனைய கதையோ, "பிரசாபதிக்கு முப்பத்து மூன்று பெண்களிருந்தனர்" என்னுமிடத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாற்றால், ராசரோய் நீங்கும் பொருட்டு அமாவாசையும் பௌர்ணமியும் நாங்கள் தேவர்களுடைய அவிர்ப்பாகங்களை ஏற்றுக் கொள்ளுகின்றவர்களாவோமாக, என்னும் வரம் பெற்றுக்கொண்டனர். இவ்வாறுணர்ந்தவன் தரிசபூரணயாகங்களின் பாகங்களை ஏற்றுக்கொண்டு அவியளிக்கின்றான் என்பதாம்.

மக்கள் முதலானோர்கட்கும் பொதுவாதலால் மீண்டும் அதைப்புகழ்கின்றது.

பிராமணம் 12

भूतानि क्षुधमघ्नन्त्सद्यो मनुष्या अर्धमासे देवाःमासि पितरस्संवत्सरे वनस्पतयस्तस्मादहरहर्मनुष्या अशनमिच्छन्तेऽर्धमासे देवा इज्यन्ते मासिपितृभ्यः क्रियते संवत्सरे वनस्पतयः फलं गृह्णन्ति य एवं वेद हन्ति क्षुधं भ्रातृव्यम् ।

என்பது

உரை

மனிதர் முதலான உயிர்கள் நாடோறும் பசியைக் கொல்லுகின்றனர் பாதிமாதத்தில் தேவர்கள் பசியைக் கொல்கின்றனர். பிதிர்க்கள் ஒருமாதத்தில் கொல்கின்றனர். கொடி செடிகள் ஒரு வருடத்தில் பசியைக் கொல்லுகின்றன. ஈண்டுக் கொடி செடிகளின் பழங்களைக் கொள்ளல் பசிநீக்குவதன் குறியாம். இவ்வாறுணர்ந்து செய்கின்றவன் பசியைக் கொல்லும் உணவுப் பொருளையடைகின்றான் என்பது.

ஈண்டு, தரிசபூரண மாதங்களில் தேவர்கட்கு அவியளித்தலுஞ் சிறப்புடையதாமென்பது குறிப்பிக்கப்பட்டது.

ஆறுவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிகட்குமேல் பத்துப் பதங்களைக் கொண்டது.

ஹோதா (இருக்கோதுவோன்) ஓதவேண்டிய வகைபற்றி சாமிதேனி (சமித்துக்களை) வைக்கும் மந்திரங்கட்கு உரை கூறுகின்ற பிராமணங்கள்

देवा वै नर्चि न यजुष्यश्रयन्त ते सामन्नेवाश्रयन्त हिं करोति सामैवाकर्हिं करोति यत्रैव देवा अश्रयन्त तत एवैनान्प्र युङ्क्ते हिं करोति वाच एवैष योगो हिं करोति प्रजा एव तद्यजमानस्सृजते त्रिः प्रथमामन्वाह त्रिरुत्तमां यज्ञस्यैव तद्बसम् ॥ १ ॥ नह्यत्यप्रस्रꣳसाय संततमन्वाह प्राणानामन्नाद्यस्य संतत्या अथो रक्षसामपहत्यै राथंतरीं प्रथमामन्वाह राथंतरो वा अयं लोक इममेव लोकमभि जयति त्रिर्विं गृह्णाति त्रय इमे लोका इमानेव लोकानभि जयति बार्हतीमुत्तमामन्वाह बार्हतो वा असौ लोकोऽमुमेव लोकमभि जयति प्र वः ॥ २ ॥ वाजा इत्यनिरुक्तां प्राजापत्यामन्वाह यज्ञो वै प्रजापतिर्यज्ञमेव प्रजापतिमारभते प्र वो वाजा इत्यन्वाहान्नं वै वाजोऽन्नमेवाव रुन्धे प्र वो वाजा इत्यन्वाह तस्मात्प्राचीनꣳ रेतो धीयतेऽग्न आ याहि वीतय इत्याह तस्मात्प्रतीचीः प्रजा जायन्ते प्र वो वाजाः ॥ ३ ॥ इत्यन्वाह मासा वै वाजा अर्धमासा अभिद्यवो देवा हविष्मन्तो गौर्घृताची यज्ञो देवाञ्जिगाति यजमानस्सुम्नयुरिदमसीद मसीत्येव यज्ञस्य प्रियं

धामावरुन्धे यं कामयेत सर्वमायुरियादिति प्र वो वाजा इति तस्यानूच्याग्न आ याहि वीतय इति संततमुत्तरमर्धर्चमा लभेत ॥ ४ ॥ प्राणेनैवास्यापानं दाधार सर्वमायुरेति यो वा अरत्निꣳ सामिधेनीनां वेदारत्नावेव भ्रातृव्यं कुरुतेऽर्धर्चौ सं दधात्येष वा अरत्निस्सामिधेनीनां य एवं वेदारत्नावेव भ्रातृव्यं कुरुत ऋषेर्ऋषेर्वा एता निर्मिता यत्सामिधेन्यस्ता यदसंयुक्तास्स्युः प्रजया पशुभिर्यजमानस्य वि तिष्ठेरन्नर्धर्चौ सं दधाति सं युनक्त्येवैनास्ता अस्मै संयुक्ता अवरुद्धास्सर्वामाशिषं दुहे ॥ ५ ॥

கண்டுக் கூறிப் போந்த அநுவாகங்கள் ஆறினும் அத்துவரிய (வேட்போன்) செய்யும் செயல்வகை கூறப்பட்டது. இனி ஏழாவது எட்டாவது அநுவாகங்களால் ஹோதா என்பவன் ஓதவேண்டிய சாமிதேனி மந்திரங்கட்கு உரை கூறப்படுகின்றது. முதலில் ஹோதா, 'சத்யம் பிரபத்யே, என்பது முதலியமந்திரங்களை ஓதிக்கொண்டு சாத்வாலம் என்னும் மண்வெடுக்கும் குழியிலிருந்து காருகபத்தியத்திற்கு வடக்கில் கிழக்கு முகமாக 'நின்றுகொண்டு,'

தைத்திரீய பிராமணம் மூன்றாமஷ்டகம் ஐந்தாவது பிரபாடகம் இரண்டாவது அநுவாகமாகிய,

'प्रवो वाजाः' என்பது முதலிய பதினொரு மந்திரங்களையும் ஓதல் வேண்டும். இவ்வநுவாகங்களில் அம்மந்திரங்களை ஓதும் முறையும் அவற்றின் பொருளுங்கூறப்படுகின்றன.

சூத்திரகாரர் 'ஹிம்' என்று மும்முறை ஓதல் வேண்டுமென்று கூறியதை விதிக்கின்றது

பிராமணம் 1.

देवा वै नर्चिन यजुष्यश्रयन्त ते सामन्नेवाश्रयन्त हिं करोति सामैवाकर्हिं करोति यत्रैव देवा अश्रयन्त तत एवैनान्प्र युङ्क्ते हिं करोति वाच एवैष योगो हिं करोति प्रजा एव तद्यजमानस्सृजते ।

 என்பது

உரை.

தேவர்கள், இருக்கிலும் எசுரிலும் விருப்புற்றிலர். மற்றோ சாமப்பாடலில் மிகக் களிப்புறுகின்றனர். ஆதலின் 'ஹிம்' என்னல் வேண்டும். ஹிம் என்றதனால் சாமம்மறை பாடப்பெற்றதாகும். இது ஐந்து முறை, அல்லது மூம்முறை சாமமுதலில் ஹிம் என்பது இருக்கலெனெனக. தேவர்கள் களிப்படைந்த சாமத்தால் களிப்படைவிப்பதன் பொருட்டு. ஹோதா ஹிம் எனக் கூறுகின்றான். முதன் முறை ஹிம் என்பதால் சாமகீதம் பாடியதாயிற்று. இரண்டாம் முறை ஹிம் என்பதால் சாமத்திற்கு ஆதாரமாகிய இருக்கு வடிவ வாக்குக் கிடைத்தது. மூன்றும் முறை ஹிம் என்பதால் எசமானன் மக்களையுண்டாக்குகின்றவனுகின்றான் என்பதாம்.

சமித்துக்கள் பதினைந்து, மந்திரங்களோ, பதினொன்றுள்ளன. ஆதலின், முதல் மந்திரத்தையும் ஈற்றிலுள்ள மந்திரத்தையும் மும்முறை ஆவிருத்திசெய்யுமாறு விதிக்கின்றது.

பிராம்மணம் 2.

त्रिः प्रथमामन्वाह त्रिरुत्तमां यज्ञस्यैव तद्बर्सं नह्यत्यप्रस्रंसाय ।

என்பது

உரை.

சாமதேனி மந்திரங்கள் பதினொன்றனுள், "ப்ரவோவாஜா அபித்யவ:, என்பது முதலாவது மந்திரம், ஆசுஹோத துவஸ்யத" என்பது. அல்லது, "த்வம் வருணா உதமித்ர:" என்பது முடிவிலுள்ளது. இவ்விரண்டும், ஆடை நுனிகளை, அல்லது கம்பள நுனிகளைச் சேர்த்து முடிவதுபோல் சாமதேனி மந்திரங்களைக் கூட்டுவனவாம். இவ்விரண்டையும் ஆவிருத்தி செய்யில் சாமதேனி மந்திரம் கட்டுக்குலையாததாகின்றது என்பதாம்.

இடையின்றி ஓதும்முறையையே விதிக்கின்றது.

பிராமணம் 3.

संततमन्वाह प्राणानामन्नाद्यस्य संतत्या अथो रक्षसामपहत्यै ।

என்பது

உரை.

மூச்சையடக்கிக் கொண்டு முதல் மந்திரத்தின் பிற்பாதியுடன் இரண்டாம் மந்திரத்தின் முற்பாதியையும், இரண்டாம் மந்திரத்தின் பிற்பாதியுடன் மூன்றும் மந்திரத்தின் முற்பாதியையும், இவ்வாறே மற்றவைகளையும்

சமித்து மந்திரம்)

இடைவிடாது ஓதல் வேண்டும். இது, எசமானனுடைய பிராணன் இடையறாது இயங்குதற்கும், போக்கியப் பொருள்கள் இடையறாது கிடைத்தற் பொருட்டும் காரணமாகின்றது. மற்றும், மூச்சையடக்குவதால் இராக்கதர்கள் கேடுறுகின்றார்கள் என்பதாம்.

ஆவிருத்தி செய்யவேண்டுமென்று விதித்த முதல்மந்திரத்தின் வடிவம் இன்னதென்று விதிக்கின்றது

பிராமணம் 4.

राथंतरीं प्रथमामन्वाह राथंतरो वा अयं लोक इममेव लोकमभि जयति ।

என்பது.

உரை.

ஒரு சாகையில், 'ப்ரவோவாஜா:' என்னும் இருக்கு மந்திரத்தில் ரதந்தரமென்னுஞ் சாமப் பாடலின் கீதம் இருத்தலின், இது 'ராதந்தரீ' என்று கூறப்பட்டிருக்கின்றது. ரதந்தர சாமத்துடன் கூடிய கருமத்தால் தேடமுடியுமாதலின் பூவுலகம் ரதந்தர மெனப்பட்டது என்பதாம்.

சூத்திரகாரர், மூன்றவது சாமதேனி மந்திரத்தை மூன்றிடத்தில் நிறுத்தி ஓதல்வேண்டுமென்றதை விதிக்கின்றது

பிராமணம் 5

त्रिर्विं गृह्णाति त्रय इमे लोका इमानेव लोकानभि जयति ।

என்பது

உரை.

மூன்றாவதாகிய, 'तं त्वा समिद्भिः' என்பது முதலிய சாமதேனிமந்திரத்தின் முதலாவது பாதத்தை ஓதிவிட்டு ஒருமுறை சிறிது நிறுத்தல் வேண்டும். பிறகு பாதி மந்திரத்தை ஓதிவிட்டு இரண்டாம் முறை சிறிது நிறுத்தல் வேண்டும். பிறகு, பிற்பாதியுடன் நான்காவது மந்திரத்தின் முற்பாதியையுஞ் சேர்த்து ஓதிவிட்டு முடிவில் மூன்றாவது முறையுஞ் சிறிது நிறுத்தல் வேண்டும் என்பதாம்.

மும்முறை நிறுத்தி ஓதல்வேண்டுமென்ற இருக்கு மந்திரத்தின் சொரூபத்தை விதிக்கின்றது

பிராமணம் 6.

बार्हतीमुत्तमामन्वाह बार्हतो वा असौ लोकोऽमुमेव लोकमभि जयति ।

என்பது

உரை.

இம் மூன்றாவது இருக்கில், 'பிருகச் சோசாயவிஷ்டிய' என்னுஞ் சொல் இருத்தலின், 'பார்ஹதி' அதை உத்தமமாகக் கூறவேண்டுமென்று விதித்தலின் மூன்றாவது உலகமாகிய சுவர்க்கம் பார்ஹதமெனப்படுகின்றது. இம் மந்திரத்துடன் கூடிய கருமத்தால் அது தேடப்படுவதா மாதலின் சுவர்க்கலோகம் பார்ஹதமெனப்பட்டதென்பதாம்.

முதலாவது மந்திரத்தில் தேவதையை அறிவுறுத்துஞ்சோல் இன்மையைப் புகழ்கின்றது

பிராமணம் 7.

प्र वो वाजा इत्यनिरुक्तां प्राजापत्यामन्वाह यज्ञो वै प्रजापतिर्यज्ञमेव प्रजापतिमा रभते ।

என்பது

உரை

சிறப்பாக ஒரு தேவதையின் பெயரையும் இம்மந்திரத்திற் சொல்லப் படாமையின் 'அநிருக்தா' (இவ்வடிவினது எனப்படாதது) பிரசாபதி, படைப்பிற்கு முன்னர் ஒரு வடிவத்தையும் அடையாமையின் அநிருத்தன் எனப்படுகின்றான். ஆதலின், இம்மந்திரம் பிரசாபதியைத் தேவதையாகவுடையது. எக்ஞமும் பிரசாபதியால் படைக்கப்பட்டதால் பிரசாபதி வடிவுடையதாம். ஆதலின், இம்மந்திரம் முதலில் படிக்கப் பெற்றிருத்தலின் பிரசாபதிவடிவ எக்ஞர் தொடங்கப்பட்டது என்பதாம்.

இம்மந்திரத்திலுள்ள 'வாஜ, என்பதைப் புகழ்கின்றது

பிராமணம் 8.

प्र वो वाजा इत्यन्वाहान्नं वै वाजोऽन्नमेवाव रुन्धे ।

என்பது

உரை

இதில், வாஜ: என்பது அன்னமாம். இதைச் சொல்வதால் உணவுப் பொருள் உண்டாகின்றது என்பதாம்.

'ப்ர' என்பதைப் புகழ்கின்றது.

பிராமணம் 9.

प्र वो वाजा इत्यन्वाह तस्मात्प्राचीनꣳ रेतो धीयते ।

என்பது

உரை

'ப்ர' என்பதால் சோணிதத்தை வளர்க்கும் பெண் உடம்பிற் செல்கின்ற சுக்கிலத்தை கருப்பப்பையில் வைக்கின்றது என்பதாம்.

இம்மந்திரத்தின் ஈற்றிலுள்ள பாதத்து (அடியு) டன் மேல்வரும் மந்திரத்தின் முதலாவது பாதத்தை (அடியை) ச்சேர்த்து ஓதுதலைப் புகழ்கின்றது.

பிராமணம் 10

अग्न आ याहि वीतय इत्याह तस्मात्प्रतीचीः प्रजा जायन्ते ।

என்பது

உரை.

ஆயாஹி (வருவாயாக) என்று கூறியிருத்தலின் மேற்கு முகத்திற் கொப்பாகிய குழந்தை உண்டாகின்றது என்பதாம். மேற்குமுகம் = எதிர் முகம்.

ஈண்டு, முதல் மந்திரத்தின் ஈற்றடியில் கருப்பத்தில் சுக்கிலம் விழலும், இரண்டாம் மந்திரத்தின் முதலடியில் குழந்தை பிறத்தலும் கூறப்பட்டிருத்தலின் இவ்விரண்டு பாதங்களையும் ஒன்றாகவே ஓதல்வேண்டும் என்பதை யுணர்க.

மந்திரத்திலுள்ள சொற்களுக்குப் பொருள் கூறுகின்றது.

பிராமணம் 11

प्र वो वाजा इत्यन्वाह मासा वै वाजा अर्धमासा अभिद्यवो देवा हविष्मन्तो गौर्घृताची यज्ञो देवाञ्जिगाति यजमानस्सुम्नयुः ।

என்பது

உரை

'தேவர்களே! உங்களுடைய எசமானனும் வேள்விச் செயலாளர்களும் செயலைச் செய்கின்றார்கள். செல்லுந் தன்மையையுடைய மாதங்களும், பூர்வ பக்கமும், உத்தரபக்கமாக விளங்கும் பாதிமாதமும், அவிகளையருந்தும் தேவர்களும், யாகத்திற்குச் சாதனமாகிய நெய் கொடுக்கும் பசுவிற்கு அநுகூலமாய் செயல்களையுஞ் செய்வார்களாக. மற்றும், இந்த எக்ஞம் தேவர்களையடைவதாகுக. எசமானனுடைய சுகத்தையும் விரும்புவதாகுக என்பதாம்.

மந்திரத்தின் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம் 12

इदम्सीदमसीत्येव यज्ञस्य प्रियं धामाव रुन्धे ।

என்பது

உரை

சாமிதேனி மந்திரங்களால் வளர்க்கப்பெற்ற அக்கினியே! நீ, இருது மாதங்களின் வடிவாயிருக்கின்றாய். பாதிமாத வடிவாயிருக்கின்றாய். அதாவது தேவர்களின் வடிவாயிருக்கின்றாய் என்பது கருத்து. இதனால், எக்ஞத்தின் ஆகுதிக்கிடமாகிய அக்கினியின் சொரூபத்தைத் தேடிக்கொண்டவனாகின்றான் என்பதாம்.

இடையின்றி ஓதல் வேண்டுமென்பதை காமியமாகவும் விதிக்கின்றது.

பிராமணம் 13.

यं कामयेत सर्वमायुरियादिति प्र वो वाजा इति तस्यानूच्याग्न आ याहि वीतय इति संततमुत्तरमर्धर्चमा लभेत प्राणेनैवास्यापानं दाधार सर्व-मायुरेति ।

என்பது

உரை

ஹோதா,- எவ்வெசமானனைக் குறித்து, 'இவ்வெசமானன் பிருத்துவின்றி முழு ஆயுளையடைவானாக, என்று விரும்புகின்றானோ, அவ்வெசமானனுக்கு ஆயுள் நீடித்தற்பொருட்டு, முதல் மந்திரத்தின் ஈற்றிலுள்ள பாகத்தையும், இரண்டாம் மந்திரத்தின் முதற் பாதத்தையுஞ் சேர்த்து ஓதல் வேண்டும். இதனால், எசமானனுடைய பிராணவாயுவுடன் அபான வாயுவையும் மீண்டும் உள்ளே செல்லும்படி தாங்கிக் கொண்டவனாகின்றான். இதனால் முழு ஆயுளையுமடைகின்றான் என்பதாம்.

மீண்டும் இடையறாது ஓதுவதையே மற்றொரு வகையாற்புகழ்கின்றது.

பிராமணம் 14.

यो वा अरत्निं सामिधेनीनां वेदारत्नावेव भ्रातृव्यं कुरुतेऽर्धर्चौ सं दधात्येष वा अरत्निस्सामिधेनीनां य एवं वेदारत्नावेव भ्रातृव्यं कुरुते ।

என்பது.

உரை

ஒரு முழங்கையில் இடைவெளியிலாததுபோல் இரண்டு சாமிதேனி மந்திரங்கட்கிடையில் இடையீடு இல்லை. இது, முன் மந்திரத்து ஈற்றடியையும் பின் மந்திர முதலடியையுஞ் சேர்த்து ஓதுதலின் என்க. இத்தகைய இடையிலாத் தன்மையையுணர்ந்து அநுட்டிக்கும் ஹோதா (இருக்கோதுவோன்) எசமானனுடைய கை முழங்களுக்குள் பகைவனை அடைக்கிவைக்கின்றான், அதாவது நான்கு முழமுள்ள ஒருவன் ஒருமுழமுள்ள ஒரு குழந்தையை அடக்கிவைத்துக்கொள்வதுபோலென்க என்பதாம்.

மீண்டும், இடையறாது ஓதுவதை, விதிப்பதுடன் மாறுமேனின் கேடுஎன்றுதெரிவித்துப் புகழ்கின்றது.

பிராமணம் 15

ऋषेर्ऋषेर्वा एता निर्मिता यत्सामिधेन्यस्ता यदसंयुक्तास्स्युः प्रजया पशुभिर्यजमानस्य वितिष्ठेरन्नर्धर्चौ सं दधाति सं युनक्त्येवैनास्ता अस्मै संयुक्ता अवरुद्धास्सर्वामाशिषं दुह्रे ।

என்பது

உரை.

சட் புலப்படாதபொருள்களையுங் காணும் இருடிகள், ஈசுரனுடைய அநுகிரகத்தால் ஒவ்வொரு சாமிதேனி மந்திரத்தைக்கண்டுபிடித்து அம்மரபையும் உண்டாக்கினார்கள். வெவ்வேறு இருடிகளால் கண்டுபிடிக்கப் பெற்ற சாமிதேனிமந்திரங்கள் ஒன்றோடொன்று சேராதவைகளாயிருக்கின் விலக்கப்பட்டவைகளாய் குழந்தை பசு முதலிய சம்பத்தை யளிக்கமாட்டா. ஆதலின், பிற்பாதியை மேல்வரும் முற்பாதியுடனும், அதன் பிற்பாதியை அதற்குமேல் வரும் முற்பாதியுமாகச் சேர்த்து ஓதுதல் வேண்டும். இவ்வாறு சேர்த்து ஓதின் எல்லா ஆசிர்வாதங்களையுங் கொடுக்கின்றது என்பதாம்.

ஏழாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் இருபத்தொன்பது பதங்களைக் கொண்டது.

எஞ்சிய சாமிதேனி மந்திரங்கட்கு உரை கூறும் பிராமணங்கள்

अयज्ञो वा एष योऽसामाऽग्न आ याहि वीतय इत्याह रथंतरस्यै-
ष वर्णस्तं त्वा समिद्भिरङ्गिर इत्याह वामदेव्यस्यैष वर्णो बृहदग्ने
सुवीर्यमित्याह बृहत एष वर्णो यदेतं तृचमन्वाह यज्ञमेव तत्साम-
न्वन्तं करोत्यग्निरमुष्मिँल्लोक आसीदादित्योऽस्मिन्ताविमौ लोकाव-
शान्तौ ॥ १ ॥ आस्तां ते देवा अब्रुवन्नेतेमौ वि पर्यूहामेत्यग्न
आ याहि वीतय इत्यस्मिँल्लोकेऽग्निमदधुर्बृहदग्ने सुवीर्यमित्यमु-
ष्मिँल्लोक आदित्यं ततो वा इमौ लोकावशाम्यतां यदेवमन्वा-
हानयोर्लोकयोश्शान्त्यै शाम्यतोऽस्मा इमौ लोकौ य एवं वेद
पञ्चदश सामिधेनीरन्वाह पञ्चदश ॥ २ ॥ वा अर्धमासस्य रात्र-
योऽर्धमासशस्संवत्सर आप्यते तासां त्रीणि च शतानि षष्टिश्चाक्षरा-
णि तावतीस्संवत्सरस्य रात्रयोऽक्षरश एव संवत्सरमाप्नोति नृमेधश्च
परुच्छेपश्च ब्रह्मवाद्यमवदेतामस्मिन्दारावार्द्रेऽग्निं जनयाव यतरो नौ
ब्रह्मीयानिति नृमेधोऽभ्यवदत्स धूममजनयत्परुच्छेपोऽभ्यवदत्सो-
ऽग्निमजनयदृष इत्यब्रवीत् ॥ ३ ॥ यत्समावद्विद्व कथा त्वमग्निमजी-

जनो नाहमिति सामिधेनीनामेवाहं वर्णं वेदेत्यब्रवीद्यद्घृतवत्पद-
मनूच्यते स आसां वर्णस्तं त्वा समिद्भिरङ्गिर इत्याह सामिधे-
नीष्वेव तज्ज्योतिर्जनयति स्त्रियस्तेन यद्दच स्त्रियस्तेन यद्गायत्रियः
स्त्रियस्तेन यत्सामिधेन्यो वृषण्वतीमन्वाह ॥ ४ ॥ तेन पुंस्वतीस्तेन
सेन्द्रास्तेन मिथुना अग्निर्देवानां दूत आसीदुशना काव्योऽसुराणां तौ
प्रजापतिं प्रश्नमैतां स प्रजापतिरग्निं दूतं वृणीमह इत्यभि पर्यावर्तत
ततो देवा अभवन्पराऽसुरा यस्यैवं विदुषोऽग्निं दूतं वृणीमह
इत्यन्वाह भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवत्यध्वरवतीमन्वाह
भ्रातृव्यमेवैतया ॥ ५ ॥ ध्वरति शोचिष्केशस्तमीमह इत्याह-
पवित्रमेवैतद्यजमानमेवैतया पनयति समिद्धो अग्न आहु-
तेत्याह परिधिमेवैतं परि दधात्यस्कन्दाय यदतं ऊर्ध्वमभ्या-
दध्याद्यथा बहिःपरिधि स्कन्दति तादृगेव तत्त्रयो वा
अग्नयो हव्यवाहनो देवानां कव्यवाहनः पितृणांसहरक्षा
असुराणां त एतर्हि शंसन्ते मां वरिष्यते माम् ॥ ६ ॥ इति
वृणीध्वं हव्यवाहनमित्याह य एव देवानां तं वृणीत आर्षेयं
वृणीते बन्धोरेव नैत्यथो संतत्यै परस्तादर्वाचो वृणीते तस्मात्पर-
स्तादर्वाञ्चो मनुष्यान्पितरोऽनु प्र पिपते ॥ ७ ॥

பதினைந்து சாமிதேனி மந்திரங்களுக்குள், இரண்டாவது மந்திர முதல் நான்காவது மந்திரம் வரை மூன்று மந்திரங்களையும் புகழ்கின்றது.

பிராமணம் 1.

अयज्ञो वा एष योऽसामाग्न आ याहि वीतय इत्याह रथंतरस्यैष वर्णस्तं त्वा समिद्भिरङ्गिर इत्याह वामदेव्यस्यैष वर्णो बृहदग्ने सुवीर्यमित्याह बृहत एष वर्णो यदेतं तृचमन्वाह यज्ञमेव तत्सामन्वन्तं करोति ।

என்பது

உரை.

இந்த, தரிசபூரணமாத யாகத்திற்கு சாமப்பாடல் இன்மையின் இது எக்ஞமன்று. ஆதலின், "அக்ன ஆயாஹிவீதயே" என்னுமந்திரம் ரதந்தரம் என்னும் சாமமாகின்றது. "தம்த்வா சமித்பி: அங்கிர" என்னுமந்திரம் வாமதேவ்ய சாமப்பாடலாகின்றது. 'பிருஹதக்னே சுவீர்யம்" என்பது பிருஹத் என்னுஞ் சாமமாகின்றது. ஆகையால் இத்தரிசபூரணமாத யாகமும் சாமப்பாடல்களையுடையதாகின்றது என்பதாம்.

ஈண்டு, தரிசபூரண யாகங்கட்குச் சாமப்பாடல்கள் இல்லை. ஆதலின் அவை முக்கியமானயாகங்களாகா. ஆகையால், மூன்று இருக்குக்களும் மூன்று சாமங்களாக ஓதப்படுகின்றன. அங்ஙனமாயினும், இவைகள் ரதந்தர முதலிய சாமங்கட்குக் காரணங்களல்லவெனினும் ஆதியாதலின் விரோதமில்லை இவைகள் எவ்வாறு கீதங்களாகின்றன? என்பதை வேறு வேதசாகைகளிற் கண்டு கொள்க.

மீண்டும் இம் மூன்றுமந்திரங்களுள் முதலையும் முடிவையும் புகழ்கின்றது.

பிராமணம் 2.

अग्निरमुष्मिँल्लोक आसीदादित्योऽस्मिन्ताविमौ लोकावशान्तावास्तां ते देवा अब्रुवन्नेतेमौ वि पर्यूहामेत्यग्न आ याहि वीतय इत्यस्मिँल्लोकेऽग्निमदधुर्बृहदग्ने सुवीर्यमित्यमुष्मिँल्लोक आदित्यं ततो वा इमौ लोकावशाम्यतां यदेवमन्वाहानयोर्लोकयोरशान्त्यै शाम्यतोऽस्मा इमौ लोकौ य एवं वेद ।

என்பது

எஞ்சிய சமித்து மந்திரம்)

உரை.

ஆதியில், அக்கினி சுவர்க்கலோகத்திலிருந்தது, சூரியன் பூலோகத்திலிருந்தனன். அப்போது, சுவர்க்க லோகத்தில் யாகஞ்செய்தல் இல்லை. ஆனால் பிரகாசத்தின் பொருட்டு இரவி மாத்திரம் வேண்டப்படும் அது அங்கு இல்லை ஆதலின் அங்குங் கலக்கம். பூலோகத்தில் யாகஞ்செய்வதற்கு அக்கினியின் மையில் இங்குங்கலக்கம். அதைக் கண்டதேவர்கள் மாற்றிவைக்க வேண்டுமென்று கருதி, "அக்ன ஆயாஹிவீதயே" என்னும் மந்திரத்தில் "வேள்வியில்-அமருவாயாக" என்னுங் குறியிருத்தலின் சுவர்க்கத்திலிருந்த அக்கினியை பூவுலகில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். "பிருஹத்க்னேசுவீர்யம்" என்பதில் "திவாசவி" என்னுங் குறியிருத்தலின் அது மூன்றாவதுமந்திரமாதலாலும் மூன்றாவது உலகாகிய சுவர்க்கத்தில் இரவியைக்கொண்டுபோய் நிறுவினார்கள். இவ்விரண்டையும் மாற்றியதால் தனது தனது காரியங் கைகூடிற்று. ஆகையால், இம்முறையாய் ஓதின் இரண்டுலகமும் சாந்தமாகும் இதை உணர்ந்தவனுக்கும் இரண்டுலக சாந்தியுமுண்டாகும் என்பதாம்.

மந்திரத்தின் தொகையை விதிக்கின்றது.

பிராமணம் 3

पञ्चदश सामिधेनीरन्वाह पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्धमासशः संवत्सर आप्यते ।

என்பது.

உரை

சாமிதேனி மந்திரங்கள் பதினைந்து எனப்படுகின்றன. இதில், பன்னிரண்டு மந்திரங்கள் உள்ளன. அவற்றுள்ளும் ஒன்று விகற்பமந்திரம். அதுவும், முதல்மந்திரத்தையும், ஈற்றிலுள்ள மந்திரத்தையும் மறித்தும் மறித்தும் ஓதுவதால் பதினைந்தாகின்றன. இதைப்போல் ஒரு பக்ஷத்திற்கு பதினைந்து இரவுகளிருக்கின்றன. ஆதலின் இரவுகளென்னும் அத்தகைய பாதி மாதங்கள் இருபத்துநான் கால் பெருக்கில் ஒருவருடமு மாகின்றன என்பதாம்.

மந்திரங்களிலுள்ள எழுத்துக்களின் எண்ணால் ஒருவருடம் என்பது பெறப்படுகின்றதென்று புகழ்கின்றது.

பிராமணம் 4

तासां त्रीणि च शतानि षष्टिश्चाक्षराणि तावतीस्संवत्सरस्य रात्रयोऽक्षरश एव संवत्सरमाप्नोति ।

என்பது

உரை

பதினைந்து சாமதேனி மந்திரங்களும் காயத்திரிச் சந்தங்களானதால் ஒவ்வொன்றும் இருபத்து நான்கு எழுத்துக்களையுடையன. அவைகள் ஒன்று சேரில் முந்நூற்றறுபது எழுத்துக்களாகின்றன. ஒருவருடத்திலிருக்கும் முந்நூற்றறுபது இராவுகள்தான் இதனால் சாமிதேனி மந்திரங்கள் வருடம் எனப்படுகின்றன என்பதாம். ஈண்டு வசிஷ்ட கோத்திரத்தார்கட்கு திருஷ்டுப் சந்தமானதால் எழுத்துக்கள் மிகுகின்றனவாயினும் ஏனைய கோத்திரத்தை நோக்கி இது அர்த்தவாதமாம் ஆதலின் மாறுபாடில்லை என்பதையு முணர்க.

சாமிதேனி மந்திரங்களுள், தம்த்வா சமித்பி: அங்கிரோ க்ருதேவவர்த்தயாமஸி ”
என்னும் மந்திரத்தின் விசேடத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 5

नृमेधश्च परुच्छेपश्च ब्रह्मवाद्यमवदेतामस्मिन्दारावार्द्रेऽग्निं जनयाव यतरो नौ ब्रह्मीयानिति नृमेधोऽभ्यवदत्स धूममजनयत्परुच्छेपोऽभ्यवदत्सोऽग्निमजनयदृष इत्यब्रवीद्यत्समावद्विद्व कथा त्वमग्निमजीजनो नाहमिति सामिधेनीनामेवाहं वर्णं वेदेत्यब्रवीद्यद्घृतवत्पदमनूच्यते स आसां वर्णस्तं त्वा समिद्भिरङ्गिर इत्याह सामिधेनीष्वेव तज्ज्योतिर्जनयति ।

என்பது.

உரை.

நிருமேதன், பருச்சேபன் என்னுமிருவரும் சாமிதேனி மந்திரங்களில் அவர்களுள் வல்லுநர் நம்மிருவருள் யார்! என்று உறுதியாய்த் தெரிந்து கொள்வதன் பொருட்டு அம்மந்திரங்களை ஓதி ஈரவிறகைக் கடைந்தனர். நிருமேதன் கடைந்ததில் புகையுண்டாயிற்றேயொழிய தீயுண்டாகவில்லை. பருச்சேபன் மந்திரங்களை ஓதிக்கடைந்து தீயை உண்டாக்கினன். அதைக் கண்ட நிருமேதன் பருச்சேபனை நோக்கி, இருடியே! நம்மிருவரும் சாமிதேனி மந்திரத்தை ஒரேதன்மையாகக் கற்றிருக்கின்றோம். அப்படியிருந்தும் நீ அம் மந்திரத்தை ஓதி தீக்கடையும்போது தீயுண்டாயிற்று அவ்வாறே கடைந்தும் யான் செய்ததில் தீயெழவில்லை இதற்கென்ன காரணம்? என்று வினவினன் அதற்கு, நாமிருவரும் சாமிதேனி மந்திரத்தை இனிதுணர்ந்துள்ளோம். ஆனால் அவற்றிலுள்ள எழுத்துக்களின் இரகசியத்தையும் தேசசையும் யான் உணர்ந்துள்ளேன். நீ, உணரவில்லை ஆதலின் என்றனன், கிருதம் என்னுஞ்

(எஞ்சிய சமித்து மந்திரம்)

சொல்லைக் கொண்ட பாதத்திலுள்ள எழுத்துக்கள் சாரபூதமாகிய தேசசு உடையவைகள். அச்சொல்லையுடைய 'தம்த்வா சமித்பி:, என்னும் மந்திரத்தை ஓதுக. அதில் ('घृतेनवर्धयामसि') கிருதேன வர்த்தயாமஸி என்னுஞ் சொல் இருக்கின்றது. சாமிதேனிகளுள் இதைஓதுவதால் சோதியை உண்டாக்குகின்றது. இதை ஓதியும் இதன் பெருமையை நீ உணர்வாயாக. நான் உணர்ந்துள்ளேன் ஆதலின் அக்கினியை உண்டாக்கினேன் என்பதாம்.

'விருஷணம் த்வாவயம்' என்னும் இருக்கு மந்திரத்தைச் சிறப்பாக எடுத்துப் புகழ்கின்றது.

பிராமணம் 6

त्रियस्तेन यद्दच. स्त्रियस्तेन यद्गायत्रियस्त्रियस्तेन यत्सामिधेन्यो वृषण्वतीमन्वाह तेन पुंस्वतीस्तेन सेन्द्रास्तेन मिथुनाः।

என்பது.

உரை.

இருக்கு, காயத்திரி, சாமதேனி என்னுஞ் சொற்களால் பெண்பாலின் தன்மையே பெறப்பட்டது. ஆதலின், ஆண்பாலின் தன்மையின் பொருட்டு 'வ்ருஷண் த்வா' என்னுஞ் சொல்லமைந்த மந்திரத்தை ஓதல் வேண்டும். அதனால், இந்திரிய முள்ள ஆண்பாலையுடையவர்கள் பெண்பால்கள் என்னுமிருவரின் புணர்ச்சி கை கூடுகின்றது. "ஈடேன்ய:" என்னுமிதும் 'வ்ருஷண;, என்னுஞ் சொல்லுடையதேயாம். ஏனெனின்? 'சமக்னிரித்யதே விருஷா" என்னுமுடிவில் கூறப்பட்டிருத்தலினென்க. 'வ்ருஷோ அக்கினி' என்னுமிதுவும் 'வ்ருஷ' என்னுஞ் சொல்லுடன் கூடியதாமாதலின் வ்ருஷணத்தையுடையதேயாம். அவ்விரண்டு மந்திரங்கட்கும் எடுத்துக் காட்டிய இம்முறையை அறிந்து கொள்க என்பதாம்.

'அக்னிம் தூதம் வ்ருணீமஹே' என்னுஞ் சிறப்பைப் புகழ்கின்றது.

பிராமணம் 7

अग्निर्देवानां दूत आसीदुशना काव्योऽसुराणां तौ प्रजापतिं प्रश्नमैतां स प्रजापतिरग्निं दूतं वृणीमह इत्यभि पर्यावर्तत ततो देवा अभवन्पराऽसुरा यस्यैवं विदुषोऽग्निं दूतं वृणीमह इत्यन्वाह भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति।

என்பது

உரை

தேவர்கட்குத் தூதுவன் அக்கினியாம், அசுரர்கட்கு கவியின் பிள்ளையான சுக்கிரனவன். இவ்விருவரும் பிரசாபதியையடைந்து எம்மிருவருக்குள் சந்தி, (சேர்ந்து வைத்தல்) விக்கிரஹம் (பிரித்து வைத்தல்) முதலிய காரியச் செயல்களில் தூதுத்தன்மை யாருக்கு உரியது? என்றுவினவினர். அப்போது, பிரசாபதி "அக்கினியைத் தூதனென்றழைக்கின்றேன்" என்று கூறிவிட்டு சுக்கிரனிலிருந்து திரும்பி அக்கினிக்கு நேராய் நின்றனன். இவ்வாறு னர்ந்தவன், இம்மந்திரத்தால் தனது வெற்றியையும் பகைவனை அடக்குந் தன்மையையும் அடைகின்றான் என்பதாம்.

'சமித்யமானோ அத்வரே' என்னும் இருக்கு மந்திரத்தைச் சிறப்பித்துப் புகழ்கின்றது.

பிராமணம் 8.

अध्वरवतीमन्वाह भ्रातृव्यमेवैतया ध्वरति ।

என்பது

உரை

அத்வரத்தையுடையவனாகின்றான் என்றது பகைவனை இதனால் கொல்கின்றான் என்பதாம்

அதேமந்திரத்தின் மூன்றாவது பாதத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 9

शोचिष्केशस्तमीमह इत्याह पवित्रमेवैतद्यजमानमेवैतया पवयति ।

என்பது

உரை.

நடுப்பாதத்தில், அக்னி: பாவக: ஈட்ய: என்பதில், பாவகம் என்னுஞ் சொல்லால் பவித்திரத்தன்மை வெளிப்படையாம். இதில், சோசி: என்பதால் சுசிக்குக்காரணமான கிரணக்கமொன்று கருதி பவித்திரம் என்று இவ்வாக்கியத்தைக்கூறுகின்றது. ஆதலின், இதனால் எசமானன் பவித்திரமாக்கப்படுகின்றான் என்பதாம்.

எஞ்சிய சமித்து மந்திரம்)

'சமித்த: அக்னி:' (அக்கினி வளர்க்கப்பட்டது) என்னும்
மந்திரத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 10

समिद्धो अग्न आहुतेत्याह परिधिमेवैतं परिदधात्यस्कन्दाय यदत ऊर्ध्व-
मभ्यादध्याद्यथा बहिःपरिधि स्कन्दति तादृगेव तत् ।

என்பது

உரை

அக்கினி வளர்க்கப்பட்டது என்றது, சென்ற காலத்தை அறிவுறுத்தலால் முடிவின்பொருட்டு அக்கினிக் கருகில் போடப்படும் விறகு பரிதி எனப்படும். ஆதலின் இம்மந்திரம் பரிதியால் முடிவு பெற்றுள்ளது. அப்பரிதியும் வைத்த சமித்துகளின் நாசமிலாமையின் பொருட்டாகின்றது. இம்மந்திரத்திற்கு முன்னர் சமித்துக்களை வைத்ததால் நெய் புரோடாசமுதலியவைகளைப் போல் ஆகுமெனத்தெரிந்து கொள்க.

ஈண்டு, 'ஆசுஹோத, என்பதை மும்முறை ஓதலால் மூன்று சமித்துக்களும், ஓங்காரத்தால் ஒன்றும் ஆக நான்கு சமித்துக்கள் காணப்படுகின்றன. அவைகளை இம்மந்திரத்தை ஓதுங்கால் வைத்தல் வேண்டும் என்பதை யூகித்துணர்க என்பதாம்.

சுற்றிலுள்ள இருக்கு மந்திரத்திலிருக்கின்ற 'ஹவ்யவாஹனம்' என்னும்
அக்கினியின் சிறப்பைப் புகழ்கின்றது.

பிராமணம். 11

त्रयो वा अग्नयो हव्यवाहनो देवानां कव्यवाहनः पितृणाꣳ सहरक्षा
असुराणां त एतर्ह्या शꣳसन्ते मां वरिष्यते मामिति वृणीध्वꣳ हव्यवा-
हनमित्याह य एव देवानां तं वृणीते ।

என்பது

உரை

அக்கினி, தேவர் முதலானோர்களின் சம்பந்தமாய் ஹவ்யவாஹனன், பிதிர்கட்கு கவ்யவாஹனன், சஹரக்ஷா அசுரர்கட்கு என்றிவ்வாறு மூவகைத்தாம் அவற்றுள் தனித்தனி ஒவ்வொன்றும் 'என்னையே அழைக்கின்றான், என்னையே அழைக்கின்றான் என்று விரும்புகின்றது. ஆதலின் தேவர்கள் ஹவ்யவாஹனன் (அவிசை யேற்றுச் செல்பவன்) என்று அழைக்கின்றார்கள் என்பதாம்.

ஆசுவலாயன தந்திரப்படி, இருடியின் பிரவரத்தை (குலத்தொடர்பை) க்கூறுகின்றது.

பிராமணம் 12.

आर्षेयं वृणीते बन्धोरेव नैत्यथो संतत्यै ।

என்பது

உரை.

ரிஷியின் அபத்யம் ஆர்ஷேயம் (இருடிபரம்பரை) அதாவது தனது கோத்திர ரிஷி எனப்படுகின்றது இது அக்கினியின் குலத்தொடர்பு என அழைக்கப்படுகின்றது. அக்கினியே! நீ மகானுயிருக்கின்றாய். இது பிராமண, பார்க என்பது போன்றது. பார்க்கவன், ச்யாவனன், ஆப்னவானன், ஔர்வன், சாமதக்னி என்னும் ஐவரும் பிருகு கோத்திரர்கள். இது ஆர்ஷேயப்பிரவரம் (இருடியின் குலத்தொடர்பு) இவ்வாறு அழைக்கப்பெற்றவன் தனது சுற்றத்தாரான பிருகு முதலானோர்களினின்றும் தாழ்மையடையான். மற்றும் இந்த ஆர்ஷேய அழைப்பு இவனுக்கு மகற்பேற்றையுண்டாக்குகின்றது என்பதாம்.

மற்றொரு வகையால் ரிஷிபரம்பரையின் அழைப்பைக் கூறுகின்றது.

பிராமணம் 13.

परस्तादर्वाचो वृणीते तस्मात्परस्तादर्वाञ्चो मनुष्यान्पितरोऽनु प्र पिपते ।

என்பது

உரை

நிகழ்காலத்திலிருக்கின்ற எசமானனை நோக்கி முன் உண்டாகும் கோத்திரப் பிரவர்த்தகன் அவன் முதற்கொண்டு அவனுடைய மகன் பரம்பரையிலிருந்து தாழ்ந்துள்ள நம்மனோரை அழைத்தல். முன் காட்டப்பட்டது. அதாவது, பிருகுரிஷியின், பிள்ளை ச்யவனர், அவருடைய பிள்ளை அப்னவானர், அவருடைய பிள்ளை ஔர்வர், அவருடைய பிள்ளை சமதக்னி அவருடைய மரபில் வந்தவன் எசமானன் என்பதாம். இனி கீழ்ப்பட்ட பரம்பரையாம். அதாவது ஹோதா, முன்னுண்டானோர் முதற்கொண்டு கீழ்ப்பட்டோரை அழைக்கின்றான் இது பற்றியே, உலகிலும், முன்முன் உண்டானோர்களான பிதிர்க்களை பின்பின் உண்டானோர்களான புத்திரர்கள் பரிபாலிக்கின்றார்கள் என்பதாம்,

எட்டாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாவது பிரபாடகம்
ஒன்பதாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் மூன்று பதங்களைக்கொண்டது.

பிரவர மந்திரம் முதலியவைகட்கு உரைகூறுகின்ற பிராமணங்கள்.

अग्ने महाꣳ असीत्याह महान्ह्येष यदग्निर्ब्राह्मणेत्याह ब्राह्मणो ह्येष भारतेत्याहैष हि देवेभ्यो हव्यं भरति देवेद्ध इत्याह देवा ह्येतमैन्धत मन्विद्ध इत्याह मनुर्ह्येतमुत्तरो देवेभ्य ऐन्धदृषिष्टुत इत्याहर्षयो ह्येतमस्तुवन्विप्रानुमदित इत्याह ॥ १ ॥ विप्रा ह्येते यच्छुश्रुवाꣳसः कविशस्त इत्याह कवयो ह्येते यच्छुश्रुवाꣳसो ब्रह्मसꣳशित इत्याह ब्रह्मसꣳशितो ह्येष घृताहवन इत्याह घृताहुतिर्ह्यस्य प्रियतमा प्रणीर्यज्ञानामित्याह प्रणीर्ह्येष यज्ञानाꣳ रथीरध्वराणामित्याहैष हि देवरथोऽतूर्तो होतेत्याह न ह्येतं कश्चन ॥ २ ॥ तरति तूर्णिर्हव्यवाडित्याह सर्वꣳ ह्येष तरत्यास्पात्रं जुहूर्देवानामित्याह जुहूर्ह्येष देवानां चमसो देवपान इत्याह चमसो ह्येष देवपानोऽराꣳ इवाग्ने नेमिर्देवाꣳस्त्वं परिभूरसीत्याह देवान्ह्येष परिभूर्यद्ब्रूयादा वह देवान्देवयते यजमानायेति भ्रातृव्यमस्मै ॥ ३ ॥ जनयेदा वह देवान्यजमानायेत्याह यजमानमेवैतेन वर्धयत्यग्निमग्न आ वहसोममा वहेत्याह देवता एव तद्यथापूर्वमुपह्वयत आ चाग्ने देवान्वह सुयजा च यजजातवेद इत्याहाग्निमेव तत्सꣳ श्यति सोऽस्य

सशिंतो देवेभ्यो हव्यं वहत्यग्निर्होता ॥ ४ ॥

इत्याहाग्निर्वै देवानाꣳ होता य एव देवानाꣳ होता तं

वृणीते स्मो वयमित्याहाऽऽत्मानमेव सत्त्वं गमयति साधु ते

यजमान देवतेत्याहाऽऽशिषमेवैतामा शास्ते यद्ब्रूयाद्योऽग्निꣳ-

होतारमवृथा इत्यग्निनोभयतो यजमानं परि गृह्णीयात्प्रमायुकः

स्याद्यजमानदेवत्या वै जुहूर्भ्रातृव्यदेवत्योपभृत् ॥ ५ ॥ यद्ब्रूे इव

ब्रूयाद्भ्रातृव्यमस्मै जनयेद्घृतवतीमध्वर्यो स्रुचमाऽस्यस्वेत्याह

यजमानमेवैतेन वर्धयति देवायुवमित्याह देवान्ह्येषाऽवति

विश्ववारामित्याह विश्वꣳ ह्येषाऽवतीडामहै देवाꣳ ईडेन्यान्नमस्याम

नमस्यान्यजाम यज्ञियानित्याह मनुष्या वा ईडेन्याः पितरो

नमस्या देवा यज्ञिया देवता एव तद्यथाभागं यजति ॥ ६ ॥

இவ்வநுவாகத்தில், பிரவர மந்திரங்கட்கும், நிவித் (தொடர்பாய் தனித் தனி ஓதும்) மந்திரத்திற்கும் சுருக் ஆதாபன நிகத் (சுருக்கை எடுக்கும்படி சொல்லும்) மந்திரத்திற்கும் உரைகூறப்படுகின்றது.

பிரவர (குலத்தொடர்பு) மந்திரவுரை.

பிராமணம் 1

अग्ने महाꣳ असीत्याह महान्ह्येष यदग्निर्ब्राह्मणेत्याह ब्राह्मणो ह्येष भारते-
त्याहैष हि देवेभ्यो हव्यं भरति ।

என்பது.

வமிசமந்திர வுரை)•

உரை

'அக்னே மஹான் அஸி, என்றது, எல்லா ஆகுதிகட்கும் ஆதாரமாயிருத்தலின் மஹான் எனவும், பிராமணர்களிடத்து அபிமான முடையதாதலின் 'பிராமணன்' எனவும், தேவர்கட்கு அவிகளைத் தாங்குதலால் 'பாரதன்' எனவுங் கூறப்படுகின்றது. இது, இது என்று மறித்தும் மறித்துஞ் சொல்வதால் பிருகு முதலிய இருடிகளின் அவ்வப் பெயர்கள் கருத்தாம் என்பதாம்.

நிவித், என்னும் ஏழுபதங்களுள் முதலாவது பதத்திற்கு பொருள்கூறுகின்றன.

நிவித்—தனித்தனி ஓதுதல்.

பிராமணம் 2.

देवेद्ध इत्याह देवा ह्येतमैन्धत ।

என்பது.

உரை

தேவேத்த: என்றது, தேவர்கள் தமது யாகங்களில் அக்னியை இனிது வளர்த்தனர் என்பதாம்.

இரண்டாவது பதத்தின் பொருளைக் கூறுகின்றது.

பிராமணம் 3.

मन्विद्ध इत्याह मनुर्ह्येतमुत्तरो देवेभ्य ऐन्ध ।

என்பது

உரை.

தேவர்கட்குப் பிறகு மநு தமது யாகத்தில் அக்னியை வளர்த்தனர் என்பதாம்.

மேல்வரும் ஐந்து பதங்களில் வெளிப்படையான 'ஹி' என்னுஞ் சொற் பொருளை விளக்குகின்றது.

பிராமணம் 4

ऋषिष्टुत इत्याहर्षयो ह्येतमस्तुवन्विप्रानुमदित इत्याह विप्रा ह्येते यच्छुश्रु-वाꣳसः कविशस्त इत्याह कवयो ह्येते यच्छुश्रुवाꣳसो ब्रह्मसꣳशित इत्याह ब्रह्मसꣳशितो ह्येष घृताहवन इत्याह घृताहुर्ह्यस्य प्रियतमा ।

என்பது

உரை.

'ரிஷிஷ்டுத' என்றது இருடிகள் இவ்வக்கினியைத் துதித்தனர் எனவும் 'விப்ராநுமதித' என்றது அந்தணர்கள் இவ்வக்கினியை களிப்படையச் செய்தனர் எனவுங் கூறுகின்றது. 'கவிசஸ்த' என்றது, கவிகள் இவ்வக்கினியைப் போற்றினார்கள் என்கின்றது. 'ப்ராஹ்மசம்சித' என்றது அந்தணர்கள் இவ்வக்கினியை மந்திரத்தால் கூரியதாக்கினார்கள் என்கின்றது. 'க்ருதாஹவன என்றது, அக்கினி நெய்வடிவ ஆகுதியையுடையதென்கின்றது என்பதாம்.

மூச்சுவிடாமல் படிக்கக்கூடிய ஏழு பதங்களின் பொருளைக் கூறிவிட்டு மூச்சை விட்டபின்னர் ஓதவேண்டிய நான்கு பதங்களின் பொருளைக் கூறுகின்றது

பிராமணம் 5

प्रणीर्यज्ञानामित्याह प्रणीर्ह्येष यज्ञाना॑ रथीरध्वराणामित्याहैष हि देवरथोऽतूर्तो होतेत्याह न ह्येतं कश्चन तरति तूर्णिर्हव्यवाडित्याह सर्व॑ ह्येष तरति ।

என்பது.

உரை.

'பிரணீ: யக்ஞாநாம்' என்றது, அக்கினி வேள்விகளைக் கொண்டு செலுத்துவதாம் என்கின்றது. "ரதி: அத்வராணாம்" என்றது, தேவர்கட்கு அவி கொண்டுபோகும் இரதம் இவ்வக்கினியாம் என்கின்றது. 'அதூர்த்தோ ஹோதா' என்றது, அழைக்கப்படும் இவ்வக்கினியை ஒருவருங் கடந்ததில்லை என்கின்றது. தேவ அவிகளைத் தாங்குதலின் 'ஹவ்யவாட்' எனப்படுகின்றது என்பதாம்.

மூச்சுவிட்டபின்னர் ஓதவேண்டிய நான்கு நிவித் என்னும் பதங்களின் பொருளைக் கூறுகின்றது.

பிராமணம் 6

आस्पात्रं जुहूर्देवानामित्याह जुहूर्ह्येष देवानांचमसो देवपान इत्याह चमसो ह्येष देवपानोऽरा॑ इवाग्ने नेमिर्देवा॑स्त्वं परिभूरसीत्याह देवान्ह्येष परिभूर्यद्ब्रूयादा वह देवान्देवयते यजमानायेति भ्रातृव्यमस्मै जनयेदा वह देवान्यजमानायेत्याह यजमानमेवैतेन वर्धयति ।

என்பது.

வழிசமந்திர வுரை) *

உரை.

'ஆஸ்பாத்திரம் சுரு:' என்றது, இவ்வக்கினியில் சுருவில் நெய்விடுவது போல் நெய்விடுதலின் இது மரச்சுருவைப் போலன்றி கெடாத இரும்புமயச் சுருவாம். (சுரு = அகப்பை விசேடம்.) "தேவானாம் சமஸ: தேவபான:" என்றது, இவ்வக்கினி மனிதர்களுக்கு சோமரச மருந்தும் 'சமசம்' என்னும் மரப்பாத்திரத்தைப் போல் தேவர்கட்கு சமசம் என்னும் பாத்திர விசேடமாம் என்கின்றது. 'அராம் இவ' என்றது, அக்கினியே! நீ, வண்டியின் சக்கரம் உருள்வதுபோல் தேவர்களுக்குள் எங்கும் நிறைந்து நிற்கின்றாய் என்கின்றது. தேவயேதொஜமானாய என்று கூறில் எசமானனுக்குப் பகைவினை உண்டாக்குகின்றதாம். 'அஸ்மை எஜமாநாய தேவான் ஆவஹ' அதாவது இவ்வேள்வித் தலைவன் பொருட்டு தேவர்களைக் கூப்பிடுவாயாக என்பதாம். இவ்வாறு கூறுவது எஜமானனை வளர்க்கின்றது என்பதாம்.

ஆவாஹன நிகதத்தி (பதங்களைச் சேர்த்து ஓதலி)ன் கருத்தைச் சுருக்கிக் கூறுகின்றது

பிராமணம் 7

अग्निमग्न आ वह सोममा वहेत्याह देवता एव तद्यथापूर्वमुप ह्वयते ।

என்பது.

உரை

ஆகுதிக்கு ஆதாரமாகிய அக்கினியே! நீ முதலாவது ஆஜ்யபாக தேவதையாகிய அக்கினியை வரவழைப்பாயாக. இரண்டாவது ஆஜ்யபாக தேவதையாகிய சோமத்தை வரவழைப்பாயாக. இவ்வாவாஹனத்தால் ஆஜ்யபாகமுதல் சுவிஷ்டகிருத் வரை தேவர்களனைவரையும் அழைத்ததாகிவிட்டது. இவ்வாறே மேலும் யூகித்துக் கொள்க என்பதாம்.

ஆவாஹன பதங்களின் முடிவிலுள்ள வாக்கியத்தின் கருத்தை விளக்குகின்றது

பிராமணம் 8

आ चाग्ने देवान्वह सुयजा च यज जातवेद इत्याहाग्निमेव तत्सꣳश्यति सोऽस्य सꣳशितो देवेभ्यो हव्यं वहति ।

என்பது.

உரை.

'ஆசாக்னே தேவாங்வஹ' என்றது முதலியன, இவ்வாக்கியத்தை ஓதுவதால் அக்கினியே கூரியதாகின்றது. அத்தகைய அக்கினி மறதியின்றி எசமானனுடைய அவிசைத் தேவர்கட்குக் கொண்டு செல்கின்றது என்பதாம்.

அக்கினியை ஹோதா எனல் வேதங்களில் வெளிப்படையாமென விளக்குகின்றது

பிராமணம் 9

अग्निर्होतेत्याहाग्निर्वै देवानाꣳ होता य एव देवानाꣳ होता तं वृणीते ।

என்பது.

உரை.

அக்கினி ஹோதா என்றது, தேவர்கட்கு அக்கினியே ஹோதாவாம் ஆதலின் அக்கினியை அழைக்கின்றனர் என்பதாம்.

தேவர்களுடைய ஹோதாவின் உதவியின் பொருட்டு மனிதனாகிய தான் இருத்தல் என்பதை விளக்குகின்றது.

பிராமணம் 10.

स्मो वयमित्याहाऽऽत्मानमेव सत्त्वं गमयति ।

என்பது

உரை

'ஸ்மோவயம்' என்றது, தன இருப்பைக் காட்டுகின்றது என்பதாம்.

ததாது (கொடுக்குக) என்பது போன்ற வாழ்த்துச் சொல்லால் வாக்கியத்தை முடிப்பதின் கருத்தைக் கூறுகின்றது.

பிராமணம் 11

साधु ते यजमान देवतेत्याहाऽऽशिषमेवैतामा शास्ते ।

என்பது

உரை

சாதுதேயஜமான தேவதா என்றது, எசமான! நீ, அக்கினியை ஹோதாவாக அழைத்ததால் அவனுக்கு சாதுத்தன்மையைக் உண்டாக்குக என்ற ஆசிர்வாதஞ் சொல்கின்றது என்பதாம்.

வமிசமந்திர வுரை)

வேறு சாகையிற் படிக்கப்பட்டதைப் பழிக்கின்றது

பிராமணம் 12

यद्ब्रूयाद्योऽग्निं होतारमवृथा इत्यग्निनोभयतो यजमानं परि गृह्णीया-
त्प्रमायुकस्स्यात्।

என்பது

உரை

அக்கினிர் ஹோதா, என்று தொடங்கி, சாதுதே, என்றது முதலிய வற்றை இடையில் ஓதிவிட்டு, மீண்டும் 'அக்கினிம் ஹோதாரம் என்று இரண்டு பக்கத்திலும் அக்கினியைக் கொள்ளில் இருபக்கத்திலும் அக்கினியால் பிடித்துக்கொள்ளப் படுகின்றான். ஆகலின் சூடு மிகுதியால் இறப்பன். ஆகலின் இவ்வாறுள்ள வேறு சாகையின் பாடத்தை விட்டுவிடுக என்பதாம்.

சுரு, உபபிருத் என்னும் இரண்டையும் எடுக்கவேண்டியதில் சுருவே முதன்மையானது என்பதை விளக்குதற்கு 'சுருக்கை' என்று ஒருமையாகக் கூறியதென்பதைக் காட்டுகின்றது.

பிராமணம் 13

यजमानदेवत्या वै जुहूर्भ्रातृव्यदेवत्योपभृद्यद्द्वे इव ब्रूयाद्भ्रातृव्यमस्मै जनयेद्घृतवतीमध्वर्यो स्रुचमाऽस्यस्वेत्याह यजमानमेवैतेन वर्धयति।

என்பது

உரை

சுருக்குக்கள் என்று பன்மைச் சொல்லாகக்கூறின் எசமானனைப்போன்ற பகைவனை யுண்டாக்கும், ஆதலின் உபபிருதை விட்டு விட்டு சுருவை முதன்மையாகக் கொண்டு ஒருமை கூறியது. ஆதலின் உபபிருத் முக்கியமன்றென்க. சுருக்கை என்றதால் எசமானனை வளர்க்கின்றது என்பதாம்.

தேவர்களைப் பாதுகாத்தலும், உலகைப் பாதுகாத்தலும் கருத்தென விளக்குகின்றது.

பிராமணம் 14

देवायुवमित्याह देवान्ह्येषाऽवति विश्ववारामित्याह विश्वं ह्येषाऽवति।

என்பது

உரை.

தேவாயுவம் என்றது, தேவர்களை இது பாது காக்கின்றது என்கின்றது "விஸ்வாராம்" என்றது, உலகை இவ்வக்கினி பாதுகாக்கின்றது என்பதாம்.

'ஈடாமஹே' என்பது முதலிய சொற்களால் கூறவேண்டியதை விளக்குகின்றது.

பிராமணம் 15

ईडामहै देवा२ ईडेन्यान्नमस्याम नमस्यान्यजाम यज्ञियानित्याह मनुष्या वा ईडेन्याः पितरो नमस्या देवा यज्ञिया देवता एव तद्यथाभागं यजति ॥

என்பது

உரை

'ஈடாமஹே' என்றது முதலியன, தேவர்களை ஆராதிக்கின்றான், மனிதர்களைத் துதிக்கின்றான், பிதிர்க்களை வணங்குகின்றான் என்கின்றது. இதனால், எம்மனிதனுக்கு துதிமுதலிய பாகம் உபசாரமாய்க் கூறப்பட்டதோ, அப்பாகத்தை மீறாமல் அநுட்டானஞ் செய்தனன் எனல் பெறப்பட்டது என்பதாம்.

ஒன்பதாவது அநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தேழு பதங்களைக் கொண்டது.

காமிய நைமித்திக சாமிதேனி மந்திரங்களைக்கூறும் பிராமணங்கள்

त्रीन्त्सृचानन्नु ब्रूयाद्राजन्यस्य त्रयो वा अन्ये राजन्यात्पुरुषा ब्राह्मणो वैश्यश्शूद्रस्तानेवास्मा अनुकरोति पञ्चदशानु ब्रूयाद्राजन्यस्य पञ्चदशो वै राजन्यस्स्व एवैन२ स्तोमे प्रति ष्ठापयति त्रिष्टुभा परि दध्यादिन्द्रियं वै त्रिष्टुगिन्द्रियकामः खलु वै राजन्यो

यजते त्रिष्टुभैवास्मा इन्द्रियं परि गृह्णाति यदि कामयेत ॥१॥ ब्रह्म वर्चसमस्त्वितिं गायत्रिया परि दध्याद्ब्रह्मवर्चसं वै गायत्री ब्रह्मवर्चस मेव भवतिसप्तदशानु ब्रूयाद्वैश्यस्य सप्तदशोवै वैश्यःस्व एवैनं स्तोमे प्रति ष्ठापयति जगत्या परि दध्याज्जागता वै पशवः पशुकामः खलु वै वैश्यो यजते जगत्यैवास्मै पशून्परि गृह्णात्येकविंशतिमनु ब्रूया-त्प्रतिष्ठाकामस्यैकविंशस्तोमानां प्रतिष्ठा प्रतिष्ठित्यै ॥२॥ चतुर्विं शतिमनु ब्रूयाद्ब्रह्मवर्चसकामस्य चतुर्विंशत्यक्षरा गायत्री गायत्री ब्रह्मवर्चसं गायत्रियैवास्मै ब्रह्मवर्चस मवरुन्धेत्रिंशतमनुब्रूयादन्नकाम-स्यत्रिंशदक्षरा विराडन्नं विराड्विराजैवास्मा अन्नाद्यमवरुन्धे द्वात्रिं-शतमनु ब्रूयात्प्रतिष्ठाकामस्य द्वात्रिंशदक्षराऽनुष्टुगनुष्टुप्छन्दसां प्र-तिष्ठा प्रतिष्ठित्यैषट्त्रिंशतमनु ब्रूयात्पशुकामस्य षट्त्रिंशदक्षरा बृह-ती बार्हताः पशवो बृहत्यैवास्मै पशून् ॥३॥ अव रुन्धे चतुश्चत्वारिं-शतमनु ब्रूया दिन्द्रिय कामस्य चतुश्चत्वारिं शदक्षरा त्रिष्टुगिन्द्रियं त्रिष्टुप्त्रिष्टुभैवास्मा इन्द्रियमवरुन्धेऽष्टाचत्वारिं शतमनु ब्रूयात्पशुका-मस्याष्टाचत्वारिंशदक्षरा जगती जगताः पशवो जगत्यैवास्मै पशू-नव रुन्धे सर्वाणि छन्दांस्यनु ब्रूयाद्बहुयाजिनस्सर्वाणि वा एत-स्य छन्दांस्यवरुद्धानि यो बहुयाज्यपरिमितमनु ब्रूयादपरिमि-तस्यावरुद्ध्यै ॥ ४ ॥

அரசனை நிமித்தமாகக் கொண்டு விதிக்கின்றது.

பிராமணம் 1

त्रीँस्तृचाननु ब्रूयाद्राजन्यस्य त्रयो वा अन्ये राजन्यात्पुरुषा ब्राह्मणो वैश्यश्शूद्रस्तानेवास्मा अनुकान्करोति ।

என்பது.

உரை.

அரசனுக்கு 'ப்ரவோவாஜா' என்பதை மும்முறையும், 'அக்ன ஆயாஹி' என்பதை மும்முறையும், 'த்வம் வருண' என்பதை மும்முறையும் ஓதல் வேண்டும். இவ்வாறு மூன்று வகையாக ஓதில் அரசனுக்கு வேறான அந்தணர், வணிகர், சூத்திரர் என்பவர்களை இவ்வரசனுக்கு அநுகூலர்களாகச் செய்கின்றது என்பதாம்.

மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 2

पञ्चदशानु ब्रूयाद्राजन्यस्य पञ्चदशो वै राजन्यस्स्व एवैनँ स्तोमे प्रति ष्ठापयति ।

என்பது

உரை

பிரசாபதியின் தோள்களிலிருந்து பதினைந்து துதிகளும் உண்டாயின. அரசனும் பிறந்தனன். ஆகலின், இத் துதி அரசனுக்கு உரித்தாயிற்று. இது இவனை துதியில் பெருமையடையச் செய்கின்றது என்பதாம்.

ஈண்டு, பதினைந்து சாமிதேனி என்னும் பொது விதியால் இது பெறப்பட்டது. ஆயினும் மூன்று என்னுஞ் சிறப்பு விதியால் இது மறுக்கப்படுதலின் விகற்பமாம் என்பது உணரற்பாலது.

'த்வம் வருண' என்பதை முடிவு மந்திரமாக விதிக்கின்றது.

பிராமணம் 3

त्रिष्टुभा परि दध्यादिन्द्रियं वै त्रिष्टुगिन्द्रियकामः खलु वै राजन्यो यजते त्रिष्टुभैवास्मा इन्द्रियं परि गृह्णाति ।

என்பது

சமித்து மந்திரம்)

உரை

திரிஷ்டுப் சந்தத்தால் ஓதுக. திரிஷ்டுப் சந்தம் இந்திரனுடன் தோன்றியதாமாதலின் அதனைப்பற்றியது இந்திரியம், அரசன் போரில் விருப்புடையனாதலின் இந்திரியவன்மையில் விருப்புடையவனுமாவன். ஆதலின் அரசன் திரிஷ்டுப்சந்தத்தால் வேட்கின்றான் அது இவனுக்கு இந்திரியத்தைக் கொடுக்கின்றது என்பதாம். அரசனுக்கு இது நித்தியவிதியாம். பரிதானி என்பது ஈண்டு முடிவைக்குறித்து நிற்கின்றது.

அரசனுக்கு காமிய பரிதானியை விதிக்கின்றது.

பிராமணம் 4.

यदि कामयेत ब्रह्मवर्चसमस्त्विति गायत्रिया परि दध्याद्ब्रह्मवर्चसं वै गायत्री ब्रह्मवर्चसमेव भवति ।

என்பது

உரை

பிரம தேசசைவிரும்பில், அரசன் காயத்திரிசந்தத்தால் முடிவு மந்திரத்தை ஓதல் வேண்டும். "தத்சவிது: என்பது முதலிய காயத்திரியானது பிரம வொளியையுண்டாக்குவதுபோல் ஆசுஹோதா என்பது முதலிய இம்மந்திரமும் பிரமவொளியை யுண்டாக்கலின் காயத்திரியாம் என்பதாம்.

வணிகனைக் குறித்து விதிக்கின்றது.

பிராமணம் 5.

सप्तदशानु ब्रूयाद्वैश्यस्य सप्तदशो वै वैश्यस्स्व एवैनं स्तोमे प्रतिष्ठापयति ।

என்பது

உரை.

வணிகன் பதினேழு [illegible] ஆதல்வரே, "சமித்தோ அக்ன ஆஹுத,, என்னும் இரண்டு மந்திரங்களுக்கும் இடையில் "பிருதுபாஜா அமர்த்ய:" "தம்ஸபாதோயதஸ்ருச" என்னுமிரண்டு மந்திரங்களையுஞ் சேர்க்கில் பதினேழாம். பிரசாபதியின் நடுவிலிருந்து பதினேழு துதிகளும் வணிகனும் உண்டானதால் வணிகனுக்கு இது உரித்தாயிற்று என்பதாம்,

---

வணிகனுக்கு முடிவு மந்திரத்தை விதிக்கின்றது.

பிராமணம் 6.

जगत्या परि दध्याज्जागता वै पशवः पशुकामः खलु वै वैश्यो यजते जग-
त्यैवास्मै पशून्परि गृह्णाति ।

என்பது

உரை

வணிகன் சகதிச் சந்தத்தால் முடிவு மந்திரத்தை ஓதல் வேண்டும். சகதிச் சந்தம் வணிகனுக்கும், வணிகன் பசுகாமன் அவன் சகதிச் சந்தத்தால் வேட்க வேண்டும். அது இவனுக்குப் பசுவைக் கொடுக்கின்றது என்பதாம். இது நைமித்திகமாம்.

காமியத்தை விதிக்கின்றது.

பிராமணம் 7

एकविंशतिमनु ब्रूयात्प्रतिष्ठाकामस्यैकविंशस्स्तोमानां प्रतिष्ठा प्रति-
ष्ठित्यै ।

என்பது

உரை

பெருமையை விரும்பியவன் இருபத்தொரு இருக்குக்களால் கூறல் வேண்டும். இது, இவனை துதிகளில் பெருமையுடையவனுகச் செய்கின்றது என்பதாம்.

ஈண்டு, இடை இடையில் வேறு சாகைகளிலுள்ள சில மந்திரங்களைச் சேர்த்துக் கொள்வதால் இருபத்தொன்று முதலிய எண்கள் உண்டாகின்றன என்பதையுணர்க.

மற்றேது பயனின் பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம் 8

चतुर्विंशतिमनु ब्रूयाद्ब्रह्मवर्चसकामस्य चतुर्विंशत्यक्षरा गायत्री गाय-
त्री ब्रह्मवर्चसं गायत्रियैवास्मै ब्रह्मवर्चसमव रुन्धे ।

என்பது.

உரை

பிரமவர்ச்சசை. (அந்தண வழகை) விரும்பியவன் இருபத்து நான்கு இருக்குக்களை ஓதுக. இருபத்து நான்கு எழுத்துக்கள் காயத்திரியாம். பிரம வொளி காயத்திரியாம். அது இவனுக்கு பிரமவொளியை உண்டாக்குகின்றது என்பதாம்.

சமித்து மந்திரம்।

மற்றொரு பயனைக் குறித்து விதிக்கின்றது.

பிராமணம் 9

त्रिंशतमनु ब्रूयादन्नकामस्य त्रिंशदक्षरा विराडन्नं विराड्विराजैवास्मा अन्नाद्यमव रुन्धे ।

என்பது

உரை.

அன்னத்தை விரும்பியவன் முப்பது இருக்குக்களால் ஓதுவானாக. அது மூன்று பத்து எழுத்துக்கள் கொண்ட பாதங்களானதால் விராட் என்பதாம். அது இவனுக்கு உணவுப் பொருளைக் கொடுக்கின்றது என்பதாம்.

மீண்டும் மற்றொரு பயனின் பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம் 10.

द्वात्रिंशतमनुब्रूयात्प्रतिष्ठाकामस्य द्वात्रिंशदक्षराऽनुष्टुगनुष्टुप्छन्दसां प्रतिष्ठा प्रतिष्ठित्यै ।

என்பது

உரை

பெருமையை விரும்பியவன் முப்பத்திரண்டு இருக்குக்களால் ஓதுவானாக. வாக் அநுஷ்டுப் என்றதால் அநுஷ்டுப் சந்தமாம். வாக்கில் எல்லாச் சந்தங்களும் அடங்கலின் அநுஷ்டுப் சந்தம் ஏனைய சந்தங்களுக்கும் ஆதாரமாம் என்பதாம்.

மீண்டும் மற்றொரு பயனைக் குறித்து விதிக்கின்றது.

பிராமணம் 11

षट्त्रिंशतमनुब्रूयात्पशुकामस्य षट्त्रिंशदक्षरा बृहती बार्हताः पशवो बृहत्यैवास्मै पशूनव रुन्धे ।

என்பது

உரை.

பசுக்களை விரும்பியவன் முப்பத்தாறு இருக்குக்களால் ஓதுவானாக. முப்பத்தாறு எழுத்துக்கள் பிருகதீ ஆகும். பசுக்கள் பிருகதாகின்றன. அது, இவனுக்கு பசுக்களைக் கொடுக்கின்றது என்பதாம்.

மீண்டும் மற்றொரு பயனைக் குறித்து விதிக்கின்றது

பிராமணம் 12

चतुश्चत्वारिꣳशतमनु ब्रूयादिन्द्रियकामस्य चतुश्चत्वारिꣳशदक्षरा त्रिष्टुगिन्द्रियं त्रिष्टुप्त्रिष्टुभैवास्मा इन्द्रियमव रुन्धे ।

என்பது

உரை

இந்திரியத்தை விரும்பியவன் நாற்பத்து நான்கு இருக்குக்களால் ஓதுவானாக. நாற்பத்து நான்கு எழுத்துக்கள் திரிஷ்டுபாம் இந்திரியம் திருஷ்டுப் சந்தமாம். திரிஷ்டுப் சந்தத்தால் இவனுக்கு இந்திரியம் உண்டாகின்றது என்பதாம்.

மீண்டும் மற்றொரு பயனைக் குறித்து விதிக்கின்றது.

பிராமணம் 13.

अष्टाचत्वारिꣳशतमनु ब्रूयात्पशुकामस्याष्टाचत्वारिꣳशदक्षरा जगती जागताः पशवो जगत्यैवास्मै पशूनव रुन्धे ।

என்பது

உரை

பசுக்களை விரும்பியவன் நாற்பத்தெட்டு இருக்குக்களால் ஓதுவானாக. நாற்பத்தெட் டெழுத்து சகதிச்சந்தமாம். சகதிசந்தம் பசுக்களாம். அது, இவனுக்குப் பசுவைக் கொடுக்கின்றது என்பதாம்.

சோமயாசியைக் குறித்து விதிக்கின்றது.

பிராமணம் 14.

सर्वाणि छन्दाꣳस्यनु ब्रूयाद्बहुयाजिनस्सर्वाणि वा एतस्य छन्दाꣳस्यवरुद्धानि यो बहुयाजी ।

என்பது

உரை

தீக்ஷணீய முதலிய இஷ்டிகளாலும், அக்கினி ஷோமீயமுதலான பசுக்களாலும், இந்திரன் வாயுமுதலானோர்களின் சோமரசப் பாத்திரங்களாலும் வேள்வி செய்கின்றவன் மிகுந்த வேள்வி செய்கின்றவன். இவன் எல்லாச் சந்தங்களாலும் ஓதுக. இவ்வாற்றால், தரிசபூரணமாத யாகங்களைச் செய்கின்றவனும் மூன்று சந்தங்களால் ஓதல் வேண்டும். அவையோ, “சமித்யமான” என்பது முதலியன என்பதாம்.

அத்தகைய சோமயாசிக்கு, 'த்ரீந்திரிசாந்' என்னும் அநுவாகத்தில், "நாற்பத்தேட்டுக்கூறுக" என்பது முடிய எந்த எண்ணிக்கைகள் உளவோ, அவைகட்கு தனது விருப்பே காரணம். வாக்கிற்கு யாதோர் நியமமுமில்லை என்பதை விதிக்கின்றது.

பிராமணம் 15

अपरिमितमनु ब्रूयादपरिमितस्यावरुध्यै ॥

என்பது

உரை

அளவில்லாத பயன்களை யடைதற் பொருட்டு அளவில்லாத சங்கங்களை ஓதல் வேண்டுமென்பதாம்.

பத்தாவது அநுவாகம்
முற்றிற்று.

இரண்டாங்காண்டம் ஐந்தாவது பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

எட்டுப் பஞ்சாதிகட்குமேல் நாற்பது பதங்களைக் கொண்டது.

சமித்து மந்திரங்களின் நியமங்களைக் கூறும் பிராமணங்கள்

निवीतं मनुष्याणां प्राचीनावीतं पितृणामुपवीतं देवानामुप व्ययते देवलक्ष्ममेव तत्कुरुते तिष्ठन्नन्वाह तिष्ठन्ह्याश्रुततरं वदति तिष्ठन्नन्वाह सुवर्गस्य लोकस्याभिजित्या आसीनो यजत्यस्मिन्नेव लोके प्रति तिष्ठति यत्क्रौञ्चमन्वाहाऽऽसुरं तद्यन्मन्द्रं मानुषं तद्यदन्तरा तत्सदेवमन्तराऽनूच्यꣳ सदेवत्वाय विद्वाꣳसो वै ॥ १ ॥ पुरा होतारोऽभूवन्तस्माद्विधृता अध्वानोऽभूवन्न पन्थानस्समरुक्षन्नन्तर्वेद्यन्यः पादो भवति बहिर्वेद्यन्योऽथान्वाहाध्वनां विधृत्यै

पथामसꣳरोहायाथो भूतं चैव भविष्यच्चावरुन्धेऽथो परिमितं चैवाप-
रिमितं चाव रुन्धेऽथो ग्राम्याꣳश्चैव पशूनारण्याꣳश्चाव रुन्धेऽथो
॥ २ ॥ देवलोकं चैव मनुष्यलोकं चाभि जयति देवा वै सामिधे-
नीरनूच्य यज्ञं नान्वपश्यन्त्स प्रजापतिस्तूष्णीमाघारमाऽघारयत्ततो
वै देवा यज्ञमन्वपश्यन्यत्तूष्णीमाघारमाघारयति यज्ञस्यानुख्यात्या
अथो सामिधेनीरेवाभ्यनक्त्यलूक्षो भवति य एवं वेदाथो तर्पयत्येवैना-
स्तृप्यति प्रजया पशुभिः ॥ ३ ॥ य एवं वेद यदेकयाऽऽघारयेदेकां
प्रीणीयाद्यद्द्वाभ्यां द्वे प्रीणीयाद्यत्तिसृभिरति तद्रेचयेन्मनसाऽऽ-
घारयति मनसा ह्यनाप्तमाप्यते तिर्यञ्चमा घारयत्यच्छम्बट्कारं
वाक्च मनश्चाऽऽर्तीयेतामहं देवेभ्यो हव्यं वहामीति वागब्रवीदहं देवेभ्य
इति मनस्तौ प्रजापतिं प्रश्नमैताꣳ सोऽब्रवीत् ॥ ४ ॥ प्रजाप-
तिर्दूतीरेव त्वं मनसोऽसि यद्धि मनसा ध्यायति तद्वाचा वदतीति
तत्खलु तुभ्यं न वाचा जुहवन्नित्यब्रवीत्तस्मान्मनसा प्रजापतये
जुह्वति मन इव हि प्रजापतिः प्रजापतेराप्त्यै परिधीन्त्सं मार्ष्टि
पुनात्येवैनान्त्रिर्मध्यमं त्रयो वै प्राणाः प्राणानेवाभि जयति त्रिर्द-
क्षिणार्ध्यं त्रयः ॥ ५ ॥ इमे लोका इमानेव लोकानभि जयति
त्रिरुत्तरार्ध्यं त्रयो वै देवयानाः पन्थानस्तानेवाभि जयति त्रिरुप
वाजयति त्रयो वै देवलोका देवलोकानेवाभि जयति द्वादश सं

पञ्चन्ते द्वादश मासास्संवत्सरस्संवत्सरमेव प्रीणात्यथो संवत्सरमे-
वास्मा उप दधाति सुवर्गस्य लोकस्य समष्ट्या आघारमा घार-
यति तिर इव ॥६॥ वैसुवर्गो लोकस्सुवर्गमेवास्मै लोकं प्र रोचयत्यृजुमा
घारयत्यृजुरिव हि प्राणस्संततमा घारयति प्राणानामन्नाद्यस्य संतत्या
अथो रक्षसामपहत्यै यं कामयेत प्रमायुकस्स्यादिति जिह्मं तस्याऽऽ
घारयेत्प्राणमेवास्माज्जिह्मं नयति ताजक्प्र मीयते शिरो वा एतद्यज्ञस्य
यदाघार आत्मा ध्रुवा ॥ ७ ॥ आघारमाघार्य ध्रुवा१ समनक्त्या-
त्मन्नेव यज्ञस्य शिरः प्रति दधात्यग्निर्देवानां दूत आसीद्दैव्योऽसु-
राणां तौ प्रजापतिंप्रश्नमैता१ स प्रजापतिर्ब्राह्मणमब्रवीदेतद्वि ब्रूही-
त्या श्रावयेतीदं देवाश्शृणुतेति वाव तदब्रवीदग्निर्देवो होतेति य एव
देवानां तमवृणीत ततो देवाः ॥ ८ ॥ अभवन्पराऽसुरा यस्यैवं विदुषः
प्रवरं प्रवृणते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति यद्ब्राह्मणश्चाब्रा
ह्मणश्चप्रश्नमेयातां ब्राह्मणायाधि ब्रूयाद्यद्ब्राह्मणायाध्याहाऽऽत्मनेऽऽध्याह
यद्ब्राह्मणं पराहाऽऽत्मानं पराऽऽह तस्माद्ब्राह्मणो न परोच्यः ॥ ९ ॥

இவ்வநுவாகத்தில் சாமிதேனி மந்திரங்களுக்குள் ஹோதாவின் நியமவிசேடமும், அத்வரியுவின் ஆகார விசேடமுங் கூறப்படுகின்றன.

வேள்விச் செயலாளர்களுக்குப் பூணூலை விதித்தற் பொருட்டு அதைப்புகழ்கின்றது.

பிராமணம் 1.

निवीतं मनुष्याणां प्राचीनावीतं पितृणामुपवीतं देवानाम् ।

உரை.

இரண்டு கைகளைவேறு வேறாகக் கோர்வைத்துக் கொண்டு நூலை, அல்லது, ஆடையை தோளில் சுற்றிவைத்தல் நிவீதம் எனப்படும். இது மக்களாற் செய்யப்படுங் காரியங்களில் முக்கியமாம். ஆதலின் இருடிகளின் தர்ப்பணம் நிவீதத்துடன் அநுஷ்டிக்கப் படுகின்றது. வலது கைப்புறம் மேலும் இடது கைப்புறம் கீழுமாக மார்பில் குறுக்காய் அணிதல் பிராசீனவீதம் எனப்படும். இது பிதிர்க்களின் கருமத்திற்கு முக்கியமானது. இடது தோளின் மேல்புறத்தும் வலது கைக்குக் கீழுமாக அணிதல் உபவீதமாம் இது தேவர்களின் கருமத்தில் முக்கியமாம் என்பதாம்.

அதை விதிக்கின்றது.

பிராமணம் 2.

उप व्ययते देवलक्ष्ममेव तत्कुरुते ।

என்பது.

உரை

உபவீதம் அணிந்தால் தேவக்குறியிட்டதாயிற்று என்பதாம்.

ஹோதா, சாமிதேனி மந்திரத்தை ஓதும்போது இருக்கவேண்டிய நிலைமையைக் கூறுகின்றது.

பிராமணம் 3.

तिष्ठन्नन्वाह तिष्ठन्वै श्रुततरं वदति ।

என்பது

உரை.

உட்கார்ந்து கொண்டு ஓதுதல் கூடாது என்றது, மிக நன்றாய்க் கேட்குமாறு ஓதல் வேண்டும் உட்கார்ந்து கொண்டு ஓதில் அது அமையாது ஆதலின் நின்று கொண்டு ஓதுவானாக என்கின்றது என்பதாம்.

அதையே மீண்டும் எடுத்துக் கொண்டுப் புகழ்கின்றது.

பிராமணம் 4.

तिष्ठन्नन्वाह सुवर्गस्य लोकस्याभिजित्यै ।

என்பது

உரை.

ஆசனத்தினின்றும் எழுந்திருந்தவனுக்கு சுவர்க்கம் கிட்டும். ஆதலின், அதை யடைதற் பொருட்டு அது உரியதாகின்றது என்பதாம்.

யாஜ்யா சொல்லும்போது உட்காரல் வேண்டு மென்கின்றது.

பிராமணம் 5.

आसीनो यजत्यस्मिन्नेव लोके प्रति तिष्ठति ।

என்பது.

உரை.

உட்காருதலும் அசைவற்றதா மாதலின், இவ்வுலகில் பிரதிஷ்டையை (நிலைத்திருத்தலை) யடைகின்றான் என்பதாம்.

மிகப்பெரிய வொலியும் மிகச் சிறிய வொலியும் இன்றி நடுத்தரமாகிய ஒலியை விதித்தல்.

பிராமணம் 6.

यत्क्रौञ्चमन्वाहाऽऽसुरं तद्यन्मन्द्रं मानुषं तद्यदन्तरा तत्सदेवमन्तराऽनूच्यꣳ सदेवत्वाय ।

என்பது

உரை.

கிரௌஞ்சப் பறவை கத்துதல் போல் மிகுந்த வொலி அசுரத் தன்மை யுடையதாம். மனிதர் உட்கார்ந்து கொண்டு மெல்லப் பேசுதல்போல் மெதுவாகிய ஒலி மனித வொலியாதலின் அதுவுங்கூடாது. மற்றோ, நடுத்தரமாகிய ஒலி தேவர்கட்குப் பிரியமானதால் அதுவே சண்டுக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

மேலே சில விசேடங்களை விதிக்கின்றது.

பிராமணம் 7.

विद्वाꣳसो वै पुरा होतारोऽभूवन्तस्माद्विधृता अध्वानोऽभूवन्न पन्थानः समरुक्षन्नन्तर्वेद्यन्यः पादो भवति बहिर्वेद्यन्योऽथान्यथाहाध्वनां विधृत्यै पथामसꣳरोहाय ।

என்பது

உரை.

சில அறிவிலாத ஹோதாக்கள் இரண்டு கால்களையும் வேதிக்கு வெளியே வைத்துக் கொண்டு ஓதுகின்றார்கள் அதனால் வழி கலந்துபோகின்றது. சிலர் வேதிக்கு நடுவில் இரண்டு கால்களையும் வைத்துக் கொண்டு ஓதுகின்றார்கள் அவர்களும் வழியை உணரார்கள். இவைகளைக் குற்றமென்றுணர்ந்த பண்டைக்கால அறிஞர்களான ஹோதாக்கள், வலது காலை வெளியில் வைக்க மாட்டார்கள். இடது காலையும் உள்ளே வைக்கமாட்டார்கள். மற்றோ, வெளியிலேயே வைப்பார்கள் இதனால் வழிகள் கெட்டுப்போகின்றன. ஆதலின், பழமையாகிய அறிஞரைப் போன்று, வலது காலை வேதிக்குள்ளும், இடது காலை வேதிக்கு வெளியிலுமாக வைத்துக் கொண்டு ஓதுவார்கள். இதனால் வழி நன்றாயமைகின்றது. மார்க்கம் பெரியதாய்க் கொள்ளப்படுகின்றது. ஆதலின் மார்க்க விடயத்தில் பயந்து மயக்கம் வராது என்பதாம்.

வேறுபாடாகக் காலெடுத்து வைப்பதை பலவகையாகப் புகழ்கின்றது.

பிராமணம் 8.

अथो भूतं चैव भविष्यच्चाव रुन्धेऽथो परिमितं चैवापरिमितं चाव रुन्धेऽथो ग्राम्याꣳश्चैव पशूनारण्याꣳश्चाव रुन्धेऽथो देवलोकं चैव मनुष्यलोकं चाभि जयति ।

என்பது

உரை.

வலது காலை வேதிக்குள்ளும், இடது காலை வேதிக்கு வெளியிலுமாக வைத்தல், இறந்தகாலம், வருங்காலம், அளவு, அளவிலாமை, நாட்டுப் பசுக்கள், தேவலோகம், மனிதலோகம் என்பவைகளை கொடுக்கின்றது என்பதாம்.

இவ்வாறு, ஹோதாவின் நியம விசேடங்கள் கூறப்பட்டன. இனி; அத்துவரியுவின் (வேட்போனுடைய) சுருவாகாரத்தை விதிக்கின்றது.

பிராமணம் 9.

देवा वै सामिधेनीरनूच्य यज्ञं नान्वपश्यन्त्स प्रजापतिस्तूष्णीमाघारमाऽघारयत्ततो वै देवा यज्ञमन्वपश्यन्यत्तूष्णीमाघारमाघारयति यज्ञस्यानुख्यात्यै ।

என்பது

உரை

ஆதியில் தேவர்கள் சாமிதேனி மந்திரத்தை ஓதி அங்குள்ள நியமங்களில் மனஞ்சென்றமையின் மேலே செய்யவேண்டிய விசேடங்களை அறியாமற் போயினர். பிறகு, பிரசாபதி, ஒரு மந்திரமுமோதாமல் நேரே தாரையாக நெய்விடும் ஆகார ஹோம மென்பதைச் செய்து செய்யவேண்டிய வேள்விக் கரும வகைகளை நன்குணர்ந்தனர். ஆதலின் ஒன்றும் பேசாமல் அநுட்டிக்கப்பெறும் ஆகார ஹோமம் செய்யத்தக்க வேள்விக் கருமங்களை நினைப்பூட்டுகின்றது என்பதாம்.

மேற்கூறிய ஆகார ஹோமத்தையே புகழ்கின்றது.

பிராமணம் 10

अथो सामिधेनीरेवाभ्यनक्ति ।

என்பது.

உரை.

இத்தகைய ஆகார ஹோமத்திற்கு, மேலே செய்யப்படும் வேள்விக் கரும வகைகளை நினைப்பூட்டுவது மாத்திரம் பயனன்று, மற்றோ, தீயிலிட்ட சாமிதேனி என்னும் விறகுகளை நெய்யால் நனையச்செய்வதும் பயனும் என்பதாம்.

அதன் உணர்வைப் புகழ்கின்றது.

பிராமணம் 11

अलक्ष्मी भवति य एवं वेद ।

என்பது

உரை.

கூறிய நெய்த்தாரையால் நனைப்பதை உணர்ந்தவன் அன்புடையவனாகின்றான் என்பதாம்.

ஆகார ஹோமத்தையே மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம் 12

अथो तर्पयत्येवैनाः ।

என்பது.

உரை.

மற்றும், இந்த ஆகார ஹோமத்தால் சாமிதேனியின் அபிமானி தேவதைகள் களிப்புறுகின்றார்கள் என்பதாம்.

இத்தகைய தேவதையின் களிப்பின் உணர்வைப் புகழ்கின்றது.

பிராமணம் 13.

तृप्यति प्रजया पशुभिर्य एवं वेद ।

என்பது

உரை

இந்த ஆகார ஹோமம் தருப்பை முடிச்சை சுருவத்திற்குக் கீழே வைத்துக்கொண்டு பரப்பியுள்ள விறகுகளின் இடைவெளியைக் கவனித்து வாயு மூலையிலிருந்து சுருவத்தோடு கூடிய கையை உள்ளே நீட்டி நீயிவிடும் தாரையாகிய நெய் எல்லாச் சமித்து (விறகு) களிலும் படும்படி விடுதல் என்பதையுணர்ந்தவன் புத்திரன் பசுக்கள் முதலியவைகளால் களிப்படைகின்றான் என்பதாம்.

அப்போது மனதால் பிரசாபதியைத் தியானம் பண்ணல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 14

यदेकयाऽऽघारयेदेकां प्रीणीयाद्यद्द्वाभ्यां द्वे प्रीणीयाद्यत्त्रिसृभिरति तद्रेच-येन्मनसाऽऽघारयति मनसा ह्यनाप्तमाप्यते ।

என்பது

உரை

ஒரு இருக்கைப் படித்து ஆகார ஹோமஞ் செய்யில் ஒரு சாமிதேனி மந்திரங் களிப்புறுகின்றது. இரண்டு இருக்குக்களால் இரண்டு களிப்புறுகின்றன. மூன்றால் செய்யில் அது ஒருவகையில் வேறுபட்ட கருமமாகின்றது. இக்குற்றங்களைப் போக்குவதற்கு மனதால் ஆகார ஹோமஞ் செய்க. என்னை? வாக்கு முதலியவைகளால் அடைய முடியாதது மனதால் அடையப்படுமாதலினென்பதாம்.

சூத்திரகாரர் கூறிய, குறுக்காய்ச்செய்யும் நெய்த்தாரை ஹோமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 15

तिर्यञ्चमाघारयत्यच्छम्बट्कारम् ।

என்பது

உரை

தெற்கிலிருந்து வடக்கே முடிக்கினும், கிழக்கிலிருந்து மேற்கே முடிக்கினும் ஒரு விறகுதான் நெய்யால் நனைக்கப்படுமேயன்றி எல்லாம் நனைக்கப்படா, ஆகலின், மூலையிலிருந்து குறுக்காக (கோணலாக)வே ஆகார ஹோமஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

மனதால் ஆகார ஹோமஞ் செய்யவேண்டு மென்பதையே மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம் 16

वाक्च मनश्चाऽऽर्तीयेतामहं देवेभ्यो हव्यं वहामीति वागब्रवीदहं देवेभ्य
इति मनस्तौ प्रजापतिं प्रश्नमैताꣳ सोऽब्रवीत्प्रजापतिर्दूतीरेव त्वं मनसोऽ-
सि यद्धि मनसा ध्यायति तद्वाचा वदतीति तत्खलु तुभ्यं न वाचा
जुहवन्नित्यब्रवीत्तस्मान्मनसा प्रजापतये जुह्वति मन इव हि प्रजापतिः
प्रजापतेराप्त्यै ।

என்பது

உரை

வாக்கானது, நான் தேவர்கட்கு அவியைத் தாங்கிச் செல்கின்றேன் என்று மனதை வென்றது. இவ்வாறு; வாக்கும் மனதும் அவியை பெறுவது யார்? என்று நிர்ணயித்தற் பொருட்டு பிரசாபதியிடஞ் சென்றன. பிரசாபதி, வாக்கைநோக்கி வாக்கே! நீ, மனதின் தூதனாயிருக்கின்றாய், மனதில் எண்ணியதையே வாக்கும் பேசுதலின் என்றனன். அதைக்கேட்ட வாக்கு வெகுண்டு பிரசாபதியே, வாக்கினால் உனக்கு ஒருயாகமுஞ் செய்யாதொழிந்துவிடுக என்றது. ஆகலின்; பிரசாபதியின் ஆகாரஹோமம் மனதாற் செய்யப்படுகின்றது என்பதாம்.

சூத்திரகாரர் கூறிய, ஸ்பயத்துடன் விறதுகளைத் தட்டிய தர்ப்பைகளால்
பரிதிகளை சம்மார்ச்சனந் (துடைத்தல்)ஞ் செய்தல்
வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 17

परिधीन्त्सं मार्ष्टि पुनात्येवैनान् ।

என்பது

உரை

பரிதிகளைத் துடைக்கின்றான். அதாவது இவைகளைப் புனிதமாக்குகின்றான் என்பதாம்.

முறையே ஒவ்வொரு பரிதிகளையும் ஆவிருத்தியாகத் துடைத்தல் வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம் 18

त्रिर्मध्यमं त्रयो वै प्राणाः प्राणानेवाभि जयति त्रिर्दक्षिणार्ध्यं त्रय इमे लोका इमानेव लोकानभि जयति त्रिरुत्तरार्ध्यं त्रयो वै देवयानाः पन्थान-स्तानेवाभि जयति ।

என்பது

உரை

பிராண அபான வியானன் என வாயுக்களும் மூன்று, உலகங்களும் மூன்று, சுவர்க்கலோக எமலோக பிரமலோகம் என்னும் மூவுலக மார்க்கங்களும் மூன்று, இவ்வாறே பரிதிகளின் சம்மார்ச்சனமும் மூன்று, தட்சிணப் பரிதிமார்ச்சனங்களும் மூன்று, உத்தரப்பரிதிமார்ச்சனங்களும் மூன்று, தேவமார்க்கங்களும் மூன்று ஆனதால் இவைகளை வென்று இவற்றை அடைகின்றான் என்பதாம்.

வேதமென்னுந் தருப்பை முடிச்சால் அக்கினியை மும்முறை துடைப்பதை விதிக்கின்றது.

பிராமணம் 19

त्रिरुप वाजयति त्रयो वै देवलोका देवलोकानेवाभि जयति ।

என்பது

உரை

தேவலோகங்கள் மூன்று, அதை அடையும் வழிகளும் மூன்று ஆதலின் அக்கினியைத் துடைத்தலும் மூன்றும் இதனால் தேவலோகங்களை அடைகின்றான் என்பதாம்.

மூன்று பரிதிகளிலும், அக்கினியிலும் தனித்தனியே செய்யுஞ் செயல்களை ஒன்றாக்கிப் புகழ்கின்றது

பிராமணம் 20

द्वादश सं पद्यन्ते द्वादश मासास्संवत्सरस्संवत्सरमेव प्रीणात्यथो संवत्सरमेवास्मा उप दधाति सुवर्गस्य लोकस्य समष्ट्यै ।

என்பது

உரை

இத்தகைய செயல்கள் பன்னிரண்டாகின்றன, பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒருவருடமாம் ஆதலின் இது வருட தேவதையைப் பிரியப் படுத்துகின்றது. அஃதன்றியும், எசமானனுடைய கருமாநுட்டானத்திற்கு வருடகாலத்தை விநியோகப் படுத்துகின்றதுமாம் என்பதாம்.

குறுக்கில் செய்யும் முற்கூறிய, நெய்த்தாரை ஹோமத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம் 21

आघारमा घारयति तिर इव वै सुवर्गो लोकस्सुवर्गमेवास्मै लोकं प्र रोचयति ।

என்பது.

உரை.

கிழக்கு முகமாய்க் காணப்படும் சுவர்க்க லோகம் தெற்கு வடக்கு இடமாகக் காணப்படுதலின் குறுக்குப்போற் காணுகின்றது. ஆதலின், குறுக்காகச் செய்யும் நெய்த்தாரை ஹோமத்தால் எசமானனுக்குச் சுவர்க்கத்தை உண்டாக்கினவனாகின்றான். அல்லது, இரண்டாவது சுருக்காகாரத்திற்கு இது விகியாமெனக் கொள்க என்பதாம்.

ஆகார ஹோமத்தில் மந்திரமின்று குணங்களை விதிக்கின்றது

பிராமணம் 22

ऋजुमा घारयत्यृजुरिव हि प्राणस्संततमा घारयति प्राणानामन्नाद्यस्य संतत्या अथो रक्षसामपहत्यै ।

என்பது.

உரை

தெற்கிலிருந்து வடக்குவரை செய்யும் நெய்த்தாரையைக் கோணுமலும் விட்டுவிடாமலுஞ் செய்தல் வேண்டும். இது, பிராணன் அன்னம் இரண்டும் இடையறாதிருத்தற்பொருட்டாம். அல்லது இராக்கதர்களை விலக்குதற் பொருட்டாம் என்பதாம்.

நேரே செய்தல் நித்தியப் பிரயோகத்திற்கு அங்கமாதலின் காமியமாந்தன்மையால் கோணலே விதிக்கின்றது

பிராமணம் 23

यं कामयेत प्रमायुकस्स्यादिति जिह्मं तस्याऽऽघारमाघारयेत्प्राणमेवास्माज्जिह्मं
नयति ताजक्प्र मीयते ।

என்பது

உரை

எவ்வெசமானனுடைய மரணத்தை விரும்புகின்றானோ, அவனுக்கு கோணலாக ஆகார ஹோமஞ் செய்தல் வேண்டும். அதனால், அவனுடைய இடதுவிலாப்புற முதலிய நாடிகளில் வாயு நுழைந்து உடலைக் கோணலாக்கி விடுகின்றது. இதனால் வெகு சீக்கிரத்தில் அவன் இறந்துவிடுகின்றான் என்பதாம்.

ஆகாரஹோம சேடத்தை துருவாவில் விடல் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 24

शिरो वा एतद्यज्ञस्य यदाघार आत्मा ध्रुवाऽऽघारमाघार्य ध्रुवाᳪ समन-
क्त्यात्मन्नेव यज्ञस्य शिरः प्रति दधाति ।

என்பது

உரை

தன்னைப்போன்ற துருவாவில் வேள்வியின் தலையையொத்த ஆகார ஹோமநெய்யை விடில் தன்மீது வேள்வியின் தலையை வைத்துக்கொண்டவனாகின்றான். பௌரோடாசிக காண்டத்தில் இவைகள் கூறப்பட்டிருப்பினும் ஈண்டு அதை யெடுத்துக் கொண்டு அதன் நேர் கோணல் முதலானவைகள் விதிக்கப்படுகின்றன என்பதாம்.

ஈண்டு, வரணம் (அழைப்பு) ஹோதாவிடயம் என்றும், அக்னீதவிடய மென்றும் இருவகைத்தாம். அவற்றுள், உத்தரத்திலிருந்து (வடக்கிலிருந்து)

சமித்து மந்திர நியமம்)

கீழ்ப்பட்டவர்களை யழைத்தலோ, பார்க்கவர், ச்யவனர், அப்னவானர், ஔர்வர், சமதக்கினி என்பதைப் போன்றது. இதுவே ஹோதாவைப் பற்றியதாம். மற்றொன்றோ, 'மநுஷ்யவத் பரதவத்' என்பது முடிவாய மந்திரத்தை ஓதிவிட்டு சமதக்னிவத் ஊர்வவத், அப்னவானவத், ச்யவனவத் பிருகுவத் என்று கூறத்தக்கதாம். இது அத்வரியுவைப் பற்றியதாம். அற்றுள்,

---

அத்துவரியுவைக் கர்த்தாவாகக் கொண்டதும், ஹோதா விடயமுமாகிய வரணம் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 25

अग्निर्देवानां दूत आसीद्दैव्योऽसुराणां तौ प्रजापतिं प्रश्नमैतां स प्रजापतिर्ब्राह्मणमवैक्षदेतद्धि ब्रूहीत्या श्रावयेतीदं देवाश्शृणुतेति वाव तदब्रवीदग्निर्दैवो होतेति य एव देवानां तमवृणीत ततो देवा अभवन्पराऽसुरा यस्यैवं विदुषः प्रवरं प्रवृणते भवत्यात्मना पराऽस्य भ्रातृव्यो भवति ।

என்பது

உரை

அக்கினி, மாநுஷம் என்றும் தைவ்யம் என்றும் இருவகைப்படும். அவற்றுள், பூமியில் ஹோமங்கட்குச் சாதனமாயிருக்கும் இப்போதுள்ள அக்கினியே மாநுஷமாம். இது, தேவர்கட்கு அவிசுகளை ஏற்றுச் செல்வதாய் தேவதூதுவனாயிருக்கும். வானிலுள்ளது தைவ்யமாம். இது, அசுரர்கட்கு நன்மையைச் செய்து கொண்டு அசுரர்கட்குத் தூதுவனாக இருக்கும். இவ்விருவகை அக்கினிகளும், தம்முட் கலகமுற்று யார் தூதுவனாந்தன்மைக்கு உரியார் என்று விவாதமிட்டுக் கொண்டு அச்சங்கையை நீக்குதற்கு பிரசாபதியிடஞ் சென்றன. பிரசாபதி, இவ்விரண்டு அக்கினிகளுள், மாநுஷ அக்கினியை நோக்கி, மனித சம்பந்தமாகிய அக்கினியே! நீயே தூதுவனாக இருத்தற்குரியாய். ஏனெனின்? நீ பிராமணன, அதாவது பிரம மென்னும் வேதத்திற் கூறியவைகளை முடிக்க வல்லவனென்பதாம். இவ்வாற்றால், நீ, மேலுஞ் சொல்வாய்; ஹோதாவே! உன்னை வரிக்கின்றேன் என்று அத்துவரியுவாக இருந்து சொல்வாயாக. அதாவது 'ஹோதா ப்ரூஹி' என்பதையும், மற்றும், தேவர்கட்குக் காதில படுமாறு ஹோதரவரண முதலிய வேட்டபோன கூறவேண்டிய அர்த்தத்தையும் நீயே சொல்வாயாக. இவ்வாறு, மாநுஷ அக்கினியைக் கூப்பிட்டு பிரசாபதி கூறினாரேயன்றி அசுரசம்பந்த அக்கினிக்கு ஒன்றும் கூறவில்லை; ஆதலின் மாநுஷ அக்கினியே சிறந்ததாம். இதனால் தேவர் சிறப்புற்றனர். அசுரர்கள் தாழ்வுற்றனர் என்பதாம்.

அதைப் புகழ்கின்றது

பிராமணம் 26

यद्ब्राह्मणश्चाब्राह्मणश्च प्रश्नमेयातां ब्राह्मणायाधि ब्रूयाद्यद्ब्राह्मणायाध्या-
हाऽऽत्मनेऽध्याह यद्ब्राह्मणं पराहाऽऽत्मानं पराऽऽह तस्माद्ब्राह्मणो न
परोच्यः ।

என்பது

உரை.

பிராமணனும் பிராமணனல்லாதவனும் நம்முள் யார் தீரன் என்று ஆசங்கித்துக் கொண்டு ஒரு அறிவாளியிடஞ் செல்லின் அங்குப் பிராமணனையே மேம்பாடாகக் கூறல் வேண்டும். கூறின், தன்னையே மேம்பாடாகக் கூறிக் கொண்டதாயிற்று. பிராமணனைத் தாழ்த்திக்கூறில் தன்னையே தாழ்த்திக் கொண்டதாயிற்று. ஆதலின், எங்கும் பிராமணனின் பழிப்பான வார்த்தைகளைக் கூறக்கூடாது என்பதாம்.

பதின்மூன்றாம் அநுவாகம்

முற்றிற்று

பன்னிரண்டாம் அநுவாக விடயச் சுருக்கம்

ज्योगामयाविनो वायुरायुर्दाऽऽग्नेयके तथा ।
आप्या संतेच सौम्येस्त्वाद्योतुपेति वारुणे ॥ १ ॥
सारस्वते प्रणोवानोऽमाऽमा वैष्णवे भवेत् ।
इमं तत्वाऽश्वदानीष्टौ उदुचित्रंतु सौर्यके ॥ २ ॥
अपां न समपोनप्त्र इन्द्रावेत्यैन्द्रवारुणे ।
मैत्रावरुण आमिक्षायागे त्वानः प्रवेतिच ॥ ३ ॥
पुनराधेयकेत्वाग्नि वारुणेत्वं नं इत्युभे ।
प्रप्रेति प्रवदाग्नेये विद्वयं बाधसंयुते ॥ ४ ॥
सत्वं प्रतीकसंयुक्ते अ ऽइवित्यैन्द्रयागके ।

वीन्द्रेति वैमृधे हीन्द्रियाऽनुतेत्विन्द्रियावते ॥ ५ ॥
मन्त्राह्यस्मिन्ननुवाके पञ्चत्रिंशदुदीरिताः ।

நீண்டகாலமாய்ப் பிணியுடையவன், அல்லது ஆயுளை விரும்புகின்றவன் என்னுமிருவருஞ் செய்யத்தக்க ஐந்து அவிகளைக் கொண்ட இஷ்டி குதிரையைத் தானம் வாங்கியவன் செய்யவேண்டிய இரண்டு அவிகளைக் கொண்ட இஷ்டி என்னும் இரண்டு இஷ்டிகளிலுஞ் சேர்ந்த எழுதேவதைகளுக்கும் முன்றயே யாஜ்யா புரோநுவாக்கியங்களின் தலைப்புச் சொற்களும், அபோநப்த்ரீய இஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியமும், பாவத்தால் பீடிக்கப்பட்டவன் செய்யும் இந்திராவருண இஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியமும், மைத்ராவருண ஆமிக்ஷையின் தலைப்புச் சொற்களும், அக்னி உத்வாசன இஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியம், பகைவனை உடையவன் செய்யும் இஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியமும், கை இஷ்டியில் இரண்டாவது அவியின் தலைப்புச் சொற்களும், மூன்றாவது அவியின் யாஜ்யா புரோநுவாக்கியங்களுங் கூறப்படுகின்றன.

இரண்டாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் நாற்பத்துநான்கு பதங்களைக் கொண்டது

காமிய இஷ்டிகளின் யாஜ்யாநுவாக்கியங்களைக் கூறும் மந்திரங்கள்

आयुष्ट आयुर्दा अग्न आ प्यायस्व सं तेऽव ते हेड उदुत्तमं प्र
णो देव्या नो दिवोऽग्नाविष्णू अग्नाविष्णू इमं मे वरुण तत्त्वा
याम्युदुत्यं चित्रम् । अपां नपादाह्यस्थादुपस्थं जिह्मानामूर्ध्वो
विद्युतं वसानः । तस्य ज्येष्ठं महिमानं वहन्तीर्हिरण्यवर्णाः परि
यन्ति यह्वीः । सम् ॥ १ ॥ अन्या यन्त्युप यन्त्यन्याः समानमूर्वं
नद्यः पृणन्ति । तमू शुचिꣳ शुचयो दीदिवाꣳसमपां नपातं परि

तस्थुरापः। तमस्मेरा युवतयो युवानं मर्मृज्यमानाः परि यन्त्यापः।
स शुक्रेण शिक्वना रेवदग्निर्दीदायानिध्मो घृतनिर्णिगप्सु। इन्द्रा-
वरुणयोरहꣳ सम्राजोरव आ वृणे। ता नो मृडात ईदृशे। इन्द्रा-
वरुणा युवमध्वरायनः॥ २॥ विशे जनाय महि शर्म यच्छतम्।
दीर्घप्रयज्युमति यो वनुष्यति वयं जयेम पृतनासु दूढ्यः। आ नो
मित्रावरुणा प्र बाहवा। त्वं नो अग्ने वरुणस्य विद्वान्देवस्य हेडो-
ऽवयासिसीष्ठाः। यजिष्ठो वह्नितमश्शोशुचानो विश्वा द्वेषाꣳसि
प्र मुमुग्ध्यस्मत्। स त्वं नो अग्नेऽवमो भवोती नेदिष्ठो अस्या
उषसो व्युष्टौ। अव यक्ष्व नो वरुणम्॥ ३॥ रराणो वीहि मृडी-
कꣳ सुहवो न एधि। प्रप्रायमग्निर्भरतस्य शृण्वे वि यत्सूर्यो न
रोचते बृहद्भाः। अभि यः पूरुं पृतनासु तस्थौ दीदाय दैव्यो
अतिथिश्शिवो नः। प्र ते यक्षि प्र त इयर्मि मन्म भुवो यथा
वन्द्यो नो हवेषु। धन्वन्निव प्रपा असि त्वमग्न इयक्षवे पूरवे प्रत्न
राजन्।॥ ४॥ वि पाजसा वि ज्योतिषा। स त्वमग्ने प्रतीकेन
प्रत्योष यातुधान्यः। उरुक्षयेषु दीद्यत्। तꣳ सुप्रतीकꣳ सुदृशꣳ-
स्वञ्चमविद्वाꣳसोविदुष्टरꣳ सपेम। स यक्षद्विश्वा वयुनानि विद्वान्प्र
हव्यमग्निरमृतेषु वोचत्। अꣳहोमुचे विवेष यन्मा वि न इन्द्रेन्द्र
क्षत्रमिन्द्रियाणि शतक्रतोऽनु ते दायि॥ ५॥

புரோநு வாக்கியங்கள்

இப்பிரபாடகத்தின் அநுவாகங்களின் தலைப்புச் சொற்களைக் கொண்ட எண்:—

विश्वरूपस्त्वष्टेन्द्रं वृत्रंब्रह्मवादिनस्सत्वै नासोमयाज्येष वेदेवरथो देवावैनाचि नायज्ञोऽग्ने महान्त्रीन्निवीत मायुष्टेद्वादश । ॥ ४ ॥

பஞ்சாதிகளின் தலைப்புச் சொற்களின் எண்:—

विश्वरूपो नैनंशीतरूरावद्य वसुपूर्वेद्युर्वाजा इत्यग्ने महान्निवीत मन्या यन्ति चतुस्सप्ततिः । ॥ ७४ ॥

இம்மூன்றாம் பிரபாடகத்தில், நீண்ட பிணியுடையவன் அல்லது நீண்ட ஆயுளை விரும்பியவன் செய்யவேண்டிய ஆக்நேய அஷ்டாகபாலம், சௌம்ய சரு, வாருணம் தசகபாலம், சாரஸ்வதம் சரு, அக்நாவைஷ்ணவம் ஏகாதச கபாலம், வருணாஞ்சநாஷ்கபாலம், சௌர்யம் ஏககபாலம் என்னும் எழு அவிகளுக்கும் முறையே யாஜ்யாநு வாக்கியங்களின் தலைப்புச் சொற்கள் கூறப்படுகின்றன.

மந்திரங்கள் 1 முதல் 14 வரை

आयुष्ट आयुर्दा अग्न आ प्यायस्व सं तेऽवतेहेड उदुत्तमं प्र णो देव्या नो दिवोऽग्नाविष्णू अग्नाविष्णू इमं मे वरुण तत्त्वा याम्युदुत्यं चित्रम् ।

என்பது.

உரை.

ஆக்நேய எட்டுக் கபாலத்திற்கு ஆயுஷ்டேவிஸ்வதோ அததக் என்பது புரோநுவாக்கியம், "ஆயுர்தா அக்நே ஹவிஷோஜுஷாண" என்பது யாஜ்யாவாக்கியமாம், "த்வமக்னேருத்ர" என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. சௌம்யசருவுக்கு "ஆப்யாயஸ்வ ஸமேதுதே" என்பது புரோநுவாக்கியம். 'ஸம்தே பயாம்ஸி ஸமுயந்து வாஜா என்பது யாஜ்யாவாக்கியமாம். இவ்விரண்டிற்கும் நான்காங்காண்டம் "மாமோ ஹிம்ஸீ:' என்னும் அநுவாகத்தில் உரை கூறப்படும். வாருண தசகபாலத்திற்கு, 'அவதேஹேடை' என்பது புரோநுவாக்கியம் "உதுத்தமம்" என்பது யாஜ்யாவாக்கியமாம். இவ்விரண்டிற்கும் 'வைச்வாநரோ, என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. சாரஸ்வதத்திற்கு, 'ப்ரணோதேவி' என்பது அநுவாக்கியம். "ஆநோதிவோபிருஹத:" என்பது யாஜ்யா வாக்கியம். அக்நாவைஷ்ணவத்திற்கு, "அக்நாவிஷ்ணூ மஹிதத்வாம்" என்பது புரோநு

வாக்கியம். 'அக்னு விஷ்ணூமஹிதாம' என்பது யாஜ்யா வாக்கியம். இந் நான்கிற்கும் முதற்காண்டம் கடைசி அநுவாகத்தில் உரை கூறப்பட்டுள்ளது. வாருணம் சதுஷ் கபாலத்திற்கு, "இமம்மேவருண" என்பது புரோநுவாக்கியம். "தத்வாயாமி" என்பது யாஜ்யாவாக்கியமாம். இவ்விரண்டிற்கும் இக்காண்டத்தின் முதற்பிரபாடகத்தின் கடைசி அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. சௌர்யத்திற்கு, "உதுத்யம் ஜாதவேதஸம்" என்பது புரோநு வாக்கியம். "சித்ரம் தேவாநாம்" என்பது யாஜ்யாவாக்கியமாம். இவ்விரண்டிற்கும் முன்காண்டத்தின் நான்காம் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்.

" அபோ நப்த்ரீயம் சரும் புநரேத்ய நிர்வபேத் " என்பதற்குப் புரோநுவாக்கியங் கூறப்படுகின்றது.

மந்திரம் 15

अपां नपादा ह्यस्थादुपस्थं जिह्मानामूर्ध्वो विद्युतं वसानः। तस्य ज्येष्ठं महिमानं वहन्तीर्हिरण्यवर्णाः परि यन्ति यह्वीः।

என்பது

உரை.

சுழல் நீரின்மேல் இருப்பதும், மின்னலையே ஆடையாக வுடையதும், நீரைக்கெடுருமற் செய்வதுமாகிய 'நபாத்' என்னுந் தேவதையானது தனது மகிமையைத்தாங்கும் நீரைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. மற்றும், தனது உறைவிடத்தில் இருக்கின்றது. அதாவது, நீர் தனது சுவாமியின் மகிமையைப் பரப்புகின்றது என்பதாம். பொன்மயமான மின்னல்களுக் குள்ளிருத்தலின் பொன்மயமாம். பெரியதுமாம் என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யாவாக்கியத்தைக் கூறுகின்றது

மந்திரம் 16

समन्या यन्त्युप यन्त्यन्याःसमानमूर्वं नद्यः पृणन्ति। तमू शुचिꣳ शुचयो दीदिवाꣳसमपां नपातं परि तस्थुरापः।

என்பது

உரை

சில நீர்கள் ஒன்றற்கொன்று சேர்ந்து கொண்டு பிரவாகமாய்ச் செல்கின்றன. சில பிரவாகமின்றிக் கிடக்கின்றன. ஆறுகள் போய் விழுவதால் பெருகாததும், ஆறுகள் விழாவிடில் குறையாததுமாகிய கடல், தன்னுட் புகுவதால் ஆறுகளைப் பிரியப்படுத்துகின்றது. புனிதமுடையதும், பரிசோதிப்பதும், விளக்கமுடையதும், கெடாததுமாகிய அத்தகைய நீர் நாற்புறமுஞ் சூழ்ந்து கொண்டிருக்கின்றது.

மேற்கூறிய அதற்கே விகற்பமாகிய யாஜ்யாவாக்கியம்

மந்திரம் 17

तमस्मेरा युवतयो युवानं मर्मृज्यमानाः परि यन्त्यापः । स शुक्रेण शिक्वना रेवदग्निर्दीदायानिध्मो घृतनिर्णिगप्सु ।

என்பது

உரை

கட்டிளமையையுடைய, 'நபாத்' என்னும் நீரின் தேவதையை, அநுகூலமுடையதும், கட்டிளமையுடையதும், பரிசுத்தப் படுத்துவதுமாகிய நீர் இனிது அடைகின்றது. சுத்தமாகிய பிரகாசமுடையதும், ஒளியுடையதும், நெய்யை முழுதும் பரிசோதனை செய்வதுமாகிய நீர் இனிது விளங்குகின்றது என்பதாம்.

"பாவம் பற்றியவன் இந்திரனையும் வருணனையும் ஆமிக்ஷை செய்வானாக"
என்பதற்குப் புரோநு வாக்கியங் கூறப்படுகின்றது

மந்திரம் 18

इन्द्रावरुणयोरहꣳ सम्राजोरव आ वृणे । ता नो मृडात ईदृशे ।

என்பது

உரை.

நன்கு விளங்கப்பெற்ற இந்திரன் வருணன் என்பவர்களுடைய பாதுகாப்பை மிகவேண்டுகின்றேன். அவர்கள் இத்தன்மைய பாதுகாப்பில் எம்மைச்சுகப்படுத்துவார்களாக என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியம்.

மந்திரம் 19

इन्द्रावरुणा युवमध्वराय नो विशे जनाय महि शर्म यच्छतम् । दीर्घप्रयज्युमति यो वनुष्यति वयं जयेम पृतनासु दूढ्यः ।

என்பது

உரை

இந்திர வருணர்களே! நீவிரிருவரும், யாகத்தை அநுட்டித்தற் பொருட்டும் பரிவாரமக்கள் கிடைத்தற் பொருட்டும் ஆபத்தை நீக்குவதாகிய பெருஞ் சுகத்தை யளிப்பீர்களாக. பாவம் எமது நெடுநாள் யாகப் பிரயோகத்தைக் கடந்து எம்மைப் பீடிக்கிறது. யாம் உங்களுடைய அருளால், பாவஞ் செய்யும் பீடைக்கு அசையாதவனாய் அந்தப்பாவத்தை வெல்வோமாக என்பதாம்.

ஐந்தாங் காண்டத்தில், यथावै हविः, என்பது முதலியதால் விதிக்கப்படும். மைத்திரா வருண்ய ஆமீக்ஷா யாகத்திற்குக் கூறப்படும் யாஜ்யா புரோநு வாக்கியங்களின் நிலைபெற்ற சொற்களைக் கூறுகின்றது

மந்திரம் 20-21

आ नो मित्रावरुणा प्र बाहवा ।

என்பது

உரை

'ஆநோ மித்ராவருணா, என்பது புரோநுவாக்கியம். "ப்ரபாஹவா" என்பது யாஜ்யாவாக்கியம். இவ்விரண்டிற்கும் 'அக்நாவிஷ்ணூ' என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்.

புநராதேயப் (மீண்டுத் தீயுண்டாக்கும்) பிரகரணத்தில் 'வீரஹாவாஏஷ:' என்பது முதலியதால் விதிக்கப்பட்ட அக்கினி வாருண ஏகாதச கபாலத்திற்குப் புரோநுவாக்கியங் கூறப்படுகின்றது.

மந்திரம் 22

त्वं नो अग्ने वरुणस्य विद्वान्देवस्य हेडोऽवयासिसीष्ठाः । यजिष्ठो वह्नितमः शोशुचानो विश्वा द्वेषाꣳसि प्र मुमुग्ध्यस्मत् ।

என்பது

உரை

அக்கினியே! நீ, எமது பக்தியை யுணர்ந்து எம்மிடத்தில் வருணனுக்கு உண்டாகும் கோபத்தை நீக்குவாயாக. அதிசயமாய் வேள்வியுண்டாக்குவோய்! தேவர்கட்கு அவியை ஏற்றுச் செல்வோய்! விளங்குவோய்! நீ, எம்மிடத்திற் பொறாமை கொள்ளும் எல்லாரையும் நீக்கிவிடுவாயாக என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியங் கூறப்படுகின்றது.

மந்திரம் 23

स त्वं नो अग्नेऽवमो भवोती नेदिष्ठो अस्या उषसो व्युष्टौ । अव यक्ष्व नो वरुणꣳरराणो वीहि मृडीकꣳ सुहवो न एधि ।

என்பது

உரை

உஷத் (அதிகாலை) காலத்தில் மிக அணுகியிருப்போனாகிய அக்கினியே! நீ, எமது பாதுகாப்பால் பரிபாலிக்கப் பெறுவோனாவாய் வருணன் எமக்குச் செய்த பாவமுதலியவைகளை நீக்குவாயாக. களிப்புடன் சுகத்தையளிக்கும் அவியை உண்பாயாக. அதினின்றும், எங்களால் அழைக்கத் தக்கோனாவாய் என்பதாம்.

பகையுடையவன் பொறாமை கொண்டு இந்த இஷ்டியால், பிரவதே அக்னயே அஷ்டாகபாலம் புரோடாசஞ் செய்தல் வேண்டும் என்பதற்குப் புரோநுவாக்கியம்.

மந்திரம் 24

प्रप्रायमग्निर्भरतस्य शृण्वे वि यत्सूर्यो न रोचते बृहद्भाः । अभि यः पूरुं पृतनासु तस्थौ दीदाय दैव्यो अतिथिश्शिवो नः ।

என்பது

உரை

இவ்வக்கினி யசமானனுடைய அழைப்பை அன்போடு கேட்பதாகுக. மற்றுஞ் சூரியனைப்போல் விளங்குகின்றதும், போரில் எல்லாவகையாலும் வெற்றியைத் தேடுவதும் தேவர்கட்கு இனியதும் மங்களமுமாகிய இவ்வக்கினி எமது அதிதியாய் இக்குலமுருவதாகுக என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியம்

மந்திரம் 25

प्र ते यक्षि प्र त इयर्मि मन्म भुवो यथा वन्द्यो नो हवेषु । धन्वन्निव प्रपा असि त्वमग्न इयक्षवे पूरवे प्रत्नराजन् ।

என்பது

உரை

அக்கினியே! உன் பொருட்டு நன்கு யாகஞ் செய்கின்றேன். எமது யாகங்களில், நீ எவ்வாற்ருல் வணங்கப்பெறுகின்றோன் ஆவையோ, அவ்வாற்ருல் வணங்கி உனது அருளைப் பெற்றுக் கொள்கின்றேன். அக்கினியே! அவியளிக்கும் எசமானனுக்கு, கானற் பூமியிலுள்ள தண்ணீர்ப் பந்தரைப் போல் இன்பமளிக்கின்ருேனுயிருக்கின்ருய். நீ பழமையோய்! பிரகாச முடையோய்! ஆகுவாய் என்பதாம்.

மேற்கூறியதில் இரண்டாவது அவியான "விபாதவதே அக்னயே" என்பதற்கு யாஜ்யா புரோநுவாக்கியத்தின் தலைப்புச்சொல் கூறப்படுகின்றது.

மந்திரம் 26 - 27

वि पाजसा वि ज्योतिषा ।

என்பது

உரை.

"விபாஜஸா பிருதுனு சோசுசான:" என்பது புரோநு வாக்கியம் இதற்கு, நான்காங்காண்டம் முதற் பிரபாடகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது "விஜ்யோதிஷா பிருகதா" என்பது யாஜ்யை இதற்கு இருஉுஷ்வ, என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டுள்ளது என்பதாம்.

மேற்கூறியதிலே மூன்ருவதாகவுள்ள "பிரதீகவதே அக்னயே" என்னும் அவிக்கு புரோநுவாக்கியங் கூறப்படுகின்றது.

மந்திரம். 28

स त्वमग्ने प्रतीकेन प्रत्योष यातुधान्यः । उरुक्षयेषु दीद्यत् ।

என்பது

உரை

இடம்பெருத்த யாகசாலைக்குள் விளங்கும் அக்கினியே! நீ, கருமத் தொடக்கமாத்திரத்தினுலேயே ஒவ்வொரு அசுரர்களையும் எரித்து விடுவாயாக என்பதாம்.

மேற்கூறிய அதற்கே யாஜ்யா வாக்கியம்.

மந்திரம் 29

तꣳ सुप्रतीकꣳ सुदृशꣳ स्वञ्चमविद्वाꣳसो विदुष्टरꣳ सपेम । स यक्षद्विश्वा वयुनानि विद्वान्प्र हव्यमग्निरमृतेषु वोचत् ।

என்பது

உரை.

மங்களமாய்த் தொடங்கியதும், எமது அநுக்கிரகத்தின் பொருட்டு அடைந்ததும், குளிர்ந்த நோக்குடையதும், எமது கருமத்தில் நல்வரவுடையதும், அதிசயமாக அன்பர்களின் மனதை அறிவதுமாகிய அக்கினியை யாம் அடைந்திருக்கின்றோம். அவ்வக்கினி, தேவர்க ளிருப்பிடங்களிலே கருத்துக்களெல்லாவற்றையும் உணர்ந்து கொண்டிருக்கின்றது. ஆதலின், அவ்வக்கினி எமது அவியை நன்கு கூறுக என்பதாம்.

பகையுடையவன், இந்திரன் பொருட்டும், வைமிருத இந்திரன் பொருட்டும் இந்திரியமுடைய இந்திரன் பொருட்டும் செய்யப்படும் ஏகாதசகபால புரோடாச அவிகள் மூன்றிற்கும் யாஜ்யா புரோநு வாக்கியங்களின் தலைப்புச் சொற்கள் கூறப்படுகின்றன

மந்திரம் 30 - 35

अꣳहोमुचे विवेष यन्मा वि न इन्द्रेन्द्र क्षत्रमिन्द्रियाणि शतक्रतोऽनु ते दायि ॥ ५ ॥

என்பது.

உரை

"அம்ஹோமுசே ப்ரபர,, என்பது முதலாவது அவியின் புரோநு வாக்கியம் "விவேஷயன்மா" என்பது யாஜ்யாவாக்கியம். இரண்டாவது அவிக்கு விநஇந்த்ரம்ருத, என்பது புரோநுவாக்கியம். இந்த்ரக்ஷத்ரம், என்பது யாஜ்யாவாக்கியம். இந்திரியாணி சதக்ரதோ, என்பது மூன்றாவது அவியின் புரோநுவாக்கியமாம். "அநுதேதாயிமஹ:" என்பது யாஜ்யாவாக்கியமாம் இந்த ஆறிற்கும் முதற்காண்டம் ஆறாவது பிரபாடகத்தின் கடைசி அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்

பன்னிரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

ஐந்தாவது பிரபாடகம்

முடிந்தது

இரண்டாங் காண்டம்

ஆறுவது பிரபாடக விடயச் சுருக்கம்

हौत्रमाध्वर्यवं चाऽऽघारान्तं पञ्चम ईरितम् ।

प्रयाजाद्यवशिष्टं तु वक्तिषष्ठे प्रपाठके ॥ १ ॥

ஐந்தாம் பிரபாடகத்தில் ஆகாரஹோமம் முடிவாக ஹௌத்ரம் ஆத்வரியவம் என்பன கூறப்பட்டன. ஆறாம் பிரபாடகத்தில் எஞ்சிய பிரயாஜ முதலிய யாகங்கட்குள்ள ஹௌத்ர மந்திரங்களின் பொருள்கள் விரிவாய்க் கூறப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் ஆறுவது பிரபாடகம்

முதலாவது அநுவாகம்

ஆறுபஞ்சாதிகட்குமேல் முப்பத்தைந்து பதங்களைக் கொண்டது.

பிரயாஜயாக விதியைக் கூறும் பிராமணங்கள்.

समिधो यजति वसन्तमेवर्तूनामव रुन्धे तनूनपातं यजति ग्रीष्ममेवाव रुन्ध इडो यजति वर्षा एवाव रुन्धे बर्हिर्यजति शरदमेवाव रुन्धे स्वाहाकारं यजति हेमन्तमेवाव रुन्धे तस्मात्स्वाहाकृता हेमन्पशवोऽव सीदन्ति समिधो यजत्युषस एव देवतानामव रुन्धे तनूनपातं यजति यज्ञमेवाव रुन्धे ॥ १ ॥ इडो यजति पशूनेवाव रुन्धे बर्हिर्यजति प्रजामेवाव रुन्धे समानयत उपभृतस्तेजो वा आज्यं प्रजा बर्हिः प्रजास्वेव तेजो दधाति स्वाहाकारं यजति वाचमेवाव रुन्धे दश सं पद्यन्ते दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव रुन्धे समिधो यजत्यस्मिन्नेव लोके प्रति तिष्ठति तनूनपातं यजति ॥ २ ॥ यज्ञ एवान्तरिक्षे प्रति तिष्ठतीडो यजति

पशुष्वेव प्रति तिष्ठति बर्हिर्यजति य एव देवयानाः पन्थानस्तेष्वेव प्रति तिष्ठति स्वाहाकारं यजति सुवर्ग एव लोके प्रति तिष्ठत्येतावन्तो वै देवलोकास्तेष्वेव यथापूर्वं प्रति तिष्ठति देवासुरा एषु लोकेष्वस्पर्धन्त ते देवाः प्रयाजैरेभ्यो लोकेभ्योऽसुरान्प्राणुदन्त तत्प्रयाजानां प्रयाजत्वं ॥ ३ ॥ प्रयाजत्वं यस्यैवं विदुषः प्रयाजा इज्यन्ते प्रैभ्यो लोकेभ्यो भ्रातृव्यान्नुदतेऽभिक्रामं जुहोत्यभिजित्यै यो वै प्रयाजानां मिथुनं वेद प्र प्रजया पशुभिर्मिथुनैर्जायते समिधो बह्वीरिव यजति तनूनपातमेकमिव मिथुनं तदिडो बह्वीरिव यजति बर्हिरेकमिव मिथुनं तदेतद्वै प्रयाजानां मिथुनं य एवं वेद प्र ॥ ४ ॥ प्रजया पशुभिर्मिथुनैर्जायते देवानां वा अनिष्टा देवता आसन्नथाऽसुरा यज्ञमजिघाꣳसन्ते देवा गायत्रीं व्यौहन्पञ्चाक्षराणि प्राचीनानि त्रीणि प्रतीचीनानि ततो वर्मं यज्ञायाभवद्वर्म यजमानाय यत्प्रयाजानूयाजा इज्यन्ते वर्मैव तद्यज्ञाय क्रियते वर्म यजमानाय भ्रातृव्याभिभूत्यै तस्माद्वरूथं पुरस्ताद्वर्षीयः पश्चाद्ध्रसीयो देवा वै पुरा रक्षोभ्यः ॥५॥ इति स्वाहाकारेण प्रयाजेषु यज्ञꣳ सꣳस्थाप्यमपश्यन्तꣳ स्वाहाकारेण प्रयाजेषु समस्थापयन्वि वा एतद्यज्ञं छिन्दन्ति यत्स्वाहा कारेण प्रयाजेषु सꣳ स्थापयति प्रयाजानिष्ट्वा हवीꣳष्यभि घारयति यज्ञस्य संतत्या अथो हविरेवाकरथो यथापूर्वमुपैति पिता वै प्रयाजाः

प्रजाऽनूयाजा यत्प्रयाजानिष्ट्वा हवीꣳष्यभिघारयति पितैव तत्पुत्रेण साधारणम् ॥ ६ ॥ कुरुते तस्मादाहुर्यश्चैवं वेद यश्च न कथा पुत्रस्य केवलं कथा साधारणं पितुरित्यस्कन्नमेव तद्यत्प्रयाजेष्विष्टेषु स्कन्दति गायत्र्येव तेनगर्भं धत्ते सा प्रजां पशून्यजमानाय प्र जनयति ॥ ७ ॥

ஈண்டு, விதிக்கப்படும் பிரயாஜயாக மந்திரங்கள், மந்திர காண்டம் ஐந்தாமநுவாகத்தில், "சமிதோ அக்ன ஆஜ்யஸ்ய வியந்து" என்பது முதலாகக் கூறப்பட்டுள்ளவைகள்.

அங்குக் கூறப்பட்டுள்ள மந்திரங்களாற் செய்யத்தக்க பிரயாசயாகங்களை விதிக்கின்றது.

பிராமணம் 1.

समिधो यजति वसन्तमेवर्तूनामव रुन्धे तनूनपातं यजति ग्रीष्ममेवाव रुन्ध इडो यजति वर्षा एवाव रुन्धे बर्हिर्यजति शरदमेवाव रुन्धे स्वाहाकारं यजति हेमन्तमेवाव रुन्धे तस्मात्स्वाहाकृता हेमन्पशवोऽव सीदन्ति ।

என்பது

உரை.

'சமித:' என்பது முதலியன யாகங்களின் சிறப்புப் பெயர்கள். 'சமித, என்னும் யாகஞ் செய்கின்றவன் வசந்த காலத்தை தன்வயப் படுத்திக்கொள்கின்றான். தநூநபாத யாகஞ்செய்கின்றவன் வேனிற் காலத்தை தன்வயப் படுத்திக் கொள்கின்றான். இடாயாகஞ் செய்கின்றவன் மழைக்காலத்தை தன்வயப் படுத்திக் கொள்கின்றான். பர்ஹி யாகஞ்செய்கின்றவன் குளிர் காலத்தைத் தன்வயப்படுத்திக் கொள்கின்றான். சுவாஹாகார யாகஞ் செய்கின்றவன் பனிக்காலத்தை தன் வயப் படுத்திக் கொள்கின்றான். பனிக் காலத்தில் செய்யால் வளர்ந்த தீயானது சுடுவதுபோல், இருகாற் பிராணிகளையும் நாற்காற் பிராணிகளையும் வாட்டுகின்றது. அவ்வாறிருந்தும் அக் காலமும் இதன் வசப்பட்டுப் போகின்றது என்பதாம்.

இது யாகத்தின் துதியாம் என்பதை யுணர்க. ஈண்டு ரிதுக்களே பிரயாஜ யாகங்கள் எனப்படுதலின் பிரயாஜ முதலியவைகளால் முறையாய் வசந்த முதலிய ரிதுகாலங்கள் வசப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

மீண்டும் மற்றொரு வகைவிதியால் புகழ்கின்றது.

பிராமணம் 2.

समिधो यजत्युषस एव देवतानामव रुन्धे तनूनपातं यजति यज्ञमेवाव रुन्ध इडो यजति पशूनेवाव रुन्धे बर्हिर्यजति प्रजामेवाव रुन्धे ।

என்பது

உரை

'சமித்' என்பது துதியின் குறிப்பாமாதலின் உஷாக்காலங்கள் கொள்ளப்படுகின்றன. தநூநபாத் என்பது கேடிலாதன்மையின் குறியாமாதலின் எக்ஞங்கள் அனைத்தும் கொள்ளப்படுகின்றன. இட் என்பதால் விரும்பும் பால் முதலியன கொள்ளப்படுதலின் பசுக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பிரஜா வை பர்ஹி: என்று பிறசுருதியுங் கூறுதலின் பர்ஹியாகத்தால் பிரசைகள் கொள்ளப் படுகின்றன என்பதாம்.

நான்காவது பிரயாசை யாகத்தின் பொருட்டு 'உபப்ருத்' என்னும் பாத்திரத்திலிருந்து நெய்யை ஊற்றிக்கொள்ள வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 3

समानयत उपभृतस्तेजो वा आज्यं प्रजा बर्हिः प्रजास्वेव तेजो दधाति ।

என்பது.

உரை

உபபிருதிலிருந்து பாதிநெய்யை சுருவில் எடுத்துக்கொள்ளல் வேண்டும். பர்ஹியாகம் பிரசைவடிவாதலினாலும், நெய் அழகு வடிவாமாதலானும் பிரசைகளிடத்தில் அழகு உண்டாக்கப்பெற்றதாகின்றது என்பதாம்.

ஐந்தாவது பிரயாச யாகத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 4

स्वाहाकारं यजति वाचमेवाव रुन्धे ।

என்பது

உரை

சுவாஹாகார யாகஞ் செய்கின்றவன் வாக்கைப் பெறுகின்றான். இது அவ்வேள்வியில் 'சுவாஹா' அக்கினி, என்பது முதலிய சொற்களை மிகுதியாகக் கூறுதலின் என்பதாம்.

முற்கூறிய வசந்தகால முதலிய ஐந்தையடைதல், உஷாக்கால முதலிய ஐந்தையடைதல் என்னும் பத்துவகை வாயிலாக யாகங்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 5

दश सं पद्यन्ते दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्यमव रुन्धे।

என்பது

உரை

இதனால் பத்துவகை பெறப்படுகின்றன. பத்து எழுத்துக்களைக் கொண்டது விராட் என்னுஞ் சந்தமாம். விராடே அன்னமாம். விராட்டிலிருந்து விளக்கம் அன்ன முதலியன அடையப்படுகின்றன என்பதாம்.

மீண்டும் அவ்வுலகங்களின் பெருமையை யடையும் வாயிலாகப் புகழ்கின்றது.

பிராமணம் 6

समिधो यजत्यस्मिन्नेव लोके प्रति तिष्ठति तनूनपातं यजति यज्ञ एवा-
न्तरिक्षे प्रति तिष्ठतीडो यजति पशुष्वेव प्रति तिष्ठति बर्हिर्यजति य
एव देवयानाः पन्थानस्तेष्वेव प्रति तिष्ठति स्वाहाकारं यजति सुवर्ग
एव लोके प्रति तिष्ठत्येतावन्तो वै देवलोकास्तेष्वेवयथापूर्वं प्रतितिष्ठति।

என்பது

உரை.

சமித்தயாகஞ் செய்கின்றவன் இவ்வுலகிலேயே பெருமையையடைகின்றான். தநூநபாத் யாகஞ்செய்கின்றவன் அந்தரிக்கவுலகில் பெருமையையடைகின்றான். இது, தீக்ஷை முதலிய வடிவாகிய எக்ஞம் இரண்டுலகிலுமுள்ள அந்தரிக்ஷமாதலின் இதற்கு இரண்டாவது என்பது ஒத்திருத்தலின் பொருந்துமாறறிக. இட் யாகத்தினால் பசுக்கள் வளர்ச்சி என்பது முன்னமே கூறப்பட்டது. பர்ஹி என்பது தேவர்கள் போகக்கூடிய மார்க்கத்திற்குச் சாதனமாகிய வேள்வியைக்குறித்தலின் மூன்றுவகையான தேவர்கள் செல்லக்கூடிய மார்க்கங்களிலும் பெருமையடைகின்றான் என்பதாம், சுவாஹாகாரயாகம்

உத்தமமாதலின் சுவர்க்கத்தில் பெருமையையடைகின்றான். மண்ணுலகமுதல் சுவர்க்கம்வரை தேவர்களின் ஆராதனைக்குரிய உலகங்கள் இவ்வளவேயாகின்றன. இவைகளில் இந்தயாகங்களால் பெருமையடைகின்றான் என்பதாம்.

பெயரை விரித்துக் கூறும் வாயிலாகப் புகழ்கின்றது.

பிராமணம் 7

देवासुरा एषु लोकेष्वस्पर्धन्त ते देवाः प्रयाजैरेभ्यो लोकेभ्योऽसुरान्प्राणुदन्त तत्प्रयाजानां प्रयाजत्वं यस्यैवं विदुषः प्रयाजा इज्यन्ते प्रैभ्यो लोकेभ्यो भ्रातृव्यान्नुदते ।

என்பது.

உரை.

தேவர்களும் அசுரர்களும் இது எமது உலகம் இது எமது உலகம் என்று போராடினர். அக்கால் தேவர்கள், அசுரர்களை இவ்வுலகங்களினின்றும் வெளியேறும்படி இந்த யாகங்களைச் செய்தனர். இதனால் இவைகள் பிரயாசங்கள் எனப்பட்டன. பிரயாசங்களைச் செய்கின்றவன் பகைவனை நீக்குகின்றான் என்பதாம்.

ருத்திரத்திற்குரிய அபிக்ராம (கால்அடி யெடுத்து வைத்து) ஹோமஞ் செய்யும் முறையை விதிக்கின்றது.

பிராமணம் 8.

अभिक्रामं जुहोत्यभिजित्यै ।

என்பது

உரை.

முதலில் ஆகவனீயத்திற்குத் தெற்கில் தூரமாய் நின்று ஹோமஞ் செய்துவிட்டு, பிறகு, சமீபமாய் ஒவ்வொரு அடியெடுத்து வைத்து ஒவ்வொரு ஹோமஞ் செய்கின்றவன் பகைவரை வெல்கின்றான் என்பதாம்.

மந்திரத்திலுள்ள பெண்பாலின் பன்மையையும், ஏனைய பால்களின் ஒருமையையுஞ் சேர்த்துப் புகழ்கின்றது.

பிராமணம் 9

यो वै प्रयाजानां मिथुनं वेद प्र प्रजया पशुभिर्मिथुनैर्जायते समिधो बह्वी-
रिव यजति तनूनपातमेकमिव मिथुनं तदिडो बह्वीरिव यजतिबर्हिरे-
कमिव मिथुनं तदेतद्वै प्रयाजानां मिथुनं य एवं वेद प्र प्रजया पशुभि-
र्मिथुनैर्जायते ।

என்பது.

உரை.

சமித: என்பதை பல பெண்களாகவும், தநூநபாத்தை ஒரு ஆணாகவும், இட்டைபல பெண்களாகவும், பர்ஹியை ஒரு ஆணாகவுங் கொண்டு மிதுனமாக, அதாவது சோடியாகவுணர்ந்து பிரயாசை யாகங்களைச் செய்கின்றவன் சோடி சோடியான பசுக்களுடன் விளங்குகின்றான் ஆனால் இது உபசாரமாம் என்பது.

— கவசமாகவும், சைன்யமாகவும் ஒப்பிட்டுப் புகழ்கின்றது

பிராமணம் 10

देवानां वा अनिष्टा देवता आसन्नथासुरा यज्ञमजिघांसन्ते देवा गायत्रीं
व्यौहन्पञ्चाक्षराणि प्राचीनानि त्रीणि प्रतीचीनानि ततोवर्म यज्ञाया-
भवद्वर्म यजमानाय यत्प्रयाजानूयाजा इज्यन्ते वर्मैव तद्यज्ञाय क्रियते
वर्मयजमानाय भ्रातृव्याभिभूत्यै तस्माद्वरूथं पुरस्ताद्वर्षीयः पश्चा-
द्ध्रसीयः ।

என்பது

உரை

முன் காலத்தில் தேவர்கள் யாகஞ் செய்யும்போது ஆஜ்யபாக முதலிய தேவதைகள் பிரிய மற்றிருந்தனர். வேட்குமுன் வந்து அவர்கள் எக்ஞத்தைக் கெடுக்கவிரும்பினர். பிறகு, எக்ஞத்திற்குத் தடையிலாதிருக்கும்படி எட்டெழுத்துகளுடன் கூடிய காயத்திரி யென்னும் பாதத்தை (அடியை) இரண்டு

வியூகங்களாக்கினார்கள். அவற்றுள், ஐந்தெழுத்துக் கொண்டது வேள்வியின் கீழ்த்திசையைப்பாது காப்பது. மூன்று எழுத்தாகியதோ, மேற்குத்திசையைப் பாதுகாப்பதாம். ஆதலின் இது வேள்வியின் வியூகம் என வழங்கப்படுகின்றது. இதனால், ஐந்தெழுத்துக்களின் வடிவாய் ஐந்து பிரயாசை யாகங்கள் முதனாள் செய்யப்படுகின்றன. மூன்றெழுத்து வடிவாகிய அநுயாஜயாகங்கள் பின்னாற் செய்யப்படுகின்றது. இதனால், இவனுடைய பகைவனை யடக்கிக்கொள்கின்றான். போரில் முன்னால் சைன்யம் மிகுதியாகவும், பின்னால் குறைவாகவுமிருப்பது போல் இதுவும் முன்பக்கம் பெரிதும் பின் பக்கம் சிறிதுமாம் என்பதாம்.

பிரயாசையாக சேடத்தினால் அவிகளை அபிகாரஞ் (நெய்தடவல்) செய்தலை விதிக்கின்றது

பிராமணம் 11.

देवा वै पुरा रक्षोभ्य इति स्वाहाकारेण प्रयाजेषु यज्ञं संस्थाप्यम-
मपश्यन्तं स्वाहाकारेण प्रयाजेषु समस्थापयन्वि वा एतद्यज्ञं छिन्दन्ति
यत्स्वाहाकारेण प्रयाजेषु सं स्थापयन्ति प्रयाजानिष्ट्वा हवींष्यभि
घारयति यज्ञस्य संतत्या अथो हविरेवाकरथो यथापूर्वमुपैति।

என்பது

உரை.

முன்னர் தேவர்கள் யாகஞ் செய்யும்போது யாகத்தைக் கெடுக்கும் அசுரர்கள் வருமுன், சுவாஹாகாரத்தை ஐந்தாவது எக்ஞத்துடன் முடிக்கவேண்டுமென்று கருதி முடித்தனர். அது உசிதமன்று ஏனெனின்? யாகம் இடையில் கேடடைதலின். ஆதலின், பிரயாச யாகங்களைச் செய்துகொண்டு அதில் மீந்த நெய்யால் வேதியில் வைத்திருக்கின்ற அவிகளை நனைத்தல் வேண்டும். இதனால், புரோடாசமுதலிய யாகப்பொருள் அவித்தன்மையை யடைவதுடன் முன்போல் ஆஜ்யபாக முதலிய வைகளையும் தடையின்றி அடைகின்றான் என்பதாம்.

மற்றொரு வகையால் அபிகாரத்தை (அவிகளில் நெய்நனைத்தலை)ப்புகழ்கின்றது

பிராமணம் 12.

पिता वै प्रयाजाः प्रजाऽनूयाजा यत्प्रयाजानिष्ट्वा हवींष्यभिघारयति
पितैव तत्पुत्रेण साधारणं कुरुते।

என்பது

உரை

முதலிற் செய்யப்படுவதால் பிரயாசயாகங்கள் பிதாவாகின்றன. பின்னர்ச்செய்யப்படுவதால் அநுயாசயாகங்கள் புத்திரனாகின்றன. அநுயாசத்தின் பொருட்டுள்ள அவி, உபபிருது என்னும் பாத்திர விசேடத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது. புரோடாச முதலியவைகளை நெய்யால் நனைக்கும்போது உபபிருதிலுள்ள அவியும் நெய்யால் நனைக்கப்படுகின்றது. ஆதலின் மீந்தநெய் இரண்டிற்கும் பொதுவாகிவிட்டது என்பதாம்.

அதை உலக ஒப்புமையால் வெளிப்படையாக்குகின்றது

பிராமணம் 13

तस्मादाहुर्यश्चैवं वेद यश्च न कथा पुत्रस्य केवलं कथा साधारणं पितुरिति।

என்பது

உரை

உலகில், மகன்தேடிய பொருளை தனது மகன் பின்னால் வாழ்வதற் பொருட்டு தானேவைத்துக் கொள்கின்றான், தகப்பன் தேடிய பொருளோ, எல்லார்க்கும் பொதுவாகிவிடுகின்றது. இதை, மறையோதாத ஒருவன் மறையுணர்ந்த ஒருவனை வினவினன். அதற்கவன், பிரயாச அநுயாசயாகங்களைக் கொண்டு விடைகூறினன் அதாவது:- பிரயாசயாக நெய் பொதுவாம். அநுயாச நெய் சிறப்பாம். ஏனெனின்? அநுயாசசேடம் ஆகுதி செய்யப்படாததால் என்க. இவ்வாறே மகனுக்கும் தந்தைக்கும் உணர்ந்து கொள்க என்பதாம்.

மீண்டும் மற்றோராற்றினால் அபிகாரத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 14

अस्कन्नमेव तद्यत्प्रयाजेष्वि॑ष्टेषु स्कन्दति।

என்பது

உரை.

யாகத்தின் பொருட்டுள்ள பொருள் யாகஞ் செய்வதன்முன் வேறிடத்தில் விழுந்து கெடுகிறது. இதில், பிரயாசயாகத்தின் சேடம் வேறு அவிகளில் சேர்க்கப்படுகின்றது ஆதலின் இது கெடாததாம் என்பதாம்.

மீண்டும் மற்றோராற்றற் புகழ்கின்றது

பிராமணம் 15

गायत्र्येव तेनगर्भं धत्ते सा प्रजां पशून्यजमानाय प्र जनयति ।

என்பது

உரை

ஓரிடத்தில், ஐந்தெழுத்தாகிய காயத்திரி பிரயாசாவாம். மற்றோரிடத்திலோ, மூன்றெழுத்தாகிய காயத்திரி அநுயாசபாகமாம். இடையில் உள்ள அபிகாரத்தால் காயத்திரியின் வயிற்றில் கருப்பந் தரித்ததுபோலாம். ஆதலின், காயத்திரி எசமானனுக்குப் பசுக்களை உண்டாக்குகின்றது என்பது.

முதலநுவாகம்

முற்றிற்று.

இரண்டாங் காண்டம் ஆறுவது பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது.

ஆஜ்யபாகத்தை விதிக்கும் பிராமணங்கள்

चक्षुषी वा एते यज्ञस्य यदाज्यभागौ यदाज्यभागौ यजति चक्षुषी एव तद्यज्ञस्य प्रति दधाति पूर्वार्धे जुहोति तस्मात्पूर्वार्धे चक्षुषी प्रबाहुग्जुहोति तस्मात्प्रबाहुक्चक्षुषी देवलोकंवा अग्निना यजमानोऽनु पश्यति पितृलोकꣳ सोमेनोत्तरार्धेऽग्नये जुहोति दक्षिणार्धे सोमायैवमिव हीमौ लोकावनयोर्लोकयोरनुख्यात्यै राजानौ वा एतौ देवतानाम् ॥ १ ॥ यदग्नीषोमावन्तरा, देवता इज्येते देवतानां विधृत्यै तस्माद्राज्ञा मनुष्या विधृता ब्रह्मवादिनो वदन्ति किं तद्यज्ञे यजमानः कुरुते येनान्यतोदतश्च पशून्दाधारोभयतोदतश्चेत्यृचमनूच्याऽऽज्यभागस्य जुषाणेन यजति तेनान्यतोदतो

दाधारर्चमनूच्य हविषं ऋचायजति तेनोभयतोदतो दाधारमूर्धन्वती
पुरोनुवाक्या भवति मूर्धानमेवैनꣳ समानानां करोति ॥२॥ नियु-
त्वत्या यजति भ्रातृव्यस्यैव पशून्नि युवते केशिनꣳ हदार्भ्यं केशी
सात्यकामिरुवाच सप्तपदां ते शक्वरीꣳ श्वोयज्ञे प्रयोक्तासे यस्यैवीर्ये-
ण प्र जातान्भ्रातृव्यान्नुदते प्रतिजनिष्यमाणान्यस्यैवीर्येणोभयोर्लोक-
योर्ज्योतिर्धत्ते यस्यै वीर्येण पूर्वार्धेनानड्वान्भुनक्ति जघनार्धेन
धेनुरिति पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या भवति जातानेव भ्रातृव्यान्प्र
णुदत उपरिष्टाल्लक्ष्मा ॥ ३ ॥ याज्या जनिष्यमाणानेव प्रति
नुदते पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या भवत्यस्मिन्नेव लोकेज्योतिर्धत्त
उपरिष्टाल्लक्ष्मा याज्याऽमुष्मिन्नेव लोके ज्योतिर्धत्ते ज्योतिष्मन्ताव-
स्मा इमौलोकौ भवतो य एवं वेद पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या
भवति तस्मात्पूर्वार्धेनानड्वान्भुनक्त्युपरिष्टाल्लक्ष्मा याज्या तस्माज्जघ-
नार्धेन धेनुर्य एवं वेद भुङ्क्त एनमेतौ वज्र आज्यं
वज्र आज्यभागौ ॥ ४ ॥ वज्रो वषट्कारस्त्रिवृतमेव
वज्रꣳ संभृत्य भ्रातृव्याय प्र हरत्यछम्बट्कारमपगूर्य वषट्करोति
स्तृत्यै गायत्री पुरोनुवाक्या भवति त्रिष्टुग्याज्या ब्रह्मन्नेव क्षत्रम-
न्वारम्भयति तस्माद्ब्राह्मणो मुख्यो मुख्यो भवति य एवं वेद प्रैवैनं
पुरोनुवाक्ययाऽऽह प्र णयति याज्यया गमयति वषट्कारेणैवैनं

ஆஜ்யபாக விதி)

पुरोनुवाक्यया दत्ते प्र यच्छति याज्यया प्रति ॥ ५ ॥ वषट्कारेण
स्थापयति त्रिपदा पुरोनुवाक्या भवति त्रय इमे लोका एष्वेव लोकेषु
प्रति तिष्ठति चतुष्पद एव पशूनव रुन्धे त्र्यक्षरो वषट्कारो द्विपाद्य-
जमानः पशुष्वेवोपरिष्टात्प्रति तिष्ठति गायत्री पुरोनुवाक्या भवति
त्रिष्टुग्याज्यैषा वै सप्तपदा शक्वरी यद्वा एतया देवा अशिक्षन्तदश-
क्नुवन्य एवं वेद शक्नोत्येव यच्छिक्षति ॥ ६ ॥

ஈண்டு ஆஜ்யபாக மந்திரங்கள், மந்திர காண்டத்திற் கூறப்பட்டுள்ளன. அவைகளோ, "அக்னிர் விருத்ராணி ஜங்கனத்" என்பது முதலியன. அவை அக்கினி சோமர்களைப் பற்றியவைகள். அம்மந்திரங்களாற் செய்யப் படும் இரண்டு ஆஜ்யபாகங்கள் இங்கு விதிக்கப்படுகின்றன.

பிராமணம். 1

चक्षुषी वा एते यज्ञस्य यदाज्यभागौ यदाज्यभागौ यजति चक्षुषी एव तद्यज्ञस्य प्रति दधाति।

என்பது

உரை.

ஆஜ்யபாகங்களிரண்டும் எக்ஞத்திற்கு இருகண்களாம். எவன் ஆஜ்ய பாகங்களை, அதாவது அக்னி சோமர்களை வேள்வியால் ஆராதிக்கின்றானோ, அவன், வேள்விக்குக் கண்களைக் கொடுக்கின்றான் என்பதாம்.

ஆகவனீயத்தின் முன்பாகத்தில் ஹோமஞ் செய்யவேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 2

पूर्वार्धे जुहोति तस्मात्पूर्वार्धे चक्षुषी ।

என்பது

உரை.

ஆகவனீயத்தின் முதல் பாதியிடத்தில் ஹோமஞ் செய்கின்றான். ஆதலின், முற்பாதியிலேயே கண்களிருக்கின்றன. உலகிலும் தலையில் கண்களிருக்கின்றன என்பதாம்.

இரண்டாகுதிகட்கும், வரிசைவடிவிலும் அளவிலும்
ஏற்றக்தறைவு இல்லையென்பதற்கும் ஒப்புத் தன்மையை விதிக்கின்றது.

பிராமணம் 3.

प्रबाहुग्जुहोति तस्मात्प्रबाहुक्चक्षुषी ।

என்பது.

உரை

ஒப்பாகும்படி ஆகுதி செய்தல் வேண்டும். செய்யில், சமமான கண்கள் போலாகின்றன என்பதாம்.

ஒரேவரிசையில் வடக்குத் தெற்கு இடங்களை விதிக்கின்றது

பிராமணம் 4.

देवलोकं वा अग्निना यजमानोऽनु पश्यति पितृलोकꣳ सोमेनोत्तरार्धेऽग्नये
जुहोति दक्षिणार्धे सोमायैवमिव हीमौ लोकावनयोर्लोकयोरनुख्यात्यै ।

என்பது.

உரை.

எசமானன் அக்கினியால் தேவலோகத்தைக் காண்கின்றான். சோமனால் பிதிர் லோகத்தைக் காண்கின்றான். வடக்குப் பாதியில் அக்கினியின் பொருட்டு ஹோமஞ் செய்கின்றான். தேவலோகம் வடக்கிலிருக்கின்றது. தெற்குப்பாதியில் சோமன் பொருட்டு ஹோமஞ் செய்கின்றான். தெற்குப் பாதியில் பிதிர் லோகமிருக்கின்றது. ஆதலின், அத்தகைய ஹோமஞானத்தால் அவ்விரண்டின் உணர்ச்சி யுண்டாகின்றது என்பதாம்.

இரண்டிற்கும் நடுவிலுள்ள இடம் முக்கிய வேள்வியின் இடமென விதிக்கின்றது

பிராமணம் 5.

राजानौ वा एतौ देवतानां यदग्नीषोमावन्तरा देवता इज्येते देवतानां विधृत्यै तस्माद्राज्ञा मनुष्या विधृताः ।

என்பது

உரை.

தேவர்களுக்குள் அரசர்களான அக்கினி சோமர்களென்னும் இருவர்கட்குமிடையில் முக்கிய தேவர்கள் ஆராதிக்கப்படுகின்றனர். அல்லது நடுத்தரமான தேவதைகள் ஆராதிக்கப்படுகின்றன. அவைகள் அற்பமாயிருக்கின்றன. நடுவில் அரசர்கள் போல அக்கினியும் சோமர்களும் விளங்குகின்றனர். இவ்வாறு செய்தல் தேவர்களைப் போஷிக்கும் பொருட்டென்க. இதனால், அரசனைப்பற்றி மக்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள் என்பதாம்.

ஆஜ்யபாகங்க ளிரண்டையுங் கூறிவிட்டு; அதற்குரிய யாஜ்யாநு வாக்கியங்களையும்; மேலேயுள்ள ஆக்னேய முக்கிய அவியின் யாஜ்யாநு வாக்கியங்களையும் முறையாய் விதிக்கின்றது

பிராமணம் 6.

ब्रह्मवादिनो वदन्ति किं तद्यज्ञे यजमानः कुरुते येनान्यतोदतश्च पशून्दाधारोभयतोदतश्चेत्यृचमनूच्याऽऽज्यभागस्य जुषाणेन यजति तेनान्यतोदतो दाधारर्चमनूच्य हविष ऋचा यजति तेनोभयतोदतो दाधार ।

என்பது.

உரை.

கீழ்வாயில் பற்களுள்ள பசுக்களை அங்கமாகக் கொண்டு யஜமானன் வேட்கின்றான் அவ்வங்கம் யாது? மேலுங் கீழும் பற்களையுடையவைகளை யடைகின்றான் அது எது? என்று அறிவுடையார் கேட்டதற்கு, விடை:— ஆஜ்யபாகத்தை ஹோமஞ் செய்யும் போது புரோநுவாக்கியமாக சில இருக்கு மந்திரங்களை ஓதிவிட்டு, யாஜ்யா வாக்கியமாக ஜுஷாணா:, என்பது முதலிய எசுரால் யாகத்தைச் செய்கின்றவன் அத்தகைய கீழ்ப்பாகத்தில் முழு இருக்கு மந்திரமும் ஓதியதால் கீழ் வாயில் பற்களுள்ள பசுக்களை யடைகின்றான். முக்கியமாகிய ஆக்னேய அவியை ஹோமஞ் செய்யும்போது புரோநுவாக்கியமாக இருக்கை ஓதி விட்டு யாஜ்யா இருக்கால் யாகஞ் செய்கின்றான். அதனால், இருக்குக்கள் முழுதுநிறைந்தமையின் மேல் கீழ்ப்பாகங்களிலுள்ள இரண்டு பாகங்களிலும் பற்களையுடைய குதிரை முதலியவைகளையடைகின்றான் என்பதாம்.

ஆக்னேய யாகத்திற்கு, பொதுவாக யாஜ்யாநுவாக்கியங் கூறிவிட்டு சிறப்பாக அதை விதிக்கின்றது

பிராமணம் 7.

मूर्धन्वती पुरोनुवाक्या भवति मूर्धानमेवैनꣳ समानानां करोति नियुत्वत्यायजति भ्रातृव्यस्यैव पशून्नियुवते ।

என்பது

உரை.

'மூர்த்த' என்னுஞ் சொல்லையுடையது புரோநுவாக்கியமாகின்றது. அவ் விருக்கு மந்திரத்தால் ஒப்பாக உள்ளவர்களுள் எசமானனை சிரம் போல் உயர்ந்தோனாக்கப்படுகின்றான். 'நியுத்' என்னுஞ் சொல்லையுடைய இருக்கு மந்திரத்தால் வேட்கின்றவன் பகைவனுடைய பசுக்கள் இழந்து போம்படி செய்கின்றான் என்பதாம்.

ஈண்டு, 'அக்கினிர் மூர்த்தா, என்பது முதலியதும், " புவோயக்ஞஸ்ய ரஜஸஸ்ச நேதா, என்பது முதலியதும் மேற்கூறிய யாஜ்யா புரோநுவாக்கிய மந்திரமாம் என்பதை உணர்க.

யாஜ்யாநு வாக்கியங்களின் கூட்டுறவை பல்வகையாகப் புகழ்கின்றது

பிராமணம் 8.

केशिनꣳ ह्दार्भ्यं केशी सात्यकामिरुवाच सप्तपदां ते शक्वरीꣳ श्वो यज्ञे प्रयोक्तासे यस्यै वीर्येण प्रजातान्भ्रातृव्यान्नुदते प्रति जनिष्यमाणान्यस्यै वीर्येणोभयोर्लोकयोर्ज्योतिर्धत्ते यस्यै वीर्येण पूर्वार्धेनानड्वान्भुनक्ति जघनार्धेन धेनुरिति ।

என்பது

உரை.

தர்ப்பன் என்பவனுடைய மகனாகிய கேசி என்பவனை நோக்கி சத்திய காமனுடைய மகனாகிய மற்றொரு கேசி என்பவன், தர்ப்பனுடைய மைந்த! நாளைக்குச் செய்யப்போகும் எக்ஞத்தில் ஏழுபதங்களுடன் கூடிய 'சாக்வரீ' என்னுஞ் எச் சந்தமானது கூறப்படுமோ, அது மிகுந்த வன்மையையுடையது; அதனுடைய பராக்கிரமத்தால் முன்னர் உண்டான பகைவர் நீக்கப்படுகின்றனர். பிறக்கும் பகைவரும் பிறக்காமலொழிவர். மற்றும், அதனுடைய வலியால் எருது முன்பக்கத்திலுள்ள கழுத்தால் வண்டி முதலானவைகளை இழுத்து எசமானனைப் பாதுகாக்கின்றது. பசுவோ, பின்புறமுள்ள பால் முதலியவைகளால் பாதுகாக்கின்றது என்பதாம்.

யாஜ்யாவாக்கியம் புரோநுவாக்கியங்களின் இலக்கணத்தைக் கூறுகின்றது

பிராமணம் 9.

पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या भवति जातानेव भ्रातृव्यान्प्र णुदत उपरिष्टाल्लक्ष्मा याज्या जनिष्यमाणानेव प्रति नुदते ।

என்பது

உரை.

மந்திரத்திற் கூறப்படும் தேவதையின் பெயர் முற்பாதியில் இருக்கப் பெற்ற இருக்குமந்திரம் புரோநுவாக்கியமாம். பிற்பாதியில் அப் பெயரை யுடையது யாஜ்யாவாக்கியமாம். புரோநுவாக்கியமானது தோன்றிய பகைவரை நீக்குகின்றது. யாஜ்யாவாக்கியம் பிறக்கப்போகும் பகைவரை நீக்குகின்றது என்பதாம்.

முற்பாதி பிற்பாதிகளிலுள்ள இரண்டு பெயர் களையும் எடுத்துக்கொண்டு இரு வகையாகவும் புகழ்கின்றது

பிராமணம் 10

पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या भवत्यस्मिन्नेव लोके ज्योतिर्धत्त उपरिष्टाल्लक्ष्मा याज्याऽमुष्मिन्नेव लोके ज्योतिर्धत्ते ज्योतिष्मन्तावस्मा इमौ लोकौ भवतो य एवं वेद पुरस्ताल्लक्ष्मा पुरोनुवाक्या भवति तस्मात्पूर्वार्धेनानड्वान्भुनक्त्युपरिष्टाल्लक्ष्मा याज्या तस्माज्जघनार्धेन धेनुर्य एवं वेद भुङ्क्त एनमेतौ ।

என்பது

உரை

முற்பாதியில் தேவதையின் பெயரைக்கொண்ட மந்திரம் புரோநுவாக்கியம் இதனால் இவ்வுலகத்தில் சோதியுண்டாகின்றது. பிற்பாதியில் தேவதையின் பெயரைக்கொண்ட மந்திரம் யாஜ்யா வாக்கியம் இது மேலுலகத்தில் சோதியை யுண்டாக்குகின்றது. இவ்வாறுணர்ந்தவர்கட்கும் இதுவே பயன். மேற்கூறிய புரோநுவாக்கியம் எருதின் முன்பாகத்தா(கழுத்தா)ல் பாதுகாக்கச் செய்கிறது. யாஜ்யாவாக்கியம் பசுவின் பின்பாகத்தா (பால் முதலியவைகளா)ல் பாதுகாக்கச் செய்கின்றது. இவ்வண்ணத்தை யுணர்ந்தவர்களையும் இவருல் பாதுகின்றன என்பதாம்.

யாஜ்யத்தின் முடிவில் கூறப்படும் வஷட் காரத்தின் விதியை அர்த்த வாதத்தால் அறிவுறுத்துகின்றது

பிராமணம் 11

वज्र आज्यं वज्र आज्यभागौ वज्रो वषट्कारस्त्रिवृतमेववज्रं संभृत्य भ्रातृव्याय प्रहरत्यछम्बट्कारम् ।

என்பது

உரை.

நெய் வச்சிரமாம், ஆஜ்யபாகங்களிரண்டும் வச்சிராயுதமாம். இவ்வச்சிராயுதம், "கிருதம்வை வச்ரம் க்ருத்வா சோமமக்னந் என்று கூறியிருத்தலினுலும், "வ்ருத்ராணி சங்கனத்" என்றதாலும், வஷட்காரம் காயத்திரியின தலையை அறுத்தது என்று கூறியிருத்தலானும் இம் மூன்றும் ஆஜ்யபாகத் திற்கூடி முக்குண வச்சிராயுதமாகின்றது. இத்தகைய வஷட்கார வச்சிராயுதத் தால் பகைவனைக் கொல்லும்போது அது வீணுகாது என்பதாம்.

வஷட் காரத்தை, பேரொலியுடன் கூறல் வேண்டுமென விதிக்கின்றது

பிராமணம் 12

अपगूर्य वषट्करोति स्तृत्यै ।

என்பது.

உரை.

வஷட்காரத்தை மிகுந்த ஒலியுடன் கூறல் வேண்டும். இவ்வாறு கூறுதல் பகைவரைக் கொல்லுதற் பொருட்டு நிமித்தம் ஆகின்றது என்பதாம்.

மீண்டும், அக்கினியின் யாஜ்யா புரோநு வாக்கியங்களை, சந்த வாயிலாகத்துதிக்கின்றது

பிராமணம் 13.

गायत्री पुरोनुवाक्या भवति त्रिष्टुग्याज्या ब्रह्मन्नेव क्षत्रमन्वारम्भयति तस्माद्ब्राह्मणो मुख्यः ।

என்பது.

உரை

'அக்னிர் மூர்த்தா' என்பது காயத்திரிச் சந்தமாம் இது பிராமணனுடன் தோன்றியதால் பிரமவடிவாம். "புவோயக்ஞஸ்ய" என்பது திரிஷ்டுப் சந்தமாம். இது அரசனுடன் தோன்றியதால் க்ஷத்திரிய வடிவாம். இவ்விரண்டனுள் முன்பின் நோக்கில் பிராமணனுக்குப் பிறகு க்ஷத்திரியன் தோன்றுவதால் பிராமணன் தலைவனுவன். முக்யம் = முகத்திற்றோன்றல் என்பதாம்.

அதன் உணர்வைப் புகழ்கின்றது

பிராமணம் 14

मुख्यो भवति य एवं वेद ।

என்பது

உரை.

இவ்வாறுணர்ந்தவன் முக்கியனாகின்றான் என்பதாம்.

மீண்டும், புரோநுவாக்கியம் முதலிய மூன்றும், கொடுக்கத்தக்க தேவதையின் அருகை யடைதல் வாயிலாகப் புகழப்படுகின்றன

பிராமணம் 15

प्रैवैनं पुरोनुवाक्ययाऽऽह प्र णयति याज्यया गमयति वषट्कारेण ।

என்பது.

உரை

புரோநுவாக்கியத்தால் அவிகொடுத்தவனைப் பற்றி தேவர்கட்கு முன்பு கூறியதாகின்றது. யாஜ்யாவாக்கியத்தால் அவனை வழியிற்கொண்டு போகின்றதாகின்றது. வஷட்காரத்தால் தேவர்களையடையச் செய்ததாகின்றது என்பதாம்.

மீண்டும், தேவர்களை யடைந்த எசமானனை, பெருமை யடைதல் வாயிலாகப் புகழ்கின்றது

பிராமணம் 16

ऐवैनं पुरोनुवाक्यया दत्ते प्र यच्छति याज्यया प्रतिवषट्कारेण स्थापयति ।

என்பது

உரை

புரோநுவாக்கியம், யாஜ்யாவாக்கியம், வஷட்காரம் என்னும் மூன்று வாக்கியங்களாலும், எசமானனைக் கையிற் பிடித்துத் தேவர்கட்குக் கொடுத்து அங்கு உட்காரவைத்ததாகின்றது என்பதாம்.

பாத எண்ணிக்கையையும், எழுத்தின் எண்ணிக்கையையும் புகழ்கின்றது

பிராமணம் 17

त्रिपदा पुरोनुवाक्या भवति त्रय इमे लोका एष्वेव लोकेषु प्रति तिष्ठति चतुष्पद एव पशूनव रुन्धे द्व्यक्षरो वषट्कारो द्विपाद्यजमानः पशुष्वेवो-परिष्टात्प्रति तिष्ठति ।

என்பது

உரை

துன்பம் நீங்கும்போது அசியருந்துவதால் துன்பம் விலகுகின்றது. இருத்துவிக்குக்கள் அருந்திய விடத்து தட்சிணையுங் கொடுத்தாயிற்று. இது, முதன்மையாகிய யாகம் முடியுமிடத்து என்பதாம்.

மநோஜ்யோதி:, என்பது முதலியதால் அந்தர் வேதியிலுள்ள பிரஸ்தரத்தில் நீரைவிட்டுத் தலையில் தெளித்துக் கொள்வதை விதிக்கின்றது.

பிராமணம் 6

वि वा एतद्यज्ञं छिन्दन्ति यन्मध्यतः प्राश्नन्त्यद्भिर्मार्जयन्त आपो वै सर्वा देवता देवताभिरेव यज्ञꣳ सं तन्वन्ति ।

என்பது

உரை.

இடைநடுவில் இடாவை அருந்தினும் எக்ஞம் கெட்டுவிடுகின்றது. எல்லாத் தேவதைகளின் வடிவம் நீராம். நீரைத்தெளித்துக்கொள்வதால் தேவதைகளால் எக்ஞம் விரிகின்றது என்பதாம்.

பிராசித்ரம் என்னும் பாத்திரத்தில் எவ்வளவு புரோடாசம் கிள்ளி எடுத்தல் வேண்டுமென்பதை விதிக்கின்றது.

பிராமணம் 7

देवा वै यज्ञाद्रुद्रमन्तरायन्त्स यज्ञमविध्यत्तं देवा अभि समगच्छन्त कल्पतां न इदमिति तेऽब्रुवन्त्स्विष्टं वै न इदं भविष्यति यदिमꣳ राधयिष्याम इति तत्स्विष्टकृतः स्विष्टकृत्त्वं तस्याऽऽविद्धं निरकृन्तन्यवेन संमितं तस्माद्यवमात्रमवद्येत् ।

என்பது

உரை.

முன்னொருகால், தேவர்கள் உருத்திரனை நீக்கிவிட்டு வேள்விசெய்ததால் உருத்திரன் முனிந்து வேள்வியைக் கெடுத்தனன். பிறகு, தேவர்கள், உருத்திரனையடைந்து வேள்வி நிறைவேற முடியுமாறு அருள் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். அவர்களுள் சில தேவர்கள் ஆராய்ந்து நோக்கி வேள்வியால் உருத்திரனை வழிபடில் நமது இட்டம் நிறைவேறுமென்று உறுதிகொண்டு வழிபட்டனர். அதனுல், உருத்திரனுகிய அக்கினிக்கு சுவிஷ்டகிருத் (விரும்பியதைச் செய்வது) என்னும் பெயர் வந்தது. அப்போது அவ்வாராதனையில் வாற்கோதுமையளவு புரோடாசம் படுத்திருந்தது. அதனுல் பிராசித்ர ஹரணமென்னும் பாத்திரத்தில் வாற்கோதுமையளவு புரோடாசத்தை எடுத்துப் போடல் வேண்டும் என்பதாம்.

அளவுக்கு மிகுதியாய் எடுத்தல் கூடாதென்கின்றது.

பிராமணம் 8.

यज्ज्यायोऽवद्येद्रोपयेत्तद्यज्ञस्य ।

என்பது

உரை.

வாற்கோதுமையளவினின்று மிகுதியாகப் புரோடாசத்தைக் கிள்ளியெடுக்கில் எக்ஞத்திற்குக் கெடுதி செய்ததாகும் என்பதாம்.

உபஸ்தரணம் (பாத்திரத்தில் நெய் சிந்தல்) முதலிய நால்குமுறை யெடுப்பதை மறுப்பதுடன் ஒரேமுறை எடுப்பதும் மேல் நெய் தடவலும் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 9.

यदुप च स्तृणीयादभि च घारयेदुभयतस्संश्वायि कुर्यादवदायाभि घारयति द्विस्सं पद्यते द्विपाद्यजमानः प्रतिष्ठित्यै ।

என்பது

உரை.

பாத்திரத்தில் நெய்யைச் சிந்திவிட்டு அபிகாரமும் (மேலே நெய்தடவலும்) செய்யில் அங்கம் வீங்குதலாகிய நோய்வரும். ஆதலின், ஒரே முறை எடுத்து ஒரேமுறை மாத்திரம் மேலே நெய்தடவல் வேண்டுமென்பதாம்.

ஆகவனீயத்திற்குக் கிழக்காகவே கொண்டுபோய் பிராசித்ரஹரணம் என்னும் பாத்திரத்தைக் கொடுக்க வேண்டுமென விதிக்கின்றது.

பிராமணம் 10

यत्तिरश्चीनमतिहरेदनभिविद्धं यज्ञस्याभि विध्येदग्रेण परि हरति तीर्थेनैव परि हरति ।

என்பது

உரை.

வேதிக்கு வடக்கிலிருக்கின்ற வேட்போன், வேதியின் மத்தியிலிருக்கும் புரோடாசத்தில் பிராசித்ரஹரணம் என்னும் பாத்திரத்தில் சிறிதளவு எடுத்து ஆகவனீயத்திற்குத் தென்புறமிருக்கும் பிரமனிடம் கொடுத்தல் வேண்டும். எவ்வாறெனின்? ஆகவனீயத்திற்குக் கிழக்காகவேவந்து கொடுத்தல் வேண்டுமெனக. அவ்வாறு கொடுக்கில் ஆற்றுநீர் இறங்கும் நெறியில் அது உரித்தாகும் என்பதாம்.

பிராசித்திர ஹரண மென்னும் பாத்திரத்திலுள்ள புரோடாசத் துண்டை அருந்தும் முறையை விதிக்கின்றதில். அதில், எடுக்கும்போது பார்த்தலைப் புகழ்கின்றது.

பிராமணம் 11

तत्पूष्णे पर्यहरन्तत्पूषा प्राश्य दतोऽरुणत्तस्मात्पूषा प्रपिष्टभागोऽदन्तको हि तं देवा अब्रुवन्वि वा अयमार्ध्वप्राशित्रियो वा अयमभूदिति तद्बृहस्पतये पर्यहरन्सोऽबिभेद्बृहस्पतिरित्थं वाव स्य आर्तिमारिष्यतीति ।

என்பது

உரை

முன்னொருகால் தேவர்கள் பூஷாவிற்கு பிராசித்ரஹரணத்தைக் கொடுத்தனர். அதை, பூஷா வாங்கி மந்திரமின்றி பற்களால் மென்று தின்றுவிட்டனர். அதனால் அவனுடைய பற்கள் விழுந்து விட்டன. அதைக் கண்ட தேவர்கள் பூஷாவிற்கு, மாவாகிய அவியைக் கொடுத்து வந்தனர். பிறகு, தேவர்கள் தம்முள் ஆராய்ந்து, பூஷா தேவதைக்குப் பற்கள் இல்லாததால் இத்தகைய அவிக்கு உரியதன்று என்று பிருகற்பதி தேவதைக்குக் கொடுத்தனர். பிருகற்பதியும், அதை அருந்தினால் யாது வருமோவென்று பயந்தனன் என்பதாம்.

(இடாவை அருந்தல் முதலியன

அருந்த முறையில் கொண்டு வரும்போது புரோடாசத்தைப் பார்த்தல்.

பிராமணம் 12

स एतं मन्त्रमपश्यत्सूर्यस्य त्वा चक्षुषा प्रति पश्यामीत्यब्रवीन्न हि सूर्यस्य चक्षुः किं चन हिनस्ति ।

என்பது.

உரை.

அவன் இம் மந்திரத்தைக் கண்டனன். "சூரியனுடைய கண்ணால் உன்னைப்பார்க்கின்றேன்" என்று கூறவும், சூரியனுடைய கண் ஒன்றாலும் கெடுவதில்லை. ஆதலின் இம் மந்திரத்தால் புரோடாசத்தைப் பார்க்கின்றேன் என்பதாம்.

புரோடாசத்தை வாங்கிக் கொள்வதற்குரிய மந்திரத்தைக் கூறுதல்.

பிராமணம் 13

सोऽबिभेत्प्रतिगृह्णन्तं मा हिंसिष्यतीति देवस्य त्वा सवितुः प्रसवेऽश्विनोर्बाहुभ्यां पूष्णो हस्ताभ्यां प्रतिगृह्णामीत्यब्रवीत्सवितृप्रसूत एवैनद्ब्रह्मणा देवताभिः प्रत्यगृह्णात् ।

என்பது.

உரை.

அவன், தேவர்கள் புரோடாசத்தை வாங்கிக்கொள்ளும் என்னைத் துன்புறுத்துவார்களோ என்று பயந்தனன். தேவஸ்யத்வா, என்பது முதலிய மந்திரத்தை ஓதுவானாக. சவிதா தேவதையின் ஏவலால் அசுவினி முதலிய தேவர்கள் கடிக்கமாட்டார்கள் என்பதாம்.

அருந்து மந்திரத்தின் மூன்று வகைகளைக் கூறுகின்றது.

பிராமணம் 14

सोऽबिभेत्प्राश्नन्तं मा हिंसिष्यतीत्यग्नेस्त्वाऽऽस्येन प्राश्नामीत्यब्रवीन्न ह्यग्नेरास्यं किं चन हिनस्ति प्राशितं मा हिंसिष्यतीति ब्राह्मणस्योदरेणेत्यब्रवीन्न हि ब्राह्मणस्योदरं किं चन हिनस्ति स हि ब्रह्मिष्ठः ।

என்பது

உரை

அருந்துகின்ற என்னைத் துன்புறுத்துவானென்று பயந்தனன். 'அக்னேஸ்த்வாஸ்யேந' என்பது முதலிய மந்திரத்தை ஓதினான். அக்கினியினுடைய வாய் ஒன்றாலும் கேடுறாது. (1) அருந்திய என்னைத் துன்புறுத்துவானென்று பயந்தனன். "ப்ராம்ஹணஸ்ய" என்பது முதலிய மந்திரத்தைக் கூறினன். பிராமணனுடைய வயிறு ஒருவராலும் துன்புறுத்தப்படாது. (2) பிருகற்பதி, மந்திரத்தை உணர்ந்தவர், ஆதலின் "ப்ருஹஸ்பதேர் ப்ரஹ்மணா" என்னும் மந்திர பாகத்தை ஓதுக என்பது. (3) ஈண்டு, பெருங்காட்டை எரிக்கும் தாவானலத்தை, காய்ந்த விறகு முள் தடைசெய்யாது. சிரார்த்தத்தின் பொருட்டு பிறர் வீட்டில் உணவருந்தும் அந்தணனுக்கு ஒரு கெடுதியும் இல்லை. பிருகற்பதி மந்திரங்களை யுணர்தவராதலின் அம்மந்திரத்தாலும் தீமைவராது என்பது கருத்து.

அருந்தியபின், தலைமுதலிய அங்கங்களைத் தொடுதற்குரிய மந்திரங்களை விதிக்கின்றது

பிராமணம் 15

अपवा एतस्मात्प्राणाः क्रामन्ति यः प्राशित्रं प्राश्नात्यद्भिर्मार्जयित्वा प्राणा-
न्त्सं मृशतेऽमृतं वै प्राणा अमृतमापः प्राणानेव यथास्थानमुप ह्वयते ।

என்பது.

உரை

இந்த நீரிலிருந்து பிராணன்கள் வெளிப்படுகின்றன. பிராசித்திரஹரணத்தை அருந்தியவன், நீரால்துடைத்துப் பிராணன்களைத் தொடுகின்றான். அமுதம் பிராணன். அமுதம் நீராம். பிராணனை அது உள்ள இடத்திற்கு அழைத்துக்கொண்டு வருகின்றது என்பதாம்,

எட்டாம் அநுவாகம்

முற்றிற்று

இரண்டாங் காண்டம் ஆறும் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

ஏழு பஞ்சாதிகட்குமேல் நாற்பத்தாறு பதங்களைக் கொண்டது.

அநுயாசயாக முதலானவற்றைக் கூறும் பிராமணம்.

अग्नीध आ दधात्यग्निमुखानेवर्तून्प्रीणाति समिधमा दधात्युत्त-
रासामाहुतीनां प्रतिष्ठित्या अथो समिद्वत्येव जुहोति परिधीन्त्सं

मा॑ष्टिं पुना॒त्येवै॒नान्त्स॒कृत्स॑कृत्सं मा॑ष्टिं परा॑ङिव॒ ह्ये॑तर्हि॑ य॒ज्ञश्च॒तुः सं॒पद्य॑ते चतु॑ष्पादः प॒शवः॑ प॒शूने॒वाव॑ रुन्धे ब्रह्म॒न्प्रस्था॑स्याम इ॒त्या-हात्र॒ वा ए॒तर्हि॑ य॒ज्ञश्श्रि॒तः ॥ १ ॥ यत्र॑ ब्र॒ह्मा यत्रै॒व य॒ज्ञः श्रि॒तस्तत॑ ए॒वैन॒मा र॑भते य॒द्धस्ते॑न प्र॒मीवे॑द्वेपन॒स्स्या॒द्यच्छी॒र्ष्णा शी॒र्षक्ति॑मान्त्स्या॒द्यत्तू॒ष्णीमासी॑ता॒संप्र॑त्तो य॒ज्ञस्स्या॒त्प्रति॒ष्ठित्ये॒व ब्रू॑या-द्वा॒चि वै य॒ज्ञश्श्रि॒तो यत्रै॒व य॒ज्ञश्श्रि॒तस्तत॑ ए॒वैन॒ꣳ सं प्र य॑च्छति दे॒व॑ सवितरे॒तत्त॒ प्र ॥ २ ॥ आहे॒त्या॑ह॒ प्रसू॑त्यै॒ बृह॒स्पति॑र्ब्र॒ह्मेत्या॑ह॒ स हि ब्रह्मि॑ष्ठ॒स्स य॒ज्ञं पा॑हि॒ स य॒ज्ञप॑तिं पा॑हि॒ स मां पा॒हीत्या॑ह य॒ज्ञाय॒ यज॑मानाया॒ऽऽत्मने॒ तेभ्य॑ ए॒वाऽऽशिष॒मा शा॑स्ते॒ऽनार्त्या॒ आश्रा॒व्याऽऽह दे॒वान्य॒जेति॑ ब्रह्मवा॒दिनो॑ वदन्ती॒ष्टा दे॒वता॒ अथ॑ कत॒म ए॒ते दे॒वा इति॒ छन्दा॒ꣳसीति॑ ब्रू॒याद्गा॑य॒त्रीं त्रि॒ष्टुभ॒म् ॥ ३ ॥ जग॑तीमि॒त्यथो॒ खल्वा॑हुर्ब्राह्म॒णा वै छन्दा॒ꣳसीति॒ ताने॒व तद्य॑जति दे॒वानां॒ वा इ॒ष्टा दे॒वता॒ आस॒न्नथा॒ग्निर्नोद॑ज्वल॒त्तं दे॒वा आहु॑तीभिर-नूया॒जेष्वन्व॑विन्द॒न्यद॑नूया॒जान्यज॑त्य॒ग्निमे॒व तत्स॑मिन्ध ए॒तदु॒वै ना-माऽऽसु॒र आसी॒त्स ए॒तर्हि॑ य॒ज्ञस्याऽऽशिष॑मवृङ्क्त य॒द्ब्रू॒यादे॒तत् ॥ ४ ॥ उ॒ द्यावा॑पृथि॒वी भ॒द्रम॑भू॒दित्ये॒तदु॑मे॒वाऽऽसु॒रं य॒ज्ञस्याऽऽ-शिषं॑ गमये॒दिदं॒ द्यावा॑पृथि॒वी भ॒द्रम॑भू॒दित्ये॒व ब्रू॑याद्यज॑मानमे॒व य॒ज्ञ-स्याऽऽशिषं॑ गमयत्या॒र्ध्म सू॒क्तवा॒कमु॒त न॑मोवा॒कमित्या॑है॒दम॑रा॒त्स्मेति॒

वावैतदाहोपश्रितो दिवः पृथिव्योरित्याह द्यावापृथिव्योर्हि यज्ञ उपश्रित ओमन्वती तेऽस्मिन्यज्ञे यजमान द्यावापृथिवी ॥ ५ ॥ स्तामित्याहाऽऽशिषमेवैतामाशास्ते यद्ब्रूयात्सूपावसाना च स्वध्यवसाना चेति प्रमायुको यजमानस्स्याद्यदा हि प्रमीयतेऽथेमामुपावस्यति सूपचरणा च स्वधिचरणा चेत्येव ब्रूयाद्वरीयसीमेवास्मै गव्यूतिमा शास्ते न प्रमायुको भवति तयोराविदग्निरिदꣳ हविरजुषतेत्याह या अयाक्ष्म ॥ ६ ॥ देवतास्ता अरीरधामेति वावैतदाह यन्न निर्दिशेत्प्रतिवेशं यज्ञस्याऽऽशीर्गच्छेदा शास्तेऽयं यजमानोऽसावित्याह निर्दिश्यैवैनꣳ सुवर्गं लोकं गमयत्यायुरा शास्ते सुप्रजास्त्वमा शास्त इत्याहाऽऽशिषमेवैतामा शास्ते सजातवनस्यामा शास्त इत्याह प्राणा वै सजाताः प्राणानेव ॥ ७ ॥ नान्तरेति तदग्निर्देवो देवेभ्यो वनते वयमग्नेर्मानुषा इत्याहाग्निर्देवेभ्यो वनुते वयं मनुष्येभ्य इति वावैतदाहेह गतिर्वामस्येदं च नमो देवेभ्य इत्याह याश्चैव देवता यजति याश्च न ताभ्य एवोभयीभ्यो नमस्करोत्यात्मनोऽनार्त्यै ॥ ८ ॥

இதில், அநுயாச யாகங்களும், சூக்தவாகம் என்னும் பிரஸ்தர நிருப்பை முடிச்சைப் போடுதலுங் கூறப்படுகின்றன.

முதலில் அக்னீத்ரனுக்கு புரோடாச பாகங்கொடுக்க வேண்டுமெனவிதித்தல்

பிராமணம் 1.

अग्नीध आ दधात्यग्निमुखानेवर्तून्प्रीणाति ।

உரை.

பௌரோடாசிக காண்டத்தில், "ஆக்னீத்ரனுக்கு முதலில் கொடுக்கப்படுகின்றது" என்று கூறியிருத்தலின் ஆக்னீத்ரனால் வளர்க்கப் பெற்ற தீ அக்கினிக்கு முகமாம். ஆறுமுறை எடுத்தல் கூறப்பட்டிருத்தலின் ஆறுக்கொப்பான இருதுக்கள் ஆறும் பிரியப்படுத்தப்படுகின்றன என்பதாம்.

ஆக்னீத்ரன் சமித்தைத் தீயிலிடல் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 2

समिधमा दधात्युत्तरासामाहुतीनां प्रतिष्ठित्या अथो समिद्वत्येव जुहोति ।

என்பது

உரை

பின்னாகுதிகள் சமித்தில் நிலைத்திருப்பவைகள் ஆகின்றன. ஆனாலும் சமித்துடன் கூடிய தீயில் ஆகுதி செய்கின்றான் என்பதாம்.

மீண்டுந்துடைத்தலை விதிக்கின்றது

பிராமணம் 3

परिधीन्त्सं मार्ष्टि पुनात्येवैनान् ।

என்பது

உரை.

பரிதி எல்லாம் விறகைத் துடைக்கின்றான், ஆகையால், இவ்விறகுகளைப் புனிதமாக்குகின்றான் என்பதாம்.

முன்போல், மீண்டும் மீண்டுந்துடைப்பதை மறுக்கின்றது

பிராமணம் 4

सकृत्सकृत्सं मार्ष्टि पराङिव ह्येतर्हि यज्ञः ।

என்பது

உரை

ஒவ்வொரு முறையே துடைக்கின்றான். துடைக்குங் காலத்தில் வேள்வி வெளிப்படாதது போலாகும் என்பதாம்.

அநுயாசயாக முதலாயின)

தீயை ஒருமுறை அடைப்பதையுஞ் சேர்த்து மூன்று விததகளைத் அடைப்பதன் என் கூறப்படுகின்றது

பிராமணம் 5.

चतुस्संपद्यते चतुष्पादः पशवः पशूनेवाव रुन्धे ।

என்பது

உரை

நான்குமுறையாகின்றன. பசுக்கள் நான்கு கால்களையுடையன. இது பசுக்களைக் கொடுக்கின்றது என்பதாம்.

அநுயாசயாகத்தின் பொருட்டுச் செல்லும் வேட்போன், பிரமாவின் ஆணையைப்பெறல் வேண்டுமென்னும் மந்திரத்தின் கருத்தைக் கூறுகின்றது

பிராமணம் 6

ब्रह्मन्प्र स्थास्याम इत्याहात्र वा एतर्हि यज्ञश्रितो यत्र ब्रह्मा यत्रै वयज्ञः श्रितस्तत एवैनमा रभते ।

என்பது

உரை

"பிரமாவே! யான் செல்கின்றேன்" என்று ஆணை கேட்கவும். பிரமன் எவ்விடத்திலிருக்கின்றானோ, அவ்விடத்திலே வேள்வி செய்யப்படுமாதலின் அங்கு எக்ஞம் இருக்கின்றது. ஆதலின், பிரமன் ஆணை கொடுத்தன் மாத்திரத்தானே அவ்விடத்தில் வேள்வி தொடங்கப்பட்டதென்பதாம்.

பிரமன், வாக்கினாலேயே ஆணை கொடுத்தல் வேண்டும் என்பதைவிதிக்கின்றது

பிராமணம் 7.

यद्धस्तेन प्रमीवेद्वेपनस्स्याद्यच्छीर्ष्णा शीर्षक्तिमान्त्स्याद्यत्तूष्णीमासीतासंप्रत्तो यज्ञस्स्यात्प्रतिष्ठेत्येव ब्रूयाद्वाचि वै यज्ञश्रितो यत्रैव यज्ञश्रितस्तत एवैनꣳ सं प्र यच्छति ।

என்பது

உரை

பிரமன் கையால் காட்டில் வாத நோய் வரும், தலையை ஆட்டித் தெரிவிக்கினும் தலைவலி வரும். பேசாதிருந்து குறிப்பிடினும் வேள்வி நல்ல முறையில் நடவாது. ஆதலின், உட்கார்ந்திருந்தபடியே வாக்கால் ஆணை கொடுத்தல் வேண்டும். இதனால் வேள்வி இனிது நடக்கும் என்பதாம்.

(அநுயாசயாக முதலாயின

"வேட்போய்: நீ அவ்வாறே செல்வாயாக" என்று பிரமன் ஆணை கொடுப்பதை விதிக்கின்றது

பிராமணம் 8

देव सवितरेतत्ते प्राहेत्याह प्रसूत्यै बृहस्पतिर्ब्रह्मेत्याह स हि ब्रह्मिष्ठस्स यज्ञं पाहि स यज्ञपतिं पाहि स मां पाहीत्याह यज्ञाय यजमानायाऽऽत्मने तेभ्य एवाऽऽशिषमा शास्तेऽनार्त्यै ।

என்பது

உரை

சவிதா தேவ! உன்னுடைய இவ்வத்துவரியு ஆணை கேட்டமையின் இனிது யாகஞ் செய்வாயாக. பிருகற்பதியே ஈண்டுப் பிரமன் என்றது, அவனே வேள்வியிலிருக்கின்றான் பிரகற்பதியாகிய நீ எக்ஞத்தைப் பாது காப்பாயாக என்கின்றது. என்னைப் பாதுகாப்பாயாக என்றது, வேள்வியின் பொருட்டும் வேள்வித் தலைவன் பொருட்டும் துன்பிலாதிருக்குமாறு வாழ்த்துக் கூறப்படுகின்றது என்பதாம்.

ஆச்ராவய என்பதுடன் முதலாவது யாக சம்ப்ரேஷணையை (ஏவலை) விதிக்கின்றது

பிராமணம் 9.

आश्राव्याऽऽह देवान्यजेति ।

என்பது

உரை

வேட்போன், உபபிருதிலிருந்து சுருவில் நெய்யை எடுத்துக்கொண்டு தெற்கில் தாண்டிச் சென்று மூன்று ஹோமங்களைச் செய்யுங்கால், "ஆச்ராவய" என்று ஆக்னீத்திரனிடத்தில் சொல்வதோடு "தேவாங்யஜ" என்று ஹோதாவையும் ஏவல் வேண்டும். மற்றிரண்டிற்கும் 'யஜ' என்னுமித் துணையே ஏவல் வேண்டும் என்பதாம்.

இனி, ஆசங்கை உத்தரங்கூறு முகத்தால் அநுயாஜை யாகத்தின் பொருட்டு தேவதை உண்டென்று விளக்குகின்றது.

பிராமணம் 10

ब्रह्मवादिनो वदन्तीष्टा देवता अथ कतम एते देवा इति छन्दाꣳसीति ब्रूयाद्गायत्रीं त्रिष्टुभं जगतीमित्यथो खल्वाहुर्ब्राह्मणा वै छन्दाꣳसीति तानेव तद्यजति ।

என்பது

உரை

பிரமவாதிகள், அக்கினி முதலிய தேவதைகள் அனைத்திற்கும் புரோடாசம் முதலானவைகளால் வேள்வி செய்யப்பட்டன. ஆனால், அநுயாசை யாகங்களுக்கு தேவதை யாது? என்று சங்கித்தனர். சிலர் சந்தங்கள் என்று விடை கூறினர். சிலர் அவை காயத்திரி, திரிஷ்டுப், சகதி என்பன என்றனர். சந்தங்கள் பிராமணர்கள் எனப்படுகின்றன. பிராமணர்களைக் குறித்தே அது யாகஞ்செய்கின்றது. இதனால், பிராமணசாதியின் அபிமானியாகிய அக்கினியே அநுயாசயாகத்திற்கு தேவதை என்பது வேறு சாகையின் கருத்தாம் என்பதாம்.

அநுயாச யாகங்களை விதிக்கின்றது

பிராமணம் 11.

देवानां वा इष्टा देवता आसन्नथाग्निर्नोदज्वलत्तं देवा आहुतीभिरनूयाजेष्वन्वविन्दन्यदनूयाजान्यजत्यग्निमेव तत्समिन्धे ।

என்பது

உரை

முன்னொருகால் தேவர்கள் யாகஞ்செய்தனர் அதில் அக்கினி பிரசாபதி முதலிய தேவதைகள் வேள்வியால் வழிபடப்பெற்றதுபோல அதற்கு முன் அதற்கு ஆதாரமாகிய அக்கினி நன்கு வளர்க்கப்படவில்லை. பிறகு, அநுயாசங்களில் மறைந்து கொண்டிருந்த அக்கினியை ஆகுதிகளாலடைந்தனர். ஆகையால் அநுயாச யாகங்களைச் செய்வதால் அக்கினி வளர்க்கப்படுகின்றது என்பதாம்.

ஈண்டு, தேவம்பர்ஹி:, என்பது முதல், நமோவாகேவீஹி, என்பதீறுகிய அநுயாசயாக மந்திரங்களை மந்திர காண்டத்திற் காண்க.

அவ்வாறே, "இதம் த்யாவா ப்ருதிவீ" என்பது ஈறுகிய சூக்தவாக மந்திரங்களையும் ஆண்டே காண்க.

சூக்தவாகத்தின் முதல் வாக்கியம், மற்றொரு சாகையில் வேறுவிதமாய்க் கூறியிருப்பதை மறுத்து, தனது சாகையில் கூறியிருப்பதைப் புகழ்கின்றது

பிராமணம் 12.

एतद्वै नामाऽऽसुर आसीत्स एतर्हि यज्ञस्याऽऽशिषमवृङ्क्त यद्ब्रूयादेतदु द्यावापृथिवी भद्रमभूदित्येतदुमेवाऽऽसुरं यज्ञस्याऽऽशिषं गमयेदिदं द्यावापृथिवी भद्रमभूदित्येव ब्रूयाद्यजमानमेव यज्ञस्याऽऽशिषं गमयति ।

என்பது

உரை

'ஏதஅ' என்னும் ஒரு அசுரன் இருந்தான். அவன் இத்தகைய சூக்த வாக காலத்தில் வந்து எசமானனுடைய ஆசிர்வாதத்தைக் கெடுத்து தனது ஆசிர்வாதமாக்கிக் கொண்டனன். ஆகலின், 'ஏதஅ' என்று கூறில் அசுர னுக்கு ஆசிர்வாதம் போய்விடும். ஆகலின், வேறு வேதசாகையிலுள்ள ஏதஅ' என்பதை விட்டுவிட்டு, "இதம்த்யாவாபிருதிவீ" என்பதை ஓதல் வேண்டும். இதனால் எசமானனுக்கு ஆசிர்வாதம் உண்டாகின்றது என்பதாம்.

சூக்தவாகம். நமோவாகம் என்னும் இரண்டும் செயலுக்கு விசேடமா மென்பதைக் காட்டுகின்றது

பிராமணம் 13

आश्मं सूक्तवाकमुत नमोवाकमित्याहेदमराःस्मेति चावैतदाह ।

என்பது

உரை

யாம் இனிது அவியளிக்கின்றோம் என்று கூறும் சூக்தவாகத்தாலும், தேவர்காள்! உங்கட்கு வணக்கம் என்று கூறும் நமோவாகத்தாலும் உள்ள வாறு சம்பத்தை யடைந்தோம் என்கின்றது என்பதாம்.

அக்கினிவடிவாகப் பூமியிலும், பயன்வடிவாகச் சுவர்க்கத்திலும் வேள்விபற்றிக் கொண்டு நிற்கின்றது வெளிபடையாமெனக் காட்டுகின்றது

பிராமணம் 14

उपश्रितो दिवः पृथिव्योरित्याह द्यावापृथिव्योर्हि यज्ञ उपश्रितः ।

என்பது

உரை

பூமியையும் சுவர்க்கத்தையும் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது என்றது, இவ்விரண்டுமே வேள்விக்கு ஆதாரங்கள் என்கின்றது என்பதாம்.

"அவ்விரண்டும் பாதுகாப்புடையவைகளாதுக" என்னும் ஆசிர்வாதங் கூறுவது உட்கிடை எனல்

பிராமணம் 15

ओमन्वती तेऽस्मिन्यज्ञे यजमान द्यावापृथिवी स्तामित्याहाऽऽशिषमेवैता-
माशास्ते ।

என்பது

அநுயாசயாக முதலியன)

உரை

ஓமன்வதீ என்பது முதலியன, வானும் மண்ணும் இவ்வேள்வியில் எசமானனைப் பாதுகாப்பவைகளாகுக என்கின்றது. இது ஆசீர்வாத மெனப் படுமென்பதாம்.

மந்திரத்தை ஓதி முடிக்குஞ் சொல், வேறு சாகைகளில் உள்ளது பிழையென்று தனது வேதசாகையிலுள்ளதைப் புகழ்கின்றது

பிராமணம் 16

यद्ब्रूयात्सूपावसाना च स्वध्यवसाना चेति प्रमायुको यजमानस्स्याद्यदा हि प्रमीयतेऽथेमामुपावस्यति । सूपचरणा च स्वधिचरणा चेत्येव ब्रूयाद्वरीयसीमेवास्मै गव्यूतिमाशास्ते न प्रमायुको भवति ।

என்பது.

உரை.

'சூபாவஸாநா' என்று முடிக்கில் எசமானன் இறந்துபோவான். இறக்கும்போது மக்கள் மண்ணின் மேற் போடப்படுகின்றனர் என்னும் பொருளை அவ்வாக்கியங் காட்டுதலின் என்க. மற்றெது கூறல் வேண்டு மெனின்? "ஸ்வதிசாரணச" என்பதை ஓதி நிறுத்தில் எசமானன் மிகுந்த பசுக்கள் மேயுமிடத்தை விரும்பியவனாகின்றான் என்பதாம்.

ஈண்டு, சூக்தவாகத்தின் இரண்டாம் பாதி மந்திரங்களோ, "அக்னிரிதம் ஹவிரசுஷத" என்பது முதலாக, "அவீவிருததமஹோஜ்யாயோ அக்ருத" என்பது ஈறாகவுள்ள மந்திரங்களாம். அற்றுள்,

---

மந்திர காண்டத்திற் கூறியுள்ள அம்மந்திரங்களின் நடுப்பாகத்தின் கருத்தைக் கூறுகின்றது

பிராமணம் 17.

तयोराविर्यग्निरिदꣳ हविरजुषतेत्याह या अयाक्ष्म देवतास्ता अरीरधामेति वावैतदाह ।

என்பது

உரை

முன், யாம், சூக்தவாகம் நமோவாகம் என்னுமிரண்டாலும் பெருகினோம் என்று கூறப்பட்டது. இப்போது, "அக்கினிரிதம் ஹாரசுஷத" என்பது முதலியவைகளால் தழைக்கின்றோம் என்பதைக் கூறுகின்றது, யாம் வழிபடும் தேவதைகள் எவ்வாறு சம்பத்தையடைவரோ, அவ்வாறு செய்வோம் என்பதன் பொருட்டு இது கூறப்படுகின்றது என்பதாம்.

சூக்தவாகத்தின் கடைப்பாகமோ. "அஸ்யாம்ருதத் தோத்ரா யாம் தேவங்கமாயாம்" என்பதுமுதலாக. "நமோதேவேப்ய:" என்பது வரையுள்ள மந்திரங்களாம். அதில், அஸௌ (இவர்) என்னுஞ் சொல்லால் எசமானன் குறிப்பிடப்படுகின்றான் என்பதைக் கூறுகின்றது.

பிராமணம் 18

यन्न निर्दिशेत्प्रतिवेशं यज्ञस्याऽऽशीर्गच्छेदा शास्तेऽयं यजमानोऽसावित्याह निर्दिश्यैनꣳ सुवर्गं लोकं गमयति ।

என்பது

உரை

'இவன்' என்று வேள்விக் தலைவனைச் சுட்டிக்காட்டாதொழியில், வேள்வியில் நீண்ட ஆயுள் முதலான வாழ்த்துக்கள், வேள்விக்குப் புறம்பான மற்றொருவனைப் போய்ச் சேரும். ஆதலின் இவன் என்று சுட்டுகின்றது. இதனால் இவன் சுவர்க்கத்தை யடைகின்றான் என்பதாம்.

"ஆசாஸ்தேயம் எசமான:" என்பதில், குறிப்பிட்ட ஆசீர்வாதங்களின் கருத்தையே, ஆயுராசாஸ்தே, என்பது முதலியவாக்கியங்களும் விரிக்கின்றது எனக் காட்டுகின்றது

பிராமணம் 19

आयुरा शास्ते सुप्रजास्त्वमा शास्त इत्याहाऽऽशिषमेवैतामा शास्ते ।

என்பது

உரை.

நீண்ட ஆயுள் உண்டாகுக. புத்திரர்கள் உண்டாகுக என்று வாழ்த்துகின்றது. ஆசீர்வாதமே இதற்குக் கருத்து என்பதாம்.

அநுயாசயாக முதலியன)

கூடப்பிறந்தது என்றதால் சிவனுடன் பிறந்த பிராணன் கொள்ளப்படு கின்றதென்பதை விளக்குகின்றது

பிராமணம் 20

सजातवनस्यामा शास्त इत्याह प्राणा वै सजाताः प्राणानेव नान्तरेति ।

என்பது

உரை

பிராணன்களால் வேண்டப்படுவதே விரும்புவதால் பிராணன்களுக்குள் தடையிராது. இதனுல், ஏனைய ஏவலாளர்களும் இலக்கணையாற் கொள்ளப்படு கின்றனர் என்பதாம்.

தேவமுன்னிலையிலேனும். மனிதமுன்னிலையிலேனும் ஹோதாவினிடத்திலும், அக்கி னியினிடத்திலும் பயன் இருக்கின்றது என்னுங்கருத்தை விளக்குகின்றது -

பிராமணம் 21

तदग्निर्देवो देवेभ्यो वनते वयमग्नेर्मानुषा इत्याहाग्निर्देवेभ्यो वनुते वयं मनुष्येभ्य इति वावैतदाह ।

என்பது

உரை.

ஈண்டுப்பயன் திவ்ய போகங்களும் மாநுட போகங்களுங் குறிப்பிடப் பட்டன என்பதை யுணர்க. அவ்வக்கினி தேவர்களுக்குப் போற்றத்தக்கது. யாம் மனிதர்களுக்குப் போற்றத்தக்கவாராவோம் என்கின்றது என்பதாம்.

தேவர்கள் வணக்கத்தால் போற்றப்படுகின்றார்கள் என்பதை விளக்குகின்றது

பிராமணம் 22

इह गतिर्वामस्येदं च नमो देवेभ्य इत्याह याश्चैव देवता यजति याश्च न ताभ्य एवोभयीभ्यो नमस्करोत्यात्मनोऽनार्त्यै ।

என்பது.

உரை

தேவர்க்கு வணக்கம் என்றது, வேள்வி, வேட்கப்படுந் தேவதைகள் என்னும் இருவகைத் தேவர்கட்கும் வணக்கங் கூறியதால் அவர்களுடைய அருளால் துன்பம் உண்டாகாதென்கின்றதென்பதாம்.

ஒன்பதாவது அநுவாகம்

முற்றிற்று

இரண்டாங் காண்டம் ஆறுவது பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிகட்குமேல் முப்பத்துமூன்று பதங்களைக் கொண்டது
முடிவில் பருதிகளை எரிப்பதற்கும் பத்நீஸம்யாஜ யாகத்திற்கும் உரிய
பிராமணங்கள்.

देवा वै यज्ञस्य स्वगाकर्तारं नाविन्दन्ते शंयुं बार्हस्पत्यमब्रुवन्निमं
नो यज्ञꣳ स्वगा कुर्विति सोऽब्रवीद्वरं वृणै यदेवाब्राह्मणोक्तोऽश्रद्दधानो
यजातै सा मे यज्ञस्याऽऽशीरसदिति तस्माद्यदब्राह्मणोक्तोऽश्रद्दधानो
यजते शंयुमेव तस्य बार्हस्पत्यं यज्ञस्याऽऽशीर्गच्छत्येतन्ममेत्यब्रवी-
त्किं मे प्रजायाः ॥ १ ॥ इति योऽपगुरातै शतेन यातयाद्यो निह-
नत्सहस्रेण यातयाद्यो लोहितं करवद्यावतः प्रस्कद्य पाꣳसून्त्संगृह्णा-
त्तावतस्संवत्सरान्पितृलोकं न प्रजानादिति तस्माद्ब्राह्मणाय नाप
गुरेत न नि हन्यान्न लोहितं कुर्यादेतावता हैनसा भवति तच्छंयो-
रा वृणीमह इत्याह यज्ञमेव तत्स्वगा करोति तत् ॥ २ ॥ शंयोरा-
वृणीमह इत्याह शंयुमेव बार्हस्पत्यं भागधेयेन समर्धयति गातुं
यज्ञाय गातुं यज्ञपतय इत्याहाऽऽशिषमेवैतामाशास्ते सोमं यजति रेत
एव तद्दधाति त्वष्टारं यजति रेत एव हितं त्वष्टा रूपाणि वि
करोति देवानां पत्नीर्यजति मिथुनत्वायाग्निं गृहपतिं यजति
प्रतिष्ठित्यै जामि वा एतद्यज्ञस्य क्रियते ॥ ३ ॥ यदाज्येन प्रयाजा
इज्यन्त आज्येन पत्नीसंयाजा ऋचमनूच्य पत्नीसंयाजानामृचा

यंजत्यजामितायाथो मिथुनत्वाय पङ्क्तिप्रायणो वै यज्ञः पङ्क्त्युदयनः पञ्च प्रयाजा इज्यन्ते चत्वारः पत्नीसंयाजास्समिष्टयजुः पञ्चमं पङ्क्तिमेवानु प्रयन्ति पङ्क्तिमनूद्यन्ति ॥ ४ ॥

இதில், சம்யுவாகம் என்னும் பரிதி (விறகு)களை எரித்தலும் பத்தினி சம்யாசம் என்னும் யாகமுங் கூறப்படுகின்றன.

சம்யுவாகமந்திரங்கட்கு உரை செய்தற்பொருட்டு அவற்றைப்புகழ்கின்றது

பிராமணம் 1.

देवा वै यज्ञस्य स्वगाकर्तारं नाविन्दन्ते शंयुं बार्हस्पत्यमब्रुवन्निमं नो यज्ञ स्वगा कुर्विति सोऽब्रवीद्वरं वृणै यदेवाब्राह्मणोक्तोऽश्रद्दधानो यजातै सा मे यज्ञस्याऽऽशीरसदिति तस्माद्यदब्राह्मणोक्तोऽश्रद्दधानो यजते शंयुमेव तस्य बार्हस्पत्यं यज्ञस्याऽऽशीर्गच्छत्येतन्ममेत्यब्रवीत्किं मे प्रजाया इति योऽपगुरातै शतेन यातयाद्यो निहनत्सहस्रेण यातयाद्यो लोहितं करवद्यावतः प्रस्कद्य पांसून्संगृह्णात्तावतस्संवत्सरान्पितृलोकं न प्रजानादिति तस्माद्ब्राह्मणाय नाप गुरेत न नि हन्यान्न लोहितं कुर्यादेतावता हैनसा भवति ।

என்பது.

உரை.

தேவர்கள், தாம், தேவர்கட்குக் கொடுக்கும் அவிகள் கலந்து விடாமல் தனித்தனி அவ்வத் தேவர்கட்குச் சேரும்படி செய்தல் வேண்டுமென்று பிருகற்பதியின் புத்திரனாகிய 'சம்யு' என்பவனைக் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவன், "இதை விரும்பியவன் இவ்வேள்வியால் வேட்பானாக" என்று பிராமணம் விதிக்காதிருக்க தனதிச்சையால் ஒருவன் யாகஞ் செய்யின் அதனுடையபயனும், அன்பின்றி ஒருவன் யாகஞ் செய்யில் அதனுடையபயனும் எனக்குக் கிடைத்தல் வேண்டும், மற்றும், பிராமணனை அடிக்க முயன்றதால் நூறுவராகனிடை பொன் அபராதம் போடுதலும், அடித்தால், ஆயிரம் வராகனிடை அபராதம் போடுதலும், இரத்தம் மண்ணில் விழும்படி அடித்த

தால் மண் அணுக்கள் எவ்வளவோ, அவ்வளவு காலம் நரகத்தை யநுபவித்தலும் உன்னைச் சேர்ந்த மக்கள் பேரன்மார்கள் அடைவார்களாக, என்னும் வரத்தையும் பெற்று அவ்வாறே அநுபவித்துக் கொண்டு வந்தனன். ஆதலின், பிராமணனுக்கு இடையூறு ஒன்றுஞ் செய்தல் கூடாது; செய்யில் மேற்கூறிய பாவங்களை யடைகின்றான் என்பதாம்.

போதாயனர் கூறியபடி அத்தகைய சம்யுவாக மந்திரபாடத்தைப் புகழ்கின்றது

பிராமணம் 2

तच्छंयोरा वृणीमह इत्याह यज्ञमेव तत्स्वगा करोति ॥

என்பது

சம்யோர்ப்ரூஹி, என்று அத்வரியு கூறும்போது 'தச்சம் யோராவ்ருணீமஹே' என்பது முதலிய சம்யுவாக மந்திரத்தை ஓதல் வேண்டுமென்கின்றது. அதாவது இம்மந்திரத்தைப் படித்தால் இவ்வெக்ஞத்தின் ஆகுதிகள் அவ்வத் தேவதைகளை யடைகின்றன என்பதாம்.

மற்றொருவகையால் அதையே புகழ்கின்றது

பிராமணம் 3

तच्छंयोर वृणीमह इत्याह शंयुमेव बार्हस्पत्यं भागधेयेन समर्धयति ।

என்பது

உரை.

'தச்சம் யோராவ்ருணீமஹே' என்பது முதலிய மந்திரபாக மாத்திரந் தான் இங்குக் கொடுக்கத்தக்கபாகமாம். இப்பாகங் கொடுத்தலால் பிருகஸ்பதியின் மகனாகிய சம்யு என்பவனை அடையச் செய்கின்றது என்பதாம்.

இம்மந்திரபாகம் ஆசீர்வாதத்தையும் மேற்கொண்டதாம் எனக்காட்டுகின்றது

பிராமணம் 4

गातुं यज्ञाय गातुं यज्ञपतय इत्याहाऽऽशिषमेवैतामा शास्ते ।

என்பது.

பரிதியை எரிக்கும் மந்திரம் முதலியன)

உரை

எக்ஞம் தேவர்களைக் குறித்துச் செல்லுமாறு விரும்புகின்றோம், எசமானனும் அவ்வாறாக விரும்புகின்றனன் என்றது, ஆசீர்வாதஞ் செய்யவிரும்புகின்றது என்கின்றது என்பதாம்.

நான்குவகையான பத்தினிசம்யாச யாகங்களை விதிக்கின்றது

பிராமணம் 5

सोमं यजति रेत एव तद्दधाति त्वष्टारं यजति रेत एव हितं त्वष्टा रूपाणि वि करोति देवानां पत्नीर्यजति मिथुनत्वायाग्निं गृहपतिं यजति प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை

சோமத்தைக் குறித்து யாகஞ் செய்கின்றான். அதனால் சுகத்தைப் பெறுகின்றான். துவஷ்டாவைக் குறித்து யாகஞ் செய்கின்றான் அதனால் நல்ல வடிவுகளை யடைகின்றான். தேவர்களுடைய பத்தினிகளைக் குறித்து யாகஞ் செய்கின்றான். அதனால் பொருந்தலை யடைகின்றான். கிருகபதியாகிய அக்கினியைக் குறித்து யாகஞ்செய்கின்றான் அதனால் பெருமையையடைகின்றான் என்பதாம்.

நான்குபத்தினி சம்யாசதேவதைகட்கும் யாஜ்யா புரோநுவாக்கியங்கள் கூறப்படுகின்றன.

பிராமணம் 6.

जामि वा एतद्यज्ञस्य क्रियते यदाज्येन प्रयाजा इज्यन्त आज्येन पत्नीसंयाजा ऋचमनूच्य पत्नीसंयाजानामृचा यजत्यजामित्वायाथो मिथुनत्वाय ।

என்பது

உரை.

நெய்யால் பிரயாசயாகங்களையும் பத்தினி சம்யாச யாகங்களையுஞ் செய்வதால் எக்ஞத்திற்குச் சோம்பலாகிய குற்ற முண்டாகின்றது. எசுர் மந்திரங்களால் பிரயாச யாகங்களையும், இருக்கு மந்திரங்களால் பத்தினி சம்யாசயாகங்களையுஞ் செய்யில் சோம்பலாகிய குற்றம் இல்லாததுடன் இணையும் (பொருந்தலும்) உண்டாகின்றது என்பதாம். அவைகள், "ஆப்யா யஸ்வ, என்பது முதலியவைகளாம். அவற்றை மந்திர காண்டத்திற் காண்க.

சமிஷ்டய சுர்விதியை அர்த்தவாதத்தால் அறிவுறுத்துகின்றது

பிராமணம் 7

पङ्क्तिप्रायणो वै यज्ञः पङ्क्त्युदयनः पञ्च प्रयाजा इज्यन्ते चत्वारः पत्नी-
संयाजास्समिष्टयजुः पञ्चमं पङ्क्तिमेवानु प्रयन्ति पङ्क्तिमनूद्यन्ति ।

என்பது

உரை

ஈண்டுப் பந்தி என்றது ஐந்து எண்ணைக் குறிக்கின்றது. ஆதலின் தொடக்கத்திலும் ஐந்துயாகம் முடிவிலும் ஐந்துயாகம் என்பது பெறப்படுகின்றது அதாவது, தரிசபூரணமாத யாகத் தொடக்கத்தில் ஐந்து பிரயாச, யாகங்கள் செய்யப்படுகின்றன. அவ்வாறே, முடிவிலும், நான்கு பத்தினி சம்யாசயாகங்களும் ஐந்தாவதாக "சமிஷ்டயசுர் என்னும்" யாகமுஞ் செய்யப் படுகின்றது என்பதாம்.

பத்தாம் அநுவாகம்

முற்றிற்று

பதினோராம் அநுவாக விடயச் சுருக்கம்

संवर्गेष्टौ सामिधेन्यो दश तिस्रस्तु याज्यकाः ।
संयाजस्तिस्र उदिता उपहोमास्त्रयो मताः ॥ १ ॥
प्रजा सवे द्वयं योज्यं गामुते प्रथमे भवेत् ।
सोमेमौ तद्वितीस्तत्र (ऽत्र) योविंशतिरीरिताः ॥ २ ॥

ஸம்வர்க்கேஷ்டியில் சாமிதேனிக்கு பத்து இருக்குக்களும், மேற்படி இஷ்டியில் யாஜ்யா புரோநுவாக்கியங்களும், விகற்பமாக மற்றொரு யாஜ்யாவாக்கியமும், ஷ்டி இஷ்டியிலேயே சுவிஷ்ட கிருத்து யாகத்திற்கு இரண்டு புரோநுவாக்கியங்களும் ஒரு யாஜ்யா வாக்கியமும் அவ்விஷ்டியிலேயே உபஹோம மந்திரங்கள் மூன்றும், பிரசைகளை விரும்பிச் செய்யும் கார்முத இஷ்டியின் யாஜ்யா புரோநுவாக்கியங்களின் தலைப்புச் சொற்களுமாக இருபத்துமூன்று மந்திரங்கள் கூறப்படுகின்றன என்பது.

இரண்டாங் காண்டம் ஆறுவது பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் பத்தொன்பது பதங்களைக் கொண்டது

சம்வர்க்கேஷ்டியைக் கூறும் மந்திரங்கள்

युक्ष्वा हि देवहूतमाꣳ अश्वाꣳ अग्ने रथीरिव । नि होता पूर्व्यः सदः । उत नो देव देवाꣳ अच्छा वोचो विदुष्टरः । श्रद्विश्वा वार्या कृधि । त्वꣳ ह यद्यविष्ठ्य सहसस्सूनवाहुत । ऋतावा यज्ञियो भुवः । अयमग्निस्सहस्रिणो वाजस्य शतिनस्पतिः । मूर्धा कवी रयीणाम् । तं नेमिमृभवो यथाऽऽनमस्व सहूतिभिः । नेदीयो यज्ञम् ॥ १ ॥ अङ्गिरः । तस्मै नूनमभिद्यवे वाचा विरूप नित्यया । वृष्णे चोदस्व सुष्टुतिम् । कमु ष्विदस्य सेनयाऽग्नेरपाकचक्षसः । पणिं गोषु स्तरामहे । मा नो देवानां विशः प्रस्नातीरिवोस्राः । कृशं न हासुरघ्निया । मा नस्समस्य दूढ्यः परिद्वेषसो अꣳहतिः । ऊर्मिर्न नावमा वधीत् । नमस्ते अग्न ओजसे गृणन्ति देव कृष्टयः । अमैः ॥ २ ॥ अमित्रमर्दय । कुवित्सु नो गविष्टयेऽग्ने संवेषिषो रयिम् । उरुकृदुरु णस्कृधि । मा नो अस्मिन्महाधने परा वर्ग्भारभृद्यथा । संवर्गꣳ सꣳ रयिं जय । अन्यमस्मद्भिया इयमग्ने सिषक्तु दुच्छुना । वर्धा नो अमवच्छवः । यस्याजुषन्नमस्विनः शमीमदुर्मखस्य वा । तं घेदग्निर्वृधाऽवति । परस्या अधि ॥ ३ ॥

वसंतोऽवराꣳ अभ्या तर । यत्राहमस्मि ताꣳ अव । विद्मा हि ते
पुरा वयमग्ने पितुर्यथाऽवसः । अधा ते सुम्नमीमहे । य उग्र इव
शर्यहा तिग्मशृङ्गो न वꣳसगः । अग्ने पुरो रुरोजिथ । सखायः
सं वस्सम्यञ्चमिषꣳ स्तोमं चाग्नये । वर्षिष्ठाय क्षितीनामूर्जो नप्त्रे
सहस्वते । सꣳसमिद्युवसे वृषन्नग्ने विश्वान्यर्य आ । इडस्पदे समि-
ध्यसे स नो वसून्या भर । प्रजापते स वेद सोमापूषणेमौ देवौ
॥ ४ ॥

இதில், சம்ஸர்க்கேஷ்டியின் ஹௌத்ர மந்திரங்கள் (ஹோதாவின் மந்திரங்கள்) சொல்லப்படுகின்றன. இதுவும் ஒருவகையால் ஹௌத்ரகாண்டமெனப்படுகின்றதென்பதை யுணர்க.

அவற்றுள், முதலாவது சாமிதேனி மந்திரங்களைக் கூறுகின்றது.

முதல் மந்திரம்

युक्ष्वा हि देवहूतमाꣳ अश्वाꣳ अग्ने रथीरिव । नि होता पूर्व्यस्सदः ।

என்பது

உரை

அக்கினியே! நீ, அழைக்கப்பட்ட தேவர்களைக்கூட்டி வைப்பாயாக. எதைப்போலெனின்? தேர்த்தலைவன் குதிரைகளைத் தேருடன் சேர்ப்பது போலென்க. மற்றும், நீ, பழைய ஹோமத்தை யுண்டாக்குவோனாய் இவ் வேள்வி செய்யுமிடத்தில் உட்காருவாயாக என்பதாம்.

இரண்டாம் மந்திரம்

उत नो देव देवाꣳ अच्छा वोचो विदुष्टरः । श्रद्विश्वा वार्या कृधि ।

என்பது

உரை.

அக்கினிதேவ! நீ, எமது உள்ளக்கருத்தை உணர்கின்றவனாதலின் நேரே போய், "எசமானன் அவி கொடுப்பவன்" என்று தேவர்கட்குக் கூறுவாயாக நான் அழைக்கத்தக்கவர்களையும் என்மீது அன்புடையவர்களாகச் செய்வாயாக என்பதாம்

மூன்றும் மந்திரம்

त्वं॑ह यद्यविष्ठ्य सहसस्सूनवाहुत । ऋतावा यज्ञियो भुवः ।

என்பது

உரை.

கட்டிளமைய! ஆற்றலின் (கடைதலின்) மைந்த! தேவர்களைக் கூப்பிடுவோய்! நீயே, எமது உண்மையோன் ஆதலின், எக்ஞத்திற்கு உதவிசெய்வாயாக என்பதாம்.

நான்காம் மந்திரம்

अयमग्निस्सहस्रिणो वाजस्य शतिनस्पतिः । मूर्धा कवी रयीणाम् ।

என்பது

உரை

வளர்க்கப் பெற்ற இவ்வக்கினி, ஆயிரம் வகையான, அல்லது, நூறு வகையான உணவுப் பொருட்குத் தலைமைபூண்டும், தலைபோல் உயர்ந்ததுமாம். அது எமக்குத் தனங்களைக் கொடுப்பதாகுக என்பதாம்.

ஐந்தாம் மந்திரம்

तं नेमिमृभवो यथाऽऽनमस्व सहूतिभिः । नेदीयो यज्ञमङ्गिरः ।

என்பது.

உரை

அங்க உறுதிப்பாடுடைய அக்கினியே! தேவர்களுடைய ஆவாகனத்துடன் கூடிய இருத்துவிக்குக் (வேள்விச் செயலாளர்)களாற் சூழப்பெற்ற நீ இவ் வேள்வியை, தச்சன் தேருருளையைத் தன்வசத்திலாக்கி உருளும்படி செய்வது போல் எமக்கருகில் வந்து வசப்படுத்தி வைப்பாயாக என்பதாம்.

ஆறுவது மந்திரம்

तस्मै नूनमभिद्यवे वाचा विरूप नित्यया । वृष्णे चोदस्व सुष्टुतिम् ।

என்பது

உரை

பல் வேறுவகை உருவங்களையுடைய அக்கினியே! நீ யாண்டும் விளங்குகின்றதும், வேண்டியவைகளை பனிக்கின்றதும், வேட்கத்தக்கதுமாகிய தேவதைக்கு, வைதிக மந்திர வாக்கால் யாம் செய்யும் துதியை முன்பு போய்ச் சொல்வாயாக என்பதாம்.

ஏழாவது மந்திரம்

कमु ष्विदस्य सेनयाऽग्नेरपाकचक्षसः । पणिं गोषु स्तरामहे ।

என்பது

உரை

நிறைந்த அறிவையுடைய. அதாவது எல்லாவற்றையு முணர்ந்த அக்கினியின் ஏவலாளருடன், பசுக்கள் முதலிய பொருள்களைப்பற்றி எப்பணிவிடையை மறைப்பேன்? அதாவது அப்பணியாளர்கட்கு மறைத்து ஒரு பணிவிடையுஞ் செய்யவல்லேனல்லேன் என்பதாம். ஆதலின் எல்லாம் இதனுடைய அருளினாலேயே செய்கின்றேன் என்பதாம்.

எட்டாவது மந்திரம்

मा नो देवानां विशः प्रस्नातीरिवोस्राः । कृशं न हासुरघ्नियाः ।

என்பது

உரை

தேவர்களுக்கு வணிகத் தொழிற் செய்யும் மனிதர்கள், இளைத்த கன்றை நிறையப் பால் கறக்கும் பசு தள்ளிவிடாததுபோல என்னைத் தள்ளிவிடமாட்டார்கள் என்பதாம்.

ஒன்பதாவது மந்திரம்

मा नः समस्य दूढ्यः परिद्वेषसो अंहतिः । ऊर्मिर्न नावमा वधीत् ।

என்பது.

உரை.

பிறரை வெறுக்கும் பகைவருடைய தீமைகள், தோணி அலைகளைக் கெடுக்காததுபோல என்னைக் கெடுக்காத தாகுக என்பதாம்.

பத்தாவது மந்திரம்

नमस्ते अग्न ओजसे गृणन्ति देव कृष्टयः । अमैरमित्रमर्दय ।

என்பது

உரை.

அக்கினிதேவ! உன்னுடைய பேராற்றலுக்கு வெள்ளித் தலைவன் முதலானோர்கள் வணக்கஞ் செய்கின்றார்கள். ஆதலின், எமது பகைவனை பிணி முதலியவைகளாற் கொல்வாயாக என்பதாம். இத்துடன் பத்துச் சாமி தேனிகள் முடிந்தன.

இனி, புரோநுவாக்கியம்

முதலாவது

कुवित्सु नो गविष्टयेऽग्ने संवेषिषो रयिम् । उरुकृदुरुणस्कृधि ।

என்பது

உரை

அக்கினியே! நீ, கோக்களுடன் கூடிய இஷ்டிகளின் (யாகங்களின்) பொருட்டு எமது தனத்தைப் பெருகச் செய்வாயாக. மற்றும், அவ்வாறு பெருக்கும் நீ, எமது கருமபயனையும் வளர்ப்பாயாக என்பதாம்.

யாஜ்யாவாக்கியம்

मानो अस्मिन्महाधने परा वर्ग्भारभृद्यथा । संवर्गꣳ सꣳ रयिंजय ।

என்பது

உரை.

மிகுதியாய் எமக்குக் கொடுத்த தனங்களை, சுமைகளை யிழுத்துச் செல்லும் எருதுகள் அப்பொருள்களைக் கெடுக்காததுபோல் கெடுத்துவிடாதே. மற்றும், கொடுக்குந்தனத்தை நன்கு நோக்கி மீண்டும் மீண்டும் குவியல் குவியலாகத் தனத்தைக் கொடுப்பாயாக என்பதாம்.

அதற்கே விகற்பமாகிய யாஜ்யா வாக்கியம்

अन्यमस्मद्भिया इयमग्ने सिषक्तु दुच्छुना । वर्धा नो अमवच्छवः ।

என்பது

உரை.

அக்கினியே! இந்த, வறுமையாகிய, அலைவு பிணியாகிய துன்பங்கள் எமது பகைவனை யடைக, எதற்கெனின்? துன்பத்திற்குப் பயந்து ஓடிவிடு வானாதலினென்க. மற்றும், பகைவனுடைய பிணியை வளர்ப்பதுபோல் எமது வன்மையை வளர்ப்பாயாக என்பதாம்.

இனி, சுவிஷ்டகிருத் யாகத்தின் புரோநுவாக்கியம்

यस्याजुषन्नमस्विनश्शमीमदुर्मखस्य वा । तं घेदग्निर्वृधाऽवति ।

என்பது

உரை

குறைவுபாடின்றி யாகஞ் செய்த வேள்வித் தலைவனுடைய வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, அக்கினி, அவனுடைய அவியை அருந்துகின்றது. அவ் வாறு வணங்கி வேள்வியால் வழிபாடுசெய்தவனை, தனத்தை வளர்க்கும் வாயி லாகப் பாதுகாக்கின்றது என்பதாம்.

அதற்கே விகற்பமாகிய புரோநுவாக்கியம்

परस्या अधि संवतोऽवरा२ अभ्या तर । यत्राहमस्मि ता२ अव ।

என்பது

உரை

உயர்ந்த இவ் வேள்வியானது, தாழ்ந்த வகையில் எம்மால் செய்யப்பட் டிருப்பினும் அன்போடு நேரே வந்து அதனால் வருந்துன்பங்களைப் போக்கு வாயாக. யான் வாழும் சுற்றத்தார்களான மக்களையும் பாதுக்காப்பாயாக என்ப தாம்.

இனி, சுவிஷ்டகிருத்யாகத்தின் யாஜ்யாவாக்கியம்

विद्मा हि ते पुरा वयमग्ने पितुर्यथाऽवसः । अधा ते सुम्नमीमहे ।

என்பது

உரை.

அக்கினியே! தந்தை மகனைப் பாதுகாக்க உணர்வதுபோல், உன்னை வளர்ப்பதற்கு நன்கறிந்தயாம் இப்போது உன்னால் தேடப்பெற்ற சுகங்களை அநுபவிக்கின்றோம் என்பதாம்.

இனி, மூன்று, உபஹோமமந்திரங்களுள்

முதல் மந்திரம்

य उग्र इव शर्यहा तिग्मशृङ्गो न वंसगः। अग्ने पुरो रुरोजिथ।

என்பது

உரை

அக்கினியே! நீ, அரசன்போல், துன்புறுத்துவோர்களைக் கெல்லுகின்றவன். கூரிய கொம்புகளையுடைய விலங்குகள்போல வனத்திற் செல்கின்றவன். அதாவது காட்டுத் தீயாய் இருக்கின்றவன் என்பதாம். அத்தகைய நீ, பகைவரின் புரங்களைக் கெடுத்திருக்கின்றாய் என்பதாம்.

இரண்டாம் மந்திரம்

सखायस्सं वस्सम्यञ्चमिषं स्तोमं चाग्नये। वर्षिष्ठाय क्षितीनामूर्जो नप्त्रे सहस्वते।

என்பது.

உரை

ஒருவர்க்கொருவர் நட்புடைய வேட்போர் வேள்விச்செயலாளர் எசமானர்களே! உங்கட்கு அக்கினி நல்லதை தேடுவதாக. நீவிரும் வாழ்வதற்கு நிமித்தமானவைகளுள் பழமையதும், வன்மையைக் கெடுக்காததும், தான் இயற்கையில் வன்மை மிக்குடையதுமாகிய அக்கினியைத் துதிப்பீர்களாக என்பதாம்.

மூன்றும் மந்திரம்

संसमिद्युवसे वृषन्नग्ने विश्वान्यर्य आ। इडस्पदे समिध्यसे स नो वसून्या भर।

என்பது

உரை

வேண்டியவற்றை அளிப்போய்! நீ, எல்லாப்பயன்களையுந்தேடி எசமானனுக்குச் சேர்த்துக்கொண்டிருக்கின்றாய். மண்வடிவ வேதிகையின்மீது இனிது விளங்கிக்கொண்டிருக்கின்றாய். அத்தகைய பெரியோனாகிய நீ, எமக்குத் தனவகைளைக் கொண்டுவந்து கொடுப்பாயாக என்பதாம்.

"பிரசைகளை விரும்பி பிரசாபதிக்குரிய மந்தங்கப் புல்லரிசிப் பொங்கலைச் செய்க" "பசுவை விரும்பி சோமன் பூஷா என்னுந் தேவதைகட்குரிய மந்தங்க புல்லரிசிப் பொங்கலைச் செய்வாராக" என்னும் இரண்டின் யாஜ்யாநுவாக்கியங்களின் தலைப்புச் சொற்களைக் காட்டுகிறது.

प्रजापते स वेद सोमापूषणेमौ देवौ ।

என்பது

உரை

"பிரசாபதே நத்வதேதாந்யந்ய:" என்றது, பிரசையின் பொருட்டுச் செய்யும் அவியின் புரோநுவாக்கியம். இதற்கு சோமஸ்யத்வஷிரஸி, என்னு அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. "ஸவேதபுத்ர: பிதரம் என்னுமிது யாஜ்யா வாக்கியம். இதற்கு, ஹிரண்யகர்ப்ப ஆபோஹுயத்" என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது. "ஸோமாபூஷணா ஜநநா" என்றது பசுவை விரும்பிய அவிக்குப் புரோநுவாக்கியம். "இமௌதேவௌ ஜாயமாநௌ" என்றது யாஜ்யா வாக்கியம். இவ்விரண்டிற்கும் "அக்நா விஷ்ணூமஹி, என்னும் அநுவாகத்தில் உரை கூறப்பட்டிருக்கின்றது என்பதாம்.

பதினோராம் அநுவாகம்

முற்றிற்று

பன்னிரண்டாம் அநுவாக விடயச் சுருக்கம்

उशन्तस्सामिधेन्येका पितृयज्ञे महत्यसौ ।

त्वं सोमेत्यनुवाक्ये द्वेपितृमन्नामके तथा ॥ १ ॥

त्वं याज्याऽग्निष्वेति मन्थेऽनुवाक्या प्रथमा भवेत् ।

बर्हिद्वे अनुवाक्येतु याज्यैका बर्हिषधजो ॥ २ ॥

பிதிர் எக்ஞ மந்திரம்)

उपहोमा उदीरेति त्रयस्तत्रययागके ।
कव्यवाहनयागेतु यदग्नेतिस्त्रईरिताः ॥ ३ ॥
पुरोनुवाक्ये द्वेतत्र याज्यैका याम्ययागके ।
इमंपुरोनुवाक्येद्वे याज्यैकापूर्ववन्मता ॥ ४ ॥
अन्तिमे ह्यनुवाकेऽस्मिन्मन्त्रास्सप्तदशेरिताः ।

மகா பிதிருயக்ஞத்தில் சாமிதேனிக்கு ஒரு இருக்கு மந்திரமும், சோம பிதுருதேவதைகளுக்கு மூன்று இருக்குக்களும், அக்கினிஷ்வாத்தம் என்னும் பிதிருக்களுக்கு ஒரு இருக்கும், பர்ஹிஷத் என்னும் பிதிருக்கட்கு மூன்று இருக்குகளும், உபஹோமத்திற்கு மூன்று இருக்குகளும், கவ்யவாஹன தேவதைக்கு மூன்று இருக்குக்களும், அங்கிரஸ்வத் என்னும் எமனுக்கு மூன்றுஇருக்குக்களுமாக முறையே ஒவ்வொரு தேவதைக்கும், முதல்இரண்டு இருக்குகள் புரோநு வாக்கியங்களும், மூன்றாவது இருக்கு யாஜ்யை வாக்கியம் என்றும் உணர்க என்பதாம்.

இரண்டாம் காண்டம் ஆறுவது பிரபாடகம்
பன்னிரண்டாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிகட்குமேல் ஒரு பதத்தைக் கொண்டது.

பிதிரு எக்ஞ அவிகளின் ஹௌத்ர மந்திரங்கள்.

उशन्तस्त्वा हवामह उशन्तस्समिधीमहि । उशन्नुशत आ वह पितॄन्हविषे अत्तवे । त्वꣳ सोम प्रचिकितो मनीषा त्वꣳ रजिष्ठमनु नेषि पन्थाम् । तव प्रणीती पितरो न इन्दो देवेषु रत्नमभजन्त धीराः । त्वया हि नः पितरस्सोम पूर्वे कर्माणि चक्रुः पवमान धीराः । वन्वन्नवातः परिधीꣳरपोर्णु वीरेभिरश्वैर्मघवा भव ॥ १ ॥ नः । त्वꣳ सोम पितृभिस्संविदानोऽनु द्यावापृथिवी आ ततन्थ । तस्मै त इन्दो हविषा विधेम वयꣳ स्याम पतयो रयीणाम् । अग्नि-

ष्वात्ताः पितर एह गच्छत सदस्सदस्सदत सुप्रणीतयः । अत्ता हवीꣳषि प्रयतानि बर्हिष्यथा रयिꣳ सर्ववीरं दधातन । बर्हिषदः पितर ऊत्यर्वागिमा वो हव्या चकृमा जुषध्वम् । त आ गतावसा शंतमेनाथास्मभ्यम् । ॥२॥ शं योररपो दधात । आऽहं पितॄन्त्सुविदत्राꣳ अवित्सि नपातं च विक्रमणं च विष्णोः । बर्हिषदो ये स्वधया सुतस्य भजन्त पित्वस्त इहाऽऽगमिष्ठाः । उपहूताः पितरस्सोम्यासो बर्हिष्येषु निधिषु प्रियेषु । त आ गमन्तु त इह श्रुवन्त्वधि ब्रुवन्तु ते अवन्त्वस्मान् । उदीरतामवर उत्परास उन्मध्यमाः पितरः सोम्यासः । असुम् ॥ ३ ॥ य ईयुरवृका ऋतज्ञास्ते नोऽवन्तु पितरो हवेषु । इदं पितृभ्यो नमो अस्त्वद्य ये पूर्वासो य उपरास ईयुः । ये पार्थिवे रजस्या निषत्ता ये वा नूनꣳ सुवृजनासु विक्षु । अधा यथा नः पितरः परासः प्रत्नासो अग्न ऋतमाशुषाणाः । शुचीदयन्दीधितिमुक्थशासः क्षामा भिन्दन्तो अरुणीरप व्रन् । यदग्ने ॥४॥ कव्यवाहन पितॄन्यक्ष्यृतावृधः । प्र च हव्यानि वक्ष्यसि देवेभ्यश्च पितृभ्य आ । त्वमग्न ईडितो जातवेदोऽवाड्ढव्यानि सुरभीणि कृत्वा । प्रादाः पितृभ्यस्स्वधया ते अक्षन्नद्धि त्वं देव प्रयता हवीꣳषि । मातली कव्यैर्यमो अङ्गिरोभिर्बृहस्पतिर्ऋक्वभिर्वावृधानः । याꣳश्च देवा वावृधुर्ये च देवान्त्स्वाहाऽन्ये स्वधयाऽन्ये मदन्ति ॥५॥ । इमं यम प्रस्तरमा हि सीदाङ्गिरोभिः पितृभिस्संविदानः । आ त्वा

मन्त्राः कविशस्ता वहन्त्वेना राजन्हविषा मादयस्व । अङ्गिरोभिरा गहि यज्ञियेभिर्यमवैरूपैरिह मादयस्व । विवस्वन्तꣳ हुवे यः पिता तेऽस्मिन्यज्ञे बर्हिष्या निषद्य । अङ्गिरसो नः पितरो नवग्वा अथर्वाणो भृगवस्सोम्यासः । तेषां वयꣳ सुमतौ यज्ञियानामपि भद्रे सौमनसे स्याम ॥ ६ ॥

இப்பிரபாடகத்தின் அநுவாகத் தொகை.

समिधश्चक्षुषी प्रजापतिराज्यं देवस्य स्फ्यं ब्रह्मवादिनोऽङ्गिरसस्त्रयो मनुः पृथिव्याः पशवोऽभीधे देवा वै युक्ष्वोशन्तस्त्वा द्वादश ॥१२॥

பஞ்சாதிகளின் தொகை.

समिधो यज्ञा तस्मान्नाभाꣳ हितमग्निवत्याह प्रजा वा उत्तरा आहेत्याह सुवर्ग संक्षितिः ॥ ७० ॥

முதலாவது சாமிதேனி மந்திரம்

उशन्तस्त्वा हवामह उशन्तस्समिधीमहि । उशन्नुशत आ वह पितॄन्हविषे अत्तवे ।

என்பது

உரை

அக்கினியே! பிதிர்க்களை விரும்பும் யாம் உன்னை அழைக்கின்றோம். பிதிர்க்களை விரும்பும் யாம் மீண்டும் உன்னை இனிது வளர்க்கின்றோம். எசமானனுடைய அவிகளை புண்ணுதற் பொருட்டு எசமானனுடைய பிதிர்க்களை அழைப்பாயாக என்பதாம்.

இரண்டாவது இருக்கு மந்திரம்

முதலாவது புரோநுவாக்கியாக கூறப்படுகின்றது.

त्वꣳ सोम प्रचिकितो मनीषा त्वꣳ रजिष्ठमनु नेषिपन्थाम् । तव प्रणीती पितरो न इन्दो देवेषुरत्नमभजन्त धीराः ।

என்பது

உரை

சோமமே! நீ, உனது நுண்ணுணர்வால் நன்கறிந்தனை. ஆனாலும், நீ, உணவுப் பொருள் தன்னிற் உள்ள வழியை அடையுமாறு செய்கின்றாய். இந்துவே! உனது வழிபாட்டால் எமது பிதிர்க்கள் தேவர்களுக்குள் இருப்போராய் நல்ல அவியை அருந்துகின்றார்கள் என்பதாம்.

மூன்றாவது மந்திரம்

இரண்டாவது புரோநுவாக்கியங் கூறப்படுகின்றது

त्वया हि नः पितरस्सोम पूर्वे कर्माणि चक्रुः पवमान धीराः वन्वन्नवातः
परिधी२ँरपोर्णु वीरेभिरश्वैर्मघवा भवा नः ।

என்பது

உரை

பரிசோதகனாகிய சோமனே! முந்திய பிதிர்க்கள் உனது அருளைப்பெற்று உறுதியுடையவர்களாய்க் கருமத்தைச்செய்து வந்தார்கள். ஆகலின், நீயும், வாயுவைவேண்டாது சுவாலை விட்டெரிவதால் எமது அவியை உண்டு, பரிதியைப்போல் நாற்புறத்தும் உள்ள தடையை நீக்குவாயாக. எச்சாதனங்களாலெனின்? போரில் வன்மைமிக்க குதிரைகளாலென்க. அவ்வாறே எம்பொருட்டுத் தனவானாகுதி என்பதாம்.

நான்காவது மந்திரம்

யாஜ்யா வாக்கியங் கூறப்படுகின்றது

त्व२ँ सोम पितृभिस्संविदानोऽनु द्यावापृथिवी आ ततन्थ । तस्मै त
इन्दो हविषा विधेम वय२ँ स्याम पतयो रयीणाम् ।

என்பது

உரை

சோமமே! நீ, பிதிர்க்களால் (சம்மித்தை) அறிவையடைந்தவனாய் பூதையாய் வானையும் மண்ணையுஞ் சூழ்ந்துகொண்டிருக்கின்றாய், சோம! அத்தகைய உனக்கு அவியால் வழிபாடு செய்கின்றேன். உனதருளால் தனங்கட்குத் தலைவராகின்றோம் என்பதாம்.

ஐந்தாவது மந்திரம்

“பிதிர்ப்யோ அக்னிஷ்வாத் தேப்யோ அபிவாந்யாயை துக்தேமந்தம்” என்பதற்கு முதலாம் புரோநு வாக்கியம்

अग्निष्वात्ताः पितर एह गच्छत सदस्सदस्सदत सुप्रणीतयः । अत्ता
हवी२ँषि प्रयतानि बर्हिष्यथा रयि२ँ सर्ववीरं दधातन ।

என்பது

உரை

வேள்வி செய்யாமல் பிதிர் லோகத்தையடைந்த பிதிர்க்களே! நீவிர் எமது வழிபாட்டைப் பெற்றவர்களாய் இங்கு வருவீர்களாக. தத்தமது இடத்தைப் பெற்றுக்கொள்வீராக. இவ் வேள்வியில் தேடியுள்ள அவிகளை உண்பீர்களாக. பிறகு, எல்லா வைதிக கருமங்களிலும் வல்லவனாகிய புத்திரனைத் தேடுவீராக என்பதாம்.

ஆறுவது மந்திரம்

"பிதிர்ப்யோ பர்ஹிஷத்ப்யோ தாநு:" என்பதற்கு முதலாவது புரோநுவாக்கியம்

वर्हिषदः पितर ऊत्यर्वागिमा वो हव्या चकृमा जुषध्वम् । त आ गतावसा शंतमेनाथास्मभ्य॰ शं योररपो दधात ।

என்பது

உரை

வேள்வி செய்து பிதிர் லோகத்தை யடைந்துள்ள பிதிர்க்களே! நீவிர் எம்மைப் பாதுகாப்பீர்களாக. உங்கட்கு அவியைத் தேடுகின்றோம் அதை அருந்துவீர்களாக. அவியை அருந்திய நீவிர் எம்மைப் பாதுகாப்பதன்பொருட்டு வருவீர்களாக. இனி, எமக்குச் சுகத்தைக் கொடுத்துத் துன்பத்தைப் போக்குவீர்களாக என்பதாம்.

ஏழவது மந்திரம்.

அதற்கே இரண்டாவது புரோநுவாக்கியம்

आऽहं पितॄन्त्सुविदत्रा॰ अवित्सि नपातं च विक्रमणं च विष्णोः । बर्हिषदो ये स्वधया सुतस्य भजन्त पित्वस्त इहाऽऽगमिष्ठाः ।

என்பது

உரை

எசமானனாகிய யான், எனது அன்பை நன்குணர்ந்த பிதிர்க்களையும் அடைந்துள்ளேன். வியாபகமாகிய இவ் வேள்வியின் கேடிலாமையையும் மிகுந்த பிரவிர்த்தியையும் அடைந்துள்ளேன். வேள்வி செய்த பிதிர்க்களும் இங்கு வந்துள்ளார்கள். அன்போடு அவர்கள் வந்து பிரியமடைவார்களாக. எதனால் பிரியமடைதலெனின்? ம்சாமததிற் கொப்பாகிய அவியாலென்பதாம்.

எட்டாவது மந்திரம்

இனி, [illegible] கூறப்படுகின்றது

उपहूताः पितरस्सोम्यासो बर्हिष्येषु निधिषु प्रियेषु । त आ गमन्तु त इह श्रुवन्त्वधि ब्रुवन्तु ते अवन्त्वस्मान् ।

என்பது

உரை

எமக்கு அருள் செய்வதையே மேற்கொண்ட பிதிர்க்கள், வேள்விக்குரியவைகளும், களிப்பைத் தரத்தக்கவைகளும், நிதிக் கொத்தவைகளுமான அவிகளை முன்னிட்டு எம்மால் அழைக்கப்பெற்றவர்களாய் வருவார்களாக. வந்து இவ்வேள்வியில் எம்மால் பாடப்படும் துதியைக் கேட்பார்களாக. கேட்டு, "இவ் வேள்வித்தலைவன் நல்லவன்" என்று கூறுவார்களாக. பிறகு இத்தன்மைவாய்ந்த பிதிர்க்கள் எம்மைப் பாதுகாப்பார்களாக என்பதாம்.

ஒன்பதாவது மந்திரம்

[illegible] மூன்று இருக்குகளுள் முதலாவது இருக்கு

उदीरतामवर उत्परास उन्मध्यमाः पितरस्सोम्यासः । असुं य ईयुरवृका ऋतज्ञास्ते नोऽवन्तु पितरो हवेषु ।

என்பது

உரை

சுருதியிற் கூறிய முறைப்படியே கருமங்களைச் செய்யும் நல்லோராகிய உத்தம பிதிர்க்கள், மிருதி கருமங்களைமாத்திரம் மேற்கொண்ட மத்தியப்பிதிர்க்கள், அதிலும் சமத்காரமின்றிய அதர்மப் பிதிர்க்கள் என்னும் மூவகையாருள் தாழ்ந்தவர்கள் உயர்ந்த அவிசுளை அடைவார்களாக. மற்று ஏனையவர்களும் அடைவார்களாக. இவர்கள் அனைவரும் எமக்கு அருள் செய்வதை மேற்கொண்டவர்களாகுக. செந்நாய்களைப்போல் எமக்குத் தீமை செய்கின்றவர்கள், யாம் செய்யும் கருமங்களின் உளவையுணர்கின்றவர்கள் என்னும் எல்லாரிடத்திலிருந்தும் அத்தகைய பிதிர்க்கள் எம்மைப் பாதுகாப்பார்களாக என்பதாம்.

பத்தாவது மந்திரம்

இரண்டாம் இருக்கு

इदं पितृभ्यो नमो अस्त्वद्य ये पूर्वासो य उपरास ईयुः । ये पार्थिवे रजस्या निषत्ता ये वा नूनं सुवृजनासु विक्षु ।

என்பது

உரை

பிதிர் உலகத்திலுள்ள இவ் வெசமானனுக்கு முன் பிறந்த அண்ணன், பிதா, பாட்டன் முதலானோர்களும், எசமானனுக்குப் பிறகு பிறந்த தம்பி முதலான பிதிர்லோகத்தவர்களும், இம்மண்ணுலகில் இரசோகுண காரியமாகிய இவ்வேள்வியில் அவிகளை ஏற்றுக்கொள்ள வந்துள்ளார்களும், மற்றும், சுற்றத்தார்களான பிதிர்க்களின் சிரார்த்தங்களை ஏற்றுக்கொள்ள வந்துள்ளவர்களும், அதாவது தனமுடையார்கள் செய்யும் சிரார்த்தங்கட்கு வந்திருக்கின்றவர்களுமான எல்லாப் பிதிர்க்கட்கும் வணக்கத்துடன் கூடிய இந்த அவி அர்ப்பணமாகுக என்பதாம்.

பதினோராவது மந்திரம்

மூன்றாவது இருக்கு மந்திரம்

अधा यथा नः पितरः परासः प्रत्नासो अग्न ऋतमाशुषाणाः। शुचीदयन्दीधितिमुक्थशासः क्षामा भिन्दन्तो अरुणीरपव्रन्।

என்பது

உரை

எக்ஞத்தை அநுபவித்தவர்களும், புநிதமாகிய இடத்தை யடைந்தவர்களும், தெய்வத்தன்மையை யடைந்த பிதிர்க்களைப் போற்றுகின்றவர்களுமான இறந்தகாலத்திலுள்ள எமது பிதிர்க்கள் உயர்ந்த இடத்தை யடைந்ததுபோல் யாமும் உயர்ந்த இடத்தை யடைந்துள்ளோம். மற்றும், அவர்கள், வறுமையால்வரும் பசிப்பிணியை அவியால் நீக்குவோர்களாயும் விளக்கமுடைவர்களாயு மிருந்து எமக்குத் தடையாயுள்ள பாவத்தைப் போக்குவார்களாக என்பதாம்.

பன்னிரண்டாவது மந்திரம்.

இப்பிதிர்யக்ஞத்தில் விதித்துள்ள கவ்யவாஹனை அக்கினி, ஆங்கிரசப்பிதிர்க்களையுடையஎமன் என்னும் இருவர்களின் அவிகளுள், கவ்யவாஹன அவித்துப் புரோநுவாக்கியமெனக்கூறப்படுகின்றது

यदग्ने कव्यवाहन पितॄन्यक्ष्यृतावृधः। प्र च हव्यानि वक्ष्यसि देवेभ्यश्च पितृभ्य आ।

என்பது.

உரை

பிதிர்க்களின்பொருட்டு கவ்யத்தைக் கொண்டு செல்லும் அக்கினியே! நீ, எக்ஞத்தை வளர்க்கும் பிதிர்க்களை யாகத்தால் வழிபடுகின்றாய். ஆதலின் தேவர்கட்கும் பிதிர்கட்கும் அடிக்கடி அவிகளை ஏற்றுக்கொண்டு செல்கின்றனை என்பதாம்.

பதின் மூன்றாவது மந்திரம்.

இரண்டாவது புரோநு வாக்கியம்

त्वमग्न ईडितो जातवेदोऽवाड्ढव्यानि सुरभीणि कृत्वा । प्रादाः पितृभ्यः स्वधया ते अक्षन्नद्धि त्वं देव प्रयता हवींषि ।

என்பது.

உரை

உலகெலாவற்றையும் உணர்கின்ற அக்கினியே! நீ, எசமானனால் துதிக்கப்பெற்று அவிகளை நறுமண முடையவைகளாக்கி எடுத்துக்கொண்டு செல்கின்றனை. சென்று, பிதிர்க்கட்கு அளிக்கின்றனை. அத்தகைய பிதிர்க்களும் சுவதாகாரத்தாற் கொடுத்த அவிகளை யுண்பார்களாக. தேவ! நீயும், பெரும் முயற்சியோடு தேடிய அவியை அருந்துவாயாக என்பதாம்.

பதினான்காவது மந்திரம்.

யாஜ்யாவாக்கியங் கூறப்படுகின்றது

मातली कव्यैर्यमो अङ्गिरोभिर्बृहस्पतिर्ऋक्वभिर्वावृधानः । यांश्च देवा वावृधुर्ये च देवान्त्स्वाहाऽन्ये स्वधयाऽन्ये मदन्ति ।

என்பது

உரை

மாதலி என்னும் தேர்ப்பாகனையுடைய இந்திரன், கவ்ய பாகங்களை அருந்தும் இந்திரனுடன் வளர்கின்றான். எமன், அங்கிரசர்கள் என்னும் ஒருவகைப் பிதிர்க்களுடன் வளர்கின்றான். பிருகஸ்பதி, இருக்காற் கூறப்படும் ஒருவகை பிதிர்க்களுடன் வளர்கின்றார். இதில், அவ்யகவ்யங்களால் வளர்கின்ற தேவர்கள் பிதிர்க்களுக்குள் இந்திரன் முதலான தேவர்கள் சுவாஹா என்பதால் களிப்படைகின்றார்கள், ஏனைய பிதிர்க்கள் 'சுவதா' என்பதால் களிப்படைகின்றார்கள் என்பதாம்.

பதினைந்தாவது மந்திரம்

இனி, அங்கிரசர்களையுடைய எமனுக்கு முதலாவது புரோநு வாக்கியம்

इमं यम प्रस्तरमा हि सीदाङ्गिरोभिः पितृभिस्संविदानः । आ त्वा मन्त्राः कविशस्ता वहन्त्वेना राजन्हविषा मादयस्व ।

என்பது

உரை.

அங்கிரசர்கள் என்னும் பிதிர்க்களுடன் ஒன்றுயிருக்குந் தன்மையை யடைந்துள்ள எமனே! நீ, தருப்பை விரித்துள்ள இவ்வேள்வியின்கண்வந்து உட்காருவாயாக. உட்கார்ந்தால், அறிஞர்களான வேள்விச் செயலாளர்களால் ஓதும் மந்திரங்கள் உன்னை அழைப்பனவாகும். அரசே! நீ இந்த அவியால் எசமானனைக் களிப்படையச் செய்வாயாக என்பதாம்.

பதினாறாவது மந்திரம்.

இரண்டாம் புரோநு வாக்கியம்

अङ्गिरोभिरागहि यज्ञियेभिर्यम वैरूपैरिह मादयस्व । विवस्वन्तꣳ हुवे यः पिता तेऽस्मिन्यज्ञे बर्हिष्यानिषद्य ।

என்பது

உரை

எமனே! நீ, பல்வகை வடிவங்களையுடைய, அல்லது, பல்வகைச் சாமப் பாடல்களையுடைய அங்கிரசர்களுடன் வருவாயாக. வந்து, எசமானனைக் களிப் படைவிப்பாயாக. உனது தந்தையாகிய விவசுவானை இவ்வேள்விக்கு அழைக் கின்றேன். அவனும் இங்கு வந்து எசமானனைப் பிரியப்படுத்துவானாக என்பதாம்.

பதினேழாவது மந்திரம்

இனி, யாஜ்யா வாக்கியங் கூறப்படுகின்றது

अङ्गिरसो नः पितरो नवग्वा अथर्वाणो भृगवस्सोम्यासः । तेषां वयꣳ सुमतौ यज्ञियानामपि भद्रे सौमनसे स्याम ।

என்பது.

உரை

அங்கிரசர்கள், அதர்வர்கள், பிருகுக்கள் என்பவர்கள் எமது பிதிர்க்களாவார்கள். அவர்கள், புதிது புதிதாகப் பிரியத்தை உண்டாக்கத் தக்கவர்கள். மற்றும், அவர்கள் சோமத்திற்கு உரியவர்கள். வேள்விகளைப்பற்றிய அவர்களுடைய அருளில் எப்போதும் இருப்போமாக. அதன்றியும், மங்களமாகிய பயனுடையவைகளிலும் எப்போதும் இருப்போமாக என்பதாம்.

பன்னிரண்டாம் அநுவாகம்

முற்றிற்று.

கிருஷ்ண எசுர்வேதம் தைத்திரீய சங்கிதை

இரண்டாங் காண்டம்

முடிந்தது.

சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரமண்யோம்!!!